


முழுமுதற்றுணை.

தாமோதரன்.

டாம் ஜோன்ஸ் என்னும்
ஆங்கில நாவலை யொட்டி எழுதிய கதை.

ஒரு பாஷாபிமானியால்
இயற்றப்பெற்றது.

ரங்கூனைச் சேர்ந்த திருக்கம்பையில்
ஸ்ரீ கல்யாண வேங்கடேசப்பெருமாளைத் திருக்கோயில்
கொண்டெழுந்தருளச் செய்தவரும்,
அடுத்த படத்தில்
காட்டப்பட்டிருப்பவருமாகிய
ஸ்ரீமாந். வேங்கடசாமி நாயகர் அவர்கள்
ஞாபகார்த்தமாக,

த. இ. அ. மணவாளன் என்பவரால்

சென்னை:
மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1911.

[Copyright Registered]

விலை அணா 12.

PREFACE.

In placing this humble maiden attempt before the educated Tamil public, the translator is fully alive to the many defects and anachronisms with which the book abounds. But the translator craves the indulgence of the "reader" and begs him to bear in mind that the story is not oriental but for the names of characters and places which have, in many instances, been garbed in oriental form, while the western spirit is maintained throughout. If, therefore, the story savours a little outlandish and appears foreign to the ways of Indian Life, it will be because the "reader" has before him a translation of an English novel depicting the habits and manners of the English people. In the opinion of the translator, it is high time that the Indian ladies have some idea of European life. To talk of the ruling nation almost every day, and to be totally ignorant of the private and public life they lead in their country, is hardly excusable in an Indian. It, therefore, behoves us to give such of our buethren and sisters as have not had the advantage of English education, an insight into the manners and customs of the Englishmen in their land. The translator believes that he has facilitated this study in the present attempt.

A word to our critics. To quote the author of our original work:—"Critics being men of shallow capacity, very easily mistook mere form for substance. They acted, as a Judge would, who should adhere to the lifeless letter of law and reject the spirit. Little circumstances which were, perhaps, accidental in a great author were, by these critics, considered to constitute his chief merit, and transmitted as essentials to be observed by all his successors." We have no doubt that our critics will care more for the substance than for the form, and will not condemn the work because the tree implanted in the Indian soil happens to be an exotic.

V. S. I.

முகவுரை.

'ஊமைக் குளறுவாயன் சண்டப்பிரசண்டன்' என்றோர் முதுமொழியுண்டு. தெய்வப்புலவரி னூணை "அருமையுடைத் தென் றசாவாமை வேண்டும்" என்றிருப்பதனுன் சும்மாவிருப்ப தினு மெம்மாட்டேனு மியன்றதைப் புரிவாமென்றே இம்மொழி பெயர்ப்பை ஏற்றுக்கொண்டனம். ஆன்றே ரறைந்துள்ள வழுக் களனைத்தும் நமது மொழிபெயர்ப்பிற் குடிகொண் டுளவேனும் கண்ணேடிப் பொறுத்தாற்றும் பண்பமைந்த நமது வாசகர் அவ் ற்றைப் பொருட்படுத்தா ரென்பது நமது நம்பிக்கை. நிற்க,

இப்புத்தகம் ஹென்றி பீல்டிங் (Henry Fielding) என்ப வர் ஆங்கிலத்தி லியற்றிய "டாம் ஜோன்ஸ்" (Tom Jones) என் னும் நூலின் மொழிபெயர்ப்பாம். அநாவசியமென்று தோன்றிய வற்றைத் தவிர்த்து வேண்டுவனவற்றைக் கிரகித்து இது ஒரு வாறு எழுதப்பட்டிருக்கிறது. நாடோறும் நாம் ஆங்கிலேயரைப் பற்றி எதேனும் பேச சந்தர்ப்பம் நேரிடுகிறது. இருந்தும் அவ் வாங்கிலேயர் தங்கள் நாட்டில் பயிலும் பழக்கங்களையும் அன் னேரின் நடையுடை பாவனைகளையும் நம்மில் பலர் அறியாதவர் களா யிருக்கிறார்கள். ஆங்கிலங் கற்காத நமது சகோதரரும் சகோதரிகளும் மேஞட்டாரின் தன்மையை ஒருவாறு அறியும் பொருட்டே இக்கதை மொழிபெயர்ப்பிக்கப்பட்டது.

ரங்கூன்,
25—1—1911.

த. இ. அ ம.

தாமோதரன்.

சம்புடம்-1.

அத்தியாயம் 1.

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.—குறள்.

புஸ்தகம் எழுத ஆரம்பிக்கிறவன் தர்மத்திற்காக சத்திரங்களில் சாப்பாடுபோகிறவனைப்போல் நினையாமல் ஓட்டல்வைத்து லாபம் சம்பாதிப்பவனைப்போல நினைக்கவேண்டும். சத்திரங்கட்டுகிறவன் தனக்கிஷ்டமான சாப்பாட்டைச் செய்து வட்டிப்பிக்கிறான். சாப்பிடுகிறவர்களுக்கு அவன் போஜனம் பிரியப்படாத போதிலும் அதைப்பற்றிக் குற்றஞ் சொல்லப்படாது. அல்லாமலும் அவர்கள் நற்குலத்தவராயிருந்தால் வெளிக்காவது போஜனம் நன்றாயிருக்கிறது என்று சொல்லிக்கொள்ளவேண்டும். ஓட்டல்வைத்திருப்பவன் விஷயமோ இவ்விதமல்ல. அவன் எவ்வளவு நன்றாகப் பாகம் செய்து வைத்திருந்தபோதிலும் சாப்பிடுகிறவர் கட்குப் பிரியமில்லாவிட்டால் அவர்கள் தமக்குப்பிரியமானவைகளைச்செய்து வட்டிக்கும்படி கட்டாயம் செய்யலாம். அவர்களுக்கு எதுவும் பிரியப்படாவிட்டால் ஓட்டல்காரனை வைது அவமானம் செய்யவும் கூடும்.

ஆகையினால் அவர்களை அதிருப்திசெய்யாதிருக்க ஓட்டல் காரன் அன்றன்று செய்யப்படும் ஆகாரவிஷயத்தை எழுதி ஒவ்வொருவருக்கும் முன்னடியே தெரிவிப்பான். அதைப்பார்த்தேர்ந்தெடுத்தபோஜனமாயிருந்தால் சாப்பிடுவார்கள்.

இந்த ஓட்டல்காரனைப்போல் நாம் செய்யவிருக்கும் இந்த விருந்தினுடைய மொத்த அட்டவணையைப் படிப்போருக்குத் தெரிவிப்பது மல்லாமல் வட்டிக்க விருக்கும் ஒவ்வொரு பதார்த்தத்தின் விருத்தாந்தத்தைப்பற்றியும் இந்தப் புஸ்தகத்தில் விஸ்தரிப்போம்.

இதில் நாம் பரிமாறவிருக்கும் ஆகாரம் என்னவென்றால், மானுட இயற்கையாம். மகாருசிகரமுடைய பதார்த்தங்களை அருந்தி இருக்கும் நமது வாசகர் நான் ஒரே ஒருபதார்த்தத்தைத்தான அளிக்க இருக்கிறேன் என்று கோபித்து நம்மைத் தூற்றமாட்

டார் என்றுள்ளத்துக் தெரியும். ஒரே பெயரால் "மானுட இயற்கை" என்று கூறியபோதிலும் ஒரு சமையல்காரன் மாம்ஸம், காய்கறி இவைகளைக்கொண்டு பற்பலவிதமாகச்செய்த போஜனத்தைப் போடுவதைக்காட்டிலும் ஒரு கிரகஸ்தன் "மானுட இயற்கை" என்னும் பலவிவரங்கள் அடங்கிய விஷயத்தை சவிஸ்தாரப்படுத்துவது சுலபமன்று.

சிலபேர் இவ்விஷயம் யாவருக்கும் தெரிந்ததுதானே, இதில் என்னமேன்மை இருக்கிறதென்றும், கதைகள், நாடகங்கள், கவிகளின் இவையனைத்திலும் இந்த விஷயத்தையன்றி வேறு விஷயம் என்ன கூறப்பட்டிருக்கிறது என்றும் இதை அலக்ஷியம் செய்யலாம். இந்தமாதிரியே ஒருபெருந் தனிக்காரன் உயர்ந்த பழங்களையும் அவை அல்பமான சந்து பொந்துகளில் காய்த்துப் பழுக்கின்றனவாகையால் மிக்க சாதாரணமேயென்று தளளிவிடலாம். உண்மையில் தற்சொரூபமான "இயற்கை" யைப்பற்றி விஸ்தரிக்கும் கிரந்தகர்த்தர்கள் மிகவும் சொல்பமானவர்களே.

ஒரு பிராணியின் மாம்ஸத்தின் ஒரு பாகத்தை ஒரு பிரபுவுக்கான் அருந்துகிறான், அவ்வூரிலேயே மகா அற்பமான ஏழையும் புசிக்கிறான். இப்படி ஒரே ஆட்டையோ, கோழியையோ புசிக்கும் பிரபுவுக்கும் கூலியாளுக்கும் வித்தியாசமென்ன? அந்த வித்தியாசம் பாகம் செய்கிற கூட்டுவர்க்கத்திலும் பக்குவத்திலுமிருக்கிறது. அதனால் பிரபுவின் சாப்பாடு பசியில்லாதவனுக்கும் நாவில் நீர் ஊறச்செய்கிறது, கூலியாளின் சாப்பாடு கொடும் பசி உடையவனையும் அருவருப்புடன் விலக்கச்செய்கிறது.

அப்படியே ஒருவிஷயத்திலும் அதை விவரிக்கும் திறமை பிறருன் ஒருவன் மனத்திற்கு உற்சாகம் உண்டாக்குவதும் ஏற்படுகிறது. நாம் இப்பொழுது கைதேர்ந்த சமையல்காரனைப் போலவே வாசிப்போரது மனத்தை முழுதும் திருப்தி செய்வதற்காகவே இப்புத்தகத்தை எழுதினோம். முதலில் நமது நாட்டில் காண்கிறபடி "மானுட இயற்கை"யை வர்ணித்துப் பிறகு அன்னிய நாட்டாருடைய வாடிக்கைகளையும், மாறுதல்களையும் தெரிவிப்போம். இவ்வளவுதூரம் சொல்லியபிறகு நம்முடைய ஆகார அட்டவணையைப் பார்த்து நம்மிடம் அருந்த சம்மதித்திருப்பவர்களைக் காக்கவைக்காமல் நமது கதையை ஆரம்பித்து முதல்பந்தி விசாரணை செய்வோம்.

அத்தியாயம் 2.

ஆற்றி னெழுக்கி யதனிழுக்கா வில்லாழ்க்கை
சோற்பாரி னேண்மை யுடைத்து.

சம்ராஷ்ட்ரதேசத்தில் ஆளவந்தார் என்னும் ஒரு பெரிய மனிதர் கொஞ்சகாலம் முன் இருந்தார். இப்போதும் ஒரு வேளை இருந்தாலும் இருப்பார். அவருக்கு நான்முகன் கடாக்ஷமும் லக்ஷ்மி கடாக்ஷமும் மிகவும் பொருந்தியிருந்தன. இவர்களிருவர்க்கும் அவரை யாருடைய அன்பிற்கு வசப்படுத்துவதென்கிற போட்டியுண்டானதுபோல் தோன்றிற்று. இதற்போட்டியில் நான்முகன் அவருக்குப் பலவிதமேன்மைகளை யுண்டாக்கியதால் அவர் வெற்றி பெற்றதாய்த் தோன்றும். லக்ஷ்மியோ ஒரே ஒருகொடைதான் அளிக்கக்கூடும்; ஆனால் பிரம்மா கடாக்ஷிக்கும் பெருமைகள் எல்லாவற்றையும்விட லக்ஷ்மியின் கொடையொன்றே மேலானதென்று சொல்லும்படியாகக் கணக்கில்லாத ஐசுவரியத்தை மேகதாரையாக ஆளவந்தாருக்கு வருஷித்தாள். பிரம்மாவின் கிருபையினால் அவர் தேக திடமும் நற்குணமும் பேரறிவும் சுயாளமனமும் பெற்றிருந்தார். லக்ஷ்மியின் கிருபையினால் அந்நாட்டில் மகா செல்வவந்தனாய் வாழ்ந்துவந்தார்.

இவர் இளமையில் ரூபத்திலும் குணத்திலும் சிறந்த ஒரு மாதை மணந்திருந்தார். அம்மாதினிடம் அவர் மிகவும் பக்ஷம் வைத்திருந்தார். அவளிடமாக அவருக்கு மூன்று குழந்தைகள் ஜனித்து அம்மூன்றும் பாலியத்திலேயே மரண மடைந்துவிட்டன. இத்தக் கதை ஆரம்பிப்பதற்கு 5-வருஷத்துக்கு முன் ஆளவந்தார் காதலியையும் இழக்கும்படியான துர்ப்பாக்கியம் பெற்றார். இத்தக் கஷ்டத்தை அவர் மனோதிடத்துடன் சகித்துக்கொண்டார். இருந்தும் இவ்விஷயத்தைப்பற்றிப் பேசும்போதெல்லாம் மனமுருகியே பேசுவார். தான் இன்னும் இவ்வாழ்க்கையில் மனைவியோடிருப்பதாகவும், ஆனால் தன் மனைவி தனக்கு முன்னால் ஒரு பிரயாணம் போயிருப்பதாகவும், என்றைக்காவது அதேபிரயாணம் தானும் செய்யவேண்டி வருமென்றும், அவளைத்திரும்பத்தான் சந்திப்பதில் சந்தேகமேயில்லை என்றும், அதன் பிறகு அவளை விட்டு எப்போதும் பிரியப்போகிறதில்லை எனறும் சொல்வார்.

அவர் வெகுகாலமாகத் தான் மிகவும் அன்போடு நேசித்து வந்த ஒரு சகோதரியோடு கிராமத்தில் வசித்துவந்தார். அந்த ஸ்திரீக்கு அப்பொழுது வயது-30. அந்த வயதின் காலத்தைக் கிழவயதென்று சொல்வார்கள். அவளை நீங்கள் பார்த்தால் அவள் ரூபவதி என்பதைவிட குணவதி என்பீர்கள். மற்ற பெண்பிள்ளைகளைவிட அதிக நல்லவள் என்றும், பெண்டுகள் இருக்கவேண்டிய விதமாக இருப்பவள் என்றும் மற்றோர்கள் சொல்வார்கள். அவள் தனக்கு ரூபமில்லை என்று வருந்துவதே கிடையாது. ஆனால் அழகைப்பற்றிப் பேச்சு வருகிறபோது அழகை இகழ்ச்சியாகவே பேசுவாள். இன்னுளின்னுள் ரூபவதியாக மாத்திரம் மிருந்

திராவிட்டால் அவளிப்படிக் கெட்டுப்போயிருக்க மாட்டாள், என்று தனக்குத்தெரிந்த கட்டழகிகள் கழ்பிழந்துபோனதை யெடுத்தோதுவாள். ஆகையால் தான் ரூபவதியாக இராதிருப்பதற் குக் கடவுளுக்கு வந்தனம் சொல்லிக்கொள்வாள். இவள் பெயர் பிருந்தா. ஒருவருக்கிருக்கும் வனப்பு, உடையவரையும் அபலாரை யும் சிக்கவைப்பதற்கென்று சிருஷ்டிக்கப்பட்ட வலை என்று இவள் எண்ணி தன் கடவுடிக்கையில் மிக ஜாக்கிரதையாக இருப்பாள். பெண்பிள்ளைகளை மயக்குவதற்காக உண்டாக்கப்பட்ட வலைகள் அனைத்தும் தனக்கு முன்னிலையே விரிபியிருப்பதுபோல் பயந்து அதிஜாக்கிரதையாகவே நடந்துவருவாள். இந்த உத்தமி எங்கு அபாயமில்லையோ அங்கே நிர்ப்பயமாய்ச் செல்வாள்.

அத்தியாயம். 3.

தானாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

அருளிலார்க் கல்லுலக மில்லை பொருளிலார்க்
கிவ்வுலக மில்லாதி யாங்கு.

மூன்றாவது அத்தியாயத்தில் ஆளவந்தார் நிறைந்த ஐசுவரியத்தை அனுபவிப்பவர் என்றும் நன்மனதுடையவர் என்றும் சாமுசார மிராதவரென்றும் சொன்னோம். ஆதலால் அவர் ஒருவரிடத்திலும் ஒரு சவரனும் கடன் வாங்காமலும், பிறர் பொருளுக்கு இச்சைப் படாமலும், வீட்டை அலங்காரமாய் வைத்துக்கொண்டும், அய லாருக்கு அடிக்கடி நல்விருந்து கொடுத்துக்கொண்டும், ஏழைகளுக் குத் தானம் செய்துகொண்டும், தர்ம வைத்தியசாலை கட்டிவைத் தும் யோக்கியராக வாழ்ந்து ஐசுவரியவானாகவே இறந்திருக்க வேணுமென்று வாசிப்போர் நம்பலாம். ஆமாம், இவையனைத்தும் அவர் செய்தது உண்மைதான். இவையேயல்லாமல் வேறொன்றும் செய்யாது இறந்திருப்பாரேல் அவர் கட்டிய தருமவைத்தியசாலை யில் ஒரு சலவைக்கல்லில் அவர்செய்த தருமங்களை எல்லாம் எழுத் தில் வெட்டிவைக்க விட்டுவிட்டு அவரைப்பற்றி நாம் ஒன்றும் எழு தாமல் இருந்துவிடுவோம். ஆனால் சொன்னவை யெல்லாவற்றை யும் விட மேலான விஷயம் அவர் செய்திருந்தார். அதனால்தான் இந்த சரித்திரத்தை எழுதலானேன். ஆளவந்தார் ஒரு முக்கிய விஷயமாக அவந்தீ நகரம் போய் மூன்று மாதகாலம் தங்கியிருந் தார். ஆனால் என்ன காரியமாகச் சென்றிருந்தார் என்பது எனக் குத்தெரியாது. பலவருஷமாகக் கிராமத்திலிருந்தவராதலால் அதை விட்டு சிறிதுகாலமும் வெளியில் தங்கியிருக்கமாட்டார். அப்படிப் பட்டவரே மூன்று மாத காலம் தங்கும்படி யமைந்த விஷயம் எவ் வளவு முக்கியமானதா யிருக்கவேணு மென்பதை நீங்களே யூகித்

துக்கொள்ளலாம். அவர் ஒருதினம் அஸ்தமித்த பிறகு அவர்தி நகரமிருந்து வீட்டுக்கு வந்தார். தன் சகோதரியோடு இருந்து சாப்பிட்ட பிறகு களைப்பாக இருந்ததால் தன் அறைக்குப் படுக்கப் போய்விட்டார். அங்கே கொஞ்சநேரம் ஈஸ்வரதியானஞ்செய்துவிட்டுப் படுக்கையிலமர்ந்து போர்வையைப் போர்த்துக்கொள்ளுமென்னைத்தோடு கட்டிலைச் சுற்றிலும் இட்டிருக்கும் கொசுவலைத் திரையைச்சுருட்டினார். சுருட்டலும் சுட்டில் மத்திபில் நன்றாகத் தூங்கிக்கொண்டிருக்கும் மணீயமான ஒரு சிசுவை அதியாச்சரியத்துடன் கண்டார். இதைப்பார்த்ததும் அவர் பிரமித்துப்போனார். தயாளகுணம் உருவாகத் தோன்றியவராதலால் அந்தச் சிசுவினிடத்தில் மனமிரங்கினார். உடனே அவர் மணியை அடித்து ஊழிய ளொருவனைக் கூவி ஒரு வயது சென்ற வேலைக்காரியை உடனே எழுப்பித் தானிருக்குமிடம் அனுப்பும்படி ஆக்கியாபித்தார். அதற்குள் குழந்தையின் லாவண்ணியத்தையும் சொரூபத்தையும் அதின் தூகத்தில் கவனித்து வந்தாராகையால் அக்கிழவி வந்தபோது தான் சரியான உடை தரித்திருக்கவில்லை என்பதையும் கவனியாது இருந்தார். அக்கிழவியோ தன் எஜமானன் உடையைச் சரியாகத் திருத்திக் கொள்ளும் வரையில் காலதாமதம் செய்து பார்த்தாள். அவருக்கிருந்த மரியாதையினாலும் பார்வைக்கு நன்றாய்த்தோன்றவேண்டியதற்காகவும் உடனேவரும்படி எஜமானன் கட்டளையிட்டிருந்தபோதிலும் கண்ணாடியின் முன் நின்று தன் கூந்தலை ஒழுங்கு படுத்திக் காலதாமதம் செய்த பிறகுதான் அவள் அங்கு வந்தது. அந்த சமயத்தில் எஜமானன் மூர்ச்சையாவதா யிருந்தாலும், உயிர் நீங்குவதா யிருந்தாலும் தன் காரியம் முடிந்து தான் உதவுவாள்போல் காணப்பட்டாள்.

இப்படித் தன் உடையைப்பற்றி மிக்க கவனமாயிருக்கும் ஒருத்தி அன்னியன் அலங்கோலமாய் உடுத்தியிருப்பதைப் பார்த்துத் திடுக்கிடுவது அதிசயமல்ல. 52 - வயதாகிய தேவமாதை தான் இதுவரையில் அங்கியில்லாத புருஷனைக் கண்டதில்லை யென்று சொல்வதுண்டு. அப்படிப்பட்டவள் கதவைத் திறந்ததும் தன் எஜமானன் கையில் ஒரு மெழுகுவர்த்தி தீபம் வைத்துக்கொண்டு உள் அங்கியோடு இருப்பதைக் கண்டாள். அதைக் கண்டதும் நடுங்கித் திடுக்கிட்டுப் பின்னிட்டாள். உடனே அவள் எஜமானன் தான் சரியாக உடைதரியா திருந்ததைத் தெரிந்து கொண்டு தன் உடையைத் திருத்திக்கொள்ளும் வரையில் தேவ விருதையை வெளியே நிற்கும்படியாகச் சொல்லி அவள் திகிலைத் தணித்தார். ஆகடியக்காரர்களும், அவதூறு செய்வோரும் தேவ விருதையின் பயத்தைக்கண்டு நகைப்பார்கள். ஆனல் நம்மாசகர் களோ இரவில் அந்த வேளையில் அவளைப் படுக்கையினின்றும் எழுப்பி உடையைச் சரியாகத் தரித்திராத எஜமானன் கூப்பிட்ட

தற்கு பதிலாகஅவள் கடந்தது சரியென்று தெரிந்துகொள்வார்கள். ஆனல் இவ்வளவு வயதானவளோ அந்த நேரத்தில் கூப்பிட்டதில் ஒரு தப்புமிராது என்று அவளுக்குத் தெரியாது போயிற்று.

தேவஸ்ருதை உள்ளே புகுந்ததும் சிசு அகப்பட்டதைக் கேட்டு தன் எஜமானனைக் காட்டிலும் மிகுந்த ஆச்சரியப்பட்டாள். "ஏன் எஜமான், என்ன செய்கிறது" என்று மகாதிகிலோடும் எக்கத்தோடும் கேட்டாள். அதற்கு ஆளவந்தார் அன்று ராத்திரி அந்தக் குழந்தையை அவள் பாதுகாக்க வேணுமென்றும், மறுநாள் காலையில் குழந்தைக்காக தாதி அமர்த்துவதாயுஞ் சொன்னர். "ஆமையா, இச்சிசுவின் தாய் சுற்றுப்பக்கத்தில் தான் இருக்க வேணுமாகையால் அவளைக்கண்டுபிடித்துக் கையடி அடிக்கவேண்டும். இப்படிப்பட்ட வியபிசாரிகளை லெகுவில் விடக்கூடாது, இப்படி உங்கள்மீதில் பழிசுமத்தப் பார்த்தது அவளுடைய முதல் மோசமா யிராது" என்றாள். அதற்கு ஆளவந்தார் "என்மேல் பழிசுமத்த இப்படிச் செய்திருப்பாள் என்று தோன்றவில்லை. அந்தக் குழந்தையை ரகஸ்யப்பதற்காகவே இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கவேண்டும். வேறு ஒன்றும் கெடுதல்செய்யாது இருந்தாளே என்பதை யோசிக்கச் சந்தோஷப்படுகிறேன்" என்றார்.

தேவஸ்ருதை—கெட்ட பட்டிகள் தங்கள் பாவத்தை ஒரு யோக்கியன்மேல் சுமத்தப்பார்ப்பதைக் காட்டிலும் வேறு என்ன கெடுதல் செய்யப் போகிறார்கள்? தங்களுடைய நிஷ்களங்கம் தங்களுக்கு நன்றாகத் தெரிந்த போதிலும் உலகம் பொல்லாதது. நிரபராதியாகத் தமக்குத் தெரியாத குழந்தைகளுக்குத் தகப்பனென்று உலகத்தாரால் பழி சுமத்தப்பட்டவர் பலபேர். அதிலும் தாங்கள் குழந்தையைக் காப்பாற்ற ஆரம்பித்துவிட்டால் உலக வம்புக்குக் கேட்பானேன். ராம பஞ்சாயத்தார் காப்பாற்ற வேண்டிய குழந்தையைத் தாங்கள் வளர்ப்பதாக வேற்றுக் கொள்வது எதற்காகவோ? இப்படிப்பட்ட குழந்தையைக் கண்டால் எனக்கு ஆத்திரம் உண்டாகிறது. என் அபிப்பிராயம் என்னவென்றால் இந்தக் குழந்தையை ஒரு கூடையில் போட்டு ராமாதிகாரியின் வீட்டுத் திண்ணையில் கிடத்திவிடவேண்டும். இரவோ நல்ல மழையும் காற்றுமாயிருக்கிறது. குழந்தையை நன்றாகக் கம்பளியில் சுற்றி காற்று மேலேபடாமல் கூடைக்குள் வைத்திருந்தால் அநேகமாய்க் காலைவரையில் பிழைத்திருக்கும். அப்படிப் பிழைக்காது போனாலும் நாம் இக்குழந்தைக்கு நம்மால் செய்யக் கூடிய உதவியைச் செய்துவிட்டோம. வளர்ந்து தாயைப்போல் கெட்டலேவதைப் பார்க்கிலும் நிமை என்பதே தெரியாமல் பால்யத்திலேயே இறப்பது நலம். இப்படிப்பட்ட குழந்தைகள் வளர்ந்தபின் நல்வழியில் செல்வதெப்படி?

இந்தக் கடினமான வார்த்தைகளை ஆளவந்தார் கவனித்திருப் பாராயின் அவருக்குப் பிரமாத கோபம் மூண்டாயிருக்கும். ஆனால் அவர் தன் விரலை அக் குழந்தை கையில் கொடுத்து, உல்லாசமாக விளையாட்டுக்காட்டிக்கொண்டு அதின்மேலேயே கவனமாக இருந்த தால் இவள் சொன்னதைக் கவனிக்கவில்லை. அவர் இப்பொழுது குழந்தையை எடுத்துக்கொண்டு படுக்கைக்குப்போய் அது ஜிழி த்துக் கொண்டால் மூலைப்பால் கொடுக்க ஒரு வேலைக்காரியை அழைத்துப் போகும்படி தேவவிருதைக்கு ஆக்கியாபித்தார். காலையில் தான் எழுந்திருப்பதற்கு முன்னால் குழந்தைக்குத் தக்க உடையைத் தரிப்பித்துத் தன்முன் கொண்டுவர வேணுமென்றும் சொன்னார். தனக்கு யதேஷ்டமாக சப்பளம் தொடுத்து வேண் டிய சௌகரியங்கள் எல்லாம் ஏற்படுத்தி யிருக்கும் எதமான னிடத்தில் மிக பக்தியும் விசுவாசமு முடையவ ளாகையால் தேவவிருதை அவருடைய கட்டளைக்கு மூன்னால் ஆகேஷபணை ஒன்றும் சொல்லாது அக்குழந்தை அவமானமாகப் பிறந்ததென் பதையும் கருதாமல் "எவ்வளவு அழகான குழந்தை" என்று சொல்லிக்கொண்டு தன் அறைக்கு எடுத்துப் போய்விட்டாள்.

உடனே ஆளவந்தார் அன்றையதினம் தான் ஒரு நன்மை செய்ததற்காக மகிழ்ச்சியடைந்து படுத்து அயர்ந்த நித்திரை போய்விட்டார்.

அத்தியாயம் 4.

பெருமைக்கு மேனைச் சிறுமைக்குத் தத்தங்
கருமமே கட்டளைக் கல்.

ஆளவந்தார் மாளிகையைப் போன்ற விசித்திரக் கட்டடம் வேறெங்கும் கிடையாது. வெளியில் பார்ப்பதற்கு எவ்வளவு அல ங்காரமாகத் தோற்றியதோ அவ்வளவு விஸ்தாரமுடையதாக உள் பக்கத்திலுமிருந்தது. அந்தமாளிகை ஒரு குன்றின் தென்கிழக் கில் அடிவாரத்தில் கட்டப்பட்டிருந்தது. அதற்கு வடகிழக்கில் ஒரு பெரிய தோப்பு ரமணீயமாய் வானளாவ வளர்ந்து செழித் துப் பார்ப்போருக்கு மிக்க மனோகரமா யிருந்தது. அந்தத் தோப் பின் மத்தியில் ஒரு அழகிய சமவெளியுண்டு. அது இந்த மாளி கையை நோக்கிச் சரிவாயிருக்கும். ஒரு பெரிய பாறையிலிருந்தும் ஒரு அருவி உற்பத்தியாகி, 30-அடி உயரத்திலிருந்து திடீரென்று கீழே விழுந்து பாசிபடர்ந்த கற்களை உடைத்துக்கொண்டு கூழாங் கல் தரை மார்க்கமாய்ச் சென்று அந்த மாளிகைக்குத் தெற்கே கால்மைல் தூரத்தில் உள்ளதும் அந்த வீட்டின் ஒவ்வொரு அறை யின் பலகணிகளின் வழியாகப் பார்க்கக் கூடியதுமான வரியில் போய் விழுந்தது. அந்த வரியோ அகன்ற மைதானத்தின் மத்தியி லிருந்தது. ஆடுமாடுகள் அம் மைதானத்தில் எப்பொழுதும் மேய்

ந்தகொண் டிருப்பதைப்பார்க்க மிக ரேர்த்தியாக விருக்கும். அந்த எரியிலிருந்து ஒரு ஆறுகிளம்பி கடுநாடுகளின் வழியாக விரைவாக ஓடிக் கடலில் கலக்கும்.

இத்தப் பள்ளத்தாக்குக்கு வலது பக்கத்தில் இவ்வளவு லிஸ் தாரமில்லாத மைதானம் ஒன்றுண்டு. அதைச் சுற்றிலும் அநேக கிராமங்களிருந்தன. அதில் ஓர் இடிந்துபோன மடம் புல்பூண்டு வளர்ந்து முன்பக்கமாத்திரம் இடியாமல் தோன்றிற்று. இடது பக்கத்தில் ஒரு பூஞ்சோலை. அது சம நிலத்தில் இல்லை. அங்கு ஒரு பக்கம் குன்றும் ஒரு பக்கம் சம நிலமும், ஒரு பக்கம் காடும் ஒரு பக்கம் தடாகமும் சேர்ந்து விந்தை காட்சிபாக விருக்கும். இவைகளுக்கு அப்புறம் உயர்ந்த மலைகள் மேகத்தை யளாவி வளர்ந்திருந்தன. இப்போழுதோ வசந்தகாலத்தின் மத்தி, காலைக் காக்ஷி மிக்க சுகமாயிருந்தது. ஆளவந்தார் மலைச் சிகரத்தின்மேல் உலாவிவருகிறார். அவருக்குத் தெய்வசம்மதமான நற்செய்கை அன்று எதைச் செய்யலாம் என்கிற யோசனையையன்றி வேறென்ன விருக்கும்?

வாசகர்காள்! ஜாக்கிரதை, உங்களைத் தெரியாமல் ஆளவந்தார் ஏறியிருந்த மலையின் உச்சிக்குக் கொண்டுவந்து விட்டேன். உங்களை அபாயமில்லாது எப்படி கீழே அழைத்துப் போவதென்று பயமாயிருக்கின்றது. அதோ தேவலிருதை மணியடிக்கிறுள். எதற்காக? ஆளவந்தாருக்குக் காலைபோஜனம் தயாராக இருக்கிறதாம். அங்கே நாம் போகவேண்டியது அவசியம். உங்களுக்கு இஷ்டமிருந்தால் நீங்களும் வாலாம். ஆனால் வெகு ஜாக்கிரதையாக இறங்கவேண்டும்.

ஆளவந்தார் கோகோ அருந்திய பிறகு பிருந்தாவைக் கூப்பிட்டு உனக்கு ஒரு வெகுமதி வைத்திருக்கிறேன் என்றார். அது ஒரு ஆபரணமாவது ஒரு வஸ்திரமாவது இருக்கலாம் என்று எண்ணி அவருக்கு பிருந்தா வந்தனம் புரிந்தாள். அவர் அடிக்கடி இவ்விதமாக வெகுமானங் கொடுப்பதுண்டு. அவரைச் சந்தோஷிப்பிப்பதற்காக அவள் அவற்றைக்கொண்டு தான் அலங்காரம் செய்தகொள்ள அதிக நேரம் செலவழிப்பாள். அவரைச் சந்தோஷிப்பிக்க என்று எதற்காகச் சொன்னேன் என்றால் இயல்பில் அவளுக்கு நல்லுடைகளைக் கண்டால் மிக்க வெறுப்புக் கொண்டு நல்லுடையுடுக்க ஆசைப்படும் பெண்களைக் கண்டால் நிந்தனை செய்வாள்.

தனக்குக் கிடைக்கும் வெகுமானம் இன்னதாயிருக்குமென்று ஊகித்த பிருந்தா, தன் எஜமான் சொற்படி ஒரு சிசுவை தேவலிருதை கொண்டுவந்து கொடுத்ததைப் பார்த்து வியாகூலம்

அடைந்தாள். ஆச்சரியம் அதிகமாகிவிட்டால் மெள்னம் சாதிப் பார்கள் என்று சொல்வதுண்டு. அம்மாதிரியேபிருந்தாவும் இருந் தாள். கடைசியில் அவள் சகோதரன் வாசகர்களுக்குத் தெரிந்த விருத்தாந்தத்தை அவளிடம் ஆதியோடந்தமாகச் சொன்னர்.

பிருந்தா பெண்கள் பதிவிரதா சிரோமணிகளாக இருக்க வேணுமென்று யார்க்கும் வற்புறுத்துவதுண்டு. தானும் எவ்வள வோ அடக்கமாகவும் கற்புடனுமிருந்து வந்தவள். இவையெல் லாம் அறிந்த தேவவிருதை அக்குழந்தையைக் கண்டதும் பிரு ந்தா சிறி அதை வீட்டைவிட்டு வெளிப்படுத்தும்படி ஆக்கியா பித்து ஆணை இடுவாள் என்று எதிர்பார்த்தாள். ஆனல் பிருந்தா அவ்வனுதைப் பிராணியிடம் மனமிரங்கி தன் சகோதரன் அதி னிடத்தில் கருணை பாராட்டியதற்காக அவரைப் புகழ்ந்தாள்.

இது என்ன இப்படிச்சொன்னுளே என்று வாசகர்கள் அதி சயப்படலாம். ஆளவந்தார் தன் கதையை முடித்த பிறகு அந்தக் குழந்தையை தன் மகன்போல் தான் வளர்க்கப்போகிறதாய் உறுதி சொன்னதினலும் பிருந்தா தன் சகோதரன் சொல்லுக்கு எதிர் மாற்றம் சொல்லாதவளாகையாலும் அவள் சம்மதித்தது இயல்புதானே.

அக்குழந்தையை ஒப்புக்கொண்டபோதிலும் அதின் தாயா ரைப்பற்றி பிருந்தா நிந்தித்ததற்கு அளவில்லே. அவள் கொழுத்த வள், ஈனமானவள், மானமற்று ஜீவனம் செய்பவள், என்றும், பாதகி என்றும், இழிகுலத்தவள் என்றும், பட்டி, துன்மார்க்கி என்றும் நிந்தித்தாள்; இப்படிக் கற்பினின்றும் தவறி யவர்களைக் கற்புடைய மாதர் தூஷிப்பது சகஜம் தானே.

இப்பொழுது அச்சிசுவின் தாயைக் கண்டு பிடிக்க ஆலோ சித்தார்கள். வீட்டிலுள்ள ஒவ்வொரு வேலைக்காரிகளின் நடவடிக் கையைப்பற்றி ஆராயப் புகுந்தனர். அவர்கள் எல்லோரும் தேவ விருதையால் கொண்டுவந்து வைக்கப்பட்டவர்களாதலாலும், அல ங்கோலத்தின் உருவே ஆகையாலும், தேவவிருதை அவர்கள் ஒரு வரும் இப்படிச் செய்ய மாட்டார்கள் என்று அவர்களுடைய நடத்தைக்குத்தான் ஜாமீன் நின்றுள்.

இதற்கப்புறம் அந்தவூரிலுள்ள பெண்களைப்பற்றி கவனிக்க வேணுமென்று தீர்மானித்தார்கள். மிக்க சூக்ஷுமத்துடனும் புத்திசாலித் தனமாயும் காரியத்தை நடத்தக் கூடியவள் தேவவி ருதை யாகையால் அவளேபோய் விசாரணைகளைச் செய்து முடி வையறிந்து சாயந்திரமேவந்து சொல்லவேண்டுமென்று ஏற்பாடு ஆயிற்று.. இந்தத் தீர்மானத்துக்குப் பிறகு ஆளவந்தார் அந்தக் குழந்தையைத் தன் சகோதரியிடம் கொடுத்துக் காப்பாற்றி வரு மபடி சொல்லிவிட்டு தன் படிப்பு அறைபோய்விட்டார்.

அத்தியாயம் 5.

வானுயர்தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப்படின்.

எஜமானன் மறைந்ததும் தேவவிருதை பிருந்தாவின் உத்திரவை எதிர்பார்த்திருந்தாள். எஜமானனுக்கு மூன்னுல் நடந்த விஷயங்களின்படி அனுசரிக்கக் கூடாதென்று அவளுக்குத் தெரியும். என் என்றுல் பிருந்தா தன் சகோதரனுக்கு மூன்னுல் ஒன்று சொன்னுலும் அவர் மறைந்ததும் வேறுவிதமாக மாற்றிவிடுவாள் என்பது அவளுக்கு நன்றுகத்தெரியும். பிருந்தா தேவவிருதையை அதிகநேரம் கார்க்கவைக்கவில்லை. தேவவிருதையின் மடியில் தூங்கிக்கொண்டிருந்த குழந்தையை அன்புடன்பார்த்து, ஆவலுடன் முத்தமிட்டு, அதினுடைய அழகையும் முகவிலாசத்தையும் கண்கொட்டாமல் நோக்கித்தான் ஆநந்த மடைந்ததாக தேவவிருதையிடம் சொன்னுள். இதைக்கண்ட தேவவிருதை, 45-வயதுடையமாது ஒருத்தி இளம்பிராயமும், தேகக்கட்டுமுள்ள மணமகனைக் கண்டு அடங்கா ஆநந்தம் கொள்ளுவதுபோல் அதை முத்தமிட்டுக் கசக்கி இப்படிப்பட்ட குழந்தையை நான் இதுவரையில் பார்த்ததில்லை. என்ன அழகு! எப்படிப்பட்ட தேஜஸ்! என்று சொல்லிப் புகழ்ந்தாள்.

பிருந்தா குழந்தைக்குத் தேவையான உடைகளைச் சேகரம் செய்து அதை வளர்ப்பதற்குத் தனி அறை ஒன்று ஏற்படுத்தும்படி உத்திரவிட்டாள். தனக்குக் குழந்தை இருந்தால் எவ்வளவு ஏற்பாடு செய்வாளோ அவ்வளவு ஏற்பாடு பிருந்தா செய்தாள். ஒவ்வொரு மதமும் இப்படி இழிவாய்ப் பிறந்த குழந்தைகளுக்கு உபகாரம் செய்யக்கூடாது என்று சொல்லியிருக்க, இவள் செய்தது சரியாகுமோ என்று நமது வாசகர்கள் அவளைக் கண்டிக்கலாம். ஆனுல் அவள் சொல்வது என்னவென்றுல், இச்சிசுவை என் சகோதரன் சுவிகாரம் செய்துவிடுவதாயிருப்பதால் அதைப் பக்ஷமாகவே நடத்தவேண்டுமென்றும், தன்னுடைய சொந்த அபிப்பிராயம் கேட்டால் இது துன்மார்க்கத்தை ஜாஸ்தியாகப் பரவச் செய்யுமென்றும், ஆண்பிள்ளைகள் மிகவும் பிடிவாத முடையவர்களாகையால் அவர்கள் பரிகாசத்திற்கு இடமான காரியங்களைச் செய்தபோதிலும் அதன்படியே பெண்பிள்ளைகள் நடக்கவேணு மென்பதாம்.

இப்படியே சொல்லிக்கொண்டு சகோதரன் இஷ்டப்படி குழந்தையைக் கருத்தாய் ஆதரிக்க உத்திரவு கொடுத்தாள். தான் செய்வது பிசகு என்று தெரிந்தும் சகோதர வாக்கியத்தைப் பரிபாலிக்க இவ்வண்ணம் செய்தான்போலும்.

அத்தியாயம் 6.

இலனென்று தீயவை செய்யற்க செய்யி
னிலனாகு மற்றும் பெயர்த்து.

மறத்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.

தேவவிருதை எஜமானன் உத்திரவுப்படி குழந்தைக்குவேண்டிய ஏற்பாட்டைச் செய்த பிறகு குழாதையிச தாயைக்கண்டுபிடிப்பதற்காக கிராமப் பரிசோதனை செய்ய ஆரம்பித்தாள்.

தன்பலத்தையும் பெருமையையும் அறிந்;பருந்து ஒன்று கெடுதல் செய்ய எண்ணிவட்டமிடுவதைப் பார்த்த புறமுதலிய சிறுபறவைகள் நடுங்கி ஓடுங்கி மறைந்துகொள்வதுபோல, தெருவில் தேவவிருதையைப்பார்த்த ஜனங்களெல்லாம் தங்களுக்குத் தான் என்ன ஆபத்துவந்ததோ என்று திகிலடைந்து ஓடியொளிந்தார்கள். மகாகர்வத்தோடு தற்பெருமையையேகருதி தலையை நிமிர்ந்தவண்ணமாய்த்தான் ஏற்றுக்கொண்ட காரியத்தைத் தடையில்லாமல் முடிப்பவள்போல மிக்ககாம்பீரத்தோடு தேவவிருதை ஊர்பவனிவந்தாள்.

பருந்து ஒன்று சிறுபறவைகளை எப்படிப் பக்ஷித்துவிடுகிறதோ அப்படியே தேவவிருதை எளியவர்களை அவம்திதுத்துத் துன்பப்படுத்துவாள். இப்படிச் செய்தால்தான் தன்னை மதித்து கௌரவிப்பார்கள் என்பது அவளுடைய எண்ணம்.

பிருந்தா எப்பொழுதாவது தேவ விருதைக்கடிந்து இமிசைசெய்தால் உடனே அவள் வெளியில்வந்து தன் கோபமனைத்தையும் எளிய ஜனங்கள்மேல் காண்பித்துவிடுவாள். ஆதலால் தேவவிருதை வருகிறாள் என்று கேள்விப்பட்டால் ஜனங்களுக்குத் துயரந்தான். உண்மையில் அவளிடத்தில் வேறுப்பும் அவளைக் கண்டால் பீதியும் ஜனங்களுக்கெல்லாம் உண்டாகும்.

இத்தவிடத்துக்கு அவள்வந்ததும் தன்னைப்போலவே அழகும் தன்வயதுமுள்ள ஒருகிழவி வீட்டிற்கு நேரேசென்று அவளிடம் நடந்தவிஷயத்தைப்பற்றியும் தானவந்த விஷயத்தைப்பற்றியும் சவிஸ்தாரமாகச் சொன்னாள். இவர்கள் இருவரும் அங்கிருந்த வீடுகளில் வஸிக்கும் பல சிறுபெண்களின் நடத்தைகளை ஆராயப்புகுந்து கடைசியில் சின்ன ஜானகி என்பவள்தான் இப்படிச்செய்திருக்கக் கூடுமென்று சம்சயித்துவிட்டார்கள். இந்த சின்ன ஜானகி என்பவள் முகவிலாசத்திலாவது தேக உருவிலாவது சிறந்தவள் என்று சொல்வதற்கில்லை. ஆனால் இவற்றிற்கு பதிலாக புத்திசாலித்தனமும், பகுத்தறிவும் உடையவளாயிருக்

தாள். இவள் பனேகவருஷம் ஒரு பள்ளிக்கூட உபாத்தியாய ரிடம் வேலைக்காரியாக இருந்தவள். அப்பொழுது தனக்குக் கிடைக்கும் ஓய்வுநேரமெல்லாம் மாணவர்களின் புஸ்தகங்களை எடுத்துப் படிக்கக்கண்ட உபாத்தியாயர், அவளுக்கு வித்தையை நன்முகக் கற்றுக்கொடுத்தார். அவள் ஸம்ஸ்கிருதத்தில் நல்ல பண்டிதையாகி தன்வசதுள்ள வாலிபர்கள் பலரைக்காட்டிலும் அந்த பாஷையில் வித்வாளையாக விருந்தாள். இந்தப் பாண்டித்தியம் அவளுக்குத் துலபமாகவே முடிந்தது. தன்வேலைக்காரத்தொழிலிலிருந்தும் மற்றவேலைக்காரருக்குக் கிட்டாதவித்தையைக் கைப்பற்றிவிட்டபடியல் அவள் அவர்களோடு சேர்ந்து சம்பாஷித்துக் குலாவுவது கிடையாது. ஆதலால் மற்றவேலைக்காரருக்கு இவளிடம் பொறுமையும் அசூயையுமுண்டாயிற்று. அதை அவர் மனதிற்குள் வைத்துக் காய்ந்துகொண்டிருந்தார்கள்.

ஒருநாள் சுக்ரவாரம் ஜானகி பட்டு உடைதரித்து, சரிகை பூனந்தரவிக்கை அணிந்து வெளியேறக்கண்ட மற்றசிறுமிகட்கு இவள்மேலிருந்த பொறுமை கொழுந்துவிட்டெரிந்தது. வித்தியார்வத்தினல் தன்னை மற்றவர்கள் மரியாதை செய்வார்கள் என்று ஜானகி உண்மையாக எண்ணினுள். மரியாதைக்குப் பதிலாக ஊர்ப்பெண்கள் அவளைப்பகைத்து அவதூறு கூறினர்கள். இப்படிப்பட்ட உடை அவளுக்கு மானமாகக்கிடைத்திராது என்றும் மானங்கெட்டவது இப்படிப்பட்ட உடை உடுத்திக்கொள்ள வேண்டாமென்றும் வம்புபேசினர்கள்.

ஆகையினல்தான் இவளை அச்சிசுவுக்குத் தாயாராக இருக்க வேணுமென்று தேவவிருதையிடம் அந்தக் கிழவிசொன்னுள். இன்னுருவிஷயமும் சேர்ந்து இந்தசந்தேகத்தையுறுதிசெய்தது. சின்ன ஜானகி கொஞ்சநாளாய் ஆளவந்தார் வீட்டுக்கு வருவதுண்டு; பிருந்தாவ்யாதியாக இருந்தபொழுது அனேக இரவு அவளுடன் கண்விழித்திருந்து சிகிச்சைசெய்திருந்தாள். அல்லாமலும் ஆளவந்தார் திரும்பிவருவதற்கு முதல் நாள் அந்தவீட்டில் சின்னஜானகியை தேவவிருதை பார்த்திருந்தாள். ஆனல் ஜானகி நல்ல பெண் என்று எப்பொழுதும் கருதியிருந்தபடியால் தேவவிருதை அவளிடம் சம்சயப்படவில்லை.

தேவவிருதைக்குமுன்னல் சின்ன ஜானகிவந்து சேரும்படி ஆஜ்ஞாபிக்கப்பட்டாள். அவளும் உடனேவந்து சேர்ந்தாள். அவள் வந்ததும் தேவவிருதை தன்னை ஒரு நியாயாதிபதியாகப் பாவித்துக்கொண்டு அவளைப்பார்த்து, "ஏ, மானங்கெட்ட விபசாரி" என்று ஆரம்பித்து ஒரு உபன்னியாசம் செய்தாள். அப்பெண் குற்றவாளியா அல்லவா என்று தெரிந்துகொள்வதற்கு முன் அவளுக்கு சிக்ஷைவிதிக்க ஆரம்பித்துவிட்டாள்.

மேற்சொல்லிய காரணங்களால் சின்ன ஜானகிகுற்றவாளியே என்று தேவவிருதை நிச்சயம் செய்துவிட்டாலும் ஆளவந்தார் மாத்திரம் தகுந்தசாக்ஷிய மின்றி அவளுக்குச் சிக்ஷை விதியார் என்பது தேவவிருதைக்குத் தெரியும். ஆதலால் ஜானகியைக் குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படி தூண்டி அவளையும் ஒப்புக்கொள்ள சம்மதிக்கச் செய்துவிட்டாள்.

ஜானகிதன் தப்பிதத்திற்காக வருந்தித் துயரமுற்றிருந்த போதிலும் தேவவிருதைமாத்திரம் அவளிடம் கிஞ்சித்தும் தயை பாராட்டாமல் அவளை முன்னிலும் அதிகமாகத் தூறினாள். பக்கத்தில் நின்று கேட்டுக்கொண்டிருந்தவர்களும் அவளைச் சும்மாவிடவில்லை. இவளுடைய பட்டு உடை எப்படிப்பட்டதென்று முன்னாலேயே எங்களுக்குத் தெரியுமென்றார் சிலர். இவள்படிப்பு எப்படிவந்து முடியுமென்று எங்களுக்கு முன்னாலேயே தெரியுமென்றார் சிலர். இப்படியேதாவது ஒருவம்புசொல்லி ஒவ்வொருவரும் தங்கள் பகையைத் தீர்த்துக்கொண்டார்கள். ஜானகி இவையனைத்தையும் பொறுத்துக்கொண்டிருந்தாள்.

தன் ஆராய்ச்சியில் ஜயம் பெற்றவளாய் மிக்க கர்வத்தோடு, சின்ன தவறை தவராது வீட்டுக்குத் திரும்பிவந்து ஆளவந்தாரிடம் தான்கண்டுபிடித்த விஷயங்களை எல்லாம் தேவவிருதை சொன்னாள். இதைக்கேட்ட ஆளவந்தார் மிகவும் ஆச்சரியப்பட்டார். ஏனெனில் சின்னஜானகியுடைய கல்வித்திறமையையும் கூரிய அறிவையும் கேள்விப்பட்டு அடுத்தவூரிலிருந்த ஒரு குருக்களுக்கு இவளை விவாகம்செய்து கொடுத்து அவள்சாப்பாட்டுக்கும் ஏற்பாடு செய்வதாக யோசனை செய்துகொண்டிருந்தார். ஆதலால் இந்தசமாசாரம் சொன்ன தேவவிருதைக்கு எவ்வளவு திருப்தியிருந்ததோ அவ்வளவு மனவருக்கம் ஆளவந்தாருக்கு உண்டாயிற்று.

ஜானகியை இட்டுவரும்படி ஆளவந்தார்ல் தேவவிருதை அனுப்பப்பட்டாள். எதற்காகவென்றால் அவள் செய்தகுற்றத்தைக்கடிந்து அவளுக்குத் தக்க புத்திமதி சொல்லி அனுப்புவதற்குத்தான். அந்தப்பிரசங்கத்தைக்கேட்க விரும்பும் வாசகர்கள் அடுத்த அத்தியாயத்தைப் படிக்கலாம்.

அத்தியாயம் 7.

இன்ன செய்தாரை யொறுத்தலவர் தாண
நன்னயஞ் செய்துவிடல்.

ஜானகி வந்தவுடனே ஆளவந்தார் தான் படிக்கும் அறைக்கு அவளை அழைத்துப்போய் அடியில் வருமாறு சொன்னார். குழந்

தாய், நான் நியாயாதிபதி யாகையால் நீ செய்த குற்றத்திற்கு உன்னைத் தகுந்தபடி சிக்ஷிக்க எனக்கு அதிகாரமுண்டு. நீ செய்த குற்றத்தை என்மீதில் சுமத்தப் பார்த்தபடியால் உன்னை தாக்ஷண்ணியத்துடன் நான் சிக்ஷிக்க வேண்டியதா யிருக்கிறது. ஒரு நியாயாதிபதி விசாரணை செய்கையில் அவனுடைய கோபமாவது, தனக்கு நடந்த அசம்பாவிதமாவது, அவனை நியாயத்திலிருந்தும் விலகச்செய்யல் தகாது. நீ உன் குழந்தையை என் வீட்டில் கொண்டு வந்து விடத்தியது உன் குற்றத்தை ஜாஸ்திப்படுத்தவேண்டியிருக்க, உன் குழந்தையின்மேலிருந்த பக்ஷத்தால் நீ இப்படி செய்தாய் என்று உனக்கு அனுகூலமாகவே அந்த சந்தர்ப்பத்தை வைத்துக்கொள்ளுகிறேன். நீயாவது அதனுடைய அயோக்கியனை தகப்பனாவது அச்சிசுவைக் காப்பாற்ற முடியாது போனதால், இப்படிச் செய்தால் குழந்தை குறைவின்றி வளருமென்று எண்ணினாலும். மற்றும் சில மானங்கெட்ட தாய்மார்களைப் போல் ஈவு இரக்கமின்றி குழந்தையைத் தெருவில் போட்டுவிட்டுப் போயிருந்தால் உன்னிடத்தில் எனக்கு அதிக அதிருப்தியுண்டாயிருக்கும். ஆகையால் நீ கற்பிழந்ததற்காக நான் இப்பொழுது உன்னைத் தூறப்போகிறேனே ஒழிய குழந்தையை என் படுக்கையில் கிடத்தியதற்கு நான் ஒன்றும் சொல்லப்போகிறதில்லை. கற்பைப்பற்றிக் கெட்டுப்போனவர்கள் அலக்ஷியமாகப் பேசியபோதிலும் அந்தக் கற்பை இழந்தவர்கள் படுந்துயரமும் அவர்கள் அனுபவிக்கும் தடுமாற்றமும் சொல்லத்தரமல்ல. இந்துமதத்தின் சாஸ்திரம் தெரிந்த எவனும் கற்பைப்பற்றி இழிவாகப் பேசமாட்டான். கற்பிழந்தோருக்கு கோரமான நரகமே கதி என்று சாஸ்திரங்கள் எல்லாம் மூறையிடுகின்றன. அவர்கள் தெய்வகடாக்ஷத்திற்கு அபாத்திரர்களாகி சுவாமியினால் விலக்கப்பட்டுத் துன்பத்திற்கு ஆளாகிறார்கள். இந்த விஷயத்தைப்பற்றி மனிதர்களுக்கு அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. உனக்கு ஒரு வார்த்தை சொன்னால் அதுவே போதுமென்று நினைக்கிறேன். நீ செய்த தப்பிதத்திற்கு உன்னை நீயே நொந்துகொள்ளும்படியாகச் செய்கிறேன்.

மற்றும் பலவித குற்றமிருந்தபோதிலும் இவ்வளவு பயங்கரமும் இழிவு மானபாபம் வேறு ஒன்றுமில்லை. இந்த விஷயத்தைப்பற்றி ஒவ்வொருவரும் நன்றாக ஊன்றி யோஜித்துப்பார்த்தால் ஸ்திரீ ஜாதியார் விபசாரம் செய்யவே துணியமாட்டார்கள்.

கற்பிழந்ததால் உன்னை மானங்கெட்டவள் என்று எல்லோரும் சுட்டிக்காட்டுகிறார்கள். அயோக்கியர்களும் துன்மார்க்கர்களும் தவிர மற்றவர்கள் எல்லாம் உன்னைக்கண்டால் பெருவியாதிக்காரனைக் கண்டதுபோல் விலகி ஓடுகிறார்கள். உன்னை அவர்களிடம் வரவிடுகிறதுமில்லை. உனக்குச் செல்வமிருந்தால் மற்ற

யாரும் உன்னிடம் சேருகிறதில்லாததால் அந்தச் செல்வத்தை சுகமாய் அனுபவிக்கவும் முடிகிறதில்லே. உனக்குச் செல்வமிராவிட்டால் உன்னால் அதைச் சேகரிக்கமுடியாது. சாப்பாட்டுக்குக் கூடச் சில சமயம் வழியில்லாது போய்விடும். ஏனெனில், யோக்கியர்கள் ஒருவரும் உன்னைத் தங்கள் வீட்டில் வரவேற்கமாட்டார்கள். ஏதாவது கிடைத்தால் போதுமென்று இருக்குமாகையால் எப்படிச் சம்பாதித்தாலும் சரி என்று மானத்தைவிட்டுத் துன்பத்திற்கு ஹேதுவாகிய வழியில் செல்லுவாய். அம்மார்க்கம் உன் தேகத்தைக் கெடுத்துவிடுவதுமல்லாமல் உன் ஆத்துமாவையும் நரகத்துக்கு ஆளாக்குகிறது.

இவ்வளவு துன்பத்திற்கும் மூன்னால் உனக்குக் கிடைக்கும் சுகம் எவ்வளவு? இவ்வளவு எளிதில் அறியக்கூடிய விஷயத்தை எப்படி அறியாமல் விணாய்த் துன்மார்க்கத்தில் பிரவேசித்து இழிவுபட்டுவிட்டாய்? உன் புத்தியை இந்த அற்ப சுகம் மாற்றிவிட்டதா? நீ வரப்போகும் துன்பத்தை யோஜியாமல் ஏன் அற்ப சுகத்திற்கு ஆசைபட்டாய்?

இந்தசுகந்தான் எப்பேர்ப்பட்டது? தெய்வசிருஷ்டியில் அதியற்பமான ஜந்துவுக்கும் இந்த ஆசை இருந்துகொண்டிருக்கிறது. மானிடர்க்கு உரிய பகுத்தறிவு, பெருமை, மனோதிடம் அனைத்தையும் துறந்து இழிந்த ஜந்துக்கள்போல் மானங்கெட்ட நிற்நின்பத்திற்கு இச்சைப்படுகிற ஸ்திரீ எவ்வளவுதாழ்ந்த அற்ப குணமுடையவளாயிருக்கவேண்டும். மெய்ம்மறந்து துன்மார்க்கத்தில் பிரவேசித்தேன் என்று ஒரு ஸ்திரீயும் மன்னிப்புக்கேட்கமாட்டாள். இப்படிச்சொன்னால்தாம் ஆண்பிள்ளைகையில் அகப்பட்ட சூஸ்திரப்பதுமை என்று ஒப்புக்கொண்டதாகும். காதல் என்பது யாரும்புகழத்தக்க நியாயமான மனோதமாக்கும். அது எப்பொழுதும் கொடுமையாக இராது. தன்பகைவனையும் நேசி என்று சாஸ்திரம் சொன்னபோதிலும் இப்படிச்சொன்ன நேசமென்பது நாம் நண்பர்களிடம் சுபாவமாய்க் காண்பிக்கும் நேசமல்ல. அவர்களுக்காக நம் உயிரையும் கொடுத்து உதவுசெய்யும் நேசமல்ல. நீர்க்குமிழிபோலத் தோன்றியழியும் வெறுக்கத்தக்க சொற்பசுகத்திற்கு ஆசைப்பட்டு ஒருத்தியை வாழ்நாள்முழுதும் மகாதுன்பத்திற்குள்ளாக்கும் ஒருவனை அறிவுள்ள ஸ்திரீ சத்துருவென்று எண்ணுமல் வேறு எவ்விதமாக நினைப்பாள். நம்முடைய மரபில் இதினால் உண்டாகும் மானக்கேடும் துன்பமும் பெண்களை அணுகுமேயன்றி புருஷர்கட்கு ஒன்றுமிராது. உண்மைக்காதல் எது வென்றால் காதலிக்கும் பொருளின் க்ஷேமத்தைக் கருதுவதேயாம். அப்படியிருக்க ஒரு ஸ்திரீயை பலவிதத்திலும் துன்பப்படச் செய்வது காதலாகுமா? ஒரு அயோக்கியன் உண்மையாகவே காதலிப்பதாகப் பாசாங்கு சொல்லி ஒருத்தியை

வசீகரப்படுத்தப்பார்த்தால் அந்த ஸ்திரீயின் சத்துருக்களிலெல்லாம் கொடிய சத்துரு இவன்தான் என்று அவனைக்கண்டு விலக வேண்டாமா ? பொய்யாகவும் தந்திரமாகவும் சினேகிதனைப்பாசாங்கு பண்ணி ஒருத்தியினுடைய தேகத்தை மாத்திரமல்ல அறிவையும் கெடுக்க முயற்சி செய்பவன் நல்லெண்ண முடையவனாக இருப்பானா ? என்று முடித்தார்.

இதைக்கேட்ட ஜானகி மிக்க மனம்வருந்தினாள். ஆளவந்தார் ஒரு நிமிஷம் சும்மாயிருந்து பிறகு ஆரம்பித்து, குழந்தாய், நீ செய்தது செய்தாகி விட்டது. செய்ததை மாற்றவு முடியாது. அதற்காக உன்னை நான் நிந்திப்பதற்காக இவ்வளவு தூரம் சொல்லவில்லை. ஆனால் உனக்கு எச்சரிக்கை செய்து இனிமேலாவது மனந்திடத் துடனிருக்கவேண்டுமென்று தான் நானிவ்வளவு கஷ்டமெடுத்துக்கொண்டது. நீ தவறிப்போனவளானாலும் உன் அறிவைப்பற்றி எனக்கு நல்லபிப்பிராயமுண்டு. நீ கொஞ்சமும் வஞ்சகமின்றி மனப்பூர்வமாய் உன் நடத்தை அனைத்தையும் ஒளியாது உரைத்ததினால் நீ இப்பொழுது செய்த குற்றத்துக்கு வருந்துதல் உனக்குக் கொஞ்சம் தேறுதலாயிருக்குமென்று நம்புகிறேன். இந்த வுலகத்தில் நீ செய்த குற்றத்திற்குப்பலராலும் பரிகசிக்கப்படவேண்டியவள். ஆனால் நான் உன்னை இந்த வூரைவிட்டு உன் நடத்தை ஒன்றுமறியாத வேறு ஊருக்கு அனுப்புகிறேன். அங்கே உன் மிகுதி காலமுழுதும் நல்ல பெண்ணாக வாழ்ந்திரு. சாப்பாட்டிற்கு இல்லாமையால் மறுபடி தவறிப்போகவேண்டிவருமே என்று நினைக்கவேண்டாம். உனக்குக் குறைவின்றி திரவியம் கொடுத்து அனுப்புகிறேன். இந்த உலகத்திலும் மானமிழந்து கெட்ட ஜீவனம் செய்வதைக்காட்டிலும் மாசின்றி தூயவாழ்க்கை வாழ்தல் சுகமென்று உனக்கே தெரியவில்லையா ? உன் குழந்தையைப்பற்றி நீ ஒன்றும் கவலைப்பட வேண்டியதில்லை. அதை மிகவும் நன்றாகவே நான் போஷித்து வருகிறேன். இப்பொழுது நீ உன்னை அவமானத்துக்கு உள்ளாக்கியவன் எவனை அவனைத் தெரிவிக்கவேண்டும். உன்மேலிருக்கும் கோபத்தைவிட அவன் மேல் அதிகக் கோபம் எனக்குண்டு என்றார்.

ஜானகி தரையைப் பார்த்திருந்த கண்ணைத் தூக்கி ஆளவந்தாரைப் பார்த்து நாணத்துடன் கூடிய குரலுடன் அடியில் வருமாறு சொன்னாள். தங்களுடைய தன்மை தெரிந்து தங்களுடைய உபகாரசிந்தையை இச்சிக்காதவர்கள் அறிவும் குணமும் கெட்ட மூடர்களாக இருக்கவேண்டும். இந்தசமயத்தில் என்னிடம் அபயவைத்து தங்கள் அனுக்கிரகத்திற்கு என்னை ஆளாக்கியதை நான் உணராவிட்டால், அதைவிட நன்றியறிவின்மை வேறு என்ன விருக்கிறது. நான் இப்பொழுது தங்களிடத்தில் பிதற்றிக்கொள்வதை எல்லாம்விட நான் நடக்கப்போகும் விதத்தால் என்னு

டைய உணர்ச்சி தங்களுக்குப் புலப்படும். எனக்குக் கடைசியில் வாக்களித்த வெகுமானத்தைக் காட்டிலும் தாங்கள் சொன்ன புத்திமதியை நான் மேலாகக்கொள்ளுகிறேன். என்னுடைய அறிவைப்பற்றித் தாங்கள் நல்லபிப்பிராயங் கொண்டிருப்பது எனக்குத் தெரியாமல் போகவில்லை. (இதைச் சொன்னதும் ஜானகிக்குக் கண்ணிலிருந்தும் நீர் தாரை தாரையாகப் பெறுகிற்று. கொஞ்சநேரம் மௌனமாக இருந்தாள் திரும்பவும்) தங்களுடைய அன்புக்கு நான் கொஞ்சமேனும் பாத்திரமாகாதவள். தங்களுடைய தயவு என்றும் நீடித்திருக்கும்படி எப்போதும் நடந்து கொள்வேன். தாங்கள் சொன்னபடி எனக்கு அறிவிருந்தால் தாங்கள் சொன்ன புத்திமதியை என்றும் மறவாது அதின்படி நடந்துகொள்ளவேண்டிய தவசியம். என்னுடைய அருமைப்பிள்ளையை அன்புடன் காப்பாற்றுவதாகச் சொன்னதற்குத் தங்களை நான் என்றும் நமஸ்கரிப்பேன். அச்சிசுவுக்கு குற்றமென்பது இன்னதென்று தெரியாது. தாங்கள் செய்யும் உபகாரத்தை எல்லாம் உணர்ந்து அதற்குத் தக்கபடி கிருதஜ்ஞை யுடையவனாக இருப்பான் என்று நம்புகிறேன். தங்களுக்கு ஆயிர நமஸ்காரம் செய்கிறேன். குழந்தையின் தகப்பனைச் சொல்லும்படி மாத்திரம் கேட்கவேண்டாம். தங்களுக்கு ஒருநாள் அதின் வரலாறு எல்லாம் தெரியவருமென்று உறுதியாகச் சொல்லுவேன். என் குலதெய்வத்தின் மேலாணை இட்டு எவ்விதத்திலும் இச்சிசுவின் தந்தையின் பெயரை இந்த சமயத்தில் வெளிப்படுத்துவதில்லை என்று வாக்குக் கொடுத்திருக்கிறேன். என்னுடைய சத்தியத்தையாவது மானத்தையாவது கைவிடும்படியாக தங்கள் என்னை நிர்ப்பந்திக்க மாட்டீர்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும்.

ஆளவந்தார் சத்தியத்தை எப்பாடுபட்டும் கைவிடக்கூடாது என்றும் அனைவற்றிலும் சத்தியமே பெரிதென்றும் கொள்பவர். ஆதலால் ஜானகி இப்படிச்சொன்னதும் ஸ்தம்பித்து நின்று இப்படிப்பட்ட கட்டுப்பாடு ஒரு அயோக்கியனுடன் செய்துகொண்டது தப்பு என்றும், அவள் வாக்குக்கொடுத்து விட்டபடியால் அதைத் தவறும்படியாகத் தான் சொல்வதற்கிடமில்லை என்றும் உரைத்தார். தான் எதற்காக அம்மனிதன் பெயரைக்கேட்டதென்றால் அவனைத்தெரிந்து அவனை சிக்ஷிப்பதற்காகவும் அபாத்திரனுவனுக்குத் தவறி நன்மை செய்துவிடாமல் இருப்பதற்காகவும் தான் என்றார்.

ஜானகி அம்மனிதன் தாங்கள் இருக்கும் ஊரிலில்லையாதலாலும் தங்களுடைய அதிகாரத்திற்கு உட்பட்டவனல்லனாதலாலும் தங்களால் அவன் நன்மை பெறுவதற்கு இடமில்லை என்றாள்.

ஜானகி தனக்கு முன்னுக நடந்துகொண்ட விதத்தைக் கண்டு மிகவும் திருப்தி யடைந்தவராதலால் அவள் இப்பொழுது சொன்னது உண்மை என்று ஆளவந்தார் நம்பினார்.

அவர் அவமான மடைந்த ஊரிலிருந்து அவளைச் சிக்கிரம் வெளிப்படுத்துவதாகச்சொல்லி "என்னிலும் முக்கியமான ஒருவருடைய தயவு உனக்கு வேண்டியிருப்பதால் நீ செய்த தவறுதலுக்காக மனம்வருந்திக் குற்றத்தை மன்னிக்கும்படி கடவுளைப் பிரார்த்தி" என்று சொல்லியனுப்பினர்.

8. அத்தியாயம்.

காமக்கணிச்சி யுடைக்கு நிறையென்னு
நாணுத் தாழ்வீழ்த்த கதவு.

ஆளவந்தார் ஜானகியை அழைத்துக்கொண்டு முன் சொன்னபடி அவர் படிப்பு அறைக்குப்போனதும் பிருந்தாவும் அவளுடைய முக்கிய வேலைக்காரியான தேவவிருதையும் அவ்வறைக்கு அடுத்தாப்போலிருந்த ஒரு தாண் மறைவில்போய் ஒளித்துகொண்டார்கள். அங்கிருந்த கதவிடுக்கு வழியாக ஆளவந்தார் ஜானகிக்குச் சொல்லிய உபன்னியாசத்தையும், அதற்கு ஜானகி சொன்ன மறுமொழிகளையும், கவனமாய்க் கேட்டிருந்தார்கள். இக்கதவிடுக்கு வழியாக பிருந்தா அனேகந்தடவை இதற்கு முன்னுலும் ஒற்றுக்கேட்டதுண்டு. இதனல் அவளுக்குப் பல அனுகூலமுண்டாயின. தன் கதோதரன் தன் அபிப்பிராயத்தைத் தன்னிடம் சொல்லும் சிரமமில்லாமலே அவள் அறிந்துவிடுவாள். இப்படி அவள் தெரிந்துகொள்வதால் சில அசௌகரியங்களு முண்டு. நியாய விசாரணையில் அவமானமாய்ப் பிறந்த குழந்தைகளைப்பற்றிப் பேச்சு உண்டாகும். அது நாற்பதுவயதான இவளைப்போலொத்த கன்னியாப்பெண்களுக்கு வெட்கத்தை யுண்டாக்கும். ஆனபோதிலும் இவள் புருஷர்கள் முன்பாக வெட்கத்தைக்காட்டிக் கொள்ளாமல் இருந்து வருவாள்.

இவ்விரு நற்பெண்டுகளும் ஆளவந்தாருக்கும் ஜானகிக்கும் நடந்த சம்பாஷணை முடியும் வரையில் மிக்க மௌனமாயிருந்தார்கள். அது முடிந்து அவ்விடத்தைவிட்டு விலகி வந்ததும் தேவவிருதை தன் எஜமானன்ஜானகியிடத்தில் மிக்கதயவுகாட்டியதைப் பற்றி ஆச்சரியமடைந்தாள். அந்தக் குழந்தையின் தகப்பனரைக் காட்டிக்கொடுக்கமாட்டேன் என்று ஜானகி சொன்னதற்கு ஆளவந்தார் சும்மா விருந்திருக்கக் கூடாதென்றும், அன்று சூரியாஸ்தமனத்துக்குள் தான் எப்படியாவது அவ்வயோக்கியனைக் கண்டுபிடித்து விடுவதாகவும் சபதம் கூறினாள்.

இதைக்கேட்டதும் என்றும் சகையாத் பிருந்தா புன்சிரிப்புக் கொண்டாள். இந்த சிரிப்போடு ஒரு இனிய குரலுடன், அபலார் காரியத்தில் அழையாமல் தலையிட்டுக்கொள்வதற்காக தேவவிரு தையை நொந்து தன்மேல் பலகுற்ற மிருந்தபோதிலும் அபலார் சங்கதியில் பிரவேசிப்பவள் என்று தன் பகைவரும் தன்னை சொல்லமாட்டார்கள் என்று சந்தோஷித்தாள்.

பிறகு, ஜானகி மிக்க கௌரதையாகவும் உண்மையாகவும் நடந்துகொண்டதற்காக அவளைப் பிருந்தா புகழ்ந்தாள். வாஸ்தவ மாய் நடந்ததை ஒப்புக்கொண்டதற்காகவும், அவளுடைய காத லனுக்குக் கொடுத்த உறுதியை மாற்றும் விருந்ததற்காகவும், தன் சகோதரன் அவளிடம் நல்லபிப்பிராயங் கொண்டிருந்தது சரியே என்று அங்கீகரித்தாள். தான் இதுவரையில் ஒரு நல்ல பெண் என்று சொல்லிக்கொண்டிருந்தவளை யாரோ ஒரு அயோக்கியன் மோசம் செய்து துன்மார்க்கத்திற்கு உட்படுத்தி இருக்கவேணு மென்றும், அவனை சிக்ஷைக்கு உள்ளாகவேண்டுமென்றும் கலி யாணம் செய்துகொள்வதாகவோ, அல்லது வேறு மோசவார்த் தைகளைச் சொல்லியோ, ஏமாற்றி யிருக்கவேணுமென்றும் பிரு ந்தா அபிப்பிராயப்பட்டாள்.

இப்படி பிருந்தா சொல்லியதைக்கேட்ட தேவவிருதைக்கு ஆச்சரியம் உண்டாகி விட்டது. இந்த கைதேர்ந்த ஸ்திரீயோ தன் எஜமானன், எஜமானியின், அபிப்பிராயம் அறிவதற்கு முன் தான் ஒரு விஷயத்தைப்பற்றியும் அபிப்பிராயம் சொல்ல வாய்திறவாத வள். அவர்களுடைய அபிப்பிராயம் போலவே இவளுடைய அபிப்பிராயமுமிருக்கும், ஒருபொழுதும் மாறுபடாது. ஜானகி மேல் மாத்திரம் என் படபடப்பாக தூஷணை சொல்லிவிட்டாள் என்றால், தன் எஜமானி இப்படிப்பட்ட பெண்கள்மேல் இதுவரை யில் கொண்டிருந்த அபிப்பிராயத்திற்கு ஒட்டி யிருந்தது. பிருந்தா ஜானகி விஷயத்தில் மாத்திரம் தான் இதுவரையில் வெளியிட்டிரு ந்த கொள்கைக்கு மாறுகப் பேசுவாளென்று தேவவிருதைக்குத் தெரியாமற் போயிற்று. இப்பொழுது பிருந்தாவின் அபிப்பிராய த்தை அறிந்ததும் தேவவிருதை எவ்வளவு சடுதியில் சமத்கார மாகப் பேச்சை மாற்றினாள் என்பது பின்வரும் வாக்கியங்களா லறியலாம்.

"இப்பெண்ணின் யோக்கியதையையும் தங்கள் குணத்தை யும் கண்டு என்னால் மனமகிழாமல் இருக்கக்கூடவில்லை. தாங்கள் சொல்லுகிற பிரகாரம் இந்தப்பெண் ஒரு அயோக்கியனால் ஏமாற் றப்பட்டிருந்தால் அவளுக்கு இரங்கவேண்டுவது நியாயந்தான். ஊரிலிருக்கும் சில பெண்களைப்போல் இவள் மதம்பிடித்தவளல்ல. எனக்குத் தெரிந்தவரையில் இவள் சீலமாகவும் சிராகவுமே இருந் தாள்" என்று மகா புத்திசாலியாகிய தேவவிருதை சொன்னாள்.

அதற்கு பிருந்தா நீ சொல்வதுண்மையே, தேவவிருதா, நம் மூரிலிருக்கும் பெண்களைப்போல் இவளுமடக்கமற்ற ஸ்திரீயாக இருந்தால் ஏன் சகோதரன் இவளை அன்பாய் நடத்தியதற்காக அவரைக் கடிந்திருப்பேன். அன்றைக்குக் கோவிலில் இரண்டு குடியானப் பெண்கள் கச்சணியாமல் வந்தார்கள். அதைப் பார்த்த எனக்கு எவ்வளவு அவமானமாக இருந்தது. விடார்களை வசிகரிப்பதற்காக வரும் பெண்கள் எவ்வளவு துன்பமடைந்தபோதிலும அவர்களுக் கிரங்கக்கூடாது. அப்படிப்பட்டவர்களைக் கண்டால் வெறுக்கவேண்டி வருகிறது. அவர்கள் முகமுழுதும் அம்மைத் தழும்பால் விகாரப்பட்டிருப்பது நலம். இப்படிப்பட்ட குற்றங்களில் ஒன்றையும் நான் ஜானகியிடம் கண்டதில்லை. வெகு தந்திரமுள்ள ஒரு புருஷன் அவளை ஏமாற்றியிருப்பான் என்று தோன்றுகிறது. ஆகையால் அவ்வெளிய பெண்ணின்மேல் நான் மிகவும் பச்சாதாபப்படுகிறேன்" என்றாள். தேவவிருதையும் சரி தான் என்று ஒத்துக்கொண்டாள். ரூபத்தினால் உண்டாகும் கெடுதிகளையும் புரட்டர்களால் யோக்கியமான பெண்கள் ஏமாந்துபோவதைப் பற்றியும் பேசிச் சம்பாஷணையை முடித்தார்கள்.

9. அத்தியாயம்.

ஒறுத்தாற்றும் பண்பினர் கண்ணுங் கண்ணேடிப்
பொறுத்தாற்றும் பண்பேதலை.

ஆளவந்தாரிடம் நன்மதிகளைக்கேட்டுத் திரும்பிய ஜானகி மிகவும் சந்தோஷமடைந்தாள். அவர்தன்னிடம் பக்ஷம்பாராட்டியதையாவரிடமும் வியந்துகூறினாள். இப்படிச் சொன்னால் ஊரிலுள்ளோர்கள் இனிமேலாவது தன்னைப் பரிகாசம் செய்யமாட்டார்கள் என்று எண்ணினாள். இவள் இப்படி எண்ணியது தவறாகவே முடிந்தது. இவளை விசாரணைசெய்து சிறைச்சாலைக்கு ஆளவந்தார் அனுப்புவார் என்று எண்ணியவர்கள் பலபேர்கள் இருந்தபோதிலும், அவளது நிலைமைக்காக வருந்தினவர்கள் பலருண்டு. ஆளவந்தார் அவளிடம் பக்ஷமாய் நடந்துகொண்டதைக் கேள்விப்பட்டதும் அவளைப்புதுவிதமான அபவாதத்திற்கு எல்லோரும் உடப்படுத்தினார்கள். இவள் நல்ல அதிர்ஷ்டசாலி என்றும், ஒருபெரியமனுஷனுக்கு ஆசைநாயகியாக இருப்பதில் எவ்வளவு சௌகரிய மிருக்கிறது என்றும், அவளுடைய வித்தைதான் அவளுக்கு இந்தப்பதவியை உண்டாக்கியதென்றும் ஒவ்வொருவரும் அவளைப் பலவிதங்களாகத் தூறினார்கள். நியாயம் பக்ஷபாதமாகச் செய்தார் என்று ஆளவந்தாரையும் இழிந்து கூறினார்கள்.

ஆளவந்தாருடைய அதிகாரத்தையும், பெருந்தன்மையையும் உபகாரத்தையும், தெரிந்தவாசகர்கள் ஜனங்கள் இவரிடம்

கிருதஜ்ஞையற்றுப் பேசுவதைக்கேட்க வருந்துவார்கள். ஆளவந்தாரோ அவருடையு அதிகாரத்தை இதுவரையில் காட்டிக்கொண்டவரல்ல. உபகாரம் செய்பவன் கினேகிதர்களைக் சம்பாதிப்பதைக்காட்டிலும் விரோதிகளை அதிகமாக்கிக்கொள்ளுகிறுள் என்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். அப்படியே இவர் அயலாருக்கு உபகாரம் செய்யப்போய் அடுத்த வீட்டாருடைய விரோதத்தை சம்பாதித்துக் கொண்டார். ஜானகி ஊராரின் வசைவுக்கு ஆளாகாமல் ஆளவந்தாரின்கிருபையால் ஊரைவிட்டு அப்புறப்படுத்தப்பட்டாள். வம்பர்களுக்கு இப்போது அவளைப்பற்றிப்பேச மூடியாது போனதால் தங்கள் கோபத்தை ஆளவந்தாரிடம் செலுத்தி அவரே கண்டெடுத்த குழந்தைக்கு தகப்பனார் என்று சொல்லிக்கொண்டார்கள். அவர்கடத்தையையும் ஊரில் சொல்லிக்கொள்வதையும் அறிந்து ஊர் வம்பு உண்மையே என்று உலகத்தார் நம்பிவிட்டார்கள். ஜானகியிடத்தில் நிரம்பதயவுடன் நடந்துகொண்டார் என்று சொல்வதுபோக அப்பெண்ணைக்கெடுத்தது மன்றி அவளை ஊரிலிருந்து துரத்திவிட்டானே பாபி என்று அவரைத்திட்ட ஆரம்பித்தார்கள். குழந்தையையும் பெற்றுவிட்டு அக்குழந்தை தன்னுடைய தல்லவென்று மறுதளிக்கும் புருஷனும் உண்டோவென்று வியந்தார்கள். ஜானகி மறைந்ததும், ஓ ஓ, அவளை வெளிப்படுத்துவதற்கல்ல, சொல்வதற்கும் வாய்கூசும் விதமாக அவளைத் தொலைத்துவிடவே ஆளவந்தார் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கவேணுமென்றும் உடனே நியாயவிசாரணைசெய்து அதில் அப்பெண்ணைத் தருவிக்கச் செய்யவேண்டுமென்றும் சொல்லிக்கொண்டார்கள்.

இந்த வசைகள் எல்லாம் ஆளவந்தார் அல்லாமல் குணத்திலும் யோக்கியதையிலும் அவரினும் குறைந்த ஒருவனைப்பற்றியிருந்தால் அவனுக்குக் கெடுதிகள் சம்பவித்திருக்கும். ஆனால் ஆளவந்தாருக்கோ ஒன்றும் நேரிடவில்லை. அந்த வசைகளை எல்லாம் லக்ஷியம் செய்யாமல் வழக்கம்போலிருந்தாராதலால், அந்த வம்பு ஊருக்குள்வேடிக்கைப் பேச்சாக இருந்ததே வொழிய அவருடைய கண்ணியதைக்குக் குறைவில்லாமல் இருந்தது. ஆளவந்தார் ஒருவிதமான தீங்கும் இழையாதவர் என்று நமதுவாசகர்களுக்கு நன்றுகத் தெரியும். அவர்செய்த குற்றம் என்னவென்றால், ஜனங்களுடைய அபிப்பிராயத்திற்கும் வேண்டுகோளுக்கும் மாறுக ஜானகிக்கு நியாயத் தீர்ப்பு சொல்லும்போது கருணையாயும் காட்டிவிட்டார்.

அனேகஸ்திரீகள் தவறிழுதலில் தப்பிதம் செய்துவிட்டபோதிலும் பின் அதற்காக வருந்தி சன்மார்க்கத்தை அனுசரிக்கக்கருதினாலும், ஜனங்கள் செய்யும் கொடுமையினாலும் கேலியினாலும் அவர்கள் மனமுடைந்து தீங்கையே கைக்கொண்டு மிக்க

பாதகிகள் ஆகிவிடுகிறார்கள். இதைத் தெரிந்தே ஆளவந்தார் ஜானகியை ஜனங்கள் சிக்ஷித்து சிறைச்சாலைக்கு அனுப்பும் படியாக வேண்டியும், தான்செய்தகுற்றத்துக்காக வருந்துவதை உத்தேசித்து இனிமேலாவது கடைத்தேற இடம் கொடுப்போம் என்று அவளிடம் கருணைகாட்டினார். ஒருதடவை தவறிப்போய் யாவராலும் தூற்றப்பட்டஸ்திரீ அதே இடத்திலிருந்தால் வேறுவழியில்லாமல் துன்மார்க்கத்திலேயே மென்மேலும் பிரவேசிப்பாள். ஆதலால் ஆளவந்தார் ஜானகி மானமிழந்து பயிரங்கமாய்விட்ட ஊரினின்றும் இவள் கற்புடைய ஸ்திரீயே என்று யாரும் நம்பியிருக்கக்கூடிய ஊருக்கு அவளை அனுப்பியது அறிவுடைமையே.

10. அத்தியாயம்.

புறங்குன்றி கண்டனையரேனு மகங்குன்றி
மூக்கிற் கரியாருடைத்து.

ஆளவந்தாருடைய வீடாவது அவருடையமனமாவது அதிதிகளை வரவேற்காமலிராது. அதிலும் யோக்கியதையுடையவர் களைக்கண்டுவிட்டால் மிக்கமரியாதையுடன் வரவேற்கும். அந்த தேசத்தில் எல்லா யோக்கியர்களுக்குமே உணவளிக்கும் விடுதி ஒன்றேதான்.

எல்லாரையும் விடனித்துவான்க ளிடத்திலும் சூக்ஷ்ம புத்தியுடையவர்களிடத்திலும் ஆளவந்தாருக்கு மரியாதை அதிகம். தான் அதிகமாக வாசித்தவரல்லாதபோதிலும், வித்துவான்களிடத்தில் சம்பாஷித்தும், வயதுவந்தபிறகுதானே கற்க ஆரம்பித்தும், காவியங்களனேகத்தைக் கற்றும், உண்மையாகக்கற்றவரின் யோக்கியதை அறியக்கூடியவராக விருந்தார்.

வித்தைக்கு மகத்துவமில்லாத அந்தகாலத்தில் கற்றோரை ஆதரிக்கும் இவரிடம் வித்வான்கள்வந்து சேருவது ஆச்சரியமன்று. வந்தவர்கள் அவ்வீட்டில் ஆளவந்தாருவடைய ஆஸ்திக்குப்பாத்தியமுடையார்போல சகல சௌகரியங்களும் அடைந்திருந்தார்கள். சிலரைப்போல்தான் அளிக்கும் ஆகாரத்திற்கும், வசதிக்கும், உடைக்கும்பதிலாக அவர்களை தன்னை முகஸ்துதி சொல்லியும், சம்பளம் பெறுமல் தமக்குக்குற்றேவல் செய்துகொண்டும், தன்னை சந்தோஷிப்பிப்பதற்காக வேடிக்கையாகபேசியும், வரவேண்டுமென்று ஆளவந்தார் நினைப்பவரல்லர். இவருடைய வீட்டில்வந்தவர்கள் அவரவர் இஷ்டப்படி தங்குதடையின்றி இருப்பார்கள். இப்படி வந்தவர்களில் பலி என்று ஒருவைத்தியர் இருந்தார். அவருக்குக்கொஞ்சமேனும் விருப்பில்லாத தொழிலில் அவருடைய தகப்பனாரால் அவர் பிடிவாதமாய்க் கற்பிக்கப்பட்டதால் அவருக்கு ஸ்வாபமார்க்கத்தில் இருந்த கொஞ்ச

நெஞ்ச சாமர்த்தியத்தையும் போக்கடித்துக்கொண்டார். தந்தையின் பிடிவாதத்தால் வைத்திய சாஸ்திரத்தைக் கற்கவேண்டியதாயிற்று. ஆதலால் அவருக்கு ஜீவனுர்த்தமான வைத்தியத்திலும் ஒருவித தேர்ச்சியும் பெறுதிருந்தார். இதனால் 40-வயதாகியும் வைத்தியர் சாப்பாட்டிற்கு வழியற்றுப்போனர்.

இப்படிப்பட்டவர் ஆளவந்தாரால் நல்வரவேற்கப்படுவார் என்று சொல்லவும் வேண்டுமோ? ஆளவந்தாருக்குத் தன்மேல் பிசகில்லாமல் பிறருடைய சூழ்ச்சியால் எளிமையடைந்தவரிடம் பற்று அதிகம். இதையே சாஸ்திரமும் முறையிடுவதாய் அவருடைய கொள்கை. அதுசரியோதவறோ நமக்குத் தெரியமாட்டாது. அந்தவைத்தியர் மிகதெய்வபக்தியுடையவராயும் மதவிசாரணை செய்பவராகவும் தோன்றினர். இவரைக்கண்ட ஆளவந்தாருக்கும் அவர் சகோதரி பிருந்தாவுக்கும் மிக்க சந்தோஷமுண்டாயிற்று. அவள் வைத்தியரிடம் அடிக்கடி சாஸ்திரவிஷயமாய்த் தர்க்கம்செய்வாள். இப்பொழுதெல்லாம் வைத்தியருடைய முதிர்ந்த அறிவைப்பற்றி ஸ்தோத்திரம் செய்வாள். அவரும் இவளுடைய தேர்ச்சியைப்பற்றிப் புகழ்ந்துரைப்பார். தனக்குத்தான் சாஸ்திரவிற்பத்தி இருக்கிறதென்று பிருந்தா ஊரிலுள்ள பெரிய சாஸ்திரிகளிடம் வாதம்செய்து அவர்களை சந்தேகத்தில் கொண்டுவந்துவிடுவாள். அவளுடைய சம்பாஷணை சுத்தமாயும், நோக்கம்தெளிவாயும், நடவடிக்கை சீர்மையாகவும் இருந்தால் அவளைப்பார்த்தவர்கள் பெரிய வேதாந்தி என்று சொல்வார்கள். மதவிஷயங்களில் ஒற்றுமையுள்ளவர்கள் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருப்பது சகஜம்தானே. ஆதலால் பிருந்தாவும் பலியும் ஒருவரையொருவர் விரும்பத்தலைப்பட்டார்கள். பதது வருஷத்திற்கு முன்னால் தனக்குநேர்ந்த ஒரு விபத்தைப்பற்றி பலிமிக்க வருந்தினன். அதாவது தான் அப்பொழுது கலியாணம் செய்துகொண்ட ஸ்திரீ இன்னும் உயிரோடிருந்தாள். அப்படி இருப்பது ஆளவந்தாருக்கும் தெரிந்திருந்தது. பலி மிகவும் மதித்து வந்த பிருந்தாவுடன் சுகத்தை முழுதும் அடையக்கூடாமைக்கு இந்த விஷயந்தான் தடையாக விருந்தது. துன்மார்க்கமான காதலைச் செய்வதற்கோ அவன் மனம் சம்மதிக்கவில்லை.

இதைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கும் பொழுதுதிடீர் என்று பலிமனதில் ஒருவிஷயம் உதித்தது. தன் சகோதரன் ஒருவன் தன்னைப்போல் பந்தம் ஒன்று மில்லாது இருப்பது பலியின் ஞாபகத்திற்கு வந்தது. பிருந்தா கலியாணத்திற்கு ஆசைப்படுகிருள் என்று தெரிந்ததால் தனசகோதரன் அவளை வசப்படுத்திவிடுவான் என்று பலிநம்பினன். அந்த சகோதரனுடைய குணதிசயங்களைக் கேட்டால் இவருடைய நம்பிக்கை தப்பான தென்று வாசகர்கள் பலிமேல் குற்றம் சொல்லமாட்டார்கள்.

பலியின் தம்பி வயது முப்பத்தைந்து ஆனவர். அவர் திட காத்திரராயும் மத்திம உயரமுடையவராயுமிருந்தார். அவருடைய கெற்றியிலிருந்த வடு அவருடைய அழகைக் கெடுப்பதற்குப் பதிலாக அவருடைய வீரத்தன்மையை வெளிப்படுத்தியது. இவர் ராணுவத்தில் சேவித்து இப்பொழுது அரைச் சம்பளம் வாங்கியிருப்பவர். இவர் பற்கள் வரிசையாக இருந்தன. புன் சிரிப்புக் கொள்ளும்போது முல்லை பூத்தாற்போல் விளங்கும். அவரது முகமும் நடையும் குரலும் இயல்பில் ஒய்யாரமாக இராவிட்டாலும், அவருக்குச் சந்தோஷம் வந்தபோது இஷ்டப்பட்டால் அவற்றை சரிப்படுத்திக்கொள்வார். அவருடைய நடத்தை மேன்மையாகவும் சம்பாஷணை சாதுர்யமாகவும் இருந்தது.

அவரும் வைத்தியரைப்போல கலாசாலையில் கற்றிருக்கிறார். அவர் தகப்பனார் அவரை வைதீக வழியில் பிரவேசிக்கும்படியாக ஆக்ஞாபித்தார். ஆனால் அந்தத் தகப்பனார் உடனே இறந்துவிட்டபடியால அவர் ஆணையைச் சட்டைசெய்யாது இராணுவத்தில் சேர்ந்துவிட்டார்.

அவர் இராணுவத்தைச் சேர்ந்த கொஞ்ச காலத்துக்குள் சிறியபடைக்குத் தலைவனுக்கப்பட்டார். ஆனால் சேனாதிபதியுடன் அடிக்கடி சண்டைபோட்டுக்கொண்டிருந்ததால் வேலையை விட்டு வரும்படியாயிற்று. அதற்குப் பிறகு தான் சாஸ்திர ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார்.

இவ்வளவு குணாதிசயங்களையுடையவர் மிகவும் தெய்வபக்தியுடன் மணம்புரியவேண்டுமென்று அவாக்கொண்டிருக்கும் பிருந்தாவை வசப்படுத்துவது அசாத்தியமன்று. உண்மையில் தன் சகோதரனிடத்தில் வைத்தியருக்கு அதிகப்பற்று இடையாது. இருந்தாலும் தன் சகோதரன் பிருந்தாவை மணக்கவேண்டிய அனுகூலங்களை எல்லாம் வைத்தியரே செய்தார். இது ஆளவந்தார் செய்த உபகாரத்திற்குத் தீங்கிழைத்தாப்போல ஆகிறது. அவருடைய சகோதரியை இன்னொருவன் மணக்கும்படியாக ஏற்பாடு செய்தது எதற்காகவென்று சுலபமாய் சொல்லிவிட முடியாது. சிலர் தர்மத்தையே செய்ய ஆசைகொள்வதுபோல சிலர் கெடுதியையே செய்ய கங்கணங்கட்டிக்கொண்டு இருப்பதினாலேயோ, அல்லது திருடத்திறனற்றவன் மற்றொரு திருடனுக்கு ஒத்தாசை செய்து அதனால் திருப்தியடைவதாலேயோ, அல்லது குடும்பத்தின்மேல் பற்றில்லாதிருந்தாலும் சிலர் குடும்பத்தை விருத்திசெய்து அதினால் திருப்தி அடைகிற வழக்கத்தினாலேயோ, பிருந்தாவை படைத்தலைவன் மணக்கும்படி பலிசூழ்ச்சி செய்தது.

மேற்சொன்னவைகளில் எதாவது ஒரு எண்ணம் வைத்தியரைத் தூண்டியிருக்குமோ என்னமோ நம்மால் சொல்லமுடியாது. ஆனால் நடந்த விஷயத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள். தன் சகோதரனுக்குச் சொல்லியனுப்பி அவரை வரவழைத்து ஆளவந்தாரிடம் அழைத்துப்போய், தன் தம்பி தன்னைப் பார்க்க வந்திருப்பதாயும் கொஞ்சநாள் தன்னுடி அவர் தங்கியிருப்பார் என்றும் வைத்தியர் சொன்னார்.

படைத்தலைவன் அந்த வீட்டுக்கு வந்து ஒரு வாரமாவதற்குள்ளேயே அவருடைய சாமர்த்தியத்தை வைத்தியர் நன்கு தெரிந்துகொண்டார். காமசாஸ்திரத்தில் படைத்தலைவர் நிபுணராக இருந்தார். அன்றியும் தன் சகோதரனிடமிருந்து வேண்டிய உபதேசங்களையும் பெற்றிருந்தார். சமயம் வாய்த்தபோது அவற்றைத் தகுந்தபடி உபயோகிக்கத் தவறவில்லை.

11. அத்தியாயம்.

உரூஅ தவர்போற் சொலினுஞ் செரூஅர்ச்சொ
லொல்லை யுணரப்படும்.

ஒவ்வொருவனும் தன் ஆயிசு காலத்தில் ஒரு தடவையாவது காமாவஸ்தைக்குட் படுவதுண்டென்று விவேகிகள் சொல்வதுண்டு. இதற்குக் காலம் இன்னதுதான் என்று வரையறுத்திலர். ஆனால் பிருந்தா அடைந்த பருவம் இதற்குத் தகுதியாகவிருக்குமென்றே எனக்குத் தோன்றுகிறது. இதற்கு வெகுகால முன்னமே அனேகர் காதல் கொள்ளுவது முண்டு. அந்த சமயம் தப்பினால் இப்பருவத்திலாவது காதல் கொள்ளாதவர் மிகச் சிலரே. பாலியத்தில் தோன்றும் காதலிலிட இவ்வளவு முதிர்ந்த பருவத்தில் உண்டாகும் காதல் மிக்கப்பற்றுடைத்தாகவும் உண்மையாகவுமிருக்கும். சிறுமிகள் கொள்ளுங்காதலோ மூடத்தனமாகவும், நிச்சயமல்லாததாகவும், மாறுதலடையக் கூடியதாகவுமிருக்கும். சிறுமிகளுக்கு தாம்கொண்ட காதல் தமக்கு நன்மை பயக்குமோ என்று பின்னுல் சமுசயம் தோன்றிவிடும்.

ஆனால் 40-வயது அடைந்த ஸ்திரீ கொள்ளுங்காதலோ இத்தகைத்தன்று. உலகததில மிக்க அனுபவமடைந்து நன்மை தீமைக்கும், உண்மை யின்மைக்கும், விதியாசமறிந்த ஸ்திரீகள் தாங்கள் செய்வது தகுந்ததா அல்லவா என்பதைப் பகுத்தறியத் திறனுள்ளவர்களா யிருக்கிறார்கள். இந்த விஷயம் அதிக விவேகமில்லாத புருஷனும் தவறுமல் அறியக்கூடியது.

இவ்வளவு தூரம் சொன்னதற்கு அத்தாக்ஷி பிருந்தாவேயாகும். அதிக நாள் படைத்தலைவனுடன் பழகுவதற்கு முன்னமேயே அவன்மேல் இவளுக்குக் காதல் உண்டாகிவிட்டது. அதி

யாப்பெண்போல் அவள் தன் காதலை ஒளித்தும் வெட்கப்பட்டுத் துக்கித்தும் காதலை எப்படி வெளியிடுவதென்று தவித்துக்கொண்டு மிருக்கவில்லை. தான் கொண்ட காதல் உண்மையாதலாலும், அதில் ஒரு குற்றமுமில்லை யாதலாலும், அதற்காக வெட்கமும் பயமுமடையாமல் சந்தோஷமாகவே பிருந்தா விருந்தாள். மதி போன்ற முகமும், கமலம்போன்ற கரம், நீலவிழிகள், நீண்ட குஞ்சி, மெல்லிய கன்னங்கள் நீண்டு வளர்ந்த தேகம், இவைபோன்ற மேல்வனப்பை மாத்திரம் ஒரு சிறுவனிடத்தில் கண்டு ஆசைத்திக்கும் அறியாப்பெண்ணின் காதலுக்கும் தகுந்த பருவத்தில் ஆண்மகனிடம் அறிவு தெரிந்து யௌவன சென்ற ஒரு ஸ்திரீ கொள்ளுங் காதலுக்கும் வித்தியாச மதிகமிருக்கிறது. படைத்தலைவர் சுபாவத்திலேயே ரூபவானுமல்லர். உயர்ந்த உடுப்புகளால் தன்னை அலங்கரித்துக்கொள்ளும் டம்பாசாரியுமல்லர். உயர் குலஸ்திரீகள் கூடியிருக்கும் இடத்திற்கு இவர் போனால் இவர் உடையையும் ரூபதையுங் கண்டு அனேகோரும் நகைப்பார்கள். அவருடைய சுத்தமாகத் தானிருக்கும். ஆனால் சாதாரணமாயும், காலத்திற்கு ஒவ்வாததாயும், விலை தாழ்ந்ததாயுமிருக்கும். அவர் மோவாயில் வளர்ந்ததாடி கண்வரையில் பரவி அடர்ந்திருந்தது. அவருடைய தேகக்கட்டும் அவயவங்களும் ஓர் ஏர் உழுபவனைப்போல் பருத்திருந்தன. அவர் புஜங்கள் மிகவும் விசாலித்திருந்தன. பின் காலின் சதைகள் அதிகமாய்ப் பெருத்திருந்தன. அவர் தேகமுழுதும் பல மற்ற பிரபுக்களின் அழகுக்கும் மேன்மைக்கும் எதிர் மாறுகவே இருந்தது.

பிருந்தா மிக்கரசிகையாகவே யிருந்தபோதும் படைத்தலைவருடைய வசீகர சம்பாஷணை அவர் தேகக்குறைகளைக்கூட மாற்றச்செய்தது. ரூபலாவண்ணியம் உள்ளவனிலும் வாக்கு சமத்காரமுடையவரிடத்தில் வினோதமாகப் பொழுதுபோக்கலாம் என்று பிருந்தா விவேகமாகவேகருதினாள். கண்ணுக்கு ஆனந்தம்கொடுப்பதைக் காட்டிலும் மனதிற்குத் திருப்தியுண்டாக்குவதே மேல் என்பது பிருந்தாவின் கொள்கைபோலும்.

பிருந்தா தன்மேல் காதல்கொண்டிருப்பதை மகா சூக்ஷ்ம புத்தியுடையவரான படைத்தலைவர் தெரிந்துகொண்டதும் தானும பிரதிகாதலித்தார். பிருந்தா படைத்தலைவரிலும் அழகில் மிகுந்தவளல்ல. நிலையற்ற அழகையுடையவர்களிட மனுபவிக்கக் கூடிய சுகத்தினும் இந்த ஸ்திரீயினிடத்தில் சுகம் ஜாஸ்தியடையலாம் என்று படைத்தலைவரும் இவளைத்தெரிந்தெடுத்தார். பெண் பிள்ளைக்கு அழகினால் பயனில்லை என்றும், அது மேல்தோற்றமே யாதலால் சுகத்துக்கு உரிமையாகாது என்றும் படைத்தலைவர் நினைத்திருந்தார். ரூபவதியிடம் அழகைத் தவிர்த்து வேறு இனிய குணங்கள் செல்வம் ஒன்றேனும் இல்லாமலிருப்பதைக் காட்டி

லும், அழகில்லாதவளிடம் இகலோக சௌக்கியங்கள் அனைத்தையும் அனுபவிப்பதுமேலென்று படைத்தலைவர் கொண்டார்.

படைத்தலைவர் ஆளவந்தார் வீட்டுக்கு வந்து பிருந்தாவை அடையலாம் என்கிற எண்ணம் உதிப்பதற்கு வெகு நாளைக்கு முன்னுலேயே ஆளவந்தாருடைய வீடு தோட்டம் நிலங்கள் குடிகள் முதலியவற்றைக் கண்டு அவற்றின்மேல் மிக்க வாஞ்சை கொண்டவராயிருந்தார். பிருந்தாவுக்கு பதிலாக இவை யனைத்தையும் தனக்கு கலியாணம் செய்து தருவதாகச்சொன்னுல் உடனே பிருந்தாவை நிராகரித்து அந்தசொத்துக்களே மணக்கச்சம்மதித்து இருப்பார்.

ஆளவந்தார் வைத்தியரிடம் தான் இரண்டாந்தாரம் எடுத்துக்கொள்ளப்போகிறதில்லையென்றும், தன்சகோதரியே நெருங்கிய உறவாகையால் அவளுக்குப் பிறக்கும் குழந்தைக்கே ஆஸ்தியனைத்தையும் கொடுக்கப்போகிறதாயும் சொல்லியிருந்தபடியால், வைத்தியரும் அவர் சகோதாரும் சேர்ந்து இவ்வளவு ஏராளமான ஆஸ்தியை ஆநந்தமாய் அனுபவிக்கக்கூடிய ஒரு பிராணியை உற்பத்தி செய்யவேண்டியது அவசியம் என்று கருதினுர்கள். ஆதலால் அந்த பிருந்தாவை எப்படி வசியப்படுத்தலாம் என்று இருவரும் வழிதேடலானுர்கள். அதிர்ஷ்டமோ தான் குறிவைத்தவர்களுக்கு அளவில்லா இனிமையை அளிக்கும். படைத்தலைவர் அதிர்ஷ்டவசமானுர். ஆதலால் பிருந்தாவை எப்படி மடக்கலாம் என்று படைத்தலைவர் வழிபார்த்திருக்கையில் அவளுக்கு இவர் மேல் காதல் உண்டாகும்படி அதிர்ஷ்டம் செய்துவிட்டது. பிருந்தா காதலை அதிகமாய் வெளிக்காட்டாமல் படைத்தலைவர் தன்னை மேன்மேலும் கெஞ்சும்படியாகயுக்தி செய்துகொண்டிருந்தாள். படைத்தலைவரும் இவளை இடைவிடாது கவனித்து வந்தபடியால் இவள் செய்த கண் ஜாடையையும் சமிக்ஞைகளையும் ஒன்று விடாது அறிந்து அவற்றிற்குத் தக்கபடி நடந்துவந்தார்.

பிருந்தா தன்னிடம் மிகவும் பிரியமாக இருப்பதைக் கண்டு திருப்தியடையந்த படைத்தலைவருக்கு ஆளவந்தாரால் விகாதமூண்டாகுமோ வென்ற பயமூண்டாயிற்று. தன்மேல் அவர் மிக்க பிரியமாகவே யிருந்தபோதிலும், உலகத்திலுள்ள மற்ற ஜனங்களைப்போல தன் சகோதரிக்கு இந்தவரன் சரியானதல்லவென்று நினைத்து சமயத்தில் கலியாணத்திற்கு சம்மதிக்காவிட்டால் என் செய்வது என்று யோஜித்தார். இந்த யோஜனை அவருக்குத் தோன்றியதும் ஆளவந்தாருக்கு மூன்னுல் தனக்கு பிருந்தாவின் மேலிருக்கும் காதலை மறைத்து நடந்துகொள்வதாகத் தீர்மானித்தார். தனிமையாக விருக்கும்போது பிருந்தாவிடத்தில் காதல்

வார்த்தைகளைப் பகர்ந்தும், ஆளவந்தாருக்கு முன்னல் கூடிய மட்டும் ஜாக்கிரதையாக விருந்து, மௌனம் சாதிப்பதே நல்ல தென்று படைத்தலைவர் நினைந்தார். இதுவே சரியானதென்று அவர் சகோதரரும் ஒப்புக்கொண்டார்.

வெகு நாளாவதற்கு முன்னலேயே பிருந்தாவிடத்தில் தன் காதலை வெளிப்படக் கூறும்படியான சமயம் படைத்தலைவருக்கு வாய்த்தது. ஆயிர வருஷங்களுக்கு முன்னலேற்பட்டு தாய்மார் களால் தங்கள் பெண்களுக்குக் கற்பிக்கப்பட்டிருக்கும் வழக்கம் போன்ற மறுமொழியை பிருந்தாவிடமிருந்து படைத்தலைவனும் முதலில் பெற்றான். ஆனல் பிருந்தாவின் எண்ணத்தை வெகு நன்றாக அறிந்துகொண்டு விட்டானகையால், மிக ஆர்வத்தோ டும் அனேக பிரதிஜ்ஞைகளோடும் தன் காதலை வர்ணித்து பிருந் தா தனக் கிணங்கவேண்டுமென்று போராடினர். அதற்கும் விதி ப்படியே மாட்டேன் என்று சொல்லிவிட்டாள். இவரும் விடா மல் கெஞ்சிக்கூத்தாடி அனேக தண்டம் சமர்ப்பித்து தன் காம மோகையைத் தணிக்கும்படி பிருந்தாவைக் கேட்டு வந்தபடியால் அவளும் தன் பிடிவாதத்தைக் குறைத்து வந்தாள். வாசகர்களே வீணாகக் காக்கவைத்து காதற்போரை படிப்படியாக வணிர்க்காக மல் பிருந்தாவின்மேல் படைத்தலைவர் வெற்றிகொண்டார் என்று சொல்லி முடிப்போம்.

இந்த காதற்போர் ஒரு முடிவுக்கு வரகிட்டத்தட்ட ஒரு மாதமாயிற்று. அதுவரையில் அந்த ஸ்திரீயின் சகோதரருக்கு மூன்பாக பிருந்தாவிடத்தில் மரியாதையாகவும் பராமுகமாகவுமே படைத்தலைவர் இருந்துவந்தார். ரகஸியமாய் எவ்வளவுக் கெவ் வளவு உறவாடி இணைந்து வந்தாரோ அவ்வளவுக் கவ்வளவு வெளிப்படையாக ஒதுங்கியே வந்தார். பிருந்தாவும் படைத்தலை வனைத் தன் வலையில் சிக்கவைத்தும், ஜனங்களுக்கு முன்பாக அவரை அலக்ஷியம் செய்தே வந்தாள். ஆளவந்தார் கபடமும் சூதும் இன்னவென்றே யறியாதவராதலால் இவர்கள் செய்யும் பாசாங்கை அறியக்கூடாமலிருந்தார்.

12. அத்தியாயம்.

கடனறிந்து காலங்கருதி யிடனறிந்
தெண்ணியுரைப் பான்றலை.

ஒரு மாதம் முடிவதற்குள்ளேயே படைத்தலைவரும் பிருந் தாவும் தம் பதிகளாகிவிட்டார்கள். இப்பொழுது விசாரம் என்ன வென்றால், இந்த விஷயத்தை எப்படி ஆளவந்தாருக்குத் தெரி விப்பதென்பதுதான். இந்தகாரியத்தை வைத்தியர் செய்துமுடி ப்பதாக வற்றுகொண்டார்.

ஓர்தினம் ஆளவந்தார் தோட்டத்தில் உலாவிவந்தபோது வைத்தியர் கடுந்த முகத்தோடும் அவர் முன்வந்து மிகத்துயரக் தைக்காண்பித்தவராய் அவரைப்பார்த்து "மகாபிரமாதமான ஒரு காரியத்தைத் தங்களுக்குத் தெரிவிக்க வந்திருக்கிறேன். பிரபுவே நினைக்கவும் மனம் பதறுகிறதே. இந்த விஷயத்தைத் தங்களுக்கு எப்படியுரைப்பேன்" என்றார். திரும்பவும் கொஞ்சம் பொறுத்துப் பிறகு "மனிதரையாகட்டும் ஸ்திரீகளையாகட்டும் நம்பவே கூடாது. மனுஷன் எப்போதும் தன் சுயநலத்தையே பாராட்டுகிறவன், ஸ்திரீயோ சதா சபலபுத்தியுடையவள். ஆகையால் அவளை எப்பொழுதும் அயலானுடன் தனித்துவிடப்படாது. இவ்வளவு கல்வியும் அறிவும் நியாயமும் தெரிந்த ஒரு ஸ்திரீ இப்படி காமத்துக்கு உட்பட்டாள் என்றால் எப்படி நடப்பது. இப்படியும் என் சகோதரன் செய்வான் என்று நினைக்க இடமுண்டா? அவனைச் சகோதரன் என்று ஏன் சொன்னேன், அவனினி என் சகோதரனல்லன்" என்றார்.

ஆளவந்தார்—"அவர் உன் சகோதரனேயல்லாமல் எலக்கும் சகோதரன் மாதிரிதான்"

பலி—மேற்படி அக்கிரமம் தங்களுக்குத் தெரிந்தால் இப்படிச் சொல்லமாட்டீர்கள்.

ஆளவந்தார்—இதைக் கேளுங்கள், வருவதெல்லாம் நம் மூடைய நன்மைக்கேவரும் என்கிற கொள்கையுடையவன் நான். என்சகோதரி என்னைக்காட்டிலும் அதிகசிறியவளானபோதிலும், தான் செய்வது தப்பா சரியா என்று அறிந்து கொள்ளக்கூடிய வயதுவந்தவள். ஒரு சிறு குழந்தையை ஏமாற்றி இருப்பாராகில் உம்மூடைய சகோதரரை நான் மன்னித்திருக்கவே மாட்டேன். ஆனால் முப்பதுவயதுக்குமேலாகிய ஸ்திரீ தனக்கு எது நல்லதென்பதை நிச்சயமாய் அறிந்துகொள்ளக் கூடியவள். அவள் தன்னைப்போல் திரவிய வந்தரல்லாதவரை மணம்செய்து கொண்டிருப்பது திரவியத்துக்கு பதிலாக வேறு மேன்மை அவரிடம் கண்டு அதனால் கவரப்பட்டிருக்கவேண்டும். அவள் சந்தோஷத்தை நானேன் தடுக்கவேண்டும்? செல்வ விஷயத்தில் நானும் அவளைப்போல அபிப்பிராயம் கொண்டவன். செல்வந்தான் சந்தோஷத்திற்குக் காரணம் என்று நாங்களிருவரும் நினைப்பதில்லை. என்தங்கை எது சொன்னபோதிலும் தடை சொல்லாமல் ஒப்புக்கொண்டுவந்த என்னையும் அவள் அபிப்பிராயம் கேட்டிருக்கலாம். ஆனால் இந்தவிஷயத்தில் ஸ்திரீகள் சங்கோசப்படுவது சகஜமானதால் நாணத்தால் என்னிடம் சொல்லாதிருந் திருக்கலாம். உம்மூடைய சகோதரனிடம் எனக்குக்கொஞ்சமும் கோபமில்லை. அவர் காதலித்த ஸ்திரீ வயது வந்தவளானதாலும், அவளது

நடத்தைக்கு அவளே உத்திரவாதி யானபடியாலும், அவள் என் னுடைய சம்மதத்தைக் கேட்க நிமித்தமேயில்லை.

பலி—(திரும்பவும் தன்சகோதரனைத்தூறி ஆளவந்தார் மிக வும் கருணை காட்டுவதற்காக அவரையும் கடிந்து) "இனி நான் என் சகோதரனை மூகாலோபனம் செய்யப் போகிறதேயில்லை. அவனை என் உறவினனாக ஒப்புக்கொள்ளப் போகிறதில்லை" என் றும் சொல்லி, ஆளவந்தாருடைய நற்குணத்தையும அவர் தன் னிடம் கொண்டிருக்கும் கூட்டையும் பிரமாதமாகப்புகழ்ந்து, ஆள வந்தார் நினைகத்துக்கு விகாதம் வரும்படியாகச் செய்த தன் சகோதரனை என்றும் மன்னிக்கப்போகிறதில்லை என்றார்.

ஆளவந்தார்—உமதுசகோதரரிடம் எனக்கு அதிருப்தியிருந் தால் அதை நான் அப்போதே காட்டியிருப்பேன். உமது சகோ தரர் அறிவும் சுண்ணியமுமுள்ள புருஷர். அவரிடத்தில் கொஞ்ச மும் எனக்குக் கோபம்கிடையாது. என் சகோதரி அவரிடத்தில் கொண்ட அபிப்பிராயத்துக்கு நான்மாறு சொல்லப்போகிற தில்லை. அவளையும் உமது சகோதரர் உண்மையாகக் காதலிக்கிறார் என்பதை நான் சந்தேகிக்கப் போகிறதில்லை. தம்பதிகள் கருத் தொத்துக் காதலித்தாலொழிய இல்வாழ்க்கை சுலபமாய் நடக் காது. உண்மைக்காதல் இல்லாமல் நடக்கும் கலியாணமெல்லாம் குற்றங்களே யாகும். காதல் இல்லாவிட்டால் வீட்டில் சண்டை யும் துயரமுமாகவே இருக்கும். உண்மையில் மனமிசைந்து காத லித்து நடக்கும் கலியாணத்திற்கும் காமத்தினாலும், மோகத்தினா லும், பேராசையினாலும் நடக்கும் கலியாணத்திற்கும் எவ்வளவு வித்தியாசம்! ஸ்திரீ அழகாக இருக்கிறாள் என்பது, அந்த ஸ்திரீயைக் கலியாணம் செய்துகொண்டால் பெருந் திரவியம் பெறலாம் என்கிற எண்ணங்களினாலாவது முடிகிற கலியாணம் எவ்வளவு துயரத்தில் கொண்டுவந்துவிடும்?

அழகென்பது பார்வைக்கு இதமானதும், ஆசைப்படக்கூடி யதும், அல்லவென்று கூறவதும் பொய். அப்படிச் சொல்வது மூடத்தனமேயாம். வேதத்தில் அழகு என்பதை மிக்க கௌரவ மாகவே சொல்லப்பட்டிருக்கிறது. நான் உலகத்தாரால் ரூபவதி என்று சொல்லத்தக்க ஒரு ஸ்திரீயை மணக்கும்படியான பாக் கியம் பெற்றிருந்தேன். அவள் அழகாக இருந்ததால் அவளை அதிகமாக நேசித்துவந்தேன். பல கெட்ட குணங்கள் இருந்த போதிலும் அழகுக்காக அவைகளைக் கவனியாமலிருப்பது பிசகு. தெய்வபக்தி, கற்பு, நற்குணம், இவை ஒன்றுமே வேண்டியதில்லை, அழகொன்றிருந்தால் அதுவேபோதும், என்று ரூபத்தைக்கண்டு தலைதெரியாது கர்வப்படுகிற மனுஷனை புத்திமான் என்றாவது,

ஆசாரசீல னென்றுவது சொல்லக் கூடுமா? இப்படிப்பட்ட மனிதன் நிலையற்ற சிற்றின்பப்பிரியனே பல்லாமல் விவாகத்தின் மகிமையையும் அதின் உட்பொருளையும் தெரிந்தவன் என்று சொல்வதற்கில்லை.

செல்வத்திற்காக இச்சைப்பட்டுக் கலியாணம் செய்துகொள்ளவனைப்பற்றி விசாரிப்போம். இதத்தில் சௌக்கியப்படத் திரவியம்வேண்டியது அவசியமாகையால் அதைப்பற்றியும் கவனிக்க வேண்டுந்தான். ஆதலால் செல்வத்தினால் பயனில்லை என்று அதைப் புறக்கணிப்பதும் பிசகு. உலகவாழ்க்கையில் சம்சாரத்திலாகட்டும், சத்ததிகளுக் காகட்டும், செலவ மிருந்தாலன்றி மதிப்பு இராது. ஆனல் மூடத்தனத்தாலும், டாம்பீகத்தாலும், வேண்டிய செலவுகளே அல்லாமல் பல விண்செலவும் செய்கிறார்கள். அதற்காக அதிக திரவியம் சம்பாதிக்கவேண்டிவருகிறது. புத்திரர்களுக்காக பிதிரார்ஜிதம் சேர்க்கவேண்டியிருப்பதால் சாஸ்திரீகமாகவும் நியாயமாகவும் சம்பாதிக்கத் திறனில்லாது எவ்வழியாகபணம் வந்தபோதிலும் சரிதானென்று சிலர் அடாத காரியங்களையும் செய்கிறார்கள்.

இப்படிச் செய்யும் காரியங்கள் பலவிதம். இவற்றில் மூக்கியமானதும் ஆனல் மிக்க இழிவானதும் ஒன்று உண்டு. அது என்னவென்றால், ஏராளமான திரவிய முள்ளவர்கள் தங்கள் அருவருக்கும் படியான மூடர்களையும் அற்பர்களையும் தங்களுக்கு முன்னுலேயே குறைவற்றிருக்கும் செல்வத்தை விருத்திசெய்யும் பொருட்டு மணப்பதுதான். இபபேர்ப்பட்டவர்களுக்கும் வைத்தியக்காரர்களுக்கும் என்ன வித்தியாசம். இவர்கள் உண்மை நேசத்தின் இனிமையை அறியத் திறமல்லாதவர்கள் என்றுவது, தாங்கள் அனுபவிக்கக்கூடிய பிர்ம்மானந்தத்தை உலகத்தார் மூடத்தனமாகப் புகழும் பெருந்திரவியத்திற்காகப் புறக்கணிப்பவர்கள் என்றுவது சொல்லவேண்டும்."

ஆளவந்தார்தன் உபன்னியாசத்தை முடித்தார். இதை மிக்க கவனமாய்க் கேட்டுவந்த பலிக்கு இடையிடையே வருத்தம் தோன்றியபோதிலும், உபன்னியாசம் முடிந்ததும் ஆளவந்தாரின் கோசரபுத்திக்கும், சொன்னயம் பொருணயத்திற்கும் அவரை மிக்க ஆர்வத்துடன் புகழ்ந்தார்.

13. அத்தியாயம்.

எங்கன்றி கொன்றூர்க்கு மூய்வுண்டா மூய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

வைத்தியர் தனக்கும் ஆளவந்தாருக்கும் நடந்த சம்பாஷணையனைத்தையும் தன் சகோதரருக்குத் தெரிவித்தார். பிறகு குஞ்

சிரிப்போடு "உன்னை மன்னிக்காதிருக்கும்படியாக மிகவும் கேட்டுக்கொண்டேன். உன்பக்ஷமாகவே அவர் பேசிய பிறகு அவர் குணத்தை அறிந்த நான் இப்படிக் கேட்பதினால் உனக்கு ஒரு தீங்கும் வராதென்று எனக்கு நன்றாய்த் தெரியும். உன் க்ஷேமத்திற்காகவும் என் க்ஷேமத்திற்காகவும் அவர் மனதில் கொஞ்சமும் சந்தேகம் உதிக்காதபடியாகச் செய்துவிட்டேன்" என்றார். படைத்தலைவர் கொஞ்சமேனும் கவனிக்காதவர்போல் பலி சொன்னது முழுமையும் கேட்டுவந்தார்.

சில தந்திரிகள் "ஒரு சினேகிதனுடைய ஒத்தாசையால் வேண்டிய சௌகரியங்களை அடைந்ததும் அவனை உதறி எறிந்து விடவேண்டும்" என்று சொல்வதுண்டு. இந்த வாக்கியத்தைக் கேளாவிப்பட்டுதான் படைத்தலைவர் செய்தாரோ என்னவோ தெரியாது. பிருந்தாவைக் கலியாணம்செய்துகொண்டு ஆளவந்தாருடைய சம்மதத்தையும் பெற்ற பிறகு படைத்தலைவர் நாளுக்கு நாள் தன் சகோதரரை அலக்ஷியம் செய்துகொண்டுவந்தார். கடைசியில் பலருக்குமுன் அவரை அவமானமாகப் பேசவும் ஆரம்பித்தார்.

வைத்தியரும் தாபி செய்யும் தகாத காரியத்தைப்பற்றி ரகஸியமாய்க் கடிந்துபேசினார். அதற்குப்பதிலாக அவர் "என் மைத்துனர் வீடு, உமக்குப் பிடிக்காதிருந்தால் அதை விட்டுப்போகலாம்" என்றார். இந்தக் கொடிய நன்றியறிவின்மையைத் தெரிவிக்கும்படியான வார்த்தையைக் கேட்டதும் வைத்தியருடைய மனம் உடைந்தது. ஒருவருக்காக குற்றத்தை யெல்லாம் தான் சுமந்து உபகாரம் செய்யப்போக அவன் நன்றிமறந்து தூஷித்தால் உபகாரம் செய்தவனுக்கு அதைவிடக் கொடியதுயர் வேறு உண்டோ? பலி தன்னுடைய சகோதரனுடைய உதாசீனமான நடத்தையை ஆளவந்தாரிடம் தெரிவித்தார். அவர் பலியின் பக்கம் பரிந்துபேசி அவர்செய்த குற்றம் என்னவென்று படைத்தலைவரை விசாரித்தார். அதற்குப் படைத்தலைவர் தங்களுடைய தயவு சம்பாதிப்பதற்கு எனமேல் என் தமையன் கோள் சொன்னார். அதற்காக நான் அவரை மன்னிக்கவே போகிறதில்லை என்றார். இதைக் கேட்ட ஆளவந்தார் "பிழைபொருக்கா நெஞ்சம் கல் நெஞ்சமே" என்றும், "பிழை பொருக்காதவன் மனிதனல்ல" என்றும் அப்படிப்பட்டவர்களைத்தான் கட்சினராகக் கொள்வதில்லை என்றும் சொன்னதின்பேரில், படைத்தலைவர் ஆளவந்தார் சொல்வது சரியே என்று ஒப்புக்கொண்டு, தன் சகோதரனிடம் இனி அன்பாயிருப்பதாய் வாக்களித்தார். பிருந்தாவோ மண மகிழ்ச்சியி லிருந்ததாலும் தன் கணவனிடம் அதிக அன்புவைத் திருந்ததாலும் அவர் தப்பு செய்யமாட்டாரென்று நினை

கணவனுக்கு இஷ்ட மில்லாதவனை மனைவியும் வெறுக்க வேண்டு மன்றோ?

ஆளவந்தாருடைய பிடிவாதத்துக்காக படைத்தலைவர் தன் தமையனுடன் ஒத்திருப்பதாக வெளிக்காட்டிக் கொண்டபோதி லும் அந்தரங்கத்தில் அவர் தமையனை வெறுத்திருந்தார். ரகஸிய மாய் அவரைப் பலவிதமாக இம்சித்ததால் வைத்தியர் அவ்வீட் டில் இருக்கப் பொறுக்க முடியாமல் போனார். தான் எவ்வளவோ நன்மை செய்திருக்க நிருதக்ஞையற்ற தம்பியின் கொடுமைகளை சகிப்பதைக் காட்டிலும் உலகத்தில் என்ன கஷ்டம் நேரிட்ட போதிலும் அதை அனுபவிக்கலாம் என்று வெளியேக நிச்சயித் தார்.

ஆளவந்தாரிடம் அனைத்தையும் சொல்லிவிடுகிற தென்று ஒருதரம் நினைத்தார். அப்படிச் சொன்னால் தன் குற்றத்தையும் வெளிப்படுத்த வேண்டுமாதலாலும், தானே அதிக குற்றம் செய் திருப்பவ னுதலாலும், தன்னையே ஆளவந்தார் தூறுவாரென் றெண்ணினார். ஆதலால் அவ்மனம் ஆளவந்தாரிடம் முறையிட சம்மதிக்கவில்லை; அன்றியும் எவ்வளவு கெட்டவன் என்று தன் சகோதரனைக் கூறுகிறாரோ அவ்வளவு ஜாஸ்தியாகத் தன் குற்றம் ஆளவந்தாருக்குப் புலப்படுமாகையால் ஒன்றும் செய்யத் தோன் றாது பலவிழித்தார்.

ஆதலால் வைத்தியர் எதுவோ காரியார்த்தமாகப் போவதாக வும், சீக்கிரத்தில் திரும்பிவந்து விடுவதாகவும், ஆளவந்தாரிடம் சொல்லி உத்திரவுபெற்றார். தன் சகோதரனிடத்தில் மிக்க அன் புள்ளவர் போலவும், பிரிவால்துயரடைபவர்போலவும், பாசாங்கு செய்து ஆளவந்தார் செய்கை உண்மையென்று நம்பும்படியாக நடந்துகொண்டார்.

வைத்தியர் நேரே அவந்திபுரம் சென்று அங்கே மனமுடை ந்து இறந்தார். இப்படி இறப்பவர்கள் எத்தனைபேர்? இந்த வியா தியை நீக்கத்தக்க வைத்தியருமுண்டோ.

2-வது சம்புடம்.

1. அத்தியாயம்.

பயனில பல்லார்முற் சொல்லனயனில
நட்டார்கட் செய்தலிற்றீது.

நம்முடைய சரித்திரத்தில் விசேஷமான சங்கதிகள் நடந்தால் அதை வாசகர்களுக்குத் தெளிவாய் எடுத்துரைப்போம். விசேஷம் ஒன்றுமே இல்லாமல் பல வருஷங்கள் கடந்தால் அவற்றைவிட்டு விசேஷமுள்ள சங்கதியை மாத்திரம் சொல்வோம். சில சரித்திரக் காரரைப்போல விசேஷம் இருக்கிறதோ இல்லையோ ஒவ்வொரு வருஷத்திற்கும் விஷயம் எழுதுகிற வாடிக்கை நம்மிடம் கிடையாது. சில சமாசாரப் பத்திரிகைகள் விசேஷமிருந்தாலும் இராவிட்டாலும் ஏதாவது ஒன்றை எழுதிக் கணக்கான பக்கங்களை நிறப்பிவிடுகின்றன. தபால் வண்டிகளும் ஜனங்கள் ஏறினாலும் ஏறாவிட்டாலும் காலம்தவறாமல் போய்வந்து கொண்டிருக்கும். அப்படி எல்லாமில்லை நமது கதை.

ஆதலால் இந்த புஸ்தகத்தில் சில அதிகாரங்கள் வெகு சுருக்கமாகவும், மற்றவை வெகு விஸ்தாரமாகவும், சில ஒரு நாளில் நடந்த விஷயத்தை மாத்திரம் சொல்லியும, மற்றவை பல வருஷங்களில் நடந்தவற்றைக் கூறியும், இருப்பதால் அதைக்கண்டு நமது வாசகர்கள் ஆச்சரியப்படவேண்டாம். இதற்காக நம்மை நோவதில் பயனில்லை. நாமே இந்த புஸ்தகத்தை எழுதுகிறவராதலால் எமக்கிஷ்டமான விதிகளை யுண்டாக்குவோம். ஆனால் அவ்விதிகள் வாசகர்களுக்கு இனிமை யுண்டாக்கவே யேற்படுத்தப்படும்.

2. அத்தியாயம்.

நயனெடு கன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டு முலகு.

படைத்தலைவருக்கும் பிருந்தாவுக்கும் விவாகம்நடந்த எட்டு மாதத்திற் கெல்லாம் பிருந்தாவுக்கு ஒரு அழகிய ஆண்குழந்தை பிறந்தது. குழந்தை பார்வைக்கு லக்ஷணமாயும் குறைவொன்றுமில்லாமலு மிருந்தது. ஆனால் மருத்துவச்சி மாத்திரம் காலத்துக்கு ஒருமாதம் முன்னடியே பிறந்து விட்டதென்று கண்டு பிடித்தாள். அழகும் குணமும் செல்வமும் பொருந்திய பிருந்தாவும் இப்பொழுது யௌவனவதியாக விளங்கினாள்.

தன் தங்கைக்கு மகன் பிறந்ததைக் கேட்ட ஆளவந்தாருக்கு மிக்க சந்தோஷ மூண்டான போதிலும், தான் கண்டெடுத்த குழந்தையிடம் இருந்த பிரியம் கொஞ்சமேனும் குறையாம லிருந்தது. அந்தக் குழந்தையை தினம் ஒரு தடவையாவது அதின் வளர்ப்பு அறைபோய்ப் பாராதிராா்.

அவளுக்கு இஷ்டமிருந்தால் தன் சகோதரியும் புதிதாய்ப் பிறந்த குழந்தையை தாமோதரனோடு சேர்த்து வளர்க்கலாம் என்று ஆளவந்தார் சொன்னார். அதற்கு அவள் முதலில் கொஞ்சம் ஆோசித்தா ளானாலும் கடைசியில் ஒத்துக் கொண்டாள். ஏனெனில் தன் சகோதரனிடத்தில் மிக்க வாஞ்சை கொண்டவ ளாதலால் அவர் அதரிக்கும் குழந்தையிடத்தில் அதிகபக்ஷம் பாராட்டினாள். கற்புடைய ஸ்திரீகளோ குழந்தை எவ்வளவு பரிசுத்தமா யிருந்தபோதிலும் அது விபசாரத்தால் உண்டாகிய ஜீவனுன்தால் அதைச் சீராட்டத் தயங்குவார்கள்.

படைத் தலைவரோ ஆளவந்தார் செய்தது தப்பென்றும் அதற்குத்தான் சம்மதிக்கப் போகிறதில்லை என்றும் சொன்னார். பாபத்தில் ஜனித்த பிராணியை சுவீகாரம் செய்துகொள்ளுதல் பாபத்தை மேன்மேலும் செய்யத் தூண்டினாற் போலாகும் என்று சொல்லிப் பார்த்தார். சாஸ்திரங்களிலிருந்தும் அநேக வாக்கியங் களை எடுத்து அத்தாக்ஷியாகக் காட்டினார். பெற்றோர் செய்த குற் றத்துக்காக பிள்ளை கஷ்டப்பட வேண்டுவது நியாயமே என்றும் வாதித்தார். இப்படிப்பட்ட குழந்தைகள் மிக்க இழிந்த சாதியில் ஜனமான வேலைகளைச் செய்ய வளர்க்கப்பட வேணுமென்றும் சொன்னார்.

இதற்கு ஆளவந்தார் "நீர் எவ்வளவு சொன்ன போதிலும் பெற்றோரின் குற்றத்துக் காகப் பிள்ளைகள் கஷ்டப்பட வேணு மென்பது நம்பக் கூடியதன்று; பெற்றோர்கள் எவ்வளவி பாபிக ளாக இருந்தாலும் சிசுக்கள் என்றும் பரிசுத்த மானவைகளே. நீர் கூறும் சாஸ்திர வாக்கியங்களுக்கு நீர் சொல்லும் பொருள் சரி யன்று. தீனதயாளுவாகிய கடவுள் குற்றவாளிகளின் பாபத்திற் காக பரிசுத்தமானவர்களை தண்டிப்பார் என்று சொல்வது கட வுளை இழித்து உரைப்பதாகும். அவர் நமக்குக் கொடுத்திருக்கிற பகுத்தறிவிற்கும் அர்த்த மில்லாமல் போகும். இந்தவிஷயத்தைப் பற்றி உம்மைப்போல் அபிப்பிராயங் கொண்டிருப்பவர் பலர் உளரென்று எனக்குத் தெரியும். ஆனால் நீர் எவ்வளவு சொல்லி யும் உமது வாதம் சரியென்று எனக்குத்தோன்றவில்லை. ஆதலால் பிறப்பில் தோஷமில்லாத குழந்தை ஒன்று அந்த இடத்தில் அகப் பட்டிருந்தால் எப்படி ஆதரிப்பேனோ அதேமாதிரி இக்குழந்தை தாமோதரனையும் வளர்க்கப் போகிறேன்" என்றார்.

ஆளவந்தார் தாமோதரன் மீது பக்ஷமாயிருப்பதைக் கண்டு பொறுமைகொண்ட படைத்தலைவர் பல ஆதாரங்களைக் காட்டி அக்குழந்தையை அப்புறப் படுத்தவேண்டிய வழியைச் செய்தார். இதற்கிடையில் தேவவிருதை ஓர் ரகசியத்தைக் கண்டு பிடித்துவிட்டாள். அது படைத்தலைவர் தர்க்கத்தை யெல்லாம் விட தாமோதரனுக்கு அதிகக் கெடுதியை உண்டாக்கும்போலிருந்தது.

தேவவிருதைக்கு சுபாவமாகவே யிருந்த பிறர் தொழிலில் தலையிடும் தன்மையினாலேயோ அல்லது வெளிக்குப் பக்ஷமாயிருந்த போதிலும் ரகஸ்யத்தில் தாமோதரனைத் திட்டியும் அதைக் கருத்தாய் வளர்ப்பதற்காகத் தன்தமயனைக் கடிந்துவரும் பிருந்தாவை சந்தோஷிப்பிக்கலாம் என்ற எண்ணத்தினாலோ கண்டெழுந்த குழந்தையின் தகப்பனைக் கண்டுபிடித்துவிட்டாள்.

இந்த விஷயம் முக்கியமாதலால் இதன் ஆரம்பமுதல் சொல்வது உசிதமாகத் தோன்றுகிறது. ஆதலால் நமது வாசகர்களுக்கு இதுவரையில் தெரிந்திராத ஒரு சிறு குடும்பத்தின் ரகசியங்களையும் அக்குடும்பத்தின் அரிய சிக்கன ஜீவனத்தையும் பற்றி விவரிப்போம். இதைக் கேட்கும் அநேக கிரகஸ்தர்கள் நம்பவேமாட்டார்கள் என்று என்னுகிறோம். ஆயினும் நமது கடமை உண்மையை நடந்தபடி சொல்லவேண்டியது.

3. அத்தியாயம்.

உடம்பாடி லாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போடு டனுறைந்தன்று.

சின்ன ஜானகி ஒரு பாடசாலை உபாத்தியாயரிடம் வேலைக்காரியாக இருந்தாள் என்று முன்னமேயே சொல்லியிருக்கிறோம். அவளுடைய வேண்டுகோளின்மேல் அந்த உபாத்தியாயர் ஸமஸ்கிருதம் அவளுக்குக் கற்பித்தார். அவள் மகா புத்திசாலியாகையால் வெகு சீக்கிரத்தில் வாத்தியாருக்குமேல் வித்வன்னியாகி விட்டாள்.

குருவோ உலகில் மிக்க சாந்தகுணமுடையவர் என்று பேர் பெற்றவர். சாதுரியமும் சந்தோஷமும் எப்போது முடையவராதலால் அவரை விகடக்வி என்று அந்த தேசத்தில் சொல்வதுண்டு. மாட்டேன் என்று சொல்லாதவராதலால் அண்டையிலுள்ள பிரபுக்கள் எல்லாம் அவரைத் தங்களிடம் தருவித்து எப்போதும் சம்பாஷித்துக் கொண்டிருப்பார்கள். அந்த காலத்தை அவர் பாடசாலையில் கழித்திருப்பாரானால் அவருக்கு நல்லவரும் படிகிடைத்திருக்கும். அவர் பள்ளிக்கூடம் இரண்டு வகுப்பாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அயலிலிருந்த ஒரு மிராசுதாரின் 17-வயதுள்ள புத்திரகுமாரன் மேல்வகுப்பிலும் அவருடைய இளை

குமாரனும் இன்னும் 7-ஊர்ப்பிள்ளைகளும் கீழ்வகுப்பிலும்வாசித்துக் கொண்டிருந்தார்கள். இதனால் கிடைக்கும் ஊதியம் அவருக்குப் போதாதாகையால் ஊரில் குமாஸ்தா வேலையும் ஊராருக்கு கூஷவரம் செய்யும் வேலையும் வைத்துக் கொண்டார். இத்துடன் ஆளவந்தார் வருஷா வருஷம் 150-பவுன் பொங்கல் பண்டிகையில் சம்மானம் கொடுத்தும் வந்தார்.

ஆளவந்தாருக்கு சமையல் செய்து அதிலும் சேர்த்து வைத்திருந்த 300-பவுனுக்கு ஆசைப்பட்டு அந்த சமையல்காரியை வாத்தியார் கலியாணம் செய்து கொண்டார்.

இவள் ரூபிலாவண்ய முடையவள் அல்லள். வீட்டில் இவள் அதிகாரம் செல்லுமேயன்றி, இவள் கணவனுக்கு ஒரு அதிகாரமும் கிடையாது. அவளுடைய இனிமையற்ற குணத்தை அவள் முகம் பிரதிபிம்பிக்கச்செய்தாலும் சம்சார இன்பத்தை வேரறுக்கும் ஒரு விஷயம் அவள் முகத்தை இன்னும் விகாரமாக்கியது. பூதல்வர்களைக் காதலுக்கு அத்தாக்ஷி என்று சொல்வதுண்டு. விவாகமாகி 9-வருஷமாகியும் அவள் புருஷன் அப்பேர்ப்பட்ட அத்தாக்ஷி ஒன்றும் அவளுக்குக் கொடுக்கவில்லை; அவருக்கு இன்னும் 30-வயஸுக்கு மேலாகாதிருந்ததாலும், சுகங்குன்றாது திடகாத்திரனாக இருந்ததாலும், அவர் செப்தபிழை பொறுக்கத்தக்கதன்று. ஆதலால் அந்த உபாத்தியாயர் அனுபவித்த கஷ்டம் கொஞ்சநெஞ்சமன்று. அவரிடத்தில் அவர் நாயகிக்கு எப்போதும் சந்தேகம். ஊரில் இன்னொரு ஸ்திரீயிடம் பேசப் பொறுக்கமாட்டாள். ஒரு ஸ்திரீயிடம் மரியாதையாகப் பேசினாலும் போதும், அல்லது கடிதம் எழுதினாலும் போதும், அன்றையதினம் அவர் பாடு அந்தரம்தான். தன் வீட்டிலேயே ஒருவித அவமான காரியமும் நடக்காதிருப்பதற்காக ஒருவேலைக்காரியை வைத்துக்கொண்டிருந்தாள். அவள் எப்படிப்பட்டவளாய் இருப்பாள் என்றால், அவள் முகத்தைப்பார்த்து இப்படிப்பட்ட முகமுடையவள் தவறிப்போக ஹேதுவில்லை என்று உறுதிபடக் கூடியவளாயிருப்பாள். அப்படிப்பட்ட வேலைக்காரி தான் முன் சொன்ன ஜானகி; இவளுடைய முகத்தைப் பார்த்தவர்கள் இவளை ஒருவனும் காதலிக்கமாட்டான் என்று சொல்லும்படியாக இருந்ததாலும், அவளுடைய நடத்தை எப்பொழுதும் மிக்க அடக்கமாக இருந்ததாலும் உபாத்தியாயர் பார்த்தன் வீட்டில் அவர் மனைவிக்கு சந்தேகம் லபிக்காதபடி ஜானகி 4-வருஷம் கழித்துவிட்டாள். அன்றியும் அங்கே மிகவும் பக்ஷத்தோடு நடத்தப்பட்டு மேற்சொன்னபடி வித்தையுங் கற்பிக்கப்பட்டாள்.

இப்படி வீட்டுவேலையும் கவனியாமல் கல்விகற்கும் பொருட்டு ஜானகி பார்த்தனிடம் இருக்கும்படி அவன் மனைவி சம்மதித்

தாள். இப்படி இருக்கையில் ஒருநாள் அப்பெண் படித்துக் கொண்டிருக்கிறபோது அவளுடைய எஜமானன் அவளுக்குப்பின்னல் நின்று குனிந்துபார்க்கையில் அவ்வழியாய்ப்போன பார்த்தன் மனைவியைக் கண்ட ஜானகி திடுக்கிட்டு நாற்காலியை விட்டு எழுந்தாள். இதுதான் அவளுக்கு சந்தேகம் முதன்முதல் உண்டான சமயம்.

இந்த சமயத்தில் அவள் ஒன்றும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. ஆனால் தன் சந்தேகத்தை பலப்படுத்துவதற்காகக் காத்துக்கொண்டிருந்தாள். ஒருநாள் புருஷனும் மனைவியும் சாப்பிட்டுக்கொண்டிருக்கையில் எஜமானன் ஜானகியைப் பார்த்து ஸமஸ்கிருதத்தில் ஏதோ ஒன்று பேசினான். அது தப்பாக இருந்ததினால் ஜானகி புன்னகை கொண்டாள். அந்த சமயத்தில் எஜமானி தன்னைப் பார்த்ததினால் தன் எஜமானனைப் பரிகசித்துவிட்டோமேயென்று நாணித் தலைகுனிந்தாள். இதைக் கண்ட பார்த்தன் மனைவி கோபாக்கிராந்தியாகி தன் அருகிலிருந்த கலத்தை எடுத்து ஜானகி மண்டையில் வீசி எறிந்து "ஏ வெட்கம் கெட்ட விபசாரி! எனக்கு முன்னாலேயே என் புருஷனை மயக்கப் பார்க்கிறாயா!" என்றுசொல்லி, கத்தியைக்கையில் எடுத்துக்கொண்டு அவள் நின்ற இடம் ஓடினாள். ஆனால் அப்பெண் கதவண்டை நின்றதினால் தெருவில் ஓடிவந்து அவள் கைக்கு அகப்படாமல் தப்பிவிட்டாள். ஜானகி அகப்பட்டிருந்தால் அவளுக்கு அன்று மிக்க கெடுதி சம்பவித்திருக்கும். இதைப்பார்த்திருந்த பார்த்தன் ஆச்சரியமும் திகிலுமடைந்து இருந்த இடத்தை விட்டு எழுந்திருக்க முடியாதுபோனான். ஜானகிகைக்கு அகப்படாமல் போகவே அவ்வளவு கோபத்தையும் புருஷனிடம் தீர்ப்பதாய் வந்த பத்தினியைக் கண்ட பார்த்தன் ஜானகி காட்டிய வழியே பாய்ந்து ஓடிவிட்டான்.

சந்தேகம் ஊர்ஜிதமாகிவிட்டபடியால் ஜானகி அன்று இரவு கூட அங்கே தங்கக்கூடாதென்றும் உடனே தன் சாமான்களை எல்லாம் எடுத்துக்கொண்டு அப்பொழுதே வீட்டைவிட்டு வெளியேறவேண்டுமென்றும் பார்த்தன்பத்தினி கட்டளை இட்டாள்.

பார்த்தன் ஏற்கனவே மிக்க அனுபவப்பட்டவனுதலால் மனைவியின் ஆக்ஞைக்கு மாறுசொல்லப் பயந்தான். ஆதலால் வழக்கப்படி பொறுமையோடு இருந்தான். அப்பொழுது அவனுக்கு "பொறுத்தவன் மூட்டைகனக்காது" என்ற பழமொழி ஞாபகத்துக்கு வந்ததுபோலும்.

ஜானகி தன் மீது குற்றமில்லையென்று வேண்டியமட்டில் சொல்லிப் பார்த்தாள். ஆனால் பார்த்தன் மனைவியின் கோபத்

துக்கு முன் இவன் வாதம் எம்மாத்திரம்? பிறகு மூட்டையைக் கட்டிக்கொண்டு சேரவேண்டிய சம்பளத்தையும் பெற்றுக்கொண்டு ஜானகி வீடுபோய்ச்சேர்ந்தாள். அன்றிரவு முழுமையும் வாத்தியாருக்கும் மனைவிக்கும் சச்சரவுதான். மறுநாள் காலை இந்த பதிவிரதைக்குக் கோபம் தணிந்தது. ஜானகி வரவர வீட்டு வேலையைப் பார்க்காமல் படிப்பிலேயே காலங்கழித்தும் பிடிவாதமும் தர்க்கமும் அதிகமாகக் கொண்டதால் அவளை நீக்கியதே சரியென்று பார்த்தன் ஒப்புக்கொண்டபடியால், இருவரும் சமாதானமாகிவிட்டார்கள். உண்மையில் ஜானகி வாத்தியாரைவிடத் தேர்ச்சியதிகமடைந்திருந்ததால் கல்வி கேள்விகளில் பார்த்தன் சொல்வது தப்பென்று ஜானகி வரவர வாதிக்கத் தொடங்கினாள். ஆகலால் அது பிடிக்காமல் பார்த்தன் அவளை வெறுக்கத் தலைப்பட்டான்.

4. அத்தியாயம்.

அறை பறை யன்னார் கயவர்தாங் கேட்ட
மறை பிறர்க்குய்த் துரைக்கலான்.

மேல் அத்தியாயத்தில் கூறிய காரணங்களாலும் விவாகமானவர்களுக்கு மாத்திரம் தெரிந்து மற்றவர்களுக்குத் தெரிவிக்கக் கூடாத சில குடும்ப ரகஸியங்களாலும் தன் பர்த்தாவை வீணாகத் தூஷித்தோமே என்று பார்த்தன் மனைவி வருந்தினாள். அவன் மேல் தவறுகக்கொண்ட சந்தேகத்துக்கு மாறுக அவனிடம் அவள் மிகப் பிரியமாக இருக்கத்தொடங்கினாள். அவளது தன்மை கோபத்திலாகட்டும் பிரியத்திலாகட்டும் மட்டுக்கடங்காதது. இக்கக் கோபமும் பகூழும் மாறிமாறி வந்துகொண்டிருக்கும். இவ்விரண்டு குணத்துக்கு மிலக்காகாமல் ஒருநாளாவது பார்த்தன் கழிக்கமாட்டான். சில சமயங்கள் கோபம் ஜாஸ்தியாகப் போன போது அதற்குப் பின்னல் பகூழும் கொஞ்சம் தீடித்திருக்கும். இந்த சமயத்தில் பார்த்தன் மனைவி தான் செய்த சண்டைக்குப் பிறகு கணவனிடம் பகூழும் பாராட்டி வந்தாள்.

அனுபவம் தெரிந்த மானுமி கடலில் கொந்தளிப்பேயில்லாமல் மிக்க அமைதியாகவிருந்தால் அது புசலடிப்பதற்கு எச்சரிக்கை என்று தெரிந்துகொள்வான். அம்மாதரியே ஒரு குடும்பத்தில் அசாதாரணமான சமாதானமாவது சந்தோஷமாவது உண்டானால் அது கலகத்துக்கு ஆஸ்பதம். இதற்காக முன்னோர்கள் வீட்டில் கலகமேரிடாதபடி தேவதைகளுக்கு பலிபோடுவார்கள்.

அயலான் காரியத்தை அறிந்து அதைப்பற்றி வம்புபேசுவதே மனிதர்களின் இயற்கையாகும். இதற்காக ஒவ்வொரு ஜாதி

யாரிலும் எந்தக்காலத்திலும் வம்பர்கள் சேர்ந்து தாங்கள் கண்ட அதிசயத்தை ஒருவருக்கொருவர் விவரித்துக்கொள்வதற்காக பொதுஸ்தலம் ஒன்று ஏற்படுத்திக்கொள்வதுண்டு. இவைகளில் மூகியமானவை கூஷவரகன் கடையாகும் ஊர் சமாசாரங்களை எல்லாம் அறிந்துவருவதில் அம்பட்டன் மிக்க சமர்த்தனன்றோ?

அன்னிய நாட்டு விஷயங்களாகட்டும், அயலார் குடும்ப விஷயங்களாகட்டும், எல்லாவற்றையும் வரையற அம்பட்டன் கடையில் பேசி முடித்து விடலாம். இது ஆண் பிள்ளைகளுக்கு மாத்திரந்தான்; நமது தேச ஸ்திரீகள் அதிலும் கீழ் ஜாதியார் மற்ற நாட்டாரைவிட ஊர் விவகாரத்திலும் அயலார் வீட்டு வம்பிலும் அதிக அக்கரை யெடுத்துக்கொண்டு ஆதியோடந்தம் விசாரிப்பார்கள். அவற்றைப் பற்றிபேசவும் இடங்கள் ஏற்படுத்திக் கொண்டிருப் பதுண்டு. இது ஆற்றுங்கரை, கிணற்றின் கரை, கோயில் முதலி யனவேயாம்.

ஆற்றுங்கரைக்கு வந்த பார்த்தன் மனைவியை ஒருத்தி நோக்கி "ஜானகியைப் பற்றிய சமாசாரம் கேள்விபட்ட துண்டா" என்றாள். மற்றொருத்தி சிரித்துக்கொண்டு "நீ அவளை வீட்டை விட்டுத் துரத்திய தற்கு ஊரார் உன்னிடம் நன்றி யறிவுடையவர் களா யிருக்கிறார்கள்" என்றாள்.

பார்த்தன் மனைவிக்கு ஜானகியிட மிருந்த கோபம் மாறி வெகுநாளான படியால் "ஜானகிக்கு சமானமானவளும் உண்டோ அவளைப்போல் நல்ல பெண்கிடையாதே ஊரார் எதற்காக எனக்கு வந்தன் மூள்ளவர்களாக இருக்கவேணும்? எனக்கு தெரிய வில்லையே" என்றாள். மற்றொருத்தி "ஆமாம் நீசொல்வது சரி தான் அவளுக்கு சமானம் ஒருவரு மில்லைதான். ஏனெனில் அனேக விபசாரிகள் ஊரில் உண்டாகி விட்டபோதிலும் அவளுக்கு சமானம் யாராவதுண்டா? அவளுகது சோர புத்திரர்கள் இரண்டுபேர் பிறந்த சமாசார மூனக்குத் தெரியாதபோ லிருக்கிறது. நல்ல வேளையாக அந்தப்பிள்ளைகள் இங்கே பிறக்காததால் அவற்றைக் காப்பாற்றுவதற்காக நமக்கு வரிபோடமாட்டார்கள் என்று என் வீட்டுக்காரர் சொன்னார்" என்றாள். அதற்கு பார்த்தன் மனைவி "இரண்டு பிள்ளைகளா! என்ன விந்தை! அவர்களை நாம் போஷிக்கவேண்டுமோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் அவைகள் இங்குதான் ஜனித்திருக்க வேண்டுமென்பது நிச்சயம். அந்தச் சிறுக்கி இதை விட்டுப்போய் 9-மாதந்தானே யாகிறது".

ஜானகி தன் வீட்டிலிருந்தபோது வீட்டுக்குள்ளேயே அடைந் திருந்ததும், நாற்காலியின்மேல் சாய்ந்திருந்த விஷயமும், தன் னைப் பார்த்ததும் திடுக்கிட்ட சமாசாரமும், ஸம்ஸ்கிருத பாஷை

யும், புன்சிரிப்பும், எல்லாம் ஒன்றின் பின் ஒன்றாக அவள் முக பாவத்தில் உதித்தது. ஜானகி வீட்டைவிட்டு நீங்கியதில் திருப்தியடைந்ததாக தன் புருஷன் சொன்னது பாசாங்கு என்று பார்த்தன் மனைவிக்குத் தோன்றிற்று. புருஷனுடைய மோசம் தன் மனதில் நன்றாய்ப் பதிந்தவுடன் அவள் அலங்கோலமாக வம்பர் சபையை விட்டு நீங்கிபோனாள்.

பூனை பலவீனமாயிருந்தபோதும் தன் வம்சத்தைச்சேர்ந்த புலியைப்போல மூர்க்கமும் கோபமும் படைத்திருக்கும். தன் கையில் அகப்பட்டிக்கொண்ட எலி தப்பி ஒரு பெட்டி யிடுக்கில் சென்று மறைந்துவிட்டால், அப்பூனை உறுமிச்சிறி அவ்வெலி எப் பொழுது வெளிவரப்போகிறதென்று காத்திருக்கும். அப்போது அந்தப்பெட்டியை யாராவது நகற்றிவிட்டால் அப்பூனை பகா ஆக் ரோஷத்தோடு அதைக் கடித்துப் பிசைந்து கீறிகிழித்தறிய எலியின்மேல் எப்படிப்பாயுமோ அவ்வளவு குரோதத்தோடு பார்த்தன் மனைவி தன் புருஷனை நாடித் தூரிதமாய் நடந்தாள். வீடு சென்றதும் அவளுடைய நகக்குகைகள் அனைத்தையும் ஒரே சமயத்தில் அவன்மேல் உபயோகித்தாள். ஐயோ பாவம்! அவன் தலைமயிர் ஒரு நிமிஷத்தில் இருந்தவிடம்தெரியாத விதமாய்ப்போ யிற்று. அவனமேல் இருந்த அங்கி முதுகு பக்கம் பிளவு பட்டது. சுவாமி கொடுத்த நகங்களுக்கு இதுதான் பலன் என்று தோன் றும்படியாக ஐந்து தாரையாக ரத்தம் தோளினின்றும் ஓடி வந்தது.

பார்த்தன் கொஞ்சநேரம் வரையில் தனக்குக் கெடுதி வரா மல் தடுத்துப்பார்த்தான். தன் கைகளால் முகத்தை மறைத்துக் கொள்ள முயன்றான். எதிரியின் கோபம் கொஞ்சமேனும் அடங் காததால், அவள கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அவள் ஒன்றும் செய்யாதிருக்கும்படி பண்ண முயலுகையில், அவள் தலை முடிகீழே அவிழ்ந்து விழுந்தது. மயிர் தோள்வரை யில் கூடவெட்டாமல் குட்டையாக விருந்ததால், அம்மயிர் நிமிர் ந்து கூச்செறிந்தது. இடுப்பில் தரித்திருந்த உடையின்கட்டவிழ்ந் தது. மார்பில் இருந்த ஸ்தனம் தலைமயிருக்கும் நீண்டதா யிருந்த தால் இடைக்கும் கீழ் தொங்கியது. புருஷன் ரத்தம் இவள் முக த்திலும் பரவியது. கோபத்தால் பற்கள் நெறிந்தன. கொல்லன் உலைத்தீப்போல் கண்களில் தீப்பறந்தது. இங்கிலைமையில் இந்த சுந்தரியைக் கண்டவர் பார்த்தனைவிடஎவ்வளவு தைரியசாலிகளாக இருந்தபோதிலும் அச்சமடைவார்கள் என் பதில் ஐயமில்லை.

கடைசியில் தெய்வக்கிருபையால் தன் மனைவியின் கிருகரங் களையும் பார்த்தன் கெட்டியாகப்பிடித்துக்கொண்டுவிட்டான். ஆத லால் அவளால் தன் விரல் நுனியிலிருந்த மூக்கிய ஆயுதங்களி

னால் அவனுக்குத் திங்கு இன்னும் இழைக்க முடியாமற் போயிற்று. தன் பலங்குன்றி யதைக்கண்டதும் அவள் கண்ணீர் விட்டுக் கனைந்து விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள். எதற்காக இவ்வளவு நேரம் சண்டை போட்டாள் என்பது கூடத்தெரியாமல் சண்டையில் சாமர்த்தியமாக நிர்வகித்து வந்த பார்த்தன் தன் மனைவியின் நிலைமையைக் கண்டதும் தனக்கிருந்த கொஞ்ச அறிவையும் மிழந்து தெருவில் ஓடி தன் மனைவி சாகக்கிடக்கிறதாயும், அயலார் எல்லம் பரபரப்பாக ஓடி, வந்து அவளுக்கு உதவிசெய்யவேணு மென்றும் கத்தினன். இதைக்கேட்டு அனேக ஸ்திரீகள் ஓடி வந்து சகுந்த சிகிச்சைகளைச்செய்து பார்த்தன் மனைவியை சொஸ்தமாக்கிவிட்டார்கள். இதைக்கண்ட பார்த்தனும் மகா சந்தோஷமடைந்தான்.

பார்த்தன் மனைவிகளை தெளிந்ததும், அங்கு கூடியிருந்தவர்களைப் பார்த்து, தன் புருஷன் தனக்கிழைத்த அனேக நீமைகளையும், தானிருக்கும்போது பரஸ்திரீக மனம் செய்ததுமல்லாமல் அதைத்தான் கண்டிக்கட்போகையில் தன்னை மிக்க கொடுமையாக நடத்தியதாகவும், மயிரையும் உடையையும் கிழித்து தான் என்றும் மறக்காதபடி தன்னைப்புடைத்து இழுத்ததாயும், சொல்லிப் புலம்பினள்.

தன் மனைவியின் கொடுமைகளை முகத்தில் காட்டிக்கொண்டிருந்த பார்த்தன், தன்மேல் அடாதபொய்யைத் தன்மனைவி சொல்வதைக் கேட்டு, மிக்க ஆச்சரியமடைந்தான். வாசகர்களுக்குப் பார்த்தன் தன் மனைவியை ஒரடியாவது அடிக்கவில்லை என்றும், அவள் சொன்னதெல்லாம் அபத்தமென்றும் நன்றாய்த்தெரியும். ஆனால் அங்கு கூடியவர்கள் பார்த்தன் மௌனத்தைக்கண்டு இவன் குற்றவாளியாதலால் தான் சும்மாயிருக்கிறான் என்று எண்ணி பெண்ணை அடிப்பவன் பேடியேயென்று அவனைத் தூற்றிப் பழித்தார்கள்.

பார்த்தன் எல்லாவற்றையும் சாவதானமாய்ப் பொறுத்துக் கொண்டிருந்தான். ஆனால் அவன் மனைவி தன் முகத்திலிருக்கும் ரத்தத்தைக்காட்டி அவன் கொடுமையினால் யேற்பட்டது இது என்று சொல்வதைக் கேட்க மனம் பொறுதவனாய், அவளால் தனக்கு உண்டாக்கப்பட்ட ரத்தமே அதுவென்று வாதித்தான்.

இதைக்கேட்ட ஸ்திரீகள் இந்த ரத்தம் உன் குடலிலிருந்து வராமல் உன் முகத்திலிருந்து வருகிறதே உனக்கு அதிர்ஷ்டம். எங்கள் புருடர்கள் எங்களை அடிக்கக் கை தூக்கினால் அவர்கள் இருதயத்தின் ரத்தத்தை வெளிப்படுத்துவோம் என்றார்கள்.

பார்த்தனை அவனுடைய நடத்தைக்காகத் திட்டியும், இனி மேல் சரியாக நடக்கும்படி அவனுக்கு புத்தி சொல்லியும், இந்த

ஸ்திரீகள் வெளிப்பட்டார்கள். பிறகு புருஷனும் பெண்சாதியும் தனியாக சம்வாதித்துக்கொண்டிருந்த போது பார்த்தன் தான் அனுபவித்த கஷ்டங்களுக்குக் காரணம் இன்னதென்ன அறிந்து கொண்டான்.

5. அத்தியாயம்.

அறஞ் சொல்லு நெஞ்சத்தானன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப்படும்.

இரகசியம் என்பது ஒருவருக்கு மாத்திரம் தெரிந்த விஷயமன்று. அதிலும் மேலதிகாரத்தில் சொன்ன விஷயம் அந்த ஊரைத்தாண்டி வெகு சீக்கிரத்திலேயே புறவூர்களுக்கும் பரவியது. சிலவிடத்தில் உபாத்தியாயர் தன் மனைவியைக் கொன்று விட்டதாய்ப் புரளி செய்துவிட்டார்கள். சிலவிடத்தில் அவளுடைய காலை வெட்டி விட்டதாயும், இன்னும் சில விடங்களில் உயிர்ப்பிராணிக்கிச் செய்யக் கூடிய சித்தர வதைகள் செய்துவிட்டதாயும் வதந்தி உலாவியது. இப்படியே இச்சண்டைக்குக் காரணமும் பலவாறுகக் கூறினர்கள். சிலர் பார்த்தன் தன் வேலைக்காரியோடு சயனித்திருந்ததை அவன் மனைவி பார்த்து விட்டாள் என்றும், சிலர் தன் மனைவி கள்ள புருஷனோடு குலாவியதைப் பார்த்தன் கண்டுவிட்டான் என்றும் சொல்லிக் கொண்டார்கள்.

இந்த சங்கதி தேவவிருதை காதிலும் எட்டி விட்டது. ஆனால் உண்மை அவளுக்குத் தெரியாததினால் கொஞ்சநாள் சும்மா விருந்தாள். பார்த்தன் மனைவி ஆளவந்தார் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்தபொழுது ஒருதினம் தேவவிருதையுடன் சண்டை போட்டிருந்தாள். அது தேவவிருதை மனதில் இப்போதும் உருத்திக்கொண்டிருந்தது.

தேவவிருதையோ தீர்க்கதரிசினி. அவளுக்குப் படைத்தலைவன் கொஞ்சகாலத்தில் தனக்கு எஜமானனுவானென்று நன்றாகத் தெரியும். ஆளவந்தார் அன்புடன் ஆதரித்துவந்த அனுதைக் குழந்தையிடம் படைத்தலைவனுக்கு அசூயை உண்டாகி ஆளவந்தாருக்கு எதிரிலேயே அதை வெறுத்து வந்தான் என்பது அவளுக்குத் தெரியும். ஆதலால் ஆளவந்தாருக்குக் குழந்தைமேலிருந்த பக்ஷித்தை கூனிக்கச் செய்யும்படியாக ஒரு சூழ்ச்சி செய்தால், அதனால் படைத்தலைவன் தன்னை நிரம்ப விரும்புவான் என்று தேவவிருதை கண்டுகொண்டாள்.

இப்பொழுது பார்த்தன் கதையின் உண்மையை யறிந்த தேவவிருதை அக்கதை கடந்து வெகுகாலானபோதிலும், விஷயங்களை எல்லாவற்றையும் நிதானித்து அந்த சோரபயிஷ்ணுவின்

தந்தையைத் தான் கண்டு பிடித்துவிட்டதாகவும், அக்குழந்தையின் மேல் பக்ஷமாயிருந்ததற்காக ஆளவந்தாருடைய கௌரவம் குறைந்துபோய்விட்டதென்றும், படைத்தலைவனிடம்சொன்னாள். இதைக்கேட்ட படைத்தலைவன் எஜமானனைப்பற்றிக் குறைகூறியதற்கு தேவிருதையை வெளிக்குக் கடிந்து மனதிற்குள்ளேயே தான் அறிந்த ரகசியத்திற்குக் களிப்படைந்து அதை சமயத்தில் பிரயோகிக்கலாம் என்றிருந்தான். மறுமுறுவழியாக ஆளவந்தார் இந்த சமாசாரத்தைக் கேள்விப்பட்டிடுமென்று படைத்தலைவன் வெகுநாள் வரையில் சும்மாவிருந்தான். தேவிருதையோ படைத்தலைவன் தன்னைக் கடிந்ததற்காகவோ, அல்லது அவன் தந்திரத்தை அறிந்துகொண்டு அவரென்னத்தை நிஷ்பிரயோஜனமாக்கவோ, அவளும் சும்மாவிருந்துவிட்டாள். தன் வம்புக் குணத்திற்காக ஆளவந்தார் தன்னைக் கோபிப்பார் என்று அவளுக்குத் தெரியும்போலும்.

இரகசியங்களைப் பெண்கள் புருஷர்களிடம் சொல்வதைவிடத் தங்களினத்தாரிடம் சொல்வது சகஜம். ஆனால் தேவிருதை பிருந்தாவிடத்தில் தான் கண்டு பிடித்த விஷயத்தைச் சொல்லாதிருந்ததற்கு ஏதோ விசேஷ மிருந்திருக்கவேண்டும். இப்பொழுது அவ்விருவருக்கும் முன்போல் ஒற்றுமைகிடையாது. இது தேவிருதை அந்தைக் குழந்தையிடம் அதிக மரியாதையாக இருப்பதைக்கண்டு பிருந்தா அசூயைப்பட்டதாலிருக்கலாம். அல்லது பிருந்தா படைத்தலைவனுடைய அன்புக்கு உரியவளாகும் பொருட்டு அச்சோரக்குழந்தையைக் கடிந்து பேசும் பொழுதெல்லாம் தேவிருதை ஆனவந்தாரிடம் குழந்தையை மெச்சிப் பேசினதினால் இருக்கலாம். தேவிருதையின் தந்திரத்தைக் கண்டுகொண்டு அவளை பிருந்தாபகைத்தலாகுள். அவளை வேலையிலிருந்து தள்ளுவதற்கில்லாமற் போனபோதிலும் அவளை வேண்டியமட்டும் இம்சைப்படுத்திவந்தாள். இதைப் பொறுக்காது தேவிருதை வெளிப்படையாக வேதாமோதரனை மதித்து அவனிடம் பக்ஷம் பாராட்டி வந்தாள்.

வேறு வழியாக ஆளவந்தார்காதில் சங்கதி எட்டாது என்று கண்டு, படைத்தலைவன்தானே அவரிடம் வரலாற்றைத் தெரிவிக்கத் தீர்மானித்தான்.

ஒருநாள் ஆளவந்தாரோடு படைத்தலைவன் ஈகையைப் பற்றி சம்பாஷித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது படைத்தலைவன் "சாஸ்திரத்தில் எங்கும் ஈகை எனபதற்கு தயாளம் என்கிற பொருளு கிடையாது. பல மதங்களிலும் ஈகையைப்பற்றி பலவாறு கியாக்கியானம் வற்புறுத்திய போதிலும், நமது ஆரிய மதத

தில் சொல்லப்பட்டிருக்கிற ஈகைக்கும் மற்ற மதத்தார் அறிந்திருக்கும் ஈகைக்கும் வெகு வித்தியாசமுண்டு. அவர்களும் ஈகையை சன்மார்க்கனுக்கு இன்றியமையாக் குணமாகக்கொள்ளினும், ஆரியமதத்தில் பரிசுத்தம், மேன்மை, தேஜஸ் இவைகளைப்பற்றி விஸ்தரித்து உரைத்திருப்பதுபோல் வேறு எம்மதத்திலுங்கிடையாது. சாஸ்திரக்காரர்கள் தானமென்பதற்கு நம்மைப்போன்ற ஆத்மாக்களின் குறையை அறிந்து அவர்களிடம் தயைகூர்ந்து மனதில் கல்மிஷமின்றியிடும் தர்மமென்பார்கள். நமக்கு இருக்கும் செல்வமனைத்தையும் ஈந்தாலும் அது சிலபேர்களுக்கன்றி பலருக்கும் உபயோகப்படாது. அக்கொடையினும் சிறந்தது தருமமாகும். இந்த தர்மம் மானிடராசி யனைத்திற்கும் பங்கிடக்கூடியது.

ஆசாரியருடைய சிஷ்யர்கள் எல்லாம் பரம தரித்திரர்கள் தானே. அவர்களுக்கு ஆசாரியர் உபதேசித்தது "தர்மஞ் செய்யுங்கள்" என்கிற வாக்கியத்துக்கு "பிச்சையிடுங்கள்" என்று பொருள் கொள்வது சரியாகுமே? சொன்னதைச் செய்ய சிஷ்யர்கள் சக்தியற்றவர்கள் என்று தெரிந்த ஜகத்குரு அப்பொருளையெண்ணித்தான் உபதேசம் செய்வாரா? ஆதலால் தருமத்திற்கு கொடை அல்லது பிச்சை என்பதுபொருள் அல்ல எனமேற்படவில்லையா?

தயாள செய்கையினல் புண்ணியம் கிடைக்கும் என்பதை நான் நம்பாவிட்டாலும் நன்மனதோடு செய்பவன் தன் செய்கையினல் மிக்க சந்தோஷ மடைவான் என்று நான் ஒப்புக்கொள்கிறேன்; ஆனல் நாம் நன்மன துடையவராயிருப்பதைக் கண்டு நம்முடைய பரிவுக்கு அபாத்திரர்க ளானவர்கள் நம்மை ஏமாற்றி நம்மிடத்தி லிருந்தும் பல சௌகரியங்களை அடைகிறார்கள். உதாரணமாக, தாங்கள் வரம்பின்றி நன்மை செய்துவந்த பார்த்தன் தங்கள் உபகாரச் செய்கைக்குப் பாத்திரனல்லன். இப்படிப்பட்ட இரண்டு மூன்று பேர்களுக்கு உபகாரம் செய்தால் எவ்வளவு நல்மனதுடைய உபகாரிக்கும் அதிருப்தி யுண்டாகாமல் எப்படியிருக்கும்? அயோக்கியருக்கும் பாபிகளுக்கும் நன்மைசெய்து தனக்கு எங்கே பாபம் சம்பவித்துவிடப் போகிறதோ என்று யாரிடமுமே பரிவுகாட்ட அவ்வுபகாரி தயங்குவான். ஏனெனில் நாம் நல்ல எண்ணத்துடன் அயோக்கியன் என்று அறியாதிருக்கும்போது உபகாரம் செய்தாலும், அப் பெருங்குற்றம் நம்மை எப்பொழுதும் பாதிக்கும். ஆதலால் உபகாரம்செய்ய ஆரம்பிப்பதற்கு முன் ஒருவனுடைய நடவடிக்கையைப் பற்றி நீர விசாரித்து சந்தேகம் தெளியவேண்டும். அனேக பெரியோர்களும் பக்தர்களும் இப்படியே செய்திருக்கிறார்கள்" என்றார்.

ஆளவந்தார், "உம்மோடு சமஸ்கிருத பாஷையில் பேசத்தகாதாகையால் அதில் தருமம் என்பதற்கு என்னபொருள் கொடுத்திருக்கிறதென்று சொல்வதற்கில்லை. ஆனால் தருமத்தைச் செய்கையினால் காண்பிக்க வேண்டுமென்றும், கொடை என்பது தருமத்தின் ஓர் பாகமே என்றும் என் அபிப்பிராயம். நீர் சொன்னதுபோல் அபாத்திரர்களுக்குப் பிச்சை யிடுவதில் புண்ணியமில்லைதான். ஆனால் ஒருவன் செய்யவேண்டிய கடமையைச் செய்வதில் அதனால் பின்னால் கிடைக்கும் பலனை உத்தேசிக்கக்கூடாது. சாஸ்திர முழுவதிலும் திருப்பித் திருப்பி இதையே சொல்லுகிறது. ஆரிய மதமேயன்றி மானிட வியற்கையும் உபகாரத்தையே மேலாகக்கருதி அதைச் செய்யும்படி வற்புறுத்துவதால் பலனை விரும்பாது தானஞ் செய்தவர்க்கு அதுவே இன்பத்தை யளிக்கும்.

உண்மையை உரைக்கப்போனால், தயாளம் அல்லது தருமத்தின் ஒரு அம்சம் மிகச் சிறந்த சாகையால் அதினால் புண்ணியம் லபிப்பதாகத் தெரிகிறது. நமக்கு அவசியமாக வேண்டியிருப்பதையும் பிறர் துயரங்கண்டு பச்சாதாபத்தினாலும், ஆரிய மதக் காருண்யத்தினாலும், பிறருக்கு அளிப்பதே மேலான புண்யம்; நமக்கு வேண்டாததை பிறர்க்கீந்து ஒத்தாசை செய்வதும் நாம் கஷ்டப்பட்டு உதவி செய்யாமல் நமக்கிருக்கும் பெருந் திரவியத்தைக்கொண்டு செலவு செய்வதும், நம் வீட்டில் அழகுக்காக உயர்ந்த படமொன்று வாங்கித் தொங்கவிடும் பணத்தைக்கொண்டு பல குடும்பங்களை ரக்ஷிப்பதும், இன்னும் நமக்கு ஆவசிகமில்லாத சுகங்களைத் துறந்து அப்பொருளால் அயலாருக்குதவுதலும், இவை எல்லாம் மானிடரனைவரும் செய்யவேண்டிய கடமையே. இக் கடமையைப் பற்றிதான் ஆரியமதமும் பிரபலமாகச் சொல்லுகிறது. இவையனைத்தும் செய்வது அதிசயமன்று. இவை பெருந் தனிக்காரனும் சுயநலம் பாராட்டுபவனும் செய்யத்தக்கனவே. பெருந் தனிக்காரன் ஒரு வாய்க்குப் பதிலாக பல வாய்களிருந்தால் இன்னும் அதிகமாகப் புசிக்கலாமே என்று நினைப்பான். அப்படியே ஔதாரியின் உபகாரத்தினால் பலபேர்கள் பிழைக்கிறார்கள். சுய நலம் பாராட்டுபவன் தனக்குக் கீர்த்திவரும் வழியை எதிர் நோக்குவான். அப்படியே இவனுடைய உதார குணத்தைப் பலபேர்கள் மெச்சக் கேட்டு சந்தோஷப்படுவான்.

அனேகம் பேர்கள் அபாத்திரர்களாக இருப்பதால் தானிடும் பிச்சை தகாதவர்களிடம் சேரப்போகிறதே என்று பயந்து ஒரு யோக்கியன் பிச்சையிடாதிரான். சிலபேர் கிருதக்ஞையற்றவர்களாக விருப்பதைக் கண்டு தன்னைப்போன்ற மனுஷர்களைக் கஷ்டத்தினின்றும் கரையேற்றாமல் கடின சித்தமாயிருப்பவன் உதார

குணமுள்ளவனல்லன். இவ்வுலகத்தில் புல்லியகயவன் வார்த்தை யைக் கேட்டேயல்லாமல் ஒருவனும் தர்மத்தைக் கைவிடமாட் டான். இப்படிப்பட்டவன் நாஸ்திகனுகவாவது அகங்காரியாக வாவதிருக்கவேண்டும். சில பாபிகள் இருப்பதினுலே உலகமே கெட்டது என்று நீர்மானிப்பது சுத்த பிசகு".

இப்படிச்சொல்லி ஆளவந்தார் தலைவனைப்பார்த்து நீர் "தகா தவன்" என்று சொன்ன பார்த்தன் யார் என்றார். படைத்தலை வன் - நாளிதனுகவும் உபாத்தியாயராகவுமிருக்கும் பார்த்தன்தான். தங்கள் படுக்கையில் கண்டெடுத்த குழந்தையின் தகப்பனை பார் த்தன்.

இதைக்கேட்ட ஆளவந்தாருக்கு மெத்த ஆச்சரியமுண்டா கிற்று. இந்த விஷயம் இன்னும் ஆளவந்தாருக்குத் தெரியாதிருந் ததைப்பற்றிப் படைத்தலைவனுக்கு மதிகலியப்புண்டாகிவிட்டது. தானிதை ஒரு மாதத்திற்கு முன்னலேயே அறிந்திருந்ததாகவும், ஆனல் சொன்னவர் இன்னர் என்று ஞாபக மில்லாததைப்போல வும் பாவனை செய்து, சிலநேரம் யோஜித்துக் கடைசியில் தேவ விருதை தான் சொன்னுள் என்னர்.

உடனே தேவவிருதை தருவிக்கப்பட்டாள். அவள் படைத் தலைவர் சொன்னவை எல்லாம் தானும் கேள்விப்பட்டதாய் உரை த்ததால், உடனே பார்த்தன் இருந்த ஊருக்குப்போய் சமாசாரத் தை எல்லாம் நேரில் அறிந்து வரும்படியாக தேவவிதை அனுப் பப்பட்டாள். படைத்தலைவர் பார்த்தனின் அண்டை வீட்டுக்கார னிடமிருந்து சங்கதியின் உண்மையெல்லாம் அறிந்துகொண்டிருந் தார். ஆனல் அதை ஆளவந்தாரிடம் சொல்லாமல், அவசரமாக ஒரு விஷயமும் செய்யக்கூடாதென்றும், அதிலும் ஒருவர்மேல் பழிசுமத்துங்காலையில் வெகு ஜாக்கிரதையாக இருக்கவேணுமென் றும், உண்மையில் பார்த்தன் குற்றவாளி என்று ஏற்படு முன் அவனைப்பற்றியாவது அவன் குழந்தையைப் பற்றியாவது ஒரு கெட்ட அபிப்பிராயமுங் கொள்ளக்கூடாதென்றும், ஆளவந் தாருக்கு உபதேசித்தான்.

6. அத்தியாயம்.

ஓர்ந்துகண் ணேடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை.

தேசமெல்லாம் பரவி வம்புக்குக் காரணமாகிய பார்த்தன் கதையை ஆளவந்தார் இதுவரையில் அறியாதிருந்தார் என்பதை நமது வாசகர்கள் கேட்க வியப்படைவார்கள். இதற்குக் காரணம் ஆளவந்தார் எப்படி பிறர் குறையை நன்கறிந்து அவர் தம் சங்

கடத்தைத் தீர்ப்பதே கவலையாக இருந்தாரோ அப்படியே அவர் கள்மேல் சொல்லும் கோள்குறள்களுக்குக் காதுகொடாமலும் அவர்கள்மேல் எப்பொழுதும் கருணை பாராட்டியுமிருந்து வந்தார். ஆகையினல் தான் அவரிடம் வம்புப்பேச்சு எட்டுகிறதில்லை. ஒருவன் குணத்தை அறியவேண்டுமானல் அவனுடைய சினேகிதர்களின் தன்மையைக்கொண்டு தெரிந்துகொள்ளலாம். அப்படியே ஒரு பெரிய மனிதனுடைய பந்தியில் உட்கார்ந்து சாப்பிட்டால் அவருடைய தேவபக்தி, ராஜபயம், ருசி, தன்மை, இவையனைத்தையும் அறிந்துவிடலாம். அவரைச் சூழ்ந்திருப்போர்கள் அவர் முன்னிருக்கையில் அவர் தம் கொள்கைக் ஙிணங்கத் தங்களப்பிராயத்தையும் மாற்றிக்கொள்வார்கள்.

தேவவிருதை தன் எஜமானன் கட்டளையைத் தலைமேற்கொண்டு 15 மைலுக்கப்பாலுள்ள பார்த்தன் ஊருக்குச்சென்று வெகு சுறுசுறுப்பாய் விசாரணையை முடித்து, ஆளவந்தார் முன் வந்து பார்த்தன் குற்றவாளியே என்று நிரூபித்துவிட்டாள். ஆளவந்தார் இதைக்கேட்டு, குற்றவாளியைத் தருவித்து அவனைத்தானே நேராக விசாரிப்பதாய்த் தீர்மானித்தார்.

குறித்த வேளையில் பார்த்தனும் அவன் மனைவியும் தேவவிருதையும் ஆளவந்தார் மாளிகையின் முன் வந்து சேர்ந்தார்கள். ஆளவந்தார் நியாயவிசாரணை மேடை வந்து உட்கார்ந்ததும் பார்த்தன் அவருக்கு முன்னல் தருவிக்கப்பட்டான். தேவவிருதை அவன்மேல் சுமத்தப்பட்ட குற்றங்களை யெல்லாம் விவரித்தாள். பிறகு பார்த்தன் மனைவி விசாரிக்கப்பட்டாள். அவள் தன் புருஷனுக்கு விரோதமாகத் தான் உண்மை உரைக்கவேண்டியிருப்பதற்காகத் தன்னை மன்னிக்கும்படி பிரார்த்தித்து, பிறகு வாசகர்களுக்கு முன்னமேயே சொல்லியிருந்த சமாசார மூழுவதையும் சொல்லிக் கடைசியில் தன் புருஷன் தன் குற்றத்தை தன்னிடம் ஒப்புக் கொண்டதாகவும் சொல்லி முடித்தாள்.

பார்த்தன் செய்த குற்றத்துக்காக அவனை அவன் மனைவி மன்னித்துவிட்டாளோ என்னவோ; ஆனல் இந்த வழக்கில் கொஞ்சங்கூட இஷ்டமில்லாது சாக்ஷி சொல்ல வந்தாள் என்பது நிச்சயம். ஏனெனில், தேவவிருதை அவள் வீட்டுக்குப்போய் அவரிடமிருந்து சகல விஷயங்களையும் முதலில் கிரகித்துக்கொண்ட பிறகு, அவையனைத்தையும் விசாரணையில் சொல்லிவிட்டால் குலத்துக்கு ஈனம் வருமென்பதாகப் பார்த்தனை நிஷ்டிப்பதில்லை என்று வாக்குக் கொடுத்திருந்தாள். ஆகையாற்றான் பார்த்தன் மனைவி அவன் சொல்லியதுபோல் வாக்குமூலம் கொடுத்தாள்.

தான் நிரபராதி யென்று பார்த்தன் திரும்பத் திரும்பப் பிடிவாதமாய்ச் சொன்னன். தான் தன் மனையாளிடம் குற்றவாளி

என்று ஒப்புக்கொண்ட துண்டென்றும், அப்படி ஒப்புக் கொள்ளுகிற வரையில் தன்னைத் தன் மனைவி உபத்திரவம் செய்துவந்ததால்தான் அப்படிச் செய்யவேண்டி வந்ததென்றும் சொன்னான்.

இதைக் கேட்ட பார்த்தன் மனைவிக்கு அடங்காக்கோபமுண்டாயிற்று. அக்கோபத்தை வேறுவழியாகக் காட்டுவதற்கில்லாது கண்ணீராகப் பெருக்கினாள். பிறகு ஆளவந்தாரை நோக்கி "பிரபுவே, அந்த அயோக்கியனால் தீங்கிழைக்கப்பட்ட என்னைப்போலொத்த எளிய ஸ்திரீ வேறொருத்தி கிடையாது. எனக்கு இவன் வஞ்சகம் செய்தது இது முதல் தடவையன்று. இவன் எத்தனையோ தடவை துன்மார்க்கம் செய்திருக்கிறான். குடியனாயிருந்தாலும், காரியத்தைக் கருதாதவனாயிருந்தாலும், எனக்கு அக்கரையில்லை. அன்றியும் துன்மார்க்கத்தை என் கண்ணுக்குத் தெரியாது என் வீட்டுக்கு வெளியே செய்திருந்தாலும் நான் அதைப் பாராட்டி இருக்கமாட்டேன். என் வீட்டிலே என் படுக்கையிலேயே என் வேலைக்காரியோடு துன்மார்க்கம் செய்த இவனை எப்படி சகிப்பது? அடாபாதகா! என் வீட்டிலேயே துன்மார்க்கம் செய்துவிட்டு உன்னைப் பயமுறுத்தி குற்றத்தை ஒப்புக்கொள்ளச் சொன்னேன் என்று என் மீதில் அபாண்டமாகச் சொல்லுகிறாயா? பிரபுவே நான் இவனைப் பயமுறுத்துகிறவளாகத் தோன்றுகிறேனா? இவன் எனக்குச் செய்த கொடுமையின் தழும்புகள் என் தேகத்தில் இருந்து இன்னும் மாறவில்லை. அடா கயவா! நீ ஒரு மனுஷனாயிருந்தால் இம்மாதிரி ஒரு ஸ்திரீயை வதைசெய்வாயா? ஆனால் நீ ஆண்பிள்ளையல்லவென்று உனக்கே தெரியும். நீ குடும்பத்தில் கணவனாயிருப்பதற்கு தகுந்தவனா? நீ வேசைகளை விட்டு ஓடி அலைபவனல்லவோ? பிரபுவே! இவன் என் கோபத்தை இப்படிக் கிளறியதால் இவனும் ஜானகியும் ஒரே படுக்கையில் இருக்க என் கண்ணால் நானே கண்டேன் என்று சத்தியம் செய்வேன். இவன் துன்மார்க்கம் செய்ததற்காகநான் சாந்தமாகக் கடிந்ததற்காக என்னை மூர்ச்சை போகும்படிப் புடைத்து என் நெற்றியினின்றும் ரத்தம் பெருகச் செய்ததை அதற்குள் மறந்துவிட்டானே! ஆனால் என் அண்டை வீட்டுக்காரர் எல்லாம் அதை ரூபிப்பார்கள்" என்றாள்.

ஆளவந்தார் அவளைத்தடுத்து சமாதானமாயிருக்கச்சொல்லி அவனுக்கு நியாய மளிப்பதாக வாக்களித்தார். மனைவி சொன்னதைக்கேட்டு திகிலடைந்த பார்த்தனைப் பார்த்து ஆளவந்தார் இவ்வுலகத்தில் இப்படிப்பட்ட அயோக்கியனை நான் காண நேரிட்டதற்காக வருந்துகிறேன் என்று சொன்னார். அவன் மெய்யும் பொய்யுமாக மாறிமாறிச் சொன்னது அவன் குற்றத்தை அதிகப்படுத்திற்று என்றும், குற்றத்தை ஒப்புக்கொண்டு அதற்காக வருத்துகிறதே அவன் செய்யக் கூடிய பரிகாரமென்றும், அவன்

சொந்த மனைவி கூட அவனுக்கு விரோதமாக சாக்ஷி சொல்லி விட்டதால் அவன் குற்றம் நன்றாக ருசுவாகி விட்டதென்றும், இனிமேலாவது குற்றத்தைப் பிடிவாதமாய் மறுக்காமல் ஆதியோடந்தமாக ஒப்புக்கொண்டு விடுவதே நல்லதென்றும், அவர் புத்தி மதி கூறினர்.

தன்னைப் பேசும்படியாக உத்திரவு அளிக்கும் வரையில் பார்த்தன் கொஞ்சநேரம் சும்மா யிருந்துவிட்டுப் பிறகு "நான் உண்மையே யன்றி வேறு ஒன்றும் பேசவில்லை. கடவுளறிய நான் சொன்னதெல்லாம் சத்தியமே; ஜானகியை அழைப்பித்தால் நான் சொன்னது உண்மை என்று ஏற்படும்" என்று சொன்னான். அவனுக்கு ஜானகி அந்த வூரைவிட்டு அப்பால் போன விஷயம் தெரியாது.

ஆளவந்தார் நியாயம் சரிவரச் செய்யவேணுமென்கிற எண்ணங் கொண்டவராதலாலும், நிதானதுனை முடையவராதலாலும், பிரதிவாதிகள் அழைக்கும் சாக்ஷிகள் ஒவ்வொருவரையும் மிக்க பொறுமையோடு விசாரிப்பார் ஆதலால் பார்த்தன் சொல்லியதைக் கேட்டதும், உடனே ஜானகியை அழைத்துவர ஒரு ஆளை அனுப்பி விட்டு, அவள் வரும் வரையில் இந்த வழக்கில் ஒரு தீர்ப்பும் சொல்லுகிறதில்லை என்றார். பிறகு பார்த்தனையும் அவன் மனைவியையும் ஒத்திருக்கும் படியாக புத்தி சொல்லி ஜானகி ஒரு நான் பயணத்துக்கு அப்பாலிருந்ததால் மூன்று நாட்கழித்து பார்த்தனும் அவன் மனைவியும் தனக்குமுன் வரும்படியாக உத்திரவு செய்தார். குறித்த தவணையில் சாக்ஷிக்காரர் எல்லாம் திரும்பவும் வந்து கூடினார்கள். அப்பொழுது தூதன் வந்து ஜானகி யகப்படவில்லை என்றும், கொஞ்சகாலத்துக்கு முன்தான் அவளிருந்த இடத்திலிருந்தும் வெளியேறினாள் என்றும் சொன்னான்.

ஆளவந்தார் - ஜானகியைப்போல கெட்டுப் போனவளின் சாக்ஷி பிரயோஜனப் படாது. ஆனால் அவள் வந்திருந்து உண்மையைச் சொல்லியிருந்தால் பார்த்தன் துன்மார்க்கம் செய்த போது அவன் மனைவி கண்டு பிடித்தும் அவன் குற்றத்தை ஒப்புக்கொண்ட விஷயமும் இன்னும் பல சங்கதிகளும் சேர்ந்து பார்த்தன் குற்றவாளி என்பதை அவன் வாயிலிருந்தே வரவழைத்து விடமுடியும் என்று சொல்லி, திரும்பவும் பார்த்தனை குற்றத்தை ஒப்புக்கொண்டு விடும்படி வேண்டினார். திரும்பவும் பார்த்தன் நிரபராதி என்று வாதித்தான். கடைசியில் ஆளவந்தார் பார்த்தன் குற்றவாளி என்பது தனக்கு நன்றாய் ஏற்பட்டு விட்டது என்றும், இனிமேல் தான் அவனுக்கு யாதொரு உபகாரமும் செய்யப் போகிற தில்லை யாதலால், தன் வருஷாந்தர வெகுமானத்தை நிறுத்தி விடப்போவதாயும் சொல்லி பார்த்தனை நோக்கி,

"அடா பார்த்தா, பரலோகத்துக்குப் பயந்தாவது செய்த குற்றத்துக்காக பச்சாதாபப் படவேண்டும். உன்னையும் உன மனைவியையும் காப்பாற்றுவதற்கு இனி மானமாய் தொழில் செய்துவா" என்றும் கூறினர்.

பார்த்தனைப்போல அதிர்ஷ்ட ஹீனன்வேறு ஒருவனுமில்லை. தன் மனைவி சொன்ன சாக்ஷியத்தால் தனக்குக் கிடைத்து வந்த வருஷாந்தர சம்மானத்தை இழந்தான். அன்றியும் ஆளவந்தார் அவளுக்காகக் கொடுத்துவந்த வருட உதவித்திரியத்தை இழந்ததற்கு அவனே காரணமானவனென்று நாள்தோறும் தன் மனைவியால் தூறப்பட்டான் அனைத்தையும் பார்த்தன் கஷ்டகாலத்தால் பொறுத்துக்கொண்டிருக்க வேண்டியதாயிற்று.

பார்த்தன் உண்மையில் குற்றவாளியா அல்லவா என்பது நிச்சயமாய் தீர்மானிக்கப்படும். ஆதலால் வாசகர்கள் அதைப்பற்றி மூர்க்கமாய் ஆவல் கொள்ளக்கூடாது. அவன் குற்றவாளியோ அல்லவோ யாதாயிருந்தாலும் அவனைச் சிக்ஷிக்கும்படியான நேரு ஏற்பட்டுவிட்டது. ஆளவந்தாரல்லது வேறு நியாயாதிபதி விசாரித்து இருப்பாராகில் இவ்வளவு சாட்சியம் கூடவின்றி, அவனுக்கு சிட்சை விதித்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை. பார்த்தன் மனைவி எவ்வளவு சத்தியம் செய்து தன்புருஷன் குற்றவாளி என்று சொன்னபோதிலும், உபாத்தியாயர் உண்மையில் நிரபராதியாகவே யிருக்கலாம். ஜானகி பார்த்தனிருந்த ஊரைவிட்டு வெளியேறினதற்கும் அவள் மகவு பெற்ற காலத்தையும் கணக்கிட்டுப் பார்த்தால், பார்த்தனிருந்த ஊரிற்றான் கருத்தரித்திருக்க வேண்டுமென்று ஏற்படுகின்றது. அதைக்கொண்டு பார்த்தன் தான் அச்சிசுவுக்குத் தந்தை என்று சொல்லிவிடலமா? ஜானகியிருந்த வீட்டிலேயே 18-வயதுள்ள ஒரு வாலிபனிருந்தான். அவர்களிருவருக்கும் சந்தேகத்துக்கு இடங்கொடுக்கும்படியான ஒற்றுமையிருந்தது. ஆனால் தன் புருஷன் மேலிருந்த சம்சயத்தினால் பார்த்தன் மனைவிக்கு ஒருவேளை சிசுவுக்குத் தந்தை அவ்வாலிபனே இருக்கலாமோ வெனகிற எண்ணமுண்டாகாமலே போயிற்று.

ஆளவந்தார் புத்திமதிப்படி பார்த்தன் தன் குற்றத்துக்காக வருந்தினவனுகத் தெரியவில்லை. ஆனால் தேவரிருதை தன்னிடம் சொன்னபிரகாரம் தன்னைப்பற்றி பரிந்து ஆளவந்தாரிடம் பேசாததால், பார்த்தன்மனைவி தான்சொன்ன சாட்சிக்காக மிக்க வருத்தப்பட்டுக்கொண்டிருந்தாள். மிக்க நல்லகுணமுடைய பிருந்தை பார்த்தனிடம் இரக்கங்கொண்டு தன் தமயனிடம் சொல்லி அவனுடைய வருஷாந்திர சம்மானத்தைப் பழையபடி அளிக்கச் செய்வதாக ஒத்துக்கொண்டாள்.

ஆனால் பிருந்தாவின் முயற்சியெல்லாம் பயனில்லாமல் போய்விட்டது. பெருங்குற்றவாளிகளைத் தகுந்த காரணமின்றி மன்னிப்பது சரியல்ல வென்பது ஆளவந்தார் கொள்கை. குற்றம் செய்த விஷயத்தைப்பற்றி கொஞ்சமேனும் சந்தேக மேற்பட்டாலும், அல்லது தகுந்த காரணத்தைக்கொண்டு குற்றஞ் செய்ததாகத் தெரிந்தாலும், அதற்குத்தக்கபடி சிக்ஷையைக் குறைப்பார். ஆனால் குற்றவாளிகளின் வீணான விண்ணப்பங்களும் மற்றவர்கள் அவர்களுக்காகப் பரிந்து பேசுவதும் ஆளவந்தார் மனதைக் கொஞ்சமேனும் மாற்றுது. குற்றவாளியாவது அவர்களுடைய சினேகிதர்களாவது ஒருவனைச் சிட்சிக்கக்கூடாது என்று சொல்வதைக் கேட்டு ஒரு அபராதியையும் மன்னித்துவிடமாட்டார்.

பார்த்தனும் மனைவியும் தங்களுக்கு வந்த கஷ்டத்தைப் பொறுத்திருக்கவேண்டியது அவசியமாயிற்று. வறுமை அவர்களை மெத்த பாடுபடுத்தியது. பார்த்தன் சுபாவத்திலேயே சோம்பேறியானபடியாலும், இப்பொழுது அடைந்தஅபாயரத்தால் மனமுடைந்து போனதாலும், அவன் வைத்திருந்த சிறு பாடசாலையையும் விட்டுவிடவேண்டிவந்தது. அவனும் அவன் மனைவியும் பட்டினியால் சாகவேண்டிய நிலைமைக்கு வந்து சேர்ந்தார்கள். ஆனால் ஒரு தர்மவான் அவர்களிடம் மனமிரங்கி ஆகாரத்திற்கு வேண்டியதைக் கொடுத்துவந்தார்.

இந்த தர்மவான் தானின்னான் என்று அவர்களுக்குக் காட்டிக்கொள்ளாமல் ரகசியமாய் உபகாரத்தைச் செய்துவந்தார் ஆனால் வாசகர்களுக்கு அவர் ஆளவந்தார் தான் என்று ஏற்படும். பாபிகளுக்கு வெளிப்படையாக உதவிசெய்தால் இன்னும் பாபத்தைச் செய்வார்கள் என்னும் எண்ணத்தால், ரகஸியமாக பட்டினியிருந்து சாகாதிருக்கும்படியாக எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு உதவி அவர் செய்துவந்தார். இப்படியிருக்கையில் அதிர்ஷ்டவசத்தால் பார்த்தனுக்கு ஒரு பெரும் தொல்லை நீங்கிற்று. அவன் மனைவி பெரிய அம்மை கண்டு இறந்துவிட்டாள்

ஆளவந்தார்பார்த்தனுக்குச்செய்த நியாயத்தீர்ப்பைக்கேட்டு ஊரார் எல்லாம் திருப்தியடைந்தார்கள். ஆனால் பார்த்தன் சிறமப்படுவதைக்கண்டு அவன் அயலார்கள அவனிடம் பச்சாதாபம் கொண்டார்கள். ஆளவந்தாரைத் தர்மவான என்று சொன்னவர்களெல்லாம் இப்பொழுது அனியாயக்காரரென்றும் பார்த்தனை அவசியமாகக் கொடுமையாகத் தண்டித்தவர் என்றும் கூறலானார்கள். பார்த்தன் மனைவி இறந்ததும், அந்த ஜனங்கள் ஆளவந்தார் செய்த கொடுமையினாலேயே அவள் இறந்தாள் என்று அவரை இன்னும் அதிகமாக வைதார்கள்.

பார்த்தன் இப்பொழுது தன் மனையாளையும் பாடசாலையையும் வருஷாந்தர வருமானத்தையும் இழந்து விட்டபடியாலும், தனக்கு வேறு ரகவியமாக உபகாரம் செய்துவந்தவர் ஏதோ காரணத்தாலோ அவ்வுதவியை நிறுத்திவிட்டபடியாலும், அந்த ஊரிலிருந்து பட்டினியாகச் சாவதிலும் வெளிப்போவது மேலென்று அந்நாட்டை விட்டு அகன்றான்.

7. அத்தியாயம்.

அன்பு மறனு மூடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது.

படைத்தலைவன் பார்த்தனை ஒருவழியாக அப்புறப்படுத்தியபோதிலும், தாமோதரனை விட்டினின்றும் வெளிப்படுத்த மூடியவில்லை. அச்சிசுவின் தந்தையைக் கடிமையாக நடத்திவிட்டோமேயென்று பச்சாதாபப்பட்டு, ஆளவந்தாருக்கு தாமோதரனிடம் நாளுக்குநாள் பக்ஷம் விருத்தியாகிக்கொண்டு வந்தது. இது படைத்தலைவன் மனதைப் புண்படுத்தியது. ஏனெனில், ஆளவந்தார் செய்யும் தர்மமெல்லாம் தனக்குச் சேரவேண்டிய செல்வத்தின் க்ஷீணம் என்று எண்ணினான். இவ்விஷயத்தில் படைத்தலைவனுக்கும் பிருந்தாவுக்கும் ஒற்றுமை இல்லாதிருந்தது. பழகப் பழக எவ்விஷயத்திலுமே இவ்விருவருக்கும் ஒற்றுமை யில்லாதாயிற்று. ரூபத்தைக்கண்டு காதல் கொள்ளுவதிலும் அறிவையுணர்ந்து காதல் கொள்ளுவதே இல்வாழ்க்கையின் இன்பம் என்று சொல்வது உண்மையே யாயினும், இவர்கள் விஷயத்தில் மாத்திரம் அது தவறுகிவிட்டது. இவர்கள் அறிவுணர்வே இவர்களுடைய பல சச்சரவுகளுக்கு ஆதாரமாயிற்று. கடைசியில் பிருந்தா தன் புருஷனை மிக்க இழிவாய் மதிக்கவும் அவன் தன்மனைவியைக் கண்டால் வெறுக்கவும் ஆனார்கள்.

இருவர்களும் பக்தியைப்பற்றியே ஆராயத் தலைப்பட்டவர்களாதலால், அந்த விஷயத்தைபற்றியே இருவருக்கும் சம்வாதம் அடிக்கடி யுண்டாகும். மணவின்பம் சீக்கிரத்திலேயே மாறியது. மனைவியைப் படைத்தலைவன் மூற்றும் வெறுக்கத்தலைப்பட்டான். சம்வாதத்தில் பிருந்தா சொல்வதை எல்லாம் மிக்க கர்வத்தோடுங் கொடுமையோடும் இகழ்ச்சி செய்வான். புதிய அன்பும் ஆதரவும் மாறியதும் இன்பக்களிப்பும் மயக்கமும் தெளிந்து பிருந்தாவுக்கு புத்தி தோன்றியது. படைத்தலைவனின் நடக்கையையும் அசட்டையையும் தன் சமபாஷணையை எல்லாம் அவன் சூ. சே. என்னும் தொனியால் அவமதிப்பதையும் உணர்ந்தாள். இந்த அவமானத்தை அவள் பொறுக்கமுடியாதபோனாள். அவன் அறிவு இவ்வளவுதான் என்று அவனை இழிந்து அவன் ஒரு பெரு மூடனே என்று தீர்மானித்து விட்டாள். ஆனால் படைத

தலைவனுடைய பகையோ வேறுவிதமானது. பெண்கள் அறிவுள்ளவர்களாக விருக்கவில்லை என்று அவனுக்குக் கோபங் கிடையாது. பெண்களை ஆடுமாடுகளைப்போல் உபயோகிக்க வேண்டுமென்பது அவனுடைய அபிப்பிராயம். ஆனால் வீட்டுப்பூனையைக் காட்டிலும் மேன்மையாக அவர்களை வைத்துக்கொள்ள வேண்டுமென்று ஒப்புக்கொள்வான். இப்படிப்பட்ட ஸ்திரீதன்னை இகழ்ந்ததாய்க்கண்ட படைத்தலைவனுடைய கர்வம் எவ்வளவு புண்படாது? முதலில் மதோன்மத்தனைக் காமத்திலழுந்தியிருந்த படைத்தலைவனுக்கு இப்போழுது தன் மனைவியைக் கண்டால் அருவருப்பும் பீதியும் உண்டாகிவிட்டது.

நாம் காதலிக்கிறவர்களைச் சந்தோஷிப்பிக்க எப்படி முயற்சி செய்கிறோமோ அப்படியே பகைக்கிறவர்களைத் துன்புறுத்த பல வழிகளைச் செய்கிறோம். ஆகையினால் ஒரு மனைவி தனக்கு சுகமிராத போனாலும் போகட்டும், தன் புருஷனுடைய சுகத்தைக் கெடுக்கவேண்டுமென்று அசூயை கொள்கிறாள். அப்படியே புருஷனும் தான் பகைக்கும் மனைவிக்கு மேன்மேலும் துயரமுண்டாக்கவேண்டுமென்று கருதி, தன் சொந்தக் காரியத்தையும் பாராமல் விட்டிலேயே அடைத்து கிடைப்பான். இப்படியே வாழ்நாள் முழுதும் சச்சரவிலும் சண்டையிலும் கழித்து, ஒரு மனைவி புருஷன் இறந்ததும் கண்ணீர் ஆறுகப் பெருக்குவாள். அது இனி மேலும் தான் அவனை இம்சிப்பதற்கில்லையே என்று உகுக்கும் கண்ணீர் போலும்.

இப்படிப்பட்ட இன்பந்தான் படைத்தலைவனும் பிருந்தாவும் இப்பொழுது அனுபவித்து வந்தார்கள். ஒருவர் ஒன்று சொன்னால் போதும். அப்பொழுதே மற்றவர் எதிர்மாற்றம் சொல்லாதிரார். ஒருவர் யாரொருவரையாவது பகைத்தாலும் தூறினாலும் போதும். மற்றவர் உடனே அவரை நேசித்துப் புகழ்ந்தும் உரைப்பார். இதற்காவே கண்டெடுத்த குழந்தையைப் படைத்தலைவன் பகைக்கப்போக பிருந்தா அதை எடுத்துச்சீராட்டிப் பாராட்டித் தன் குழந்தையைப்போல் ஆதரித்தாள்.

பிருந்தாவின் மனத்தால் அனைவரும் சௌக்கியப்படலாம் என்றிருந்த ஆளவந்தாருக்கு இவர்களுடைய சச்சரவினால் மகாதுயர மூண்டாகிவிட்டது. அவருக்கு இவர்கள் ஒற்றுமையாகவில்லை என்பது தெரிந்தபோதிலும அவர்களுடைய அந்தரங்கம் தெரியாதிருந்தது. படைத்தலைவன் அவருக்கு முன்னால் மிக்க ஜாக்கிரதையாகவே இருந்துவந்தான். பிருந்தாவும் தன் தமயன் மனவருத்தப்படுவாரே என்று ஒன்றையும் வெளிப்படுத்தாதிருந்தாள். ஒரே வீட்டிலிருந்து கொண்டு பழகினவர்களும் தம்பதிகளுடைய போராட்டத்தையும் விரோதத்தையும் அறிந்துகொள்ள

மூடியாதிருப்பார்கள். மனதிற்குள் ஒருவரை ஒருவர் பகைத்துக் கொண்டபோதிலும், மூன்றும்பேருக்கு முன்னால் தம்பதிகள் அவ் விரோதத்தை மறைத்து ஒற்றுமை யுள்ளவர்கள்போல் வெளிக்குக் காட்டிக்கொள்ளக்கூடும்.

ஆனால் ஆளவந்தாருக்கு மாத்திரம் இவர்களுடைய ஒற்றுமை யின்மையைப்பற்றி வருத்தமுண்டாயிற்று. தான் முன் நினைத்திருந்ததுபோல் படைத்தலைவன் மேன்மை உள்ளவன் அல்லன் என்று அவருக்குத் தெரிந்தது. ஆனால் அவன் மிக்க தந்திரசாலியானதினாலும், அவருக்குமுன் நிற்கும்போது பரம ஜாக்கிரதையாக இருந்துவந்ததினாலும், அவனுடைய குற்றங்கள் எல்லாம் அவருக்குத் தெரியாதுபோயிற்று. இவ்விதமே புருஷனும் மனைவியும் முழுதும் இருந்திருப்பார்களானால், மூடிவு என்னமாயிருக்குமோ நமக்குத்தெரியாது. ஆனால் படைத்தலைவனுக்கு நேர்ந்த ஒரு விஷயம் பிருந்தாவுக்கு அவன் மேல் திரும்பக்காதல் உண்டாகும்படிச் செய்தது. அவள் மனதில் பழயபடி அன்பும் ஆர்வமும் மிகுந்தன.

8. அத்தியாயம்.

அருள் வெஃகி யாற்றின்க ணின்னுன் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும்.

படைத்தலைவன் தன் மனைவியோடு சம்பாஷிப்பது அரிதாகிவிட்டது. அப்படித் தவறிச் சிலநிமிஷங்கள் சம்பாஷிக்க நேர்ந்துவிட்டாலும், பிறகு தனியாய்ச் சென்று இன்பமான ஆலோசனையில் ஆழ்ந்திருப்பான். இந்த ஆலோசனையெல்லாம் ஆளவந்தாரின் ஆஸ்தியைப்பற்றியேதான். முதலில் ஆஸ்தி முழுதும் எவ்வளவு வீலேபோகும் என்று தன்னால் கூடியமட்டும் சரியாகவே மதிப்பிட்டான். இந்த மதிப்பைத் தனக்கு அனுகூலமாகவே உயர்த்தியும் பார்த்தான். பிறகு வீட்டிலும் தோட்டங்களிலும் என்னென்ன மராமத்துகள் செய்யவேணுமென்றும், ஆஸ்தியை இன்ன இன்னவிதமாக விருத்திசெய்யவேணுமென்றும், வீட்டை எவ்விதமாக சிறப்பிக்கவேணுமென்றும் யோசிக்கலானான். இதற்காக சிற்பசாத்திரம், சிருஷிசாஸ்திரம் முதலிய புஸ்தகங்களைப் படிக்க ஆரம்பித்தான். நாள் முழுவதிலும் இப்படிப்பட்ட புஸ்தகங்களைப் படிப்பதிலேயே காலத்தள்ளிவந்தான். கடைசியாக ஒரு சிறந்த பிளானை உத்தேசித்தான். அதை விவரிக்க நம்மாலாகாது. ஏனெனில், அது கற்காலத்துச் சிறப்பினைவிட மேன்பட்டதாயிருந்தது. உலகத்தில் அழியாமலும் உன்னதமாகவும் இருக்கவேண்டியதற்கு முக்கிய உபகரணங்களாகிய இரண்டு வஸ்துக்கள் தன் பிளானை முடிப்பதற்குத் தேவையென்று தீர்மானித்தான். அவை யென்னவென்றால், பெருந் திரவியமும் நீண்ட ஆயி

சுமே. தனக்கே சேரவிருக்கும் ஆளவந்தாரின் ஏராளமான ஆஸ்தியைக்கொண்டும், தான் மத்திம வயதுடையவனாக இருப்பதாலும் தேகக்கட்டும் பலசரீரமும் தனக்கு இருப்பதால் தனக்கு சீக்கிரம் மரணம் வராது என்கிற நம்பிக்கையைக்கொண்டும், தான் எடுத்துக்கொண்ட காரியத்தை முடித்துவிடலாம் என்று அவன் நிச்சயப்படுத்திக்கொண்டான்.

ஆளவந்தார் மரணமடைந்ததும் தன்வேலையைத் தொடங்கிவிடுவதாகத் தீர்மானித்தான். ஜீவசாஸ்திரத்தையும், ஆயுள்வேதத்தையும், ஜோதிஷ சாஸ்திரத்தையும் கொண்டு ஆளவந்தாருக்குக் காலம் எவ்வளவு என்று அறிந்துகொண்டான். இன்னும் சொற்ப வருஷங்களுக்குமேல் அவர் ஜீவித்திராரென்பதையும் நன்கு தெரிந்துகொண்டான்.

இப்படி யோஜனையி லாழ்ந்துகொண் டிருக்கையில், ஒருநாள் அகால விபத்து அவனுக்கு சம்பவித்தது. அவனுடைய ஏற்பாடுகள் எல்லாம் வீணாகும்படியாக விதி அவன்மேல் அசூயைகொண்டு அவனை மிகக்கொடுமையாக நடத்திற்று. ஆளவந்தார் இறந்தபின் தனக்குக் கிடைக்கும் சுகத்தைப்பற்றி எண்ணி மகிழ்ந்திருக்கும்போது, படைத்தலைவன் மாரடைப்பினால் திடீரென்று இறந்து போய்விட்டான்.

சாயங்திரவேளையில் அவன் மாத்திரம் தனியாய் உலாவி வரும்போது அவனுக்கு இப்படிநேர்ந்தது. பக்கத்தில் ஒத்தாசை செய்ய ஒருவருமில்லை. அப்படி யிருந்தபோதிலும் இவன் உயிரைப் பிடித்துக் காப்பாற்ற முடியுமா? ஆகையால் தனக்குச் சேரவேண்டிய ஆஸ்தியில் இதுவேதான் நிச்சயமாய்கிடைத்ததென்று அளக்து சொன்னதுபோல தரையில் நீள விழுந்துவிட்டான்.

9. அத்தியாயம்.

பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியிலும் போகாதம.

குறித்தவேளையில் சாப்பிடுவதற்காக ஆளவந்தாரும் அவர் சகோதரியும் மற்றொரு ஸ்திரீயும் வந்து சேர்ந்தார்கள். படைத்தலைவன் சாப்பாட்டுவேளை நேரம் தவறுது அங்குவந்து சேர்பவன், அன்று வெகுநேரம் வராமையால், ஆளவந்தார் மனதில் அதிரியமுண்டாகி, படைத்தலைவன் வழக்கமாய் உலாவிவரும் பாதையை நோக்கி மணியடிக்கும்படி ஆக்கியாபித்தார்.

ஆனல் அன்றையதினம் படைத்தலைவன் வேறு பாதையில் உலாவினன். ஆதலால் இவர்கள் மணிச்சத்தம் பயன்படாமல் போயிற்று. ஆகவே ஆளவந்தாரே எழுந்து படைத்தலைவனைக்

தேடிச் சென்றார். பிருந்தா மிகுந்த திகிலடைந்தவளானாள். அதைக் கண்ட அவள் பக்கத்திலிருந்த மற்றொரு ஸ்திரீ அவளைப் பலவிதமாக சமாதானப்படுத்தலானாள். "அதைரியப்பட வேண்டியது சகஜமே யாவரும் நன்மையே நேரிடுமென்று நாம் நம்பவேண்டும். ஒருவேளை உன் பர்த்தா அந்திநேரம் அழகாயிருப்பதைக்கண்டு வெகுதூரம் உலாவப் போயிருக்கலாம். இல்லாவிடில் அண்டையில் எங்காவது பேசிக்கொண்டிருக்கலாம்" என்று அந்த ஸ்திரீ சொன்னாள். பிருந்தா அவருக்கு ஏதாவது ஆபத்து தான் நேர்ந்திருக்க வேண்டும். என்னை விட்டு விட்டு ஒரு நாளும் தாமதித்து இருக்கவே மாட்டார். அப்படி இருந்தாலும் எனக்கு எங்கே பயம் உண்டாகப் போகிறதோ என்று எண்ணி சமாசாரம் சொல்லியனுப்பிவிடுவார். இப்பொழுது ஒரு சமாசாரமும் கிடைக்காததால் அவருக்கு என்ன கேர்ந்ததோ என்று என் மனம் பதறுகிறது என்றாள். மற்றவள் வேறொன்றும் பதில் சொல்லத் தெரியாதவளாய், நீ பயந்து அழுதுகொண்டிருந்தால் உன் உடம்புக்குக் கெடுதல் உண்டாகும், பயப்படாதே என்று சொல்லித் தேற்றினாள்.

படைத்தலைவனைத் தேடப்போன ஆளவந்தார் வீடுதிரும்பி வந்தார். அவர் முகம் அவர் மனத்துயரத்தைக் காண்பித்தது. அத்துயரத்தால் அவர் பேசமுடியாமல் மௌனமாக இருந்தார். துயரம்பல பேர்களிடம் பலவிதமாக வெளிப்படுமாகையால், ஆளவந்தார் வாயை அடைத்துக்கொண்டிருந்த துயரம் பிருந்தாவின் குரலை எழுப்பிவிட்டது. கண்களிலிருந்தும் நீரைத் தாரைதாரையாகப் பெருக்கி பிருந்தா ஓவென்று கதறினாள். பக்கத்திலிருந்த ஸ்திரீ "எப்பொழுது மானிடராகப் பிறந்தோமோ அப்பொழுதே கஷ்டத்தோடு பிறந்தோம். தினந்தினம் மனிதர்கள் பல துன்பத்துக்கு ஆளாவதைப் பார்த்திருந்து நாமும் ஒருநாள் அப்படிப்பட்ட துன்பத்திற்கு உள்ளாவோம் என்று எண்ணி சுயநன்மைகளை லக்ஷியம் செய்யாதிருக்கவேண்டும்" என்று வேதாந்தங்களைப் பேசி பிருந்தாவின் துயரத்தை மாற்றப்பார்த்தாள். திரும்பவும் "தெய்வச்செயலை மனிதர் மாற்றக்கூடாதாகையால் அச் செயலுக்கிணங்கி துயரத்தை அடக்கவேண்டும். ஆளவந்தார் மிக்க தெரிந்தவராகையால் அவருக்கு இவ்விஷயத்தில் எவ்வளவு துயரமிருந்தபோதிலும் காட்டிகொள்ளாதிருக்கிறார். அதுபோல் நீயுமிருக்கவேண்டும்" என்று அவள் புத்தி சொன்னாள்.

இந்த சமயத்தில் ஒரு வேலையாள் ஓடிவந்து படைத்தலைவர் அகப்பட்டுவிட்டார்" என்று இரைக்க இரைக்கச் சொன்னான். மேல் சொல்ல ஆரம்பிக்குமுன், இரண்டு வேலைக்காரர் பிரேதத்தை எடுத்துக்கொண்டு ஆளவந்தார் பிருந்தா இவர்களிருந்தவிடம் வந்துவிட்டார்கள்.

வாசகர்காள்! இப்பொழுது துயரத்தின் மாறுதலைக் கவனியுங்கள். ஆளவந்தார் பிரேதத்தைக் கண்டதும் கண்ணீர்ப் பெருக்கினர். பிருந்தாவின் கண்ணீர் நின்றுவிட்டது. ஆனால் அவள் வீறிட்டுக் கதறி மூர்ச்சையானாள். அறை முழுதும் வீட்டுவேலைக்காரர் நிறைந்துவிட்டார்கள். சிலர் வந்திருந்த ஸ்திரீயோடுகூட பிருந்தாவுக்கு உபசாரம் சொன்னார்கள். மற்றவர்கள் படைத்தலைவனை ஒரு படுக்கைக்குக் கொண்டுபோய் உயிர்வரக்கூடிய சிகிச்சை செய்துபார்த்தார்கள்.

கொஞ்சநேரம் மூர்ச்சித்துக் கிடந்த பிருந்தா வேலைக்காரர் செய்த உபசரணையால் உயிர்பெற்றாள். அனைவரும் திருப்தியடைந்தார்கள். ஆனால் படைத்தலைவனுக்கோ எவ்விதச் சிகிச்சையும் பயன் தராதுபோயிற்று. இருவைத்தியர்களைக் கூப்பிட்டுக் தக்க சம்மான மளித்து வைத்தியம் செய்துபார்த்தும் படைத்தலைவன் உயிர்பெறவில்லை.

இந்த இரண்டு வைத்தியர்களுக்கும் ஈயர், சீயர் என்றுபெயர். ஈயர் வலது கையையும் சீயர் இடது கையையும் பிடித்து நாடி பார்த்து, இருவரும் படைத்தலைவன் இறந்துவிட்டதாக ஒத்துக் கொண்டார்கள். ஆனால், சாவின் காரணத்தைப்பற்றி இருவரும் மாறு அபிப்பிராயங் கொண்டார்கள். ஈயர் மாரடைப்புதான் காரணம் என்றும், சீயர் தலைச்சுற்றுதான் காரணம் என்றும் வாதித்தார்கள். இருவருக்கும் கொஞ்சநேரம் தர்க்கம் நடந்தது. ஒவ்வொருவரும் தகுந்தகாரணங்களை எடுத்துக்காட்டினர். ஒருவருக்கொருவர் சம்வாதத்தில் பின் வாங்கவில்லை.

ஒவ்வொரு வைத்தியனுக்கும் ஒவ்வொரு பிரியமான வியாதியுண்டு. எத்தனிதமான சாவும் அவ்வியாதியினால் நேரிட்டதென்றே அவ்வைத்தியன் வாதிப்பான். பாரிசவாயுவு, கூயம், நீரிழிவு ஒவ்வொன்றுக்கும் உரிய வைத்தியர் உண்டு.

வியாதியஸ்தனைப் பிழைப்பிப்பதற்கு வழிதேடாது இப்படி வாதிக்கிறார்களே என்று படிப்போர் ஆச்சரியப்படலாம். இவர்கள் சவத்தண்டை வந்துசேர்வதற்கு முன்னாலேயே, அதற்குப் பிழைக்கும் வழி எல்லாம் அங்கிருந்தவர்கள் செய்தாகிவிட்டது. ஆதலால், வைத்தியர்கள் வந்ததும் தங்களுக்குத் தெரிந்த சிகிச்சை எல்லாம் முன்னாலேயே செய்தாகிவிட்டது என்பதை அறிந்து, தங்கள துசம்மானத்தைப்பெறும்பொருட்டு அங்கேதங்கி இருக்க வேண்டிய காலத்தைக் கழிப்பதற்குச் சரியான வழியாக மேற் சொன்ன சம்வாதத்தை ஆரம்பித்தார்கள்.

வைத்தியர்கள் விடுபோக உத்திரவு கேட்டார்கள். அச்சமயம் ஆளவந்தார் தெய்வச் செயலுக்கினங்கி, தன் மைத்துனனைக்

கைவிட்டுத் தன் தங்கையின் ஸ்திதி எப்படி இருக்கிறதென்று விசாரித்து, வைத்தியர்கள் வீடு திரும்புமுன் அவளைப் போய்ப்பார்த்துப் போகும்படியாக ஆக்கியாபித்தார். பிருந்தாவோ மூர்ச்சையினின்றும் முன்னமேயே எழுந்திருந்தாள். வைத்தியர்களுக்குப் புதுவியாதியஸ்தி கிடைத்ததால் பிரேதத்தை செய்ததுபோலவே இவளையும் இரண்டுபேரும் கை பிடித்துப்பார்த்தார்கள். பிருந்தாவின் தேகஸ்திதி அவள் புருஷன் ஸ்திதிக்கு நேரெதிராக இருந்தது. படைத்தலைவன் இருந்தநிலையில் மருந்து ஒன்றுமே வேண்டாதிருந்ததுபோல், பிருந்தாஸ்திதிக்கும் மருந்து ஒன்றும் வேண்டாதிருந்தது. வைத்தியர்களை யமதர்மராஜாவுக்கு சினேகிதர்கள் என்று சொல்வார்கள். இப்படிச் சொல்வது சுத்த அநியாயம். ஏனெனில், வைத்தியர்கள் ஒத்தாசையால் பிழைத்தவர்களையும் அவர்கள் மருந்து கொடுத்து இறந்தவர்களையும் கணக்கிட்டுப் பார்த்தால், பிழைத்தவர்களே அதிகமாயிருப்பார்கள். சிலர் மருந்து கொடுத்தால் எங்கே வியாதியஸ்தன் இறந்துவிடுவானோ என்று பயந்து சிகிச்சை ஒன்றும் செய்யாமல், இயல்பாகவே சொஸ்தமாகட்டுமென்று சும்மாயிருந்துவிடுவார்கள்.

நமது வைத்தியர்களுக்கு மரணத்தினிடத்தில் அவ்வளவு பிரியமில்லை. ஏனெனில், ஒருவரைச் சாகவடித்தால் அவர்களுக்கு ஒருதடவைதான் சம்மானம் கிடைக்கும். ஆனால் உயிருடனிருக்கும் வியாதியஸ்தியினிடத்திலோ பலதடவை சம்மானம் பெறலாம். பிருந்தாவின் வியாதியை இருவரும் ஒரேவிதமாக அறிந்து கொண்டு மிக்க சாமர்த்தியமாக மருந்து கொடுக்க ஆரம்பித்தார்கள்.

பிருந்தா முதலில் தான் வியாதியாக இருப்பதாக வைத்தியர்கள் தெரிந்துகொள்ளும்படி பாசாங்கு செய்தாள். அவர்களும் பிருந்தா உண்மையில் அசௌக்கியமாக இருப்பதாக எல்லோரும் நம்பும்படி செய்துவிட்டார்கள். ஒருமாத முழுதும் நோயாளிக்கு நடக்கும் உபசரணைகள் பிருந்தாவுக்கும் நடந்தன. அந்த ஒரு மாதமும் வைத்தியர்கள் அடிக்கடி ஆளவந்தார் வீடுவந்துபோனார்கள். தாதிகள் பக்கத்தில் நின்று அவள் குறைகளைக் கவனித்து வந்தார்கள். சினேகிதர்கள் அவள் சௌக்கியத்தை அடிக்கடி விசாரித்துப் போனார்கள். கடைசியில் அசௌக்கியகாலமும் துயரத்தவணையும் கடந்ததால் வைத்தியர்கள் நிறுத்தப்பட்டார்கள். பிருந்தாவும் அபலாரோடு பழக ஆரம்பித்தாள். துயரத்துக்கு அறிகுறியாக தேகத்தையும் முகத்தையும் வாட்டமாக வைத்துக் கொண்டிருந்ததைத் தவிர, பிருந்தாவிடத்தில் வேறு மாறுதல் ஒன்றும் காணப்படவில்லை.

3-வது சம்புடம்.

1. அத்தியாயம்.

தைவிடத் தொல்கா ருரவோர் புதையம்பிற்
பட்டுப் பரேன்றுங் களிறு.

தன் மைத்துனன் இறந்ததால் ஆளவந்தார் அடைந்த துக்கமும் அவர் புலம்பிய புலம்பலும் வாசகர்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. தத்துவமும் சாஸ்திரமும் சேர்ந்து அவர் துயரத்தைத் தணித்துக் கடைசியில் அதை அடக்கி நிவர்த்திசெய்து விட்டது. ஆளவந்தார் கல்விகேள்விகளில் தேர்ந்தவராதலாலும், மிகுந்த தெய்வபக்தி யுடையவராதலாலும், இன்பத்தைக் கண்டு மிக்க சந்தோஷமடையாமலும் துன்பத்தைக் கண்டால் மனமழியாமலும் இருப்பவர். ஆதலால் படைத்தலிவன் இறந்த துயரம் அவருக்கு சிக்கிரத்திலேயே மாறிவிட்டது. பிருந்தாவும் மிக்க நுட்பபுத்தி யுடையவளாகையாலும், உலக வழக்கங்களை எல்லாம் நன்கறிந்தவளாதலாலும், புருஷன் இறந்தபிறகு எவ்வளவு காலம் எப்படி நடந்துகொள்ளவேணுமோ அவ்வளவுகாலம் அவ்விதம் எல்லாம் நடந்துவந்து கடைசியில் தன் பழைய தன்மையை யடைந்துவிட்டாள்.

இப்படிப் பன்னிரண்டுவருஷம் கடந்தது. இடையில் விசேஷமொன்று மில்லாதபடியால், அப் பன்னிரண்டு வருஷத்துக்கப்பால் நடந்ததைச் சொல்லுவாம். இப்பொழுது நமது கதாநாயகனுக்கு வயது பதினைந்து. அவனைப்பற்றிக் கேள்விப்பட நமது வாசகர்களுக்கு ஆவலிருக்குமாதலால் அவனைப்பற்றிக் கொஞ்சம் சொல்வோம்.

அதிசயோக்தி அலங்காரத்தை நாம் உபயோகப்படுத்துவதில்லையாதலாலும், நடந்தது நடந்தபடியே சொல்வது நமது வழக்கமாதலாலும், நமது கதாநாயகனை இழிமையாக வருணிக்கவேண்டியிருக்கிறது. ஆளவந்தார் வீட்டு ஜனங்கள் எல்லாம் அவனைத் தூக்கு மரத்துக்கு இரையாகப் பிறந்தவன் என்று சொல்வார்கள்.

இப்படிப்பட்ட அபிப்பிராயத்திற்குத் தகுந்த காரணங்களுமிருந்தன. இச்சிறுவன் பாலியமுதல் பல தீங்குகளைச்செய்ய ஆரம்பித்தான். இப்படிச் செய்த தீங்குகளுக்கும் தூக்கு மரத்திற்கும் வெகு தூரமில்லை. பையன் மூன்றாவதிலேயே மூன்று கொள்ளை அடித்து அகப்பட்டுக்கொண்டான். ஒரு சிங்காரத்தோட்டத்தில் பழத்தையும், ஒரு குடியானவன் வீட்டினின்று வாத்துகளையும், பிருந்

தாவின் மகன் பிலவங்கன் அங்கிப்பை யினின்றும் பங்கையும் திருடிக் கண்டுபிடிக்கப்பட்டான்.

இவ்வாலிபனின் பிறப்பு இழிவாயிருந்ததால் எல்லோரும் இவன் செய்த குற்றங்களைப் பெரிதாக்கித் தூறினர்கள். அவனுடைய சினேகிதனாகிய பிலவங்கள் உயர் வம்சத்தில் உதித்தவனாகையாலும் சாதுவாகவும் பருத்தறிவுள்ள வனாகவும் மிகத் தெய்வபக்தியுடையவனாகவும் இருந்ததாலும், அவன்விட்டாரேயன்றி, ஊரார் முழுவதும் அவன் பெருமையைக் கொண்டாடினர்கள். இவ்வளவு நற்குணமுடைய பிள்ளையை தஷ்டப் பிள்ளையான தாமோதரனுடன்கூட ஆளவந்தார் படிப்பிக்கிறாரே, அவனுடைய தஷ்ட நடத்தையைப் பிலவங்கனும் அனுசரித்து விடுவானே என்று ஊராரும் பயந்தார்கள்.

இந்த சமயத்தில் நடந்த ஒரு விஷயத்தால் இவ்விருவருடைய குணகுணங்கள் வாசகர்களுக்கு விசிதமாகும்.

தாமோதரன் கெட்டவனாயிருந்தபோதிலும் நமது சரித்திரத்திற்குக் கதாநாயகன் அன்றோ? ஆளவந்தார் குடும்பத்திலுள்ள வேலைக்காரர்களில் எல்லாம் அவனுக்குப் பிரியமான சினேகிதன் ஒருவனுண்டு; அவன் பெயர் சொக்கன். இவன் அவ்வீட்டில் புரு, கோழி, வாத்து, இவைகளை வளர்ப்பவன். இவன் தன்மார்க்கன் என்று பெயர்பெற்றிருந்தான். ஆதலால் இவனோடு தாமோதரன் சேர்ந்துபழகவே வீட்டாரெல்லாம் அவனை இகழ்ச்சியாய்ப் பேசத் தலைப்பட்டார்கள்.

தாமோதரன் செய்த இரண்டு மூன்று திருட்டுகளும் அவன் சினேகிதன் தூண்டுதலால்தானிருக்கவேண்டும். திருட்டில்தாமோதரன் மாத்திரம் அகப்பட்டுக்கொண்டு சொக்கனைக் காட்டிக் கொடாமல் சிக்ஷை முழுவதையும் தானே யேற்றுக்கொண்டான் என்றும் சொல்லிக் கொண்டார்கள.

ஆளவந்தாரின் நிலத்துக் கருகாமையில் முயல், கௌதாரி முதலியவற்றை வைத்து வளர்க்கும் ஒரு பிராசுதாரின் தோட்டமிருந்தது. இந்த பிராசுதார் தன்னுடைய பிராணிகளில் ஒன்றையாவது எவனுவது இம்சை செய்ததாகத் தெரிந்தால், அவனை மிக்க கொடுமையாகச் சிக்ஷிக்கும் தன்மையுள்ளவர்.

தாமோதரன் ஒருநாள் தன் சினேகிதனோடு வேட்டையாட வெளிச் சென்றான். அப்பொழுது ஒரு புதரினின்றும் ஒரு கௌதாரிக்கூட்டம் கிளம்பிப் பறந்து சென்றதைக் கண்டு, இவ்விருவரும் அதைப்பின் தொடர்ந்து சென்றார்கள். அக்கௌதாரிகள் ஆளவந்தார் நிலத்தைக் கடந்து வத்ஸர் என்னும் பிராசுதாரின் தோட்டத்தில் புகுந்தன.

பிறர் நிலத்தில் நிலக்காரர் உத்திரவில்லாமல் காலடி வைக்கக் கூடாதென்றும், அப்படிச்செய்தாய்த் தெரிந்தால், உடனே வீட்டைவிட்டுத் துறத்திவிடுவதாகவும், ஆளவந்தார் தாமோதரனுக்குக் கண்டிப்பாய் உத்திரவிட்டிருந்தார். இருந்தும் இப்பொழுது கைக்குத் தப்பிய வேட்டையைப் பிடித்து விடவேணுமென்று தாமோதரன் ஊர்ஜிதமாய்த் தன் சினேகிதனைக் கெஞ்சிக்கேட்டுக் கொண்டபடியால் இருவரும் கடைசியில் மிராசுதாரின் தோட்டத்துட்புகுந்து ஒரு கௌதாரியைச் சுட்டுவிட்டார்கள்.

தோட்டத்திற் குடையவர் கொஞ்சதூரத்துக்கப்பால் குதிரையின் மேலுட்கார்ந்து கொண்டிருந்தார். வெடி சப்தம் கேட்டதும், அந்தப் பக்கமாய் ஓடிவந்து தாமோதரனைப் பார்த்துவிட்டார். ஆஸ்தல் தாமோதரனும் அவன் சினேகிதனும் வத்ஸரைக் கண்டதும்புதர் அடர்ந்திருந்த இடத்துக்கு ஓடி ஒளிந்துவிட்டார்கள்.

வத்ஸர் புதரிடம் சென்று தாமோதரனைச் சோதனைசெய்து அவன் மடியில் கௌதாரி யிருப்பதைக் கண்டு ஆளவந்தாரிடம் சொல்வதாகப் பயங்காட்டினர். பிறகு நேரே ஆளவந்தார் வீட்டுக்குப்போய், அவரிடம் தன் வீட்டில் கன்னம்வைத்து தன் விலையுயர்ந்த சொத்துக்களைக் கொள்ளை அடித்ததுபோல், தன் தோட்டத்தில் அத்துமீறி தாமோதரன் சென்று கௌதாரி சுட்டவிதத்தை வெகுட்சியுடன் முறையிட்டார். தாமோதரனை யன்றி அவனுடன் கூட வேறுயாரோ இருந்ததாகவும், இரண்டு துப்பாக்கி ஓசைதடவை சுடப்பட்ட சத்தம் கேட்டதாயும், ஆனால் மற்றவன் ஓடிப்போய் விட்டதால் காணப்படவில்லையென்றும் சொல்லி முடித்தார். பிறகு இந்தக் கௌதாரியைத்தான் அவர்கள் சுட்டார்கள். இனனம் என்னென்ன திங்ஙிழைத்தார்களோ தெய்வத்துக்குத்தான் வெளிச்சம் என்று சொல்லி, சுடப்பட்ட கௌதாரியை எடுத்துக்காட்டினர். ஆளவந்தார் தாமோதரன் வீடுவந்ததும் விசாரித்து அவனுக்குத் தகுந்த சிக்ஷை விதிப்பதாக வத்ஸருக்கு சமாதானம் சொல்லியனுப்பினர். வீட்டுக்குவந்ததும் தாமோதரன ஆளவந்தார் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான். விசாரணையில் அவன் நடந்த விஷயத்தையும் ஒப்புக்கொண்டான். ஆனால் கௌதாரிகள் முதலில் ஆளவந்தார் நிலத்திலிருந்து புறப்பட்டதால், அவற்றைச் சுட்டதில் குற்றமில்லை என்று வாதித்தான்.

ஆளவந்தார்—உன் கூட இருந்ததுயார்? அவனை நான் அறிய வேண்டும். வத்ஸரும் அவர் வேலைக்காரர் இருவரும் இரண்டு துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டதாய்ச் சொல்லுகிறார்களே?

தாமோதரன்—நான் மாத்திரம்தான் போனேன். என்னுடன் கூட வேறு யாரும் வரவில்லை.

இப்படிச் சொல்லும்பொது தாமோதரன் தயங்கித் தயங்கிச் சொன்னன். வத்ஸரும் அவருடைய வேலைக்காரரும் சொன்னதில் ஆளவந்தாருக்கு இதற்குமுன் கொஞ்சம் நம்பிக்கையில்லாதிருந்தாலும், தாமோதரன் தயக்கத்தினால் அது நிவர்த்தியாகிவிட்டது. சொக்கன்மேல் யாவருக்கும் சந்தேகமிருந்ததால் அவனை வரவழைத்து, தாமோதரனுடன் போனதுண்டா என்று விசாரித்தார். தாமோதரன் அவனிடம்தானே எல்லாக்குற்றத்தையும் ஒப்புக்கொள்வதாய்ச் சொல்லியிருந்தான். இதையே நம்பி சொக்கன் தனக்கு ஒன்றுமே தெரியாதென்றும், அன்று காலை முதல் தாமோதரனைத் தான் கண்டதேயில்லை என்றும் உறுதி சொல்லிவிட்டான்.

பிறகு ஆளவந்தார் என்றையிலும் அதிகக் கோபத்துடன் தாமோதரனைப்பார்த்து, கூடவந்தவன் பெயரைதான் அறியத்தான் வேண்டுமென்றும், உண்மையைச் சொல்லிவிடும்படியும் கேட்டார். ஆனால் தாமோதரன் முன்போலவே பிடிவாதமாய் வேறு ஒருவரு மில்லை என்றான். கடைசியில் மகாவெகுட்சியோடும் ஆளவந்தார் அவனை வெளிப்போகச்சொல்லி, மறுநாள் காலைவரையில் ஆலோசித்து உண்மை யுரைக்கும்படிக்கும், இல்லாவிடில் கொடிய சிட்சை விதிக்கச்செய்வதாயும் சொன்னார். தாமோதரன் இரவை மிகுந்த துயரத்துடன் கழித்தான். அதிலும் பிலவங்கன் அவன் தாயோடு வேறு ஊர் சென்றுவிட்டதால் துணையின்றி ஆறுதலற்றிருந்தான். மறுநாள் தனக்கு சிக்ஷைவிதிப்பார்களே என்கிறபயம் அவனுக்குக் கிடையாது; ஆனால் சிட்சைக்குப் பயந்து தன் கூட்டாளியைக் காட்டிவிடுவோமோ, நம்மால் அவனுக்கு ஜீவனம் கெட்டுவிடுமோ, என்று கவலைப்பட்டு அன்றிரவு துயரத்தில் ஆழ்ந்திருந்தான். தாமோதரன் நண்பன் சொக்கனும் அன்றிரவு தூங்கவில்லை. எங்கு தாமோதரன் வாக்குத் தவறி தன்னைக் காட்டிக் கொடுத்துவிடுகிறானோ என்று அவனுக்குக் கிலிபிடித்திருந்தது.

தாமோதரனும் பிலவங்கனும் கல்வி சற்றும்படி தார்க்கீகர் என்பவரை ஆசிரியராக ஆளவந்தார் நியமித்திருந்தார். அவரிடம் மறுநாள் காலையில் தாமோதரன் படிக்கச்சென்றதும், மூதலாள ஆளவந்தார் கேட்ட கேள்விகளைத் தார்க்கீகரும் திருப்பிக்கேட்டார். அதற்கு தாமோதரனும் பழைய பதிலையே சொன்னன். இதைக்கேட்ட தார்க்கீகர் சவுக்கெடுத்து விறு விறென்று தாமோதரனை விரிஞர். சில தேசங்களில் குற்றங்களை ஒப்புக்கொள்ளச் செய்வதற்காக சித்திரவதை செய்வதுண்டு. தாமோதரனுக்கு விதித்த சிக்ஷை அதிலும் குறையவில்லை. அவன் சிக்ஷையைக் கஷ்டத்தோடும் பொறுத்துக் கொண்டிருந்தான். அவனுடைய உபாத்தியாயர் ஒவ்வொரு அடிக்கு மிடையே கூடவந்தவனைக்

காட்டிக் கொடுக்கும்படி கட்டளை இட்டும், தன்வாக்கை மீறித் தன் நண்பனைக் காட்டிக் கொடுப்பதிலும் எந்த சித்திரவதையையும் அனுபவிப்பதே சரியென்று தீர்மானித்தான்.

இதையறிந்த சொக்கன் கவலை நீங்கிச் சந்தோஷமாயிருந்தான். ஆளவந்தார் தாமோதரன் கஷ்டப் படுவதைப் பற்றி மனமிரங்கலானார். உண்மையைப் பையன் வாயிலிருந்து வரச்செய்விக்க முடியாது போனதுபற்றி தார்க்கிகர் கோபாக்கிராந்தராகி தாமோதரனை மிகவும் கொடுமையாகப் புடைத்தார். இவ்வளவு கடின சித்தத்தோடும் சிக்ஷைசெய்வதைக் கண்ட ஆளவந்தார் தான் சொன்னதைச் சரியாக அறிந்து கொள்ளாமல் தார்க்கிகர் சிட்சிக்கிறார் என்று உணர்ந்து, தாமோதரனுக் காகப் பரிந்தார். அவனுக்கு அநியாயமாகக் கொடுமை யிழைத்ததற்காக வருந்தி, அவனைத் தனக் கருகாமையில் அழைத்து, அன்புடனும் நட்புடனும் நல்லவார்த்தைகளைப் பேசி "குழந்தாய்! நான் உன்மேல் சந்தேகப்பட்டதால் உன்னை அநியாயமாய்த் தண்டிக்கும்படிவந்தது. நீ பட்ட அவஸ்தைக்காக நான் மிக்க வருந்துகிறேன்" என்று சொல்லித் தட்டிக்கொடுத்து, தயருறுத்தினதற்காக அவனுக்கு ஒரு சிறு குதிரையையும், இனாம் கொடுத்தார்.

இதற்குமுன் எந்தச் சிக்ஷையினாலும் வெளிவராத குற்றம் இப்போது வெளிவந்தது. தார்க்கிகர் கொடுத்த அடியை மனமிளகாது பெற்றுக்கொண்ட தாமோதரன் ஆளவந்தாரின் உதாரச் செய்கையை மனமிளகாது ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கண்களிலிருந்தும் நீர் சொரியக் கைகூப்பி வணங்கி அவரைப்பார்த்து "தாங்கள் என்னிடம் அதிக தயைபாராட்டுகிறீர்கள். தங்கள் தயைக்கு நான் பாத்திரனல்லேன்" என்று தன் இதயத்தின்றும் இரகஸியத்தை வெளிப்படுத்தத் தயாராக இருந்தான். ஆனால் சொல்லிவிட்டால் அந்த எளிய ஜீவனுக்கு பிழைப்பில்லாது போய்விடுமே என்று எண்ணி உண்மையைச் சொல்லத் திறந்த வாயை மூடிக்கொண்டான்.

தாமோதரன் பிடிவாதமாய்ப் பொய் சொன்னதினால் ஆளவந்தார் தயவுக்கு அருகனல்லனென்றும், திருப்பவும் கசையடியடித்தால் நிஜம் வெளிவருமென்றும் தார்க்கிகர் சொல்லிப்பார்த்தார். ஆனால் ஆளவந்தார் இதற்குக் கொஞ்சமேனும் ஒத்துக் கொள்ளவில்லை. உண்மையை மறைத்த குற்றவாளியாயிருந்தால் அதற்குத் தக்க சிக்ஷை ஏற்கனவே தாமோதரன் அடைந்துவிட்டானென்றும், வாக்குப் பிறழக்கூடாது என்பது தவிர உண்மையை மறைப்பதற்கு வேறொரு எண்ணமும் அவனுக்கிருந்திராதென்றும் பரிந்துபேசினார்.

தார்க்கோ இதவும் யோக்கியதையா? இதுபிடிவாதமும் ஊர் ஜிதமுமன்றோ? யோக்கியன் எங்கேயாவது பொய்சொல்வானு? பொய் சொல்லி மானத்தைக் காப்பாற்றிக்கொள்ளும்படி எங்கே யாவது சொல்லியிருக்கிறதா?

இந்த சம்பாஷணை சரப்பாடி முடிந்ததும் நடந்தது. அங்கே ஆளவந்தார் தார்க்கோகிய இருவரன்றி மூன்றாவது மனுஷரும் ஒருவரிருந்தார். அவரும் இப்பொழுது சம்பாஷணையில் கலந்தார். அவர்களுடைய சம்பாஷணையை மேற்சொல்வதற்குமுன் இப் பொழுது புதிதாகச் சொன்னவரின் விருத்தாந்தத்தைப்பற்றி விவரிப்போம்.

2. அத்தியாயம்.

உறுப்பொத்தன் மக்களொப் பன்றால் வேறத்தக்க
பண்பொத்த லொப்பதா மொப்பு.

மேலே சொன்ன புதியவர் ஆளவந்தார் ஷீட்டில் கொஞ்சகாளாக வசித்து வந்த கந்தர்என்பவர். அவர் சுபாவத்தில் அறிவுள்ளவரல்லர். ஆனால் அனேக புஸ்தகங்களைப் படித்துத் தேர்ந்திருந்தவர். அவர் பூர்வீக சாஸ்திரங்களை வெகுவாய்ப்படித்து சாக்கியம் வாஹிஷ்டம் இவைகளைக் கரைகண்டவர். இவரும் தார்க்கோகரும் சம்வாதமில்லாமல் ஒரு இடத்தில் சேருகிறதில்லை. ஒருவர் அபிப்பிராயம் மற்ற வரபிப்பிராயத்திற்கு முற்றும் மாறுக இருந்தது. கந்தர் மானிடவியற்கை சுபாவமாகவே பரிசுத்தமுடையதென்றும் எப்படி இயற்கைக்கு மாறுக பிறவியில் ஊனமாய்ச் சிலர் பிறக்கிறார்களோ அப்படியே கொடியவர்கள் இயற்கைக்கு மாறானவர்கள் என்று அபிப்பிராயங்கொண்டவர். தார்க்கோகரோ மானிடவிருதயம் பாபஊற்றென்றும், மனுஷன் தஷ்டனாயிருப்பது சுபாவமென்றும், தெய்வகிருபையால் மீட்கப்பட்டால் தான் பரிசுத்தமாவான் என்றும் அபிப்பிராயங் கொள்ளுபவர். கந்தர் தருமத்தின் மேன்மையைப்பற்றி வியப்பார். தார்க்கோர் தெய்வ அருளின் சக்தியை மெச்சுவார்.

இப்படிப்பட்டவர்தான் புதிதாக சொல்லப்பட்ட மூன்றாவது மனுஷர். பொய் சொல்லியாவது மானத்தைக் காக்கும்படி எங்கேயாவது சொல்லியிருக்கிறதா என்று தார்க்கோர் கேட்டதும், கந்தர் நீங்கள் கேட்ட கேள்விக்குச் சுலபமாய் பதில் சொல்லமுடியாது. மானம் என்பதற்கு பலபொருள் உண்டு. அதற்கு தருமத்தின் மேன்மை என்று பொருள் கொண்டால், மானத்திற்கும் ஒரு மதத்துக்கும் சம்பந்தம் கிடையாது. இந்த விஷயத்தை ஆராயாமல் ஒரு துருக்கன் யூதன் கிருஸ்தவனும் ஒப்புக் கொள்வான் என்றார்.

தார்க்கீகர் இது சரியான வாதமல்ல; காப்பிரிகளும் நாஸ்திகர்களும் மானம் என்கிற பதத்தை உபயோகிக்கிறார்கள். ஆனால் அவர்கள் கொள்ளும் மானமும் ஆரியமதஸ்தர் அறியும் மானமும் ஒன்றுகுமா? பல சமயத்தார்களும் மானமே மேன்மை என்று சொல்வதைக்கொண்டு மானம் ஆரியமதத்திற்கு உரியது என்று எப்படிச் சொல்லலாம்? ஆதலால் மானத்திற்கும் தெய்வபக்திக்கும் சம்பந்தமில்லை என்று வழக்கிடும் சம்வாதம் சரியல்ல. நான் சொல்லும்மானமென்பது ஆரியமதத்தாரால் உணரப்பட்டு தினே தினே பிரகிருதமாய் அனுசரிக்கப்பட்டு வரும் ஒரு குணமாகும். அந்த மானம் ஆரியமதத்திற்கு மாத்திரமே உரியதேயன்றி, மற்றெச் சமயத்திலும் காணப்படாதது. இப்படிப்பட்ட மானம் பொய்சொல்வதை சம்மதிக்குமென்றால் அதினும் கொடியது வேறொன்றுமில்லை.

கந்தர்—மானமும் தர்மமும் ஒருபொருள்கொண்டது என்று நான் முன்னமேயே சொல்லியிருக்கிறேன். அவ்விரண்டும் நியாய உணர்விலிருந்தெழும்பும் குணங்கள். ஆதலால் இந்த மானத்திற்கும் அசத்தியத்திற்கும் வெகு தூரம். உண்மையில் மானமுடையவன் அசத்தியத்திற்கு முகம் கொடுக்கமாட்டான். இதுவரையில் நம் மிருவரபிப்பிராயமு மொன்றே. சமயத்துக்கு மூன்றில் தர்மம் நற்பட்டதால் மானத்தை மதத்தில் விரித்திருக்கிறது என்று சொல்வது ஒப்புக்கொள்ளத் தக்கதன்று.

தார்க்கீகர்—மானம் சமயத்திற்கு மூன்றினதென்று நான் எங்கேயாயினும் ஒப்புக்கொள்வேனா? ஆளவந்தாரே! இவர் சொல்வதை நான் ஒப்புக்கொண்டேனா? ஆளவந்தார் "வித்வான்களே நான் சொன்னதைத் தப்பாக அர்த்தம் செய்துகொண்டு இருவரும் சண்டை போடுகிறீர்களே. தாமோதரன் பொய் சொன்னது உண்மையில் மானத்துக்கு அஞ்சி என்று நான் சொல்லவில்லை".

இப்படிச்சொல்லியும் அவர்கள் தர்க்கம் நிற்கவில்லை. வெகு நேரம் வரையில் வாதித்துக்கொண்டேயிருந்திருப்பார்கள்; ஆனால் இடையில் வேறொரு விஷயம் நிகழ்ந்து இவர்களுடைய சம்வாதத்தைத் தடைப்படுத்தியது.

3. அத்தியாயம்.

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

இப்படி இவர்களிருவருடைய சம்வாதத்தையும் தடை செய்த விஷயம் என்னவென்றால், பிலவங்கனுக்கும் தாமோதரனுக்கும் நேர்ந்த ஒரு சண்டை தான். பிலவங்கன் தாமோதரனைக்காட்

டிலும் வயதில் இளையவனாயிருந்தபோதிலும், பருமனில் பெரியவனாயிருந்தான். ஆனால் தாமோதரன் மற்றவனிலும் சண்டையில் கைதேர்ந்தவன். ஆதலால் சண்டையில் பிலவங்கன் மூக்கிலிருந்தும் இரத்தம் ஓழுக தாமோதரன் காயப்படுத்திவிட்டான்.

தாமோதரன் எவ்வளவு துஷ்டனாயிருந்தபோதிலும் ஒரு வருக்கு வேணுமென்று நீங்கு செய்யமாட்டான். அதிலும் பிலவங்கனை உண்மையாக நேசித்தவன். அவனோடு சச்சரவு செய்யாதபடி மிகவும் ஜாக்கிரதையாக இருந்து வந்தான். எப்பொழுதும் தார்க்கோர் பிலவங்கன் பக்கமே பரிந்து பேசி வந்ததால், தாமோதரன் அவன் ஜோலிக்கே போகிறதில்லை.

இரண்டு பையன்களுக்கும் உண்டாகிய ஏதோ மனஸ்தாபத்தில் பிலவங்கன் தாமோதரனை "அடே அற்பமான விபசாரி பிள்ளை" என்று திட்டிவிட்டான். இதைக்கேட்டு பொறுக்கமுடியாமல், முன் சொன்னபடி தாமோதரன் காயப்படுத்தினான்.

மூக்கினின்று ரத்தமும் கண்ணிலிருந்து நீரும் பெருகி ஓடிவரப் பிலவங்கன் தன் மாமனும் பயங்கரமான தார்க்கோருமிருந்த இடத்திற்கு வந்துசேர்ந்தான். தான் தாமோதரனைத் திட்டியதைச் சொல்லாமல் தன்னை அவன் அடித்துக் காயப்படுத்திய சமாசாரத்தை மாத்திரம் முறையிட்டான். அதற்கு தாமோதரன் தன்னைப் பிலவங்கன் திட்டிக் கோபமூண்டாக்கியதால் தான் அவனை அடிக்கவேண்டியதாயிற்று என்றான். "திட்டியது நிஜமா" என்று பிலவங்கனைக் கேட்டதற்கு "இல்லவே இல்லை, என்வாயில கெட்ட வார்த்தை வருமா" என்று பதில் சொல்லிவிட்டான்.

தாமோதரன் பிலவங்கன் தன்னைத் திட்டியது உண்மையே என்று பிடிவாதமாகச் சொன்னான். அதற்குப் பிலவங்கன் இது அதிசயமில்லை. ஒரு பொய் சொன்னவன் திரும்பப் பொய் சொல்லமாட்டானா? என் வாத்தியார் முன் நீ சொல்லியதுபோல் நான் அற்ப பொய் சொல்லியிருந்தாலும், தலைநிமிர்ந்து பேசக்கூடமாட்டேன் என்றான்.

தார்க்கோர்—என்ன பொய் சொன்னான் குழந்தாய்? பிலவங்கன்—அவன் கௌதாரிசுட்டபோது தன்னுடன் வேறயாருமில்லை என்று தங்களிடம் சொன்னானே. கருப்புச்சொக்கன் கூட இருந்தாக இவனே என்னிடம் ஒத்துக்கொண்டிருக்கிறான் (தாமோதரனைப் பார்த்து) வாத்தியார் உன்னைத் தண்டு தண்டாக வெட்டிய போதிலும் நீ உண்மையைச் சொல்லுகிறதில்லை என்று என்னிடம் சொல்லவில்லையா?

தார்க்கிகர் (இதைக்கேட்டு கண்களில் பொறிபரக்க ஆளவந் தாரைப்பார்த்து) தாமோதரனுக்குப் பரிந்துதசை யடியடிக்கக் கூடாதென்று சொன்னீரே, சமாசாரம் இப்போது வெளிப்பட்டு விட்டதே, என்ன சொல்லுகிறீர்.

ஆளவந்தார் (பிரியத்தோடு தாமோதரனைப்பார்த்து) இது நிஜந்தானு குழந்தாய்! எதற்காகப் பொய்யைப் பிடிவாதமாய்ச் சொன்னாய்?

தாமோதரன்—என்னைப்போல் பொய்யை வெறுக்கிறவன் வேறொருவருமில்லை "உன்னைக்காட்டிக் கொடுப்பதில்லை" என்று சொக்கனுக்கு நான் வாக்குக்கொடுத்துவிட்டபடியால் என் மானத் தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக பொய் சொல்லவேண்டியதா யிற்று. வத்ஸர் தோட்டத்துக்குள் போகவேண்டாமென்று சொக் கன் என்னைப் பலதடவையும் கேட்டுக்கொண்டான். ஆனால் என் தூண்டுதலால் அவனும் உள்ளே வரவேண்டியதாயிற்று. அதற் காகத் தான் அவனைக்காட்டிக் கொடுப்பதில்லை என்று வாக்குக் கொடுத்தேன். இது தான் நடந்த விஷயம். எங்கே வேண்டுமானு லும் சத்தியம் செய்யத் தயாராக இருக்கிறேன். உண்மையில் நான்தான் குற்றவாளி. மிகவும் சிரமப்பட்டு சொக்கனைத்தோட் டத்தில் நான் அழைத்துப் போகவேண்டியதாயிற்று. ஆதலால் அந்த எளியவனிடமும் அவன் குடும்பத்தின் மேலும் தயவு வைத்து அவனை மன்னித்துவிடக் கோருகிறேன். நான் முன்னே தங்களிடம் சொன்னது பொய்யாகாது. சொக்கன் நிரபராதி என் பது உண்மை. பரஸ்பரனைத்தொடர்ந்து நான் ஒருவனேபோயிருக்க வேண்டியவன். உண்மையில் நான்தான் முதலில் போனேன். நான் அதிக சேஷ்டை செய்யாதிருக்கும்பொருட்டு சொக்கன் என்னைப் பின்தொடர்ந்தான். என்னை எப்படி வேண்டுமானாலும் சிக்ஷித்துக் கொள்ளுங்கள். எனக்குக்கொடுத்த குதிரையை வேண்டுமானாலும் பிடுங்கிக்கொள்ளுங்கள். ஆனால் எழைச் சொக்கனை தயவுசெய்து மன்னித்துவிடுங்கள் என்று கெஞ்சினான்.

ஆளவந்தார் கொஞ்சநேரம் யோஜித்து விட்டுப் பையன்க ளிருவரையும் சண்டைபோடாது ஒத்திருக்கும்படியாக புத்தி சொல்லி அனுப்பிவிட்டார்.

4. அத்தியாயம்.

. வெண்மை யெனப்படுவ தியாதெனி னெண்மை
யுடைமையா மென்னுஞ் செருக்கு.

•லகு ரகஸ்யத்துடன் சொல்லியிருந்த சமாசாரத்தை பில வங்கன் வெளிப்படுத்தியதால் அவனுக்குத் தாமோதரன் அளித்த சிட்சை சரியானதே என்று ஆளவந்தார் தமோதரனைக் கடியாது

இருந்தார். தாமே தாமோதரனை யைப்புடைக்கத் தயாராக விருந்த தார்க்கீகரை ஆளவந்தார் ரகஸியமாய்க் கூப்பிட்டு, பையன் செய்ததற்குப் பதிலாக சம்மானம் பெறவேண்டியவன் என்று சொன்னதின்மேல், தார்க்கீகர் யாதும் செய்யக்கூடாமல் இருந்து விட்டார்.

அடித்து வளர்க்காத பிள்ளை முன்னுக்கு வராதென்று அபிப்பிராயங்கொண்ட தார்க்கீகர் ஆளவந்தாரின் பரிவையும் சபலத்தையும் உள்ளுக்குள் கடிந்துகொண்டார். இப்படிப்பட்ட குற்றங்களை ஆரம்பத்திலேயே கடியாதிருந்தால் பையன் பெரிய போக்கிரியாகி விடுவான் என்றார். சிறுவர்களை அடித்து வளர்க்கவேணுமென்று பல சாஸ்திரங்களிலிருந்தும் வாக்கியங்களை அத்தாக்ஷியாக எடுத்துக்கூறினர். பொய் சொல்லுவதினால் உண்டாகும் தீங்கினைப்பற்றி ஒரு பெரிய உபன்னியாசம் செய்தார்.

கந்தர்—தாமோதரன் நடத்தை சரியானதென்று எவ்வளவு தூரம் நிருபிக்கப்பார்த்தாலும் என்னால் முடியவில்லை. அவன் செய்கையில் மனைதரியம் இருப்பதாக முதலில் தென்பட்டது. பொய் சொன்னதால் அவன் செய்கை எப்படி சரியாகும். மனைதரியம் ஒரு தர்மந்தான். ஆனால் தர்மமும் அதர்மமும் ஒரே காலத்தில் ஒருவனிடமிருப்பது அனுசிதமாகையால் தாமோதரனுக்கு நல்ல சிக்ஷை விதிப்பது தகுதிதான்" என்று ஒப்புக் கொண்டார்.

அவர்களிருவரும் எவ்வளவுக் கெவ்வளவு தாமோதரனைக் கடிந்தார்களோ அவ்வளவுக்கவ்வளவு பிலவங்களைப் புகழ்ந்தார்கள். உண்மையை வெளிப்படுத்தவேண்டியது சர்வமதசம்மதம் என்றார் தார்க்கீகர். அதைத்தான் தர்மங்கூறுவது மென்றார் கந்தர்.

இவ்வளவு சொல்லியும் ஆளவந்தார் மனதை மாற்றமுடியவில்லை. அவர் தாமோதரனைச் சிக்ஷிக்க உத்திரவு கொடுக்கவில்லை. தார்க்கீகருடைய மதசித்தாந்தத்திலும் கந்தருடைய தர்மசிந்தையிலும் தாமோதரன் நடத்தையே மேலானதாக அவருக்குத் தோன்றியது. ஆதலால் தாமோதரனைத் தீண்டக்கூடாது என்று தார்க்கீகருக்குக் கண்டிப்பாய் உத்திரவு செய்துவிட்டார். தார்க்கீகர் முணுமுணுத்துக்கொண்டு பையன் விணைக் கெட்டுப்போய் விடுவான் என்று சொல்லியும் பார்த்தார். ஒன்றும் பயன்பட வில்லை. ஆளவந்தார் உத்திரவுக்குக் கீழ்ப்படியவேண்டியதாயிற்று.

ஆளவந்தார் சொக்கனிடம் கடுமையாக நடந்துகொண்டார். அவனைத் தனக்கு முன்னால் உடனே வரவழைத்து, பலவீதமாகக் கடிந்துபேசி, அவனுக்குச் சேரவேண்டிய சம்பளத்தைக் கொடுத்து வேலையிலிருந்தும் நீக்கிவிட்டார்.

வேறொருவனைத் தப்புவிக்கும்படி பொய் சொல்வதற்கும் தன்னையே காப்பாற்றிக்கொள்ளப் பொய் சொல்வதற்கும் வித்தியாசமிருக்கிறதா என்று ஆளவந்தார் நம்பினார். இவ்வளவு கடுமையாக அவர் சொக்கனை சிக்ஷித்தது எதற்காகவென்றால், அவனை நடத்தைவத்துசொல்லவேண்டியிருக்க, அவனுக்காகத் தாமோதரன் கொடுஞ் சிட்சை அடையும்படியாகப் பார்த்துக்கொண்டிருந்தானே, இது மிக்க இழிவதன்மையென்று எண்ணினார்.

மேற்சொன்ன விபரம் வெளியில் பரவியதும் ஜனங்கள் இரு சிறுவர்களைப்பற்றியும் கதைகளும் தர்க்கிகளும் எண்ணியது போல் எண்ணுமல் மாறுபிப்பிராயம் கொண்டார்கள். பிலவங்கனை பயங்காளி யென்றும், கபடனென்றும், அயோக்கியனென்றும், ஆண்மையற்றவன் என்றும் அழைத்தார்கள். தாமோதரனையோ தைரியசாலி என்றும், யோக்கியனென்றும், வீரனென்றும், புகழ்ந்தார்கள். சொக்கனைக் காட்டிக்கொடுக்காது பேசியதற்காக அவ்வீட்டு வேலைக்காரர்களெல்லாம் தாமோதரனைக் கொண்டாடினார்கள். சொக்கனை யாவரும் வெறுத்தபோதிலும் வேலைவிட்டு நீங்கியபிறகு எல்லோரும் அவனுக்கு இரங்கினார்கள். தாமோதரன் ஆண்மைத்தனத்தை மெச்சாதவர்களில்லை. ஆனால் பிலவங்கனை வேலைக்காரர் எல்லாம் வெறுத்துத் தூறினார்கள். இந்தப் புகழ் தாமோதரனுக்குக் கஷ்டத்தை வருவித்தது. மேற்சொன்ன விஷயத்திற்காக தண்டிக்கக்கூடாதென்று ஆளவந்தார் தார்க்கிகருக்குக் கண்டிப்பாக உத்திரவு கொடுத்திருந்தாலும் வேறு எக்காரணம் கொண்டாவது தார்க்கிகர் தாமோதரனை நன்றாய்ப்புடைத்து வருவார்.

இரண்டு பையன்களையும் வித்தியாசமின்றி ஒரே கண்ணைக் பார்க்கும்படி ஆளவந்தார் அடிக்கடி கட்டளை இட்டிருந்தபோதிலும், தார்க்கிகர் பிலவங்கனிடத்தில் அன்பும் ஆசையுமாக இருந்தும், தாமோதரனிடத்தில் கடுமையும் உக்கிரமாக இருந்தும் வந்தார். பிலவங்கன் தன் உபாத்தியாயரின் அன்பை சாமர்த்தியமாய் சம்பாதித்துக்கொண்டான். அவருக்கு மிக்கமரியாதை செய்வான். அவர் சொல்லிக்கொண்டிருப்பதை கவனத்தோடும் ஊக்கத்தோடும் கேட்பான். அவருடைய வாக்கியங்களை மனதில் ஹரகித்து அவற்றை அடிக்கடி ஒப்புவிப்பான். உபாத்தியாயரின் மதாசாரங்களையும் கொள்கையையும் தெரிந்து அவற்றின்படியே வருனும் நடப்பான். அதிவாலிபத்தில் இவ்வளவு சாமர்த்தியமாயிருப்பதைக் கண்டு தார்க்கிகரும் அவனிடம் மிக்க பக்ஷம் பாராட்டிவந்தார்.

தாமோதரனை தார்க்கிகர்க்கு அதிக மரியாதை செய்யமாட்டான். பாதரக்ஷையைக் கழற்றுமனும் வணங்காமலும் அவ

ருக்கு மூன்வந்து நிற்பான். அவர் சொல்வதை கவனிக்கமாட்டான். அவர் நடத்தையை இவன் அனுசரிக்கமாட்டான். கொஞ்சமேனும் அக்கரையில்லாமல் மனம்போனபடியே செய்வான். பிலவங்கன் பக்தி சிரத்தையாய்ப் பாடங்கேட்பதைப் பார்த்து மிகவும் ஆதரவுடன் நடத்தையின்றி நடைப்பான்.

கந்தரும் இத்தியாதி காரணங்களால் பிலவங்கனிடம் பட்சமாயிருந்தார். தாமோதரன் இவருடைய அறிவு செறிந்த புத்திமதிகளுக்குக் கொஞ்சமேனும் காது கொடான். இவருடைய உபதேசத்தைக் கேட்டு ஒருதடவை எனனுமே செய்தான்.

பிலவங்கன் பதினாறு வயதில் தார்க்கிகர் கந்தர் இருவரையும் திருப்தி செய்யும்படியான சாமர்த்திய முடையவனாயிருந்தான். தார்க்கிகரோடு தனியாய் இருக்கையில் மதத்தின் மகிமையை விபரித்துகூறுவான். கந்தரோடிருக்கும்போது தருமத்தின் பெருமையைப் புகழ்வான். இருவரோடிருக்கும்போது சமமாயிருப்பான். இதைக் கண்டு இருவர்களும் அவன் தம்மபிப்பிராயமுடையவன் என்று மகிழ்வார்கள்.

இப்படி அவர்களை முகஸ்துதாத்திரம் செய்வதுமன்றி, அவர்களில்லாதசமயத்தில் தன்மாமனிடமும் அவர்களைப்பற்றப் பெருமையாகவே பேசுவான். மதத்தைப்பற்றியாவது மதத்தைப் பற்றியாவது ஆளவந்தார் இவனிடம் தனியாகப் பேசநேரிட்டால், உடனே உபாத்தியாயர்கள் அவ்விஷயங்களைமுழுவதும் தனக்குக் கற்பித்திருப்பதாகக் கூறுவான். இந்த முஸ்துதியால் உபாத்தியாயர்களின் பரிஷத்தை விருத்தியாக்கிக்கொண்டான்.

ஆளவந்தாரும் இவன் வார்த்தைகளைக்கேட்டு மிக சந்தோஷமடைவார். பொதுப்பாடசாலைக்கு அனுப்பவித்தல் அங்கே துஷ்டப்பையன்கள் சகவாசத்தால் தாமோதரனுக்கும் பிலவங்கனுக்கும் கெட்ட அப்பியாசங்கள் படிந்துவிடும் என்கிற பயத்தால், உபாத்தியாயரை வீட்டில் கொண்டுவந்து வைத்து அவர்களுக்குக் கற்பிக்கச்செய்தார்.

ஆளவந்தாருடைய ஆப்தரொருவரால் இந்தத் தார்க்கிகர் சிபார்சு செய்யப்பட்டார். தார்க்கிகர் கலாசாலையிலேயே இருந்து படித்தவர். அங்கே அறிவிலும் தெய்வபக்தியிலும் சன்மார்க்கத்திலும் பெரியவர் என்று பேர் பெற்றவர். இந்த குணங்களினால் தான் அவருக்கு ஆளவந்தார் வீட்டில் வேலை கிடைத்தது.

தார்க்கிகர் வந்தவுடன் ஆளவந்தாருடைய மனநிற்கொப்ப நடந்துவந்தார். ஆளவந்தாரும் அவரிடம் பிரியமாகவே யிருந்துவந்தார். ஆனால் வரவர தார்க்கிகருடைய குற்றம் ஒவ்வொன்றாய்த் தெரியவந்தது. இருந்தும் அவருடைய நற்குணங்கள் தீக்குணங்

கிலும் அதிகமாயிருந்ததால், அவரை வெளியனுப்ப ஆளவந் தருக்குச் சம்மதமில்லாமலிருந்தது.

இவரிடத்தில் காணப்படாத குணங்கள் கந்தரிடத்தில் பூர்த் தியிருந்தன. ஒருவரிடமில்லாத குணம் இன்னொருவரிடமிருந் தால் இவர்களிடம் பையன்கள் இருவரும் கற்று தன் மேற்பார் வையின் கீழ் இருந்தால், அவர்கள் இருவரும் மதத்தைப்பற்றி யும் தருமத்தைப்பற்றியும் வேண்டிய அளவு கற்றுக்கொண்டு விடுவார்கள் என்று ஆளவந்தார் எண்ணினார்.

5. அத்தியாயம்.

அச்சமே கீழ்கள தாசார மெச்ச
மவாவுண்டே லுண்டாஞ் சிறிது.

மேற்சொன்ன இருவர்களில் ஒருவர் ஆளவந்தாரின் தர்மசிந் தையையும் மற்றவர் அவரது தெய்வபக்தியையும் கண்டு, அவ ரிடம் அதிகநேசமாகி அவரைத் தங்களுடைய நெருங்கிய பந்து வாக்கிவிடத் தீர்மானித்தார்கள்.

பிருதாவைப்பற்றி நாம் பேசி வெகுநாள் ஆகிவிட்டதால் அவளை நமது வாசகர்கள் மறந்துபோயிருக்கமாட்டார்கள். இவ் வழகிய ஸ்திரீயை அடைய, தனித்தனியாக தார்க்கீகரும் கந்தரும் ஆசைகொண்டார்கள்.

ஆளவந்தார் வீட்டிற்கு வந்த நாள்முதல் மூன்றுபோ ருபத்தில் இலக்கியமில்லாமலும் வயதில் முதிர்ந்தவளுமான பிருதாவை காதலித்ததுவிந்தையாகத் தோற்றும்; ஆனால் இனிகிதன் வீட் டில் தாட்டியாவது தாயாராவது சகோதரியாவது புத்திரியாவது அத்தையாவது மருமகளாவது அத்தங்காள் அம்மங்களாவது செல்வவதியகவாவது ரூபவதியாகவாவது இருந்தால் அவளிடம் ஆப்த நண்பர்கள் அதிக நேசம் பாராட்டுவது சகஜமே.

தார்க்கீரோகட்டும் கந்தராகட்டும் மனசாக்ஷிக்கு விரோத மான காரியத்தை ஒன்றும் செய்யமாட்டார்கள்; அவளான் சகோ தரியை இச்சிக்காதே என்று சாஸ்திரத்தில் எங்கும் சொல்லி யிராததினால், தான் செய்வதில் குற்றம் ஒன்றுமில்லை என்று தார்க் கீகர் எண்ணினார்; விதவையை இச்சிப்பதினால் தருமத்துக்கு விரோதமாகாது என்று கந்தர் எண்ணினார்.

இருவரும் பிருதாவின் தயையை சம்பாதிக்கவேண்டி அவள் மகன் பிலவங்களை அதிக பக்ஷத்துடன் பாராட்டிவந்தார் கள். ஆளவந்தார் தாமோதரனிடம் பக்ஷமாயிருப்பது பிருதா வுக்கு வெறுப்புண்டாக்குமென்று தெரிந்துகொண்டு, பிருதாவை சந்தோஷிக்கும் பொருட்டு சேர்ந்தபோதெல்லாம் அவனை அவ

மதித்தும் கடிந்தும் புடைத்தும் வந்தார்கள். இத்தப் பையனுக்குத் துன்புறுத்துவோரையெல்லாம் அவள் நேசிப்பாள் என்று அவர்கள் எண்ணினார்கள். கந்தர் தாமோதரனைப் பற்றித் தூற்றிச் சொல்லத்தான் கூடும். தார்க்கிகரோ அவனுடையமேல் தோலை உரிக்கலாம். அவர் அடிக்கும் ஒவ்வோரடியும் பிருந்தா தன்னை நேசிக்கும்படிச் செய்யும் என்று எண்ணுவார்.

இதற்காகத்தான் அச்சிறுவர்களைப் பற்றி அக்குருமாரிருவருக்கும் ஒரே அபிப்பிராயம் இருந்தது; இக்கலியம் கலிரவேறு எதிலும் இவ்விருவரும் மாறுபிப்பிராய முடையவர்களே. அன்றியும் ஒவ்வொருவருடைய உட்கருத்தையும் மற்றவர் அறிந்துகொண்டு ஒருவரை யொருவர் பகைக்கத்துவக்கினர்கள்.

இவ்விஷயத்தில் இருவரும் மாறிமாறி ஜெயமடைவதுபோல் தோன்றியதால் இவர்களுடைய பகைபெருகியது. பிருந்தாவுக்கு இவர்களுடைய நடத்தையின் கருத்தறன்றாகத்தெரியும். ஆகலால் அவள் எங்கே தங்கள் எண்ணத்தை ஆளவந்தாரிடம் சொல்லிவிடப்போகிறாளோ என்று இவளிடம் அவர்கள் வெகு ஜாக்கிரதையாகவே நடந்து கொண்டார்கள். அப்படி அவர்கள் பயப்படக் காரணம்ஒன்றுமில்லை. பிருந்தாவோ கௌரவத்துக்கு ஆசைப்பட்டவள். அவர்களிருவரையும் மறத்துவிடுவதென்று தீர்மானித்திருந்தாள். ஆயினும் தனிமைப்பற்றி அவர்கள் சொல்லும் மூகஸ்துதிக்கும் காதல் வார்த்தைகளுக்கும் ஆசைப்பட்டு அவர்களிருவருக்கும் மாறிமாறி இடங்கொடுத்துவந்தாள். தார்க்கிகருடைய சம்பாஷணையைக் கேட்கக்காதல் கொண்டாள். ஆனால் ரூபத்தில் அழகிய கந்தரைக் கண்டு அவனுடனிருக்க ஆசைப்பட்டாள்.

பிருந்தா இல்வாழ்க்கையின் இனிமையைப் பூராவாக அனுபவித்து ஆகிவிட்டதனாலோ, அல்லது அதின் புன்மையைக்கண்டுபோதுமென்று எண்ணிக்கொண்டதனாலோ, என்னவோ தெரியாது. இரண்டாவது விவாகம் செய்துகொள்ளவில்லையென்று தீர்மானித்துவிட்டாள். முதலில் கந்தரிடம் மிக்கநேசத்தோடும் வாஞ்சையோடும் இவள் சம்பாஷித்ததைக்கண்டு ஜனங்கள் பலவிதமாய்ச் சொல்லிக்கொண்டார்கள். தார்க்கிகர் சும்மாயிருக்கவில்லை. அவரும் வெகுதூரம் பிரயத்தனப்பட்டார். ஒருவருக்காவது தங்கள் அபீஷ்டம் பூர்த்தியாகவில்லை. பிருந்தாவின் அன்பைக் கவரலாம் என்று வாத்தியார் தாமோதரனை எவ்வளவு புடைத்தபோதிலும், பிருந்தா இவரை லக்ஷியம் செய்கிறதாகத் தோற்றவில்லை.

உண்மையில் இவர் தாமோதரனைச் சிக்ஷித்தும் பிலவங்களைப் பக்ஷமாய் நடத்தியதும் பிசகு. பிருந்தாதன் கணவனை விரும்பா

தவளென்று வாசகர்களுக்கு முன்னுலேயே தெரியும். அவன் சாகும்வரையில் அவனை முற்றும் பகைத்துவந்தாள்; ஆகலால் அப் புருஷனுல் உண்டான பிள்ளையிடத்தில் அவள் அதிகபக்ஷம்வைக் காதது ஆச்சரியமல்ல. பிலவங்கள் கைக்குழந்தையாக விருந்த போது அவனை அவள்பார்ப்பதும் கவனிப்பது மில்லை. ஆளவந் தார்கண்டெடுத்த பிள்ளையைத்தன் குழந்தையைப்போல் வளர் த்து, பிலவங்களுக்கும் அவனுக்கும் ஒரு வித்தியாசமும் பிராது நடத்திவந்ததைப் பிருந்தாவும் ஒப்பி இருந்தாள். இப்படி ஒப்பி னது தன்தமயனுரைச் சீர்தூக்கிப்பிழைக்க என்றும், அந்தரங்க மாய் தாமோதரனைப் பகைத்துவந்தாள் என்றும், தார்க்கிகர் கந்தர் உள்பட எல்லாரும் சொல்லிவந்தார்கள். எவ்வளவுக்கெவ்வளவு தாமோதரனிடம் அன்புகாட்டுகிறுளோ அவ்வளவுக் கவ்வளவு அவனுக்குத்தீங்கிழைக்க வழிதேடுகிறுள என்று அபிப்பிராயம் கொண்டார்கள்.

ஆதியில் ஆளவந்தார் வெளியில் போயிருந்தபொழுது தாமோ தரனைச் சிக்ஷிக்கும்பிடி பிருந்தா 2 - 3 தடவை சாடையாகச்சொ ன்னதினுலும், பிலவங்களைப் பற்றியப்படி சொல்லாததினுலும், உண்மையில் தாமோதரனைப் பிருந்தா வெறுக்கிறுள் என்று தார்க் கிகர் நம்பிவிட்டார். இதனுலேதான் கந்தரும் ஏமாந்துவிட்டார். தன் பிள்ளையை எப்படி வெறுத்தபோதிலும் கண்டெடுத்த குழந் தையைச் சொந்தப் பிள்ளையைப்போல் வளர்ப்பதென்றுல் பிருந் தாவுக்கு மனம் ஒப்பவில்லை. இதைப்பற்றிக்கந்தரிடத்திலும் தார்க் கிகரிடத்திலும் தன்தமயனுரைக் கடிந்து பேசியிருக்கிறுள். தன் தமயனுடு வாக்குவாதம் நேரிட்டால் சோரப்பிள்ளையிடம்பக்ஷம் வைத்திருப்பதற்காக அவரை நிந்தித்துமிருக்கிறுள்.

கடைசியில் தாமோதரன் வாலிபதசையடைந்து அஞ்சா நெஞ்சம் உடையவனுப்த் தீரச்செய்கைகளைக் காண்பிக்கவே தன் மகனிலும் அதிகமாக வெளிப்படையாகவே அவனிடம் பக்ஷம் காட்டினுள். அவனை அடிக்கடி பார்க்கவேண்டுமென்று ஆவல் கொளுவாள். அவனுடனிருக்கும்போது மிகத்திருப்தியும் சந் தோஷமுமடைவாள். அவன் பதினேட்டுவயது ஆவதற்கு முன்னு லேயே தார்க்கிகருக்கும் கந்தருக்கும் எதிராளி ஆகிவிட்டான்: முன்னுல் பிருந்தாகந்தரிடம் நேசம்பாராட்டிவருகிறுள என்று சொன்னவர்கள் எல்லாம் இப்போது தாமோதரனைக்கண்டு மய ங்கி விட்டாள் என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். இதற் காக அவனைக்கந்தர் முற்றும் பகைத்தார்.

6. அத்தியாயம்.

எவ்வ தறைவ துலக முலகத்தோ
டவ்வ தறைவ தறிவு.

ஒரு ஸ்திரீயைப்பற்றி வம்புப்பேச்சு உலகமெல்லாம் பரவியபோதிலும் அது அவளுடைய சகோதரன் அல்லது புருஷன் காதுக்கு எட்டுவது அரிது. அப்படி எட்டியபோதிலும் ஆளவந்தார் அதை இலகுவில் நம்பிவிடுபவரல்லர். தன் மகனிலும் தாமோதரனிலும் மிக்கவிசுவாசத்துடன் பிருந்தாபாராட்டியது மிலவங்கனுக்குப்பல இடையூறுகளை விளைவித்தது.

ஆளவந்தார்நியாயத்தைக் கடைப்பிடித்தவராகையால்ஒருவர் குற்றமில்லாத அவஸ்தைப் படுவதைக் கண்டால் மனம் பரிதபிப்பார். மிலவங்கன் தன் தாயிடமேயே தன் மேல் குற்றம் ஒன்றுமில்லாமலிருக்க வெறுக்கப்பட்டான் என்கிற சமாசாரம் தெரிந்தும் அவர் அவனிடம் மிக்க பக்ஷம் பாராட்டினார். அதுமுதல் அவனுடைய நல்ல குணங்களை எல்லாம் நன்கு மதித்தும் குற்றங்களைப் பொருட்படுத்தாமலும் அவனைப் பெருமைப்படுத்தி வந்தார். தாமோதரன்மீது பிருந்தாவுக்கு பக்ஷம் அதிகமாகவாக ஆளவந்தருக்கு அவன்மீது பக்ஷம் குறைத்து வந்தது. இந்தப் பக்ஷக் குறைவினால் அவர் தாமோதரனை வெளியேற்டி விடவில்லை. ஆனால் அவன் யோசனையின்றி மதோன்மத்தனுப்ச் செய்தசில செய்கைகள் அவனுக்குப் பிரதி கூலமாக முடிந்தன.

தாமோதரனுடைய யோஜனையற்ற செய்கைகளைச் சொல்லுகிறபோது நமதுவாசகர்களாக விருக்கும் சிறுவர்களுக்கு புத்தி புகட்டலாம் என்பது நமது எண்ணம். அவர்களுடைய எண்ணம் எவ்வளவு உதாரகுணமாயிருப்பினும், அவர்களுடையதன்மை எவ்வளவு கபடமற்றதாயிருப்பினும், அவர்களுடையசெய்கை எவ்வளவு மனச்சாக்ஷிக்கு ஒப்பினதாயிருப்பினும், உலகத்தில் ஓங்குவதற்கு இதுவெல்லாம் போதாது. தெளிந்த அறிவும் சாதுர்யமும் எவ்வளவு மேலானவனுக்கும் இருக்கவேண்டும். எண்ணமும் செய்கையும் நன்றாயிருந்தால் மாத்திரம் போதாது. அவை நல்லவை என்று அனைவருக்கும் தோற்றவும் வேண்டும். அகம் எவ்வளவு சுத்தமாயிருப்பினும் புறமும் அப்படியே இருப்பதாய்க்காண்பிக்கவேண்டும். வெளிவேஷத்தையும் சரியாகப்போட்டாலொழிய அசூயையும் பொறுமையும் உள்ளவர்கள் நீ உண்மையில் எவ்வளவு தூயனாயிருப்பினும் உன்னை தூஷித்து உன்பெயரைக் கெடுக்கப் பார்ப்பார்கள். நியாயசிந்தையுள்ள ஆளவந்தார் கூட இவர்கள் மோசத்துக்கு உள்ளாகி உன்யோக்கியதை தெரியாமல் உன்னிடம் சம்சயிப்பார்: ஆதலால் வாலிபவாசகர்காள் ! நீங்கள் எவ்வளவு யோக்கியர்களாயிருந்தாலும் சமயா சமயத்திற் குத்தக்படி நடக்கும் நல்லறிவைக் கைவிடக்கூடாது.

7. அத்தியாயம்.

வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர தடைத்து.

தாமோதரன் அநியாயமாகத் தண்டிக்கப்பட்டான் என்று அவன்மேல் பரிதாபம் கொண்டு ஆளவந்தார் ஒரு சிறு குதிரை பரிசளித்தது வாசர்களுக்குத் தெரிந்த விஷயம். இந்தக்குதிரையை ஆறுமாதம் சவாரிசெய்து பிறகு அடுத்த சந்தைக்குப் போய் அதை விற்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பினான். வீடு வந்ததும் குதிரை விற்ற பணத்தை என்செய்தாய் என்று தார்க்கிகர் கேட்டதற்கு "நான் சொல்லமாட்டேன்" என்று தாமோதரன் வெளிப்படையாய் விடையளித்தான். "ஓ! ஓ! சொல்லமாட்டாயா? இப்போது சொல்லச்செய்கிறேன்" என்று அவனைப் புடைக்கச்சென்றார். அந்த சமயத்தில் ஆளவந்தார் தோன்றி, தாமோதரனை வேறு அறைக்குக் கூட்டிப்போய் அவனைத் தார்க்கிகர் கேட்டதுபோல் கேட்டார். அதற்குத் தாமோதரன் தாங்கள் எனக்குச்செய்திருக்கும் உபகாரத்திற்கு நான் எதையும் மறைக்கமாட்டேன். ஆனால் அந்தக்கொடிய அயோக்கியனுக்குத் தடியடி தவிர வேறு பதிலும் நான் சொல்லப்போகிறதில்லை. ஒரு காலில்லாவிட்டால் ஒரு நாள் அவனுக்கு நல்ல சிக்ஷை கொடுக்கப்போகிறேன்" என்றான்.

ஆளவந்தார் "உபாத்தியாரை இவ்வளவு மரியாதை இல்லாமலும் அவமானமாயும்பேசுவது அடாது. அதிலும் பழிவாங்குவது என்னும் எண்ணமிருப்பது முழுப்பிசகு. இந்த மாதிரி வார்த்தை மற்றொரு தடவை உன் வாயிலிருந்துவந்தால் உனக்கு உபகாரம் ஒன்றும் செய்யமாட்டேன். துஷ்டனுக்கு நான் ஒருபோதுமனுகூலம் செய்வதில்லை" என்றார். இவற்றிற்குப்பிறகு வெளிக்கு வருந்தினவனுக ஆளவந்தாருடைய பிடிவாதத்திற்காக தாமோதரன் காட்டிக்கொண்டாலும், தார்க்கிகர் தன்னைக்கொடுமையாக நடத்தியதற்கு மனதில் வஞ்சம் வைத்திருந்தான். மூரட்டு நடத்தைக்காகவும் அச்சமின்மைக்கும் தாமோதரனை மிகவும் கடிந்து கார்க்கிசரை அசட்டையாகப் பேசியதற்கு மனம் வருந்தும்படியாக ஆளவந்தார் கட்டளை இட்டதற்குத் தாமோதரன் "தங்களை நான் இவ்வுலகத்து எப்பொருளையுமவிட அதிகமாக விசுவாசித்துக் கௌரவிக்கிறேன். தாங்கள் எனக்காகச் செய்திருக்கும் பல நன்மைகளையும் நன்கறிகிறேன். அந்த உபகாரத்தையெல்லாம் மறந்துவிட்டால் என்னைப்போலும் கிருதக்ஞையற்றவன் ஒருவருமிரான். தாங்கள் எனக்குப் பரிசளித்த குதிரை பேசக்கூடியதாயிருந்தால் அதனிடம் நான் எவ்வளவு பக்ஷமாயிருந்தேன் என்பதைத் தங்களுக்கு அது சொல்லக்கூடும். அதைச் சவாரி செய்வதைவிட

அதற்குத் தீனியிடுவதில் எனக்கு மிக்க சந்தோஷம். அதைவிட்டுப்பிரிவது எனக்கு எவ்வளவோ வருத்தமாகத் தானிருந்தது. அதை வேறு எக்காரணத்தினும் விற்றிருக்கமாட்டேன். எனக்குத் தெரிந்தவிஷயம் தங்களுக்குத் தெரிந்திருந்தால் தாங்களும் அதைக் கட்டாயமாக விற்றுத்தானிருப்பீர்கள். இப்படிப்பட்ட கஷ்டங்களை அனுபவித்தவர்களை நான் பார்த்ததில்லை. அவர்களுடைய கஷ்டங்களைத் தாங்களே நேரில் கண்டிருந்தால் என்ன செய்வீர்கள்" என்றான்.

ஆளவந்தார் "யாருடைய கஷ்டக்களை? குழந்தாய் நீ சொல்லுவது என்ன".

தாமோதரன் "தாங்கள் சொக்கனை வேலையைவிட்டு நீக்கிய பின் அவனும் அவனுடைய பெரிய குடும்பமும் உடுக்கத்துணியும் உண்ணச்சோறு மில்லாமல் வெகு கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் நிர்வாணமாயும் பட்டினியாயும் கிடந்ததைக் கண்டதும் இதற்கெல்லாம் நான்தானே காரணமென்று என் மனதில் பச்சாதாபமுண்டாயிற்று. இதைப்பார்க்க என்னால் சகிக்கமுடியவில்லை. (இங்கே அவன் கன்னத்தின் வழியாகக் கண்ணீர்பெருகிற்று). தங்களுடைய பரிசை நான் எவ்வளவு மேன்மையாகக் கொண்டாடியபோதிலும் அவர்கள் வீணை அழிந்து போகாதிருக்கும்படி குதிரையை விற்று அதில் கிடைத்த பணமவ்வளவையும் அவர்களுக்கு கொடுத்தேன்.

இதைக் கேட்டதும் ஆளவந்தார் கொஞ்சநேரம் மௌனமாயிருந்தார். அவருடைய கண்ணினின்றும் நீர் பெருகிற்று. கஷ்டப்படுபவருக்கு உபகாரம் இனிச் செய்வதென்றால் முன்னால் தனக்குத் தெரிவிக்கும்படியாகவும் அவனுக அசாதாரணவிதமாக உபகாரஞ்செய்ய வேண்டியதில்லை யென்றும் மெதுவாகக் கடிந்து சொல்லி அவனை அனுப்பிவிட்டார்.

இந்தவிஷயத்தைப்பற்றித் தார்க்கீகருக்கும் கந்தருக்கும்பின்னால் சம்வாதமுண்டாயிற்று. தன் உத்தரவை அவமதித்ததற்காக ஆளவந்தார் சொக்கனைத் தண்டித்திருக்க அவனுக்குத்தாமோதரன் போய் உதவி புரிந்தது தவறென்றும், கடவுளே சிலரை நல்லஸ்திதியிலும் சிலரை இழிந்தஸ்திதியிலும் வைத்திருப்பதால் எளியோர்க்கு உபகாரம் செய்வது கடவுள் சம்மதத்திற்கு மாறுகுமென்றும் ஆளவந்தாருக்கு விரோதமாய்ச் செய்ததால் தாமோதரனைக் கசையடி அடிக்கவேணுமென்றும் தார்க்கீகர் சொல்லிமுடித்தார். கந்தரோ தாமோதரன் செய்தது சரியே என்று தார்க்கீகரோடு சண்டையிட்டார்.

8. அத்தியாயம்.

இன்மையி னின்னுத தியாதெனி னின்மையி
னின்மையே யின்னு தது.

"பட்டகாலிலேயே படும் கெட்ட குடியே கெடும்" என்று ஒரு பழமொழி உண்டு. குதிரையை விற்றதற்கு மன்னிக்கப்பட்ட தாமோதரன் ஆளவந்தார் தனக்குக் கொடுத்திருந்த ஒரு உயர்ந்த பகவத்கீதையை விற்று அந்தப் பணத்தையும் மூன்சொன்னமாதிரி செய்ததாக கண்டு பிடிக்கப்பட்டான். புஸ்தகத்தின் மகிமைக்காகவும் தாமோதரனிடமிருந்த நட்புக்காகவும் பகவத்கீதை குடும்பத்தை விட்டு வெளியே போகக்கூடாது என்கிற எண்ணத்தாலும் அந்த புஸ்தகத்தை தாமோதரனிடமிருந்தும் பிலவங்கன் பாதிவிலைக்கு வாங்கினான். ஆளவந்தாரிடமிருந்து பெறும் எவ்வொரு காசையும் பத்திரமாய்ச் சேர்த்துவைப்பவனுதலால் பிலவங்கனிடத்தில் அப்புஸ்தகத்தைப் பாதிவிலைக்கு வாங்கப் போதியபணமிருந்தது.

சிலர் தங்கள் புஸ்தகங்களைத்தவிர வேறு ஒன்றையும் படிப்பது வழக்கமில்லை. ஆனல் பிலவங்கனை புதிய பகவத்கீதைக்கு வந்ததும் அதைத்தவிர வேறு ஒன்றையும் தொடுவதில்லை. எப்பொழுதும் அந்தப் புஸ்தகமும் கையுமாய்ப் படித்துக்கொண்டிருப்பான். அன்றியும் கஷ்டமான வாக்கியங்களை விவரிக்கும்படி அப்புஸ்தகத்தை எடுத்துக்கொண்டுபோய் வாத்தியாரிடம் அடிக்கடி கேட்பான். தாமோதரன் கெட்டகாலம் அந்த புஸ்தகத்தில் அவன் பெயரைக் கண்டவிடங்களில் எழுதி வைத்திருந்தான். ஆதலால் உபாத்தியாயர் அந்த புஸ்தகம் பிலவங்கனிடம் எப்படி வந்ததென்று விசாரிக்கலானர். பிலவங்கன் உண்மையை உரைக்கவேண்டிவந்தது.

சங்கதியைக்கேட்ட தார்க்கிகருக்கு மகா கோபம் உண்டாகிவிட்டது. பகவத்கீதையை நாஸ்திகனல்லாது வேறுயார் விற்பான். ஆதலால் தாமோதரனைத் தகுந்தபடி சிக்ஷியாது விடுவதில்லை யென்று சபதத்தை எடுத்து மாறினர். இதுவும் போதாதென்று ஆளவந்தாரிடம் தாமோதரனைப்பற்றி கண்டபடி தூஷித்து முறையிட்டார்.

கந்தரோ தார்க்கிகருக்கு விரோதமான அபிப்பிராயங்கொண்டார். பகவத்கீதையை விற்பதால் அதிகபாபம் எப்படிலபிக்குமென்று அவருக்குப் புரியவில்லை. ஆதலால் அவர் தாமோதரன் கட்சியைச் சேர்ந்து கொண்டார். தார்க்கிகர் முகம் சிவந்து உதடு கடித்துக் கோபம் பொங்கி கம்பீரமாக பதில் சொல்ல ஆரம்பித்தார். ஆனல் பிருந்தாடவில் பிரவேசித்து கந்தர் அபிப்பிராயம்

மூற்றிலும் சரியே என்றும் தாமோதரன் புஸ்தகத்தை விற்றது குற்றமானால் தன் மகன் அப்புத்தகத்தை வாங்கியது அதிலும் பெருங்குற்றமென்றும் தீர்ப்புச் சொன்னாள்.

அவள் அபிப்பிராயம் வெளிவந்ததும் சம்வாதம் முடிவுபெற்றது. கந்தர் பெற்ற வெற்றியால் வாய் திறக்க முடியாதுபோனார். பிருந்தா சொன்னதற்கு மாறுபேச தார்க்கீகருக்கு தணிவு வசவில்லை. அவர் சீற்றத்தாலும் வெட்கத்தாலும் வாய் திறவாதிருந்தார். ஏற்கெனவே தாமோதரனை வேண்டியமட்டும் சிக்ஷித்தாகிவிட்டதால் தான் இனி ஒன்றும் சொல்வதற்கில்லை என்று ஆளவந்தார் முடித்தார்.

கௌதாரிகூட்ட நிலத்திற்குடையவரான வத்ஸப்பிரபு திரும்பவும் சொக்கன் தன் நிலத்தை அழித்தானென்று வியாச்சியம் கொண்டுவந்தார். அதனால் சொக்கன் மிக்க கேவலஸ்திதியடைந்தான். அதனால் ஆளவந்தார் திரும்பவும் அவனை எடுத்துக்கொள்ளலாமென்றெண்ணிய எண்ணமும் மாறிவிட்டது.

ஒருநாள் ஆளவந்தார் தாமோதரனோடும் பிலவங்களோடும் உலாவிவருகையில் தாமோதரன் கபடமாய் அவரைச் சொக்கன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்துவிட்டான். அக்கே சொக்கனுடைய மனைவியும் குழந்தைகளும் அன்ன ஆகாரமின்றி குளிரினால் நிரைத்துப் போர்க்கத் துணியற்று வருந்திக்கொண்டிருந்தார்கள். தாமோதரன் குதிரையையும் பகவத்கீதையையும் விற்றுக்கொடுத்த பணத்தை பழைய கடன்களுக்காகக் கொடுத்துவிட்டதால் திரும்பவும் கஷ்டப்படவேண்டியதாயிற்று. இப்படிப்பட்ட நிலைமை ஆளவந்தாருடைய மனதை உருக்காமல போகுமா? உடனே அவர் கையிலிருந்த பத்து சவரனைச் சொக்கன் மனைவியிடம் கொடுத்து அவனுக்கும் அவன் குழந்தைகளுக்கும் வேண்டிய உடைகளை உடனே வாங்கிக்கொள்ளும்படி ஆக்கியாபித்தார். அம்மவெளிய ஸ்திரீ இந்த உதாரகுணத்திற்குக் கண்ணீர் சொரிந்து, நல்லறிவு காட்டித் தாமோதரன் அவர்களை வெகுநாளாகப் பட்டினிகிடந்து சாகாமல் காப்பாற்றி வருவதையும், இருதக்ஷணையோடு ஆளவந்தாரிடம் புகன்றாள். அவள் திரும்பவும் "எங்களுக்குச் சொந்தமாய் உண்ண ஒரு கவளமன்னம் கிடையாது. உடுக்க ஒரு கந்தல் கிடையாது. தாமோதரருடைய உபகாரத்தால் தான் பிழைத்து வருகிறோம்" என்றாள். தாமோதரன் தன்னுடைய அங்கியையும் இன்னம் சொந்த சாமான் பலவஸ்துக்களையும் விற்று இவர்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்திருக்கிறான்.

வீடு திரும்பி வருகையில் தாமோதரன் அக்குடும்பத்தின் வறுமையைபற்றி விஸ்தரித்து ஆளவந்தாரிடம் புகன்றான்.

சொக்கன் தன் குற்றத்துக்காக மிக்க வருந்துவதாக அறிந்ததும் ஆளவந்தார்தான் அவனை மன்னித்து அவன் குடும்பத்தை ரக்ஷிப்பதாக வாக்களித்தார்.

இதைக் கேட்ட தாமோதரனுக்குப் பரம ஆனந்தமுண்டாயிற்று: மழை 'சோ' என்று பொழிந்தபோதிலும் திரும்பசொக்கன் வீட்டுக்கு ஓருமைல்தூரம் ஓடி அத்தஸ்திரீயிடம் சந்தோஷ சமாசாரத்தைச் சொன்னான்: அதுல் சிக்ரத்திலேயே அவன்சந்தோஷ சமாசாரத்தை மாற்றித் துக்கசங்கதி சொல்ல வேண்டியதாயிற்று: மேற்சொன்னபடி சொக்கன்மேலேற்பட்ட புதுவியாச்சியத்தால் அவன் ஆளவந்தார்தயவை இழக்கவேண்டியதாயிற்று.

9. அததியாயம்.

அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு.

தாமோதரனைப்போல பச்சாதாபகுணம் பிலவங்கனிடமில்லை: ஆனால் அவனைவிட பிலவங்கன் நியாயவிவேகத்தில் தேர்ச்சியுடையவன்: தார்க்கிகர் கந்தர் இருவரிடமும் சிலகூப்பெற்றவனுகையால் கருணை என்பது கடவுளுக்கே உரித்தானதென்றும் மனிதன் நியாயத்தைச் செய்யவேண்டியவன் என்றும் அபிப்பிராயங்கொண்டவன். அவன் தாமோதரனுக்கு முன்னால் மௌனமாயிருந்தபோதிலும் தன் மாமன் அன்று சொக்கனுக்கு நன்மை செய்ய உத்தேசித்தது அவனுக்குப் பொறுக்கவில்லை. ஆதலால் நாம் மேலே ஜாடையாய்ச்சொன்ன சொக்கன் சமாசாரத்தை வெளிப்படையாக ஆளவந்தாருக்குத் தெரிவித்துவிட்டான். அந்த சங்கதி என்னவென்றால்:—

ஆளவந்தாரிடமிருந்து தள்ளப்பட்ட ஒரு வருஷத்துக்குப் பின்னும் தாமோதரன் குதிரை விற்பதற்கு முன்னும் தானும் தன் குடும்பமும் பசியால் வேதனைப் பட்டுக்கொண்டிருந்த சமயத்தில் வத்ஸர் நிலத்தின் வழியாகப் போய்க்கொண்டிருந்த சொக்கன் அங்கே ஒரு மூயல் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். அதைப்பிடித்துவந்து ஒரு வியாபாரியிடம் விற்றான். வெகு நாளைக்குப் பிறகு அந்த வியாபாரி வத்ஸர் முயலை விறபனை செய்யும்போது அகப்பட்டுக்கொண்டான். அப்பொழுது அவன் சொக்கனைக்காட்டிக்கொடுத்து தான் தப்பித்துவிடுவதாக யோசித்தான். அன்றியும் சொக்கன் வெகுநாளாகத் தனக்கு ஒன்றும் கொண்டுவந்து விற்காததால் அவனைக் காட்டிக்கொடுப்பதே சரியென்று நிச்சயித்துவிட்டான். வத்ஸர் சொக்கனை தண்டித்து தன் அதிகாரத்தைக்காண்

பிக்கவேணுமென்று தீர்மானித்து விட்டதால் அவர் வேறு விசாரணை ஒன்றுமே செய்யவில்லை.

இந்த விஷயத்தை எல்லாம் ஆளவந்தாருக்குப் பிலவங்கன் ஆதியோடந்தமாய்ச் சொல்லியிருந்தால் சொக்கனுக்கு ஒருமிகடுகியும் நேரிட்டிராது. குற்றவாளிக்குத் தகுந்த நியாயம் செய்யவேண்டுமென்று ஒரே ஊக்கமாயிருந்தபடியால் சொக்கன் முயல்பிடித்து வெகுநாளாகிவிட்டது என்பதை பிலவங்கன் மறந்துவிட்டான். விருந்தாந்தத்தையும் அதிசயோக்திபலங்காரத்தில் சொன்னான்., அவசரப்பட்டு (கள்) என்றபதத்தைச் சேர்த்துவிட்டபடியால் நடந்தவிஷயத்தை வெகுதூரம் மாற்றிக் குற்றத்தை அதிகப்படுத்திவிட்டது. சொக்கன் முயல்பிடித்தான் என்பதற்கு முயல்கள் பிடித்தான் என்று பிலவங்கன் மறந்து சொல்லிவிட்டான். இந்தச் சிறியதவறு விசாரணை நடந்தால் திருத்தப்பட்டிருக்கும். ஆனால் பிலவங்கன் சமாசாரத்தைத் தனியாக ஆளவந்தாரிடம் சொல்லும்போது தான் சொல்வதை ரகஸியமாய் வைத்திருக்கவாக்குப்பெற்றுக்கொண்டான். ஆகலால்தான் விசாரணை கூட இல்லாமல் எளிய சொக்கனுக்கு சிக்ஷைவிதிக்கப்பட்டது.

சொக்கன் வீட்டார் அடைந்த சந்தோஷம் அற்பசுகமாயப் போய்விட்டது. மறுநாள் காலையில் ஆளவந்தார் தனக்கு புதிதாகத்தெரிந்த வேறு சிலகாரணங்களால் சொக்கன் உபகாரத்திற்கு அருகனல்ல னென்றும், தாமோதரன் அவனைப்பற்றிப் பேசக்கூடாதென்றும் கட்டளை இட்டார். அவனுடைய குடும்பம் பட்டினிகிடந்து சாகாதபடி உதவிசெய்வதாகவும், ஆனாலும் சொக்கன்மாத்திரம் நியாயப்படி தண்டனையடையும்படி விட்டுவிடுவதாகவும் சொன்னார்.

ஆளவந்தாருக்கு இப்படி திடீர் என்று கோபம் வந்ததற்குக் காரணம் தாமோதரனால் அறியமுடியவில்லை. பிலவங்கனிடம் கொஞ்சம் கூட அவனுக்கு சந்தேகம் கிடையாது. இதனால கொஞ்சங்கூட மனம் சலியாது திருப்பவும் தன் அன்பனைய சொக்கனைக்காக்க வேறு ஏற்பாடுசெய்தான்.

கொஞ்சநாளாக தாமோதரனிடத்தில் வத்ஸருக்கு அதிக நேசம் உண்டாகிவிட்டது. அவனுடைய தைரியத்தையும் சாமர்த்தியத்தையும்பார்த்து அவனைத் தகுந்தபடி ஆதரித்துவந்தால் தாமோதரன் ஒரு பெரிய மனிதன் ஆவான் என்றும், அவ்வளவு சாமர்த்தியமான பிள்ளை தனக்கு ஒருவன் கிடைத்தால் தனக்கு எவ்வளவோ சந்தோஷமுண்டாகும் என்றும் சொல்லியிருந்தார்.

வத்ஸர் தாமோதரனை அடிக்கடி தன் வீட்டுக்குவிருந்துண்ண அழைப்பார். அவனை இட்டுக்கொண்டு அடிக்கடி வேட்டைக்குப்

போவார். வத்ஸருடைய பிரியமான வஸ்துக்களாகிய துப்பாக்கிகள் நாய்கள் குதிரைகள் எல்லாவற்றையும் தன்னுடையன போலவே தாமோதரன் உபயோகிப்பான். இத்தப்பிரதியை முன்னிட்டு சொக்கனை வத்ஸர்வீட்டில் வேலைக்கு அமர்த்திவிடுவதாக தாமோதரன் தீர்மானித்தான்.

இந்த எண்ணத்தின்மேல் தாமோதரன் பதினேழுவயதுள்ள வத்ஸருடைய குமாரியான சோபையிடம் சென்றான். சற்று முன்சொன்ன வேட்டை வஸ்துக்களுக்கப்புறம் உலகத்தில் இப்பெண்ணைத்தான் வத்ஸர் அதிகமாக நேசித்துவந்தார். இவளிஷ்டப்படியே வத்ஸர் எதுவேண்டுமானாலும் செய்வார். இவளுக்கு தாமோதரனிடமிருந்த பிரியத்தினால் தாமோதரன் சொன்னபடியெல்லாம் இவள் நடப்பாள். இவள் இச்சரிதைக்குக் கதாநாயகியாகையால் இவளைப்பற்றி அடுத்த அதிகாரத்தில் வர்ணிப்போம்.

4-வது சம்புடம்.

1. அத்தியாயம்.

அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு.

வத்ஸருடைய ஒரே பெண்ணான சோபை நடுத்தரவளர்ச்சியுள்ளவள். ஆனால் அவளைப்பார்த்தால் உயரமென்றே சொல்ல வேண்டிவரும். அவளது உருவம் குற்றமின்றி அமைக்கப்பட்டிருந்ததுமன்றி ஸ்பரிசிக்க ஆனந்தம் தரக்கூடியதா யிருந்தது. அவயவங்களின் அமைப்போ உடல் கூறுபாட்டிற்கு ஒத்திருந்தது. கருத்த மயிர் முழந்தான்வரையில் தொங்கும். அவளழகைக் கண்டு பொறுமைகொண்டவர்கள் அவள்தனத்தில் குறைசொல்ல இச்சித்தால் அவளுடைய நெற்றி இன்னம் கொஞ்சம் மேட்டாயிருந்தால் நன்றாயிருக்கும் என்னலாம். அவள் புருவமோ அடர்ந்தும் ஒழுங்காயும் மிக்க அழகாய் வளைந்திருந்தது. அவள் கண்ணின் ஒளியும் அவளுடைய இதமான குளிர்ந்த பார்வையும் மனங்கவரத் தக்கவாயிருந்தன. அவளுடைய மூக்கு கொஞ்சமேனும் கோணலின்றி நேராக அமைந்திருந்தது. அவளுடைய வாயும் இரு உதடுகளும் கோவைப்பழம்போல் சிவந்திருந்தன. உதடுகளினிடையில் முத்துப்போன்ற இரு வரிசைப் பற்கள் பிரகாசித்துக்கொண்டிருந்தன. கன்னங்கள் வாடாமல் பரந்திருந்தன. புன்சிரிப்புக்கொள்ளின் அவள் வலது கன்னம் சுழியும். அவளது மோவாய் முகத்தினழகை எடுத்துக்காட்டியது. அது பெரிதா சிறிதா என்று சொல்ல முடியாது. ஆனால் பெரியதிலே

தான் சேர்க்கவேண்டும். அவள் வடிவம் ரோஜாநிற்ம் என்று சொல்வதற்குப் பதில்ாக பால்நிறம் என்று சொல்வது சரியாகும். தேகப்பயிர்ச்சியாவது நாணமாவது அதிகமாகவடைந்தால் அவள் உடம்பெல்லாம் சிவந்து தோன்றும். அவளது கழுத்தோ ரீண்டு சங்குபோல் அமையப்பெற்றது. அவள் கழுத்தழகில் மேம் பட்டவள். சோபையினுடைய புறவுரு இப்படிப்பட்டதாகும். அகமும் அதற்குக் கீழ்ப்பட்டதல்ல. அவளுடைய தேகம் எவ் வளவு சுத்தமானதோ அவ்வளவு சுத்தமானது அவளுடைய மன மூம்; உள்ளின் இனிமையால் அவளது புறத்துக்கு மேன்மை யுண்டாயிற்று என்று சொல்லலாம். அவள் புன்சிரிப்புக்கொள்ளும் போது அவள் முகத்திற்குண்டாகும் அழகு அவள்முக உறுப்பு களில் ஒன்றுவது கொடுக்கதரமில்லாதது.

சுபாவத்திலேயே கிடைத்திருந்தபல வல்லமைகளும் வித் தையினால் விருத்தியடைந்திருந்தன. அவள் பாலியத்தில் உலகத் தில் மிக்க அனுபவமிருந்து நுண்ணறிவு கூடியதன் அத்தையிடம் கற்பிக்கப்பட்டாள். இந்த அத்தை அரண்மனையில் வாழ்ந்து பிறகு கிராமத்தில் வசித்தவள். சம்பாஷணையி லாகட்டும் கல்வி யிலாகட்டும் சோபை மிக்கதேர்ந்தவள்.

2. அத்தியாயம்.

எண்பதத்தா லெய்த வெளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு.

இப்பொழுது சோபைக்குவயது பதினெட்டு. ஏனையோ ரைவிட அவளிடம் அவள்தந்தைக்கு மெத்தபக்ஷம். சொக்கனுக் குவத்லர் வீட்டில் வேலைகொடுக்கும்படி சோபையினிடம்தாமோ தரன் சிபார்சு செய்தான்.

இதைச்சொல்லுமுன் சிலபூர்விக விஷயங்களைப்பற்றி ஆராய வேணும். ஆளவந்தாரும் வத்ஸரும் ஆப்தரண்பர்கள். அல்லாத போதிலும் அவர்கள் ஒருவரை யொருவர் நன்றாக அறிந்திருந்த படியால் அவர்கள் வீட்டுக் குழந்தைகள் பாலியமுதல் சினேகமா யும் கூடிவிளையாடியும் வந்தார்கள்.

பிலவங்கனுடைய சுணங்கிய தன்மையினும் தாமோதர னுடைய குதூகலகுணம் சோபைக்கு நன்றாகப்பிடித்திருந்தது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தாமோதரனுக்கே கௌரவம்கொடு ப்பாள். பிலவங்கனல்லாமல் வேறெந்த பதட்டகுணமுடையவனு யினும் சோபைதாமோதரனிடம் காண்பிக்கும் மிதமிஞ்சியபக்ஷத திற்காக அசூயைகொண்டிருப்பான். ஆனால் வெளிப்படையாகப் பொறாமையைக்காட்டாததினால் பிலவங்கன் மனதில் என்ன நினை த்திருந்தான் என்பதை யறிய நம்மால் முடியவில்லை.

அதிகக்கருத்துடன் வளர்த்து பாடங்கற்பித்திருந்த ஒரு சிறு பறவையை தாமோதரன் அதிபாலியமா யிருக்கும்போதே சோபைக்குப்பரிசளித்திருந்தான். அப்பொழுது பதின்மூன்று வயதா யிருந்த சோபை அதைப் பாராட்டி அதற்கு இனிய அமுதளித்து மிகபக்ஷத்துடன் தடவிக்கொடுத்து அதனிடம் இனிமை யாக விளையாடுவாள். அத்தப்பறவைக்கு "தாமு" என்று பெயரிட்டு எங்குபறந்து போய்விடுமோ என்று ஒருசிறிய கயிற்றால் அதைப் பிணித்து வைத்திருந்தாள். அப்பறவை எஜமானியிடம் மிகவும் பழகி அவள் கையிலிருக்கும் ஆகாரத்தைப்புசிக்கும். சில சமயங்களில் விரலில் உட்கார்ந்தும் மடியில்படுத்தும் உறங்கும்.

ஒருநாள் ஆளவந்தாரும் அவருடைய குடும்பமும் வத்ஸர் விட்டுக்கு விருந்துண்ணவந்தார்கள். அப்பொழுது பிலவங்களும் சோபையும் தோட்டத்தில் பேசியிருந்தபோது சோபை அந்தப் பறவையிடம் மிகவும் பக்ஷமாயிருப்பதைப்பார்த்து அதைத் தன்னிடம் கொஞ்சநேரம் கொடுக்கும்படி வேண்டினான். அவன் வேண்டுகோளுக்கு இணங்கி சோபை அப்பறவையை அவனிடம் கொடுத்தாள். அதைவாங்கியதும் பிலவங்கன் அதின் காலிலிருந்த கயிற்றை அறுத்து அதை உயரத்தூக்கி எறிந்தான்.

அந்த மூட பக்ஷி சோபை தனக்குச் செய்திருந்த உபகாரத்தை யெல்லாம் மறந்து பறந்தோடிப்போய் தூரத்தில் ஒரு மரக்கிளையில் உட்கார்ந்தது. பறவை பறந்து போனதைக் கண்ட சோபை கொஞ்சதூரத்திலிருந்த தாமோதரனுக்குக் கேட்கும்படி கூச்சலிட்டாள். அதைக் கேட்டதும் அவன் இவளிடத்துக்கு ஓடிவந்தான். நடந்த விஷயத்தைத் தெரிந்துகொண்டதும் பிலவங்கனை அயோக்கியனென்று வைதுவிட்டு தன் அங்கியைக் கழற்றிப் பறவை உட்கார்ந்திருந்த மரத்தில் ஏறினான்.

உச்சிமரமேறி அப்பக்ஷியைப் பிடிக்கும் தருவாயில் கிளை முறிந்து கீழிருந்த கால்வாயில் அவன் தொப்பென்று விழுந்தான். அப்பொழுது சோபைக்குத் திகில் பிடித்துவிட்டது. தாமோதரன் உயிருக்கு பங்கம் வரும்போ லிருந்ததால் முன்னிலும் பதின் மடங்கதிகமாகக் கூக்குரலிட்டாள். பிலவங்கனும் தன்னாலான மட்டும் கத்திக் கூச்சலிட்டான். இந்தத் தோட்டத்திற்கு அருகாமையில் ஒரு அறையில் உட்கார்ந்திருந்த ஜனங்களெல்லாம் கூக்குரலைக் கேட்டுத் திகிலடைந்து தோட்டத்திற்கு ஓடி வந்தார்கள். அவர்கள் கால்வாயண்டை வருமுன்னமேயே தாமோதரன் விழுந்த இடத்தில் ஆழ மதிகமிராததால் கரையேறி வந்திருந்தான். அங்கு நீர் சொட்டச்சொட்ட குளிரால் நடுங்கிக் கொண்டிருந்த தாமோதரன்மேல் புலி பாய்வதுபோல் தார்க்கிகர் பாய்ந்தார்.

ஆனல் ஆளவந்தார் அவரை நிதானிக்கச்செய்து பிலவங்கனைப் பார்த்து "குழந்தாய் நடந்த விஷயம்யாது?" என்று வினவினர்.

பிலவங்கன் "மாமா இதற்கு நான்தான் காரணம். என்னல் இத்தத் தொந்தரை நேரிட்டதற்கு வருத்தப்படுகிறேன். சோபையின் பக்ஷியைக் கையில் வைத்திருந்தேன். அது சுதேச்சையாகத் திரிய விரும்பியது என்று எனக்குத் தெரிந்தது. அதினிஷ்டத்தைப் பூர்த்திசெய்ய எண்ணினேன். ஒன்றைக் கட்டிப் போட்டு வைப்பதும் சிறைவைப்பதும் தப்பென்றும், இயற்கைப்படி ஒவ்வொன்றும் சுதேச்சையாக இருக்கவேணுமென்றும் என் அபிப்பிராயம். பிராணிகளைக் கூண்டிலடைத்து வைப்பது மதசம்மதமன்று. நம்மைக் கட்டிவைத்தால் நமக்கு எப்படிச் சம்மதமிராதோ அப்படிப் பறவைகளும் சிறைப்பட சம்மதிக்கா. இதைப் பற்றி சோபை இவ்வளவு வருத்தப்படுவாள் என்று எனக்குத் தெரிந்திருந்தால் நான் அதைப் பறந்தோடவிட்டிருக்கமாட்டேன்; அந்தப் பக்ஷிக்கும் இப்படி நேர்ந்திருக்குமென்று தெரிந்திருந்தால் நான் இப்படிச் செய்திருக்கமாட்டேன். ஏனெனில், தாமோதரன் அதைப் பிடிப்பதற்கு மரத்திலேறித் தண்ணீரில் விழுந்ததும் இந்த பக்ஷி திரும்பப் பறந்து ஒரு வல்லூறின் வாயிலகப்பட்டுக்கொண்டது" என்றான்.

தாமோதரனுக்கு நேர்ந்ததைப்பற்றிய வியாகூலத்தால் சோபை பக்ஷியைப்பற்றி கவனிக்கவில்லை. இப்பொழுது அதன் முடிவைப் பிலவங்கன் சொன்னதும் கண்ணீர்விட்டுக் கதறினாள். ஆனல் ஆளவந்தார் அதினும் மேலான பக்ஷி கொடுப்பதாகச் சொல்லி அவளுக்கு ஆறுதல் சொன்னர். அவள் தன் பட்சியைத் தவிர வேறு பக்ஷி வேண்டாமென்றாள். ஒரு அற்ப பக்ஷிக்காக இவ்வளவு வருந்துவதைப்பற்றி அவள் தகப்பனர் அவளைக் கடிந்து கொண்டார். பிலவங்கன் தன் மகனையிருந்தால் அவன் செய்த அடாத காரியத்துக்காக அவன் முதுகுத்தோலை உரித்திருப்பதாகவும் சொன்னர். சோபை தன் அறைக்குத் திரும்பினாள். இரு சிறுவரும் வீடேகினர்கள். மற்ற பெரியோர்க ளெல்லாம் சிற்றுண்டிக்காக அறைபோய் உட்கார்ந்தார்கள். அங்கு பக்ஷியைப் பற்றி ஒரு பெரிய உபன்னியாசம் நடந்தது. அதை அடுத்த அத்தியாயத்தில விவரிப்போம்.

3. அத்தியாயம்.

கானெகொடி தியாழ்கோடு செல்வித்தாங் கன்ன
வீனபடி பாலாற் கொளல்.

கந்தர் ஆளவந்தாரைப் பார்த்து "பிரபுவே தங்களுடைய மருமகனுடைய புத்திசாலித்தனத்திற்கு நான் அவனை மெச்சு

கிறேன். இவ்வளவு பாலியத்திலே நன்மை தீமையைப் பகுத்தறியும் படியான சக்தி யுடையவனு யிருக்கிறானே. இயற்கைப் படி ஒவ்வொரு பிராணியும் சுயேச்சையாகத் தியவேண்டும். அப்படி இருக்க ஒன்றைக் குற்றமின்றிச் சிறைவைப்பது இயற்கைக்கு ஒவ்வாது. தங்கள் மருமகன் கூறிய வார்த்தைகளே நான் எப் பொழுதும் மறக்கமாட்டேன். இந்த இளமையிலேயே இவ்வளவு கோசர புத்தியுடையவன் உலகத்தில் பெருங்காரியத்தை முடிப் பதற்காக அவதரித்தவனுக இருக்கவேண்டும்."

தார்க்கிகர்:—பிலவங்கள் உபயோகித்த வேறொரு வாக்கியம் மிகவும் அறிவுடைத்து. இயற்கை யமைப்பு என்று சொல்வது வீண்வார்த்தை. நம்மை அடைத்து வைக்க நாம் எப்படி ஒவ் வோமோ அப்படியே இதர பிராணிகளையும் அடைத்து வைப் பது அவைகளுக்கு ஒவ்வாது என்று பிலவங்கன் சொன்ன வார்த் தை சாஸ்திரோக்தமானது. நான் கற்பித்ததெல்லாம் வீண் போகா ததைப்பற்றி நான் சந்தோஷப் படுகிறேன்.

கந்தர்:—தற்பெருமையைப் பேசுவது சரியானால் நானும் பெருமைபேசிக்கொள்ள இடமிருக்கிறது. இந்தப்பையன் நன்மை தீமையைப் பகுத்தறியும் குணத்தை யாரிடமிருந்துகூற்றுக்கொண் டான்? இயற்கை விதியிராவிட்டால் உலகத்தில் சரியேது தப் பேது.

தார்க்கிகர்:—என்ன? நீர் சாஸ்திரம் பொய்யென்று சொல்லு கிறீரா? நான் ஆஸ்திகனோடு பேசிக்கொண்டிருக்கிறேனு? நாஸ்திக னோடு பேசிக்கொண் டிருக்கிறேனு?

வத்லர்:—உங்கள் இயற்கை விதியெல்லாம் பாழாய்ப்போகட் டும். நீங்கள் பேசுகிற சரிதப்பு எல்லாம் எனக்கு ஒன்றும் தெரி யாது; என் பெண்ணினுடைய பறவையைப் பிறன் எடுத்துக் கொண்டது பிசகு; சிறு பையன்களே இந்தமாதிரி செய்யக் கற்பிப் பது அவர்களைத் தூக்கு மரத்துக்கு ஆளாகச் செய்வதுதான். ஆள வந்தார் அவரிஷ்டப்படி செய்யலாம்.

ஆளவந்தார்:—என் மருமகன் செய்கைக்கு நான் மிகவருந்து கிறேன். ஆனால் அவனைச் சிக்ஷிப்பதற்கு உடன்படேன். அவன் கெட்ட எண்ணமின்றி தயாளகுணத்தால் அந்தப் பறவையைப் பறக்கவிட்டான். அவன் பக்ஷியைத் திருடியிருந்தால் அவனைக் கொடுமையாய் சிக்ஷித்திருப்பேன். ஆனால் அவனுடைய எண்ண மது வன்று. அவன் யோஜனையின்றி அவசரப்பட்டுப் பக்ஷியைத் தப்புவிட்டது குற்றந்தான். ஆனால் அவன் சிறுவனுகையால் அக் குற்றம் மன்னிக்கத் தக்கதே.

கந்தர்:—(சும்மாயிருந்தால் தன் அபிப்பிராயத்தை மற்றவர் கள் கடிந்ததாக ஏற்படுமென்று எண்ணி) ஆளவந்தார் அயலார்

சொத்தைப் பற்றியும் அதின் உரிமையைப் பற்றியும் அதிக மதிப்பு வைத்திருக்கிறீர். பெரிய விஷயங்களில் நியாயந் தீர்க்கும் போது உரிமைகளையும் நஷ்டங்களையும் கவனிக்கக் கூடாது.

தார்க்கிகர்:—இனிமேல் நீர் எனது மாணாக்கர்களுக்கு உமது அசாஸ்திரீகமான புத்தியைப் புகட்ட வேண்டாம். அவர்கள் என் கீழ்கல்வி கற்கும்வரையில் உம்முடைய புத்திக்கு சக்காது கொடாத படி செய்கிறேன். உம்மால் கெட்டுப்போன தாமோதரன் அதோ இருக்கிறான் பாரும். அவன் ஒருநாள் பிலவங்களோடு சண்டை போடும் போது சாஸ்திரத்தை நம்பி நன்னடக்கையில்லாதிருப்பதால் என்ன பயன் என்று சொல்லக்கேட்டேன். இது உம்முடைய கொள்கைகளில் ஒன்றுதலால் நீர்தான் சொல்லிக்கொடுத்திருக்க வேண்டும்.

கந்தர்:—நான் கெடித்துவிட்டேன் என்று ஏன் சொல்லுகிறீர்? எது நியாயமோ எது சரியோ அதைப்பற்றிச் சொன்னால் சிரித்து எளனம் பண்ணுகிறானே, அது நீர்தானே சொல்லிக்கொடுத்திருக்கவேண்டும். அவன் உம்முடைய சிஷ்யனே. அவனுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை. பிலவங்கன்தான் என்னுடைய பையன்; அவன் சிறுவனாயிருந்தபோதிலும் அவனுக்குத் தெரிந்திருக்கும் நியாய அறிவை உம்மால் கலைக்கவே முடியாது.

தார்க்கிகர்:—(உதாசினமாக முச்செறிந்து) அப்படியா நீர் எதுவேண்டுமானாலும் செய்து பாரும். உம்முடைய புத்திமதிக்கு வசப்படுபவன் பிலவங்கனல்ல. எவ்வளவோ பிரயாசைப்பட்டு சாஸ்திர ரகஸியங்களை எல்லாம் நான் கற்பித்திருக்கிறேன்.

கந்தர்:—நானு மவனுக்கு எவ்வளவோ இயற்கை ரகஸியங்களைக் கற்பித்திருக்கிறேன். தர்மசிந்தை யில்லாமல் அவனந்த பக்ஷியைச் சுதேச்சையாகத் திரியும்படி விடுவானு. இந்த குணத்தை அவனுக்குக் கற்பித்தது நானே என்று பெருமை பேசிக் கொள்ளத் தடையென்ன?

தார்க்கிகர்:—நானன்றோ புண்ணியம் பாபங்களை விளக்கிக் கற்பித்து பிராணிகளை பந்தபடுத்தாது இருப்பது சாஸ்திர சம்மதம் என்று சொல்லியிருக்கிறேன்.

வத்ஸர்:—சரிதான்! நீங்கள் இருவரும் சேர்ந்து என் புத்திரி கையிலிருந்த பக்ஷியைக் கொள்ளையடிக்க நன்றாய்க் கற்பித்திருக்கிறீர்கள். என்னுடைய கௌதாரிகளைப்பற்றி நான் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் உம்மைப்போலொத்த தர்மவானும் புண்ணியவானும் சேர்ந்து என் பக்ஷிகளை யெல்லாம் பறக்கவிட்டு விட்டால் நான் என் செய்வது.

பிறகு வத்ஸர் அங்கு வந்திருந்த சட்ட நிபுணர் ஒருவரை முதுகில் தட்டி நீர் என்ன சொல்கிறீர். பிலவங்கன் செய்தது நியாயத்திற்கு விரோதமல்லவா என்று கேட்டார்.

சட்ட நிபுணர்:—கௌதாரியைப் பற்றியதாக விருந்தால் சந்தேகமின்றி வழக்கு தொடுக்கலாம். அது இயற்கைப் பொருளாக விருந்தபோதிலும் உரிமையாக்கப் பட்டதால் அதனிடம் உமக்கு சுதந்திரமுண்டு. ஆனால், சோபையையிலிருந்த பக்ஷி உரிமையாக்கப்பட்ட போதிலும், பாடக்கூடியதாயிருப்பதாலும் அற்பத்தன்மையாதலாலும் அதை அனைவருக்கும் பொதுவென்று கருதவேண்டும். ஆதலால் வாதிமேல் வழக்குத் தொடுத்தல் சரியாகாது.

வத்ஸர்:—நாமிப்பொழுது வேடிக்கையாக ஜனங்களைப்பற்றியும் ராச்சியத்தைப்பற்றியும் பேசுவோம். நீர் சொன்னதில் ஒன்றுவது எனக்கு ஏற்படவில்லை. நீர் சொன்னது கல்வியின் திறனையும் புத்திமதியாயு மிருக்கலாம். ஆனால் எங்களுக்கு அவை இனி வேண்டியதில்லை. இது என்ன! நீங்கள் ஒருவராவது உண்மையாய் மெச்சப்படவேண்டிய அந்தப் பையன் தாமோதரனைப் பற்றி ஒரு வார்த்தையாவது பேசக்காணோம். என் மகனுக்கு உபகாரம் செய்வதற்காக ஆபத்திற் குள்ளாகிய தாமோதரன் தயாளகுணமும் தீரச்செயலு முடையவன். அதைத் தெரிந்து கொள்ளும்படியான அறிவு எனக்கிருக்கிறது. அவன் சௌக்கிய மாகமாத்திர மிருந்தால் நான சாகும் வரையில் அவனை நேசிப்பேன்.

இன்னும் சம்வாதம் வெகுநேரம் நடந்திருக்கும். ஆனால் ஆளவந்தார் வண்டியைப் போடச்சொல்லி அதில் தார்க்ஷ்யரையும் சுந்தரையும் ஏற்றி வைத்துக்கொண்டு அவர் மாளிகை போய்விட்டார்.

4. அத்தியாயம்.

செய்வினை செய்வான் செயன்முறை யவ்வினை
யுள்ளறிவா னுள்ளங் கொளல்.

அன்றுமுதல் சோபை தாமோதரனை நேசித்தும் பிலவங்கனை முழுதும் வெறுத்தும் வந்தாள். அவள் மனதிலிருந்த இவ்விரு குணங்களையும் அடிக்கடி நேரிட்ட பற்பல சிறு விஷயங்கள் விருத்தியாக்கிக்கொண்டு வந்தன. இருபையன்களுடைய குணங்களையும் வேண்டிய அளவு முன்னமேயே சொல்லி இருப்பதால், சோபைகொண்ட அபிப்பிராயத்துக்கு வாசகர்களே காரணம் கண்டு கொள்ளக்கூடும். தாமோதரன் சாமர்த்தியமும் யோஜனையற்றவனையும் பதட்டக்காரனையு மிருந்தபோதிலும், தன் க்ஷேமத்

தைக் கோரமால்பி றர்க்கு நன்மை செய்வதிலேயே கருத்தாயிருந் தான். பிலவங்கன் யுக்திசாலியாயும் தந்திரவானுயும் பெரிய மனு ஷத்தன மூள்ளவனுயும் நிதானக்காரனுயும் இருந்தபோதிலும், தன்னுடைய நன்மையன்றி வேறு ஒருவர் நன்மையையும் நாடா தவன் என்று சோபை நன்றாய் இளவயதிலேயே அறிந்துகொண் டாள்.

சோபைதன் அத்தை வீடுபோய் மூன்றுவருஷ மிருந்தாள். அந்த சமயத்தில் இச்சிறுவர்களை அவள் பார்க்க இடமில்லை. அத்தையுடன் ஒருநாள் ஆளவந்தார் வீட்டிற்கு விருந்து சாப்பிட வந்திருந்தாள். இது தாமோதரனும் சொக்கனும் கௌதாரி சுட்ட தின் பின்பு. புசிக்கும்போது தாமோதரனுடைய கதை முழு வதையும் சோபை கேட்டிருந்தாள். அவள் தாதி வந்து அவளை "அம்மா இன்று பிலவங்கரைப் பார்த்தீர்களா" என்று கேட்ட தற்கு சோபை அயோக்கியதையையும் துரோகத்தையும் எப்படி வெறுக்கிறேனே அப்படியே பிலவங்கன் என்னும் பெயரைப் பகைக்கிறேன். நல்லெண்ணத்தால் உண்மையை மறைத்ததற்காக தாமோதரனை அவ்வளவு கொடுமையாகச் சிக்ஷிக்கும்படி ஆளவந் தார் இடங்கொடுத்தாரே, இதுவும் ஆச்சரியந்தான்" என்றுதான் கேட்ட கதையைத் தன் தாதிக்குச் சொல்லி "தாமோதரன் மேன் மையான குணமுடையவனல்லவா?" என்று கேட்டாள்.

இச்சிறுமி தன் தகப்பனுர் வீடு திரும்பி வந்ததும் அவள் தகப்பனுர் அவளை வீட்டிற்கு எஜமானியாக்கினுர். அங்கே தாமோ தரன் அடிக்கடி வந்து உட்கார்ந்து சாப்பிடுவான். தாமோதரனு க்கு அப்பொழுது வயது இருபது. மிக்க ரூபவானுன ஆண்பிள்ளை என்று ஊரிலுள்ள ஸ்திரீகளால் புகழப்பட்டான்.

தாமோதரன் மற்றவர்களினும் சோபைக்கு அதிக மரியாதை செய்வான். அவனுடைய லாவண்ணியத்துக்கும் செல்வத்துக்கும் அறிவுக்கும் இனிமையான நடத்தைக்கும் இம்மரியாதை தகுதி யானதே என்று நம்பினுன். உண்மையில் அவ்வளவு மேன்மை வாய்ந்த சோபையிடம் அவன் காதல் கொள்ளாததால் அவன் ஒரு மூடனுக இருக்கவேணுமென்று வாசகர்கள் நினைப்பார்கள். அவன் அப்படிக் காதல் கொள்ளாமைக்குக் காரணம் வேறு.

சோபை அதிக பரிசுத்தமும் அடக்கமும் மனச்சந்துஷ்டியு முள்ளவள். அதிலும் தாமோதரனுட னிருக்கும்போதெல்லாம் மனம்பூரிப்பாள். அவன்பாலியனுயும் பதட்டக்காரனுயும் இராதி ருந்தால் இதைக்கண்டு கொண்டிருப்பான். வத்ஸருடைய எண்ண மும் தோட்டத்திலும் குதிரைகளிலும் வேட்டைநாய்களிலும் செல்லாதிருந்தால் அவர் சோபைக்கு தாமோதரனிடமிருக்கும் அதிவாஞ்சையை யறிந்துகொண்டிருப்பார். உண்மையில் அவருக்

குக் கொஞ்சமேனும் சந்தேகமே இல்லாதிருந்ததால் தாமோதரன் தன் மகளோடு இணைபிரியாது குலாவும்படி விட்டுவந்தார். தாமோதரனும் தனக்குத்தெரியாமலே சோபையினுடைய அன்பை மிகவும் விருத்திசெய்துவிட்டான். மகா தந்திரமுள்ள காதலன் ஒருவன் கூட தன்னை ஒருத்தி இவ்வளவு தூரம் காதலிக்கும்படியாகச் செய்திருக்க முடியாது.

இப்படி இருக்கும்போது ஒருநாள் சாயந்தரம் சோபை தனித்திருக்கையில் தாமோதரன் அங்கு வந்து அவளிடம் தனக்கு ஒரு தயவுவேணுமென்றும் அவள் அதை மறுக்காமல் அளிக்க வேனுமென்றும் வேண்டினான்.

இவ்வாலிபனுடைய நடத்தையாவது இவன் சமாசாரத்தைச் சொல்ல ஆரம்பித்தனிதமாவது அவன் சோபையிடம் காதலடைந்திருந்து அதைத்தெரிவிப்பதாகத் தோன்றவில்லை. ஆனால் அவளுக்கு இயற்கையாக மனதிலுதித்த எண்ணத்தினால் அவள் கன்னத்தினின்றும் சிகப்பு நிறம் மறைந்தது. கைகால்கள் உதறின. நா குழறிற்று. ஆனால் தாமோதரன் அவளைப்பேசும்படி கஷ்டப்படுத்தாமல், சொக்கன் மிக்க வருந்துவதையும் அவனுக்கு இந்த சமயத்தில் உபகாரம் செய்யாவிட்டால் அவன் வீணை நசித்துவிடுவான் என்பதையும் சொல்லி, அவள் தகப்பனாரிடம் பேசி அவனை வேலையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான்.

இதைக்கேட்ட சோபைக்கு நாணம் மாறிக் கூச்சம் தெளிந்தது. அன்பு நிறைந்த புன்சிரிப்புடன் "இதுதானா நீ கேட்ட பிரமாத தயவு. இதற்கு இவ்வளவு நிதானமென்ன? நீ கேட்டதை நான் மனப்பூர்த்தியாகச் செய்வேன். அவனுக்காக நான் மிகவும் பரிதாபப்படுகிறேன். நேற்று தான் அவன் மனைவிக்கு சொல்ப சாமான்கள் கொடுத்து அனுப்பினேன்" என்றாள். இவள் அனுப்பிய வஸ்துக்கள் தன்னுடைய புடவை ஒன்றும் குழந்தைகளுக்கு சில துணியும் எட்டு ரூபாய் பணமுமே. இந்த விஷயம் தாமோதரனுக்குத் தெரிந்து தான் இன்னும் உதவிசெய்யும்படி கேட்டான்.

தாமோதரன் "சொக்கன் மகா யோக்கியன் அவன் கோழி, முயல், புறு, நாய், முதலியவைகளை வளர்ப்பதில் மகா சமர்த்தன். அந்த வேலை இப்பொழுது உன் தகப்பனாரிடம் காலியாக இருப்பதால் அதை அவனுக்கு நீ செய்து கொடுக்கவேணும்."

சோபை:—"ஆகா அப்படியே செய்கிறேன். என் தகப்பனார் சொக்கனுக்கு வேலை கொடுத்தாலொழிய அவரிருக்கும் இடத்தை விட்டு நான் வருகிறதில்லை. சொக்கனும் அவன் குடும்பத்தாரும் மிக்க வருந்துவது எனக்குத் தெரியும். அவர்களுக்கு உபகாரம்

செய்யவேண்டியது மிக்க அவசியம். அதை நான் ஏற்றுக்கொள் ளுகிறேன். நண்பா! இப்போது நீ ஒரு தயவு எனக்குச் செய்ய வேண்டும்".

தாமோதரன்:— "என்னிடமிருந்து தயவாவேண்டும்? நீ இப்போது என்மேல் வைத்த பிரியத்திற்கு நான் எதுதான் செய் யக்கூடாது. என்னால் உனக்கு ஒரு காரியமாக வேண்டியதிருந் தால் என் உயிரைக்கொடுத்தாவது செய்வேன்" என்று சொல்லி சோபையின் கையைப் பிடித்து உதட்டினிடம் கொண்டுபோய் முத்தமிட்டான். இது தான் முதல்தரம் அவளை அவன் முத்தமிட் டது. சோபைக்கு முகம் கழுத்தெல்லாம் மிகவும் சிவந்துவிட்டது. அவனுக்கு மனதில் ஒருவிதமான கிளர்ச்சி உண்டாகி விட்டது. அது இப்படிப்பட்டதென்று வாசகர்களுக்கு நன்றாய்த் தெரியுமா தலால் நாம் விவரிக்க வேண்டியதில்லை.

கொஞ்சநேரம் சோபைக்குப் பேச நாவெழவில்லை. பேச வுணர்ச்சி வந்ததும் "நான் உன்னிடம் கேட்கும் தயவு என்னவென் றால் வேட்டையில் நீ என் தகப்பனுரை ஆபத்து நேரிடும்போ திருக்கும் இடங்களினின்றும் அப்புறமழைத்துச் செல்லவேண் டும். நீங்களிருவரும் வேட்டைக்காக வெளிப்பட்டுப் போகுப் போது, ஒருநாளில்லா விட்டால் ஒருநாள் என் தந்தை கைகால் ஒடிந்து வந்து சேரப்போகிறார் என்கிற திகிலா யிருக்கிறது. எனக்காக நீங்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். உனக்குப் பின்னலேயே என் தகப்பனுர் செல்பவராதலால் நீ வெகுவேக மாய்ச் சவாரி செய்யவும் கூடாது. வெகு தூரம் தாண்டவும் கூடா து" என்றுள்.

அவள் உத்திரவுப்படியே செய்வதாய் தாமோதரன் வாக்குத் கொடுத்துவிட்டு தன் வேண்டுகோளுக்கு இணங்கியதற்காக சோ பைக்கு வந்தனமளித்துவிட்டு தாமோதரன் உத்திரபெற்று வெகு மகிழ்ச்சியுடன் வெளிச்சென்றுன். சோபைக்கு மிகவும் களிப்புத் தான். ஆனால் அவளுடைய களிப்பு வேறுவிதமானது.

வத்லர் சங்கீதத்தில் மிக்க ஞானமுடையவர். அவர் ஒவ் வொரு பகலிலும் போஜனமான பின் தன் மகளை வீணைவாசிக்கச் சொல்லிக் கேட்பார். அவருக்கு மற்ற ராகத்திலும் சங்கராபர ணம் நாதநாமக்கிரியை கல்யாணி இன்னும் சில ராகங்களில் தான் பற்று அதிகம். அவருடைய குமாரி சங்கீதம் முழுதும் தேர்ச்சி அடைந்திருந்தபோதிலும் தகப்பனரிடமிருந்த காதலினல் அவ ருக்குப் பிரியமாயுள்ள ராகங்களையே வாசிப்பாள். சில வேளை தனக்குப் பிரியமான சுவரங்களை யெடுத்தும் ஆலாபிப்பாள். ஆனல் வத்லர் தனக்குப் பிரியமான ராகங்களைப் பாடச்சொன்னல் அதற்

கவள் மற்றும் பல ராகங்களிருப்பதால் அவற்றையும் கேட்க வேணுமென்று சொல்லி தான் எடுத்த ராகத்தை முடிப்பாள்.

இன்று பகலில் வத்ஸர்வந்து சங்கீதம் கேட்க உட்கார்ந்த தும் அவருக்குப் பிரியமானராகங்களை ஒன்றுக்கு மூன்று தடவை யாக அவர் கேளாமலே சோபை வாசித்தாள். இதனால் வத்ஸர் மகிழ்வடைந்து தன் இடம் விட்டு எழுந்து அவளிடம் வந்து முத்தம்கொடுத்து "முன்னிலும் நன்றாகத்தேர்ந்திருக்கி றாய்" என்று தட்டிக்கொடுத்தார். இந்தசமயத்தில்தான் சோபை தாமோதரனுக்கு வாக்குக் கொடுத்திருந்த விஷயத்தைப்பற்றித் தெரிவித்தாள். வத்ஸர் அவள் வேண்டுகோளுக்கு இணங்குவதா யும் மற்றொருதடவை கல்யாணி ராகத்தைப் பாடவேணுமென்று கேட்டார். அவள் இந்தராகத்தை வீணையில் அமைத்துவெகு இனிமையாகப்பாட வத்ஸர் ஆனந்தத்தால் தூங்கிவிட்டார். மறு நாள் காலையில் சோபைமுதல் நாள் தனக்கு வாக்குக்கொடுத்திரு ந்ததைத் தன்தகப்பனாருக்கு ஞாபகப்படுத்தினாள். உடனே தன் வக்கீலைத் தருவித்து சொக்கன்மேல் வியாச்சியம் செய்ய உத்தர விட்டிருந்ததை நிறுத்திவிடக் கட்டளை இட்டார்.

தாமோதரன் அடைந்தவெற்றிதேச மெல்லாம் பரவிற்று. சிலர் அவனுடைய நற்செய்கைக்காக அவனைப் புகழ்ந்தார்கள். சிலர் ஒரு சோம்பேறி மற்றொரு சோம்பேறியை நேசிப்பது சக ஜம்தானே என்று ஏளனம் பண்ணினார்கள். தாமோதரனிடத்தில் பிலவங்களுக்கு உண்டான கோபத்திற்கு எல்லை இல்லை. தாமோ தரன் சொக்கனைக்கண்டு எவ்வளவுக் கெவ்வளவு சந்தோஷித் தானோ அவ்வளவுக்கவ்வளவு பிலவங்கள் அவனை வெறுத்தான். சொக்கன் பிலவங்களுக்கு ஒரு தீங்கு நினைத்ததில்லை. ஆனால் அவன் காமியாய்த் திரிந்தது பரிசுத்தனான பிலவங்களுக்குப்பிடி க்கவில்லை. ஆளவந்தார் உதாசீனம் செய்து வெளியனுப்பினவ னுக்கு உபகாரம் செய்வது ஆளவந்தாருக்கு விரோதமாக நடக்க வேண்டுமென்ற எண்ணமேயல்லாது வேறல்லவென்று பிலவங் கள் எண்ணினான்.

தார்க்கிகரும் கந்தரும் அப்படியே அபிப்பிராயங்கொண்டார் கள். அதிலும் கந்தர் தாமோதரனுக்கு வயது இருபதாகி கல்வி பயிலத்தசையிலிப்பதாலும் அவன் பிருந்தாவோடு மிக நெருங்கிப் பழகுவதையும் அவள் அவனை அன்புடன் பாராட்டிவருவதை யுங் கண்டு பொறுமை அதிகமாகக் கொண்டார்.

ஆளவந்தார் இவர்களுடைய அசூயையால் மனம் மாறும னிருந்தார். தாமோதரன் செய்ததைப்பற்றித்தான் நிரம்பவும் திரு ப்தி அடைந்ததாய்ச் சொன்னார். ஆபத்திற்குதவும் அவனது நட் பும் தாமோதரனுடைய ஊக்கமும் சாமர்த்தியமும் புகழத்தக்

கதே என்றும் இப்படிப்பட்ட இன்னும் அனேக நற்குணங்களே தான் அவனிடம் காண்பிரியப்படுவதாகவும் சொன்னர்.

5. அத்தியாயம்.

இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுங்
திருவீக்கப்பட்டார் தொடர்பு.

நமது கதாநாயகன் சோபையினிடத்தில் நடந்துகொண்ட விதத்தை அங்கீகரிக்காதவர்கள் இருக்கூடிக்காரராயிருப்பார்கள். மூதல்கக்ஷிக்காரர் வத்ஸருடைய ஆஸ்திகள் எல்லாம் தனக்கு வருவதாயிருக்கும்போது அந்த சமயத்தைக் கைநழுவவிட்டானே என்று அவனே ஏளனம் செய்வார்கள். மற்றொருகக்ஷியார் ஒரு அநுரூபமானபெண் இடம் மாத்திரங் கொடுத்திருந்தால் இவனே ஆலிங்கனம்செய்து கொள்ளத்தயாராகவிருக்க அவளே வறிக்காது விட்டுவிட்டானே என்று பரிகசிப்பார்கள்.

தார்க்கிகர் போதனையோ கந்தர்போதனையோ தெரியாது. நமது தாமோதரன் நியாயத்திலிருந்தும் பிறழக் கூடாது என்ற எண்ணமுடையவன். அவன் பலவிஷயங்களில் சரியானதைச்செய்யாவிட்டாலும் அவன் மனதுக்குத்தான் செய்வது சரியே என்று தோன்றியதையே செய்வான். தவறு செய்யவேண்டிவந்தால் அதற்காகவருந்தி அதற்கு சிக்ஷை அடையவும் தானே சம்மதிப்பான். உப்பிட்டவீட்டிலும் நண்பர்வீட்டிலும் தொல்லையடிப்பதிலும் இழிவான திருட்டுத்தொழில் வேறெதுவுமில்லை என்று எண்ணுவான். மற்றொருவருடைய சொற்பவிலையுள்ளபொருளைத் திருடுவதற்கு சிக்ஷை விதிப்பதாயிருக்கையில் ஒருமனிதனுடைய ஆஸ்திமுழுவதும் போதாமல் அவனுடைய குழந்தையையும் கொள்ளே அடிப்பவனுக்கு எப்படிப்பட்ட சிக்ஷைவிதித்தாலும் ஈடாகாது என்று எண்ணியே சோபையுடைய அன்பையுணராதவன்போல் நடித்துவந்தான். அவன் சோபையைக்கண்டு மயங்கி இருந்தால் வேறுவிதமா யிருந்திருக்கும். ஆனல் ஒருவனுடைய பெண்ணை உண்மையாகக் காதலித்து அவளே இழுத்துக்கொண்டு ஓடிப்போவதற்கும் ஏனையகாரணங்களே முன்னிட்டு அவளுடன் ஓடிப்போவதற்கும் வெகுவித்தியாச முண்டு.

சோபையினுடைய பலமேலான குணங்களையும் அவளுடைய சௌந்தரியத்தையும் தாமோதரன் விரும்பினனனும், அவளிடத்தில் இவனுக்குகாதல் உண்டாகவில்லே. இதனல் அவனே மூடனென்றும் சுகம்தெரியாதவனென்றும் சொல்லிவிடக்கூடாது. உண்மை என்னவென்றல், அவனுடைய காதலே அபகரித்தவள் வேறொருத்தி இருந்தாள். இதுவரையில் இந்தவிஷயத்தை ஜாடையாகவாவது நாம் சொல்லாதிருந்ததைப்பற்றி நமது வாசகர்கள்

அதிசயிப்பார்கள். சோபைக்கு எதிரியாக ஏற்பட்ட இந்த ஸ்திரீயை இன்னவள் என்று அறியவும் ஆவல்கொள்வார்கள். பிருந்தா இவன்மேல் பக்ஷமாயிருந்ததைப்பற்றி நாம் முன்னே சொல்லியிருக்கும்போதிலும் இவன் அவளிடத்தில் பிரியங்காட்டினதாகக் கூறவில்லை.

சொக்கனுடைய குடும்பத்தைப்பற்றி முன்னே சொல்லியிருக்கிறோமல்லவா? அவனுக்கு ஒருமனைவியும் ஐந்துகுழந்தைகளும் உண்டு. இதில் இரண்டாவது குழந்தை ஒருபெண். அவளுக்கு மல்லிகா என்று பெயர். அந்தப்பக்கங்களில் அவளை மிக்க ரூபவதி என்று சொல்வார்கள். அவள் பதினாறுவயதாயிருக்கும்போது தாமோதரன் அவளைவிட மூன்றுவயது பெரியவனாயிருந்தான். அந்தசமயத்தில் அவளுடைய ரூபம் இவன் மனதைக் கவர்ந்தது. இவளை அடைவதற்கு வெகுநாளைக்கு முன்னாலேயே அவன் அவளைக் காதலிக்க ஆரம்பித்தான். இவனதுபாலியம் அவளைக்கவரும்படி தூண்டினாலும் இவனுடைய பகுத்தறிவு அவ்விருப்பை அடக்கிவந்தது. எவ்வளவு ஏழ்மையாயிருந்தபோதிலும் ஒரு யௌவனவதியைத் துன்மார்க்கத்துக்கு உட்படுத்துவது மகாபாதகமென்று அவன் கருதினான். அப்பெண்ணின் தகப்பனாரிடத்தில் தனக்கிருந்தநட்பினாலும் அந்தகுடும்பத்தின்மேல்தான் கொண்ட பரிதாபத்தினாலும் அந்தஸ்திரீயின்மேல் காமம் கொள்வது தகாதென்று தன்விருப்பத்தை அடக்கும்பொருட்டு தாமோதரன் மூன்று மாதகாலம் சொக்கன் வீட்டுக்குப் போகாமலும் அவன் பெண்ணைப்பாராமலும் இருந்துவந்தான்.

மல்லிகாவை மிக்க அழகுள்ள ஸ்திரீ என்று எல்லோரும் சொல்லிக்கொண்ட போதிலும் அவளுடைய வனப்பு இனிமையுடன் கூடியதன்று. அதுஸ்திரீயின் அழகாக இருக்கவில்லை. அவளுடைய மனமும் மெல்லியரின் மனம்போன்றதென்று சொல்லுவதற்கில்லை. அவள் எப்படி உயர்ந்தும் வலிமைகொண்டும் இருந்தாளோ அப்படியே அவளுடைய குணம் தைரியமும் அடக்கமின்மையுமாயிருந்தது. அவளுக்கு நாணமென்பது கொஞ்சமும் இடையாது. இவளும்தாமோதரனிடத்தில் காமங்கொண்டிருந்ததால் அவன் கூச்சத்தால் பின்வாங்கும்போதெல்லாம் இவள்தானே முன்றி அவனுடன் கலந்துபேசுவாள். அவன் தன் வீட்டுக்கு வராமல் நின்றுவிட்டதைத் தெரிந்ததும் அவனைக் காணும்படியாக ஏதாவது சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொள்வாள். அவன் பலவிதமாக மாயங்கள் செய்து தாமோதரனுடைய ஸ்திர புத்தியைக்கலைத்துவிட்டாள். சமயத்தில் மாத்திரம் இஷ்டமில்லாதவளைபோல பாவனைகாட்டினாலும் அவள்செய்த சூழ்ச்சியே வெற்றியடைந்ததென்று வாசகர்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

மல்லிகா மாகா சாமார்த்திய மாயும் தந்திரமாயும்கடந்துவந்த தால் தாமோதரன் தானே அவளை வசிகரித்த தாகவும் தன் காமத்துக்கு அவளை இலக்காக்கிக் கொண்டதாகவும் நினைத்துவிட்டான். தன் பேச்சைக்கண்டு மயங்கிப்போய் மல்லிகாதன் வலையில் அகப்பட்டுக்கொண்டாள் என்றும் அவன் எண்ணினான்.

இந்த மல்லிகாவினுடையசந்தோஷத்துக்கோதுக்கத்துக்கோ தான் தான் காரணமென்று தாமோதரன் நம்பிவிட்டான். அவளுடைய அழகைக் கண்டு அவன் அவளை மிக்க விரும்பினான். அவளைக் கெடுத்து விட்டதற்காக ஒரு சமயம் மிகவும் பச்சாதாபப் படுவான். அவள் தன்னை உள்ளன்போடும்காதலிப்பதற்காக அவளிடம் நன்றி யறிவுள்ளவனு யிருந்து வந்தான். இத்துடன் அவள் அழகும் அவன் மனதைத் தாக்கி இவனுக்கு அவளிடம் அந்தரங்க விருப்பத்தை உண்டுபண்ணி விட்டது.

இதுதான் சோபையினுடைய லக்ஷணங்களைக் கண்டும் தாமோதரன் மனத்தளர்ச்சி யடையா திருந்ததற்குக் காரணம். இவ்வளவு ஏழ்மையாயும் அனுதையாயு மிருந்த மல்லிகாவைக் கைவிட மனமில்லாமையால் சோபையைப் போன்ற மேன்மையான பெண்ணையும் கெடுத்துவிடக் கூடாதென்று நினைத்தான். அந்த யுவதி இவனிடம் கொண்டகாதலைக் கொஞ்சமேனும் அங்கீகரித்து இருப்பானே யானால் ஏதாவது ஒரு பெரும் குற்றம் சம்பவித் திருக்கும். அப்போழ்து இவன் ஏந்த சிக்ஷைக்கும் தகுதியானவன்தான்.

6. அத்தியாயம்.

பிறர் நாணத்தக்கது தானுணு ணுயி
னற நாணத்தக்க துடைத்து.

தன் மகள் மல்லிகாவுக்கு உண்டான வேறுபாட்டை முதல் முதல் கண்டுபிடித்தவள் அவள் தாயார். அந்த வேறுபாட்டை அயலாரிடமிருந்து மறைக்கும் பொருட்டுமுடத்தனமாய்சோபை கொடுத்த உடையைத் தரித்துக் கொண்டாள். மல்லிகை கந்தல் கனைத் தரித்திருந்த போதும் அழகாகத் தோன்றிஅக்கந்தலுடையுடன் தாமோதரனுடையவும் இன்னும் சிலருடையவும் மனதை வசீகரப் படுத்தி யிருந்தாள். ஆதலால் உயர்ந்த உடைதரித்தால் தன் அழகு அதிகமாகச் சோபித்து இன்னும் பலபேர்கள் தன்னை விரும்பும்படி செய்யுமென்று எண்ணி மல்லிகை சோபை யனுப்பிய உடையை மிக்க சந்தோஷத்துடன் அணிந்தாள். இவ்வுடையையும் சரிகைவேய்ந்த பட்டு ரவிக்கையையும் தரித்து தாமோதரன் கொடுத்திருந்த சில ஆபரணங்களையும் பூண்டு மல்லிகை சுக்கிர வாரம் கோவிலுக்குச் சென்றாள்.

மல்லிகை கோவில்போய்ச் சோந்ததும் அங்கிருந்தவர்கள் "இவள்யார்" என்று ஒருவருக் கொருவர் 'மெதுவாக விசாரிக்க லானர்கள். இவள் இன்னர் என்று தெரிந்ததும் இவளைப் பற்றி, "சூள் கொட்டியவர்களும், நகைத்தவர்களும், இழிந்து பேசியவர் களும், நிக்கைக கொட்டியவர்களும், பலரானர்கள. அக் கூட்டம் அமைதியாகக் கலையும்படி ஆளவந்தார் தன் அதிகாரத்தைச்செலு த்த வேண்டிய தாயிற்று.

இக்கோவிலுக்கு அருகாமையில் வத்ஸருக்கு ஒரு மாளிகை உண்டு.அவர் அங்குவந்திருக்கும்போது கோவிலுக்குத் தன்மகள் சோபையை அழைத்து வருவதுண்டு.மல்லிகை மௌட்டீகத்தால் நல்லுடை உடுத்தி வந்திருப்பதையும் அவளைக் கண்டு மற்ற ஸ்திரீ கள் அசூயைப் படுவதையும் சோபை கவனித்து மல்லிகையுடைய வனப்பைக் கண்டுமகிழ்ந்தாள். சோபை வீடு சென்றதும் சொக் கனை வரவழைத்து அவன் மகளைத் தன்னிடம் கொண்டுவரும் படியாகவும், தன் தாதி ஒருத்தி வேறிடம் போவதால் மல்லிகை யைத் தன் தாதியாகவைத்துக் கொள்வதாகவும் சொன்னாள். இதைக்கேட்ட சொக்கனுக்கு இடிவிழுந்ததுபோலாயிற்று. ஏனெ னில் அவன் மகள் குற்றம் அவனுக்கு நன்றாகத்தெரியும். மல்லிகா இதுவரையில் ஒருவரிடமும் வேலைசெய்யாதிருந்ததால் அவளை வேலைக்கு வைத்துக்கொண்டால் உபயோகப்படமாட்டாள்என்று சொல்லிப் பார்த்தான். அதற்கு சோபை "அதினால் குற்றமில்லை. சிக்கிரம் கற்றுக்கொண்டு விடுவாள். உன்பெண்ணை நான் விரும்பு கிறேன். அவளை என்னிடம் வைத்துக்கொள்ளத் தீர்மானித்திருக் கிறேன். ஆதலால் அழைத்துவா" என்றாள்.

இதைக்கேட்டுச் சொக்கன் மல்லிகையை சோபையிடம்அனு ப்பாததற்கு தன் மனைவி ஏதாவது யுக்தி சொல்லிக்கொடுப்பாள் என்று எண்ணி வீடு வந்தான். அங்கு வந்ததும் அவள் குடும்பத் தார் எல்லோரும் கலவரப்பட்டு இருப்பதைக் கண்டான். மற்ற பெரிய மனிதர்களும் கோவிலிலிருந்து வீடுசென்ற பிறகு அங்கு மல்லிகாவின் உடையைக் கண்டு பொறுமை கொண்டவர்கள் எல் லோரும் அவளை இப்பொழுது திட்டியும் சிரித்தும் ஏளனம் செய் தும் சீறியும் தொந்தரை செய்தார்கள். இதுவும் போதாதென்று சாணி, குப்பை, கல் எதையும் எடுத்து மல்லிகைமேல் வீசினர் கள்.

மல்லிகை இவர்களிடமிருந்து தப்பி ஓடப்பார்த்தும் மூடிய வில்லை. கடைசியில் தன் எதிரிகட்கு முன்னால் திரும்பி நின்று கொண்டு தன்னை தொடர்ந்து ஓடி வந்த ஒரு கர்நாடக கட்டிய ஸ்திரீ யைப் பிடித்து ஓரறை அறைந்து நிலத்தில் சாய்த்துவிட்டாள். ஏறக்குறைய நூறு பேரடங்கிய எதிரிகள் முன் சென்றவளின்

கதியைக்கண்டதும் பின் வாங்கிவிட்டார்கள். இவர்கள் தோல்வியைக் கண்டதும் மல்லிகா இவர்களைத் தொடர்ந்து சென்று அங்கு கிடந்த ஒரு தேங்காயை எடுத்து அந்த கும்பலில் வீசியடித்தாள். அது ஒரு தையல்காரன் மண்டையில் தாக்கி அவனை நிலத்தில் விழச்செய்துவிட்டது. இதுவும் போதாதென்று கீழே கிடந்த ஒரு கோடரிக்காம்பைக் கையில் தாக்கிக்கொண்டு மல்லிகை பாய்ந்து ஓடி, முதுகு காட்டி ஓடும் எதிரிகளைத் துரத்தி அனேகம் பேர்களுக்குப் படுகாயம் உண்டாக்கிவிட்டாள்.

இந்த ரணகளத்தில் நடந்த விருத்தாந்தத்தைக் கொஞ்சம் கூறுவோம். முதலில் பாடகருப்பனுக்குப் பின் மண்டையில் பலமான காயம்பட்டது. அவன் வலி பொறுக்காமல் விறிட்டுக் கொண்டே கீழேவிழ்ந்து மாண்டான். சுச்சக்கோனுக்கு நெற்றியில்பட்ட அடி தாங்கமுடியாமல் குப்புறவிழுந்தான். அவனை தேகம் பருத்தவன். விடு இடிந்து விழுவதுபோல் திடீர் என்று சப்த முண்டாக்கிக்கொண்டு விழுந்தான். அப்போழுது அவன் அங்கிப்பையிலிருந்து வெள்ளிப பொடிடப்பி கீழேவிழுந்தது. யுத்தத்தில் வெற்றிபெற்றதால் தோற்ற எதிராளியின் சொத்து தன்னுடையது என்று எண்ணி மல்லிகா அதை எடுத்து பத்திரப் படுத்திக்கொண்டாள். ஓட்டத்தில் ஒருபுலி தடுக்கி சேஷி தலை கீழும் கால்மேலுமாக விழுந்தாள். நாகுதன் காதலன் இருளனைத் தூமியில் சாய்ந்தான். அதில் நாகு மண்ணைக் கவ்வினாள். இருளன் உயிரைநோக்கினான். மல்லிகாவின் கோபத்திற்கு அடித்தாப்போல் ஆளானவன் கொல்லன் மகன் முனியன்தான். அவனுடைய தோடரிக்காகச்செய்த காம்புதான் மல்லிகாகையில் வைத்திருந்த தடி. உழவன்மகள் அங்காளம்மையும், தலையாரி பாவாடையும், வீரனும், காத்தானும், மாரியும், பொன்னனும், சாப்பாட்டுக்கடை ஏகாத்தாளும், குதிரைக்காரச் சின்னனும், ஆப்பக்கார முத்துவும், இன்னும் மனேகபேர்களும் தரையில் உருண்டுபிரண்டு கிடந்தார்கள். இவர்கள் எல்லோரையும் மல்லிகை அடித்து விழ்த்தினாள் என்று நாம் சொல்லவில்லை. ஓடுகிறவேகத்தில் ஒருவரை ஒருவர் தள்ளி விழ்த்தினார்கள்.

இதுவரையில் அதிர்ஷ்டசாலியாக விருந்தமல்லிகையைவிட்டு தயலக்ஷ்மி திரும்பிவிட்டாள். சடையன் மீனாவி சிலம்பாயி இதுவரையில் எவ்விடத்திலும் அபஜயமடைந்தவளல்ல. இவளுடைய வெற்றியை அறியவேணுமானால் இவள் புருஷனுடைய முகத்தையும் தலையையும் பார்த்தால்போதும்.

தன்பக்கத்தார் வெட்கமில்லாது தோற்றோடுவதைக்கண்டு சிலம்பாயிக்கு சகிக்கக்கூடவில்லை. அவள் ஓடுபவர்களை எல்லாம் கூப்பிட்டு அடியில்வருமாறு உரைத்தாள்:-சம்ராஷ்டிர தேசத்துப்

புருஷர்களே ஸ்திரீகளே! நீங்களெல்லாம் ஒரு பெண்பிள்ளைக்குப் பயந்து இப்படி ஓடி வருகிறீர்களே. உங்களுக்குக் கொஞ்சமேனும் வெட்கமில்லையா? உங்களில் ஒருவருக்காவது அவளோடு எதிர்க்கத்திறமில்லாவிட்டால் நானும் இதோ இருக்கும் பக்கிரியும் சேர்ந்து அவளுடன் யுத்தம்செய்து வெற்றிகொள்ளுகிறோம்" என்று சொல்லி மல்லிகையின்மேல் பாய்ந்து அவள்கையிலிருந்த கோடரிக்காம்பைப் பிடுங்கி எறிந்தாள். உடனே அவள் தலைமுடியைத் தன்னிட துகையால் பிடித்துக்கொண்டு தன்வலதுகையால் மூக்கிலிருந்து ரத்தம் பெருகும்படியாக ஓங்கிப்புடைத்தாள். மல்லிகையும் சும்மாவிருக்கவில்லை. அவளும் சிலம்பியின் முடியைப்பிற்றிக்கொண்டு அவள் மூக்கிலிருந்தும் ரத்தம்வர அறைந்தாள். இருவரும் ஒருவர் முடியை ஒருவர் பிடித்துக்கொண்டபிறகு ஒருவர் உடையை மற்றொருவர் கிழிக்கலானார்கள். இந்தச்சண்டையில் இருவரும் நிர்வாணமாகிவிட்டார்கள். இந்தசமயத்தில் அங்குதாமோதரன்வந்து தோன்றினன். இப்படி அவன்வர நேரிட்டது கந்தருடைய எற்பாட்டினால். கோவிலில் கடவுளே வணங்கியபின் கந்தரும் பிலவங்கனும் தாமோதரனும் காற்றுவாங்குதற்குக் குதிரையேறி சவாரிசெய்தார்கள். கால்மைல்தூரம் சென்றதும் தன் மனதைமாற்றி வேறுவழியாகச் செல்லவேணுமென்று கந்தர் ஆஜ்ஞாபித்தார். இதற்கு மற்றவர்களும் ஒத்துக்கொள்ள வெவ் வேறுவழியாக எல்லோரும் கோவிலுக்கேவந்து சேர்ந்தார்கள்.

முன்னால் சவாரிசெய்துவந்த பிலவங்கன் அங்குகூடியிருந்த கும்பல்களையும் இரண்டு ஸ்திரீகள் உடையில்லாமல் சண்டையிட்டுக் கொண்டிருப்பதையும் பார்த்து குதிரையை நிறுத்தி விஷயத்தைவிசாரித்தான். அங்கிருந்த ஒரு நாட்டுப்புறத்தான் தலையைச் சொரிந்துகொண்டே "எனக்குத் தெரியாது, பிரபுவே இங்கே சிலம்பியும் மல்லிகாவும் சண்டை போட்டுக்கொண்டிருக்கிறார்கள். மிக்க வேடிக்கையாயிருக்கிறது" என்றான். யார் யாரென்று தாமோதரன் கேட்டுவிட்டு, மூக்கிலிருந்து ரத்தம் வழிந்துகொண்டிருந்த மல்லிகையைப் பார்த்து, நாட்டுப்புறத்தான் சொல்லிய பதிலையும் காதில் போட்டுக்கொள்ளாமல், குதிரையைவிட்டு இறங்கி அங்கிருந்த மதிலையும் தாண்டி மல்லிகையிடம் ஓடினான். அவள் இவனைப் பார்த்ததும் கண்ணீர்சொரிந்ததன்மேல் பொறுமைகொண்டு ஜனங்கள் தனக்குத் தீங்கிழைத்ததைச் சொன்னாள். இதைக் கேட்டதும் சிலம்பில்தேவி என்பதையும் கவனியாது கோபத்தில் தன் குதிரைச் சவுக்கை எடுத்து அவளை இரண்டடி வீசிவிட்டான். உடனே அங்குநின்ற ஜனங்கள்மேல் பாய்ந்து குதிரைச் சவுக்கினால் நாலுபுறமும் வீசி ஜனங்களைப் பறக்கடித்தான.

வீரோதிகளை எல்லாம் தூரத்திவிட்டபிறகு தாமோதரன் மல்லிகை யிருக்குமிடம் திரும்பிவந்தான். அங்கு அவளிருக்கும் நிலை

மையைப்பார்த்து தாமோதரன் ஒரு பைத்தியக்காரன்போல் பிதற்றி மார்பிலறைந்துகொண்டும் மயிரைப்பிடித்துக்கொண்டும் பூமியை உதைத்தும் இவளுக்கு இம்மிசை செய்தவர்களை எல்லாம் பழிவாங்குவே னென்று சபதம் செய்தான். தன் அங்கியைக்கழற்றி அவளுக்கு உடுத்தி, அவளுடையமுகத்திலிருந்த ரத்தத்தைத் தன் கைக்குட்டையால் துடைத்து, தன் வேலையாளைக் கூப்பிட்டு அங்கிருக்கும் ஏதாவது ஒரு குதிரையைக் கொண்டுவரும்படி கட்டளை இட்டான். தங்களிடம் ஒரே வேலைக்காரன் இப்போது இருப்பதால் அவனை அனுப்பிவிடக்கூடாது என்று பிலவங்கன் தடை சொன்னான். ஆனால் கந்தர் தாமோதரனுக்குப் பரிவாகப்பேசியதால் பிலவங்கன் வேறு ஒன்றும் செய்யமுடியாது போனான். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் வேலைக்காரன் ஒருகுதிரையைக் கொண்டுவந்ததும் மல்லிகை தன் கந்தல்களை சுருட்டிக்கொண்டு குதிரைமேலேறி உட்கார்ந்து வீடுபோய்ச் சேர்ந்தாள். கந்தரும் பிலவங்கனும் தாமோதரனும் கூடவே அவள் வீடுசென்றார்கள்.

7. அத்தியாயம்

காணுதாற் காட்டுவான் முன்காணுன் காணுதான்
கண்டானுந்தான் கண்டவாறு.

மல்லிகாதன் பழையகந்தலுடையைத் தரித்ததும் அவளுடைய சகோதரிகள் அவளோடு சண்டையிட ஆரம்பித்தார்கள். அதிலும் அவளுடையமூத்ததமக்கை அவளுக்குக்கிடைத்த சிஷை அவள் கொழுப்புக்கு வேணுமென்று தோன்றினாள். "சோபை தன்னுடைய புடைவையை நமதுதாயாருக்குக் கொடுத்திருக்க நீ மாத்திரம் எப்படி அதைக்கட்டிக்கொள்வாய்? நம்மில்யாருக்காவது அதைக்கட்டிக்கொள்ள உரிமையுண்டானால் நான் மூத்தவளாகையால் அந்த உரிமை எனக்கே சேர்ந்தது. நீ எல்லாரையும் விட அழகுவாய்ந்தவள் என்று எண்ணினாய். ஆதலால் புடவையைக் கட்டிக்கொள்ள நீயே தகுந்தவள் என்று நினைத்து விட்டாய் போலும்" என்றாள். மற்றொருத்தி அலமாரியிலிருந்தும் கண்ணாடியை எடுத்து அவளுக்குமுன்னே காண்பித்து "முகத்தில் வழியும் ரத்தத்தைப் பார்த்தாயா? அதைக்கழுவிவிட்ட பிறகன்றோ இவளழகு பற்றி பிரதாபம் சொல்லிக்கொள்ள வேண்டும்" என்றாள். மற்றொருத்தி "இவள் கோவிலுக்குப் போனால் கடவுளே வணங்கும் வேலையா, புருஷன் தேடும் வேலையா" என்றாள். அதற்கு அவளுடையதாயாகியகுப்பு" இவள் நமது குடும்பத்துக்குப் பெருத்த அவமானத்தை உண்டாக்கி விட்டாளே. நல்லவம்சத்தில் பிறந்து இப்படி விபசாரம் செய்தவளை நான் பார்த்ததில்லை" என்றாள். மல்லிகா "என்னைத் தூஷிக்க உனக்கு வாய்வது

அம்மா ? கல்யாணமான ஒருவாரத்தில் நீ அக்காளைப் பெறவில்லை யா" என்றாள். குப்பு மிகவும் கோபித்து "ஆம, ஆம், அப்படித் தான் அதனால் என்ன ? நான் குலஸ்திரீயாகி விட்டேனே இல்லை யோ ? நீயுமப்படியே மானத்தை மறைத்து கலியாணத்தை செய் துகொண்டால் உன்னை யார் கோபிக்கப்போகிறார்கள். ஆனால் நீ யோ ஒருபெரியமனிதன் வீட்டுப்பிள்ளையோடு சம்பந்தப்பட்டிரு க்கிறாய். அவன் உன்னைக் கலியாணம் செய்து கொள்ளப்போகிற தில்லை. உனக்குப் பிறக்கப்போகிற குழந்தையையும் அவன் ஒப்புக்கொள்ள போகிறதில்லை" என்றாள்.

சொக்கன் சோபை கொடுத்த உத்திரவைப்பற்றி தன் மனைவி யோடு யோசிக்கும்படி வந்த சமயத்தில் தன் குடும்பத்தில் மேற் சொன்ன சம்வாதம் நடந்துகொண்டிருக்கக்கண்டான். அவன் மனைவியும் மூன்று பெண்களும் ஒரே சமயத்தில் பேசிக்கொண் டும் அழுதுகொண்டு மிருந்ததால் இவன் சொல்வதை அங்கு ஒரு வரும் கேட்பாரில்லை. கூச்சல் கொஞ்சம் தணிந்ததும் சோபை தன்னிடம் சொன்ன விஷயத்தை அனைவரிடமும் சொன்னான். இதைக்கேட்டதும் அவன் மனைவி குப்பு "நீ நல்ல சங்கதிதான் சொல்ல வந்தாய். ஆனால் இதோ உன் பெண்ணுக்கு வயிறு முன் வந்திருக்கிறது. அதைப்பார்த்தால் சோபை என்ன சொல்வாள் ? இப்படியும் நமக்கு கஷ்டம் வருமா" என்று மல்லிகாவைத் தூண் டினாள்.

மல்லிகா மிகுந்த கர்வத்துடன் "அப்பா தாங்கள் எனக்காக சம்பாதித்து வந்த பெரிய வேலை என்ன ? சமையல்காரியின் கீழே பத்துபாத்திரம் துலக்கும் வேலையோ ? நான் ஒருவரின் கீழிரு ந்து இந்த இழிந்த வேலையைச் செய்யமாட்டேன். என்மேல் பிரி யம் வைத்திருக்கும் பெரிய மனிதர் எனக்கு வேண்டியமட்டும் ஒத்தாசை செய்வார். எனக்கு ஒரு குறைவுமின்றி பாதுகாப்பதாய் வாக்கும் கொடுத்திருக்கிறார். நீ வாயைமூடிக்கொண்டிருந்தால் உனக்கும் வேண்டிய பணம் கொடுக்கச் சொல்கிறேன் அம்மா. இன்று சாயந்திரம் எனக்கு என்ன கொடுத்திருக்கிறார் பார்த்தாயா இதோ" என்று சொல்லி இடுப்பிலிருந்து அனேக சவரன் அடங் கிய ஒரு பையைக் காண்பித்து அதிலிருந்தும் ஒரு சவரனை எடுத் துத் தன் தாயிடம் கொடுத்தாள்.

சவரன் கையிலேறியதும் குப்புவின் கோபமெல்லாம் பறந்து போயிற்று. அவள் புருஷனைப் பார்த்து "மல்லிகையை வேலைக் கனுப்புவதாய் ஒப்புக்கொண்டு வந்தாயே. உன்னைப்போல் மூட னல்லாமல் வேறு யாராவது வேலை இப்படிப்பட்டதென்று தெரி ந்துகொள்ளாமல் வருவார்களா ? மல்லிகை சொல்லுகிற பிரகாரம் அது அடுப்புவேலையாகத் தானிருக்கும். என் பெண் போய் எனத்

தொழில் செய்ய நான் சம்மதிக்கமாட்டேன். நான் ஏழையாக இருந்தாலும் நல்ல பரம்பரையில் வந்தவள். கோவில் பூசாரியாக இருந்த என் தகப்பனார் ஏழைத்தனத்தால் பரமதரித்திரனை உனக்கு என்னைக் கலியாணம் செய்விக்கும்படியாக நேரிட்டபோதிலும் என் பெருந்தன்மையை மாத்திரம் நான் விடமாட்டேன். சோனை அவளுடைய பாட்டனார் எப்படிப்பட்டவர் என்று அறிவாளா? என்னுடைய பூர்விகர்கள் இரட்டைக்குதிரை வண்டியில் சவாரி செய்யும்போது அவளுடைய பாட்டன் கால் நடையாகச் செல்வான். அவள் நமக்கு ஒரு பழைய வஸ்திரம் கொடுத்ததால் பிரமாத உபகாரம் செய்ததுபோல் நினைத்திருக்கிறாள். ஏழைகள் எல்லாரையும் தனவந்தர் அலக்ஷியமாய் நடத்துவது சகஜந்தான். ஊரார் மல்லிகையை இவ்வளவு ஸ்னேகம் செய்திருக்க வேண்டியதில்லை. ஏ! குழந்தாய், உன்னுடைய பாட்டி இதைவிட உயர்ந்த வஸ்திரங்கள் கடையிலிருந்து வாங்கிப் புதிதாகக் கட்டிக்கொண்டிருக்கிறாள் என்று நீ ஊராருக்கு பதில் சொல்லி இருக்கவேண்டும்" என்றாள். சொக்கன் "சரிதான், நான் சோபையிடம்போய் என்ன பதில் சொல்லுகிறது" என்று கேட்டான். குப்பு "என்ன பதில் சொல்வாயோ எனக்குத் தெரியாது. நீயென்றில்லாவிட்டால் ஒன்று நமது குடும்பத்துக்கு ஏதாவது தொல்லை கொண்டுவந்து விடுகிறாய். நீ கௌதாரி சுட்டபோது நமக்கு நேரிட்ட ஆபத்தையெல்லாம் மறந்துவிட்டாயா? அப்பொழுது நான் வத்ஸருடைய தோட்டத்துக்குள் போகவேண்டாமென்று முறையிடவில்லையா? என் சொல்லைத்தட்டி மதோன்மத்தனைய் உன் வழியே சென்றதால் அவ்வளவும் நேர்ந்தது. இப்பவும் நீ அப்படித்தான் செய்யப்போகிறாய். நீ ஒரு அயோக்கியன்" என்றாள்.

சொக்கனோ சாதாரணமாய்ப் பொறுமையுள்ளவன். சச்சரவு செய்யமாட்டான். மிக்க கோபத்தில் இருப்பவரோடு நியாயத்தை எடுத்துப் பேசினால் அவர்கள் கோபத்தை அதிகரிக்குமேயல்லாது தணிக்காது என்று அவனுக்கு நன்றாகத்தெரியும். ஆதலால் எப்பொழுதும் தன்னிடம் ஒரு புளியஞ்சிமிட்டுவைத்திருப்பான். இதைக்கொண்டு பெரிய சச்சரவுகளையும் உடனே நிறுத்திய அனுபவமவனுக்குண்டு". "பாம்புக்கு ராஜா மூங்கில்தடி" "அடியாதமாடு படியாது" "கோலாடினால் குரங்காடும்" என்ற பழமொழிகள் யாவருக்கும் தெரிந்தவைதானே.

குப்பு அயோக்கியனென்று தன்னைச் சொன்னது காதில் பட்டதும் சொக்கன் தன் கோலை எடுத்து அதை அவள்மேல் பலமாய்ப் பிரயோகம் செய்ய ஆரம்பித்தான். அது முதலில் அவளுடைய வாயை அதிகப்படுத்தியபோதிலும் கொஞ்சநேரத்துக்கெல்லாம் அவளை வழிக்குக்கொண்டு வந்து விட்டது.

இந்தப் பிரயோகத்தைக் கண்டதும் குடும்பத்தில் எல்லோரும் பேச்சு மூச்சின்றி அடங்கி விட்டார்கள். திரும்பவும் ஒரு ஆலோசனை சபை கூடியது. அதில் மல்லிகை தான் வேலைக்குப் போவதேயில்லை என்று பிடிவாதமாய்ச் சொல்லி முடித்ததும், குப்பு தான் சோபையிடம்சென்று தன்மூத்தபெண்ணுக்கு அந்த வேலையை அளிக்கும்படியாகக் கேட்டுக்கொள்வதாக ஒப்புக்கொண்டாள். அந்த மூத்த பெண்ணும் வேலையில் அமசார்வ சம்மதமாயிருந்தாள். ஆனால் கஷ்டமே படவேண்டுமென்றிருந்த குடும்பத்துக்கு இந்த சுகம் கிடைக்குமா?

8. அத்தியாயம்.

பிணிக்கு மருந்து பிறமனணி யிழை
தன்னெய்க்குத் தானே மருந்து.

மறுநாட் காலையில் தாமோதரனும் வத்ஸலாவும் வேட்டைக்குச் சென்று திரும்புகையில் வத்ஸர் தாமோதரனைத் தன் வீட்டிற்கு போஜனத்திற்கு வரும்படியாகக் கேட்டுக்கொண்டார்.

அன்று சோபை என்றுமில்லாத களிப்புடனும் குதூகலத்துடனும் இருந்தாள். அவளுடையவலை தாமோதரனைப் பிடிப்பதற்கு சரியாக விசிறப்பட்டிருந்தது என்று தோன்றும். ஆனால் அவனுக்குத் தான் செய்வது தனக்கே தெரியாமலிருந்தது. தாமோதரனை வசியப்படுத்தவேண்டுமென்று அவள் எண்ணங்கொண்டிருந்தால் அந்த எண்ணம் இன்று மேலோங்கி விட்டது.

ஆளவந்தார் ஊரிலிருந்த சபலரும் அங்குவந்திருந்தார். அவர் நல்ல தன்மையுடையவர். மேலான குணமுடையவர். ஆனால் சாப்பிடும்போழுது வாய் மூடாமலே இருப்பார். அவருக்கு எப்பொழுதும் பசிதான். சாப்பிடும்போழுது ஒரு வார்த்தையாவது பேசமாட்டார்; ஆனால் சாப்பாடு முடிந்ததும் வட்டியிடன் சேர்த்துப் பேசுவார். அவருடைய சம்பாஷணை கேட்பவர்க்கு விரும்பத் தக்கதாயும் கோபிப்பதற்கு இடமில்லாத தாயும் இருக்கும்.

அவர்வந்த சமயம் சரியான போஜனவேளை. சில சங்கதிகள் சொல்லவேண்டிதான் ஆளவந்தாரிட மிருந்து அந்த சமயம் வந்ததாகச் சொல்லி பக்தியில் உண்ணவுட்கார்ந்தார். சமாசாரத்தைச் சொல்லவாரம் பிக்கையில் ஆமவடை பரிமாறுகிறதைப் பார்த்து சம்பாஷணையை நிறுத்திவிட்டார். சாப்பாடு முடியும் வரையில் ஒன்றும் பேசவில்லை.

சபலர்:—(சோபையைப் பார்த்து) "அம்மா நேற்று சாயந்திரம் கோவிலில் தங்களைப்போன்று வஸ்திரம் உடுத்த ஒரு பருவப்பெண் வந்திருந்ததைத் தாங்கள் பார்த்திருக்கலாமே. நீர்

வாணதேசத்தில் கௌபீனம் கட்டியவன் பைத்தியக்காரன்" என்கிற பழமொழியுண்டு. அவள் கட்டியிருந்த உடையைப்போல் இந்த நாட்டுப் புறத்தில் காண்பது அரிது. அதிலும் உங்கள் வேலைக்காரனை சொக்கனுடைய பெண் அவ்வுடையைத் தரித்திருந்தாள் என்று சொல்லக்கேட்டு ஊரில் கேலிசெய்கிறார்கள். சொக்கனுக்குத் தன் பெண்ணை இவ்வளவு டாம்பீகமான உடை உடுத்தி கோவிலுக்கு அனுப்பக் கூடாது என்று தெரியாமற்போனது பெரிய மடத்தனம். மல்லிகா கோவிலுக்கு வந்ததும் ஒரு பெரிய கலக்க முண்டாக்கிவிட்டாள். ஆளவந்தார்வந்து தடுத்திராவிட்டால் ஒரு பெரிய கலகமாகியிருக்கும். ஆனால் கோவில் பூசை முடிந்து நான் வீடுசென்றதும் ஒரு பெரியசண்டை மூண்டாகி ஒரு பாடகனுடைய தலை உடைபட்டது. அவன் இன்று காலையில் ஆளவந்தாரிடம் வந்து முறையிட மல்லிகையை அவர் அங்கு வரவழைத்தார். இருவருக்கும் ஆளவந்தார் ராசிசெய்து வைக்கப் போகையில் அந்த மல்லிகா கருத் தரித்திருப்பதைத் தெரிந்துகொண்டார். "உன்னைக் கெடுத்தவன் யார்" என்று அவர் வினவியதற்கு மல்லிகா பிடிவாதமாய் பதில் சொல்லாது இருந்தாள். அவர் அவளைச் சிறைச்சாலைக்கு அனுப்புவதா யிருந்தார். அந்தசமயத்தில் நான் புறப்பட்டு வந்துவிட்டேன்.

வத்ஸர்:—கொழுத்த ஸ்திரீ ஒருத்தி சோரநாயகனால் பிள்ளையுண்டானதுதானா நீர் சொல்லவந்த சமாசாரம். சபலரே பொதுஜன விஷயத்தைப் பற்றியாவது ராச்சியத்தைப் பற்றியாவது ஏதோ சொல்லவந் திருக்கிறீர் என்று நினைத்தேன்"

சபலர்:—இந்த மாதிரி விஷயங்கள் உலகத்தில் நடப்பதுண்டுதான். ஆனால் மல்லிகையின் நடத்தை யாவராலும் அறியப்பட வேண்டியது நியாயமே. ராச்சிய விஷயங்களைப்பற்றி எங்களுக்கு நன்றாய்த் தெரியும். என்னூர் சங்கதி யறிவதுதான் எனக்கு வேலை.

வத்ஸர்:—நீர் சொல்லுகிறவிஷயம் எனக்கும் காதில் பட்டிருக்கிறது.

அப்பொழுது தாமோதரன் தனக்கு அவசரமான வேலையிருப்பதாகவும் உடனே போகவேண்டுமென்றும் எழுந்தான். வத்ஸர் அவனை நிறுத்துவதற்காகத் தன்னிடத்தைவிட்டு எழுந்து அவனைப் பிடிக்கச்சொன்னர். ஆனால் அவன் தப்பித்துக்கொண்டு போய்விட்டான். அவன் போனவுடனே அவனை வத்ஸர் திட்டிவிட்டு "எனக்குத்தெரிந்தது. இவன்தான் அக்கப்பத்துக்குக் காரணம். பார்த்தீரா சபலரே. இவன் அப்பெண்ணின் தகப்பனை என்னிடம் வேலைக்கு வைத்துக்கொள்ளும்படி சிபாரிசு செய்யவில்லையா? இப்பொழுதுதான் அவன் தந்திரம் தெரிய வருகிறது.

உண்மையாய்த் தாமோதரன் தான் மல்லிகையைக் கெடுத்தவன்" என்றார்.

சபலர்:—இதைக் கேட்க எனக்கு மிகவும் வருத்தமா யிருக் கிறது.

வத்ஸர்:—வருத்தமென்ன! அதினுலென்ன குற்றம். நீர் இந்த மாதிரி குற்றம் ஒன்றும் செய்ததில்லையா? நான் இதைப்போல் சேஷ்டைகள் எவ்வளவோ செய்திருக்கிறேன்.

சபலர்:—தாங்கள் வேடிக்கையாகப் பேசுகிறீர்கள். இவ்வித மான காரியம் மகாபாபமானதென்று சாஸ்திரங்கள் சொல்லு கின்றன. அன்றியும் தாமோதரனுடைய அதிருத்தியத்தால் ஆள வந்தார் அவனை நீக்கிவிடப்போகிறார். தாமோதரன் சுபாவத் திலே மூரடனு யிருந்தபோதிலும் பாலியத்தில் அப்படி யிருட்ப தால் பிசகில்லை. நாளடைவில் தேறிவிடுவான் என்று எண்ணியிருந் தேன். தாங்கள் இப்பொழுது சொல்வதைக்கேட்டால் அவன் சிற்றின்பப் பிரியனென்று தெரிகிறது. இதுதான் முதல் தடவை அவனைப்பற்றி யிப்படி நான் கேள்விப்பட்டேன். தாமோதரன் அடக்கமும மரியாதையு முள்ள வாலிபன். ஆளவந்தாருடைய கோபத்திற்கு ஆளாகி அவனுக்குக் கஷ்டம் சம்பவித்தால் எனக்கு மிக்க வருத்தமாயிருக்கும்.

வத்ஸர்:—பூ-ஆளவந்தாராவது இவனைக் கோபிக்கவாவது. அவரும் ஒருத்தியைக் காமித்திருக்கிறார் என்பது ஊராருக்குத் தெரியாதபோலிருக்கிறது. தாமோதரன் இன்னாபிள்ளையென்று நாடெல்லாம் அறியுமே. சர்வகாலாசாலையில் இருக்கும்போதே ஆளவந்தாரை எனக்குத் தெரியும்.

சபலர்:—அவர் சர்வகாலா சாலையில் படித்ததாக சமாசா ரமே எனக்குத் தெரியாதே.

வத்ஸர்:—ஆமாம் அவர் படித்ததுண்டு. அப்பொழுது நானு மவரும் எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கிறோம. ஐந்து மைல சுற்றளவுக்குள எங்களுக்குத் தெரியாத விபசாரியே கிடை யாது. இந்த மாதிரி குற்றத்துக்காக ஒருவரும் தாமோதரனைக் கோபிக்கமாட்டார்கள். அதோ சோபை இருக்கிறாளே. அவளைக் கேளும். ஒரு யௌவன புருஷன் ஒரு யுவதியைக் காமித்து கள ளத்தனமாய்க் கூடுவது தவறுகுமா சுழந்தாய்? அதினுல் அவ னைக் கெட்டவன் என்று அகற்றிவிடுவாகளா? இப்படிப்பட்ட வர்களைத்தான் ஸ்திரீகள் அதிகமாக விரும்புவார்கள் அன்றோ?

அப்படிக்கேட்ட கேள்வி சோபையைத் திகைக்கச்செய்தது. சபலர் வந்து சமாசாரம் சொல்லும்போதே தாமோதரனுடைய

முகம் மாறுபாடடைந்ததைச் சோபை பார்த்திருந்தாள். அவன் பரபரப்புடன் திடீர் என்று எழுந்து போனதும் தன் தகப்பனார் கொண்ட சந்தேகம் சரியானதே என்று நிச்சயித்துவிட்டாள். இது வரையில் கொஞ்சம் கொஞ்சமாய்த் தோன்றியிருந்த காதலை அவள் இருதயம் இப்பொழுது வெளிப்படையாகத் தோற்றச் செய்து இவர்கள் சம்பாஷணையில் அவள் கண்ணும் கருத்துமாக இருக்கும்படிச் செய்தது. இப்படியிருக்கையில் அவள் தகப்பனார் எதிர்பாராதவண்ணமாய் மேற்சொன்ன கேள்வியைக் கேட்ட தும் சோபை திடுக்கிட்டு முகமாறுதலடைந்தாள். வத்ஸருக்கு அவள் மேல் கொஞ்சமேனும் சந்தேகமிருந்தால் அவளடைந்த மாறுதலைக்கண்டு சமாசாரத்தைத் தெளிவாக அறிந்திருப்பார். ஆனால் அவருக்கு சந்தேகமென்பதே கிடையாது. இடத்தை விட்டு எழுந்து சம்பாஷணையில் கலக்கத் தான் தகுதி அல்லவள் என்று சொல்லி வெளிப்போவதற்கு சோபை உத்திரவு கேட் டாள். அவள் தந்தை ஒருபெண் அச்சமின்றி தடித்தனமாய் வம் புப்பேச்சைக் கேட்டுக்கொண்டிருப்பதிலும் மிகவும் அடக்கமுள் ளவளாயிருப்பதுமேலென்று சொல்லி வெளிப்போக உத்திரவு கொடுத்தார். அவர் சொல்லியதைக்கேட்டு சகலரும் மகிழ்ந்தார்.

பிறகு வத்ஸரும் சபலரும் வெகுநேரம் வைதிக விஷயங்களை ப்பற்றியும் தேசநன்மையைப் பற்றியும் சம்பாஷித்து வர்த்த மானப் பத்திரிகைகளிலும் விளம்பரங்களிலும் அச்சிட்டிருக்கும் ராச்சிய சம்வாதங்களைக் கண்டித்தும் ஒத்துப்பேசியும் காலங்கழி த்தார்கள். வத்ஸர் அப்படியே தூங்கிவிட்டார். சபலரும் வீடு திரும்பினர்.

வத்ஸர் அரைமணி நேரம் தூங்கி எழுந்ததும் தன்புத்திரி யைக் கூப்பிட்டு வீணைவாசிக்கும்படி கேட்டார். ஆனால் அவள் தனக்குத் தலைவலியதிகமா யிருப்பதாயும் தன்னை அன்று மன் னிக்கும்படியாயும் கேட்டுக்கொண்டாள். அவளிஷ்டத்துக்கு என் றும் அவர்மாறு சொல்லாதவராதலால் அவள் கேட்டுக்கொண்ட படி உத்திரவு கொடுத்தார். வத்ஸர் சோபையை எப்பொழுதும் வெகுபக்ஷமாய் நடத்திவருவர். அவளும் அவரை இடைவிடாது நேசித்துவந்தாள். தன் தகப்பனாரைச் சந்தோஷிப்பிக்க எவ்வித மாயும் முயற்சிப்பாள். ஆனால் "இன்று சாயங்கால மாத்திரம் அவளிஷ்டப்படி நடக்க முடியாது போயிற்றே" என்றுவருத்தப் பட்டாள். அன்றிரவு அவருடன் சேர்ந்து தான் சாபபிடமுடி யாது இருக்குமென்றும் அதற்காகத் தன்னை மன்னிக்கவேணு மென்றும் அவள் கேட்டுக்கொண்டாள். வத்ஸரோ தன்குதிரை கள் நாய்களைப்போய்ப் பார்த்துவரும் சமயம் தவிர மற்றவேளை யெல்லாம் தன்மகளைத் தன் எதிராகவே வைத்துக்கொண்டிருப்

பவராதலால், அவள்கூட உட்கார்ந்து சாப்பிடமுடியாது என்று சொன்னதும் கொஞ்சம் வருத்தமடைந்தார். ஆயினும் அவள் அபிப்பிராயத்திற்கு விரோதம் செய்யக்கூடாதென்று இஷ்டப் படி விட்டுவிட்டார். வத்ஸர் தனியாய் இருப்பதற்குப் பிடியாமல் அயலான் ஒருவனை வரவழைத்து அவனோடு பேசி இருந்தார்.

9. அத்தியாயம்.

பயன்றாக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்றாக்கி நள்ளாவிடல்.

அன்று காலையில் தாமோதரன் வேட்டைக்கு வத்ஸர் குதிரையில் ஏறிப்போனான். தன்குதிரை அங்கில்லாதபடியால் வத்ஸர் வீட்டிலிருந்து தாமோதரன் தன்வீட்டுக்கு நடந்துபோக நேரிட்டது. தன்வீட்டிற்கும் வத்ஸர் வீட்டிற்கும் மூன்று மைல் தூரமிருந்தும், அரைமணி நேரத்தில் வீட்டுக்கு ஓடிவந்து சேர்ந்தான். வெளிவாசற்படி வந்ததும் ஒரு போலீசுக்காரனும் இன்னும் சிலரும் மல்லிகையைப் பிடித்துச் சிறைச்சாலைக்குக் கூட்டிப் போவதைக்கண்டான்.

இந்த சமயத்தில் விசாரணையில் சாகடிமுழுவதும் கிடைக்காமல் விவகாரத்தைத் தெளிவாய் விசாரியாமல் ஆளவந்தார் மல்லிகாவுக்கு சிக்ஷை விதித்திருந்தார். ஆனால் அவருக்கு மல்லிகா குற்றவாளியென்று நன்றாகத் தெரிந்தபடியால் சிக்ஷை விதிப்பது தர்மமே என்று செய்தார்.

போலீசுக்காரன் மல்லிகை இட்டுப்போகுமிடம் இப்படிப் பட்டதென்று தாமோதரனிடம் சொல்லியதும், அவன் மல்லிகையை எல்லாருக்கும் எதிரில் அன்புடன் தழுவி, அவளைப்பிடித்துப் போகுபவன் எவனாயிருந்தாலும் அவனைக் கொன்றுவிடுவதாக சபதம் செய்தான். மல்லிகையின் கண்களைத் துடைத்து வருத்தப்படாதிருக்கும்படி அவளுக்குச் சொல்லி அவள் எங்கேபோனாலும் தானும் கூடச்செல்வதாக சமாதானம் சொன்னான். பிறகு நடுங்கிக்கொண்டிருந்த போலீசுக்காரனைப் பார்த்து மெதுவாக தன்னுடன் அவனைத் தன்தகப்பனாரிடம் வரும்படிக்கும் தான் சொல்வதைக்கேட்டுத் தன் தகப்பனார் மல்லிகையை விடுதலைசெய்து விடுவார் என்றும் சொன்னான்.

கைதியை விட்டுவிடத் தயாராகவிருந்த போலீசுக்காரன் தாமோதரன் வேண்டுகோளுக்கு உடனே இணங்கினான். திரும்பவும் எல்லோரும் ஆளவந்தார் வீட்டிற்குள் வந்தார்கள். மற்றோரை வெளியே நிறுத்தி தாமோதரன் மாத்திரம் ஆளவந்தாரிருக்குமிடம் நோக்கிச் சென்றான். ஆளவந்தாரைக் கண்டதும்

அவரது அடிபணிந்து தானே மல்லிகை வயற்றிலிருக்கும் சிசுவுக்குத் தந்தை என்று ஒப்புக்கொண்டு அவள்மேல் இரக்கம் காட்டும்படியாயும் இதில் குற்றமேதாவது இருந்தால் தானே காரணமாகையால் தன்னைச் சிக்ஷிக்கும்படிக்கும் வேண்டினன்.

ஆளவந்தார் கோபத்துடன் "இதில் குற்றமேதேனு மிருந்தால்" என்று சொல்கிறாய்? நீ தர்மத்துக்கும் நியாயத்திற்கும் கட்டுப்படாமல் காமாதுரனாய் அலைந்து ஒரு எளிய பெண்ணை அனியாயமாகக் கெடுத்துவிட்டாயே. நீ செய்த குற்றத்தின் இழிவு இன்னும் உனக்குத் தெரிய வில்லைபோலிருக்கிறது. அந்தப்பாதகத்துக்கு உனக்கு என்ன சிக்ஷை விதித்தாலும் போதாது.

தாமோதரன் எனக்கு என்னதண்டனை யிட்டாலும் அந்த பெண்ணைமாத்திரம் மன்னித்துவிடுங்கள். நான்தான் அப்பெண்ணைக் குற்றத்துக்கு உள்ளாக்கினேன். தாங்கள் விதிக்கும் சிக்ஷை அவளுக்கு நாசத்தை யுண்டாக்கும். ஆதலால் தயவுசெய்து தாங்களிட்ட கட்டளையை மாற்றிவிடுங்கள்.

ஆளவந்தார் "உடனே ஒருவேலையாளைக் கூப்பிடு" என்றார். தாமோதரன் "வேலையாள் வேண்டுவதில்லை. அக்ஷமாதாப் அவர்களை வாசற்படியண்டைகண்டேன். தங்களுடையநல்லகுணமெனக்குத் தெரியுமாகையால் தங்களிடம் பேசி மல்லிகாவை மன்னிக்கச் செய்யலாம் என்று எண்ணி அவர்களை வெளியில் நிறுத்தியிருக்கிறேன். தாங்கள் அப்பெண்மேல் தயவுசெய்து அவளை இன்னுமதிக அவமானத்துக்கும் எளனத்துக்கும் உட்படுத்தாமல் அவளை அவள் பெற்றோரிடம் அனுப்பிவிடக் கோருகிறேன். நான் கேட்பது மிகவும் ஞாயந்தி என்று எனக்குத்தெரியும். நானே குற்றவாளி என்று எனக்குத்தெரியும். அதற்காகத்தாங்கள் எது செய்யச்சொன்னாலும் செய்கிறேன். இந்தத்தடவை மாத்திரம் என்னையும் தாங்கள் மன்னித்து விட்டால் இனி ஒரு குற்றமும் செய்யமாட்டேன்.

ஆளவந்தார் கொஞ்சநேரம் தயங்கிக் கடைசியில் "சரியப்படியே செய்துவிடுகிறேன்; நீ போலீசு சேவகனை இங்கு அனுப்பு" என்றார். அவன் உள்வந்ததும் மல்லிகையை விட்டுவிடும்படி சொல்லி அவனையும் அனுப்பிவிட்டார்.

தாமோதரன் செய்தகுற்றத்துக்கு அவனை மிகவும் கோபித்து வெகுநேரம் புத்திமதிசொன்னார். அவைகளை நாம் இங்கு எழுதவேண்டியதில்லை. ஞானகிக்குச் செய்த உபன்னியாசத்தை முனமேசொல்லியிருக்கிறோமாகையால் அதைப்போற்றுனிலுவமிருக்கும். அதற்குக் காதுகொடுத்த தாமோதரன் மனம வருந்தி என்று சாயந்திரம் வெளியில் எங்கும் போகாது தன் அறையிலேயே யோஜனையில் ஆழ்ந்திருந்தான்.

தாமோதரன் செய்த குற்றத்துக்காக ஆளவந்தார் உண்மையிலேயே கோபமடைந்தார். வத்ஸர் இவரைப்பற்றி சொல்லியிருந்த தெல்லாம் பொய். வத்ஸர் வீண்வம்பில் பிரியப்பட்டவர். ஆளவந்தார் பரஸ்திரீகள மனம் செய்தவரல்லர். இப்படிப்பட்டவர்களை மிகவும் கோபிப்பவர். ஆளவந்தார் சர்வகலாசாலையில் படித்துவந்ததாக வத்ஸர் சொன்னவிஷயம் முழுதும் பொய். உண்மையில் அவர் சர்வகலாசாலையையே பார்த்தவரல்லர்.

தன்மார்க்கம் செய்பவர்களை வெறுப்பவராயினும் அவர்களிடம் வேறு நல்லகுணமிருந்தால் அதை ஆளவந்தார் சிலாகிக்காதிருக்க மாட்டார். தாமோதரன் குற்றத்துக்காக அவனைச் சிறிய போதிலும், அவன் குற்றத்தை கௌரவமாக ஒப்புக்கொண்டதற்காக அவனிடம் சந்தோஷப்பட்டார். அவன் குணத்தையும் குற்றத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் குணமே மிகைத்திருந்ததாக அவருக்குத் தோன்றியது.

பிலவங்களுல் சங்கதியையெல்லாம் தெரிந்துகொண்ட தார்க்கீகர் ஆளவந்தாரிடம் வந்து தாமோதரனைப் பற்றி மிகவும் சொடுமையாகத் தூறிப்பேசியும் பயன்படாது போயிற்று. அவர் சொல்லிய தெல்லாவற்றையும் ஆளவந்தார் சாவதானமாகக் கேட்டிருந்து விட்டுக் கடைசியில் "தாமோதரனைப்போல ரூப மூள்ளவர்களெல்லாம் இப்படி துஷ்டத் தனம் செய்யக் கூடியவர்களே. ஆனல் அவன்குற்றத்தை ஒப்புக்கொண்டதி னலும் இனி தவறுவதில்லை என்று வாக்குக் கொடுத்ததி னலும் அவனை சிக்ஷிக்க இஷ்டமில்லை" என்று சொல்லிவிட்டார். தாமோதரன் வளர்ந்து போய்விட்ட படியால் அவனைத் தார்க்கீகர் அடிப்பதற் கில்லாமல் திட்டிக்கொண்டே தன்னிடம்போய்ச் சேர்ந்தார். கந்தரோ தார்க்கீகரைப்போல கோபிஷ்டரல்ல. அவர் பெரிய வஞ்சகர். தார்க்கீகரைக் காட்டிலும் தாமோதரனை அதிகமாகப் பகைத்தவர். ஆதலால் ஆளவந்தாரிடம் சென்று அவர் மனதைக் கலைத்து தாமோதரனை ஆபத்துக் குள்ளாக்கப் பலவிதமாகவும் முயற்சித்தார். தாமோதரன்மேல் ஏற்படுத்திய ஒவ்வொரு குற்றமும் ஆளவந்தார் அவனை நன்கு மதிக்கும்படி செய்வித்ததால், கந்தருடைய கோளெல்லாம் அவனுக்கு அனுகூலமாகவே முடிந்தது. கந்தருக்கு உண்மை, தர்மம் இவைகளைப்பற்றி நன்முகத் தெரியும். ஆனல் எக்காரணத்தாலோ அந்த தர்மத்தை இவர் அனுசரியாதிருந்தார். தார்க்கீகரோ தர்மத்தைப் பற்றி அறியாமலிருந்தார். தாமோதரன் அயோக்கியனென்று அவருக்கு ஸ்திரபடுத்தி விட்டது. ஆளவந்தாருக்கும் அந்தரங்கத்தில் அசீத அபிப்பிராயமென்றும், ஆனல் தான் முதலில் எடுத்து வளர்த்த படியால் தன் கர்வத்தினலும் பிடிவாதத்தாலும் தான் செய்தது தவறு என்று பலரும்

அறியும்படி நடக்க கூடாது என்கிற எண்ணத்தினல் காமோதரனை நேசித்து வருகிறார் என்றும் எண்ணியிருந்தார்.

ஆளவந்தார் மனதைக் கலைக்கும்பொருட்டு திரும்பவும் கந்தர் அவரிடம்வந்து சேர்ந்தார். ஆளவந்தாரைப் பார்த்து "ஐயா தாங்களும் நானும் மோசம்போனோம். காமோதரன் முதல்முதல் பொய்சொன்னது சினேகத்தைக் காப்பாற்ற என்று எண்ணினோம். ஆனல் சுயதன்மையை அடையும் பொருட்டும் சிற்றின்பப்பிரியத்தைப் பூர்த்தி செய்யும்பொருட்டும் பொய்சொன்னன் என்று ஏற்படுகிறது. சொக்கனுக்கும் அவன் குடும்பத்திற்கும் காமோதரன் உதவி செய்ததின் காரணம் இப்போது ஏற்படவில்லையா? பெண்ணின் மானத்தைக் கெடுக்கும் பொருட்டு தகப்பனைக் காப்பாற்றினன். ஒருத்தியைத் தன்காமத்திற்கு இலக்காக்கும் பொருட்டு ஒரு குடும்பத்திற்கு அன்னமளித்தான். இது சினேகமாகுமா? உபகார சிந்தையாகுமா? இவனன் ஒருவன் நியாயமில்லாததைச் செய்தால் அது நமலெண்ணத்தை முன்னிட்டென்று எப்பொழுதும் நம்பமாட்டேன்" என்றார்.

ஆளவந்தாருடைய பெருந்தன்மை இவ் வெண்ணங்களெல்லாம் அவரிடம் உதிக்கவிடாமல் செய்திருந்தது. இப்பொழுது கந்தர் வந்து கண்திறக்க வைத்ததும் விஷயங்களை ஆளவந்தார் நன்றாகப் பார்த்தார். மனதில் விசனம் தோன்றியது. சரியாகப் பேசாது கொஞ்சநேரமிருந்தார். பிறகு வேறு விஷயத்தைப் பற்றி சம்பாஷணையை மாற்றினர். காமோதரன் மன்னிப்பதற்கு முன்னல் கந்தர் வந்து அவன்மேல் முறையிடாதிருந்தது அவனுக்கு நல்லதாயிற்று. ஏனெனில் கந்தர் சொன்னதைக்கேட்டதுமுதல் ஆளவந்தாருக்கு முதல் முதல் காமோதரன் மேல் கெட்ட அபிப்பிராயம் உண்டாயிற்று.

10. அதிகாரம்.

காமமு நாணு முயிர்காவாத் தூங்குமென்
னேனு வுடம்பி னகத்து.

இப்பொழுது கொஞ்சம் சோபையைப் போய்பார்த்துவிட்டு வருவோம். அவளை நாம் பார்த்தபிறகு இவள் சுகமாகக் கழிக்கக்கூடவில்லை. நித்திராபங்கமுண்டாயிற்று. களைப்பு இன்பமாயில்லை. காலையில் அவளுடைய தாதி ஆண்டாள் அவளிடம் வந்தும் சோபை முன்னமேயே எழுந்து மாற்றுடை தரித்திருந்ததைக் கண்டாள்.

ஆண்டாள் வம்பர்மகாசபையில் ஒரு மூக்கிய அங்கத்தினள். அவள மல்லிகையின் விருத்தாந்தமனைத்தையும் கேளிப்பட்டிரு

க்தாள். ஆகலால் அவள் எஜமானியரை யுட்புகுந்ததும் அடியில் வருமாறு பேச ஆரம்பித்தாள்.

ஆண்டாள்—கேட்டீர்களா, அம்மா! நீங்கள் என்னவென்று நினைப்பீர்கள். சென்ற வெள்ளிக்கிழமை தோலியில் ஒரு பெண்ணைப் பார்த்துவிட்டு மிகவும் அழகாயிருக்கிறாள் என்று சொன்னீர்களல்லவா, அருகாமையில் போய் அவளைப் பார்த்திருந்தால் அவள் அழகுள்ளவளென்று நீங்கள் சொல்லியிருக்கவேமாட்டீர்கள். கல்யாணமாகாதிருக்கையில் கர்ப்பம் தரித்திருப்பதற்காக நியாயாதிபதியிடம் அவள் நேற்று இழுத்துப்போகப் பட்டாள். அவள் ஒரு பெரிய போக்கிரிபோல் தோற்றுகிறது. குற்றத்தையெலாம் தாமோதரர்மேல் போட்டுவிட்டாளாம். ஆளவந்தார் அவரை மூகாலோபனம் செய்வதில்லை என்று கோபித்திருப்பதாக ஊரார் எல்லாம் சொல்லிக்கொள்ளுகிறார்கள். தாமோதரர் நிலைமையைக் கண்டால் பரிதாபமாக இருக்கிறது. ஆனால் அவர் அந்த அற்பப்பெண்ணைத் சகவாசம் செய்ததற்காக அவருக்கு இரங்கக்கூடாதுதான். அவரோ நல்லபிள்ளை; பெருந்தன்மையுடையவர். அவரை வீட்டைவிட்டுத் துரத்தப் போகிறார்கள் என்று கேட்டதும் எனக்கு வருத்தமாயிருக்கிறது. மல்லிகையோ அடக்கமற்ற பெண்; அவளே தானிவரைவசியம் செய்திருப்பாள். கூச்சமில்லாத ஸ்திரீகள் யாரிடமும் கலந்து பேசினால் பாலியர்கள் சும்மா இருப்பார்களா. ஆனால் அவர்கள் இந்த அற்ப ஸ்திரீகளை கவனித்திருக்கக்கூடாது. இவர்களுக்கு இரக்கமே காட்டக்கூடாது. கசையடி யடிக்கவேண்டும். அனேக இளம் புருஷர்களை இந்த ஸ்திரீகளை கெடுத்துவிடுகிறார்கள். அதிலும் தாமோதரர் அனைவரிலும் மகா ரூபமுள்ள யௌவன புருஷர் என்று சொல்லிக்கொண்டே போகும்போது,

சோபை—(அவளைத்தடுத்து) இந்த இழவை எல்லாமேன் என்னிடம் வந்து சொல்கிறாய்? தாமோதரனை என்ன செய்தால்தான் என்ன? அதைப்பற்றி எனக்கென்ன? நீங்கள் எல்லாம் ஒரேமாதிரிதான். மல்லிகையைப் போல் இல்லையே என்று உனக்கு வருத்தம் போலும்.

ஆண்டாள்—நானு அம்மா! என்னைப்பற்றித் தாங்கள் இந்த அபிப்பிராயங் கொண்டிருப்பதற்காக நான் வருந்துகிறேன். என்மேல் யாரும் எந்தக்குற்றமும் சொல்லமாட்டார்கள். தாமோதரரை அழகாயிருக்கிறார் என்று சொன்னதற்காகவா தாங்கள் இப்படிச் சொன்னீர்கள். ஊரில் எல்லோரும் தான் அவரை ரூபவான் என்கிறார்கள். ஒரு சிறுவனை அழகாயிருக்கிறான் என்றால் அதினால் என்ன குற்றமவர்களிடம். நான் இனி அவரை நினைக்கிறதேயில்லை.

சோபை—உன் வாயை நிறுத்தி என் தகப்பனர் எனக்காக காத்திருக்கிறாரா போய்ப்பார்த்துவா.

ஆண்டாள் முணுமுணுத்துக்கொண்டே அறையை விட்டு வெளிக்குவந்தாள்.

சோபையின் அந்தரங்கத்தில் தாமோதரன்மேல் அன்புரகசியமாகவிழுந்திருந்தது வாசகர்களுக்குத்தெரியும். அவள் அதைக் கண்டுபிடிப்பதற்கு முன்னாலேயே அது வளர்ந்து விசேஷித்தது. அதின் அறிகுறிகள் அவனுக்குத் தென்பட்டதும் அதினால் ஒரு ஆனந்தமும் இனிமையும் அவள் தேகமெங்கும் பரவிற்று. ஆகலால் அவ்வன்பைத் தடுக்கவாவது நிறுத்தவாவது அவளால்முடியவில்லை. அவ்வன்பு இப்பொழுது பெருங்காதலாய் விளங்கிற்று. அதன்முடிவு என்னவாகுமென்பதை அவள் கவனித்தாளில்லை. முல்லிகையின் சங்கதியைக் கேட்டதுந்தான் சோபைக்கு உணர்ச்சியுண்டாயிற்று. வேறொருத்தியை விரும்புபவனைத்தான் காதலித்தது மூடத்தனமேயென்று எண்ணினாள்: அது அவள் மனதில் கலக்கத்தை உண்டுபண்ணியபோதிலும் சிக்கிரத்திலேயே அவளுடையதுக்கத்தை நிவர்த்தித்தது. ஆண்டாள்போய் தகப்பனர் கூப்பிடுவதாகத் திரும்பி வந்து சொல்வதற்குள் சோபை சந்துஷ்டையாகி தாமோதரனைப்பற்றி லக்ஷியம் செய்யாமலே இருந்தாள்.

"காதல்" என்னும் வியாதியானது ஒரு சமயம் தணிந்திருந்தபோதிலும் திரும்பவும் அதிகரிப்பது சகஜம். அபபடியே சோபை அந்த சமயத்தில் தாமோதரனைப்பற்றி அலக்ஷியமாக இருந்தபோதிலும் அடுத்த தடவை அவனைப் பார்த்ததும் பழைய காதல் பதின்மடங் கதிகமாகத் திரும்பிவிட்டது. அப்படியே அன்பும் அலக்ஷியமும் மாறிமாறி அவள் இருதயத்தைத் தாக்கின.

அவளுடைய நிலைமை இப்பொழுது முற்றும் மாறுபட்டுவிட்டது. முன்னே மிகவும் இனிமையாகவும் சந்தோஷமாகவும் இருந்த காதல் இப்பொழுது அவளைத் தேள்கொட்டுவதுபோல் துன்புறுத்தத் தொடங்கிற்று. தன்னால் கூடியவரையில் அதை எதிர்த்தும் தடுத்தும் காதலை அடக்கியும் பார்த்தாள். இதில் கொஞ்சம் வெற்றியடைந்தாள். சிக்கிரத்தில் முழுதும் ஜயம் அடைந்துவிடுவோம் என்றுகருதினாள். இதற்காகத் தாமோதரனைப்பற்றி சிந்திப்பதைக் கூடியமட்டும் நிறுத்திவைத்தாள். இதற்காகத் தன் அத்தை வீடுபோயிருப்பதென்று யோஜித்தாள். அதற்குத் தன் தகப்பனர் தடைசொல்வார் என்பது அவளுக்குத் தெரியும். ஆனால் "நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கும்" என்பதாக அடுத்த அத்தியாயத்தில் சொல்லும் விஷயம் நேரிட்டு சோபையினுடைய நிர்மானத்தைத் தடைசெய்தது.

11. அத்தியாயம்.

ஊழையு முப்பக்க் காண்பருலே வின்றித்
சாழாத ஞற்றவர்.

வத்ஸருக்கு நாளுக்குநாள் தன்மகள் சோபைமீதிருந்த அன்பு அதிகரித்துக்கொண்டேவந்தது. அவளைத் தனியேவிட்டு தன் குதிரை நாய்களைக்கூடப் பார்க்கப்போகிறதில்லை. அவைகளை அடியோடு விட்டுவிடப் பிரியமில்லாததினால் தான் வேட்டைக்குப் போகும்போதெல்லாம் சோபையையும் கூட அழைத்துப்போவார்.

சோபைக்கு வேட்டையில் கொஞ்சமாவது பிரியமில்லாதபோனாலும் தன் தகப்பனின் இஷ்டத்தைப் பூர்த்திசெய்ய கூடச் செல்வதாக ஒப்புக்கொள்வாள். அப்படி ஒப்புக்கொள்ளுவதற்கு மற்றொரு காரணமுமுண்டு தான் கூட விருந்தால் தன் தந்தை ஆபத்திற்கிடமான வழிகளில் வேட்டையில் தூணிந்து செல்லார் என்றும் எண்ணினாள்.

அவள் வேட்டைக்குப்போகத் தடையென்னவென்றால் தான் இனி சந்திப்பதில்லை என்று திட்டம் செய்துகொண்ட தாமோதரனை அங்கே காண நேரிடும் என்பதே. கொஞ்சகாலம் அமைதியுடன் அவள் விடுபோயிருந்து அங்கே தனக்குண்டாகிய காதலை அடக்கிக்கொண்டால் திரும்பியும் தாமோதரனைக் காணும் போது கொஞ்சமேனும் சஞ்சலமடையாது இருக்கலாம் என்று எண்ணினாள்.

இரண்டாம் நாள் வேட்டையினின்று திரும்பி விட்டுக்குக் கொஞ்சதூரத்தில் வரும்போது அவள் ஏறியிருந்த குதிரை எதையோ கண்டு பயந்து முன் கால்களைத் தூக்கித் துள்ளியோடியதால் சோபை அதிலிருந்து விழும் தருவாயிலிருந்தாள். தற்செயலாக கொஞ்சதூரத்திற்குப் பின்னால் வந்துகொண்டிருந்த தாமோதரனைதப்பார்த்தது உடனே அவளுக்கு உதவிசெய்ய ஓடிவந்து தன் குதிரைமேலிருந்து ஓரே பாய்ச்சலாகத் தாவி சோபையேறியிருந்த குதிரையின் கடிவாளத்தைப் பற்றினான். அந்த மூரட்டுக் குதிரை பிடென்று முன் கால்களை மடக்கி மேலிருந்த சோபையைக் கீழே தளளிவிட்டது. அபபொழுது தாமோதரன தாவி அவளைக் கையில் தாங்கிகொண்டான்.

பயத்தால் மதிகலங்கி யிருந்த சோபையை தாமோதரன் ஏதாவது காயம்பட்டதோ என்று கவலையுடன் கேட்டான். அதற்கு அவள் பதிலசொல்லக்கூடவில்லை. கொஞ்சநேரத்துகெல்லாம புத்தியெளிதது தான் சௌகரியமாயிருபபதாயும் தன்னைக் காப்பாற்றியதற்கு நான் நிரம்ப வந்தனமுளளவளாயிருப்பதாயும் சோபை சொன்னாள்.

தாமோதரன் :—உன்னை நான் காப்பாற்றுவதற்கு முன்ன மேயே மிக்க கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு எவ்வளவு துய ரம் நேரிட்டபோதிலும் உனக்குக் கொஞ்சமும் நீங்கு வராதபடிக் காப்பாற்றத் தயாராகவிருக்கிறேன்.

சோபை :—உனக்கு ஏதாயினும் நீங்குநேரிட்டதோ? என்ன.

தாமோதரன் :—நீ அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய தில்லை. உனக்கு நேர்ந்த பிரமாத ஆபத்திலிருந்தும் தப்பியதற் காக நீ கடவுளுக்கு வணங்கவேண்டும். எனக்கு ஒருகை ஓடிந்திருந் தால் அது எனக்கு லக்ஷியமில்லை. ஆனால் உனக்கு விபத்துநேரிட் டதைப்பற்றி எனக்கு வருத்தமாயிருக்கிறது.

சோபை :—(உரத்த குரலுடன்) கையை ஓடித்துக்கொண் டாயா என்ன ?

தாமோதரன் :—ஆம் அம்மா, கைதான் ஓடிந்துபோயிற்று. ஆனால் நீ உன்னுடைய ஸ்திதியைப்பற்றி ஞாக்கிரதை கொள்ளவேண்டும். எனது வலக்கை இன்னும் உனக்கு ஊழியம் செய்யத் தயாராய் இருக்கிறது. அதோ அடுத்த தோட்டத்துக் கப்பால் உன் தகப்பனாருடைய வீடு இருக்கிறது. அங்கே நான் கொண்டுபோய் விட்டுவிடுகிறேன்.

வலது கையால் சோபையைப் பிடித்து இட்டுக்கொண்டு போகையில் தாமோதரனது இடது கை ஓடிந்து தொங்குவதை அவள் பார்த்தாள். அவளுக்குக் கொஞ்சம் நஞ்சமிருந்த சந்தேக மும் நிவர்த்தியாகிவிட்டது. தனக்கு அபாயம் நேரிட்டபோது அடைந்த திகிலிலும் இப்போது ஞாஸ்தி திகிலடைந்தாள். அவள் கை கால் எல்லாம் உதறின. தாமோதரனாலும் அவளை அப்பொ முது பிடிக்கக்கூடவில்லை. அவளுடைய எண்ணமும் ஊசலாடிற்று. நிருதஜ்ஞையும் கருணையும்கூடி ஒருவனிடத்தில் எவ்வளவுபக்ஷம் காட்டக்கூடுமோ அதைவிட அதிகமாக தாமோதரனை அன்புடன் சோபை பார்த்தாள். இப்படிப் பார்த்ததற்கு வேறேதா காரண மும் உண்டு என்று சொல்லவும் வேண்டுமோ ?

இந்த அபாயம் நேர்ந்தபோது வத்ஸர் கொஞ்சதூரம் முன் னால் போய்க்கொண்டிருந்தார். அவரும் இன்னும் சில குதிரை வீரரும் பின்னால் குழப்பத்தைக் கண்டு இவர்களிடம் திரும்பி வந்தார்கள். சோபை தாமோதரனுக்கு நேரிட்டதை அவர்களிடம் தெரிவித்து அவனை ஞாக்கிறதையாகப் பார்க்கும்படி வேண்டிக் கொண்டாள். சோபையின் குதிரைமாத்திரம் அடக்குவாரின்றி ஓடிவந்ததைப்பார்த்த வத்ஸர் சோபைக்கு என்ன அபாயம் நேரி ட்டதோ என்று திகிலடைந்து ஓடிவந்து அவளுக்குக் கெடுதி ஒன்றும் சம்பவியாமலிருந்ததைக்கண்டு சந்தோஷித்தார். தாமோ

தரனுக்கு வேறு ஒன்றும் கெடுதியில்லாது கைமாத்திரம் ஓடிந்த தற்காக மகிழ்ந்து உடனே தக்க வைத்தியர்களைக்கொண்டு சிகிச்சை செய்துவிடுவதாகச் சொன்னார்.

வத்ஸர் குதிரையினின்று கீழிறங்கி தாமோதரனுடனும் சோபையோடும் பாதசாரியாக வீடுசேர்ந்தார். இவர்களை எதிரில் ஒருவன் கண்டால் இம்மூவரில் சோபைமாத்திரமே பரிதபிக்கக் கூடிய ஸ்திதியிலிருப்பதாய்க் கருதுவான். தாமோதரனை ஒருகை எலும்பு ஓடிந்து போனபோதிலும் சோபையைக் காப்பாற்றினோம் என்கிற எண்ணத்தால் மனம் பூரித்திருந்தாள். வத்ஸர் தாமோதரனுக்கு நேரிட்ட ஆபத்தைக் கருதி துயரமடைந்த போதிலும்மகள் காப்பாற்றப்பட்டதற்குக் குதூகலித்தார். தாமோதரனுடையஉடம்பையை ஒருபெரிய வீரச்செயலென்றே சோபை கருதினாள். அவள் மனத்தினின்றும் அன்றைய சந்தற்பம் என்றும் நீங்கவில்லை. ஸ்திரீகள் வீரர்களைக் கண்டு சந்தோஷிப்பது போல மற்றெதிலும் சந்தோஷிக்கமாட்டார்கள். அங்ஙனம் சந்தோஷிக்குஞ் சமயத்தில் தாமோதரனும் சோபையைக் கண்டு மனமிளகிவிட்டான். சில நாளாகச் சோபையின் லாவண்ணியமும் குணாதிசயமும் அவனுடைய கரையாத மனத்தையும் கரையச்செய்துவந்தன.

12. அத்தியாயம்.

கேரு அச்சிறு சொல்லுஞ் செற்றூர்போனேக்கு
மூரு அர்போன் றுற்றூர் குறிப்பு.

நடக்கமுடியாமல் தட்டுத் தடுமாறி வந்த சோபை வீடு சேர்ந்ததும் களைத்து நாற்காலியில் சாய்ந்துவிட்டாள்; வேண்டிய சைத்தியோபசாரங்களைச் செய்தபின்னர் சோபை மூர்ச்சைதெளிந்து எழுந்தாள். அப்பொழுது தாமோதரனைப் பார்க்கும் பொருட்டு சொல்லியனுப்பப்பட்டிருந்த வைத்தியரும் வந்துசேர்ந்தார். அவர் வந்ததும் நோயாளியின் சட்டையைக் கழற்றுவித்து அவன் கையை மன்றுக இழுத்து நீட்டி இணைவைத்திய முறைப்படி பலவாறு பரிசோதித்தார். இதனால் வலிபொறுக்கமுடியாமல் தாமோதரன் முகத்தை சுளித்துக்கொண்டான். அதைப்பார்த்து வைத்தியர் "என்ன ஐயா செய்கிறது? நான் உங்களுக்குக் கெடுதி செய்வேனு? எதற்காக முகத்தைச் சுளித்துக்கொள்ளுகிறீர்" என்று கேட்டுவிட்டுக் கையைப் பிடித்துக்கொண்டு தேகத்திலுள்ள பல எலும்புகளைப்பற்றியும், அவை எவ்விதமாய் முறிபடுமென்பதைப் பற்றியும், தாமோதரன் எவ்விதமாய் விழுந்து கை முறித்துக்கொண்டிருக்கக் கூடுமென்றும், எந்த எந்த முறிகள் சிகிச்சையிலேயே சொஸ்தமாகி விடக்கூடியவை, எவை கெடுதி

யாகிவிடுமென்றும் உபன்னியாசம் செய்யலானர். ஒருவருக்கும் புரியாத இந்தப் பெரிய உபன்னியாசத்தை முடித்ததும் தன் தொழிலைச் செய்ய ஆரம்பித்தார். உபன்னியாசம் செய்துமுடிக்க வெகு நேரமானபோதிலும்வைத்தியத்தொழிலை மாத்திரம் வெகு சீக்கிரத்தில் முடித்துவிட்டார்.

உடம்பு சௌக்கியமாகும் வரையில் தன் வீட்டிலேயே இருக்கும்படி தாமோதரனை வத்ஸர் பிடிவாதப்படுத்தினர். அவனுக்குத் தனியாக ஒரு படுக்கையும் கொடுத்திருந்தார். வைத்தியர் அந்த படுக்கையிலேயே இருக்கும்படியாகவும் புனற்பாகமே ஆகாரமாய்ப் புசிக்கும்படிக்கும் தெரிவித்தார். வைத்தியர் எதும் பைச்சேர்த்து இனைக்கும்போது அங்கிருந்தவர்களில் ஆண்டாளும் ஒருத்தி. வைத்தியர் வேலை முடிந்ததும் சோபை அவளை யுடனே வரவழைத்து "தாமோதரனுக்கு உடம்பு எப்படி இருக்கிறது" என்று கேட்டாள்.

ஆண்டாள்:—தாமோதரனுடைய தைரியத்தையும், பெருந்தன்மையையும், வீரச்செய்கையையும் என்னவென்று சொல்லுவேன். பேரழகுள்ளவர் அதற்கேற்ப பெருங் குணங்களையும் படைத்திருப்பதருமை. என்ன! அவருடைய சுந்தரவடிவந்தான்! ஒவ்வொரு அவயவமாக வர்ணிக்கத் தொடங்கினால் இன்று முழுவதும் போதாதே.

இவ்வாறு இவள் சொல்வதைக் கேட்டிருந்த சோபையினுடைய முகமலர்ச்சியையும் சந்தோஷத்தையும் ஆண்டாள் பார்த்திருந்தால் சோபையின் உள் அபிப்பிராயத்தை நேரிடத் தெரிந்து கொண்டிருப்பாள். எதிரில் ஒருநிலைக்கண்ணாடி வைக்கப்பட்டிருந்தது. ஆண்டாள் அதைப் பார்த்துக்கொண்டே சோபையின் முகமாற்றத்தை எல்லாம் ஒன்றுவிடாது கவனித்துக்கொண்டாள். அதனால், சோபையை நேரே உற்றுநோக்கவேண்டிய அவசியமிராது போயிற்று.

சோபை:—(புன்சிரிப்புகொண்டு) நீ தாமோதரன்மேல் நிச்சயமாய் ஆசைகொண்டிருக்கிறாய்.

ஆண்டாள்:—நானுவது ஆசைப்படவாவது! சத்தியமாய் அது ஒன்றுமில்லையம்மா.

சோபை:—இருந்தால் தான் என்ன? அதற்கு வெட்கப்படுவானேன்? அவனை நிரம்ப அழகுள்ள வாலிபன்.

ஆண்டாள்:—ஆம் அம்மா. அவரைப்போன்ற சுந்தர புருஷரை என் ஆயுள் நாளில் கண்டதேயில்லை. அவர்மீது ஆசைப்பட நான் நாணேன். ஏனெனில் என்னைப்போல் அவரும் மானுடர்தானே. அவர் ஆளவந்தார் வீட்டில் வளர்ந்து இப்பொழுது

பெரியமனுஷராகியிருந்தபோதிலும் தாமோதரர் பிறப்பு என்பிற ப்பினும் உயர்ந்த தன்று. நான் ஏழையாக இருந்தாலும் நான் யோக்கியர்களின் பெண். நான் பிறப்பதற்கு மூர்த்தியே என் தாயாருக்கும் தகப்பனாருக்கும் கலியாணமாகியிருந்தது. ஆதலால் அவர்கள் என் பிறப்புக்காக வெட்கப்படக் காரணமில்லை. தாமோதரர் எவ்வளவு அழகாயிருந்தாலும் அவரை என்னுடைய அத்தங்காள் மல்லிகை துன்மார்க்கமாய்க் கூடியதற்கு எங்களுடைய பாட்டனார் மாத்திரமிருந்தால் சும்மாவிட்டிரார்.

சோபையினுடைய மனம் திடமாய் இராததால் கொஞ்ச நேரம் ஆண்டாளுடைய பேச்சை நிறுத்தக்கூடவில்லை. அவள் தாமோதரனைப்பற்றி அவமரியாதையாகப் பேசியதும் அதைப் பொறுமல் சோபை "என்னுடைய தந்தையின் சினேகிதரை நீ இப்படியும் பேசும்படியாயிற்று? அந்த துஷ்டை மல்லிகையைப் பற்றி என்னிடம் என் பேசினாய்? தாமோதரனிடம் ஒரு குற்றத்தையும் கண்டுபிடிக்கக் கூடாதவர்கள்தான் அவர் பிறப்பைப் பற்றி இழிவாய்ப் பேசுவார்கள். இனிமேல் அதைப்பற்றியும் என்னிடம் பேசாதே" என்றாள்.

ஆண்டாள்:—தங்களுக்குக் கோப மூண்டாகும்படி பேசியதற்காக நான் விசனப்படுகிறேன். தங்களிலும் அதிகமாக மல்லிகையை நான்வெறுக்கிறேன். தாமோதரரைப்பற்றி விட்டு வேலைக்காரர்கள் எதாவது இழிவாய்ப் பேசினாலும் நான் அவருக்குப் பரிந்தே பேசுவதுவழக்கம்; நான் அவரைப்பற்றி ஒரு விசேஷம் தங்களிடம் சொல்லவிரும்புகிறேன். ஆனால் தாங்கள்கோபிப்பீர்களோ என்று பயமாயிருக்கிறது.

சோபை:—நீ எனக்கு என்ன சொல்லக்கூடும்? அதை உடனே சொல்.

ஆண்டாள்—இல்லையம்மா, அதனால் ஒரு குற்றமுமில்லை. அவர் ஒன்றும் தவறு எண்ணவில்லை, தாங்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது.

சோபை:—சமாசாரத்தை சொல்லு, என் நீள இழுக்கிறாய்?

ஆண்டாள்:—போனவாரம் ஒருநாள் நான் வேலைசெய்துகொண்டிருக்கும் பொழுது தாமோதரர் அறைக்குள் வந்தார். அங்கே ஒரு நாற்காலியின்மேல் தங்களுடைய தாவணிகிடந்தது. அதை மேற்றுத்தான் எனக்குக் கொடுத்திர்கள். அதை எடுத்து அவர் தன்கையில் வைத்துக்கொண்டார். நான் அதைப்பார்த்து ஐயா அதைக் கசக்கி வீணாக்கிவிடவேண்டாம் என்றேன். நான் சொல்வதைக் கவனியாது அவர் கையிலேயே வைத்துக்கொண்டு அதற்கு முத்தம் கொடுத்தார். அவர் கொடுத்த முத்தத்தின் ஓர் வதத்தைப் போல நான் இதுவரையில் பார்த்ததில்லை.

சோபை:—அது என்னுடையதென்று அவருக்குத் தெரியாதுபோலிருக்கிறது.

ஆண்டாள்:—நான் மேலே சொல்வதைக்கேளுங்கள். அந்தத் தாவணியை அவர் மென்மேலும் முத்தமிட்டுவிட்டு அதைப்போன்ற அழகான தாவணியை உலகத்திலேயே கண்டதில்லை என்றார். அதற்கு நான் "என்ன ஐயா, இதே தாவணியை இத்தடன் நாறு கடவை பார்த்திருப்பீர்களே, இன்றுதான் புதிதாய்க் கண்டீரோ" என்றேன். அதற்கவர் "ஏன் ஆண்டாள், உன் எஜமானியின்முன் ஒருவன் இருந்தால் அவன் அவளையே பார்த்துக்கொண்டிராமல் அவள் தரித்திருக்கும் அழகான உடைகளைக் கவனிப்பானே" என்றார். அது மாத்திரமல்ல. தாங்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது. அவர் தப்பெண்ணம் ஒன்றும் கொள்ளவில்லை. ஒருநாள் தாங்கள் தகப்பனாருக்கு முன் வீணை வாசித்துக் கொண்டிருக்கும்பொழுது தாமோதரர் அடுத்த அறையில் உட்கார்ந்திருந்தார். அவர் யோசனையிலாழ்ந்திருப்பதாய் எனக்குத் தோன்றிற்று. நான் அவரை "என் ஐயா என்ன சங்கதி? எதற்காக இப்படி யோசித்துக்கொண்டிருக்கிறீர்" என்றேன். அதற்கு அவர் தூக்கத்திலிருந்து விழித்தவர்போல் திடுக்கிட்டு "அப்ஸரஸ்போன்ற உன் எஜமானி வீணை வாசிக்கையில் நான் எதைப்பற்றி யோசிக்கக்கூடும்" என்று சொல்லி என்கையைப்பிசைந்து, "ஆண்டாள் ஆண்டாள், அவன் எவ்வளவு பாக்கியவானாக இருக்க வேண்டு" மென்று பெருமூச்செறிந்தார். அவர் தப்பு எண்ணம் கொள்ளவில்லை. தாங்களிதைப் பற்றி ஒரு வார்த்தையும் ஒருவரிடமும் சொல்லக்கூடாது. ஏனெனில் என்கையில் ஒரு சவரீன வைத்து யாரிடமும் சொல்லாதே என்று சொல்லி சுவாமிமேலும் ஆணை இடச்சொன்னார்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த சோபையின் நிறம் மாறி மாறி வந்தது.

சோபை:—ஏ ஆண்டாள், இதைப்பற்றி என்னிடமாவது வேறு யாரிடமாவது ஒரு வார்த்தையேனும் சொல்லக்கூடாது. உன்மேல் எனக்கு ஒரு கோபமுமில்லை. உன் வாய் ஓட்டை வாயாயிற்றே. யாரிடமாவது யேதாவது உளறி வைக்கப்போகிறாய்.

ஆண்டாள்:—தங்களுக்குப் பிரியமில்லாததைச் செய்வதிலும் என் நாக்கு அறுபடச்சம்மதிப்பேன். தங்களுக்கு இஷ்டமில்லாத ஒரு வார்த்தையாவது நான் சொல்லுவதில்லை.

சோபை:—இந்த விஷயத்தைப்பற்றி யினிமேல் வாய் திறக்கக்கூடாது. இந்த விஷயம் என் தகப்பனார் காதுக்கு எட்டினால்

தாமோதரர் நிரபராதியாக விருந்த போதிலும் அவர் மேல் என் தந்தை மிக்க கோபங்கொள்வார்.

ஆண்டாள்:—இல்லையம்மா, அவர் வேண்டுமென்றே செய்ய மாட்டார். அவர் மெய்ம்மறந்தவரைப்போல் ஏதோ பேசிக்கொண்டிருந்தார். தான் சொன்னது இன்னதென்று தனக்கே தெரிய வில்லை என்று அவர் பிற்பாடு சொன்னார். அதற்கு நான் "ஆம் ஐயா, நீர் சொன்னது உமக்குத் தெரிந்திராது" என்றேன். அம்மா, நான் இவ்வளவு சொன்னதற்கு என்னை மன்னிக்கவேண்டும். தங்களுக்குப் பிரியமில்லாதது ஏதாவது சொல்லியிருந்தால் அதற்காக நாக்கைப் பிடுங்கிக்கொள்ளத் தயாராக விருக்கிறேன்.

சோபை:—இதற்கு முன்னால் சொல்லியிராதது எதுவாயிருந்தாலும் நீ என்னிடம் சொல்லலாம்.

ஆண்டாள்:—அவர் என்னிடம் ஒரு சமயம் கொடுத்த கொஞ்சநேரத்திற்கெல்லாம் "ஆண்டாள், நான் உன் எஜமானியை எனது தெய்வம்போலன்றி வேறு எவ்விதமாகவும் நினைக்கவில்லை. நான் கிட்டாததற்கு ஆசைப்படும் வீணனல்ல. நான் உயிருடனிருக்கும்வரையில் அவளைத் தெய்வமாகவே எண்ணித் தொழுவேன்" என்றார். இவ்வளவுதான் நடந்த சமாசாரம். அம்மா, சத்தியம் வேண்டுமானாலும் செய்வேன். முதலில் பேசும்போதெல்லாம் அவர்மேல் எனக்குக் கோபந்தான். கடைசியில் அவர் கெடுதல் ஒன்றும் எண்ணவில்லை என்று தெரிந்துகொண்டேன்.

சோபை:—ஆண்டாள் நீ என்னை உண்மையாய் நேசிக்கிறாய். அன்று ஒருநாள் நான் வெகு கோபமாயிருந்தேன் என்று வருத்தப்படாதே. என்னிடமே நிலையாய் இருக்க உனக்கிஷ்டமிருந்தால் நீ இருந்துவிடு.

ஆண்டாள்:—தங்களிடமிருந்து பிரிய எனக்குமனம் வருமா? தாங்கள் முன்னே எச்சரித்தபோது நான் அழுதுவிட்டேன். தங்களை விட்டுப்போனால் நான் நன்றியற்றவளாவேனன்றோ? அன்றியும் தங்களிடமிருக்கும் சௌகரியம் இதர இடங்களில் கிடைக்குமா? தங்களுடனிருந்தே நான் காலந்தள்ளுவதாக நிச்சயித்திருக்கிறேன்.

இந்தச் சமயத்தில் சாப்பாட்டிற்கு அழைக்க ஆள்வந்தான். சாப்பாட்டிற்குப் போகும்போது சோபை மனத்தில் புது எண்ணமுடையவளாகிவிட்டாள்.

5. சம்புடம்.

1. அத்தியாயம்.

கடுஞ்சொல்லன் கண்ணிலனெயி னெஞ்செல்வ
நீடின்றி யாங்கே கெடும்.

தாமோதரன் வியாதியாகப் படுத்திருக்கும்போது அனேக சினேகிதர்கள் அவனை வந்து பார்த்துப்போனார்கள். ஆனவந்தார் அவனை நாள் தவறாது வந்துபார்ப்பார். அவர் அவனுடைய வீரச்செய்கைக்காக மெச்சி அவனடைந்த துன்பத்திற்கு வருத்தப்பட்டாரானாலும் அவனுடைய முரட்டுச் செய்கைக்கும் பின் வருவதை யோசியாமல் தன் மனோபீஷ்டப்படிச் செய்யும் நடத்தைக்கும் அவனுக்குப் புத்திகூற அதுதான் தக்க சமயமென்று எண்ணினார். தனியாக அவனிடமிருந்தபோதெல்லாம் அவர் அவனுடைய பூர்வசேஷ்டைகளை யெல்லாம் ஞாபகப்படுத்தி மிக்க இனிமையாகவும் இன்புடனும் அவனைக் கடிந்து இனிமேலாவது ஜாக்கிரதையாக நடந்துகொள்ளும்படி மதிகூறுவார். வயது வந்து விட்டபடியால் சிறுபிள்ளை சேஷ்டை இனி செய்யக்கூடாதென்றும், யோக்கியனாயிருந்தாலொழிய அவனுக்கு நன்மையுண்டாகாதென்றும், தானும் அவன்மீது வைத்திருக்கும் நல்லபிப்பிராயத்தை இழக்கநேரிடும் என்றும் பலவிதமாகச்சொல்லி அதற்குமுன் அவன் செய்திருந்த குற்றங்கள் எல்லாவற்றையும் தான் கூஷமித்துவிட்டதாயும், அப்போது நேரிட்ட ஆபத்தை நினைத்தாவது இனி நன்னடக்கையைப் பூரணமாய் மேற்கொள்ளவேண்டுமென்றும் சொன்னார்.

தார்க்கீகரும் அடிக்கடி வந்து பார்த்துப் போவார். அவரும் நோயாளி தன் உபன்னியாசத்திற்கு ஏற்றவனென்று ஆனவந்தாரைவிடக் கடுமையாக அவனுடைய முன் குற்றங்களை யெல்லாமெடுத்து எச்சரித்துக்காட்டி அவனைத் தூற்றலானார். அவன் கையொடிந்தது இதற்குமுன் செய்திருந்த குற்றங்களுக்குச் சிக்ஷை என்றும், கழுத்தொடியாது கை ஒடிந்ததற்குக் கடவுளுக்குஸ்துதி செய்யவேண்டுமென்றும், இனிச் சீர்படாவிட்டால் சிக்கிரத்தில் கழுத்தும் முறிந்துவிடுமென்றும் சொன்னார். அவனுடைய துன்மார்க்கத்திற்கு இதுவரையில் அவன் தண்டனை அடைந்திராததைப் பற்றித்தான் ஆச்சரியப்பட்டிருந்ததாகவும் "தெய்வம் நின்று கொல்லும்" என்கிற வாக்கியம் இவன் விஷயத்தில் உண்மையாயிற்று என்றும், இனிமேலாவது பாபத்திற்கு சிக்ஷை நிச்

சயமாய்க் கிடைக்குமென் றுணர்ந்து யோக்கியனாக மாறவேண்டு மென்றும் உபன்னியாசித்தார். தான் சொல்வதெல்லாம் விழலுக்கு இறைத்த நீராகு மென்று தெரிந்தபோதிலும் தன்னுடைய மனச்சாக்ஷிக்கு விரோதமாக ஒன்றும் செய்யக்கூடா தாதையா லும் தன் கடமையை முடித்துவிட்டதாகவும், ஆனால் அவனிந்த வுலகத்தில் எவ்வளவோ கஷ்டப்பட்டு மறுமையிலும் கொடு நரகத்திற்கு ஆளாகப் பிறந்திருக்கிறான் என்றும் சொன்னார்.

கந்தர் வேறுவிதமாக உபதேசித்தார். 'கை ஒடிந்தாற்போன்ற ஆபத்துக்களைப்பற்றி அறிவுள்ளவன் அலக்ஷியமாயிருக்கவேண்டும். இவ்வாபத்துக்கள் எப்படிப்பட்ட ஞானிக்கும் யோக்கியனுக்கும் சம்பவிப்பதால் இவை பாபத்தின்பயன் என்று நினைப்பதற்கில்லை. இவற்றைக் கண்டு யாருஞ் சஞ்சலப்படவேண்டியதில்லை. எல்லாம் நன்மைக்கே என்று நம்பவேண்டும். இவ்வாபத்துக்களைக் கெடுதியென்று சொல்வது ஒவ்வாது. கொடிய ஆபத்துக்களால் நேரிடும் அதிகவலியும்புத்திமானுல் மிக்க அலக்ஷியத்துடன் எற்கப்பட் வேண்டியது' என்றார்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த தார்க்கிகருக்கு இது நாஸ்திக வாதமென்றும், நியாய விரோதமானதென்றும் தோன்றிக் கந்தரைப் பகைத்தார். கந்தர் இம்மாதிரியே தர்க்கம் செய்துகொண்டு வரும்போது ஒருநாள் தற்செயலாய் நாக்கைக் கடித்துக் கொண்டார். அதனுல் அவர் சம்பாஷணை தடைபட்டது மல்லாமல் அவர் வலி பொறுக்காது முகம் சுளித்து வாய் குளறினர். பக்கத்திலிருந்த தார்க்கிகர் மிக்க அருசையோடு அவர் முதுகைத் தட்டி, "எப்படிப்பட்ட நோயையும் அலக்ஷியமாக வெறுக்கவேண்டுமென்று இப்பொழுதுதானே சொன்னீர், தாங்கள் இந்த வலியைப் பொறுக்காமல் கஷ்டப் படுகிறீரே" என்றார். கந்தருக்கோ கோபம் பொங்கிற்று, வாயினுல் திட்டுவதற்கோ நாக்கைக் கடித்துக்கொண்டுவிட்டார். தார்க்கிகரைத் தக்கபடி சிக்ஷிக்கக் கருதி எழுந்திருக்கும்போது அங்கிருந்த வைத்தியர் தன்னுடைய லாபத்தையுங் கருதாது இடையில் புகுந்து சண்டையை விலக்கினர்.

பிலவங்கன் எப்பொழுதாவது தாமோதரனை வந்து பார்ப்பான். அப்போது தனியாக வரமாட்டான். இச்சிறுவன் தாமோதரனிடத்தில் தனக்கு மதிப்பு அதிக மூண்டென்றும் அவனுக்குநேர்ந்த ஆபத்திற்காக தான்மிகவும் வருந்துவதாகவும் சொல்லிக்கொள்வான். ஆனுல் அவனுடன் அதிகமாகப் பழகினுல் தாமோதரனுடைய நீக்குணம் தனக்கும் படிந்து விடுமாதலால் தான் ஒதுங்கியே இருப்பதாகச்சொல்லிக்கொள்வதுமுண்டு. தார்க்கிகரைப்போல் இவன அடியோடு தாமோதரனைக் கைவிடவில்லை. தன்னுடைய மாமன் உதாரணத்தையும் பெருந்தன்மையையும் கண்டு இனிமேலாவது தாமோதரன் சீர்படுவான் என்று நம்பி

னன். இனிமேல் தவறு செய்தால் அவனிடம் தனக்கு மதிப்பே இராது என்றும் சொல்லிமுடித்தான்.

வத்ஸர் சாப்பாட்டுவேளை தவிர மற்ற நேரமெல்லாம் தாமோதரனிருக்கு மிடத்திலேயே இருப்பார். சிலவேளை தாமோதரனிருக்கும் அறையிலேயே அவர் புகுப்பார். தன் ஆகாரத்தை எடுத்துத் தாமோதரனுக்கும் கொடுக்கப்போவார். இப்படிச் செய்யாதிருக்கும்படி வைத்தியர் பிரயாசைப்பட்டுத் தடுத்து அவரைச் சம்மதிக்கச்செய்தார். ஆனால் காலையில் வேட்டைக்குப்போகும்பொழுது தாமோதரன் அறையின் சாளரத்தினிடம் வந்து கொம்பூதிப் போகாதிருக்கமாட்டார். அன்றியும் தாமோதரன் தூங்கினாலும்சரி விழித்திருந்தாலும் சரி என்ன சொல்லியும் எவரேனும் புதியவரைக்கண்டுவிட்டால் கூச்சல் போட்டேபேசுவார்.

நல்லவேளையாக தாமோதரனுக்கு எழுந்து உட்காரும்படியாகத் தேகம் சௌக்கியமாயிற்று. அப்பொழுது வத்ஸர் சோபையைக் கூட்டிக்கொண்டு அவனை வந்து பார்த்தார். அன்று முதல் சோபை அவனை அடிக்கடி வந்து பார்ப்பாள். அவள் அங்கே வீணைவைத்துக்கொண்டு இனியகீதங்களைத் தாமோதரனுக்கு ஆநந்தமுண்டாகும்படி இசைப்பாள். வெளிக்கு மாறுதல் ஒன்றும் தோன்றுதபடி எவ்வளவோ ஜாக்கிரதையாகச் சோபை இருந்தபோதிலும் சிலசமயங்களில் அவள்மனத்திலிருப்பதைப் பளிங்குபோல் முகம் காட்டிவிடும். வாயினால் உரைக்காத காதல் கண்களினாலும் நாணத்தினாலும் இன்னும் அனேக கிருத்தியங்களினாலும் வெளிப்பட்டு விடுமன்றே?

ஒருதினம் தாமோதரனைச் சந்தோஷிப்பிக்கும் பொருட்டு சோபை வெகு இனிமையாக வீணை வாசித்துக்கொண்டிருக்கும் போது அங்கு வத்ஸர் ஓடிவந்து "தாமோதரா, தாமோதரா, உனக்காக இன்னேரம் கீழே அந்த தடித் தார்க்கேனோடு சண்டையிட்டு வந்தேன். எனக்கு மூன்னால் அவன் ஆளவந்தாரிடம் உனக்கு நிகழ்ந்த ஆபத்து உன்பாவத்தின் பயனென்று கூறினன். அதற்கு நான் "என்காணும் புத்தியின்றிப்பேசுகிறீர். ஒருசிறு பெண்ணைக் காப்பாற்றுவதற்காக பிரயத்தனப்படுகையில் நேரிட்ட ஆபத்தன்றோ அது. அது பாவத்தின் பயனாகுமோ? இப்பொழுது அவனுக்கிருக்கும் தர்மசிந்தைக்கு அவன் உம்மைப்போன்ற சாஸ்திரிகள் எல்லோரையும்விட மேலான மோக்ஷத்திற்குப்போவான். அவன் செய்த செய்கைக்காக அவன் தலைகுனியவேண்டியதில்லை" என்று பதில் சொன்னேன் என்றார்.

தாமோதரன் "தாங்கள் சொல்லியது சரிதான். நான் செய்த காரியத்திற்காக நான வெட்கப்படப்போகிறதுமில்லை, எனக்கு நேரிட்ட ஆபத்திற்காக வருந்தப்போகிறதுமில்லை. தங்களுடைய

புத்திரியைக் காப்பாற்றியதற்காக எனக்கு நேர்ந்த ஆபத்து எனது பரம நன்மைக்கே என்றுஞ் சொல்வேன்" என்றான்.

வத்ஸர்:—"இதற்காக உனக்கும் ஆளவந்தாருக்கும் பகையுண்டாக்க முயல்வானு ஒருவன்? அவன் உருத்திராக்க விபூதி தாரணனுயிராவிட்டால் அந்தத் தார்க்கீகனை இரண்டு உதை உதைத்துவிட்டு வந்திருப்பேன். உன்னை நான் மிகவும் நேசிக்கிறேன். உன்மேல் எனக்குரிரம்பப் பிரியமாகவிருக்கிறது. என்னுலானது எது வேண்டுமானுலும் செய்யச் சித்தமாயிருக்கிறேன். நாளைகாலை நீ என் குதிரை லாயத்திற்கு வந்து உனக்குப் பிரியமான குதிரையைப் பொருக்கி எடுத்துக்கொள்" என்றார். தாமோதரன் வந்தனம் செய்து "எனக்கு ஒன்றும் தேவையில்லை" என்றான். அதற்கு அவர் "சோபையுடைய பெண் குதிரையை வேண்டுமானுலும் எடுத்துக்கொள். எண்ணூறு ரூபாய் கொடுத்து அதை வாங்கினேன். அதற்கு ஆறுவயதாகிறது" என்றார். தாமோதரன் "பதினுயிரம்போட்டு வாங்கியிருந்தாலும் அது எனக்கு வேண்டியதில்லை" என்றான். அதற்கு வத்ஸர் 'உன் கையை ஒடித்ததே அதற்காகவோ அதை நிராகரிக்கிறாய்? வாயில்லாப் பிராணிகளிடத்தில் ஆண்பிள்ளைகள் பகைவைத்துக்கொள்ளலாமா? அதை மன்னித்து அது செய்த குற்றத்தை மறந்துவிடு' என்றார். அப்பொழுது சோபைதான் வீணைவாசிப்பதைக் கேட்கும்படியாகத் தகப்பனுரை வேண்ட அப்படியே அவரும் ஒப்புக்கொண்டார்.

மேல் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த சோபைக்கு முகம் மாறுதல் பல அடைந்தது. தன் குதிரையைத் தாமோதரன் வேண்டாமென்று சொன்னதற்குத் தன் தகப்பனுர் கூறிய காரணமன்றி வேறுகாரணமு மிருக்கவேண்டுமென்று கருதினுள். அவள் மனது கலக்கத்திலிருந்ததால் வீணைசரியாக வாசிக்கவில்லை. நல்ல வேளையாக வத்ஸர் தூங்கிவிட்டபடியால் இதைக் கவனிக்கவில்லை. ஆனுல் விழித்துக்கொண்டிருந்த தாமோதரன் ஏதோ சில வார்த்தைகளைச்சொன்னுன். இதற்கு முன் நடந்திருந்த விஷயங்களையும் இப்பொழுது சோபையின் மனத் தடுமாற்றத்தையும் அறிந்துகொண்டு சோபையின் மாறுபாட்டை அவன் நன்கு அறிந்தான். இதற்கு முன்னுலேயே தாமோதரனுக்கு இவ்வளவு சூக்ஷுமபுத்தி யிருந்திராததைப்பற்றி வாலிபர்களாகிய நமது வாசகர்கள் நகைப்பார்கள். ஆனுல் தாமோதரனுக்கு தன் வடிவத்திலும் குணத்திலும் நம்பிக்கையில்லாததால் அவற்றைக் கண்டு அந்த யுவதி காதலித்தாள் என்று அறியக்கூடாதிருந்தான். இதற்குக் காரணம் அவன் நாட்டுப்புறத்திலேயே இருந்து நகர அனுபவத்தை அடைந்திராது போனதுதான். சோபையின் நிலைமையைத் தெரிந்துகொண்டதும் தாமோதரனுடைய மன்மும் சஞ்

சலபபட்டது. இவனைப்போல திடமும் சுத்தமுமான உள்ளம் இல்லாதவர்களாயிருந்தால் அந்த சமயத்தில் கெடுதியேநிகழ்ந்திருக்கும். சோபையினுடைய பெருமையையும் மேன்மையையும் நன்றாக உணர்ந்த தாமோதரன் அவளுடைய உருவத்தைக்கண்டு உள்ளம் சலித்தான். அவளது கல்வித்திறமையை மெச்சினான். அவளுடைய நற்குணத்தைக் கண்டு காதலித்தான். இதுவரையில் அவளை அடையலாம் என்று கருதாதவனுகையால் இப்பொழுது திடீர் என்று உண்டான உணர்ச்சி அவனைப் பிரமிக்கச் செய்துவிட்டது. தன் மனத்தில் வெகுநாளாக மீறைத்துகிடந்த உண்மைக் காதல் என்னும் ரகசியம் இப்பொழுதுதான் அவனுக்கு வெளிப்பட்டது. தான் காதலிக்கும் பெண்ணும் தன்னை மனப்பூர்வமாக இச்சிக்கிறாள் என்றும் நன்குணர்ந்தான்.

2. அத்தியாயம்.

கெவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றிக்கு மீயப்படும்.

சோபை தன்மேல் வைத்திருக்கும் அன்பைக் கண்டு தன்னுடைய உருவமும் குணமுமே அவளை வசீகரப்படுத்தியதென்று மகிழ்ச்சி கொண்டான், ஆயினும் அவ்வன்பும் தன்னைக் கண்டு பரிதாபப்படுவதால் உண்டாயதோ அல்லது தன்மேலிருந்த மதிப்பினால் உண்டாயதோ என்றுஞ்சந்தேகப்பட்டான். சோபை தன்னைக் காதலிப்பாள் என்று கனவிலும் கருதாததால் தாமோதரன் இப்படி எல்லாம் சந்தேகிக்கலாயிற்று. ஒரு வேளை சோபை தன்னைக் காதலித்தபோதிலும் அவளுடைய தந்தை அதற்குச் சம்மதியார் என்னும் அவனுக்கு நன்றாய்த் தெரியும். ஏனெனில் நாட்டுபுரத்திலிருந்தபோதிலும் வத்சலருக்குத் தன் மகள் மீதிருந்த அன்பினால் அவளை அந்த தேசத்தில் பெரிய சம்பத்துள்ளவனுக்கு விவாகம் செய்து கொடுக்கப்போகிறதாகச் சொல்லியிருந்தார். பெற்றோர்கள் செல்வத்தையே முக்கியமாகக் கவனிப்பது சகஜம். மேற்சொன்ன காரணத்தால் தான் சோபையை மணப்பதற்கு வத்சலர் சம்மதிக்கமாட்டார் என்று தாமோதரனுக்குத் தெரிந்தது. ஆகலின் அவருடைய சம்மதமிராமலே சோபையை அடைய முயன்றால் வத்சலர் கொண்டிருந்த பேரெண்ணம் நிறைவேறச் செய்யாது போனதேயன்றி அவர் தனக்குச் செய்த நன்றிக்கும் தன்னிடம் கொண்ட நட்புக்கும் மாறாக அவரது பெண்ணையே அடித்துக் கொண்டுபோவதாக வருதலின் தான் செய்ந்நன்றி கொன்றவனுவதுண்மை என்று நினைத்தான். இதை நினைத்ததும் மனம நடுங்கி அவ்வெண்ணத்தை வெறுத்தான். அதிலும் களவில் சோபையைக் கவர்ந்ததாகத் தெரிந்தால் ஆளவந்தார் என்ன நினைப்பார், அவர் தனக்குச் செய்திருக்கும் உபகாரமோ கணக்கிலடங்காது,

பொய்யும் சூதும் கண்டால் அவர் மூற்றும் வெறுப்பதியல்பு, தான் அவ்விழிவான காரியத்தைச் செய்தால் அவர் என்றும் கூடிக்கார், அன்றியும் தன் பெயரைக் கேட்கும்போதெல்லாம் அவர் மனம் துடிக்குமென்றும் எண்ணினான். இவ்வித எண்ணங்கள் உண்டாகித் தாமோதரனுடைய காமத்தீயை அவித்து அவனுக்குப் பெரிய வியாகுலத்தை யுண்டாக்கிவிட்டது. இத்துடன் வேறூர் ஸ்திரீக்காகக் கொண்டிருந்த பச்சாத்தாபமும் சேர்ந்து அவன் மனத்தை ஊசலாடச்செய்தது. அழகியமல்லிகையின் உருவம் அவன் முன்னால் தோன்றிற்று. அவளிடத்தில் தான் அவளை விட்டு வேறூர் ஸ்திரீயையும் பார்ப்பதில்லை என்று வாக்குக்கொடுத்ததும். அவளும் தன்னைக் கைவிட்டால் உயிர் தரித்திருப்பதில்லை என்று சொன்னதும் ஞாபகத்திற்கு வந்தது. அவளை அப்பொழுது கவனியாததால் அவள் சாகுந்தருவாயில் இருப்பதாய் அவனுக்குத் தோன்றிற்று. முதலில் அவளை வசியஞ்செய்துவிட்டுப் பிறகு கைவிட்டுவிட்டால் அவளை ஆதிமுதல் வெறுத்து வந்த அயலாரும் சகோதரிகளும் அவளை மிகவும் துன்பப்படுத்துவார்கள் என்றும், அத்துயரம் பொறுமல் அவள் வேசிகடத்தையைப் பயிரங்கமாக அனுசரிக்க நேரிடும் என்றும், அனைத்திற்கும் தானே காரணமென்றும் தன்னை நொந்துகொண்டான். மல்லிகையோ கற்பிழந்ததற்காக மற்றப் பெண்களால் வெறுக்கப்பட்டவளல்ல. இப்படிப்பட்ட புருஷன் தங்களுக்கெல்லாம் கிட்டாமல் இவளுக்கு அகப்பட்டானே என்கிற அசூயையால் வெறுக்கப்பட்டவள். தான் கைவிட்டால் அப்பெண்ணுக்கு நேருங்கஷ்டங்களைப் பற்றி தாமோதரன் யோசித்தான். இதை நினைக்கவே அவன் மனம் புண்ணாயிற்று. அவள் ஏழையாக கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த போதிலும் தன் துன்மார்க்கத்தால் அவளை அதிக கஷ்டத்துக்குட்படுத்த அவன் சம்மதிக்கவில்லை. தன்னை நேசித்துக் கற்பிழந்தவள்மேல் காருண்யமாயிராது கைவிடுவதென்றால் அவனுக்குச் சம்மதமில்லை. இவன் மனமே மல்லிகையின் சகஷியைப் பலமாக வாதித்தது.

மல்லிகையின் எளிமையும் துயரமும் தாய்மையும் ஒரு பக்கத்திலும், அவளுடைய இளமையும் அழகும் இனிமையும் மற்றொரு பக்கத்திலும் அவன் மனத்தைக் கவர்ந்தது. இப்படியோசித்துக்கொண்டு அன்றிரவைத் தூக்கம் பிடியாது தாமோதரன் கழித்தான். காலையில் எழுந்து மல்லிகையைக் கைவிடலாகாதென்றும் சோபையை நினைப்பதில்லை யென்றும் தீர்மானித்தான. இந்தத் தீர்மானத்திலேயே அன்று பகலைக்கழித்தான். அப்பொழுது சோபையைப்பற்றிக் கொஞ்சமும் நினைக்கவில்லை. மல்லிகையையே மனத்தில் வைத்திருந்தான். ஆனால் அன்று சாயங்காலம் ஒரு அற்ப விஷயம் நடந்தது. அது ஒரு நிமிஷத்தில் இவன் தீர்மானத்தையெல்லாம் மாற்றி மனத்தை ஊசலாடச் செய்துவிட்டது.

3. அத்தியாயம்.

பிறப்பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

தாமோதரன் வியாதியாக இருந்தபோது அடிக்கடி வந்து பார்த்தவர்களில் ஆண்டாளும் ஒருத்தி. மூன்னே இவளுடைய சம்பாஷணையால் இவள் தாமோதரனிடம் மிகுந்த பக்ஷம் பாராட்டினாள் என்று வாசகர்களுக்கு ஏற்படும். ஆனால் அந்த பக்ஷத்தை வேறுவிதமாக அர்த்தம் கொள்ளக்கூடாது. தாமோதரனே பேரழகன், யௌவன புருஷன். இப்படிப்பட்டவர்களிடத்தில் ஆண்டாளுக்கு மதிப்பதிகம். மேலத்தியாயத்தில் சொன்னபடி தாமோதரன் மனத்தில் பல யோசனைகள் செய்துகொண்டிருந்த மறுதினம் ஆண்டாள் அவனிடம்வந்து தனியாயிருப்பதைப் பார்த்து அடியில் வருமாறு சொன்னாள்.

ஆண்டாள்:—நான் எங்கே போயிருந்தேன் என்று நீர் நினைக்கிறீர். நீர் ஐம்பது வருஷம் யோசித்தாலும். உம்மால் சொல்ல முடியாது. நீர் யூகித்தபோதிலும் நான் உண்மையைச் சொல்ல மாட்டேன்.

தாமோதரன் — நீ சொல்லக் கூடாததாயிருந்தால் நான் அதை யறியத்தான் வேண்டும்.

ஆண்டாள்:—நீர் அதை மாத்திரம் வேறு ஒருவரிடமும் சொல்லக்கூடாது. நான் எதற்காக ரகஸியமாய் வைத்துக்கொள்ள வேண்டும்? இந்தப் பூமியில் அவளைப்போல் நல்ல பெண் வேறே கிடையாது.

தாமோதரன்:— ரகஸியத்தைச் சொல்லத்தான்வேண்டும். அந்த ரகஸியத்தை நான் வெளிப்படுத்துவதில்லை என்று வாக்குறுதி கொடுக்கிறேன்.

ஆண்டாள்:—என் எஜமானி என்னை அனுப்பி மல்லிகை எப்படி இருக்கிறாள். அவளுக்கேதாவது வேண்டுமா என்று விசாரித்து வரச்சொன்னாள். ஆனால் எனக்குப் போக இஷ்டமில்லை. எஜமானி சொல்வதை எப்படித் தட்டுவது. என்னைச் சில துணிகளும் சில்லரைச் சாமான்களும் எடுத்துப்போய் அவளுக்குக் கொடுத்துவர அனுப்பினாள். மல்லிகையைப்போல் அடக்கமற்ற பெண்களை ஊரில் சேர்க்கவேகூடாது. என் எஜமானி அவளுக்கு உதவி செய்வதைப் பார்த்து, "அம்மா! தாங்கள் அபாத்திரமானவர்களுக்கு உபகாரம் செய்வதால் தாங்களறியாமலே துஷ்கர்த்தைப் பரவச் செய்வதாகும்" என்றேன்.

தாமோதரன்:—என்னுடைய சோபை அவ்வளவு ஒளதாரியாக இருந்தாளா?

ஆண்டாள் :—ஆமாம் இன்னும் அவளைப்பற்றி உமக்குத் தெரிந்தால் அவளை எவ்வளவோ மதிப்பீர்.

தாமோதரன்:—வேறு என்ன சங்கதி? இன்னும் ஏதோ சொல்லவேண்டிய சங்கதி இருக்கிறபோலிருக்கிறது.

ஆண்டாள்:—ஒருநாள் நீர் என் எஜமானியின் தாவணியை எடுத்துப்பார்த்தீரே அதைஞாபகமிருக்கிறதா? அந்தவிஷயத்தைப் பற்றி நான் தங்களிடம் சொல்வது என் எஜமானியின்காதில் உண்மையாகப் படாதிருக்குமாறுல் மேலே சொல்வேன்.

தாமோதரன் :—வெளியில் சொல்வதில்லை என்று இதோ சத்தியம் செய்துகொடுக்கிறேன்.

ஆண்டாள்:—என் எஜமானி அந்த ஆடையை எனக்குப்பரிசு கொடுத்திருந்தாள். ஆனால் உமது நடத்தையைக் கேட்டபிறகு.

தாமோதரன்:—ஆனால்நான்செய்ததை சொல்லிவிட்டாயோ?

ஆண்டாள்:—நான் சொன்னதற்காக நீர் என்னிடம்கோபிக்க வேண்டியதில்லை. என் எஜமானி யேற்றுக்கொண்ட விதத்தை அறிந்திருந்தால் எவ்வளவோ கனதனவான்கள் இந்தவிஷயத்தை அவளிடம் போய்ச் சொல்லும்படியாக என்னை வற்புறுத்துவார்கள். அதை யெல்லாம் பற்றி நான் உம்முடன் சொல்வானேன்.

தாமோதரன்:-திரும்பவும் வேண்டுகிறேன். மேலேசொல்லு.

ஆண்டாள்:—எனக்கு அவள் கொடுத்ததாவணி நீர் எடுத்து முத்தமிட்ட தாவணியாதலால் நான் அதைப்பற்றிச்சொல்லியதும் என் எஜமானி மிக்க விலைகொடுத்து வாங்கியிருந்த அதிக அழகான புது தாவணியை எடுத்து எறிந்துவிட்டு என்னைப் பார்த்து ஆண்டாள் "இந்த புதுதாவணி ரொம்பப் பெரிதாகவும் விகாரமாகவும் தோற்றுகிறது. ஆதலால் நானிதைத் தரிக்கமுடியவில்லை. நான் வேறொரு புதுதாவணி வாங்குகிறவரையில் நான உனக்குக் கொடுத்திருந்த பழைய தாவணியைத் தரித்துக்கொள்ளுகிறேன. அதை எனக்குத் திருப்பிகொடுத்துவிடு. இப்புதியதை நீ வைத்துகொள்ளலாம்" என்று விலை உயர்ந்ததை எனக்குக் கொடுத்துவிட்டாள். நான் பழைய தாவணியைத் திருப்பிக்கொண்டுவந்து கொடுத்தேன். எப்பொழுதும் அவள் அதையே தரித்திருக்கிறாள். யாரும் பாராதசமயத்தில் அதற்கு முத்தமும் கொடுத்திருப்பாள் என்று நினைக்கிறேன்.

இந்தச்சமயத்தில் அங்கே வத்ஸர்வந்து தாமோதரனை வீணை கேட்கும்படியாகக் கூப்பிட்டார். அவன்முகம் வெறுத்து தேகம் நடுங்கிகொண்டு அவரோடு சென்றான். அதைக்கண்ட வத்ஸர் அவனுடன் கூடவிருந்த ஆண்டாளைப் பார்த்துவிட்டு தப்பு அருத்

தங் கொண்டார். தாமோதரனைப் பரிகாசமாகத் திட்டிவிட்டு இப் பெண் வேட்டைவெளியில்போய்ச் செய்யும்படிக்கும், வீட்டில் உள்ளவர்களிடம் செய்ய வேண்டாம் என்றும் உத்திரவிட்டார்.

இன்று சோபை சாதாரணநாள் போலாது சிறப்பாக அலங்கரித்துக்கொண்டிருந்தாள். அதிலும் தாமோதரன் எடுத்து முதலமிட்ட அந்தாவணியையே தரித்திருந்தாள். தன் தகப்பனைநக்குப் பிரியமான ஒருராகத்தை வீணையில் அமைத்துப் பாடிக்கொண்டிருந்தாள். அவள் அந்த சமயத்தில் அவளுடைய தாவணி தோளினின்றும் நழுவி விரலில் விழுந்த பாட்டை அபசுரமாக்கிற்று. வத்சருக்கு உடனே தாவணிமேல் கோபம்வந்து அதை அவள்மேல் நின்றும் கழற்றி நெருப்பில் வீசி எறிந்தார். சோபை திடுக்கிட்டு எழுந்து பாய்ந்துபோய் அனலிலிருந்தும் தாவணியை ஆவலுடன் எடுத்தாள். இவ்விஷயம் தாமோதரன் மனத்தில் அழுந்தப் பதிந்தது. இம்மாதிரி சிறுவிஷயங்களிலல்தான் சரித்திரங்களில் பிரமாதமான செய்கைகள் நடக்கின்றன. சோபையினுடைய இவ்வித சிறு செய்கைகள் நீங்கலாக அவளுடைய ஒப்பற்ற ரூபமும், திவ்ய சௌந்தரியமும், உன்னத ஞானமும், மனோவசீகரக்கண்களும், இனிய கண்டத்துவனியும், மாசற்ற உடலமைப்பும், பெருந்தன்மையும், மந்தகாச முகவிலாசமும், சாதுர்யமொழிகளும், தாமோதரன்மனத்தைஇதுவரையில்முற்றும் கவரவில்லை.

இதுவரையில் சோபையினுடைய குணரூபங்களால் முற்றுகை இடப்பட்ட தாமோதரனுடைய மனமாகிய கோட்டை இச்சிறு செயலால் தகர்க்கப்பட்டு விட்டது. அவன் சற்று முன்னல் கொண்டிருந்த நியாயம், கௌரவம், நடுநிலைமை எல்லாம் மாரன்கணை மூன் இருந்தவிடம் தெரியாது போயின.

4. அத்தியாயம்.

எற்றிற்குரியர் கடவரொன் முற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து.

சோபையை அடைவதே நிண்ணம் என்று உறுதிகொண்ட தாமோதரனுக்கு மல்லிகையின் கதி என்னவாகுமென்ற வியசன மேற்பட்டு விட்டது. சோபையின் குணகிசயங்கள் மல்லிகையின் வதனத்தை முழுதும் மறக்கச் செய்தது. ஆயினும் மல்லிகைக்கு நேரிட விருக்கும ஸ்திதியைப்பற்றி அவன் பரிதபித்தான். அப்பெண் தன்னையே அபயமென்று நம்பித் தன்னிடம் வெகு பக்ஷமாய் இருந்துவந்தாள். தானும் அவளை வெகு அன்புடன் நேசித்து தன்னை முழுதும் நம்பிவிடும்படியாக உறுதிசொல்லி யிருந்தான். "உன்னுடைய வார்த்தையை நம்பி நான் கற்பிழந்தேன். என்னைக் கைவிடாதிருந்தால் அதுவே எனக்குப் பெரும் பாக்கியம். நீ என்னை மறந்துவிட்டால் அதிலும்எனக்குக் கஷ்டம்

வேறு இசாது"என்று மல்லிகை அவனிடம் பலதரம் சொல்லியிருந்தாள். ஒரு ஸ்திரீயைத் தெரிந்து பெருந் துயரத்திற்குள்ளாக்குவதற்குத் தான் காரணமாயிருக்க தாமோதரனுக்குச் சிக்கவில்லை. அவ்வெளியபெண் தனக்காக சர்வத்தையும் துறந்தாள். தன்னையண்ணி இப்பொழுதும் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருப்பாள். தான் ஆபத்து அடைந்ததைக்கேட்டு மனம் வருந்தி சீக்கிரம் சௌக்கியமடையும்படியாகக் கடவுளை வேண்டிக்கொண்டிருப்பாள். அவள் சீக்கிரம் தன்னிடம் வந்து சேரும்படியாக எவ்வளவோ ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள். தன்னைக் கண்டதும் உடல் பூரிப்பாள். ஆனால்தான் போய் என்னசொல்வது? வேறு ஒருத்தியைக் காதலிப்பதாகச் சொன்னால் அவள் மனம எவ்வளவாகப் பதைக்காது ? எவ்வளவு கஷ்டப்படுவாள் ? தான் இப்படிப்பட்ட அயோக்கியனைவு மிருப்பவனு " என்று மல்லிகையைப்பற்றி யோசித்து அவளைக் கைவிடக்கூடாதுஎன்று எண்ணுகையில், சோபையின் உருவம் முன்தோற்றி அவள் தன்னிடம் கொண்டிருக்கும் காதலும் எதிர்நிற்க மல்லிகையைப்பற்றிய வருத்தம் எல்லாம் மறைந்து போயிற்று.

கடைசியில் வேறுவிதமாக மல்லிகையைச் சமாதானப்படுத்தலாம் என்று தாமோதரனுக்குத் தோன்றிற்று. கைநிறைய பணம் கொடுத்தால் ஒருவேளை திருப்தியடைவாளா என்று நம்பினான். ஆனால் அவள் தனக்குப் பிரதியாக இவ்வுலகத்தில் எது கிடைத்தபோதிலும் இச்சிப்பதில்லை என்று சொல்லியிருந்தது ஞாபகத்துக்கு வந்து எவ்வளவு திரவியம் கொடுத்தபோதிலும் ஒப்பமாட்டாளே, என் செய்வதென்று கவலையிலாழ்ந்தான். அவளுடைய தாரித்திரத்தையும் அதற்குப் பொருந்தாத தற்பெருமையையும் அவன் நன்கறிந்ததால் அவள் எதிர்பாராதவண்ணம் ஏராளமான திரவியம் கொடுத்தால் தற்பெருமையால் ஒருவேளை திருப்தியடைவாளோவென்று எண்ணினான். அவளைக்கண்டதும் இவ்விதமாகச் சொல்லிப்பார்ப்போம் என்று தீர்மானித்தான்.

வெளியில் எழுந்து உலவச் சக்தியுண்டானதும் வத்ஸர் ஒருதினம் வேட்டையாடப்போயிருந்த சமயம்பார்த்து தாமோதரன் ஒருவருக்கும் தெரியாமல் வெளிப்பட்டு மல்லிகை வீடுபோய்ச் சேர்ந்தான். அப்பொழுது சிற்றுண்டி அருந்திக்கொண்டிருந்த குப்பும் மல்லிகையின சகோதரிகளும் முதலில் மல்லிகை வீட்டிலில்லை என்று சொன்னார்கள். கொஞ்சநேரம் பொறுத்தும்மல்லிகையின மூத்த சகோதரி அசூயைகொண்ட புன்னகையோடும் மல்லிகைமேலே படுத்துக்கொண்டிருப்பதாகச் சொன்னாள். தாமோதரன் படியேறி மேலே அவள படுக்கையறைசென்றான். அங்கே கதவு உள்ளே தாளிடப்பட்டிருந்தது. இவன் கூப்பிட்ட குரலுக்கும் கொஞ்சநேரம் பதிலில்லை. பிறகு கதவுதிறந்ததும் தான் அயர்

ந்து தூங்கியிருந்ததாக மல்லிகை சொன்னாள். தாமோதரனைத் திடீரென்று கண்டமல்லிகை கலக்கமுற்றதால் அவனைப் பார்த்தும் அவள் மனம் பூரிப்பதற்கு முடியாமல் போயிற்று. தாமோதரன் மல்லிகையைப் பார்த்ததும் தான் அங்குவந்த காரணத்தையும் சோபை விஷயத்தையும் மறந்துவிட்டான்.

காதலர் இருவரும் சேர்ந்ததால் கொஞ்சநேரம்களிப்பில் ஆழ்ந் திருந்து பிறகு தாமோதரன், ஆலவந்தார் தன்னை இனி எப்போ தும் மல்லிகையைப் பாராதிருக்கும்படி உத்திரவிட்டிருப்பதாயும், தானிப்போது சந்தித்தது அவருக்குத் தெரிந்தால் இருவருக்கும் ஆபத்து உண்டாகுமென்றும், இனி இருவரும் பிரிந்தே யிருக்கவே ணுமென்று விதியிருப்பதால் பிரிவை மனம் தளராது பொறுத்து வரும்படியாயும், தன்னால் கூடியவரையில் அவள் எதிர்பாராத வண்ணமாய்ச் சமயம் நேர்ந்தபோதெல்லாம் உபகாரம் செய்வ தாகவும், சிக்கிரத்தில் அவளழகைக்கண்டு மயங்கி எவனுவது அவளை விவாகம் செய்துகொள்ளக் கூடுமாதலின் அப்பொழுது அபவாதத்திற்கு இடமில்லாமல் புருஷனோடு அவள் வாழ்வதால் மனதுக்கே சந்துஷ்டி யுண்டாகுமென்றும் சொன்னன்.

இதைக்கேட்ட மல்லிகை கொஞ்சநேரம் மௌனமாயிருந்து விட்டுப் பிறகு கண்ணீரை வெள்ளமாகப் பெருக்கி பின்வருமாறு அவனைக்கடிந்து பேசலானாள்:—என்மானத்தைக் கெடுத்துவிட்டு இப்போதென்னைக் கைவிடுகிறுயே. இதுதானு என்மேல் உனக் கிருக்கும் காதல். புருஷரானவர் யாவரும் சூதர், பொய்யர்கள், வஞ்சகர். அவர்கள் வார்த்தைகளில் நம்பிக்கையே வைக்கக் கூடாது. அவர்களுடைய கெட்ட எண்ணங்களைப் பூர்த்திசெய்து கொண்டதும் எங்களைப்போல் ஏமாந்தவர்களைக் கைவிட்டுவிடுவார் கள் என்று எத்தனைதடவை உனக்கு நான் சொல்லி யிருக்கிறேன். அதற்கெல்லாம் நீ என்ன மறப்பதேயில்லை என்று ஆணை இட வில்லையா? கடைசியில் நீயும் அசத்தியவானுகி விட்டாயே. என் மனதை நீ அபகரித்துவிட்டபிறகு இவ்வுலகப் பொருள்கள் எல் லாம் நீ இல்லாமல் எனக்கு என்ன உபயோகம். என்னிடம் வேறு ஒருவனைப்பற்றி யேன் பேசுகிறுய். என் உயிருள்ளவரை யில் உன்னையன்றி வேறு ஒருவனைக் காதலிக்கமாட்டேன். மற்ற வர்களால் எனக்கென்ன ஆகவேண்டும். நாளைக்கு என்னைக் கலி யாணம் செய்துகொள்ளுகிறேன் என்று இந்திரனைப்போன்ற சம் பத்துள்ளவன் வந்தாலும் அவனை நிராகரித்து விடுவேன். உனக் காக நான் புருஷவர்க்கத்தையே வெறுக்கிறேன்.

இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கையில் ஒரு விசேஷம் நேரி ட்டு இவள்வார்த்தையைப் பாதியில் நிறுத்திவிட்டது. இவளு டைய அறை வீட்டின் மேல்மாடியி லிருந்தது. அந்த அறைக்குள்

மறைவிடம் ஒன்று மிராததால் மல்லிகை ஒரு பழைய துப்பட்டியை எடுத்துக் கூரையினின்றும் தொங்கவிட்டு ஒருமறைவு ஏற்படுத்தியிருந்தாள். அம்மறைவிடம் மிக்க நெருக்கமானது. அதற்குள் அவளுடைய நல்ல உடைகளை அழுக்குப்படாதபடி தொங்கவிட்டிருந்தாள். மல்லிகை தனக்குண்டான கோபத்தினால் காலால் அந்தத் துப்பட்டியை இழுத்தாளோ அல்லது தாமோதரன் அதைத் தொட்டானோ அல்லது அதின்மூடி அவிழ்ந்ததோ என்னவோ மல்லிகைமேற் சொன்ன கோபவார்த்தைகளைப் புகன்றதும் திரையாயிருந்த துப்பட்டி விழுந்தது. மறைவாய் வைத்திருந்ததெல்லாம் வெளித்தோன்றின. அதில் நிற்கவு முடியாமல் மிகப் பிரயாசத்துடன் குனிந்து பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்த தத்துவசாஸ்திரியாகிய கந்தர் வெளிப்பட்டார். அவர் மல்லிகையினுடைய தாவணி ஒன்றைத் தலையில் சுற்றியிருந்தார். துப்பட்டி விழுந்ததும் இவருடைய கண்கள் இரண்டும் தாமோதரனை ஊடுருவிப்பார்த்தன. இவரது நிலையைக்கண்டவர்கள் வயிறு குலுங்கச் சிரியாமற் போகார்கள்.

நியாயத்தைப்பற்றிப் பெருத்த உபன்னியாசங்களை யெல்லாம் செய்திருந்த இவரை இங்குகண்டதும் தாமோதரனுக்கு உண்டான ஆச்சரியத்தைக்கேட்கவும்வேண்டுமோ? நல்லுடையுடுத்தி மல்லிகை கோவிலுக்குச் சென்றதினம் கந்தரும்அங்கே போயிருந்தார். அப்பொழுது மல்லிகையைக்கண்டு அவள்மேல் அவர் மையல் கொண்டார். இரண்டாம் தடவையும் அவளைப்பார்க்குழ் பொருட்டு மற்றொருநாள் தாமோதரனுடனும் பிலவங்களுடனும் மல்லிகைவீட்டு வழியாக உலாவச்சென்றார். மல்லிகையை அடைவது சிரமம் என்பதும் சங்கதிவெளியில் தெரிந்துவிட்டால் தனக்கு அபாயம் உண்டாகும் என்பதுமான இவ்விரு விஷயங்களும் கந்தரைப் பின்வாங்கச் செய்தன. இதனாலெழுந்த பயத்தால்அவர் மல்லிகையை அடைவதற்கு பிரயத்தனஞ் செய்யாமல் அவள் அழகைப்பற்றி மாத்திரம் மனத்தில் சிந்தித்துக் கொண்டிருந்தார். இந்த சிந்தனையுடையவர்கள் எப்படிப்பட்ட துறவிகளானாலும் அதற்கு அனுகூலமாகிய சில புஸ்தகங்களையும் படங்களையும் வாங்கி ரகஸியமாக வைத்துக்கொள்வார்கள். அவர்கள் பேசுகிற பேச்சும் வரவர இவ்விஷயங்களிலேயே செல்லும்.

மல்லிகை ஏற்கனவே கற்பிழந்தவளென்று கந்தருக்குக் காதில் விழுந்ததும் கவலை நீங்கியவரானார். பிறன் தொட்டால் என்ன? நமது இஷ்டம்பூர்த்தியானால்போதுமென்கிறகுணமுடையவரவர். அவள் கற்பிழக்காதிருந்தால் தனக்குக் கிடைக்கவே மாட்டாள் என்று நம்பி கற்பிழந்ததற்காக அதிகமாக அவளை விரும்பினார். அதனால் வேண்டிய பிரயத்தனஞ் செய்து மல்லிகையை யடைந்தார்.

மல்லிகை தாமோதரனைவிட கந்தரை அதிகமாக இச்சித்தா ளென்று நமது வாசகர்கள் நினைத்துவிட வேண்டாம். அவள் ஒரு வனைடு இருப்பதா யிருந்தால் கந்தரைவிட தாமோதரனைத்தான் விரும்புவாள். ஆனால் தாமோதரன் வியாதியாக இருந்துவிட்டது அவனுக்குப் பிரதிகூலமாக முடிந்தது. அந்தச்சமயத்தில் கந் தர் மல்லிகைக்கு அனேகவஸ்துக்களை இலாகாகக் கொடுத்து அவளுடைய தயவை அடைந்து ஒரு தகுந்த சந்தற்பத்தில் தன் னிஷ்டத்தையும் பூர்த்திசெய்து கொண்டார்.

தனது ஆசை நாயகியைக் காணும்படியாக தாமோதரன் வந்தகினத்திற்குப் பதினைந்துநாளைக்கு முன்புதான் கந்தருக்கும் மல்லிகைக்கும் நேசம் உண்டாயிற்று. கந்தர் மேலே மல்லிகை யுடனிருந்ததால்தான் மல்லிகையின்தாய் குப்பு, தன்மகள் வீட்டி லில்லை என்று தாமோதரனுக்குச் சொன்னாள். தன் மகளின்துன் மார்க்கத்தால் கிடைக்கும் லாபத்தைக் குப்பம்மாளும் பங்கிட்டு வந்தாளாதலால் அவளுடைய துன்மார்க்கத்திற்கு உடன்பட்டும் அதை மறைத்துமவந்தாள். ஆனால்அவளுடைய் மூத்தபெண்ணை தன் தங்கையின் வரும்படியில் பங்கிட்டுக் கொண்டபோதிலும் தங்கையிட மிருந்த பொறுமையாலும் ஆசுசையாலும் அவளைப் படியாகிலும் ஆபத்திற்குள்ளாக்கிவிட வேணுமென்று நினைத்திரு ந்தவளாதலால் தாமோதரனிடத்தில் மல்லிகை மேலே படுத்திரு ப்பதாகச் சொன்னாள். அவன் மேலேபோய்ப் பார்த்து மல்லிகை கந்தரோடு குலாவுவதை அறிந்துகொள்வான் என்று அவள் எண் ணினாள். ஆனால் மல்லிகை கதவைத்தாளிட்டு இருந்ததால் அவள் சூது வெளிப்படவில்லை. கதவைத் திறப்பதற்கு முன் கந்தரைத் துப்பட்டிக்குப் பின்னால் மறைத்து வைத்தாள். இப்பொழுது தற் செயலாய் துப்பட்டி அவிழ்ந்து விழுந்ததால் மல்லிகை அகப்பட் டுக் கொண்டுவிட்டாள்.

கந்தர் வெளிவந்ததும் மல்லிகைமுகம் வெளுத்துப் படுக்கை யில் சாய்ந்துவிட்டாள். தான் இனி தப்பவழியில்லை என்று வந் ததை யனுபவித்தேதீர வேண்டி வியாகூல மடைந்தாள். மல் லிகை பட்டணங்களிலுள்ள ஸ்திரீகளைப் போல வஞ்சகமும் சாமர் த்தியமும் படைத்தவளல்ல. கையும் களவுமாய் அகப்பட்டுக்கொ ண்டு விட்டதால் தான் மூன் கண்ணீர்ப் பெருக்கோடு தாமோதர னை வைது வாதாடினதை யெல்லாம் நிறுத்திவிட்டாள்.

துப்பட்டியின் கிழிருந்தவரோ மல்லிகையைப் போல் துய ரப் படவில்லை. கொஞ்சநேரம் அசையாமலிருந்து என்ன சொல் வதென்றும் எங்கேபார்ப்பதென்றும் தெரியாமல் விழித்தார். அனை வரிலும் அதிகமாக ஆச்சரியமடைந்தவன் தாமோதரனே யாரு மும் அவன்தான் முதலில் வாய்திறந்தான். மல்லிகை தன்னைத்

தூஷித்ததினால் தானேக்கம் கொண்டிருந்ததை எல்லாம் விட்டு பெருங்கூச்சலிட்டு நகைத்துக் கந்தருக்குவணங்கி அவர்கையைப் பிடித்துத் தூக்கி அவர் மறைந்திருந்த இடத்திலிருந்தும் வெளியே இழுத்துவந்தான்.

கந்தர் அந்த அறையின் நடுவேவந்து நின்றுகொண்டு தாமோதரனைப் பார்த்து கடிந்த முகத்துடன் "நீ கண்டுபிடித்துவிட்ட பிரமாதவிஷயத்தைக் குறித்து சந்தோஷப் படுகிறாயோ? ஊரெங்கும் சொல்லி என்னை அவமானப்படுத்தலாம் என்று நினைக்கிறாயோ? யோசித்துப்பார்த்தால் உன்மேலேயே குற்றமிருக்கிறதென்று நீயே ஒப்புக்கொள்வாய். நான் கற்புள்ள ஸ்திரீயைக் கெடுக்கவில்லை. அப்படிப்பட்ட குற்றத்துக்கு நான் பாத்திரனல்ல என்றார்.

தாமோதரன் "உமதுநியாயம்உமக்குத்தான் சரியாகத்தோன்றுகிறது. நானென் உம்மை அவமானப் படுத்தவேண்டும்? நீர் செய்தகாரியத்திற்காக நான் நிரம்ப சந்தோஷப்படுகிறேன்.உமது வெட்கக்கேட்டை நீரே சொல்லிக்கொண்டாலொழிய என்னிடமிருந்து ஒருவார்த்தையும் வெளிவராது" என்றான்.

கந்தர் என்னுடையபெயரை நானே கெடுத்துக்கொள்வேனா? நல்லபேர் எடுப்பது அரிது. ஒருதடவை நல்லபேர் எடுத்த பிறகு அதைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். மாசற்ற மனிதன் உலகிலில்லை. என்னுடைய மானத்தை நீ காப்பாற்றினால் நான் இனிமேல் ஜாக்கிரதையாக நடந்துவருவேன். உலகத்தார் இலேசாக சுபாவமாய் நடக்கும் விஷயங்களையும், பெருமைப்படுத்த வேண்டிய விஷயங்களையும் தூற்றுகிறார்கள்.

தாமோதரன்:—நீர் சொல்வது சரிதான். இயற்கையாக உண்டாகும் பசியைத் தணித்துக்கொள்வதால் என்ன பிசகு? வம்சவிருத்தி செய்வதினும் மேலான பெருங்காரியம் வேறுண்டோ?

கந்தர்:—எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. நானிதுவரையில் கொண்ட கொள்கையும் அதுதான்.

தாமோதரன்:—நானும் இவளும் சினேகமாக இருந்தவிஷயம் வெளிப்பட்டபோது நீர் வேறு அபிப்பிராயங் கொண்டிருந்தீரே.

கந்தர்:—அவனிருக்கிறானே தார்க்கீகன் அவன் நடந்த விஷயத்தை மாற்றி வேறுவிதமாகச் சொன்னான். கற்புடனிருந்தவளைக் கற்பழிப்பது ஒப்புக்கொள்ளக்கூடாத காரியம் என்று சொன்னானல்லவோ.

தாமோதரன்:—நான் உமது துன்மார்க்கத்தைப்பற்றி யாரிடமும் சொல்லவில்லை. மல்லிகையிடம் பக்ஷமாய் நடந்துவந்தால் உம்முடையதுன்மார்க்கம் வெளிவராதபடி பார்த்துக்கொள்வேன்.

ஏ மல்லிகை! உன்னுடைய புது சினேகிதரிடமாவது உண்மையாயிரு. என்னை மோசம் செய்ததற்கு உன்னை மன்னிப்பது மல்லாமல் என்னுல்கூடிய ஒத்தாசையும் செய்கிறேன் என்று சொல்லி உத்திரவு வாங்கிக்கொண்டு படி இறங்கி விடு நோக்கிச் சென்றான்.

தன் துர்நடத்தை கண்டு பிடிக்கப்பட்டும் பலரால் அவமானப் படுத்த இடமில்லாமல் தப்பித்துக் கொண்டதைப்பற்றி கந்தர் சந்தோஷ மடைந்தார். மனத்தெழுந்த கலக்கம் தெளிந்ததும் "தாமோதரனை உன்னுல்தான் இழக்க நேரிட்ட" தென்று கந்தரை மல்லிகை தூஷித்தாள். அவள் கோபத்தைக் கந்தர் பணப்பையினின்றும் சில சவரன்களை எடுத்துக் கொடுத்தும், தழுவி முத்தமிட்டும் தணித்தார்.

பணத்தைக் கண்டதும் கந்தர் அவளுக்கு மாறுகிவிட்டார். தாமோதரனிடம் சொன்ன ஆசை வார்த்தைகளையெல்லாம் இவரிடமும் இப்பொழுது திருப்பிச்சொன்னுள். தாமோதரன் தன்னை வஞ்சகித் திருந்தபோதிலும் தன் உள்ளத்தைக் கவர்ந்தவர் கந்தரே என்று மல்லிகை அவர் மகிழும்படியாகப் பேசினுள்.

5. அத்தியாயம்.

உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியே
னெள்ளமர்க் கண்ணுள் குணம்.

மல்லிகை தனக்குண்மையா யிராமற்போனதை உணர்ந்தும் தாமோதரன் அவளுக்காகப் பரிதாபப்பட்டான். முதல்முதல் அவளைத் துன்மார்க்கத்திற்கு இசையச் செய்தது தானுகையால் அவள் பிற்பாடு செய்த குற்றங்களுக் கெல்லாம் தானே முதற்காரண மென்று நம்பி தன்னை மிகவும் நொந்து கொண்டான். ஆனுல் மல்லிகையின் மூத்த தமக்கையாகிய முத்து நீலவர்ணன் என்பவனுல் முன்னமே மல்லிகை கற்பழிக்கப்பட்டிருந்தாள் என்றும், அவள் வயிற்றிலிருக்கும் சிசுவுக்கு நீல வர்ணன்தான் முதல் பிதா வென்றும் ஜாடையாகச் சொல்லிவிட்டாள். இதைக்கேட்ட தாமோதரன் உண்மையை முழுதும் நன்கறியவேண்டி நீலவர்ணனிருக்குமிடம் விசாரித்து அவனிடம்போய் முத்து சொன்னதின் உண்மையைத் தெரிந்துகொண்டதன்றி மல்லிகையையும் தன் துன்மார்க்கத்தை ஒப்புக் கொள்ளும்படி செய்துவிட்டான்.

இந்த நீலவர்ணனென்பவன் அந்தப்பக்கங்களில் ஒரு பெரிய காமாந்தகன். எத்தனையோ பெண்களைத் துன்மார்க்கத்தில் சிக்கவைத்திருக்கிறன். அநேகரை மீளுவதற்கியலாத வியபிசாரிகளாகவே செய்துவிட்டான். சிலரைத் தீராத் துயரத்திற்கு ஆளாக்கினுன். ஒருத்தியை தற்கொலை புரிந்துகொள்ளவோ அல்லது அவளைத்தானே கொன்றோ இவ்வுலக வாழ்க்கையை யொழித்தான்.

இவனுடைந்த வெற்றிகளில் முத்தும் ஒருத்தி. மல்லிகை சிறு மியா யிருக்கும்போதே முத்தின் மனத்தைக் கவர்ந்து அவளையும் தன்வலைக் குள்ளாகும்படி செய்தான். மல்லிகைக்கு வயதானதும் முத்தை அகற்றிவிட்டு மல்லிகையைப் பிடித்தான். மல்லிகை உண்மையாக நீலவர்ணன் மேல்தான் ஆசைகொண்டிருந்தாள். தன் காரியத்தைச் சாதிப்பதற்காகவும் டாம்பீகமாக வாழ்ந்து வரும் படியும் தாமோதரனையும் கந்தரையும் நடுவில் சேர்த்துக் கொண்டான். இதனால்தான் மேற்சொன்ன விதமாக முத்து மல்லிகையின்மேலிருந்த அசூயையை வெளிப்படுத்தினாள்.

மல்லிகையைப் பற்றிய இந்த ரகஸியம் தெரிந்ததும் தாமோதரனுக்கு நிர்விசாரமாகிவிட்டது. அவளைப்பற்றி அவன் கொஞ்சமேனும் சிந்திக்கவாவது இரக்கப்படவாவது இல்லை. கவலையற்றிருந்த மனத்தில் சோபையைப்பற்றிய நினைவு புகுந்து அவனைப் பல கவலைக் குள்ளாக்கியது. சோபையின்மேல் ஏற்கெனவே இருந்த காதல் பதினயிரமடங்கு அதிகமாகிவிட்டது. அவளும் தன்மேல் நாளுக்கு நாள் காட்டிவரும் அன்பும் ஆதரவும் விருத்தியடைந்து வருவதையும் அறிந்தான். ஆயினும் தங்கள்காதல் பயனடையாது போக அவள்தந்தை தடுப்பார் என்றும் நம்பினான். வஞ்சகமாய் அவளைக் கைக்கொண்டால் அதினால் உண்டாகும் ஆபத்துக்களையும் எண்ணி ஏக்கமுற்றான்.

வத்ஸர்செய்த நன்றிக்குப் பதில் நீமை செய்யவேண்டியிருக்கிறதே என்றும், தன் நடத்தை ஆளவந்தார் காதில்பட்டால் அவர் மிக்க வருத்துவாரே என்கிற எண்ணமும் இராப்பகலாய் அவனை வருத்திற்று. சோபையைக் காணுதபோதெல்லாம் அவளை இனியென்றும் பார்ப்பதே யில்லையென்று தீர்மானிப்பான். அவளுக்குமுன் இருக்கையில் தன் தீர்மானங்களையெல்லாம் மறந்து எப்பாடுபட்டாயினும், என்ன அவமானம் நேரிடுவதாயிருந்தாலும், அவளை அடைவதே சரி என்று துணிவான்.

இந்த யோசனையெல்லாம் சிக்கிரத்தில் வெளிப்படையாகத் தோன்றின. அகத்தினழகுமுகத்தில் தோன்றுமன்றோ? அவன் சந்தோஷத்தையும் வேடிக்கையையும் விட்டுவிட்டான். தனித்திருக்கையில் யோசனையிலாழ்ந்தேயிருப்பான். பலரோடிருக்கையில் சிந்தாக்கிரந்தனும் கவனமற்றுமிருப்பான். வத்ஸரைத் திருப்தி செய்யும்பொருட்டு நகைக்கவேண்டிவந்தால் அந்த நகைப்பு சாதாரணமாயில்லாது மனத்துக்குள்ளிருக்கும் போராட்டத்தைக் காண்பிப்பதாயிருக்கும்.

சோபையைக் கண்டபோதெல்லாம் அவளிடம் அதிகமாக சம்பாஷியாமல் கண்டும் காணுமலு மிருக்க முயல்வான். அவள் தோற்றமே இவன்முகத்தை வெண்மையாக்கும். அவள் எதிர்

பாராது நேரில் வந்தால் இவன் திக்கிடுவான். இவன் கண்கள் அவள் கன்னங்களைச் சந்தித்துவிட்டால் இவன் கன்னங்களில் ரக்தம் பரவி முகமெல்லாம் செக்கச் செவேல் என்றாகிவிடும். அவளைப் பற்றி சாதாரணமாகப் பேச நேரிட்டாலும் இவனது நாக்கு குளறும். அவளைப் பரிசித்தால் இவன் உடல் முழுதும் பதறும். காதலைப்பற்றி ஏதாவது வார்த்தைவந்தால் தன்னையறியாமலே பெருமூச்சு விடுவான். இவையனைத்தும் அவன் வேறுமென்று செய்வதல்ல. சுபாவத்தே உண்டாவனவாம்.

இவ்வேறுபாடு ஒன்றையாவது அவ்வளவாகக் கவனித்தவரல்ல. சோபையோ இப்படியல்ல. தாமோதரன் மனத்தில் உண்டாகும் படபடப்பை அறிந்து அதற்குக்காரண மினனதென்று தெரிந்து கொண்டாள். தன் மார்பில் அப்படபடப்பு இருப்பது அவளுக்குத் தெரியும். இதிலிருந்தான் தன்தகப்பனைவிட தீக்ஷண்ணியமாக தாமோதரன் காதலை அவள் தெரிந்துகொண்டாள். தாமோதரன் மனத்தில் போராடிக்கொண்டிருந்த காதல் இன்னதென்று சோபை அறிந்துகொண்டதும் அக்காதற் பொருள் தானே என்றும் அவள் நன்றாய்த்தெரிந்து கொண்டாள்.

ஒர்நாள் தோட்டத்தில் வெவ்வேறு மார்க்கமாய் தாமோதரனும் சோபையும் உலாவிவரும்போது தற்செயலாய் பறவைபிடிக்கப்போய மரத்தினின்றும் விழுந்த கல்வாயண்டை இருவரும் சந்தித்தார்கள். இவ்விடத்திற்கு சோபை கொஞ்சநாளாக அடிக்கடி வருவதுண்டு. இவ்விடத்தில்தான் முதல் முதல் தாமோதரனை சோபை இச்சிக்க ஆரம்பித்தது. அவ்விச்சை இப்பொழுது எவ்வளவு விருத்தியாகிவிட்டது பாருங்கள். இங்கேவந்து சோபை துயரத்துடனும் களிப்புடனும் தாமோதரன் விரச்செய்கையைச் சிந்திப்பதுண்டு. இவ்விடத்தில்தான் இருவரும் இப்பொழுது வந்து சந்தித்தார்கள். இருவரும் போசனையிலாழ்ந்து நடந்து வந்ததால் கிட்ட நெருங்கினபிறகுதான் ஒருவரை ஒருவர் அறிந்து கொண்டார்கள். ஒருவரை ஒருவர் பார்த்ததும் இருவருக்கும் சங்கோசமும் கலவரையும் உண்டாயிற்று. கொஞ்சநேரம் இருவரும் பேசவில்லை.

தாமோதரன் :—(சிறிது தைரியமடைந்து வழக்கம்போல் அவளை வரவேற்று) "இந்தக் காலமேலே என்ன நேர்த்தியாத இருக்கிறது" தென்று சாதாரணமாக சம்பாஷித்தான். பிறகு அந்த ஸ்தானத்தின் வனப்பைப் பற்றியும் மரங்களின் விநோதத்தைப்பற்றியும் பேசிக்கொண்டு வருகையில் தாமோதரன் எறிந்த கிழ்விழ்ந்த மரத்தடியுஞ் சமீபித்தது.

சோபை :—(அவனைப் பார்த்து) தாமோதரா! அந்த ஜலத்தைப் பார்த்ததும் உனக்கு நடுக்கமுண்டாக வில்லையா ?

தாமோதரன்:—நீ உன் சிறு பறவைக்காக அடைந்து துக்கம் நான் என்றும் மறக்கவேமாட்டேன். அது உட்கார்ந்திருந்த கிளை அதோ இருக்கிறது. அப்பறவை எவ்வளவோ செளக்கியமாக விருந்த விடத்தைவிட்டு ஓடிப்போனதால் அதற்கு நேட்ட தன்டனை சரியானது தான்.

சோபை:—உன்னுடைய வீரச் செய்கையைக் காட்டவும் ஆபத்தை விலக்கவுமே அது ஓடிப்போயிற்று. அதை நினைத்தால் உனக்கும் இப்பொழுது வருத்தமாயிருக்குமே.

தாமோதரன்:—எனக்கு வருத்த மென்னவென்றால் இந்தக் கால்வாய் ஆழமதிகமாக இருந்து நான் இப்பொழுது மிகுதியாகக் கிளையெல்லாம் அனுபவியாதபடி அப்பொழுதே அமிழ்ந்து மாண்டிராது போனேனே என்பதுதான்.

சோபை:—சீ. அப்படியும் சொல்வாயா? இப்பொழுது உயிரை நிராகரித்து விடவேண்டுமென்ற எண்ணம் என்மேலிருக்கும் பிரியத்தினால் போலும். எனக்காக இரண்டு தடவை யிருக்குத் துணிந்து உபகாரம் செய்திருக்கிறாயே. மூன்றாந்தரம் எனக்கு ஆபத்து நேர்ந்தால் நான்என்செய்வது? அப்பொழுதுவாது என்னை யார் காப்பாற்றுவார்.

தாமோதரன்:—(பெருமூச்செறிந்து) இனிமேலாதே நீ ஜாக்கிரதையாக இருக்கவேண்டாமா? (ஆதரவுடன் உற்று நோக்கி) என்ன சோபை! நான் இன்னும் உயிருடனிருக்க வேண்டுமென்கிறாயா? எனக்கு அவ்வளவு கெடுதி எதற்காக நினைக்கிறாய்?

சோபை:—பூமியை நோக்கிக்கொண்டு தயங்கி, தாமோதரா! உனக்குக் கெடுதி நானொன்றும் நினைக்கவில்லை.

தாமோதரன்:—உன்னுடைய கருணையும் நற்குணமும் உன் சௌந்தரியத்திற்கு மேலானதென்று எனக்குத் தெரியும்.

சோபை:—நீ சொல்வது ஒன்றுமிப்பொழுது ஏற்படவில்லை. இனிமேல் நான் இங்கே தாமதிக்கக்கூடாது.

தாமோதரன்:—நான் சொல்வது உனக்கு விளங்காதுதான். நான்சொல்வது எனக்கே தெரியவில்லை. எதிர்பாராத விதமாய் உன்னை இங்கே சந்தித்தேன், யோசியாமல் பதட்டமாப்ப் பேசி விட்டேன். உனக்குக் கோபம் வரும்படி பேசியிருந்தால என்னை க்ஷமிக்கக்கோருகிறேன். உனக்கிஷ்டமிராத வார்த்தையைப் பேசுவதிலும் நான் உயிர்துறப்பேன்.

சோபை:—நீசொல்வது ஆச்சரியமாயிருக்கிறது. நீ சொல்வதைக் கேட்டுநான் கோபமடைவேன் என்று எப்படி எண்ணுவாய்.

தாமோதரன்:—சித்தப்பிரமை கொண்டவர்கள் பயமடைவது சகஜமே. உனக்குக் கோபம் வரும்படி ஏதாவது சொல்லிவிட்டேனே என்கிற பயந்தான் எனக்கு. அப்படியானால் நான் என்னதான் பேசுவது. என்னைக் கோபமாய்ப் பார்க்காதே. நீ கோபித்தால் எனக்கு மகா துயரமுண்டாகிவிடும். நான் கெடுதல் ஒன்றும் நினைக்கவில்லை. உன்னுடைய கண்களும் உன்னுடைய வனப்புந்தான் குற்றவாளிகள். நான் என்னமோ பினற்றிச் சொல்லக்கூடாததைச் சொல்லியிருந்தால் என்னை நீ மன்னிக்கவேண்டும். என் உள்ளம் பொங்கிவழிந்தது. நான் என் காதலுடன் போராடி அதை மறைத்துவைக்க எவ்வளவோ முயன்றேன். இருந்தும் அது என் இதயத்தை உருக்கிக்கொண்டே வருகிறது. இனி நான் உனக்குக் கோபம் வரும்படி ஒன்றும் சொல்வதில்லை.

குளிர்சுரம் வந்தவனைப்போல் தாமோதரனுக்கு உடம்பெல்லாம் நடுங்கத்தலைப்பட்டது. சோபைக்கும் அம்மாதிரியே. அவள் தாமோதரனைப் பார்த்து "தாழு! உன்னுடைய கருத்து எனக்குத் தெரியாமல் போகவில்லை. உன் சங்கதியெல்லாம் எனக்கு நன்றாகத்தெரியும். என்னிடம் கொஞ்சமேனும் உனக்குப் பக்ஷமிருந்தால் நானிப்பொழுது விடு போகும்படி விடு. அங்கேபோய் நான் கனவெதளிய வேண்டும்" என்றாள். அதற்கு தாமோதரன் அவள் கையைப் பிடித்துக்கொண்டழைத்துப் போகும்போது இம்மாதிரி வார்த்தைகளை இனி சொல்லாதிருக்கும்படி அவள் வேண்டினாள். தன்னிஷ்டமில்லாமலே தன் காதலை வெளிப்படுத்தியதற்காகத் தன்னை மன்னிக்கும்படியாகவும் இனிதான் அப்படிப் பேசுவதில்லை யென்றும் தாமோதரன் உறுதிவாக்குக் கொடுத்தான். தான் அவனை மன்னிப்பதற்குக் குற்றமொன்றுஞ் செய்யவில்லை யென்றும் சோபை சொன்னாள். இப்படி பேசிக்கொண்டே இருவரும் கட்டுத்தறியாறி வீடு சென்றார்கள். வழிமுழுவதும் சோபையின் கையைத் தாமோதரன் பிடித்திருந்தபோதிலும் ஒரு தடவையாவது அதை அழுத்தப் பிடிக்கவில்லை.

சோபை தன் அறைசென்றதும் தனக்கு ஒத்தாசை செய்யும்படி ஆண்டாளை வரவழைத்துக் கொண்டாள். தாமோதரனுக்கோ வீட்டில் கெட்ட சமாசாரம் வந்து கார்த்துக்கொண்டிருந்தது.

6. அத்தியாயம்.

கொடித்தலு மின்சொலு மாற்றி னடக்கியே
சுற்றத்தாற் சுற்றப் படும்.

வத்லர் தாமோதரன்மேலதிக பக்ஷமாயிருப்பதால் அவனை சொல்தமாகியும் அவனை விட்டுப்பிரிய மனமில்லாதிருந்தார். தாமோதரனும் வேட்டை ஆசையினால் இவர் வீட்டில் தங்கியிரு

க்கச் சம்மதித்தான். சிலவேளை ஒருமிக்க பதினைந்துநாள் ஆளவந்தார் வீட்டுக்குப்போகாமலும், அவர்வீட்டுச்சமாசாரமறியாமலும், அவரைப் பாராமலும் வத்ஸர் வீட்டிலேயே யிருந்து வருவான்.

ஆளவந்தாருக்குக் கொஞ்ச நாளாக ஜலதோஷமா யிருந்து அதனல் கொஞ்சம் சுரமும்வந்தது. அவர் படுக்கையோடு படுக்கையாகக் கிடந்தாலொழிய சில்லரை நோய்களை லக்ஷியம் செய்ய மாட்டாராகையால் சுரம் வந்ததற்கும் கவலை கொள்ளவில்லை. அவர் தன் தேகசௌக்கியத்தைக் கவனியார். ஆனல் பிறருக்கு வியாதி வருமுன்னல் வைத்தியர்களைக் கொண்டு சிகிச்சை செய்யச் சொல்வது அவர் வழக்கம்.

ஆளவந்தாருடைய அலக்ஷியத்தினல் சுரம் வரவர அதிகமாயிற்று. கடைசியில் வைத்தியரை வரவழைக்கும்படியாக நேரிட்டது. வைத்தியர்வந்து கைபார்த்துவிட்டுத் தலையையசைத்து முன்னமே யல்லவோ அசௌக்கியத்தைத் தனக்குத் தெரிவித்திருக்க வேணும், அவர் கவலையற்று நாள் கடத்தியதால் காயலா முற்றிவிட்டது. அதனல் அபாயம் நிகழும்போ லிருக்கிறது என்றார். ஆளவந்தார் இவ்வுலகப் பற்றை விட்டும் அவ்வுலகப் பேற்றை விரும்பவும் இருந்தாராகையால் வைத்தியர் சொல்வதை நிதானமாயும் கலக்கமின்றியும் கேட்டுக் கொண்டார். உடனே குடும்பத்தார் எல்லோரும் தன்னிடம் வந்து சேரும்படியாக ஆஜ்ஞாபித்தார். அவந்திபுரம் போயிருந்த பிருந்தாவையும் வத்ஸர் வீடுபோயிருந்த தாமோதரனையும் தவிர ஒல்லோரும் அவரிடம்வந்து கூடினர்கள்.

ஆளவந்தாருடைய அபாய நிலையைக் கேட்டதும் தாமோதரன் காதலை யெல்லாங்கைவிட்டு தனக்காக அனுப்பப் பட்டிருந்த வண்டியிலேறி வெகுவேகமாய் வண்டியைச் செலுத்தி வந்தான். வழியில் ஒருதடவையாவது சோபையின் எண்ணம் அவனுக்குதிக்கவில்லை.

பிலவங்கன், தாமோதரன், தார்க்கீகர், கந்தர், வீட்டுவேலைக்காரர் சிலர் உட்பட குடும்பமுழுதும் ஆளவந்தார் படுக்கையைச் சுற்றிக் கொண்டார்கள். ஆளவந்தார் படுக்கையி னின்றும் எழுந்து உட்கார்ந்து பேச ஆரம்பிக்கையில் பிலவங்கன் வாய்குழறி ஓவென்று அழ ஆரம்பித்தான். ஆளவந்தார் அவன் கையைப்பிடித்து அசைத்து "என் அருமைமருமகரே, யாவர்க்கும் நேரிடக்கூடிய விஷயத்தைக் குறித் யேன்வருந்துகிறீர்? நமது இனேகர்களுக்கு கஷ்டம்நேர்ந்தால் நாம்துயரப்படுவது நியாயந்தான். ஏனெனில் அந்த கஷ்டங்கள் விலக்கக்கூடியன. சிலர் சுகித்தும் சிலர் சுஷ்டப்பட்டு மிருப்பதால் கஷ்டம் எல்லாருக்கும் பொதுவென்று சொல்வதற்கில்லை. ஆனல் மரணமோயாவராலும் தடுக்கமுடியாது. அது எல்லோருக்கும் பொது. இந்தவிஷயத்தில்தான் பனக்காரனும் ஏழை

யும், மேலோனும் கீழோனும், தொண்டமானும் தோட்டியும் சமம். இம்மரணம் எப்போது நேரிட்டால்தான் என்ன? அதைப் பற்றி நமக்கு அக்கரையில்லை. ஞானிகள் நமது வாழ்க்கையை நீரிற் குமிழி யென்பார்கள். நானே விருத்தாப்பியத்தில் மரிக்கிறேன். முன்னாலே சாகிறவர்கள் கஷ்டத்தையும், துயரத்தையும், கஷ்டத்தையும், தேகசிரமத்தையும் கொடுக்கும் காலத்தினின்றும் தப்பி விடுகிறார்கள். இப்படி நினைப்பவர்கள் சிலர்தான், சிலர் சாகும்தரு வாயிலிருக்கும் வரையில் மரணத்தைப்பற்றி நினைப்பதேயில்லை. மரணம் அவர்களைக்கொண்டுபோக வரும்போது மிக்கபயங்கர மாயும் கோரமாயும் அவர்களுக்குத் தோன்றினாலும் அது தூரத்திலிருக்கும்போது அதைக்கண்டு அவர்கள் பயப்படுகிறதில்லை. சாவுவரும்போது பயந்து திகிலடைந்தபோதிலும் அச்சாவு அவர்களைவிட்டு விலகிப்போனால் அதைப்பற்றிய ஞாபகமே அவர்களுக்கு இருக்கிறதில்லை. ஆதலால் குழந்தாய்! சாவைப் பற்றி நீ விசனப்படாதே. இச்சாவு எந்த சமயத்திலும் எந்த அல்பகாரணத்தினாலும் உண்டாகும். ஒருவர் பாக்கியின்றி எல் லோரும்மரணத்திற்குட்பட வேண்டியவர்களே. ஆதலால் மரணத் தைப்பற்றி ஆச்சரியமாவது துக்கமாவது அடையப்படாது. அழுவதால் என்னபயன்? சாவை நோவதால் என்ன பயன்? நான் உங்கள் எல்லோரையும் விட்டுச் சீக்கிரத்திலேயே பிரிந்துபோய் விடுவேன் என்று வைத்தியர் சொன்னதால் பேசச் சக்தியிருக் கும்போதே உங்களிடம் சிலவார்த்தை சொல்லிவிட்டுப் போக லாம் என்று எண்ணினேன். அதிகமாய்ப்பேசினால் எனக்குக் களைப்புண்டாகிவிடும். நான் வெகு நாளைக்கு முன்னமேயே உயில் எழுதிவைத்திருக்கிறேன். அதைப்பற்றி உங்களிடம் சொல்லலாம் என்று எண்ணினேன். உங்களைப்பற்றி அவ்வுயிலில் இருக்கும் விஷயத்தை உங்களுக்கு எதிரில் சொல்லி நீங்கள் திருப்தியடை வதைப்பார்த்துப் போகலாம் என்று உங்களை வரவழைத்தேன்.

பிலவங்கா! என் ஆஸ்தியெல்லாம் உனக்கே சேர்ந்தது. ஆனால் வருஷத்திற்கு 500 சவரன் உன் தாயார் செலவுக்காகக்கொடுத் திருக்கிறேன். அவள் இறந்த பிறகு அந்தப்பணம் உனக்கே சேரும்.

தாமோதரா! உனக்கு வருஷத்துக்கு 500 சவரன் கிடைக் கும்படியான ஆஸ்தி கொடுத்திருக்கிறேன். செலவுக்கு ரொக்க மின்றி கஷ்டப்படுவாயாதலால் அதற்காக 1000 பவுன் வைத் திருக்கிறேன். நீ எதிர்பார்த்தபடி உனக்குக் கொடுத்திருக்கிறே னே என்னமோ நான் சொல்லமுடியாது. உனக்கு மிகவும் கொஞ் சமே கொடுத்திருப்பதாக நீ ஒருவேளை எண்ணுவாய். உலகத் தாரோ நான் அதிகம் கொடுத்துவிட்டதாக என்னைத் தூற்றுவார் கள். அவர்கள் தூற்றலுக்கு நான் கெஞ்சமேனும் யோசிக்க

வில்லை. நீயோ நான் சொன்னபடி எண்ணமாட்டாய் என்று நம்புகிறேன்.

தாமோதரன் தன் உபகாரியின் பாதங்களில் விழுந்து அவருடைய கையை ஆவலோடும் பற்றி நான் அருகனல்லாதிருக்கும் போழ்தும் எனக்குப் பல நன்மைகளை எப்பொழுதும் செய்து வந்ததை என்னால் எடுத்துச்சொல்ல இயலவில்லை. எனக்குத் தங்களுடைய தற்கால தேகஸ்திதியைப்பற்றிக் கவலையே ஒழிய தங்கள் ஆஸ்தியில் பங்கு கொடுத்ததைப்பற்றிக் கொஞ்சமேனும் கவனிக்கவில்லை. 'என்னை எப்பொழுதும் ஆதரித்து வந்த பிதாவே! நண்பரே!' என்று சொல்லும்பொழுது மேலே பேசகாவெழாமல் தன் கண்ணினின்றும் உதிர்ந்த நீர்த்துளியை மறைப்பதற்காக தாமோதரன் வேறு பக்கம் திரும்பினன்.

ஆளவந்தார் அவனுடைய கையை அழுத்திப்பிடித்து குழந்தாய்! உன்னுடைய நல்லகுணத்தையும், உதாரசிந்தையையும், யோக்கியதையையும் நான் நன்கறிவேன். அதோடு பகுத்தறிவும் தெய்வபக்தியும் சேர்ந்திருப்பதால் உனக்கு ஒரு குறைவும் வராது. முதல்சொன்ன மூன்று குணங்களுமே உனக்குவேண்டிய சௌக்கியத்தையுண்டாக்கும். ஆனால் பின்சொன்ன குணங்கள்தான் அந்த சௌக்கியத்தை நிலை நிறுத்தும்.

தார்க்கீகரே! உமக்கு ஆயிரம் பவுன் கொடுத்திருக்கிறேன். இது நீர் எதிர்பார்த் திருப்பதற்குமேல் என்றே எண்ணுகிறேன்: இதனால் உமது குறைகள் எல்லாம் தீர்ந்துபோகும். இதை என் சினேகத்தின் ஞாபகக் குறியாக வைத்துக் கொள்ளும். இந்தச் செல்வத்தில் மிகுதியேதாவது இருந்தால் உமது தர்மசிந்தை அதை எப்படிச் செலவிடுவதென்று உமக்கு சொல்லிக்கொடுக்கும்.

அதே மாதிரியாக 1000 பவுன் கந்தரே உமக்கும் கொடுத்திருக்கிறேன். இதை வைத்துக்கொண்டு உமது தொழிலை விருத்திசெய்து விருத்தியடைவீர் என்று நம்புகிறேன். உலகத்தில் ஏழைகளைக் கண்டால் இரக்குவதற்குப் பதிலாக அவர்களை வெறுப்பது சகஜம். ஏழையாயிருப்பவனை சாமர்த்திய மில்லாதவனென்றும் சோம்பேறி என்றும் எண்ணி விடுகிறார்கள். நான் உமக்குக் கொடுத்திருக்கும் கொஞ்ச திரவியத்தைக் கொண்டு பழைய சங்கடங்களிலிருந்தும் நீங்கிச் சரியான தொழில் புரிந்து முன்னுக்கு வருவீர் என்றுதான் நம்புகிறேன்.

எனக்குக் களைப்பு வருகிறது. பாக்கியிருக்கும் பவுனை எப்படிப் பங்கிட்டிருக்கிறேன் என்பதை என் உயிலைப் பார்த்தால் தெரியும். என்னை மறக்காதிருப்பதற்கு என் வேலைக்காரருக்குக் கொஞ்சம் கொடுக்கும் படிக்கும், சில தர்மங்களைச் செய்யும் படிக்

கும் சொல்லி யிருக்கிறேன். நீங்கள் சுகமாக வாழுங்கள். உங்களுக்குக் கொஞ்சம் முன்னால் நான் பிரயாணப் பட்டுப்போகிறேன்.

இந்தச் சமயத்தில் ஒரு வேலைக்காரன் ஓடிவந்து சால்மலியிலிருந்து நியாய நிபுணர் ஒருவர் வந்திருப்பதாயும் அவர் அவசரமாக சில முக்கிய சமாசாரத்தை ஆளவந்தாரிடம் சொல்ல வேண்டுகிறாரென்றும் அவருக்கு இன்னும் பலஜோலி யிருப்பதால் சிக்கிரத்தில் காரியத்தை முடித்துவிட வேணுமென்று சொல்லி யனுப்பினர் என்றும் சொன்னான்.

ஆளவந்தார் பிலவங்களைப் பார்த்து "குழந்தாய், நீ போய் புதியவர் என்னசமாசாரமாக வந்திருக்கிறார் என்று விசாரித்துவா. என்னால் இப்பொழுது ஒரு காரியமும் செய்யமுடியாது. அவரும் என்னிடம் ஒரு காரியத்தைப் பற்றியும் பேசக்கூடாது. இப்பொழுது என்னவிட முக்கிய புருஷன் நீயாகி விட்டபடியால் நீயே போய் தெரிந்துகொள். அன்றியும் இப்பொழுது யாரையும் பார்க்கவாவது எதையேனும் கேட்கவாவது சக்தியற்றவனாயிருக்கிறேன்" என்று சொல்லிவிட்டு அங்கிருந்தவர்கள் வெளியே போக உத்திரவும் கொடுத்துவிட்டார். சிலர் அவரை விட்டுப் பிரியும்போது கண்ணீர் உகிர்த்தார்கள், கன்னெஞ்சரான கந்தரும் அதுசமயம் கண்ணைத் துடைத்துக் கொண்டார். தேவவிருதை பலபலவென்று முத்துச் சொரிந்தாற்போல் கண்ணீரைத் தாரை தாரையாகப் பெருக்கினாள். இவர்களெல்லாம் போனபிறகு ஆளவந்தார் நிண்டில் சாய்ந்து கீளதெளியக் கண்மூடினார்.

7. அத்தியாயம்.

பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கி
னதுநோக்கி வாழ்வார் பலர்.

இவ்வளவு ஏராளமாக தேவவிருதை கண்களினின்றும் நீர் பெருக்கியதற்கு தன் எஜமானனுக்கு நேரிட விருக்கும் மரணத்தைப பற்றிய துயரமேயல்லாமல் வேறு ஒரு காரணமு முண்டு. அவன்தன் அறைக்குள் சென்றதும் அடிபில் வருமாறு தனக்குள்ளாகவே முணுமுணுக்கலாயினாள்:—மற்ற வேலைக்காரரைப்போல் எண்ணமல் எஜமான் என்னை மேலாக எண்ணி அதற்குத் தகுந்தாப்போல் செல்வத்தில் பாகமும் வைக்காம லிருக்கவுமாட்டார். அப்படியில்லாமல் எனக்கும் அவர்களைப்போலவே கொடுத்திருந்தால் நான் அதை வாங்கிக்கொள்ளப் போகிறதில்லை. நான் அற்பமானவளல்லவென்று அவருக்குத் தெரியச் செய்கிறேன். அவரிடம் வேலையிலிருந்தே நான் 500-பவுன் சேர்த்துவிட்டிருக்கிறேன். அப்படி இருந்தும் என்னைச் சரியாக மதிக்கமாட்டாரா? வேலைக்காரர் யோக்கியர்களா யிருக்கும்படியாக அவர் இப்படி பங்கு கொடுத்திருக்கிறபோல் தோன்றுகிறது. எப்பொழுதும்

நான் கொஞ்சம் தெரியாமல் எடுத்துக்கொள்ளுகிற வழக்கம் எனக் குண்டுதான். அப்படியானால் என்ன? மற்ற வேலைக்காரர்கள் என்னி லும் பதின்மடங்கதிகமாகத் திருடவில்லையா? கடைசியில் அவர்க ளும் நானும் ஒன்றுகத்தானே ஆகிவிட்டோம். அவருடைய உயில் எல்லாம் நாசமாகப் போகட்டும். இல்லை, கிடைக்கிற பணத்தை யேன்விடவேண்டும்? நான் வாங்கிக்கொள்ளாவிட்டால் மற்றவர்க ளுக்குத்தானே அதைப் பகுந்து கொடுப்பார்கள். அந்தப் பணம் கிடைத்தால் உயர்ந்தபுடவை ஒன்று வாங்கிக் கட்டிக்கொள்ள லாமே. தேசமெல்லாம் அவருடைய கள்ளப்பிள்ளையை வளர்த்து வந்தபோதெல்லாம் நான் அவர் பக்கம் பரிந்து பேசினேன். அத ற்கு இதுதான் சம்மானமோ? மறுமையில் இனி அவர் நன்றுக அனுபவிப்பார். செய்த குற்றத்துக்காக சாகும்வேளையில் வருந்து வதற்கில்லாமல் தன்சொத்தில் கள்ளப்பிள்ளைக்கும் பங்கு கொடு த்தாரே. அப்பிள்ளை படுக்கையில் கிடந்து அகப்பட்டதாம். நல்ல நியாயம். நல்ல கதை. ஒளித்தவனுக்குப் பிள்ளை இருக்கிறவிடம் தெரியாதா? கடவுள்தான் அவரை மன்னிக்கவேண்டும். உண்மை யைச் சொல்லப்போனால் இதைப்போல் அவருக்கு எத்தனை கள் ளப் பிள்ளைகளோ. இப்பொழுது போகிற இடத்தில் எமன் முன் னால் எல்லாம் வெளிப்பட்டு விடும். என்னைத் திருப்திசெய்யும் பொருட்டன்றோ வேலைக்காரருக்கும் பங்குவைத்திருக்கிறேன் என்று சொன்னார். இதை மறக்கவேமாட்டேன். என்னையும் வேலைக்காரரோடு சேர்த்து விட்டாரல்லவா? கந்தர்பெயரைச் சொன்னபிறகு என்பெயரைச் சொல்லுவார் என்று அல்லவோ எண்ணினேன். கந்தர் மேற்றுணியில்லாது இங்குவந்தவர். இங்கு வந்ததும் அவர் பெரிய மனிதராகிவிட்டார். நல்ல பெரிய மனுஷா! இத்தனை வருடங்களாய் வீட்டிலிருந்தும் ஒரு வேலைக்காரனுடைய அவருடைய காசைக்கண்ணால் பார்த்த துண்டா? இவ்விதமாக தேவவிருதை வெகுநேரம் முணுமுணுத்துக்கொண்டே இருந் தாள்.

தங்களுக்குக் கிடைத்த செல்வத்தைக் கொண்டு கந்தராவது தார்க்கிகராவது திருப்தியடைந்தார்களில்லை. தேவ விருதையைப் போல் வெளிவிட்டுச் சொல்லாது போனாலும் அவர்கள் முகத்தில் தோற்றிய அதிருப்தியினாலும் அடியிலிவரும் சம்பாஷணையினா லும் இவர்கள் கொஞ்சமேனும் திருப்தியடைந்தார்களில்லை யென்று தெரியவரும். வியாதியஸ்தரிருந்த அறையைவிட்டு வெளி வந்த ஒரு மணிக்கெல்லாம் கந்தர் தார்க்கிகரைச் சந்தித்து "நாம் பிரிந்துவந்த பிறகு உமது நண்பரைப் பற்றி யேதாவது கேள்விப் பட்டீரா ஐயா" என்று வினவினார்.

தார்க்கிகர்—ஆளவந்தார் எனக்கென்ன சினேகமானவரா? உம்முடைய சினேகிதரன்றோ.

கந்தர்—அவர் உமக்கும் சினேகிதர்தான், நம்மிருவருக்கும் சமனுகத்தானே திரவியம் பங்கிட்டுக் கொடுத்தார்.

தார்க்கிகர்—நான் சொல்லமாட்டேன், நீர் முதலில் ஆரம்பித்து விட்டபடியால் சொல்லுகிறேன் கேளும். ஒருவருக்குக் காரணமில்லாமல் பிரியத்தினுல் சம்மானம் செய்வதற்கும் தான்பட்ட சிரமத்தை உத்தேசித்து பிரதி உபகாரம் செய்வதற்கும் மிகுந்த வித்தியாசமிருக்கிறது. நான் அவரது குடும்பத்திற்குச் செய்திருக்கிற ஒத்தாசைக்கும், அவர் வீட்டுப் பிள்ளைகளுக்கு வித்தை கற்பித்திருக்கும் சிரமத்துக்கும் இதைவிட எவ்வளவு ஜாஸ்தி கொடுத்தாலும் போதாது. சொல்பமாகக் கிடைத்ததே யென்று நான் அதிருப்தி அடைந்தேன் என்று நினைத்துவிடாதேயும். "கிடைத்ததைக்கொண்டு திருப்தியடை" என்று சாஸ்திரக்காரர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதற்கும் குறைவாகக் கொடுத்திருந்தபோதிலும் என் கடமை எனக்குத் தெரியும். சாஸ்திரம் கிடைத்ததைக் கொண்டு திருப்தியடையச்சொல்லியிருந்தபோதிலும் என்பெருமையை நான் உணரக் கூடாதென்று சொல்லவில்லை. அதிலும் பாத்திரனுக்கும் அபாத்திரனுக்கும்ஒரேவிதமான சம்மானம்செய்வதென்றுல் அதை எப்படிப் பொறுத்துக்கொண் டிருக்கமுடியும்.

கந்தர்:—நீர் எனக்குக் கோப மூட்டுகிறீர். ஆளவந்தார் எனக்குத்தான் நியாயம் சரியாகச் செய்யவில்லை. ஒரு நண்பனையும் சம்பளக்காரனையும் ஒரேதராதில் அவர் வைத்துவிட்டார் பார்த்திரா. அது எதினுல் என்பது எனக்குத் தெரியும். நீர் வெகுநாளாய் அவருக்கு அற்ப புத்தி புகட்டிவந்தீரே அதினுல்தான். நட்பின் மேன்மையும் அருமையும் உம்மைப் போன்றவருக்குத் தெரியுமா?

தார்க்கிகர்:—(மிக்க கோபங்கொண்டு) உம்மூடைய சினேகத்தால் ஆளவந்தார் தெய்வபக்தியையுமிழந்தார். அவருடைய ஆத்மா விண்ணுலகில் என்ன கஷ்டப்படப்போகிறதோ? நாஸ்திகனல்லாமல் வேறு எவன் சாகும் தருவாயில் கடவுளைப்பற்றி தியானியாதிருப்பான். நான் ஒரு வைதிகன் இருக்கிறது தெரிந்தும் கரணமந்திரத்தையாவது சொல்லும்படி செய்யக்கூடாதா? இதற்கெல்லாம் பின்னுல் படுநரகத்தில் விழுந்து தவிக்கவேண்டியதுதான் பலன். அந்தச் சமயத்தில் சாஸ்திரி வேணுமென்றுல் எங்கே இருந்துவருவார்.

கந்தர்:—உம்மூடைய கர்ணமந்திரம் அவ்வளவு அவசியமானுல் உம்மை இவ்வளவுநாள் வைத்துக் காப்பாற்றிய அவர் கேட்காமல் நீரே போய்ச் சொல்லுவதற்கென்ன?

தார்க்கிகர்:—வேண்டாதவர்களுக்குப்போய்ச் சொல்லுவதில் பிரயோஜனமில்லை, நம்பிக்கையற்றவரிடமும் நாஸ்திகரிடமும்

பேசினால் பாவம். நீர்தான் இவற்றை எல்லாம் அவருக்கு உபதேசித்திருக்கிறீர். அதற்கு இவ்வுலகில் வேண்டிய சம்மானம் உமக்குக் கிடைத்துவிட்டது.

கர்தர்:—நீர் சம்மானம் என்பது எதுவோ! இனேகவாஞ்சையால் அற்பமாக ஏதோ கொடுத்துவிட்டுப்போனது சம்மானமாகுமோ? அவர் கொடுத்ததை நான் வாங்கிக்கொள்ளவேமாட்டேன். ஆனால் என்வறுமை அதை ஒப்புக்கொள்ளும்படியாகச் செய்தது.

இந்த சமயத்தில் அங்கே வைத்தியர் தோன்றி அந்த சம்வாதிகளைப்பார்த்து மேலே ஆளவந்தாருக்கு எப்படி இருக்கிறதென்று விசாரித்தார். தார்க்கிகர் பயமாகத்தானிருக்கிறது, அப்படியாகுமோ இப்படியாகுமோ என்று சொல்வதற்கில்லை என்றார். வைத்தியர் "நான் எதிர்பார்த்ததுதான். உங்களைவிட்டு நான்போன பிறகு அவருக்கு என்ன பண்ணிற்று." தார்க்கிகர் "கேட்க சந்தோஷப்படும்படியாக ஒன்றுமில்லை. பிழைப்பார் என்று எங்களுக்குத் தோன்றவில்லை" என்றார். அப்பொழுது பிலவங்கன் தோன்றி மிக்க வருத்தப்பட்ட முகத்துடன் தான் துக்க சமாசாரம் சொல்லவந்திருப்பதாகவும் தன் தாயார் சாம்மலியிலிறந்து விட்டதாகவும் சொன்னான்.

தார்க்கிகரும் கந்தரும் பிலவங்கன் தன் தாயை இழந்ததற்காக துக்கம் விசாரித்து துயரத்தைச் சகித்துக்கொள்ளும்படியாகப் புத்தி சொன்னார்கள். பிலவங்கன் "யாவரும் சாகவேண்டியது உறுதியாதலால் எனக்கு நேரிட்ட துயரத்தைக்கூடிய மட்டும் சகித்துக்கொள்வேன், என் மாமன் இறந்துவிடுவார் என்று நிமிஷத்திற்கு நிமிஷம் எதிர் பார்த்த வண்ணமாய்ப் பயந்திருக்கும்போது திடீர் என்று கேள்விப்பட்ட என் தாயின் மரணம் எனக்குப் பெரிய வியாகூலத்தை யுண்டுபண்ணிவிட்டது. இந்த சமயத்தில் தான் நீங்களிருவரும் எனக்குக் கற்பித்திருக்கும் ஞானத்தை உபயோகப்படுத்தவேண்டும். இந்த வியாகூலத்தினின்றும் நான் மீட்சிபெற்றால் அது நான் தங்களிடம் கற்றுவந்த கல்வியின் பயனே" என்றான்.

இப்பொழுது ஆளவந்தாரிடம் அவருடைய சகோதரியின் மரணத்தை தெரிவிப்பதா கூடாதா என்கிற ஆலோசனை யுண்டாயிற்று. வைத்தியர் கூடவே கூடாது என்றார். பிலவங்கன் "என் மாமன் அவருக்குத்தெரியாது ஒரு ரகஸியத்தையும் நான் வைத்திருக்க வேண்டாமென்று என்னிடம் சொல்லியிருக்கிறார். அவருக்கு எது நேரிட்டாலும் அவ்விஷயத்தை அவரிடம் சொல்லவே போகிறேன். ஒரு வேளை என் மாமன் பிழைத்துவிட்டால் அவருக்குச்சொல்லாது ரகஸியத்தை மறைத்து வைத்ததற்காக என்னை

மன்னிக்கவேமாட்டார்" என்றான். இப்படிச்சொன்னதைக்கேட்டு தார்க்கிகரும் கந்தரும் பிலவங்கனை வியந்துபேசியதால் வைத்தியர் வேறுவழியின்றி அவர்களிஷ்டப்படி விடவேண்டியதாயிற்று. வைத்தியரும் பிலவங்கனுமாக வியாதியஸ்தர் அறைக்குட் சென்றார்கள். வைத்தியர் முன்னே சென்று ஆளவந்தாருடைய நாடியைப் பிடித்துப்பார்த்து முதலில் தான்கொடுத்த மருந்தால் ஜ்வரம் இறங்கியிருப்பதாகவும் இப்பொழுது அவர் உயிர்க்குப் பயமேயில்லை என்றும் சொன்னார்.

உண்மையில் ஆளவந்தாருக்கு வியாதி ஜாஸ்தியாகவே இருந்தது. ஆளவந்தார் கண்ணைத் திறந்துபார்த்து வைத்தியர் தான் பிழைத்துவிடக் கூடும் என்று சொன்னதைக் கேட்டுக் கடவுளுக்கு வந்தன மளித்தார். இந்தச் சமயத்தில் பிலவங்கன் அவர் முன்னே வந்து சுணியால் கண்ணைத் துடைத்துக்கொண்டு தன்தாயார் இறந்துபோன விஷயத்தைச்சொன்னான். ஆளவந்தார் அச் சமாசாரத்தைச் சாவதானமாய்க் கேட்டு விசனமடைந்தார். ஒரு துளி கண்ணீர்விட்டுப் பிறகு துயரத்தை அடக்கிக்கொண்டு தெய்வசம்மத மெப்படியோ அப்படியே சகலமும் நடக்கும் என்றார்.

பின்னர் சங்கதி சொல்லவந்த தூதன் எங்கே என்று ஆளவந்தார் விசாரித்தார். அவன்மிக்க அவசரமாக வந்ததாகவும் ஒரு நிமிஷம்கூட வீண்பொழுது போக்கித் தாமதிக்க முடியாதென்று பிடிவாதம் செய்ததால் அவனைக் காக்கவைக்க முடியவில்லை யென்றும் பிலவங்கன் சொன்னான். பிருந்தாவின் அபர கர்மங்களைச் சாத்தையோடு சரியாக நடத்தும் படிக்கும் செலவு செய்வதிலும் தானங்கள் கொடுப்பதிலும் அவனிஷ்டப்படி நடக்கும் படிக்கும் பிலவங்கனுக்கு ஆளவந்தார் புத்திசொன்னார்.

7. அத்தியாயம்.

இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லி
னடைதெரிந்த நன்மையவர்.

முன் அத்தியாயத்தில் தாமோதரனைப் பற்றி ஒரு வார்த்தையாவது சொல்லாததால் வாசகர்கள் நாம் அவனை மறந்துவிட்டோமென்று ஆச்சரியப்படலாம். அதிற் சொன்னவர்களின் நடத்தைக்கும் தாமோதரன் நடத்தைக்கும் வெகு மாறுபாடு இருந்தால் அவர்களோடு அவனைக் கலக்க நமக்குச் சம்மதமில்லை.

ஆளவந்தார் அறையை விட்டு வெளிக்கிளம்பியவர்களில் தாமோதரன்தான் கடைசி. அவன் தன் அறைக்குள் சென்றதும் துயரத்திலாழ்ந்தான். அங்கு அதிகநேரம் தங்க முடியாமல் திரும்பவும் எழுந்து ஆளவந்தார் அறைவந்து கதவண்டை நின்று உள்ளே நிசப்தமாயிருப்பதை வெகுநேரம் கவனித்துக்கொண்

டிருந்தான். கடைசியில் ஒருபெருங் குறட்டை கேட்டது. அது ஆளவந்தாருடைய விக்கல் என்று எண்ணி பயந்துபோய் அவர் அறைக்குள் சென்றுபார்த்தான். அங்கே ஆளவந்தார் அயர்ந்து தூங்கிக்கொண் டிருப்பதையும் தாதி அவர் கட்டிற்காலின் கீழ் படுத்து மேற்சொன்னவிதம் குறட்டைவிட்டுத் தூங்குவதை யும் பார்த்தான். இப்பொழுது ஏதாவது செய்தால் ஆளவந்தார் விழித்துக்கொண்டு விடுவார் என்று எண்ணி தாதியின் பக்கத் தில் சந்தடிசெய்யாது உட்கார்ந்துகொண்டான். அப்பொழுது தான் வைத்தியரும் பிலவங்கனும் வந்து வியாதியஸ்தரை எழுப்பி னர்கள். வைத்தியர் நாடியைப்பிடித்துப் பார்த்தார். பிலவங்கன் தன் தாய் இறந்துபோன சமாசாரத்தைச் சொன்னான்.

பிலவங்கள் தன் தாயின்மரணத்தை ஆளவந்தாரிடம் சொ ன்னபோது தாமோதரனுக்கு வந்தகோபத்திற்கு அளவில்லை. இந்தச்சமயத்திலா இச்சங்கதியை இவரிடம் சொல்வது? வைத்தி யருக்கு இதில் கொஞ்சமும் சம்மதமில்லையென்பது தாமோதர னுக்குத்தெரியும். அப்படியிருக்க எதற்காக அசட்டுத்தனமாகப் பிலவங்கன் செய்கிறான் என்று அவன்மேல் தாமோதரன்கோபம் கொண்டான். தான் ஏதாவது அதுசமயம் பிலவங்கனைச் சொன் னால் நோயாளிக்கு வருத்தமுண்டாகுமென்று சும்மா இருந்தான். பிறகு பிலவங்கன் தூக்கசெய்தியால் நோயாளிக்குக் கெடுதல் ஒன் றும் உண்டாகாததைத் தெரிந்துகொண்டதும் தாமோதரன் தன் கோபத்தைப் பிலவங்கனிடம் காட்டிக்கொள்ளாமலே சும்மா இருந்துவிட்டான்.

அன்றைக்குவைத்தியர் ஆளவந்தார் வீட்டில் சாப்பிட்டார். பிறகு நோயாளியிடம் சென்று நாடிபிடித்துப் பார்த்துத் திரும்பி வந்து நோயாளியைப்பற்றி ஒன்றும் பயப்படவிடமில்லை யென் றும், சுரம்தணிந்து விட்டதால் ஆபத்திலிருந்து தப்பிவிட்டா ரென்றும், சீக்கிரம் சௌக்கியமாகி விடுவாரென்றும் சொன்னார். இதைக் கேட்ட தாமோதரன் ஆனந்த பரவசமானான். அவனுக் குண்டான மகிழ்ச்சியினால் மதுபானம் பண்ணினவனைப்போல் குதிக்க ஆரம்பித்து விட்டான். வைத்தியரைப்போய் முத்தமிட்டு அவரைமிக்க ஆர்வத்தோடுந் தழுவிக்கொள்வான். ஆளவந்தாருக் குப்பிறகு அவரைத்தான் அதிகமாக நேசிப்பதாய்ச் சொல்லு வான். தேசத்தார்க் கெல்லாம் பிரியமுள்ளவரும் நாட்டிற்குப் பெரியவருமான ஒருவரைவைத்தியர் காப்பாற்றி விட்டதற்காக பொதுஜனங்களுடைய செலவில் அவர்போன்ற ஒருசிலை செய்து வைக்கவேண்டுமென்றும் தன் உயிரைவிட வைத்தியரை அதிக மாகக் காதலிப்பதாகவும் குதூகலித்துச் சொன்னான்.

தார்க்கிகர் "அவர் உனக்கு நிறையப் பணம் வைத்திருப்ப தால் நீ அவர்மீது பக்ஷமாயிருக்க வேண்டியதுதான். அவர் பிழை

க்கு உனக்குக்கொடுத்த செல்வத்தைத் திருப்பிப் பிடுங்கிக்கொள் ளவேனுமென்று பலபேருக்கு ஆசையாகவிருக்கிறது" என்று சொல்ல தாமோதரன் இதைக்கேட்டதும்வெகுண்டு "உம்முடைய அற்பப் புத்தியைக் காட்டிவிட்டீரே! அந்தமாதிரி எண்ணமெனக் கில்லை. எனது நண்பரை இழப்பதினும் இவ்வுலக முழுதும் எனக் கிருக்கினும் அதை இழக்கச் சித்தமாயிருப்பேன்" என்றான். இதற் கிடையில் சண்டைமூற்றுவதைக் கண்டு வைத்தியர் இடையே புகுந்து இருவரையும் சமாதானப்படுத்தினர்.

தாமோதரன் ஒருவருக்கும் கேர்பமூட்ட எண்ணங்கொள் ளாதவன். இருந்தும் பிலவங்கன் அவனுடைய அடக்கமிராத நடத்தையையும் அறிவற்ற செய்கையையும் கண்டு சீற்றமடைந் தான். தன் தாயார் இறந்ததற்காக வீடு முழுவதும் எல்லோரும் வரீத்தப்பட்டிருக்க இப்பொழுது குடியினைப்போல் தாமோதரன் கூத்தாடுவது சரியல்லவென்று கண்டித்தான். தார்க்கீகரும் பில வங்கன் சொன்னதற்கு "அஸ்து" என்றார். ஆனால் கந்தர்மாத் திரன் சும்மாவிருந்தார். பிலவங்கன் தன் தரய்மரணத்தைப்பற் றிச்சொன்னதும் தாமோதரன் மனம்வருந்தி ஆளவந்தார் சொஸ் தமான சந்தோஷத்தால் தான் மெய்மறந்து போனதாகவும், தான் செய்ததுதவறேனன்றும்தன்னை மன்னிக்கும்படியாகவும் கேட்டுக் கொண்டான். அதற்குப் பிலவங்கன் கோபத்தோடும் நிந்தனை யோடும் "தன் பிறப்பை அறியாதவர்களுக்குத் தாய் மரணத்தின் கொடுமை தெரியாது. ஆனால் என்னுடைய பெற்றோர்கள் யார் என்று எனக்குத் தெரியுமாகையால் அவர்களை இழந்ததால் எனக்கு ஆற்றுத் துயர முண்டாகியது" என்றான்.

தாமோதரன் வேடிக்கைத் தன்மை யுடையவனேயானாலும் முன் கோபக்காரனதலால் பிலவங்கன் சொன்னதைக்கேட்டதும் கண்சிவந்து நாற்காலியினின்றும் பாய்ந்து பிலவங்கன் கழுத்தைப் பிடித்துக்கொண்டு "அயோக்கியா, என் பிறப்பைப்பற்றி நீ பரிகா சம் பண்ணுகிறாயா?" என்று சொல்லி அவனை முரட்டுத்தனமா ய்க் குலுக்கினான். இதனால் பிலவங்கனுக்கும் கோபமுண்டாயி ற்று. இருவருக்கும் யுத்தமாரம்பித்துவிட்டது. இடையில் தார்க் கீகரும் வைத்தியரும் சேர்ந்துதடுத்து விட்டார்கள். ஆனால் கந்தர் கொஞ்சமேனும் இதைக்கவனியாது அவர்காரியத்திலேயே கருத் தாயிருந்தார். கைகலக்கவிடாமல் தடுக்கப்பட்ட இருவரும் வேறு வழியின்றி ஒருவரையொருவர் திட்டிக்கொண்டும் பயமுறுத்திக் கொண்டும் இருந்தார்கள். கைச்சண்டையில் தாமோதரன் தோச்சி யடைந்த போதிலும் வாய்ச்சண்டையில் பிலவங்கனே வெற்றி பெற்றான். சாப்பாட்டு வேளையில் அங்கிருந்தவர்களெல்லாம் தாமோதரனை மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும்படியாகத் தூண்டி பிலவங்கனை அம்மன்னிப்பை அங்கீகரிக்கும்படி செய்துவிட்டார்

கள். இப்படி இருவருக்கும் சமாதான முண்டாயிற்று. ஆனல் முன்னிருந்த சல்லாபம் இப்பொழுது கிடையாது. வேடிக்கைப் பேச்சைவிட்டு எல்லோரும்விவகாரவார்த்தையில் இறங்கினர்கள். பந்தியைவிட்டு எல்லோரும் எழுந்தபிறகு வைத்தியரும் கந்தரும் மாத்திரம் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது வைத்தியர் இருசிறுவர்களும் அயோக்கியர்களே என்று தன் அபிப்பிராயத்தை வெளியிட்டார். கந்தரும் அதுவே சரி என்று தலையசைத்தார்.

9. அத்தியாயம்.

பொருட்பெண்டிர் பொய்மைமுயக்க மிருட்டறையி
லேதில் பிணந்தழீஇ யற்று.

ஆளவந்தாரைப் போய்ப்பார்ப்பதற்கு முன்னல் வெளியில் போய் கொஞ்சம் உலாவிவரலாம் என்று தாமோதரன் புறப்பட்டான். தன் உபகாரியின் வியாதியினல் இதுவரையில் தடைபட்டிருந்த சோபையைப்பற்றிய நினைவு அவனுக்கு அப்பொழுது உண்டாயிற்று. அவன் உலாவச்சென்றகாலமோ வசந்தகாலத்தில் மனேகரமான மாலைவேளை, ஒருவினேதமான தோப்பில் போய்க் கொண்டிருந்தான். அங்கு பரல்களின்மேற்பாய்ந்து செல்வதால் இனிய சப்தஞ்செய்து கொண்டோடும் ஓர் தெள்ளிய அருவியின் மீது தவழ்ந்துவரும் தென்றற்காற்றும், குயிலினங்களின் தீங்குரலும் தாமோதரன் மனத்தை மகிழ்வித்தன. அத்தோப்பை யடைந்ததும் சோபையைப்பற்றிய சிந்தனை இயல்பாகவே அவனுக்கு உண்டாயிற்று. அவள் சிங்காரத்தையும் எழிலையும்பற்றி எண்ணி எக்கமுற்றான். அவளுடைய உருவமும் தேக அமைப்பும் அவன் மனத்திற்கு முன் தோன்றி வருத்திற்று. அங்கு ஓடிக் கொண்டிருந்த ஓர் அருவியின் கரையில் உட்கார்ந்துகொண்டு மனங்கரைந்து அடியில்வருமாறு வாய்விட்டுப் புகலலாயினன்:— சோபை! உன்னை என் கையில் கொண்டுவந்து கடவுள் சேர்ப்பித்தால் நான் எவ்வளவு பாக்கியவானுக இருப்பேன். உனக்கும் எனக்கும் ஏற்றத்தாழ்வைக் காண்பிக்கும் செல்வமென்பது உலகில் இலலாமலே இருக்கக்கூடாதா? உன்னுடைய ஆஸ்தியெல்லாம் ஒரு கந்தல் துணி மாத்திரமாயிருந்து உன்னை நான் அடைந்துவிட்டேனுனல் என்னைவிட அதிர்ஷ்டமுடையவன் யார்? உன்னுடன்கூட இருக்கும்போது எனக்கு எந்த பாக்கியமும் திரணமாத்திரந்தானே. சர்வாபரண பூஷிதையாய் மோகினியே எதிரில் நின்றலும் உன்னைப் பார்த்தபிறகு அவளை நான் மதிக்கமாட்டேனே. நீ என் எண்ணத்திலிருக்குபோது வேறோர் ஸ்திரீயைப்பற்றி என் பேசவேண்டும். வேறொருத்தியை என் கண்கள் ஆசையோடும் பார்த்தால் பார்த்த எனது கண்ணைப்பிடுங்கி எறிந்துவிடுவேன். நீயும் நானும் எப்பொழுதும் பிரிந்தே இருக்கவேண்டி வந்தபோ

லும் உன்னையன்றி எனக்கு வேறு ஒரு எண்ணமும் வராது. உன் உருவத்தையன்றி வேறுருவத்தையும் கண்ணெடுத்துப்பாரேன். உன் சுந்தரவடிவத்தை நான் அடையாவிட்டாலும் என் மனமும், என் உயிரும், என் காதலும் உனக்கே அடைக்கலம். உன்னைப்பார்த்த பிறகு உலகத்தில் வேறுவித வனப்பும் இன்பமும் எனக்கு வேண்டியதில்லை. உன்னைக்கண்ட பிறகு உலகவாழ்க்கையைத் துறந்த ஒரு ஞானியும் சும்மாவிருக்கமுடியுமா? சோபையைத் தவிர எனக்கு எதுவும் வேண்டியதில்லை. சோபையினுடைய பெயரைச் சொல்வதிலேயே எவ்வளவு ஆனந்தமிருக்கிறது. அந்தப் பெயரை இதோ ஒவ்வொரு மரத்திலும் வெட்டிவைக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே தான் உட்கார்ந்திருந்த இடத்தைத விட்டு எழுந்தான். அங்கே அழுக்குப் படிந்த பீற்றற் கந்தலைக் கட்டிக் கொண்டு தேகமெங்கும் வியர்வை வழியக் கையில் ஒரு விளக்கு மாற்றை எடுத்துக்கொண்டு மல்லிகை வந்து கொண்டிருந்தாள். தாமோதரன் கையில் ஒரு சிறு கத்தி இருந்தது. அதை முன் சொன்னபடி மரப்பட்டையில் சோபையின் பெயரை எழுதத் திறந்து வைத்துக்கொண்டிருந்தான். மல்லிகை அவன் அருகில் வந்து சிரித்து "என்னைக் கொல்வதற்காகவா கத்தியைத் திறந்து வைத்துக்கொண்டிருக்கிறாய்" என்றாள். தாமோதரன் 'உன்னை யேன் கொல்லவேண்டும்?' எதற்காக நீ அப்படி நினைக்கிறாய்? என்று கேட்டான். அதற்கு மல்லிகை "மூன்னே நான் சந்தித்த போது நீ என்னை மிகவும் கொடுமையாய் நடத்தினாய். அதைவிட என்னைக் கொன்றுவிடுவதே நலம்" என்றாள். இதற்கப்புறம் இருவருக்கும் கொஞ்சநேரம் சம்பாஷணை நடந்தது. சுமார் கால்மணி நேரமிருந்து பிறகு இருவரும் அந்த அடர்ந்த தோப்பின் ஓர் இருண்டபாகம் சென்றார்கள்.

மல்லிகையின் சோரத்தனத்துக்காக அவளைக் கைவிட்டு வந்த தாமோதரன் திரும்பவும் அவளிடம் வியவகாரம் வைத்துக்கொள்ளமாட்டான் என்றுவாசகர்கள் நினைக்கலாம். ஆயினும் தன் மனத்தெழுந்த சபல சித்தத்தை நிறைவேற்றவே சோலையினுள்ளே அவன் மல்லிகையுடன் சென்றது. ஒருவனுட னிருப்பதைவிட இருவரைத் தன் வலையில் சிக்கவைப்பது நல்லதென்று மல்லிகையும் நினைத்தாள். இருவரும் தோப்பிற்குள் மறையும் சமயத்தில் அங்கு உலாவவந்திருந்த தார்க்கோரும் பிலவங்கனும் அவர்களைப் பார்த்துவிட்டார்கள். நூறு கஜத்திற்கு அப்பாலிருந்தபோதிலும் தாமோதரனை நடையால் பிலவங்கன் நன்றாக அறிந்துகொண்டான். கூடச்சென்றது இன்னார் என்று அறியக்கூடாவிட்டாலும் ஒரு ஸ்திரீயேயென்று அறிந்துகொண்டு அவன் திடுக்கிட்டான். மனத்தில் மெதுவாக தாமோதரனைத் திட்டிக்கொண்டான். இதை யறிந்த தார்க்கோர் "விஷயம் என்ன" வென்று கேட்டார். இதற்கு

பிலவங்கன் "எவனே ஒரு தடியன் ஒரு ஸ்திரீயை இழுத்துக் கொண்டு தன்மார்க்கத்திற்காகப் புதரண்டைபோய் மறைகிறான் பார்த்தீர்களா" என்றான். தார்க்கீகர் ஸ்திரீ விஷயத்தில் நல்ல யோக்கியர். மற்றவர்கள் தன்மார்க்கம் செய்வது இவருக்குக் கொஞ்சமேனும் ஆகாது. பிலவங்கன் சொன்னதைக் கேட்டதும் அந்த இடத்திற்குத் தன்னை அழைத்துச் செல்லும்படியாகக் கேட்டார். போகும்வழியெல்லாம் ஆளவந்தாரையும் அவருடைய மிதமிஞ்சிய சாத்வீக குணத்தையும் பற்றித் தூற்றிக்கொண்டு சோர புத்திரர்களால் தான் லோகத்தில் பாவம் ஓங்குகிறதென்றும் தாமோதரனுக்கு வெகு நாளைக்கு முந்தியே சரியான சிக்ஷை விதித்திருக்கவேண்டுமென்றும் அது செய்யாததால் தான் இவ்வளவு அக்கிரமங்கள் நடக்கின்றனவென்றும் திட்டிக்கொண்டே சென்றார். இவர்கள் போனவழி முள்ளும் புதருமாக இருந்ததால் தட்டுத்தடுமாறிச் செல்லவேண்டியதாயிற்று. உலர்ந்தசருகுகளின் சப்தத்தால் தாமோதரன் அவர்களின் வரவை அறிந்துகொண்டு ஜாக்கிரதையாகவே யிருந்தான். அதிலும் தார்க்கீகர் திட்டிக்கொண்டே வந்த சப்தத்தால் அவனைக் கையும் களவுமாகப் பிடிக்க முடியாது போயிற்று.

10. அத்தியாயம்.

நீங்கான் வெகுளி நிறையில னெஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கு மெளிது.

ஆள் வருவதைக்கண்டதும் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து தாமோதரன்வெளியேவந்தான். மல்லிகையைமறைக்கும்படிக்கும், கூடுமானல் தப்பிப்போக அவகாசம் அவளுக்குக்கொடுக்கும்படிக்கும் இருந்த இடத்தைவிட்டு வெகுதூரம் முன்னுக்கு வந்தான்.

தார்க்கீகர்—(கோபாக்கினி பறக்க தாமோதரனைப்பார்த்து) அடே துஷ்டா, சீச்சீ, நீயா இந்தக் காரியஞ்செய்தாய் ?

தாமோதரன்—நான் தான் இங்கே இருக்கிறேன் என்று உமக்குத் தெரியவில்லையா ?

தார்க்கீகர்—உன்னோடு கூடவிருக்கும் தட்டுவாணி முண்டையார் ?

தாமோதரன்—என்னுடன் யாராவது தட்டுவாணி யிருந்தால் அவளின்னுள் என்று உம்மிடம் சொல்லப் போகிறதில்லை.

தார்க்கீகர்—உடனே நீ சொல்லவேண்டுமென்று கட்டளை இடுகிறேன். இந்த வயதில் நீ கல்வி கற்க முடியாது போனதும் உபாத்தியாயர் அதிகாரத்திற்கு கீழ்ப்படியவேண்டும். குருவுக்கும் சிஷ்யனுக்கும் உள்ள சம்பந்தம் என்றும் மறக்கத்தக்கதன்று. அந்தச் சம்பந்தம் கடவுளாலேற்பட்டது. வித்தியாரம்பத்தில் எனக்கு

எப்படிக் கீழ்ப்படிந்தாயோ அப்படியே இப்போதும் கீழ்ப்படிய வேண்டும்.

தாமோதரன்—முன்போல் நீர் பிரம்படிகொடுத்துக் கீழ்ப்படியச் செய்தாலொழிய உமது கேள்விக்கு நான் பதில் சொல்லப் போகிறதில்லை.

தார்க்கீகர்—அப்படியானால் உண்மையைச் சொல்லுகிறேன் கேள். நான் அந்தத் துன்மார்க்கியாரென்று அறியத் தான் போகிறேன்.

தாமோதரன்—ஆனால் நான் உண்மையைச் சொல்லுகிறேன் கேளும். நீர் அறியும்படியாக நான் உம்மைவிடப் போகிறதில்லை.

தார்க்கீகர் முன் சென்றார்; தாமோதரன் அவர் கையைப்பிடித்தான். பிலவங்கன் தன் குரு அவமானப்படுத்தப் படுவதைச் சும்மாவிருந்து பார்க்க விசையாமல் குருவுக்கு ஒத்தாசை செய்ய வந்தான்.

இருவருடன் மல்லுக்கு நிற்கவேண்டி வந்ததை யறிந்த தாமோதரன் ஒருவனை முன்னால் அசக்தனாக்கப்பார்த்தான், தார்க்கீகரை விட்டுவிட்டுப் பிலவங்கனைப் பிடித்து அவன் மார்பில் ஓங்கி ஒரு குத்துக்குத்தினான். வலியைப் பொறுக்க முடியாத பிலவங்கன் பூமியில் சாய்ந்தான். தார்க்கீகர் கருமமே கண்ணாயிராதலால் பிலவங்கனுக்கு என்ன ஆயிற்றோவென்று கூடப்பாராது மல்லனை இருக்குமிடம் நோக்கி வேகமாய்ப்போனார். புதரை நாடிக் கொஞ்சதூரம் போவதற்கு முன்னமே தாமோதரன் தார்க்கீகரைத் தொடர்ந்து அவர் அங்கியின் பிற்புறம் பற்றி இழுத்தான்.

தார்க்கீகரோ பாலியத்தில் மிக்க பலசாலி, பாடசாலையிலிருக்கும்போதே கைக் குத்துச்சண்டையில் தேர்ச்சி பெற்றவர். அனேக வருஷங்களாய் இந்தப்பழக்கத்தை விட்டிருந்தார். ஆனால் முன்னிருந்த தைரியமும் பலமும் குறையாதிருந்தது. அவர் பின்னால் திரும்பிப்பார்த்துப் பிலவங்கன் கீழ்வீழ்ந்திருப்பதையும் தனக்கு இதுவரையில் கீழ்ப்படிந்திருந்தவன் இப்பொழுது தன்னை முரட்டுத்தனமாய் இழுப்பதையும் கண்டு கோபமுண்டாகி தன் பலத்தையெல்லாஞ் சேர்த்து தாமோதரனை ஓங்கி ஒரு குத்துக் குத்தினார். அந்தக் குத்தை தாமோதரன் ஏற்றுக் கொஞ்சமும் சலிக்காமல் அதிலும் பலமாகக் குருவின் மார்பில் ஓங்கிக் குத்தினான். அக்குத்தைக் குரு தடுத்துக்கொண்டாலும் அது அவர் வயிற்றில் பட்டது. மாறி மாறி இருவரும் குத்திக்கொண்டார்கள். கடைசியில் தாமோதரன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து தார்க்கீகரைக் கீழே தள்ளித் தன் முழங்காலை அவர் மார்பில் வைத்து இருத்திக்கொண்டான். அச்சமயத்தில் பிலவங்கன் மூர்ச்சை தெளிந்து எழுந்து ஓடிவந்து தாமோதரனோடு சண்டையிடலானான்.

இடையில் குருவும் திமிரிக்கொண்டு எழுந்துவிட்டார். இருவரும் சேர்ந்து தாமோதரனைத் தாக்கினர்கள். தார்க்கீகரோடு சண்டையிட்டு தாமோதரன் களைத்திருந்ததால் அவன் குத்தியதெல்லாம் பயன்படாது போயின. ஒருவன் இரண்டு பேருடன் சலிக்காமல் எவ்வளவு நேரம் சண்டை செய்யமுடியும்? தாமோதரனுடைய பலம் கொஞ்சம் ஒடுங்கிற்று. அந்தச் சமயத்தில் நாலாவது மனிதர் அங்கு தோன்றி குருவின் மார்பில் ஓங்கி இரண்டு குத்து விட்டு "இருவர் சேர்ந்து ஒருவனோடு சண்டை போடுகிறீர்களே! வெட்கமில்லையா" என்றும் கேட்டார். திரும்பவும் மல்லிடுகையில் பிலவங்கன் தாமோதரனால் கீழேவீழ்த்தப் பட்டான். புதிதாக வந்தவரால் இடியுண்டு தார்க்கீகரும் கீழேசாய்ந்தார். இப்படிப் புதிதாகவந்தவர் வத்ஸர்தான். சண்டைமும்முரத்தில் ஒருவராவது அவரை யறிந்து கொள்ளவில்லை.

வத்ஸர் அன்று சாயந்திரம் மற்றுஞ் சிலரோடு உலாவிவருகையில் மூவர் சண்டையிட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தார். அதிலிருவர் ஒரு பக்கத்தவர் என்று எண்ணி தன்னோடு வந்தவர்களை விட்டுப்பிரிந்து விரைந்துவந்து சேர்ந்த கக்ஷிப்பக்கம் சேர்ந்தார். இப்படிசமயத்தில் வத்ஸர் உதவிகிடைத்ததால் தாமோதரன் தார்க்கீகர் பிலவங்கன் இவர்கள் துன்பத்தினின்றும் தப்பநேர்ந்தது. தாமோதரன்சோபையைக் காப்பாற்றப் போனதில் விழுந்து காயப்பட்ட கை அப்போதும் முற்றும் சௌகரியமாகாதிருந்தது. ஆயினும் வத்ஸர் நடுவில் வந்ததால் சண்டையும் முடிந்து தாமோதரனுக்கும் ஜயம் கிடைத்தது.

11. அத்தியாயம்.

உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்காண் முரிந்தார் பலர்.

வத்ஸருடன் வந்தவர்கள் சண்டை முடிந்த சமயம் பார்த்து அங்குவந்து சேர்ந்தார்கள். இவர்கள் சபலரும், சோபையும், அவளுடைய அத்தை விதரணியுமேயாம். அவர்கள் வந்த சமயத்தில் போர்க்களம் எப்படி யிருந்ததென்றால்: ஒரு பக்கத்தில் மூச்சில்லாமல் பிலவங்கன் விழுந்துகிடந்தான். அவனுக்குப்பக்கத்தில் தன் உடலினின்று சிந்தியரத்தமும் தார்க்கீகர் ரத்தமும் கலந்து மேலெல்லாம் வர்ணம் பூசியதுபோல் தாமோதரன் நின்றான். இன்னோரிடத்தில் தார்க்கீகர் தோல்வியடைந்ததால் தலை குனிந்து வத்ஸருக்கு முன் நின்றுகொண்டிருந்தார். அவருக்கு எதிரில் வத்ஸர்மிக்க இறுமாப்போடே நின்றார். அவருக்குரில் தார்க்கீகர் பணிந்து நின்றார். இவர் பணிதலை ஏற்று வத்ஸரும் கடாக்ஷிப்பது போலிருந்தார்.

செத்தவனைப்போற்கிடந்த பிலவங்கனிடம் எல்லாருடைய கண்களும் சென்றன. அவனுக்காக அனைவரும் இரங்கினர். விதரணி தன்னிடப்பிலிருந்து ஒரு மருந்தை எடுத்துப் பிலவங்கன் மூக்கில் காட்டினாள். அச்சமயத்தில் எல்லோரும் திடுக்கிட்டு வேறு பக்கம் திரும்பிப்பார்த்தார்கள். தாமோதரன் மேல்வழிந்து கொண்டிருந்த உதிரத்தைச் சோபைபார்த்து மூர்ச்சையாகினள். இவளுக்கு அருகிருந்தோர் உதவிபுரியு முன்பே கீழே விழுந்து விட்டாள். விதரணிதான் அதை முதலில் பார்த்துக்கூக்குரலிட்டவள். உடனே இரண்டு மூன்று குரல் சோபை யிறந்துவிட்டாள் என்று கிளம்பிற்று. மருந்துகொண்டுவா, ஜலம்கொண்டுவா, என்று சொல்லிக்கொண்டே மூலைக்குமூலை ஓவ்வொருவரும் ஓடினார்கள்.

தன் குத்து பலமாய் விழுந்திருக்கலாமென்று பயந்து தாமோதரன் பிலவங்கனுடைய பொறிகளைத் தேய்த்துக்கொண்டிருந்தான். "சோபை", "மரணம்" என்ற சொற்கள் காதிற் பட்டவுடனே தாமோதரன் பிலவங்கனை விழுந்தபடியே விட்டு விட்டு சோபையிருக்குமிடமோடி மற்றவர்கள் ஜலத்துக்காகக் குறுக்கும் நெடுக்கும் ஓடிக்கொண்டிருக்கையிலே அவளைத் தூக்கிக்கொண்டு அருவியிருக்குமிடம் சென்று நீரில் இறங்கி அவளுடைய முகத்திலும் கழுத்திலும் தலையிலும் தண்ணீர் நன்றாய்ப் படும்படி வாரித்தெளித்தான்.

எல்லோரும் சோபையைக் காப்பாற்றத்தெரியாது புத்திமயங்கி எப்படி அங்குமிங்கும் அலக்கழிந்துகொண்டிருந்தார்களோ அப்படியே தாமோதரன் சோபையைத் தூக்கிப்போகையில் அவனைத்தடுக்கத்தெரியாது விழித்தார்கள். இது சோபைக்கு அனுகூலமாகவே முடிந்தது. சோபையைப் பாதிதூரம் எடுத்துப் போன பிறகுதான் தாமோதரன் சோபையைத் தூக்கிப்போன விஷயம் மற்றவர்களுக்குத் தெரிந்தது. அவர்கள் இவனைப் பின் தொடர்ந்து வருவதற்கு முன்னால் சோபைக்குப் பிரஜ்ஞை வந்து விட்டது. அவள் தந்தையும் அத்தை விதரணியும் தாக்கீகரும் வந்ததும் சோபை "சுவாமி, நாராயணா, கோவிந்தா, மாதவா" என்று துதிசெய்துகொண்டிருந்தாள். இதுவரையில் அவனைத் தூக்கிக் கொண்டிருந்த தாமோதரன் அவளைக் கீழேவிட்டான். ஆனால் விடும்போது அவனைத் தழுவி ஒரு முத்தமிட்டான். அவள் இந்த சுதந்தரத்தை மறுக்காததால் அவளுக்குப் பிரக்ஞையில்லாதிருந்தது என்று எண்ணிக்கொள்ளவோம். தூக்கரசம் இப்போது ஆனந்த ரசமாக மாறிற்று. இதில் நமது கதாநாயகன்தான் முக்கிய புருஷன். உயிர் தப்பியதற்காக சோபைக்கிருந்த சந்தோஷத்தை விட அவளைக்காப்பாற்றியதால் தாமோதரன் அடைந்த சந்தோஷம் அதிகம். அவனுடைய வீரச்செய்கைக்காக அவனைக்கொண்

டாடாதவர்கள் இடையாது. சோபையினுயிரைக் காப்பாற்றியதற்காக அவளையும் தன் ஆஸ்தியையும் தவிர வேறு எதுகேட்டபோதிலும் தாமோதரனுக்குக் கொடுப்பதாக வத்ஸர் வாக்களித்தார்.

சோபையைப் பற்றிய பயமெல்லாம் தவிர்த்துவிட்ட பிறகு வத்ஸர் தாமோதரனுடன் குலாவ ஆரம்பித்தார். "பையா, உன் அங்கியைக் கழற்றி முகத்தைக் கழுவிக்கொள். வீடுபோகலாம்வா. அங்கே உனக்கு வேறு அங்கி கொடுக்கிறேன்" என்றார். தாமோதரனும் அப்படியே செய்தான். அங்கியைக் கழற்றி எறிந்துவிட்டு அருவிக்குச் சென்று முகத்தைக் கழுவிக்கொண்டான். ரத்தம் மறைந்து போனபோதிலும் தார்க்கிகரால் முகத்திலும் மார்பிலும் குத்தப்பட்டிருந்த கழும்புகளும் காயங்களும் மறையவில்லை. அதைக் கண்ட சோபை பெருமூச்செறிந்து மிக்க பரிதாபத்தோடு அவனைக் கடாக்ஷித்தாள். சோபைக்குத் தன்மேலிருக்கும் இரக்கத்தைத் தாமோதரனும் பார்த்துத் தனக்கிருந்த தோயெல்லாவற்றையும் மறந்தான். வெட்டுக் காயம் பட்டிருந்தபோதிலும் அதையும் இந்தசமயம் அவன் லக்ஷியம் செய்திருக்க மாட்டான்.

எல்லோரும் சேர்ந்து பிலவங்களுக்கு வேண்டிய சிகிச்சை செய்ய அவனும் தார்க்கிகரு மெழுந்து மற்றவர்களிருந்த இடம் வந்து சேர்ந்தார்கள். இந்தச் சண்டைக்குக் காரணம் என்னவென்று வத்ஸர் விசாரித்தார். அதற்குத் தாமோதரனும் பிலவங்களும் பதில் சொல்லாது மௌனமாயிருந்தார்கள். ஆனால் தார்க்கிகர் "காரணத்தை அறிய அதிக தூரம்போக வேண்டியதில்லை. அதோ அந்தப் புதரை விலக்கிப் பார்த்தால் அவள் அகப்படுவாள்" என்றார். வத்ஸர் "அவளா? ஒரு பெண் பிள்ளைக்காகவா மூவரும் சண்டை போட்டீர்கள்?" என்ன, தார்க்கிகர் "அதோ அவரைக் கேளும்" என்று தாமோதரனைச் சுட்டிச் சொன்னார். வத்ஸர் "அப்படியானால் ஒருஸ்திரீயைப் பற்றித்தானிருக்கவேண்டும். தாமோதரா நீ பெருங்காமாதுரன், போனால் போகிறது, எல்லோரும் சினேகமாயிருங்கள், என் வீட்டுக்கு வாருங்கள், போஜனம் செய்துபோகலாம்" என்றார். தார்க்கிகர் "என்னைப் போலொத்தயோக்கியர் ஒரு பையனால் அவமானப் படுவது பொறுக்கத் தக்கதன்று. இவனுடன் கூடவிருந்த விபசாரியைப் பிடித்து அவளுக்கு சிக்ஷைவிதிக்க வேண்டுமென்று பார்த்தால் அதற்கு இவ்வளவு சச்சரவா? உமதுபேரிலும் ஆளவந்தார் பேரிலும்தான் குற்றமிருக்கிறது. நியாயத்தை மாத்திரம் நீங்கள் சரியாக நடத்திவந்தால் இந்தக் கொழுப்புப்பிடித்த துன்மார்க்கிகள் இருப்பார்களா?" என்று படபடத்துக்கூறினார். வத்ஸர் "ஒரு சண்டையில் எத்தனை பேர் சம்பந்திக்கிறார்கள். அதற்குத் தக்க பிறப்பும் வேண்டுமே. இப்படிப்பட்ட ஸ்திரீகளிராவிட்டால் ஜனம் விருத்தியாவது எப்படி? கிடக்கு, அவள் எங்கே இருக்கிறாள்? தாமோதரா எனக்

குக் காண்பி" என்று சொல்லிக்கொண்டே புதர்களை விலக்கித்தேடினர். ஆனல் மல்லிகை சண்டை யாரம்பிக்கு முன்னமேயே ஒரு வருக்கும் தெரியாமல் மறைந்து ஓடிவிட்டாள்.

சோபை திரும்பவும் தனக்குக் களைப்பா யிருப்பதால் விட்டுக்கு உடனே திரும்பும்படி தன் தந்தையைக் கேட்டுக்கொண்டாள். அவரும் தன்மக விஷ்டப்படியே ஒப்புக்கொண்டார். போவதற்கு முன்னல் எல்லோரையும் தன் விட்டுக்குவந்து சாப்பிட்டுப் போகும்படி சொல்லிப் பார்த்தார். பிலவங்கனும் தார்க்கிகரும் மறுத்துவிட்டார்கள். தாமோதரன் சோபையோடு இருக்கலாம் என்கிற சந்தோஷத்தால் வத்லர் விடுபோக ஒப்புக் கொண்டான். வத்லரும், அவர் சகோதரியும், மகளும், தாமோதரனும் முன் செல்ல சபலர் பின் தங்கிவர அனைவரும் விடு சென்றார்கள்.

6. சம்புடம்.

1. அத்தியாயம்.

குறித்தது கூறுமைக் கொள்வாரோ டேனை
யுறப்போ ரனையால் வேறு.

மேற் சொன்னவர்கள் விடுசேர்ந்து அன்றுமாலை கோரத்தை மிகுந்த களிப்போடும் உற்சாகத்தோடும்போக்கினர். சோபை ஒருத்தி தான் அங்கு மனம் வாடினவளாகத் தோன்றினள். தாமோதரனை ஆளவந்தார் உயிர் தப்பினர் என்கிற சந்தோஷத்தாலும் தன் காதலியின் முன்னிருப்பதாலும் அவள் அடிக்கடி கடைக்கண்ணால் கருணைசெய்வதைப்பார்ப்பதாலும் மற்றவர்களைப்போல சந்தோஷத்துடனும் கோலாகலத்துடனு மிருந்தான்.

மறுநாட்காலையில் போஜனம் செய்யும்போது சோபை வாடிய முகத்துட னிருந்தாள். அவள் அனைவருக்கு முந்தியே போஜனம் செய்துவிட்டு எழுந்துபோய்விட்டாள். வத்லரும் அவர் சகோதரி விதரணியு மாத்திரம் உட்கார்ந்திருந்தார்கள். தன் மகளின் முகமாறுபாட்டை வத்லர் கவனிக்கவில்லை. அவர் சகோதரி யப்படிப் பட்டவளல்ல. அவள் அரண்மனையில் வாழ்ந்தும் வேற்றிடத்துத் தன்மை யுணர்ந்தவள், உலக நடவடிக்கைகளும், ஜனங்களின் வழக்கங்களும், மானுஷகுண குணங்களும், செயற்கை வினைதங்களும், நன்றாயறிந்தவள். அவள் இயல் இசை நாடகங்களைக் கற்றுத் தேர்ச்சி யடைந்தவள். தேச சரித்திரங்களை நன்றாயுணர்ந்து ராஜ்ஜிய சம்வாதங்களைப்பற்றி யுரைக்கும் பத்திரிகைகளையும் ஆராய்ந்து வருபவள். ராஜ்ஜிய தந்திரங்களைப்பற்றி மிக்க அறிவுடன் சம்பாஷிப்பவள். காம சாஸ்திரத்தையும் கரைகண்டவள். எவரெவர் ஒரு மனதுடையவர், எவர்க்கும் எவர்க்கும் பொருந்

தும் என்கிற விஷயங்களை நிமிஷமாத்திரத்தில் தெரிந்து சொல்லி விடுவாள். இதைக்கொண்டு அவள் காமத்துறையுள் மூழ்கியவள் என்று எண்ணி விடக்கூடாது. இவள் சாமுத்திரிகம் முதலிய சாஸ்திரங்களிலிருந்து காதலின் குறியீடுகளை யெல்லாம் கற்றிருப்பவள். தங்களிஷ்டத்தை மறைக்கும் பொருட்டாவது அல்லது பிறனுடைய காதலுக்கு இடங் கொடுக்கும்படியாவது தெரிவிக்கும் புன் சிறிப்பும், கண் ஜாடையும், நடிப்பும், கடைக்கண் பார்வையும், அவளறியாமல் வெளிப்படா. மறைத்தும் பாசாங்கு செய்தும் காதலைத் தெரிவிக்கும் வழிகளையெல்லாம் விதரணி நன்றாக அறிந்தவள். கபடமின்றி இயற்கையாக வுண்டாகும் காதற் குறிகளைப்பற்றி அவளுக்கு அவ்வளவு நன்றாகத் தெரியாது. இவ்வளவு சாமர்த்தியமுள்ள விதரணி சோபையின்மனத்திலுண்டான கவலையின் காரணத்தைத் தெரிந்துகொண்டு விட்டதாக நினைத்தாள். முதல்நாள் தோப்பில் சோபையின் நடத்தையால் முதல் முதல் விதரணிக்கு சமுசயம் உண்டாயிற்று. அன்று சாயந்திரமும் மறுநாட் காலையிலும் சோபை சொல்லிய இரண்டு மூன்று வார்த்தையால் சந்தேகம் கொஞ்சம் உறுதிப்பட்டது. ஆனால் தன் சமுசயம் பொய்யாகித் தான் ஏமாந்துபோனதாகப் பட்டம் கிடைக்கக் கூடாது என்கிற எண்ணத்தால் பதினைந்து நாள் கவனித்துப் பொறுத்துப் பார்த்தாள். இடையில் கண் சிமிட்டலாலும், தலையசைப்பாலும், வாய்ப் பினற்றலாலும் சோபை சிந்தாக்கிரந்தியாக விருக்கும்போது விதரணி பரிசோதித்துப் பார்த்தாள். இப்பரிசோதனை விஷயம் சோபைக்குத் தோற்றும்போதெல்லாம் அவளைத் திடீர் என்று தூக்கிப்போடும். வத்ஸருக்கோ இந்த விஷயம் ஒன்றுமே தெரியாது.

கடைசியில் விதரணி சமுசயம் ஊர்ஜிதமாகிவிட்டது என்று எண்ணினாள். ஒருநாள் வத்ஸரோடு தனியே இருக்கையில்.

விதரணி—அண்ணா கொஞ்சநாளாக நமது சோபை மாறுபாடடைந் திருப்பதை நீர் கவனிக்கவில்லையா ?

வத்ஸர்—இல்லையே அவளுக்கு உடம்புக்கு என்ன நேர்ந்தது?

விதரணி—ஏதோ ஜாஸ்தியாக இருக்கிறாப்போலிருக்கிறது.

வத்ஸர்—என்னிடத்தில் அவள் ஒன்றும் சொல்லவில்லையே. அவளுக்கு மூன்னே அம்மை போட்டிருந்தது.

விதரணி—அண்ணா! வாலிபஸ்திரீகளுக்கு அம்மையே யல்லாமல் வேறு வியாதிகளும் வருவதுண்டு. அவ்வியாதி அம்மையினும் கெடுதலாயிருக்கும்.

வத்ஸர்—ஏதாவது அவளுக்கு நோயாக விருந்தால் உடனே தெரிவி, அதற்குத் தக்க வைத்தியம் உடனே செய்யவேண்டும்.

என் உயிரினும் என் மகளை நான் அதிகமா நேசிக்கிறேன் என்று உனக்கே தெரியும். இவ்வுலகத்தில் அதிசாமர்த்தியமுள்ள வைத்தியனைக்கொண்டு சிகிச்சை செய்யச்சொல்கிறேன்.

விதரணி—அவளுடைய வியாதி அவ்வளவு கொடுமையான தல்ல. உலக விஷயங்கள் எனக்கு நன்றாகத்தெரியுமென்று நீர் அறிவீரே. என் மருமகள் இப்பொழுது மோக ஜ்வரத்தால் வருந்துகிறாள்.

வத்ஸருக்குக் கோபமுண்டாகி "எப்படி, மோகமா? என்னிடம் சொல்லாமல் என் மகள் காதல்கொள்ளுமட்டும் ஆயிற்று! என் ஆஸ்தியில் ஒரு பைசா அவளுக்குக்கொடுப்பதில்லை. அவளைப் பிச்சைக்காரியாக வீட்டைவிட்டுத் துரத்தி விடுகிறேன் பார். அவள் மேல் எனக்கிருந்த பக்ஷமும் மதிப்பும் இப்படித்தானு முடியவேண்டும். என் உத்திரவில்லாமல் எப்படி அவள் ஒருவனைக் காதலிப்பாள்?

விதரணி—உமது உயிரினும் அதிகமாக நேசுவாவிக்கிற உமது பெண் காதலிக்கும் புருஷன் உமக்குச் சம்மதமானவனு அல்லவா என்பதை அறிவதற்குமுன் நீர் அவளை எப்படி வீட்டைவிட்டு வெளித்துரத்துவீர்? நீர் மனத்தில் தீர்மானித்திருக்கும் புருஷன் மேலே அவள் காதல் வைத்திருந்தால் அப்பொழுது நீர் கோபிக்க மாட்டீரல்லவா?

வத்ஸர்:—நான் தேடும் வரனை அவள் மணப்பது நிச்சயமானால் அவள் யாரைவேண்டுமாயினும் காதலித்துக்கொள்ளட்டும். அதினால் எனக்கு அக்கரையில்லை.

விதரணி:—இப்பொழுது நீர் சொன்னதுதான் சரி. அவள் காதலிக்கிறவனை நீரும் மருமகனாக வரிப்பீர் என்பதற்குச் சந்தேகமில்லை. எனக்கும் உலக அனுபவம் நன்றாக அமைந்திருக்கிறது.

வத்ஸர்:—மற்ற ஸ்திரீகளுக்கு இருக்கிற அனுபவம் உனக்கு மிருக்கிறது. அதிலும் இது ஸ்திரீகளைப்பற்றிய விஷயம். நீ ராஜாங்க விஷயத்தைப்பற்றிப் பேசினால் மாத்திரம் எனக்குச் சம்மதமிராது. ஏனெனில் அது புருஷர்கள் விஷயம். அதில் பெண்கள் பிரவேசிக்கக்கூடாது. இப்பொழுது நீ பேசவந்த விஷயம் உங்களுடையதே. சோபை காதலிக்கும் புருஷன் யார்?

விதரணி:—நீரே அவனை சீக்கிரத்தில் அறிந்துவிடலாம். ராஜதந்திரங்களையெல்லாம் அறிந்து ராஜ்ஜிய ரகஸியங்களைச் சாமர்த்தியமாய் உணரும் உமக்குக் கபட மற்ற ஒரு பெண்ணின் மனத்திலிருக்கும் ரகஸியத்தை அறிவது கஷ்டமா?

வத்ஸர்:—இந்த மாதிரி பேச்சு என்னிடம் பேசாதே என்று பலதடவை எச்சரித்திருக்கிறேன். இப்பொழுது நீ குறிப்பிட்ட மனிதனை இன்னான் என்று சொல்லு.

விதரணி:—பிலவங்கனைப்பற்றி என்ன வெண்ணுகிறீர்? அவன் அன்று மூச்சில்லாமல் தரையில் விழுந்து கிடந்ததைப் பார்த்ததும் சோபை மூர்ச்சையாகி விடவில்லையா? அவன் சொஸ்தமானதும் அவனிருந்தவிடத்திற்கு நாமெல்லாம் சென்றபோது அவனைப்பார்த்து சோபை முகம் வெளுக்கவில்லையா? அன்று ராத்திரி நாம் சாப்பிடும் போழ்தும் மறுநாட் காலையிலும், அது முதல் நாளதுகாறும் சோபை சிந்தாக்கிரந்தியாக இருப்பதற்கு வேறு என்ன காரணமென்று நினைக்கிறீர்?

வத்ஸர்:—ஓ ஓ அப்படியா! நீ சொன்ன பிறகு தான் எல்லாம் ஞாபகம் வருகிறது. அப்படித்தான். அவளுடைய புத்திசாலித்தனத்திற்காக நான் சந்தோஷப்படுகிறேன். சோபை நல்லபெண். எனக்குக் கோபம்வரும்படியாக அன்னியனைக்காதலிக்கமாட்டாள். இப்பொழுது தான் நான் மிக்க திருப்தியடைந்தேன். என் பூஸ்திதியும் ஆளவந்தார் பூஸ்திதியும் ஒன்றுக்கொன்று அருகாமையிலிருக்கின்றன. இந்த விஷயத்தைப்பற்றி மனத்தில் கொஞ்சநாளாக யோசித்துக்கொண்டுதானிருந்தேன். இருவருடைய சொத்துக்களும் ஒன்றுசேர்ந்தால் எவ்வளவோ மேன்மையாகத்தானிருக்கும். இவ்விரண்டு பூஸ்திதிகளையும்விட விஸ்தாரமும் மேன்மையுமான நிலம் நமது பக்கங்களில் வேறெங்குமில்லை. என் பெண்ணை அயலாருக்குக் கொடுப்பதைவிட பிலவங்கனுக்குக் கொடுத்து இருவருடைய ஆஸ்திகையும் விருத்தி செய்வதே போதுமானது. இதற்கு நீ என்ன சொல்கிறாய்? ஸ்திரீகளுக்கு இந்த விஷயங்களைப்பற்றி நன்முகத் தெரியுமாகையால் கேட்கிறேன்.

விதரணி:—என் அபிப்பிராயத்தைக் கேட்பதால் சொல்கிறேன் கேளும். ஆளவந்தாரிடம் போய் இந்த விவாகத்தைப்பற்றி யோசனை செய்யுங்கள். இருபக்கத்திலும் பெற்றோர்கள் சம்மதித்து விவாகம் செய்வதால் குற்றமொன்றுமில்லை.

வத்ஸர்:—சரி அப்படியே செய்கிறேன். அவர் மறுத்துவிட்டாலோ.

விதரணி:—அதற்கு ஒன்றும் பயப்படாதேயும். இந்தவிவாகத்தில் அவருக்கு லாபமிருப்பதால் மறுக்கமாட்டார்.

வத்ஸர்:—ஆளவந்தார் ஒருவிதமான மனுஷர் அவர் பணத்திற் காசைப்பட்டுத் தனக்கு இஷ்டமில்லாததைச்செய்யமாட்டார்.

விதரணி:—அண்ணு நீர் சொல்வது ஆச்சரியமாயிருக்கிறது. மேல்வேஷத்தைக்கொண்டு ஏமாந்து போகிறீரே. ஆளவந்தார் பணத்தை அலக்ஷியம் செய்வதால் அவருக்கு பணத்தின்மேல் ஆசையில்லை என்று சொல்லிவிடலாமா? இவ்வளவுதூரம் மனுஷரின் நிதானம் உமக்குத் தெரியாதிருக்கிறதே.

வத்ஸர்:—(விதரணி சொல்வதைக்கேட்டுக் கோபமுண்டாகி) ஸ்திரீகளைப்போய் பெரிய ரகசியங்களைப் பற்றி யுக்திகேட்பது மூடத்தனம்.

விதரணி:—என்னையும் என் இனத்தையும் இவ்வாறு அவமானப்படுத்திய உமது வீட்டில் ஒரு நிமிஷமேனும் இனித் தங்குவதில்லை என்று எழுந்தாள்.

தன் சகோதரிக்குப்பிறகு அவளது செல்வமெல்லாம் தனக்காவது தன் சந்ததிக்காவது வருமென்று வத்ஸருக்குத் தெரியும். ஆதலால் அவளைக் கோபப்படுத்தக் கூடாதென்று சமாதானம் செய்யப்போனார். விதரணிக்குத் தன் சகோதரனிடத்திலும் அவர் மகளிடத்திலும் மிருந்தபக்ஷமுள்ளபடியாலும் சுபாவத்திலேயே மிக்க நல்லவளாதலாலும் அவள் கோபமடங்கிவிட்டது. தகப்பன் மகளையும் இட்டுவந்து சமாதானம் செய்யச்சொன்னபடியால் விதரணியின் கோபம் இருந்தவிடம் தெரியாது போகக்கேட்பானேன்.

2. அத்தியாயம்.

நன்றூற்றலுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றுக் கடை.

தன் சகோதரிக்குச் சமாதானம் சொன்னபிறகு வத்சர் ஆளவந்தாரிடம் கலியாணவிஷயத்தை நிச்சயம் செய்வதற்காகப் புறப்பட்டார். அவர் அச்சமயம் வியாதியஸ்தராயிருந்ததால் அவரிடம் கலியாண விஷயம் பேசப்போவது நல்லதல்லவென்று விதரணி தடுத்தாள்.

ஆளவந்தார் வியாதி யடைந்தநினத்தில் வத்ஸர் வீட்டில் விருந்துண்ணை வருவதாகச் சொல்லியிருந்தார். பின்பு வியாதியடைந்ததால் சொன்னபடி செய்ய முடியவில்லை. ஆயினும் சொஸ்தமாகியதும் வத்ஸர் வீடுசெல்வதாக உத்தேசித்திருந்தார்.

தாமோதரனைத் தான் காதலித்திருப்பதைத் தன் அத்தையறிந்துகொண்டாள் என்று தெரிந்ததும் அதனை மாற்றும் பொருட்டு சோபை தனது எண்ணமுழுதையும் மறைத்து என்றும் போல் நடந்துவந்தாள், சந்தோஷமாயிருப்பதுபோலவே நடித்தாள். தாமோதரனைப்பற்றி ஒருவார்த்தையும் பேசாமல் பிலவனைப்பற்றியே பேசிவந்தாள். இதைக்கண்ட வத்ஸர் குதூகலித்தார். கண்ஜாடையாலும் தலையசைப்பினாலும் தான் சோபையின் நடத்தையை அங்கீகரிப்பதாகத்தெரிவித்தார். ஆனால் விதரணிக்கு மாத்திரம் இம்மாறுபாட்டைப் பார்த்ததும் முன்னிருந்த சந்தோஷமில்லை. தன்னை யேமாற்றுவதற்காகச் சோபை இவ்விதம் நடிக்கிறாள் என்று அறிந்துகொண்டாள்.

உடம்பு சொஸ்தமானதும் ஆளவந்தார் வத்ஸர் வீட்டிற்கு விருந்து சாப்பிடவந்தார். சாப்பிட்டானதும் தோட்டத்தில் உலாவ வத்ஸர் அழைத்துச்சென்று சோபைக்கும் பிலவங்கனுக்கும் கலியாணம் செய்யவேணுமென்று சொன்னார். இப்படி திடீரென்று சொன்னதைக்கேட்டு ஆளவந்தார் ஆச்சரியப் பட்டாரில்லை. இந்த சம்பந்தம் தனக்குமுழுதும் இஷ்டமே என்றும் சோபைகல்வி கேள்வியிலும் சாமர்த்தியத்திலும் மேலான வளாயிருக்கும் காரணமேயன்றி இந்த விவாகம் நடந்தேறினால் இருவர் செல்வமும் விருத்தியாகுமென்றும் ஆளவந்தார் சொல்லி தன் மருகனை மெச்சியதற்காக வத்ஸருக்கு வந்தனமும் செய்தார். கடைசியில் வாலிபனும் யுவதியும் ஒருவரை யொருவர் விரும்பினால் விவாகத்தைமுடிக்கத் தனக்கு ஆக்ஷேபனை இல்லை என்று சொல்லி முடித்தார்.

ஆளவந்தாருடைய பதிலைக்கேட்ட வத்ஸருக்குத் திருப்தியுண்டாகவில்லை. தன்னைப்போலவே அவரும் செல்வத்தை உத்தேசித்து சம்பந்தத்திற்கு இணங்கிவிடுவார் என்று நினைத்தார். பெற்றோர்களே தங்கள் மக்களின் நன்மைக்கு உத்தரவாதியாகையால் அவர்கள் இஷ்டத்திற்கு மாறுக மக்கள் காதலிக்கக் கூடாது என்பது வத்ஸருடைய சித்தாந்தம். தன் மகன் தன் அபிப்பிராயத்திற்கு மாறுபட்டால் தான் அதைப் பொறுப்பதில்லை என்றும் சொன்னார்.

இப்படி வத்ஸருக்குண்டாகிய அதிருப்தியையறிந்த ஆளவந்தார் சோபையினுடைய குணாதிசயங்களைப் பற்றிப்புகழ்ந்து அப்படிப்பட்டவளைப் பிலவங்கன தடையில்லாமலேற்றுக்கொள்வான். ஆதலால் அவர்களபிப்பிராயங்களை யறிவதில் நமது கருத்துக்கும் விகாதமில்லையென்றார். ஆனால் வத்ஸர் இவ்வார்த்தைகளில் திருப்திபட்டவராகக் காணப்படவில்லை. அவர் "நான் கேட்டதால் குற்றமொன்றுமில்லை என்று நினைக்கிறேன். தங்களுக்குப் பிரியமபடாவிட்டால் நான் சொல்லியதை மறந்து விடுங்கள். அவ்வளவுதான்" என்று வத்ஸர் பதில் சொன்னாரேயொழிய ஆளவந்தார் கருத்துக்கு உடன்பட்டவராகத் தெரிவிக்கவில்லை.

ஆளவந்தாருக்கு வத்ஸர் குணம் நன்றாகத்தெரியுமாதலால் அவருடைய அதிருப்திக்காகக் கோபமடையவில்லை. கல்யாண விஷயத்திற்கூட சில பெற்றோர்கள் தங்களிஷ்டப்படியே மக்கள் நடக்கவேணுமென்று கட்டாயப்படுத்துவதை ஆளவந்தார் ஒப்பமாட்டார். இந்தவிஷயத்தில் பிலவங்கன் இஷ்டத்துக்குத் தான் மாறுதல் சொல்வதில்லை என்று நிச்சயித்தார். ஆனால இதவிவாகத்தைப்பற்றி அவருக்குச் சந்தோஷந்தான். தேசமுழுமையும் சோபையினுடைய பிரகயாதி பரவியிருந்தது. அன்றியும் அவரே

அவளுடைய ரூபலாவண்ணியத்தையும் கல்வி கேள்விகளையும் நேரில் கண்டு களித்திருக்கிறார். இத்துடன் அவளால் சேரும் பெருஞ்செல்வத்தைப் பற்றியும் யோசித்தார்.

3. அத்தியாயம்.

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு.

வீடு சென்றதும் ஆளவந்தார் பிலவங்தனைத் தனியே அழைத்துப்போய் வத்ஸர் கலியாணத்தைப் பற்றித் தன்னிடம் சொன்ன விஷயத்தையும் அது நிறைவேறினால் தனக்கு அதனால் உண்டாகும் சந்தோஷத்தைபபற்றியும் தெரிவித்தார்.

சோபையின் சாமர்த்தியங்களே பிலவங்களுக்கு விசேஷமாகத்தோன்றவில்லை. இது அவன் மனது வேறோரிடம் சென்றிருந்ததினாலல்ல. சிங்காரரசம் அவனுக்குத் தெரியாததினாலுமல்ல. ஸ்திரீகளை அவன் பகைப்பதினாலுமல்ல. பிலவங்கன் இயற்கையாலும் சாஸ்திரப்பயிற்சியாலும் சுகீத்தை நாடாதவன். காதல் இன்னும் அவன் மனத்தைக்கவரவில்லை. அவனுக்கு இன்பத்தைக்கருதி சோபையை அடையவேண்டுமென்கிற எண்ணமில்லாது போயினும் சோபையினைக் கிடைக்கும் ஆஸ்திபின் மேலிருந்த பேராசையினால் அடையவிரும்பினன். சோபையின் பொருள் தனக்குக் கிடைத்துவிட்டால் தான் மிகவும் சௌக்கியமாயிருக்கலாமென்று பல தடவை எண்ணியதுண்டு. ஆனால் வத்சர் ஒருவேளை விவாகம் செய்துகொண்டு அதினால் அவருக்குக் குழந்தைகள் பிறந்தால் சோபையை மணந்தும் பொருள் கிடைக்காதுபோகுமே என்று மேங்கினன். இப்பொழுது வத்ஸரே விவாகத்தைப்பற்றிக் கேட்டதால் மேற்சொன்ன சந்தேகம் பிலவங்கன மனத்திலிருந்து நிவர்த்தியாகிவிட்டது. ஆகலால் ஆளவந்தார் கேட்ட கேள்விக்கு நீள யோசனை செய்யாமலே பிலவங்கன் தனக்கு அதுவரையில் கலியாணத்தைப்பற்றிய எண்ணமே உதிக்கவில்லை என்றும், தன்மேலிருக்கும் அன்பு காரணமாக அவரிஷ்டப்பட்டு எது சொன்னபோதிலும் தான் அதற்குத் தடைசொல்வதில்லை யென்றும் சொன்னன்.

கல்வியிலும், ஞானத்திலும் ஆளவந்தார் சாக்ஷீகராக இருந்தாரே யொழிய சுபாவத்தில் அவர் மிக்க உல்லாச குணமுடையவர். பாலியத்தில் சிங்காரரசமெல்லாம் நன்றாகத்தெரிந்து கட்டழகி ஒருத்தியைக் காதலித்துக் கடிமணம் புரிந்தவர். ஆதலால் தன் மருமகன் கொஞ்சமேனும் குதாகலமின்றிச் சொன்ன மறுமொழியைக்கேட்டு அவர் திருப்தியடையவில்லை. சோபையையும் அவள் ரூபலாவண்ணியத்தையும் அறிந்த வாலிபனொருவன் எற்கனவே ஒருத்தியைக் காதலித்திருந்தாலொழிய அவளை இச்சியாதிருக்க

மாட்டானென்று சொல்லி, பிலவங்கனுடைய நடத்தையைப்பற்றி இழித்துரைத்தார். பிலவங்கன் தனக்கு அப்படி ஒன்றும் காதல் கிடையாதென்று சொல்லி, உண்மைக்காதலைப்பற்றியும் விவாகத்தின் மகிமையைப்பற்றியும் உபன்னியாசம் செய்ய ஆரம்பித்தான். கடைசியில் பிலவங்கனுக்கு சோபையை மணப்பதில் ஆக்ஷேபனை ஒன்றுமில்லையென்றும், அவளுடைய கல்விக்கும் திறமைக்கும் அவளிடம் மிகுந்த மதிப்புக்கொண்டிருப்பதாகவும் ஆளவந்தார் அறிந்துகொண்டார். இம்மதிப்பே நட்புக்கும் காதலுக்கும் காரணமென்று அறிந்துகொண்டாராதலால் மறு நாட்காலையில் பிலவங்கனுடைய சம்மதத்தின்மேல் வத்ஸருக்கு ஒரு கடிதமெழுதினர். அதில் "பிலவங்கன் சோபையை வரிக்க மகிழ்ச்சியுள்ளவனாயிருக்கிறான்; எப்பொழுது சோபைக்கு சௌகரியமோ அப்பொழுது பிலவங்கன் அவளைக்கண்டு போகத்தயாராக இருக்கிறான்" என்பதாக எழுதியிருந்தது. இக்கடிதத்தைப் பார்த்து வத்ஸர் மிகவும் சந்தோஷப்பட்டார். தன் மகளுக்கு ஒரு வார்த்தைகூடசொல்லாது அன்று மாலை பிலவங்கன் வந்து தன் மகளைக்கண்டு போகும்படி பதில் எழுதிவிட்டார்.

இக் கடிதத்தை அனுப்பினதும் வத்ஸர் தம் சகோதரியை நாடி அவளிருக்கும் அறைக்குச் சென்றார். அங்கு அவள் "வர்த்தமானி" யைப் படித்து சபலருக்கு அதை விளக்கிக்கொண்டிருந்தாள். அங்கு சென்ற வத்ஸர் கால்மணி நேரம் அவர்கள் சம்பாஷணை முடியும் வரையில் காத்திருக்க வேண்டிய தாயிற்று. கடைசியில் கொஞ்சம் சமயம் வாய்க்கவே அப்பொழுது "சில முக்கியமான விஷயங்கள் உன்னிடம் பேச வந்திருக்கிறேன்" என்று தன் சகோதரியைப் பார்த்துச் சொன்னார். உடனே சபலரும் எழுந்துபோனார். வத்ஸர் நடந்த விஷயங்களையெல்லாம் சொல்லி சோபையிடம் பிலவங்கன் வரப்போகிற விஷயத்தைத் தெரிவிக்கும்படியாகத் தன் சகோதரியைக் கேட்டுக்கொண்டார். அதை அவள் சந்தோஷமாக ஒப்புக் கொண்டாள்.

4. அத்தியாயம்.

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர் நின்று
போற்றினும் பொத்துப் படும்.

விதாரணி வந்தபோது சோபை தன் அறையில் படித்திருந்தாள். அத்தையைக் கண்டதும் பரபரப்புடன் புஸ்தகத்தை மூடினாள். இதைப் பார்த்து "எனக்குக் காட்டப் பயந்து அவ்வளவு பரபரப்புடன் மூடிய புஸ்தகம் என்ன" வென்று விதாரணி கேட்டாள். அதற்கு சோபை "இந்த புஸ்தகத்தின் பெயரைச் சொல்வதற்காவது அதைப் படித்ததற்காவது நான் வெட்கப் படவேண்டிய காரணமில்லை. மிகப் பிரசித்திபெற்று அனேக நற்குணங்

கள்வாய்ந்த ஒரு ஸ்திரீ எழுதிய புஸ்தகமாக்கும் இது" என்றாள். அவள் அத்தை அந்தப் புஸ்தகத்தை எடுத்துப் பார்த்து உடனே கீழே வைத்துவிட்டு "ஆமாம். இதை எழுதினவள் நற்குலத்தில் வந்தவள்தான். ஆனால் அவள் அவ்வளவு பிரசித்தி பெற்றவளல்ல. நான் அதைப் படித்ததேயில்லை. படித்தவர்கள் எல்லாம் அதில் விசேஷமில்லை என்று சொல்கிறார்கள்" என்றாள்.

சோபை:—அது என்னமோ எனக்குத் தெரியாது. அதில் மானிட இயற்கை வெகு சாமர்த்தியமாய் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. சில விடங்களில் படிக்கிறபோது எனக்குத் தெரியாது கண்ணில் ஜலம் வந்துவிடுகிறது.

விதரணி:—உனக்கு அழுவதில் பிரியமா?

சோபை:—எனக்கு சோக ரசத்தில் பிரியம். அதைக் கிரகிக்கும்போதே எனக்குக் கண்ணீர் பெருகுகிறது.

விதரணி:—சரி, நான் வந்தபோது வாசித்துக் கொண்டிருந்த இடத்தைக் காட்டு. அது மிக்க இன்பமாக விருக்கும்போ லிருக்கிறது. எதற்காகத் தலைகுனிகிறாய்? நீ மாயமாலங்களைக் கற்பிக்கும் புஸ்தகங்களைப் படிக்கவேண்டும். மனத்துள்நினைப்பதை இன்னும் கொஞ்சம் செவ்வையாக மறைக்கக் கற்றுக் கொள்ளவேண்டும்.

சோபை:—என்னுடைய எண்ணங்கள் தீங்கற்றன. ஆதலால் அவற்றிற்காக நான் நாணமடைய வேண்டியதில்லை.

விதரணி:—நாணமா? எதற்காக நீ நாணவேண்டும்? இப்பொழுது நான் இன்பமென்ற வார்த்தையைச் சொன்னதும் நீ தலை குனிந்தாய். எனக்குத் தெரியாதது ஒன்றும் உன் மனத்திலில்லை. உன் தகப்பனுரை ஏமாற்றுவதுபோல் என்னையும் ஏமாற்றலாம் என்று நினைத்தாயோ? நேற்று நீ பிலவங்களிடம் அதிக நட்புக் கொண்டவள்போல் அபிநயித்தாயே, அதெல்லாம் எனக்குத் தெரியாதா? எனக்கு உலக அனுபவம் ஜாஸ்தியாக இருப்பதால் அவ்வளவு சுலபமாய் என்னை ஏமாற்ற முடியாது. திரும்பவும் தலை குனியாதே. நீ கொண்டிருக்கும் காதலுக்காக வெட்கப்பட வேண்டியதில்லை. உன் காதலை நானும் சம்மதிக்கிறேன். உன் தகப்பனுரையும் சம்மதிக்கச் செய்துவிட்டேன். உன்னிஷ்டத்தை நான் பூர்த்திசெய்து வைக்கிறேன். உனக்கு நல்ல சந்தோஷ சமாசாரம் கொண்டுவந்திருக்கிறேன். என்னை நம்பி என்னிடம் எல்லாரகஸியங்களையும் சொல்லிவிடு. உனக்கு சர்வாபீஷ்டமும் உண்டாகும்படி நான் செய்விக்கிறேன்.

சோபை:—(மிக்கபேதமையோடு) நான் என்ன சொல்லட்டும்? எதற்காக என்னை சம்சயிக்கிறாய்?

விதரணி:—உன் ரகஸியத்தை உன் அத்தையிடம் சொன்னாயானல் உனது ஆப்தசினேகிதியிடம் சொன்னதாகப்பின்னல் நிச்சயமாகத் தெரிந்து கொள்வாய். எனக்கு மூன்னலேயே தெரிந்ததைத்தான் நீ இப்போது சொல்லப்போகிறாய். மேற்று நீ செய்த ஜாலங்களால் உன் எண்ணத்தை நான் நன்றாய் அறிந்து கொண்டேன். என்னை யன்றி வேறு எந்தஸ்திரீயாலும் உன்மாயத்தை அறிந்திருக்கமுடியாது. மேலும் நீ கொண்டிருக்கும் காதலுக்கு என் மூழுச் சம்மதமும் கொடுத்திருக்கிறேன் என்று அறிந்து கொள்.

சோபை:—அத்தை, நான் எதிர்பாராதவிதமாய் திடீர் என்று ஏதோ வினவுகிறேன். மேன்மையான குணங்கள் எல்லாம் ஒருங்கு திரண்டிருப்பதைப் பார்க்காமலிருக்கமுடியுமா? அப்படிப் பார்த்தது பிசகாயின் நீயும் என் தந்தையும் என்னிஷ்டத்தை அங்கீகரிப்பீர்களா?

விதரணி:—ஆமாம், சந்தேக மில்லாமல் அங்கீகரிக்கிறோம். உன் காதலன் இன்று பகல் உன்னைக் காணவரும்படிக்கு உன் தந்தை சொல்லி யனுப்பி இருக்கிறார்.

சோபை:—என் தந்தையா? இன்று பகலா?

விதரணி:—ஆம் குழந்தாய், இன்று பகல்தான். என் அண்ணன் ஆத்திரந்தான் உனக்குத் தெரியுமே. அன்று சாய்ந்திரம் நீ மூர்ச்சித்து விழுந்தபோதே உன் காதலை யறிந்து அவரிடம் தெரிவித்தேன். அன்றிரவு போஜன அறையிலும் மறுநாள் காலையிலும் உன் காதல் நிலவரமாகிவிட்டது என்று எனக்குத் தெரிந்தது. நான் என் சகோதரனிடம் சொன்னதும் அவர் ஆளவந்தாரிடம் போய் யோசனை கேட்டார். ஆளவந்தாரும் மிக்க சந்தோஷத்துடன் ஒப்புக் கொண்டார். இன்று பகலைக்கு மேல் நீ மிக்க அலங்காரமாயிருக்கவேண்டும்.

சோபை:—இன்று பகலிலேயா? நீ என்னை மெய்ம்மறந்து விடும்படி செய்து விடுகிறாயே.

விதரணி:—நீ ஒன்றுக்கும் பயப்படாதே. அகன் மிக்க வனப்புள்ள வாலிபன். அதிலொன்றும் சந்தேக மில்லை.

சோபை:—ஆமாம், நானும் ஒத்துக்கொள்ளுகிறேன். அவரைப்போல் மேன்மைக்குணம் படைத்தவர் வேறொருவருமில்லை. எவ்வளவு தைரியம், அத்துடன் எவ்வளவு இனிமை, எவ்வளவு சாதுர்யம், அத்துடன் எவ்வளவு தீங்கின்மை, எவ்வளவு அனுதாபம், எவ்வளவு பெரிய மனுஷத்தனம், எவ்வளவு லாவண்ணியம், இவ்வளவு குணங்களையும் படைத்தவர் இழிபிறப்பினராயினுமென்.

விதரணி :—இழிபிறப்பா? பிலவங்கன் இழிபிறப்புடையவனு? நீ சொல்வது புரியவில்லையே.

சோபை :—இப்பெயரைக் கேட்டதும் திடீரென்று முகம் வெளுத்தாள். மிக்க விசனத்துடன் அந்தப் பெயரைத் திரும்பவும் உச்சரித்தாள்.

விதரணி :—பிலவங்கன்தான், வேறு யாரைப்பற்றி பேசிக் கொண்டிருந்தோமென்று எண்ணுகிறாய்?

சோபை:—(ஆயாசமடைந்து) தாமோதரனைப் பற்றிப்பேசினாய்என்று நினைத்தேன். அவனையன்றி வேறு ஒருவரும்—

விதரணி:— நீ இப்பொழுது பெரிய ஆச்சரியத்தை உண்டு பண்ணிவிட்டாய். நீ காதலிக்கிறவன் தாமோதரனு? பிலவங்கனில் லையா?.

சோபை:— பிலவங்கனு? பிலவங்கன், பிலவங்கன், நீ என்னைப்பரிகாசம் செய்கிறாப்போலிருக்கிறது. நீ சொல்வது உண்மையானால் என்னைப்போல துர்ப்பாக்கியவதி வேறு ஒருவருமிருக்க மாட்டாள்.

விதரணி:— கொஞ்சநேரம் கண்ணினின்றும் தீப்பொறி பறக்கப்பார்த்துச் சும்மாயிருந்தாள். கடைசியில் தன் தொனியை ஒன்று சேர்த்து உரக்கக்கூவி அடியில் வருமாறு இடி முழக்கம் போல் பேசினாள். கள்ளப்பிள்ளையை மணந்து குலத்துக்கு ஈனம் வருவிக்கப்பார்க்கிறாயா? வத்ஸர் குலமென்ன! கோத்திரமென்ன? இப்படிப்பட்ட தகாத சம்பந்தத்திற்கு அவர் உட்படுவாரா? இந்தக்கொடூரமான இச்சையை அடக்க உனக்குப் புத்தியிராவிட்டாலும் இந்த வம்சத்தின் பெருமையாவது உன்னை இந்த இழி தொழிலிலிருந்து விலக்குமென்று எண்ணினேன். எனக்கு முன்னால் இந்த அவமானத்தைச்சொல்ல உனக்கு மனந்துணிந்ததே.

சோபை:—(நடுங்கிக்கொண்டு) அத்தை, என் அபிப்பிராயத்தை நீயாக என் வாயைக்கிளறித் தெரிந்துகொண்டாய். இதுவரையில் நான் தாமோதரனை வியந்துகூறினதில்லை. நீ அவனைப்பற்றித் தான் இவ்வளவு பெருமையாகக்கூறினாய் என்று நினைத்தேன். இல்லாவிட்டால் இவ்வளவு தூரம் நான் அவனைப்பற்றிச் சொல்லியிருக்கமாட்டேன். தாமோதரனைப்பற்றி என் மனத்திலிருக்கும் அபிப்பிராயத்தைச் சாகும் பரியந்தம் வேறு ஒருவரிடமும் சொல்வதில்லை என்று நினைத்திருந்தேன். உயிர்வாழ்க்கையிலிப்படி வியாகூல மடைவதைவிட இறந்தால் விசனமற்றிருப்பேன் என்று நம்புகிறேன் என்று சொல்லிக்கொண்டே ஆயாசம் தாங்கமுடியாது நாற்காலியில் சாய்ந்து கைகளால் முகத்தை மூடிக்கண்ணீர் பெருக்கி ஓ வென்று அலறி அழுதாள்.

இவள் நிலைமையைக் கண்ட கன்னெஞ்சரும் மனம் உருகுவார்கள். ஆனல் இவள் துயரத்திற் கெல்லாம் அவள் அத்தை கொஞ்சமேனும் அனுதாபம் காட்டவில்லை. ஆயினும் அவளுக்கு இன்னும் கோபமதிகமாகி "இப்படி இழிபிறப்பினனை மணந்து உன்னையும் உன் குடும்பத்தையும் அதோகதிக்குக் கொண்டுவருவதைப் பார்ப்பதிலும் உன்னுடன்கூட நானும் சாகத் தயாராகவிருக்கிறேன். இப்படிப்பட்ட அற்பனைக் காதலிக்கிறேன் என்று என் மருமகள்சொல்ல நான் அதைக்கேட்டு உயிர்தரித் திருக்கிறேனே! நமது குடும்பத்தில் நீதான் முதன்முதல் இவ்விதமான நேர்மையற்ற எண்ணத்தைக் கொண்டவள். நமது குடும்பத்தில் பிறந்த பெண்களெல்லாம் மிக்கமேதாவி என்று பெயர் பெற்றவர்கள்" என்று இவ்விதமாய்க் கால்மணி நேரம் மூச்சுவிடாது பேசிவிட்டு உடனே தன்தமயனிடம் சங்கதிகளைச் சொல்லிவிடுவ தாய்ப்புறப்பட்டாள்.

சோபை அவள் காலில் விழுந்து கைகளைப் பிடித்துக்கொண்டு கண்ணினின்று நீர் பெருகுதான் சொன்னதை வெளிப்படுத்தாம லிருக்கும்படிக்கும் தன் தகப்பனார் மூன் கோபக்காரராதலால் இச் சங்கதியைக் கேட்டு மனமுழல்வா ரென்றும் அவருக்குக் கோபம் வரும்படி தான் இனி எதுவும் சொல்வதில்லை என்றும் சொல்லிக் கெஞ்சினுள்.

விதரணி கொஞ்சநேரம் அவளை உற்றுப் பார்த்துவிட்டுக் கடைசியில் தான் சொல்வது ஒன்றைச் செய்வதாக ஒப்புக்கொண்டால் தன் தமயனிடம் சொல்லா திருப்பதாய் வாக்குக் கொடுத்தாள். அதாவது அன்று பகலைக்குப் பிலவங்கன்வந்தால் அவனுக்குத் தக்க உபசரணைசெய்து அவன் மனம் கோணுதிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதே.

சோபையோ அத்தை சொல்லியதை மறுக்கமுடியாதவளாயிருந்தாள். "என்னல் கூடியமட்டும்பிலவங்கனிடம் மரியாதையாக இருப்பேன், ஆனல் கலியாணத்தை அவசரப்பட்டு நடத்திவிடக் கூடாது. பிலவங்கன்மேல் எனக்குக் கொஞ்சங்கூட இஷ்டமில்லை. அவனுக்கு என்னை மணம் செய்வித்தால் எனக்குக் கொஞ்சமேனும் சுகம் ஏற்படாது. இதை எல்லாம் யோசித்து என் தகப்பனார் என்னைக் கஷ்டத்திற்கு உட்படுத்தாதிருக்கவேணும்" என்று சோபை பிரார்த்தித்தாள்.

விதரணி:— இந்த சம்பந்தம் முதலிலேயே நிச்சயமாகிவிட்டபடியால் அதை நிறுத்தமுடியாது. முதலில் இந்த விஷயத்தில் நான் அதிக அக்கரை எடுத்துக்கொள்ளவில்லை. ஆனல் இந்தவரன் உனக்கு இஷ்ட மூடையவனுயிருப்பான் என்று எண்ணி நான் சம்மதித்தேன். இப்பொழுது யோசித்துப்பார்த்தால் இதை

விட லோகோத்தரமான சம்பந்தமே கிடைக்காதபோ லிருக்கிற காதலின் எவ்வளவு சீக்கிரம் முடித்துவிடலாமோ அவ்வளவு சீக்கிரமாய் கடிமணத்தை முடித்துவிடவேண்டும்.

சோபை:— இறுதியில் கலியாணம் நிச்சயமான போதிலும் அதைத் தாமதித்துச்செய்வீர்கள் என்று நம்புகிறேன். இப்பொழுது எனக்குப் பிலவங்கன்மேல் கொஞ்சமேனும் இஷ்டங் கிடையாது. கொஞ்சம் தாமதித்தால் அவனிடம் பழகி அதனல் அவனை நேசிக்கக் கூடியதாயிருக்கலாம். அதற்கு எனக்கு அவகாசம் கொடுக்கவேண்டும்.

விதரணி:— உன்னுடைய மோசமெல்லாம் எனக்கு நன்றாகத்தெரியும். வேறு ஒருவன் மீது நீ பிரீதி வைத்திருப்பதால் இப்பொழுதே என் தமையனிடம் சென்று உடனே உன் விவாகத்தை நிறைவேற்ற ஏற்பாடுசெய்கிறேன். உனக்கு தாமோதரனிடமிருக்கும் காதல் கொஞ்ச நஞ்சமல்ல. நாங்கள் தாமோதரனுக்கு உன்னை விவாகம்செய்து கொடுக்காவிட்டால் உனக்கு அவன்மேலிருக்கும் பக்ஷத்தால் கள்ளத்தனமாக் அவனிடம் சேர்த்துவிடுவாய். அதற்குமுன் உன்னை விவாகம் செய்துவிட்டால் உன்னைக் காப்பது பிலவங்கன் பொறுப்பாகும். எங்கள் குடும்பத்திலிருக்கும் ஒரு பெரிய பாரமும் நிவர்த்தியாகும், சீரழிய விருக்கும் அனேக ஸ்திரீகள் கலியாணத்தினல் உத்தமிகளானதுமுண்டு.

சோபை தன் அத்தைக்கு ஒரு பதிலும் சொல்லவில்லை. ஆனல் பிலவங்கன் வந்தால் மரியாதையாக நடத்தமாத்திரம் எண்ணினுள். அப்படிச் செய்தால்தான் தான் கூறியதையெல்லாம் வெளியிடா திருப்பாள் என்று அவளுக்குத் தெரியும்.

5 அத்தியாயம்.

அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும்.

சோபை பிலவங்கனை மரியாதையாக நடத்துவதாய் வாக்குக் கொடுத்தபின் விதரணி அவளைவிட்டு அகன்றாள். உடனே அங்கே ஆண்டாள்வந்து நின்றாள். சம்பாஷணை நடந்தபோது இவள் அடுத்த அறையில் வேலைசெய்து கொண்டிருந்தாள். பேச்சுக் குரல் கேட்கவே கதவின் இடுக்கு வழியாய் இவர்கள் சம்பாஷணை முழுமையையும் கவனித்திருந்தாள். ஆண்டாள் அறைக்குள் நுழைந்ததும் சோபை கண்ணீருடன் அசைவற்று நிற்கக் கண்டு தன் கண்ணினின்றும் நீர் பெருக்கி "என் அருமைத் தாயே, என்ன விஷயம்" என்று விசாரித்தாள்.

சோபை:—ஒன்றுமில்லை, என்னைத் தொந்தரை செய்யாதே. சுவாமி, நான் ஏன் பெண்ணுப்பப் பிறந்தேன்—

ஆண்டாள்:— ஒன்றுமில்லாமலிப்படிப் புலம்புவீர்களா? நான் தங்கள் ஊழியக்காரிதானே. இருந்தும் உங்களிடம் உண்மையாகவும் பக்தமாகவும் தொழில் புரிகிறேன். என் உயிரைவிட்டாயினும் உங்கள் கவலையை மாற்றத் தயாராக விருக்கிறேன்.

சோபை:—என் அருமை ஆண்டாள், உன்னால் எனக்கு இப்பொழுது ஒருவித ஒத்தாசையும் செய்யமுடியாது. எனக்கு நேர்ந்த துயரம் யாராலும் நீக்கமுடியாது.

ஆண்டாள்:—தங்களுடைய துயரத்தை அயலாரிடம் சொல்லுதலே ஒரு ஆறுதலாயிருக்கும். சொன்னால் கூடியதை நான் தங்களுக்குச் செய்யத்தயாராக விருக்கிறேன். சங்கதியை என்னிடம் சொல்லுங்கள்.

சோபை:—நான் வெறுத்துப்பகைக்கும் ஒருவனுக்கு என் தகப்பனார் என்னைக் கலியாணம் செய்துகொடுக்கப் போகிறாராம்.

ஆண்டாள்:—இந்தத்துஷ்டன் யாரம்மா? அவன் துஷ்டனாயிருந்தாலொழியத் தாங்கள் அவனை வெறுக்கமாட்டீர்கள்.

சோபை:—அவன் பெயரை நாக்கால் உச்சரிப்பதே நஞ்சுண்பது போலிருக்கிறது. சீக்கிரம் அவன் பெயரை நீயே தெரிந்து கொள்வாய்.

ஆண்டாளுக்கு அவன் இன்னான் என்று ஏற்கெனவே தெரியுமாகையால் அதைப்பற்றி யதிகமாகத் தொந்தரவு செய்து கேட்கவில்லை.

ஆண்டாள்:—அம்மா! உங்களுக்கு நான் புத்தி சொல்லவரவில்லை. ஆனால் என்னிஷ்டத்திற்கு விரோதமாம் என்னை எப்படிப்பட்ட தகப்பனும் விவாகம் செய்து கொடுக்கப்படாது. உங்களிடத்தில் அவ்வளவு பிரியமாக விருக்கும் உங்கள் தந்தைக்கு இந்த வரனைத் தாங்கள் வெறுப்பதாகவும் பகைப்பதாகவும் தெரிந்தால் அவனை மணக்கும்படி சொல்லவேமாட்டார். தாங்கள் நேரே போய்ச் சொல்வதைவிட நான் தங்கள் தந்தையிடம் சொல்லும் படியாக உத்திரவு செய்தால் நன்றாக இருக்கும். தாங்களும் அவனுடைய கோரமான பெயரை உச்சரிக்கவேண்டியதுமில்லை.

சோபை:— நீ தெரியாமல் பேசுகிறாய் ஆண்டாள். என்னிடம் சொல்லாமலே என் தகப்பனார் நிச்சயம் செய்துவிட்டார்.

ஆண்டாள்:—இதென்ன வெட்கக்கேடு! தங்களுடைய தந்தைக்காக இவனை மணப்பதா? ஒருவன் எவ்வளவு மேன்மை

புடையவனையிருந்தாலும் ஒவ்வொரு ஸ்திரீயும் அப்படியே கருதுவாளா? தங்கள் தந்தை தானுக இப்படிச் செய்திருக்கமாட்டார். ஒவ்வொருவரும் தங்கள் காரியத்தைப் பார்த்துக்கொண்டால் உலகத்தில் காரியங்கள் சண்டையின்றி நடைபெறும். அயலார் காரியத்தில் தலையிட்டுக்கொள்வதினுல்தான் அசம்பாவிதங்கள் எல்லாம் உண்டாகின்றன. ஒருவர் ஒருபுருஷனை நல்லவர் என்று நினைத்தால் மற்றவர்களும் அப்படி நினைக்கவேண்டுமா? இது தாதியாகிய எனக்குக்கூடத் தெரிகிறதே. தங்கள் இஷ்டப்பட்டபுருஷனை மணக்காவிட்டால் தங்களுடைய ஏராளமான திரவியமெல்லாம் என்னபிரயோஜனமாகும்? நான் என்ன சொல்லவிருக்கிறது? சிலர் நற்குலத்திற்பிறவாதிருப்பதை நோக்கப் பரிதாபமாயிருக்கிறது. ஆனல் குலத்தில் என்ன விருக்கிறது? நான் குலத்தைப் பற்றிக் கவனிக்கவேமாட்டேன். செல்வமில்லையே என்கிறகுறைவுதான். செல்வமில்லாவிட்டால்தான் என்ன? இரண்டுபேர்க்குப் போதுமான திரவியம் தங்களிடமில்லையா? தங்களிடசெல்வத்தை வேறு எவ்விதமாகத்தான் நன்முக வினியோகம் செய்யமுடியும்? உண்மையில் அவரைப்பார்ப்பவரெல்லாம் அவரிலும் ரூபவானும் சாமர்த்தியவானும், உயர்ந்தவனும், மேலானகுணமுடையவனும், சூரதியானவனும், நேர்த்தியானவனும் இவ்வுலகத்திலேயேஇல்லை என்று சொல்வார்கள்.

சோபை:—இம்மாதிரி தங்குதடையின்றிப் பேசிக்கொண்டே போகிறுயே, என்ன அர்த்தம். இம்மாதிரியெல்லாம் மரியாதையின்றி என்னிடம் பேசும்படி நான் உனக்கு இடம் கொடுக்கவில்லையே.

ஆண்டாள்:—இல்லையம்மா, என்னை மன்னிக்கவேண்டும். நான் தப்பு ஒன்றும் சொல்லவில்லை. இன்றுகாலையில் அவரைப்பார்த்ததுமுதல் அவர்ஞாபகமே இருந்துகொண்டிருக்கிறது. தாங்கள் மாத்திரம் அவரைப்பார்த்திருந்தால் மிக்க அனுதாபம் காட்டியிருப்பீர்கள். ஐயோபரிதாபம்! அவருக்குத் தீங்கு ஒன்றும் நேரிடாமலிருக்கவேண்டுமே. கையைக்கட்டிக்கொண்டு மிருந்தகவலையோடும் இன்று காலையில் உலாவிக்கொண்டிருந்தார். அவரைப்பார்த்ததும் என்னை அறியாமலே எனக்கு அழுகைவந்துவிட்டது.

சோபை:—யாரைப்பார்த்ததும்?

ஆண்:—அதிர்ஷ்டமற்ற தாமோதரரைத்தான்.

சோபை:—பார்த்தாயா? அவரை எங்கேபார்த்தாய்?

ஆண்:—கால்வாய்ண்டைதான் அம்மா. இன்று காலைமுழுதும் அங்கேதான் சுற்றிக்கொண்டிருந்தார். கடைசியில் அங்கேயே உட்கார்ந்துவிட்டார். இன்னும் அங்குதான் உட்கார்ந்திருப்பார். நான் தாதியாக இராவிட்டால் அவரிடம்போய்ப்பேசியே இருப்

பேன். இன்னும் அங்குதானிருக்கிறாரோ என்று பார்த்துவருகி றேனம்மா.

சோபை:—"பூ, அங்கேயா இருப்பான்? இருக்கமாட்டான், அங்கு என்னசெய்வான்? மூன்னமேயே அவ்விடம்விட்டுப்போ யிருப்பான். அன்றியும் நீ எதற்காக அவனைத்தேடிப்போய்ப் பார்க்க வேண்டும்? எனக்குக் கொஞ்சம் வேலைசெய்யவேண்டும். காரி யத்தைப்போய்ச்செய். நான் அத்தையோடு கொஞ்சம் தோட் டத்தில் உலாவப்போகிறேன்" என்று சொல்லிவிட்டு நிலக்கண் ணாடியில் தன் உருவத்தைப் பார்த்துக்கொண்டாள். அப்பொழுது தாவணி ஓரிடத்தில் கறைபட்டிருப்பதைகண்டு அதையெடுத்து எறிந்துவிட்டு வேறு நல்லதாவணி ஒன்றை அணிந்துகொண்டு ஆண்டாளிடம்போய் அவள் வேலையைவிட்டு அகலவேகூடாது என்றும் அன்றுபொழுதுக்குள் வேலையை முடித்துத்தரவேண்டு மென்றும் ஆஞ்ஞாபித்துவிட்டு அத்தையுடன் தோப்புக்குள்செல் வதாய்ச் சொல்லிக்கொண்டே மாறுவழியாக வெகுவேகமாய் நட ந்து கால்வாயண்டை வந்துசேர்த்தாள்.

ஆண்டாள் சொன்னபடியே அந்தக்காலைமுழுவதும் தாமோ தரன் அங்கேதான் இருந்தான். வியாகூலத்துடன் சோபையை மனத்தில் எண்ணிக்கொண்டே இரண்டுமணிநேரம் கால்வாய்க் கரையில் உட்கார்ந்திருந்தான். சோபை ஒருவழியாக வந்தசமயத் தில்தான் அவன் வேறுவழியாக எழுந்து சென்றான். ஒரு தாவ ணியைக் கழைந்து வேறுதாவணி அணிந்தசமயமே இருகாதலரை யும் காணவொட்டாது செய்தது. இதைப்படிக்கும் ஸ்திரீகளுக் குத்தான் இந்த ஏமாற்றத்தின் நுட்பம்தெரியும்.

6. அத்தியாயம்.

அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்தலரிது.

சோபைக்குநேரிட்ட ஏமாற்றம் போதாதென்று அன்றுபக லில் நல்லுடை உடுத்தி தான் வெறுக்கும் புருஷனை வரவேற்கும் படியாக நேரிட்டது. அன்றுதான் வத்ஸர் தன் எண்ணத்தைத் தன் மகளிடம் தெரிவித்தார். சோபை இதைக்கேட்டதும் கொஞ் சநேரம் மௌனமாயிருந்து கண்ணிலிருந்து பலபலவென்று நீரை உதித்தாள்.

வத்ஸர்:—"குழந்தாய் எதற்காக வெட்கப்படுகிறாய்? என க்கு எல்லாம் தெரியும். உன் அத்தை எல்லாம் என்னிடம் தெரி வித்திருக்கிறாள்."

சோபை:—ஆனால் முன்னாலேயே என் அத்தை என்னைக் காட்டிக்கொடுத்துவிட்டாளா?

வத்ஸர் :—காட்டிக்கொடுக்கவாவது? நேற்று நீ சாப்பிடும் போது நீயே உன்னைக்காட்டிக் கொடுத்துவிட்டாயே. உன் எண்ணத்தைத்தான் நன்றாகத் தெரிவித்துவிட்டாயே. சிறுபெண்களாகிய உங்களுக்கு உங்கள் எண்ணம் இன்னதென்று தெரியாது. ஆகையால்தான் நீ காதலிக்கும்புருஷனுக்கே உன்னை மணம் செய்விக்கிறேன் என்றால் நீ அழுகிறாய். இப்படித்தான் உன் அன்னை என்னை மணக்கும்போது அழுதும் கூனத்தும் முணுகியும் பார்த்தாள். ஆனால் கலியாணமான 24 மணிநேரத்திற்குள் எல்லாம் பறந்து போய்விட்டது. பிலவங்கன் சுருசுறுப்புள்ள யௌவனபுருஷன், நல்லசாமர்த்தியசாலி. உன் அழுகையை எல்லாம் சிக்கிரத்தில் மாற்றிவிடுவான். ஒவ்வொருநிமிஷமும் பிலவங்கனை எதிர் பார்க்கிறேன். ஆகையால் சந்தோஷமாயிரு.

சோபைக்கு இப்பொழுதுதான் தன் அத்தை தன்னை இன்னும் காட்டிக்கொடுக்கவில்லை என்று தெரிந்தது. அன்றுபகலை எப்படியாவதுபிலவங்கனுடன் சங்கித்துக்கொண்டு கழித்துவிடுவதென்றும் தகப்பனுருக்குக் கொஞ்சமேனும் சந்தேகம்தோன்றுதபடி நடந்துகொள்வதென்றும் தீர்மானித்தாள்.

கொஞ்சநேரத்திற்கெல்லாம் பிலவங்கனும் வந்துசேர்ந்தான். இருவரையும் தனியாக விட்டுவிட்டு வத்ஸர் வெளியில்போய் விட்டார்.

காலமணிநேரமிருவரும் மௌனமாயிருந்தார்கள். சம்பாஷணையை ஆரம்பிக்கவேண்டியது பிலவங்கனுடைய கடமை. ஆனால் அவன் மிக்க நாணமடைந்து அடக்கமாயிருந்தான். பல தடவை அவன் பேச ஆரம்பித்துப் பேசுந்தருவாயில் வார்த்தையை அடக்கிக்கொண்டான். கடைசியாக மிகவும் பெருமையாகவும் ஸ்துதிக்கியமாகவும் சோபையைப்பற்றிப் புகழ்ந்தான். அவளோ கீழ்நோக்கிப்பார்த்தும், தலைகுனிந்தும் பத்துக்கு ஒருவார்த்தையாகப் பேசிவந்தாள். பிலவங்கனுக்கு ஸ்திரீகளைப்பற்றி ஒன்றுமே தெரியாதாதலால் தன் அறியாமையால் சோபை தன்னைக் கணவனாக வரிக்கிறாள் என்று எண்ணினான். அவள் அங்கு அதிகநேரம் நில்லாது அவ்வறையை விட்டு வெளிப்பட்டதும், பெண்களுக்கியற்கையான லச்சையினாலும், அடக்கத்தினாலும் அப்படிச்செய்தாள் என்று எண்ணினான். அன்றி மற்றபடி சந்திக்குங்கால் தன்னிடம் காலப்போக்கு அதிகம் நிகழ்த்துவாள் என்றும் நினைத்தான்.

பிலவங்கன்தான் வந்த காரியம் ஜயமாகிவிட்டதாக நினைத்துவிட்டான். கவிகள் வர்ணிக்கிற உண்மைக்காதல் என்பதே இவனுக்கு இன்னதென்று தெரியாதிருந்தது. அவன் சோபையின் செல்வம் தனக்கு அகப்பட்டால் போதுமென்று கருதினவன்.

வத்ஸர் இந்த விவாகத்தைமுடிப்பதில் கருத்தாயிருந்ததாலும்தன் தகப்பனார் கருத்துக்குச் சோபை மாறுசொல்லாதவளாதலாலும் தன்னிஷ்டம் நிறைவேறிவிடு மென்று நிச்சயித்து விட்டான். இத்துடன் தனது மேலான ரூபமும், சாமார்த்தியமுள்ள சம்பாஷணையும், மனக்குறையற்ற எவ்வகைய சிறுமையையும் வசிகரித்து விடுமென்றும் நம்பினான்.

பிலவங்கன் சோபை நிமித்தமாய்த் தாமோதரன் மீது கொஞ்சமேனும் அசூயை கொள்ளவில்லை. அந்த தேசத்தில் பெரும் போக்கிரி என்று தாமோதரன் பேரெடுத் திருந்தான். அதனால் அடக்கமுள்ள ஸ்திரீ எவளும் வெறுப்பாள் என்று அவனுக்குத் தெரியும். பலர் மத்தியில் தாமோதரனும் சோபையும் நடந்து கொள்ளும் பொதுத் தோற்றத்தால் யாருக்கும் இஞ்சிற்றும் சந்தேக மூண்டாகாமலிருந்தது. அதனால் தாமோதரன் காதலிக்கும் விஷயம் பிலவங்கனுக்கே தெரியாது. மல்லிகையின் சமாசாரமே ஊரெங்கும் பரவியிருந்ததன்றித் தாமோதரன் அவளைக் கலியாணம் செய்துகொள்ளக் கூடும் என்றும் நினைத்தான். பிலவங்கனைப் பாலியமுதல் தாமோதரன் நேசித்து வந்தான். பிலவங்கனுக்குத் தெரியாத ரகஸியம் தாமோதரனிட மில்லை. ஆனவந்தார் வியாதியாக இருந்தபோது பிலவங்கன் நடந்துகொண்ட சங்கதி தாமோதரன் மனத்தைப் புண்படுத்தியது. அச்சமயத்தில் நேரிட்ட வாக்குவாதம் அப்போதும் நீங்கவில்லை. தாமோதரன் மல்லிகையிடம் முன்னுல் கொண்டிருந்த அன்பு பலகாரணம் பற்றி மாறிய விஷயம் பிலவங்கனுக்குத் தெரியாமலிருந்தது. இக்காரணங்களால் தான் பிலவங்கன் சோபையை அடைவதற்கு ஆக்ஷேபம் ஒன்றுமில்லையென்று கருதினான். மற்ற சிறுமிகள் எல்லாம் தங்கள காதலரை முதல் காணும்போது சோபை செய்தது போல்தான் நடந்துகொள்வார்கள் என்று எண்ணிக்கொண்டான்.

பிலவங்கன் சோபையைக் கண்டுவிட்டு வெளியே வரும்போது அவனிடம் சமாசாரமறியும் பொருட்டு வத்ஸர் அங்கே காத்துக் கொண்டிருந்தார். பிலவங்கன் தான் அடைந்த ஜயத்தையும், சோபையினுடைய வனப்பையும், அவள் தன்னை ஏதிரேற்ற தன்மையையும், புகழ்ந்து உரைத்தான். இதைக் கேட்ட வத்ஸருக்கு அடக்க முடியாத ஆனந்தம் உண்டாயிற்று. அவ்விருத்தர் ஓடி ஆடிக் குதூகுலித்தார். பிலவங்கனைத் தழுவிப் பலதடவை முத்தமிட்டார்.

பிலவங்கன் போனதும் வத்ஸர் தன்மகளிருக்குமிடம்போய் அவளைப் பலவிதமாய் மெச்சினர். அவளுக்கு வேண்டிய வஸ்திராபரணங்கள் புதிதாக வாங்கிக்கொள்ளும்படி உத்திரவு கொடுத்தார். தன் செல்வமெல்லாம் அவள் சந்தோஷத்திற்காகவே இருப்பதாய்ச் சொல்லி அவளை மிக்க ஆர்வத்துடன் பலதடவையும்

தழுவி முத்தமிட்டுப் பல செல்வப் பெயர்களால் அழைத்தார். தன்னை மகிழ்விருக்கும் வஸ்து அவளிடமேலானது வேறு ஒன்றுமில்லை என்றுஞ் சொல்லி முடித்தார்.

தன்னிடம் தன் தந்தை சாதாரணமாய் மிகுந்த பக்ஷமாயிருந்த போதிலும் அன்று அதிக விசுவாசமா யிருப்பதை அறிந்து சோபை அப்பக்ஷத்தின் காரணமறிந்திலள். தன் அந்தரங்க இஷ்டத்தைத் தன் தகப்பனுருக்குத்தெரிவிக்க அதுவே சமயமென்று கருதினள். பின்னர்மேலே போகப்போக சகலமும் வெளிப்படுத்தலாம் என்றும் எண்ணினள். தன் தகப்பன் தன்னிட மிருக்கும் பக்ஷத்திற்கு அவருக்கு வந்தனமளித்து மிக்க இனிமையுடன் "அப்பா, நான் சந்தோஷமாக இருந்தால்தானே தங்களுக்கும் சந்தோஷ முண்டாகும்" என்றாள்.

வத்ஸர்:—(அவளை முத்தமிட்டு) அதுதான் வாஸ்தவம்.

சோபை:—தந்தையின் கையைப் பிடித்துக்கொண்டு வணங்கி தனக்கு அவர்மேலிருக்கும் பிரியத்தைத் தெரிவித்துக் கடைசியில் "நான் வெறுக்கும் ஒருவனை மணக்கச்செய்து அதனால் என்னை மகா துன்பத்திற்கு உள்ளாக்காதிருக்க வேண்டுகிறேன். நான் சந்தோஷமடைந்தால்தான் தங்களுக்கும் சந்தோஷம் உண்டென்ற படியால் என் சௌகரியத்திற்காகவும் தங்கள் மனச் சந்துஷ்டிக்காகவும் இதைச் சொல்லுகிறேன்" என்றாள்.

வத்ஸர்:—திடுக்கிட்டு "என்ன, எப்படி" என்றார்.

சோபை:—என் அருமைத் தந்தாய்! தங்களுடைய மறுமொழியிலிருந்து நான் சந்தோஷமா யிருப்பதும் உயிர்வாழ்வதும் தெரியும். என்னால் பிலவங்களோடு சேர்ந்திருக்க முடியாது. அவருக்கு என்னை மணம்புரிவிப்பது என்னைக் கொல்வதற்குச் சமானம்.

வத்ஸர்:—நீ பிலவங்களோடு சேர்ந்திருக்க மாட்டாயா?

சோபை:—"முடியவே முடியாது."

வத்ஸர்:—(சோபையைதூரத்தள்ளிவிட்டு) ஆனால் செத்துச் சுடுகாடாகப்போ.

சோபை:-(அவரது அங்கியைப் பிடித்துக்கொண்டு) "அப்பா என்மேல் தயவு புரியுங்கள். நான் கெஞ்சுகிறேன், அப்படிக்கோபமாய் என்னைப் பாராதேயுங்கள். இந்த கொடுமை வார்த்தைகளைக் சொல்லாதேயுங்கள். தங்களுடைய சோபையை இந்த நிலைமையில்பார்க்கத் தங்களுக்கு மனமிரங்கவில்லையா? எல்லோரும்தந்தை தாங்களும் தந்தையா? இப்படி எனக்குத் துயரம் விளைவிக்கலாமா? தாங்களிப்படி மிக்க கடினமான சித்திரவதை செய்து என்னை விலை பொருளின் தன்மையில் வைத்துக் கடைசியில் சாக வைக்கலாமா?

வத்ஸர்:—சீச்சீ, உன் மாயமாலத்தையும் சூதும் வாதையும் என்னிடம் காண்பிக்காதே. உன்னைக் கொல்லவாவது ! எங்காயினும் மங்கலம் அமங்கலத்தை விலக்குமா ?

சோபை:—இக்கலியாணத்தைவிடக் கொல்வதேமேல். உண்மையில் நான் அவனை வெறுத்துப் பகைக்கிறேன்.

வத்ஸர்:—அவனை எவ்வளவுக்கு எவ்வளவு பகைக்கிறாயோ அவ்வளவுக் கவ்வளவு அவனுடன் சேரப் போகிறாய். இந்த விவாகத்தை நான் நிச்சயித்து விட்டேன். நீ இதற்கு ஒத்துக்கொண்டாலொழிய உனக்கு ஒருகாசும் கொடுக்கப்போகிறதில்லை. வயிற்றுக் கில்லாது வீதியில் இரக்கக்கண்டாலும் அப்பொழுதும் நான் உனக்கு ஒருகவள மன்னமுங் கொடுக்கப் போகிறதில்லை. இது சத்தியம். ஆதலால் நிதானித்துப் பதில் சொல்லு" என்று மிக்க கடூரத்துடன்பேசி வெகு மூர்க்கத்துடன் அவளிடத்தினின்றும் விடுவித்துக் கொண்டு அவ்வறையைவிட்டு வெளிச்சென்றார்.

விடுபட்ட வேகத்தால் சோபை தரையில் விழுந்தாள். முகத்திலடிபட்டது. அதையும் கவனியாமல் வத்ஸர் வெளியேபோய் விட்டார்.

தாழ்வாரத்தில் தாமோதரன் உட்கார்ந்து கொண்டிருந்தான். வத்ஸர் வெகு கோபத்துடனும், வேகத்துடனும், முகம் வெளுத்து வருவதைக்கண்டு, அவன் அவரை "சங்கதி என்ன"வென்று விசாரித்தான். அதன்மேல் வத்ஸர் நடந்த சவிஸ்தாரத்தைச் சொல்லி சோபையைப் பலவிதமாக நொந்துகொண்டு கடைசியில் இப்படிப்பட்ட பெண்களால் பெற்றோருக்கு உண்டாகும் துயரத்தைப்பற்றி விவரித்தார்.

பிலவங்கனுக்குச் சோபையை மணம் செய்யவிருக்கும் விஷயம் ஒன்றுமே இதுவரையில் தாமோதரனுக்குத் தெரியாதாகையால், வத்ஸர் சொன்னதைக் கேட்டதும் நிப்பிரமை கொண்டான். பிறகு தான் சோபை யிடம்போய்த் தகப்பனு ரிஷ்டப்படி நடந்துகொள்ளப் புத்திமதி சொல்லவதாயும் அதற்குத் தனக்கு அனுமதி கொடுக்கும் படிக்கும் வத்ஸரைத் தாமோதரன் கேட்டான். வத்ஸர் தாமோதரனுக்கு வந்தனமளித்து" உன்னுல் கூடிய வரையில் சொல்லிப்பார். அதற்கும் சம்மதியாவிட்டால் அவளை வீட்டைவிட்டு வெளியில் துரத்துவதாய் நிச்சயித்து விட்டேன்" என்று சொன்னர்.

7. அத்தியாயம்.

அன்பினு மார்வ முடைமை யதனினு
நண்மென்னு நாடச் சிறப்பு.

தாமோதரன் சோபையைத் தேடிவரும்போது அவள் கண்ணில் நீர்பெருக உதட்டில் இரத்தம் வழிய விழுந்த இடத்தினின்றும் எழுந்திருக்கக் கண்டான். உடனே அவளிருக்குமிடம் ஓடி மிக்க திகிலோடும் கருணையோடும் "எனது சோபை! நீ ஏனிப்படி அலங்கோலமா யிருக்கிறாய்" என்று கூவினான். சோபை பதில் சொல்வதற்குமுன் கொஞ்சநேரம் மிகுந்த பிரியத்துடன் அவனைப்பார்த்து "தாமு! எப்படி நீ இங்கேவந்தாய்? இப்பொழுதே இதைவிட்டு வெளியேபோ" என்று கெஞ்சினாள்.

தாமோதரன்:—"ஏனிப்படி எனக்குக் கொடூரமான கட்டளை இடுகிறாய்? உன்னுடைய உதட்டு ரத்தப் பெருக்கினும் என் இருதயத்தின் ரத்தம் அதிகமாகக் கொதிக்கிறது. உன்னுடைய ரத்தத்தில் ஒரு துளி வெளிவராதிருக்க என் தேகத்தின் ரத்த மனைத்தையும் சிந்தத் தயாராக இருக்கிறேனே.

சோபை:—"ஏற்கெனவே நீ செய்திருக்கும் உபகாரங்களுக்கு நான் பிரதிசெய்ய சக்தியற்றவளா யிருக்கிறேன். தாமு நீ எதற்காக என் உயிரைக் காப்பாற்றினாய்? நானிறந்திருந்தால் நம் மிருவருக்கும் நன்மையாக விருக்கும்."

தாமோ:—"ஆம், நம் மிருவருக்கும் நன்மைதான். மூள்ளுப் பிப்பாயிலாவது, கழுமரத்திலாவது இருந்து நான் துன்பப் படுவதாயினும் அது உனது கொடூர வார்த்தையைப்போல் அவ்வளவு துன்பம் எனக்குக் கொடுக்காது" என்று மிகுந்த கிருபையோடே அவள் முக நோக்கிச் சொல்லி அதே சமயத்தில் அவள் கையைப் பிடித்துக்கொண்டான். அந்தக்கையை அவள் இழுத்துக் கொள்ளவில்லை. தான் செய்வதே ஒன்றும் அவளுக்குத் தெரியாதிருந்தது. கொஞ்சநேர மிருவரும் சும்மா யிருந்தார்கள். தாமோதரன் சோபையின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். திரும்பவும் சோபை மனதை திடங்கொண்டு நாம் "இருவரும் ஒன்றாக இருப்பதை யாரேனும் பார்த்தால் நமக்கு நாசமுண்டாகும். இன்று பகல் நடந்த விஷயம் உனக்கு ஒன்றும் தெரியாதால் இந்தமாதரி பேசுகிறாய். உடனே அறையைவிட்டு வெளியே போவது உத்தமம்" என்று வற்புறுத்தினாள்.

தாமோதரன்:—எனக்கு எல்லாம் தெரியும். சோபை உனது கருணையற்ற தந்தை என்னிடம் எல்லாம் சொன்னார். அவர் தான் என்னை இங்கே அனுப்பி இருக்கிறார்.

சோபை:—என் தகப்பனாராவது உன்னை இக்கே அனுப்பவாவது? உண்மையாக நீ கனவு காண்கிறாப்போலிருக்கிறது.

தாமோ:—கனவா யிருந்தால்தான் நல்லதாயிற்றே. எனது பகைவனுக்காகப் பரிந்துபேசி அவனை நீ மணக்கச் சம்மதிக்கச் செய்யும்படி என்னை உன்னிடம் அனுப்பினார். எப்படியாவது

உன்னைப் பார்க்கலாமே யென்று ஒப்புக்கொண்டு வந்தேன். உனது வாத்தையால் கொதிக்கிற என் இருதயத்தைத் தணியச் செய். என்னைப்போல் ஒருவரும் காதலின் பெருமையை அறிந் திருக்கமாட்டார். நீயேகதி என்று எண்ணி யிருக்கவுமாட்டார். இந்த அருமையான மெல்லிய அழகிய கையை எதற்காக என்னி டமிருந்து இழுத்துக் கொள்ளுகிறாய்?

சோபை:—வெட்கத்தால் கலவரமடைந்து பூமியின்றும் முகத்தை நிமிர்த்து தாமோதரனைப் பார்த்து நான் இப்பொழுது என்னசொல்ல வேணுமென்கிறாய்?

தாமோ:—நீ பிலவங்கனை மணக்கச் சம்மதிக்கிற தில்லையென்று எனக்கு வாக்குக்கொடு.

சோபை:—அந்த வெறுக்கத்தக்க பெயரை என்னிடம் சொல் லாதே. என்னால் எது கூடுமோ அதை அவன் அடையவிடா மாட் டேன் என்பதை நம்பு.

தாமோ:—இப்பொழுது இவ்வளவு பிரியமாயிருக்கிற உன்னை நான் அடைய வெண்ணலாம் என்று கூறு.

சோபை:—ஐயோதாமு, நான் என்ன சொல்லக்கூடும். என் தந்தை இஷ்டம் உனக்குத் தெரியுமே.

தாமோ:—இருந்தும் அவரிஷ்டப்படியே நீ நடக்கவேணு மென்று உன்னை நிர்ப்பந்திக்கமாட்டார்.

சோபை:—நான் கீழ்ப்படியாவிட்டால் அதனால் உண்டா கும் அநர்த்தம் இன்னது என்று உனக்குத் தெரியாததோ லிருக் கிறது. என் கஷ்டத்தைப்பற்றி எனக்கு யோசனையே இல்லை. ஆனால் என் தந்தை துயர மடைவாரே என்கிற எண்ணம் என்னைப் பாதிக்கிறது.

தாமோ:—அவர் தகாதவிதமாய் உன்மேல் அதிகாரம் செலு த்தினால் அவர் துயரத்திற்கு அவர்தானே காரணமாவார். உன்னை இழப்பதால் எனக்குண்டாகும் வருத்தம் இப்படிப்பட்டதென்று யோசித்துப்பார். அப்பொழுது உனது அனுதாபம் எந்தப் பக்க த்திற் செல்லும்.

சோபை:—இதைப்பற்றி யோசிக்க வேண்டுமா? உன்னிஷ் டப்படி நான் நடந்துவிட்டால் அதனால் உனக்கு நான் இழைக் கும் தீங்கு இத்தன்மைத்து என்று தெரியாதா? அந்த ஒரு எண் ணந்தான் உன்னை இவ்விடம்விட்டு உடனே ஓடிப் போகுமபடியா கவும் அதனால் உனக்கு விளையவிருக்கும் தீங்கை விலக்கிக் கொள் ளும்படியாகவும் சொல்லச் செய்கிறது. உன்னை இழப்பதினும் தீங்கு வேறு எதுவும் எனக்குத் தெரியாது. எனக்குத் தீங்கிழைக் காமலிருக்கவேண்டு மென்பது உன் விருப்பமானால் இப்பொ

மூது நீ சொன்ன வார்த்தையை மாற்று. உன்னிட மிருந்து என் னால் பிரிந்திருக்க எப்பொழுதும் முடியாது.

காதலிருவரும் தேகமெல்லாம் மௌனமாய் நடுங்க நின்று கொண்டிருந்தார்கள். சோபைக்குத் தாமோதரன் பற்றிக்கொண்ட கையை இழுத்துக் கொள்ள முடியவில்லை. தாமோதரனும் அதைப் பிடித்துக் கொண்டிருக்க முடியவில்லை. அந்த சமயத்தில் ஒரு தடையுண்டாகி இவர்களுடைய நிலைமையைக் கலைத்து விட்டது.

8. அத்தியாயம்.

இனமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு
மேமப் புணையைச் சுடும்.

நமது காதலர்களுக்கு நேர்ந்த தடையைச் சொல்வதற்கு மூன் தாழ்வாரத்தில் என்ன நிகழ்ந்த தென்பதை நிதானிப்போம். வத்ஸரிடம் உத்திரவு பெற்று தாமோதரன் சோபையை நாடிச் சென்றதும் அங்கு வத்ஸரது சகோதரிவந்து தோன்றினாள். அவளிடம் வத்ஸர் பிலவங்களைப் பற்றி தனக்கும் சோபைக்கும் நடந்த விவாதங்களைக் கூறினர். இவ்விதமாய்ச் சோபை பேசியது தன்னிடம் கொடுத்திருந்த வாக்குக்குமாறென்று எண்ணி அதனால் தானும் அவளுக்குக் கொடுத்திருந்த வாக்குறுதியை மாற்றலாம் என்று மதித்து சோபைக்கு தாமோதரனிட மிருக்கும் காதலை விதரணி வெளிப்படுத்தி விட்டாள்.

இதுவரையில் தாமோதரனைத் தன் மருமகனைக் கொள்ளும் எண்ணம் வத்ஸர் மனத்தில் உதிக்கவே இல்லை. செல்வத்தினும் குலத்தினு மிருக்கும் ஏற்றத் தாழ்வே இவ் விவாகத்திற்கு ஒரு பெருந்தடை யென்றெண்ணி இக் காரணங்களால் தன்மகள் தாமோதரனிடம் காதலைச் செலுத்தவே மாட்டாள் என்று அவா எண்ணியிருந்தார். ஆதலால் தன் சகோதரி சொல்லியதைக் கேட்டதும் இடி விழுந்தவன்போ லானர். அவருக் குண்டாகிய ஆச்சரியத்தால் சுவாசம் விடவும் முடியாது போனதால் பதில் ஒன்றும் சொல்லவியலாது தயங்கினர். உடனே இடத்தைவிட்டு எழுந்து வாயில்வந்தபடி யெல்லாம் தூற்றிக் கொண்டே சோபையிருந்த அறைக்குள் வெகுவேகமாய் ஓடினர்.

தன்தகப்பனர் தாமோதரனைத் துவம்ஸம் செய்துவிடுவதாக மகா உக்கிரத்தோடு ஆணையிட்டுக்கொண்டு வருகிறசப்தத்தைக் கேட்ட சோபை திகிற்பட்டுத் துடித்தாள். தாமோதரனும் சோபைக்கு உண்டாகும் திகிலை யோசித்து அதற்குத் தக்கபடி நடந்தால் வேறிடம் போய் மறைந்துகொண்டிருப்பான். ஆனால்

சோபையின் மீதிருந்தகாதலால் அவளுக்குண்டாகும் துன்பத்தைத் தானுமனுபவிப்பதாக நிச்சயித்துத் தாமோதரன் அங்கேயே இருந்தான்.

வத்ஸர் வெகு மூர்க்கத்துடன் கதவைத் தடால் என்று மோதித்திறந்துகொண்டு வந்ததும் தாமோதரன் மேலிருந்தகோபமெல்லாம் செலுத்துவதற்கின்றி வேறு ஒருவிஷயம் நிகழ்ந்திருக்கக்கண்டார். சோபை மிக்க பரிதாபநிலையில் மூர்ச்சையாகி தாமோதரன்மேல் சாய்ந்திருந்தாள். இந்த அபாய நிலையை வத்ஸர் கண்டதும் அவரது கோபமெல்லாம் பறந்துபோய் மனத்தில் பயமூண்டாகிக் கூடியமட்டும் உரக்க ஓத்தாசைக்காகக் கூவினர். தண்ணீர்கொண்டு வரும்படி கத்திக்கொண்டு கதவண்டை ஓடியும் திரும்பச் சோபையிடம் வந்தும் அலைபாய்ந்து கொண்டிருந்தார். அந்த சமயத்தில் அவருக்குத் தன்மகள் தாமோதரன்மேல் சாய்ந்திருக்கிறாள் என்றுவது உலகத்தில் தாமோதரன் என்று ஒருபுருஷனிருக்கிறான் என்றுவது தோன்றவில்லை அவர்மனத்தில் அப்பொழுது தன்மகளுடைய அபாயநிலையின் எண்ணம் தவிர வேறு ஒன்றுமில்லை. வத்ஸருடைய சகோதரியும் பலவேலைக்காரிகளும் ஜலத்தையும் பல மருந்துகளையும் எடுத்துக்கொண்டு ஓடிவந்து வேண்டிய உபசரணைகள் செய்து சோபையின் மூர்ச்சையை தெளிவித்தார்கள். உடனே சோபையை அத்தையும் மற்றொரு தாதியும் அழைத்துச் சென்றார்கள்.

தன்மகள் அபாயம் நீங்கியதைக்கண்டதும் வத்ஸருக்கு மறுபடியும் தாமோதரன்மேல் பிரமாதகோபம் உண்டாகிவிட்டது. நிக்கபலசாலியாகிய சபலர் இடையில் புகுந்து தடுத்திராவிட்டால் அவ்விடத்திலேயே பெருத்த ரணகளமுண்டாகியிருக்கும். சபலர் வத்ஸரைக் கட்டிப்பிடித்துக்கொண்டிருக்கும்போது தாமோதரன் வத்ஸருக்குமுன் சென்று கோபம் தணியும்படியாகவேண்டினன். வத்ஸர் வாயில் வந்தபடியெல்லாம் இழிவாக தாமோதரனை நிந்தித்தார். (நாட்டுப்புறத்திலிருந்தவர்களுக்கு வசைமொழிகளின் கோவை நன்றாகத்தெரியும். ஆதலால் அக்கோவையை நமது வாசகர்கள் அவர்களிடமிருந்து கேட்கலாம்).

இவ்வசை மொழிகளையெல்லாம் பொறுமையுடன் தாமோதரன்கேட்டுக் கடைசியில் "ஐயா நீர் இதுவரையில் எனக்குச்செய்திருக்கும் நன்மையெல்லாம் இப்போழ்து நடத்தும் விதத்தால் இல்லாதாகிவிட்டது. இனி உமது நிந்தனைமொழிகளைப் பொறுக்கமாட்டேன். ஆயினும் சோபைக்குத் தந்தையாக இருப்பதால் நீர் சொல்லுதையெல்லாம் அவளுக்காகப் பொறுத்துக் கொள்ளுகிறேன்" என்றான். இதைக்கேட்ட வத்ஸருக்கு இன்னும் அதிக கோபமுண்டாகிவிட்டது. சபலர் தாமோதரனைப் பார்த்து "ஐயா

நீர் இங்கிருப்பதால் இவருக்குர் கோபம் அதிகரிக்கிறது. நீர் தாமதிக்காமல் வெளியே போய்விடுவது நலம். இவருடன் பேசுவதற்கு இது சமயமல்ல. நீர் சொல்லவேண்டிய விஷயங்களை வேறுசமயம் சொல்லிக் கொள்ளும். நீர் இப்பொழுது போய்வாரும்'' என்றார். தாமோதரன் அவர் சொல்வது சரிதான் என்று அவருக்கு வந்தனமளித்து உடனே புரப்பட்டுப் போய்விட்டான். வத்சருடைய கைகளும் இப்பொழுது விடுபட்டன. கைகள் பிடிபட்டிருந்ததில் அவருக்கும் கொஞ்சம் சந்தோஷமே. ஏனெனில் பிடிபடாதிருக்கில் தாமோதரன் மண்டையுஷ்ய உடைத்துவிட்டிருப்பதாகவும் அதினால் நியாயஸ்தலம்போய் அவஸ்தைப் படவேண்டிவருமென்றும் சொன்னார்.

தான் சமாதானம் செய்ததில் வெற்றி பெற்றதற்குச் சபலர் சந்தோஷமடைந்து கோபத்தையும் அதினால் வரும் தீங்குகளையும் பற்றி ஒரு உபன்னியாசம் செய்தார். இம்மாதான்றையும் வத்ஸர் கவனியாது மறுநாட் காலையில் எழுந்ததும் புறப்பட்டு ஆளவந்தாரிடம் போய்த் தாமோதரன் நடத்தையைப்பற்றி முறையிடுவதாகச் சொன்னார். இதை சபலர் எவ்வளவு தடுத்தும் பயனில்லாது போயிற்று.

9. அத்தியாயம்.

அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்
வழுக்கியும் கேடுன் பது.

ஆளவந்தாருக்கு வத்ஸருடைய செல்வத்தைப் பார்க்கிலும் சோபையினுடைய குணத்தில் அதிகபற்றுண்டு. பிலவங்கள்வந்து தான் சோபையை விவாகத்திற்குச் சம்மதிக்கச் செய்து விட்ட தாய்ச் சொன்னதும் அவர்மிக்க திருப்தியடைந்தார். அதனுடன் காலை உண்டிமுடித்து எழுந்ததும் வத்ஸர் தடபுடலாக ஓடிவந்து ஆளவந்தாரை நோக்கி அடியில் வருமாறு சொன்னார்: ''நீர் நல்ல வேலை செய்தீர். கள்ளப் பிள்ளையை எடுத்து நன்றாக வளர்த்து விட்டீர். உம்முடைய பேரில் குற்ற மிருக்கிறதாய் நான் நம்புவதற்கில்லை. என்னுடைய வீட்டில் என்ன அலங்கோலம் நடக்கிறது என்பது தெரியுமா உமக்கு'' என்றார்.

ஆளவந்தார்:—என்ன விஷயம், வத்ஸரே, சங்கதி என்ன?

வத்ஸர்:—நல்ல வேடிக்கைதான். என்மகள் உமது கள்ளப் பிள்ளையின் மேல் காதல் கொண்டிருக்கிறாள். அவ்வளவுதான். இருக்கட்டும், அவனுக்கு ஒரு பைசாவேனும் கொடுக்கப்போகிறதில்லை. ஒரு கள்ளப்பிள்ளையைப் பெரிய மனிதனைப் போல் வளர்ப்பதும் அவனைச் சமுசாரிகள் வீட்டில் பழகச் செய்வதும் இப்படிதான் வந்து முடியுமென்று எனக்குத் தெரியும். விபசாரி

பெற்ற பிள்ளையை ஆதரித்துப் போஷித்துவந்தால் வேறு என்ன கிடைக்கும்? அவனுக்கு இனிமேல் ஒருவாய்ச்சோறும் போடுவ தில்லை. காசும் கொடுப்பதில்லை. அவளைத்தான் மணப்பேன் என்று அவள் சொன்னால் அவளையும் பிச்சைக்காரி யாகத்தான் தெருவில் துறத்துவேன்.

ஆளவந்தார்:—இதைக் கேட்க எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது.

வத்ஸர்:—உமது வருத்தமும் நீரும் பாழாய்ப் போகட்டும். என் சோபையை நான் எவ்வளவோ மகிழ்வுடன் கருதி யிருந் தேன். என் முதுமையில் அவளே எனக்கு ஆதரவும் இன்பமும் என்று நம்பியிருந்தேன். அப்படிப்பட்ட என் குழந்தையைத் துற த்தி விட்டால் எனக்கு இன்பம் உண்டாகுமா? இருந்தும் அவ ளைத் துறத்துவதே நன்மை என்று நிச்சயித்து விட்டேன். தெரு வில் நின்று பசி பொறுக்காமல் பிச்சை வாங்கித் தின்பப்படட் டுமே. நான் அம்மன் காசுகூட அவளுக்குக் கொடுக்கப்போகிற தில்லை. எவ்வளவு சாமர்த்தியமாகக் அந்த அயோக்கியன் இவளைச் சிக்கவைத் திருக்கவேண்டும்! அவன் அவளை அடையும்போது அவள் மகாராணியாக மாறிவிடுவாள். மேல்தோல் ஒன்றேவெண் மையாக விருக்கும். வேறு எவ்விதத்திலும் அவள் இச்சிக்கத் தக் கவளா யிருக்கமாட்டாள். இவ்விதமே நீர் அவனிடம் சொல்ல லாம்.

ஆளவந்தார்:—நீர் சொல்வது என்ன விந்தையாக இருக்கி றதே. நேற்றுத்தானே என் மருமகன் போய் உமது குமாரத்தி யைக் கண்டுவிட்டுவந்தான். அவன் அவளைப்பற்றி மிகப்பெருமை யாகவும் சந்தோஷமாகவும் பேசுகிறானே.

வத்ஸர்:—ஆம் ஐயா, உமது மருமகன் வந்து கண்டுபோன பிறகுதான் சங்கதி எல்லாம் வெளிவந்தது. பிலவங்கன் சென்ற தும் அந்த அவிசாரிப்பிள்ளை அங்கே மறைந்திருந்து வந்தான். வேட்டையில் சாமார்த்தியவான் யிருக்கிறானென்று அவனை நான் நேசித்தபோது என் பெண்ணை அடித்துக்கொண்டுபோக வந் திருப்பதாகக் கொஞ்ச மேனும் எண்ணவில்லை.

ஆளவந்தார்:—நீர் உமது மகளை அவன் அடிக்கடி காணும்படி விட்டிருக்கக் கூடாது. அவன் அவ்வளவுகாலம் உமது வீட்டில் தங்கியிருந்தில் எனக் கிஷ்டமேயில்லை. ஆனால் எனக்கு இவ்வித சந்தேகம் ஒன்றுமே கிடையாது.

வத்ஸர்:—நன்று யிருக்கிறதே. யாருக்குத்தான் தெரியும். அவள் என்னத்துக்காக அடிக்கடி அவனுடன் போயிருக்க வேண் டும். இவளை மணப்பதற்காக அவன் வரவில்லையே; என்னுடன் வேட்டையாடவல்லவோ வந்தான்.

ஆளவந்தார்:—அவர்கள் அடிக்கடி சேர்ந்திருக்கும் போது அவர்களது காதல் குறிகளை நீர் கவனிக்க வில்லையா?

வத்ஸர்:—இல்லவேயில்லை. அவன் அவளை முத்தமிட நான் ஒரு தடவையாவது கண்டதில்லை. அவளுடன்கூட தனிவரு மிருக்கும்பொழுது அவன் அதிகமாகப் பேசவேமாட்டான். என் பெண்ணும் மற்ற சிறுவர்களுக்குக் காட்டும் மரியாதையைக்கூட இவனிடம் வைப்பதில்லை. ஏதாவது காதல் விஷயம் நடந்திருந் தால் எனக்குத் தெரியாது போகாது.

இதைக் கேட்ட ஆளவந்தாருக்குச் சிறப்பு உண்டாயிற்று. அவருக்கு மனுஷருடைய தன்மையெல்லாம் நன்றாகத்தெரியுமா தலால் வத்ஸருக்குக் கோபமூண்டாக்கக் கூடாதென்று நயமாகவே பேசிவந்தார். அவர் வத்ஸரைப்பார்த்து இப்பொழுது நான் என்ன செய்யவேணுமென்கிறீர் என்றார்.

வத்ஸர்— "அந்த அயோக்கியனை நீர்வீட்டில் இனிமேல் சேர்க்காதேயும். நான்போய் என்பெண்ணை ஓர் அறையில் விட்டுப் பூட்டிவிடுகிறேன். அவளுக்கு இஷ்டமிராது போனாலும் பிலவங் கனைத்தான் அவள் கலியாணம்செய்து கொள்ளவேண்டும். எனக் குப் பிலவங்கன் தவிர வேறு ஒரு மனுஷனும் தேவையில்லை. என் வீட்டில் ஒரே அமளியாக இருக்கிறது. என் மகள் ஓடிப்போகாத படி அவளை ஜாக்கிரதை செய்யவேண்டும். தாமோதரன் வீட்டி லின்னு மிருந்தால் அவனை உடனே வெளித்தூறத்தவேணும். பில வங்கனிடம் உத்திரவு பெற்றுக்கொண்டுவிடு செல்கிறேன்.

இப்படிச் சொல்லிவிட்டு வத்ஸர் வெளிப்போந்தார்.

ஆளவந்தாரும் பிலவங்கனும் தனியாக இருந்தபோது இரு வரும் வெகுநேரம் பேசாதிருந்தார்கள். தான் ஏமாந்துபோன தி னுலும் தாமோதரனிடமிருந்த பகையினுலும் பிலவங்கன் பெரு மூச்சுவிட்டுக்கொண்டிருந்தான். சோபையை இழப்பதில் அவனு க்கு அவ்வளவு வருத்தமில்லை. தனக்குக் கிட்டாத அவளைத் தா மோதரன் அடைவதை எண்ணி அவனுக்கு அடங்காத்துயர மூண்டாயிற்று. கடைசியில் அவனுடைய மாமன் அவனை "என்ன செய்வதாக யோசித்திருக்கிறாய்" என்று வினவினார். பிலவங்கன் "மாமா நான் என்னசொல்லவிருக்கிறது, எனது அறிவும்காமமும் வெவ்வேறு விதமாகப்புத்தி கூறுகிறது. அதில் காமம்தான் ஜயம் பெறும் போலிருக்கிறது. 'வேறு ஒருவன்மேல் காதல் கொண்டிரு க்கும் ஒரு ஸ்திரீயை உன் மனத்தினின்று மகற்று' என்று அறிவு சொல்லுகிறது. ஆனல் காமமோ 'காலம் ஆகவாக அவள் இப் பொழுது கொண்டிருக்கும் காதலை மாற்றி உன்னை இச்சிப்பாளா தலால் அவளை விட்டுவிடாதே' என்று தூண்டுகிறது. ஆயினும் இதில் ஒரு ஆக்ஷேபனை இருக்கிறது. அதற்கு முழுசமாதானமும்

எற்படாவிட்டால் நான் சோபை மீது கொண்டிருக்கும் காதலை அடியோடு துறக்கவேண்டியதுதான். ஒருவனை உண்மையாகக் காதலிக்கும் உள்ளத்தில் அந்தரங்கத்தில் மற்றொருவனுடைய உருவத்தை அமைக்கலாமா ? என்கிற ஆக்ஷேபனைதான். ஆனால் வத்ஸருக்கு இருக்கும் ஊர்ஜிதத்தைப் பார்த்தால் நான் செய்வது அனைவருக்கும் சந்தோஷத்தை விளைவிக்கும் என்பதில் சந்தேகமில்லை. பெற்றவர்கள் துயரத்தை மாற்றுவதல்லாமல் தம்பதிகளுடைய சீரழிவையும் நிவர்த்திக்கும். ஏனெனில் சோபைதனது ஆஸ்தியை எல்லாம் இழந்து ஒரு பிச்சைக்காரனை மணக்கவேண்டியிருப்பது மல்லாமல் அவனுக்குக் கிடைக்கும் கொஞ்சதிரவியத்தையும் அந்த அயோக்கியன் இப்பொழுதும் வைத்துக்கொண்டிருக்கும் துன்மார்க்கி மல்லிகையிடம்கொடுத்து அழித்துவிடுவான். இது மாத்திரமல்ல. அவனைப்போல் பதிதனனவன் இவ்வுலகில் வேறு ஒருவனுமில்லை. இதுவரையில் ஒளிக்காமல் அவன் நடத்தையைத் தங்களிடம் நான் சொல்லியிருந்தால் வெகுநாளைக்கு முன்னாலேயே இந்த கடைந்தேறாத துன்மார்க்கனை விலக்கியிருப்பீர்கள்" என்றான்.

ஆளவந்தார்:—என்ன, எனக்கு முன்னையே தெரிந்த விஷயங்கள் அல்லாமல் வேறு புதிய துன்மார்க்கம் ஏதேனும் செய்தானு? என்னிடம் சொல்லு.

பிலவங்கன்:—இல்லை, செய்து நாளாகிவிட்டது. அதற்காக இப்போது வருத்தப்பட்டுக்கொண்டுதானிருப்பான்.

ஆளவந்தார்:— சங்கதி இன்னதென்று என்னிடம் சொல்ல வேண்டும். என் கட்டளையை மீறுதே.

பிலவங்கன்:— தங்களுடைய கட்டளையை இதுவரையில் நான் மீறியதில்லை. அவனிடம் அசூயைகொண்டு நான் சொன்னேனென்று தோற்றுமாகையால் வருத்தப்படுகிறேன். அசூயை என்பதே என்மனத்தில் கிடையாது. உங்களிடம் சொல்லவேண்டுமாகுல் நான் சொல்வதைக்கேட்ட பிறகு தாமோதரனை மன்னிக்கவேண்டுகிறேன்.

ஆளவந்தார்:— இப்படியெல்லாம் என்னிடம் சொல்லாதே. அவனுக்கு வேண்டிய மட்டும் ஏற்கெனவே தயவு காட்டியாயிற்று.

பிலவங்கன்—"இந்த தயவை அவன் கொஞ்சமேனும் அறிந்து கொண்டதாய்த் தெரியவில்லை. தாங்கள் மிகுந்த வியாதியாயிருக்கும்போது நானும் குடும்பத்து மற்றோரும் கண்ணும் கண்ணீருமாயிருக்கையில் அவன் கேலித்தனமாகக் குதூகலித்துக் கொண்டிருந்தான், பாட்டுப் பாடியும் ஆரவாரித்தும் குதித்துக் கொண்டுமிருந்தான். அந்த சமயம் நான் அவன் செய்கையின் குற்

றத்தைச் சாடையாய் மெதுவாகச் சொன்னபோது அவனுக்கு பிரமாத கோபமுண்டாகி என்னை அயோக்கியனென்று திட்டி அடிக்கவுமடித்தான்.

ஆளவந்தார்:— எப்படி, உன்னை அவன் அடித்தானு?

பிலவங்கன்:— அதற்காக அவனையப்போதே மன்னித்து விட்டேன். இவ்வளவு உதவி செய்த தங்களிடம் அவனுக்கிருந்த நன்றியறிவின்மையை நான் அப்பொழுதே மன்னித்ததுபோல் தாங்களும் மறந்துவிடவேண்டும். அவன் பேய்பிடித்தவன்போல் தோன்றியதால் தாங்களும் அவனை மன்னிக்கவேண்டும். அன்று சாயங்காலம் நானும் தார்க்கிகரும் தங்களுக்கு தேகம் சுணப்பட்டு வருவதைப்பற்றிப் பேசிக்கொண்டே உலாவிவருகையில் இவன் ஒரு ஸ்திரீயிடம் சொல்லத்தகாத விதமாய் நடந்துகொண்டிருப் பதைப் பார்த்தோம். அப்பொழுது தார்க்கிகர் அவனைக் கண்டிப் பதற்காக அவனை நோக்கிப்போகையில் தாமோதரன் அவர் மேற் பாய்ந்து விழுந்து கையப்புடைத்துவிட்டான். அவர் பட்ட காயம் உலர்ந்து இராது. என்னையும் அவன் சும்மாவிட்டில்லை. உபாத்தி யாயரைக் காப்பாற்றப்போக என்னையும் அவன் அடித்துவிட் டான். ஆனால் அவனை அப்பொழுதே மன்னித்துவிட்டேன். தங் களுடன் சொன்னால் அவனுக்கு ஆபத்துண்டாகுமென்று தெரியு மாகையால் தார்க்கிகரிடம் கெஞ்சிக் கூத்தாடி அவரையும் அவனை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டேன். இப்பொழுது எனக்குப் புத்தியிராமல் இந்த விஷயத்தைப்பற்றிச் சொல்லிவிட்டதால் அவனைத்தாங்கள் மன்னிக்கவேண்டும்.

ஆளவந்தார்:—குழந்தாய்! இப்படிப்பட்ட துன்மார்க்கத்தை மறைத்து வைத்திருந்த உனது நற்குணத்திற்காக உன்னை மெச்சு கிறதா, தண்டிக்கிறதா வென்று தெரியவில்லை. அந்த தார்க்கிகர் எங்கே? நீ சொல்வதை நம்பாமல் நான் அவரைக் கூப்பிடவில்லை. இவ்விஷயத்தில் இருக்கும் ரூஜுக்களை யெல்லாம் ஆராய்ந்து இந்த பரமதுஷ்டனை நான் தண்டிப்பது சரியென்று சகலருக்கும் தெரி விக்கப் போகிறேன்.

தார்க்கிகருக்குச் சொல்லியனுப்பி அவரும் வந்து சேர்ந்தார். பிலவங்கன் சொன்ன ஒவ்வொன்றையு மிவர் திருப்பிச் சொன் னார். தாமோதரன் தன் மார்பில் குத்திக் காயப்படுத்திய வடுவை யும் காண்பித்தார். பிலவங்கன் அன்று கெஞ்சித் தடுத்திரா விட் டால் வெகு நாளைக்கு முன்னால் இதுவிஷயம் தெரிவிக்கப் பட் டிருக்குமென்றும் சொல்லிமுடித்தார்.

உண்மையில் பிலவங்கன் தார்க்கிகரிடம் மன்றாடி அந்த சம யத்தில் தாமோதரன் மேல் முறையிடா திருக்கும்படி கேட்டுக்

கொண்டான். அப்படிக் கேட்டுக் கொண்டதற்கு அவனுக்குப் பல காரணங்களிருந்தன. வியாதியினால் மனுஷர்களுடையமனம் இளகியிருக்குமென்று அவனுக்குத் தெரியும். அன்றியும் விஷயம் நடந்த அவ்வளவு சீக்கிரத்தில் சாக்ஷியாக இருந்த வைத்தியன் உண்மையைச் சொல்லிவிட்டால் தான் பொறுமையோடு கட்டிய விஷயம் வெளிப்பட்டு விடுமென்று பயந்தான். அவன் மீது வேறு குற்ற மேற்பட்டு அத்துட னிதையும் சொன்னால் தாமோதரனுடைய அயோக்கியதையானது பெருகி அதினால்அவனுக்குசிக்ஷை அதிகமாகக் கிடைக்குமென்று எண்ணி: எப்பொழு சமயம் கிட்டுமென்று காத்துக்கொண் டிருந்தான்.ஆளவந்தாரிடம்தாமோதரனுக்கும் தனக்கும் மிகுந்தநட்பு உண்டென்று காண்பிக்கும் பொருட்டு அந்த சங்கதியைக் கொஞ்சநாள் ஆளவந்தாரிடம் சொல்லாதிருக்க தார்க்கிகரை வேண்டிக்கொண்டான்.

10. அத்தியாயம்.

சமன் செய்து சீர்தூக்கும் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

கோபமா யிருக்கும்போது யாரையும் தண்டிக்கிறதில்லை என்கிறதாய் ஆளவந்தாருக்கு ஒரு விரதம் உண்டு. ஆகையால் தாமோதரனுக்கு அன்றுபகலுக்குமேல் தண்டனை விதிக்கலாம் என்று அவர் தாமதித்தார். வழக்கம்போல்தாமோதரன் சாப்பாட்டிற்கு வந்தான். மனுஷியாகூலத்தால் ஒருபிடிசாதம் கூட அவனுக்கு இரங்கவில்லை. அதிலும் ஆளவந்தாருடைய கோபப்பார்வை இவன் துயரத்தை அதிகப் படுத்தி விட்டது. வத்ஸர் தனக்கும் சோபைக்கு மூள்ள காதலை வெளிப்படுத்தி விட்டார் என்று நன்றாகத் தெரிந்துகொண்டான். பிலவங்கன் கோட்சொன்ன விஷயம் ஒன்றுமே அவனுக்குத் தெரியாது. சாப்பாடு முடிந்தபின் ஆளவந்தார் தாமோதரன் செய்த பலபாவங்களைப்பற்றியும் அன்றைக்குத் தனக்கு தெரிந்த குற்றத்தைப்பற்றியும் வெகுநேரம் கடிந்து பேசிக்கடைசியில் அவன் குற்றவாளியல்லவென்று ரூபித்தாலொழிய தன்னிடமிருந்து துறக்கிவிடத் தீர்மானித்திருப்பதாகச் சொன்னார்.

தாமோதரனுக்கு அப்படி ரூபிப்பதற்குப் பல பிரதி கூலங்களிருந்தன. தன்மே லேற்படுத்திய குற்றம் இன்னதென்று அவனுக்குத் தெரியவே தெரியாது. எனெனில் ஆளவந்தார் தாமோதரனுடைய ஆட்டத்தையும் பாட்டையும் கூறியபோது தான் வியாதியாக இருந்தபோது நடந்தது என்று சொல்லாததால் தாமோதரன் அந்த குற்றத்தை ஒப்புக்கொள்ளவேண்டியதாயிற்று. அன்றியும் மனமறுகி இருந்ததால் ஒன்றும் சொல்லத்தெரியாமல் குற்ற மனைத்தையும் ஒப்புக்கொண்டு ஆளவந்தார் காலில் விழுந்து

மன்னிக்கும்படியாகக் கெஞ்சினான். தான் பலவித குற்றங்கள் செய்திருந்தபோதிலும் ஆளவந்தார் தன்னை முகாலோபனம் செய்யாதிருக்கும்படியான அவ்வளவு பெரிய குற்றம் தான் ஒன்றும் செய்யவில்லை என்றும் சொன்னான். அதற்கு ஆளவந்தார் "உன்னுடைய இளமையை யோசித்தும் இனியாவது நீ திருந்துவாய் என்று நம்பியும் பலதடவைகளிலும் நான் உன்னை மன்னித்திருக்கிறேன். ஆனால் நீ எப்பொழுதும் நல்வழி நாடா அயோக்கியனாகிவிட்டாய். ஆதலால் உன்னைக் காப்பாற்றுவது பெருங்குற்றம். அன்றியும் நீ சிறுபெண்ணைத் திருட்டிச் செல்லமுயன்ற துன்மார்க்கத்திற்காக உன்னை நான் சரியாகச் சிக்ஷிக்கவேண்டும். உன்னிடம் நான் பிரியம்வைத்திருந்ததற்காக உலகத்தார் என்னை நிந்தித்தார்கள். நீ இப்பொழுது முயன்ற இழிவும் கொடுமையுமான காரியத்தை நான் கவனியாவிட்டால் என்னை உலகம் நிந்திப்பதற்குக் கேட்பானேன். நானிவ்விஷயங்களில் எவ்வளவு வெறும் புள்ளவன் என்று உனக்குத் தெரியாது? என்னுடைய கௌரவத்தையும் நட்பையும் மனச்சந்துஷ்டியையும் கொஞ்சம் யோசித்திருப்பாயானால் இம்மாதிரிக் காரியத்தில் தலையிடுவாயா? நீ செய்த குற்றத்திற்குத் தகுந்த சிக்ஷை கிடையவேகிடையாது. நான் உனக்கு இப்பொழுது கொடுக்கப்போகும் தண்டனையும் நியாயத்திற்கு ஒவ்வாது. ஆனபோதிலும் உன்னை என் குழந்தைபோல் வளர்த்து வித்தை கற்பித்துவந்ததால் உன்னை நான் பிழைக்கவழியின்றித் தூரத்திவிட மனமில்லை. இதோ இந்தக் காகிதத்தைத் திறந்துபார்த்தால் நீ புத்தியுடையவனாயிருந்தால் மானத்துடன் ஜீவனம் செய்வதற்குப் போதிய முதலுமிருக்கிறது. நீ அதைக் கெட்டவழியில் செலவழித்துவிட்டால் பிறகு நான் ஒத்தாசை செய்யவேமாட்டேன். இன்று முதல் எக்காரணத்தாலும் உன்னுடன் நான் சம்பாஷிக்கப்போகிறதில்லை. உன்னுடன் மிகப்பிரியத்துடனும் நியாயத்துடனும் நடந்துவந்த பிலவங்களை நீ இவ்விதம் செய்ததற்காக உன்மேல் நான்மிக்க ஆயாசப்படுகிறேன்.

கடைசியில் சொல்லியவார்த்தையைக் கேட்டதும் தாமோதரனுக்குக் கண்ணினின்றும் நீர்தாரையாகப் பெருகிற்று. அவனுக்குப்பேச நாவெழவில்லை. தன்னை விட்டு உடனே விலகும்படி ஆளவந்தார் சொன்னதையும் அறிந்துகொள்ளக் கொஞ்சநேரமாயிற்று. சொல்வதற்கியலாத பிரியத்துடன் அவருடையகையை முத்தமிட்டுவிட்டு அவர் இருந்த விடத்தைவிட்டு அகன்றான்.

தாமோதரன் ஆளவந்தாரைவிட்டுப் போனதும் அயலார் எல்லாம் ஆளவந்தாருடைய கொடுமையைப்பற்றி வலது பேசினார்கள். ஒருகள்ளப்பிள்ளையிடம் பக்ஷம்காட்டியதற்காக ஆளவந்தாரை நொந்தவர்களே இப்பொழுது அப்பிள்ளையைத்துரத்திவிட்டதற்காக அவரைத்தூற்ற ஆரம்பித்தார்கள். அதிலும் ஸ்திரீ

கள் எல்லாம் ஒன்றுகச்சேர்ந்து தாமோதரன் பக்கமே பேசினார் கள். இப்படிப் பேசியவர்களில் ஒருவராவது ஆளவந்தார் காகிதத் தில் சுருட்டிக்கொடுத்த பணத்தைப்பற்றிச் சொல்லவே இல்லை. அந்த மொக்கணத்தில் 500 பவுன்வைத்து மூடியிருந்தார். ஆனா லும் தாமோதரனுக்கு ஒரு காசுகூடக் கொடாது துறத்திவிட்டார் என்று அனைவரும் நிந்தித்துக்கொண்டிருந்தார்கள்.

11. அத்தியாயம்.

வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளுந்துமகத்தேகும்.

வீட்டைவிட்டு உடனே அகலும்படியாகவும் அவனுடைய துணிமணிகள் எங்குவந்து சேரவேணுமென்கிறதை அங்கு அனுப்பப்படுமென்றும் தாமோதரனுக்கு ஆளவந்தார் கட்டளை பிட்டார். அவன் ஒரு மைல்தூரம் எங்கே போகிறோமென்று கூட வெண்ணாமல் நடந்துக்கொண்டிருந்தான். கடைசியில் ஒரு சிற் றூறு அவனுடைய பிரயாணத்தைத் தடை செய்தது. இதின்கரை யில் கொஞ்சநேரம் தங்கியிருக்க தகப்பனார் உத்திரவு கொடுப்பா ரானென்று சொல்லிக்கொண்டே உட்கார்ந்தான். இங்கு அவனு க்கு மகாதுயர மூண்டாகிவிட்டது. தலையிலடித்துக்கொண்டான், மயிரைப் பிய்த்துக்கொண்டான், பைத்தியக்காரரும் பெருங் கோபக்காரரும் செய்யும் செய்கைகளையெல்லாம் இயற்றினான். துயரம்மாறிக் கொஞ்சம் சாந்தமானபிறகு இனி என்ன செய்கிற தென்று யோசிக்கலானான்.

சோபையைப்பற்றி என்ன முடிவுக்கு வருகிறதென்றுயோசி த்தான். அவளை விட்டுவிடக் கொஞ்சமேனும் அவனுக்கு மன தில்லை. ஆனால் அவளை வறுமையிலாழ்த்தி நாசத்திற்கு உள்ளாக்க வேண்டி வருமேயென்று வருந்தினான். எப்பாடுபட்டாயினும் சோபையை அடைவதே சரியென்று ஒருதரம் நிச்சயித்தான். அவள் இவ்வளவு துயரத்தையு மடைய உடன் படுவாளா என்று ஒருதரம் சமுசயிப்பான். அன்றியும் ஆளவந்தாருக் கதினுண் டாகும் கோபமும் சஞ்சலமும் அவன் மனத்தைப் புண்படுத்தி யது. தான் வெற்றிபெறுவது சந்தேகமென்று தோன்றி இந்தச் சமயம் அவளை விட்டுவிட்டுப் போவதே சரியென்று நிச்சயித் தான். போவதற்குமுன் சோபைக்கு ஒரு கடிதம் எழுதித் தன் எண்ணத்தைத் தெரிவித்து விடவேணுமென்று கருதி அருகிலிரு ந்த ஒரு வீடுசென்று வேண்டிய எழுதுங் கருவிகளை வாங்கி விவர மாக ஒரு கடிதம் எழுதினான். அது வருமாறு:—

சோபை,

நான் எந்த நிலைமையிலிருந்து உனக்குக் கடிதம் எழுதுகிறேன் என்று யோசித்தால் என் கடிதத்திலிருக்கும் தவறுகளையும் தடுமாற்றங்களையும் உன் தூயவுள்ளம் மன்னித்துவிடுமென்று நிச்சயமாக நம்புகிறேன். இதற்கண்டவெல்லாம் வெற்றுரையல்ல, எழுதிமுடியாத என் அந்தரங்க பூர்வமான காதலினாலுண்டாகியனவென்று நீ அறிந்துகொள்ளவேண்டும். நீ கட்டளையிட்டபிரகாரம் நான் உனது அருமையான இனிய பார்வையினின்றும் ஒடிப்போக நிச்சயித்துவிட்டேன். அதுகட்டளையோ மிகக் கொடுமையானது. அந்தக்கொடுமை என் சோபையினுடையதல்ல. விதியினுடையது. நீ சௌக்கியமாக விருக்கவேண்டி "தாமோதரன் ஒருவன் இருந்தானென்ற ஞாபகத்தை யகற்று" என்று விதியேவுகிறது. என்னுடைய கஷ்டங்களையெல்லாம் நீ கேள்விப்பட்டிருக்கமாட்டாய் என்று எனக்குத் தெரிந்தால் நான் அவற்றைப்பற்றி ஒருவார்த்தை யாவது உன்னிடம் சொல்லமாட்டேன். உன் தயாளமும் இளகியமனமும் எனக்கு நன்றாகத் தெரியும். அயலார் அவஸ்தைப் படுவதைக் கேட்டால் நீ மனம் புழுங்குவாய். என்னுடைய கஷ்டங்கள் உன் காதில் பட்டால் அதற்காக நீ கொஞ்சமும் வருந்தாதே. எனெனில் உன்னை இழந்தபிறகு எந்தக் கஷ்டமும் எனக்குப் பெரிதல்ல. ஐயோ சோபை! உன்னைவிட்டுப் பிரிவது எவ்வளவு கஷ்டமாயிருக்கிறது! அதிலும் "என்னை மறந்துவிடு" என்று சொல்லியது எனக்கு எவ்வளவு துயரத்தை யுண்டாக்குகிறது. உன்மேலிருக்கும் காதல் இவ்விரண்டையும் செய்யத் தூண்டுகிறது. என்னைப்பற்றி நினைத்தால் உனக்கு வருத்தமாகத்தானிருக்கும். ஆதலால் என்னைப்பற்றி நினைக்கவேநினையாதே. உன்னைநான் காதலிக்கவே இல்லையென்றெண்ணு. உன்னை நான் அடையத் தகுந்தவனு? உன்னை மணக்கலாம் என்று நான் விண்ணப்பே பெண்ணம் கொண்டதற்காக என்னை நீ நிராகரி. என் அதிர்ஷ்டத்துக்கு அதுவும்போதாது, வேறு எதுவும் சொல்லத் திறனற்றவனாயிருக்கிறேன். சகலதேவர்களும் உன்னை நன்றாகக் காப்பாற்றட்டும்.

இங்ஙனம்:

தாமோதரன்.

இக்கடிதத்தை முத்திரிப்பதற்கு அரக்குவேண்டி அங்கியிலுள்ள பையைத் தடவினான். அதில் ஒன்றையும் காணோம். ஆற்றங்கரையிலிருந்து புலம்பும்போது மதிமயங்கி அங்கியிலிருந்ததையெல்லாமெடுத்துக் கீழே யெறிந்துவிட்டான். ஆளவந்தார் கொடுத்திருந்த பொக்கணமும் அத்துடன் இருந்ததால் அதுவும் கீழே எறியப்பட்டது. பாவம் அதை அவன் திரும்பக்கூடப் பார்க்கவில்லை. இப்பொழுது அந்தநஷ்டம் அவன் ஞாபகத்திற்குவந்தது.

ஒரு வீட்டிலிருந்து கொஞ்சம் அரக்கு வாங்கிக் காகிதத்தை மூத்திரித்துவிட்டுத் தானிழந்த பொருள்களைத்தேடும் பொருட்டு சிற்றூற்றுக்கரையை நோக்கி வேகமாய் ஓடினான். வழியில் தனது பழைய சினேகனாகிய சொக்கனைக்கண்டான் அவன் தாமோதரனுக்கு நேரிட்ட விபத்துக்காக அனுதாபப்பட்டதாய்க் காட்டிக் கொண்டான். அவனிடம் தனக்குநேரிட்ட நஷ்டத்தை தாமோதரன்தெரிவித்தான். சொக்கனும் தாமோதரனுடன் சென்று அவனிருந்தவிடம் இராதவிடமெங்கும் தேடியும் பொக்கணம் அகப்படவில்லை. காணுமற்போன பொருளனைத்தும் சொக்கனுடைய அங்கிப்பைக்குளிருந்தன. அந்த இடத்தில் மாத்திரம் ஒருவரும் தேடவில்லை. அந்த வழியாகச் சொக்கன்வந்து கொண்டிருந்த போது ஆற்றின்கரையில் மேற்சொன்ன பொருள்களைக்கண்டு அவற்றை எடுத்துப்பத்திரமாகத் தன் அங்கிப்பையில் மறைத்து வைத்துக்கொண்டான்.

காணுமற் போன சாமான்கள் தேடியும் அகப்படாமையால் சொக்கன் தாமோதரனைப்பார்த்து இவ்விடத்தில் உமது பொருள்கள்தானே காணுமற்போயின. நன்றுயோசித்துப்பாரும். கொஞ்ச நாழிகைக்குமுன் போட்டுப்போன சாமான்வேறு எங்குபோய் விடும். இந்தவழியாக ஜனங்கள் நடமாட்டமில்லையே என்றான். தாமோதரன் போனது திரும்பிவராது என்று நிச்சயமாயறிந்து கொண்டு அதைப்பற்றி அதிகமாகக் கவலைப்படாமல் சொக்கனைப் பார்த்துத் தனக்கு ஒருபெரும் உபகாரம் செய்யும்படி கெஞ்சிக் கேட்டான். சொக்கன் கொஞ்சநேரம் தயங்கி என்னால் கூடியது எதுவானாலும் தாங்கள் கேட்கலாம், தங்களுக்கு ஒத்தாசை என்னாலாகவேண்டுமே என்றுதான் யோசிக்கிறேன் என்றான். உண்மையில் தாமோதரன் கேட்டதும் சொக்கனுக்குப் பிரமை உண்டாகிவிட்டது. காட்டில்வேட்டையாடிய மிருகம் பக்ஷிகளை வத்ஸரிடம் விற்று சொக்கன் கொஞ்சம் பணம்சேர்த்து வைத்திருந்தான். அதில் எங்கே தாமோதரன் கடன்கேட்கப்போகிறானென்று பயந்துவிட்டான். தான் எழுதிய கடிதத்தை சோபையிடம் கொண்டு கொடுக்கும்படி தாமோதரன் கேட்டதும் இவன் பயம் ஒழிந்து அக்காரியத்தைக் சந்தோஷமாக ஒப்புக்கொண்டான். ஆண்டாளிடம் கடிதத்தைக் கொண்டிபோய்க் கொடுத்தால் அவள் அதைச் சோபையிடம் சேர்த்துவிடுவாள் என்று ஏற்பாடு செய்துகொண்டபிறகு இருவரும் பிரிந்து போனார்கள். சொக்கன் வத்ஸர் வீட்டைநோக்கிப் போனான். தாமோதரன் அரைமையில் தூரத்திற்கப்பால் உள்ள ஒரு சத்திரத்திற்குப்போய்ப் பதிலுக்காக எதிர் பார்த்திருந்தான்.

சொக்கன் வத்ஸர்வீடு சென்றதும் அங்கு ஆண்டாளைக்கண்டு அவளிடம் சில கேள்விகளைக் கேட்டுப் பிறகுதான் கொண்டுவந்த

கடிதத்தைக் கொடுத்து சோபையிடம் சேர்க்கும்படி கேட்டுக் கொண்டான். ஆண்டாளும் தான் தாமோதரனுக்காக ஒரு கடிதத்தை இடுப்பிலேயே வைத்துக்கொண்டிருப்பதாயும், அதை அவனிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கும்படிக்கும் கேட்டுக்கொண்டாள். அதைவாங்கிக்கொண்டு சொக்கன் வெகு சந்தோஷமாய் ஓடிவந்து தாமோதரனிடம் கொடுத்தான். அதைப்பெற்றுசோபையின் கையெழுத்து என்று தெரிந்து அதை வாசிக்கத் தனியிடம் சென்று கடிதத்தை உடைத்துப்பார்த்தான். அதில் அடியில் வருமாறு எழுதியிருந்தது.

நண்பா,

உன்னைப்பார்த்தது முதல் நான் அடைந்த துயரத்தை விவரிக்கமுடியாது. என் தகப்பனாரால் நீ அவமானப்படுத்தப்பட்டும் அதை நீ எனக்காகப் பொறுத்துக்கொண்டிருந்ததை நான் என்றும் மறவேன். அவருடைய குணம் உனக்குத்தெரியுமாதலால் என் பொருட்டு அவர் முன் நீ எதிர்படாதிருக்கவேண்டும். உனக்கு ஏதாவது சந்தோஷ சங்கதி சொல்லியனுப்பவேண்டுமென்பது என் பிரியம். எக்காரணத்தாலும் உன்னைத்தவிர வேறு ஒருவனை நான் பாணிக்கிரகணம் செய்யவுமாட்டேன், காதலிக்கவுமாட்டேன் என்று உருதியாக நம்பு. இங்ஙனம்:

சோபை.

இந்தக்கடிதத்தை தாமோதரன் நூறு தடவை திருப்பித் திருப்பி வாசித்து நூறு தடவை அதற்கு முத்தம் கொடுத்தான். இப்பொழுது பழையகாதல் திரும்பவும் அவனுக்கு உதித்தது. சோபைக்கு மூன் கடிதத்தை ஏன் நாம் எழுதினோமென்று வருத்தப்பட்டுக்கொண்டான். திரும்பவும் அவன் நிதானமாக யோஜித்தபோது தான் செய்ததில் தவறு ஒன்றுமில்லையென்றும் சோபையினுடைய கடிதம் தனக்கு நற்காலம் வருமளவும் தன்னை மணப்பதின் பொருட்டுவேறொருவரையும் இச்சியாதிருப்பா ளென்பதைத்தெரிவித்ததே யொழிய வேறில்லையென்றும் தீர்மானித்தான். சொக்கனை அனுப்பிவிட்டு ஐந்துமைலுக்கு அப்பாலுள்ள ஒரு பட்டினம் போய்ச்சேர்ந்தான். தனது தூனி மணிகளை அவ்விடத்துக்கு அனுப்பிவிடும்படி ஆளவந்தாருக்குஞ்சொல்லியனுப்பினான்.

12. அத்தியாயம்.

இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.

சோபை முதல் நாள்முழுமையும் கொஞ்சமேனும் களிப்பின்றிக் கழித்தாள். அன்று அவளுடைய அத்தை விதாரணி புத்திசாலித்தனத்தைப்பற்றி ஒரு உபன்னியாசம் வெகுநேரம்

செய்தாள். "காதலித்தவனை மணப்பதென்னும் விஷயம் உலக வர்த்தமானங்களைத் தெரிந்தவர்கள் கேலிசெய்யத் தகுந்ததே. ஆண்பிள்ளைகள் பெயர் எடுக்கும்பொருட்டுத் தமக்கு விருப்போ வெறுப்போ ஒன்றையும் கவனியாமல் தமக்குக் கிடைக்கும் நல்ல உத்தியோகத்தில் எப்படி அமருகிறார்களோ அப்படிப் போல் பெண்பிள்ளைகளும் செல்வ விருத்தியையுண்டுபண்ணுஞ் சம்பந்தத்தைத்தான் இச்சிக்க வேண்டும். இதற்குப் பல திருஷ்டாந்தங்கள் உள" என்று திருஷ்டாந்தங்களுடன் வெகுநேரம் சோபைக்கு அறிவூட்டினாள். இந்த உபன்னியாசம் சோபைக்குக் கொஞ்சமேனும் பிடிக்காவிட்டாலும்தனியேஇருக்கும்போது மனது ஊசலாடுவதினும் இதைக் கேட்டுக்கொண்டிருப்பதில் கொஞ்சம் நிம்மதியாக இருக்குமென்று காதுகொடுத்துக் கொண்டிருந்தாள். அன்றுஇரவு படுக்கையறை சென்றதும் சோபைக்குப் படுக்கையும் கொள்ளவில்லை, தூக்கமும் வரவில்லை. வெளியில் எழுந்து செல்லவும் இஷ்ட மிராததினால் தன்தகப்பன் காலையில் ஆளவந்தார் வீட்டினின்றும் திரும்பிவரும்வரையில் படுக்கையிலேயே இருந்தாள். வத்ஸர் தன்மகள் அறைவந்து கதவைத்திறந்து பார்த்து அவள் இன்னும் எழுந்திராததைக் கண்டு "ஓகோ பத்திரமாயிருக்கிறாயா? உன்னை ஜாக்கிரதையாகப் பூட்டிவைக்கத் தீர்மானித்திருக்கிறேன்" என்று சொல்லிக் கதவைப் பூட்டிவிட்டு ஆண்டாளிடம் சாவியைக் கொடுத்து சோபையை வெகு ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்படிக்கும் அப்படிச்செய்தால் அவளுக்கு உயர்ந்த வெகுமானம் செய்வதாகவும், ஆணைக்குத் தப்பி நடந்தால் கொடிய சிக்ஷை விதிப்பதாகவும் சொன்னார்.

வத்ஸர் உத்தரவின்றி சோபை தனது அறையினின்றும் வெளிவர விடக்கூடாதென்றும், வத்ஸரையும் அவர்சகோதரியையும் தவிர வேறு ஒருவரையும் உள்ளே விடக் கூடாதென்றும், சோபைக்கு வேண்டியவைகளை யெல்லாம் ஆண்டாளே போய்ச் செய்யவேணு மென்றும், காகிதம் மை இறகு தவிர வேறு எதையும் சேபைக்குக் கொடுக்கலாம் என்றும் ஆக்ஞாபித்தார். வத்ஸர் தன்னுடன் கூடச் சாப்பிட சோபையை இட்டுப்போனார். சாப்பாடு முடிந்ததும் திரும்பச் சிறைச்சாலைக்குக் கூட்டிவந்து அடைத்துப்போனார். மாலையில் ஆண்டாள் சொக்கன் கொண்டுவந்த கடிதத்தைச் சோபையிடம் கொடுத்தாள். அதை மிகுந்த ஆவலோடு இரண்டு மூன்று தடவை வாசித்துப்பார்த்தாள். கடைசியில் படுக்கையில் சாய்ந்து கண்ணீர் விட்டுக் கதறினாள். தன் எஜமானி இவ்விதம் வருந்துவதைக்கண்ட ஆண்டாளுக்கு மனம்பொறுக்கவில்லை. இந்தத் துயரத்திற்குக் காரணம் என்னவென்று அவளால்கேட்காதிருக்கமுடியவில்லை. சோபை கொஞ்சநேரம் மௌனமாயிருந்து பிறகு திடீர் என்று திடுக்கிட்டுத் தனது காதிகையைப் பிடித்துக்

கொண்டு "ஓ ஆண்டாள் காரியமனைத்தும் கெட்டுபோய்விட்டது" என்றுள்.

ஆண்டாள்:—அந்தக்கடிதத்தைத் தங்களுக்கு கொண்டுவரு முன் அதை நெருப்பில் போட்டு எரிக்காமல் போனேனே. அந்தக் கடிதத்தைப் பார்த்தால் கொஞ்சம் ஆயாசம் தீருமென்று நம்பினேன். அப்படிக்கில்லாத பக்ஷத்தில் அதை என் விரலினும் தொட்டிருக்க மாட்டேன்.

சோபை:—ஆண்டாள், நீ மிகவும் நல்லவள். என்னுடைய ரகசியத்தை உன்னிடம் சொல்லாமலிருப்பது தப்புதான். என்மனம் ஒரு புருடன்மேல் சென்றிருக்கிறது. அவர் என்னைப் பரதவிக்க விட்டுப் போய்விட்டார்.

ஆண்டாள்:—தாமோதரர் அப்படிப்பட்ட காதகரா.

சோபை:—இப்பொழுது அனுப்பியகடிதத்தில் அவர் என்னை எப்பொழுதும் பார்க்கப் போகிறதில்லையென்றும் அவருக்கு உத்திரவு கொடுக்கும் படிக்கும் அவரை என் மனத்திலிருந்தும் அகற்றி விடும்படிக்கும் எழுதியிருக்கிறார். அவருக்கு என்மேல் உண்மையான காதலிருந்தால் நான் அவரைமறக்கும்படி விரும்புவாரா? இவ்வெண்ணந்தான்கொள்வாரா? இப்படிப்பட்ட வார்த்தைகளைத் தான் எழுதுவாரா?

ஆண்டாள்:—எப்படிப்பட்ட பெரியவனு யிருந்தபோதிலும் அவனை மறந்து விடும்படியாக நேராக எனக்குக் கடிதம் எழுதினால் நான் அப்படியே செய்துவிடுவேன். நம்தேசத்தில் எத்தனையோவாலிபர்கள் இருக்கிறார்கள். ஒரு சிறுமி தேர்ந்தெடுக்க ஒருவன் போலல் மற்றெத்தனைபேர்களோ மேல் விழுந்து கொண்டு வருவார்கள். ஆயினும் அடியாள் புத்தியற்றவள். என் அபிப்பிராயத்தைக் கேட்டால் சொல்லுகிறேன். பிலவங்கர் நற்குலத்தில் உதித்தவர். இந்தப் பக்கங்களுக்கெல்லாம் தனவந்தராகப் போகிறவர். அழகிலும் குறைவில்லை. மரியாதை யிரம்பியவர். அவரிடம் தர்க்குணம் ஒன்றேனும் காண்பதரிது. அவருக்குப் பேராசையாவது, பொறுமையாவது கிடையாது. அவர் பிறப்பைப் பற்றியும் யாரும் இழிவு சொல்லக்கூடாது. தாமோதரர் என்னை மறந்துவிடு என்று எழுதினார் பார்த்தீர்களா! இரண்டுதடவை அப்படிச் சொல்லும்படி நாம் வைத்துக்கொள்ளலாமா? அவர் எவ்வளவு மேலானவரா யிருந்தபோதிலும் இவ்வளவு அவமானமாக எழுதிய பிறகு அவரை மூகாலோபனஞ் செய்யலாமா? நான் சொன்னபடி பிலவங்கர் இருக்கிறார்.

சோபை:—அந்த கர்ண கடோரமான பெயரை (பிலவங்கன்) திரும்பவும் சொல்லாதே.

ஆண்டாள்:—தாங்கள் அவரை விரும்பாவிட்டால் பாதக மில்லை. இன்னும் எவ்வளவோ உல்லாசமும் வனப்பும் வாய்ந்த விடை புருஷர் தங்களை விரும்பிக்காத்திருக்கிறார்கள். தாங்களிஷ்டத்தோடு அவர்களில் ஒருவரைப் பார்வை பார்த்தால் போதும். தங்கள் விருப்பப்படி கிடைக்காத புருஷர்களு மித்தேசத்திலிருக்கிறார்களோ?

சோபை:—இவ்விதமான நாராசங்களை என்காதில் செலுத்துவதால் என்ன பயன்? புருஷ ஜாதியையே இப்பொழுது நான் வெறுக்கிறேன்.

ஆண்டாள்:—ஆம் அம்மா, தாங்கள் சொல்வதில் என்னபிழை. ஒரு அற்ப அஞ்ஞதையான கள்ளப்பிள்ளையால் அவ்மானப்படுத்தப்பட்ட பிறகு புருஷ ஜாதியையே தாங்கள் வெறுக்கவேண்டியது தான்.

சோபை:—உனது தூற்றும் நாவையடக்கு. அவருடைய பெயரை எனக்கு முன்னால் எப்படி நிந்திக்கத்துணிந்தாய்? அவர் என்னை அவமானமாக நடத்துவாரா? என் கடிதத்தைப் படிக்கும் போது அடைந்த மனமகிழ்ச்சி அதிக ஜாஸ்தியாக இருந்திருக்கும். அந்த சௌரிய புருஷர் குணமெல்லாம் தரும குணமாயிற்றே. அவர் ஒருவருக்குத் தீங்கையும் எண்ணுவாரோ? அவரது குணத்தைப்பற்றி நான் ஆநந்திக்கவேண்டியிருக்க என் சுய நலத்தைப்பாராட்டி வருத்தப்பட்டதற்காக நான் இப்பொழுது வெட்கப்படுகிறேன். உனக்குத்தெரியாது ஆண்டாள், அவர் என்னுடைய நன்மையைத்தான் கோருகிறார். என்னுடைய நலத்திற்காக அவரையும் என்னையும் துன்பத்திற்கு ஆளாக்குகிறார். நான் கஷ்டதிசையிலிருப்பேன் என்று எண்ணி வேறு வழிதோன்றாது இப்படி எழுதினார்.

ஆண்டாள்:—இவ்வளவு தூரம் தாங்கள் யோசித்துப்பேசியதற்கு சந்தோஷப்படுகிறேன். வீட்டைவிட்டுத் துறத்தப்பட்டு ஒரு காசுகூட பொருளில்லாது அல்லாடும் ஒருவரிடம் தாங்கள் காதல் செலுத்தியிருப்பது தங்களுக்கு துன்பதந்தான்.

சோபை:— (பரபரப்புடன்) "வீட்டைவிட்டுத் துறத்தப்படவாவது, என்ன, நீ என்ன சொல்கிறாய்? நீ சொல்வதின் பொருள் தான் என்ன?

ஆண்டாள்:— சொல்வதென்ன? தங்களுடைய தகப்பனார் ஆளவந்தாரிடம் போய் தாமோதரன் தங்களைக் காதலிக்கும் சங்கதியைச்சொன்னவுடன் அவர் அவனுக்குக் கொடுத்திருந்த எல்லா வற்றையும் பிடுங்கிக்கொண்டு தெருவில் அடித்துத் துறத்திவிட்டார்.

சோபை:—ஐயோ! அவருடைய கஷ்டத்திற்கு பாவி நான் தானே காரணம்!! என்னிலும் கொடியவள் யார்? குடிக்கக் கஞ்சி யற்று வெருட்டப்பட்டாரா? இந்தா ஆண்டாள். என்னிடமிருக் கும் பணத்தையெல்லாம் பெட்டியைத்திறந்து எடுத்துக்கொள். என் கைவிரல்களிலிருக்கும் மோதிரங்களைக் கழற்றிக்கொள். இதோ என் கெடியாரத்தையும், மற்றெல்லாவற்றையும் தூக்கிக் போ. அவரைப்போய் முன்னல்கண்டு சிக்கிரம் அனைத்தையும் அவரிடம் கொடு.

ஆண்டாள்:—அம்மா, நிதானித்துச் சொல்லுங்கள். அவ சரப்படாதேயுங்கள். தங்கள் தகப்பனார் இவைகளில் எதையா வது காணவிட்டால் என்னையல்லவோ பிடித்துக் கேட்பார். ஆகையால் தங்களுடைய கை கெடிகாரத்தையும் நகைகளையும் கொடுக்கவேண்டாம். பணத்தை வேண்டுமானால் கொண்டுபோய்க் கொடுக்கிறேன். அது அவருக்குப்போதும். அன்றியும் தங்கள் தகப்பனார் பணம் செலவழித்த விதத்தைக் கேட்கமாட்டார்.

சோபை:—அப்படியானால் ஒருகாசும் விடாமல் எல்லாவற் றையும் எடுத்துப்போய் அவரிடம் கொடுத்துவிட்டு வா. ஒரு நிமி ஷமும் தாமதியாதே.

உத்திரவுப்படியே ஆண்டாள் பணத்தை எடுத்துக்கொண்டு கீழேவந்து அங்கு சொக்கனிருக்கக்கண்டு அவனிடம் பணப்பை யைக்கொடுத்தாள். அதில் பதினாறு மோகரா இருந்தன. அது சோபையுடைய செல்வ முழுதுமாம். அவள் தகப்பனார் அவ ளுக்கு ஏராளமாகப் பணங்கொடுத்திருந்தபோதிலும் அதையெல் லாம் தர்மத்திலேயே செலவுசெய்து வந்தாள்.

சொக்கன் பணப்பையைப் பெற்றுக்கொண்டு தாமோதரனி ருந்த சத்திரம் நோக்கிச்சென்றான். வழியில் "இதையும் நாமபகரி த்துக்கொள்ளக் கூடாதா" என்கிற எண்ணமுண்டாயிற்று. ஆனால் அவன் மனச்சாக்ஷி "உன் உபகாரிக்கு அபகாரம் செய்வது தீங்கு" என்று கண்டித்தது. அவனது பேராசை "ஐந்நூறு பவுன் அப கரித்துக்கொண்டபோது இந்த எண்ணமிருந்திருக்கவேண்டும். அவ்வளவு பெரிய தொகையைக் கொஞ்சமேனும் மனமறுக்க மில்லாமல் அபகரித்தபோது இந்தச் சிறிய தொகைக்குத் தயங்கு வது தவறு" என்று போதித்தது. திரும்பவும் மனச்சாக்ஷி "ஒரு வர் கொண்டுபோய்க்கொடு என்ற திரவியத்தை மறைப்பதற்கும் கண்டெடுப்பதற்கும் வித்தியாசமுண்டு" என்றது. ஆனால் பேரா சை "ஒருதரம் யோக்கியதையும் நல்ல பெயரும் கெட்டுவிட்டால் இரண்டாந்தடவை ஒவ்வாதசெயலைச் செய்வதற்கு தடை என்ன? ஒருதரம் குற்றம்செய்யின் என்ன, பலதடவை செய்யின் என்ன" என்று வாதித்தது. மனச்சாக்ஷி இந்த சமயம் தோல்வியடைந்

திருக்கும். ஆனல் பயம் மனச்சாக்ஷியின் ஒத்தாசைக்கு வந்து மொகரா திருடியது வெளிப்பட்டு விடுமென்று தெரிவித்தது. இந்தப் பயத்தினல் சொக்கன் மொகராக்களை தாமோதரனிடம் கொண்டு சேர்ப்பித்தான்.

13. அத்தியாயம்.

போய்ப்படு மொன்றே புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்.

வத்ஸர் சகோதரி விதரணி அன்றைக்கெல்லாம் வெளியில் போயிருந்தாள். அவள் வீடு திரும்பியபோது வத்ஸர் அவளைச் சந்தித்தார். சோபையைப்பற்றி அவள் விசாரித்ததும் "அவளை என் அறையில் விட்டுப் பூட்டித் திறவுகோலை ஆண்டாளிடம் கொடுத்திருக்கிறேன். அவள் பத்திரமாயிருக்கிறாள்" என்று சொன்னர். தன் சாமர்த்தியமான செய்கைக்குத் தன் சகோதரி மெச்சுவாள் என்பது அவர் கருத்து. ஆனல் விதரணி இதனைக் கேட்டுச் சம்மதித்திலள்.

விதரணி:—என்ன அண்ணு! உம்மைப்போல் பயங்காளி மனிதன் வேறு ஒருவரும் இல்லை. என் மருமகளை வழிக்குக் கொண்டுவர என்னிடம் ஏன்ஒப்பிக்கக்கூடாது? நீர் எதற்காக இவ் விஷயத்தில் தலையிட்டுக் கொள்ளுகிறீர்? அவளுக்குத் தகுந்த புத்திமதிகளைச்சொல்லி நம் வழிக்குத் திருப்பிவிடலாம் என்று எவ்வளவோ யோசித்துக்கொண்டிருந்தேன். நீர் அவளைக் கோபமூட்டி நான் சொல்வதற்குக் காது கொடாது செய்துவிட்டீர். ஸ்திரீகள் புருஷர்களுக்கு அடிமைகளா? மகமதிய ஸ்திரீகளைப் போல் எங்களைப் பூட்டிவைக்க வேண்டுமா? ஸ்திரீ புருஷர்களுக்கு சுதந்தரம் பொதுவானதுதானே. காரணங்களை நல்ல மாதிரியாகச் சொல்லி சமாதானத்தால் எங்களை உங்கள் வழிக்கொண்டு போகலாமே தவிர பயப்படுத்தி பலவந்தம்செய்து திருப்பமுடியாது. எனக்கு உலகத்தில் மிகுந்த அனுபவமுண்டு. எக்காரணங்களைச் சொல்லி சோபையை நம் வழிக்குத்திருப்பலாம் என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆனல் உமது நடத்தையால் அது என்றும் பலிக்காது போம்படி செய்துவிட்டீர்"

வத்ஸர்:—ஆம் அம்மா, நான் எப்பொழுதும் தவறுகத்தான் செய்துவிடுகிறேன்.

விதரணி:—அண்ணு! உமக்குத்தெரியாத விஷயத்தில் நீர்தலையிட்டாலொழிய தவறு செய்கிறதில்லை. லோகவிஷயங்களெல்லாம் நான் நன்கு அறிவேன் என்று உமக்கு நன்றாகத் தெரியுமே. என்னிடமிருந்து சோபையை நீர் இட்டுக்கொண்டு வராதிருந்தால் அவள் எவ்வளவோ புத்தியுடையவளாயும் சௌக்கியமாயு மிருப்

பாள். உமது வீட்டிலேயே நீர் வைத்துக்கொண் டிருந்ததினல் தான் இவ்வித நூதனக்காதலும் இன்னும் பல துர்நடத்தைகளும் கற்றிருக்கிறுள்.

வத்ஸர்:—இதையெல்லாம் நான் அவளுக்குக் கற்றுகொடுத் தேன் என்று என்னைத் தூற்றுகிறுயா?

விதரணி:—வியாசர் சொல்லுகிறபிரகாரம் உமது அறியாமை என்னல் சகிக்கக்கூடியதாயில்லை.

வத்ஸர்:—வியாசர் பாழாய்ப் போகட்டும். அவன் எவ்வளவு பெரிய மனிதனுயிருந்தாலும் அக்கறையில்லை. என் முன்னர் அவ னிப்படிச்சொல்லியிருந்தால் அவன் கன்னத்தில் ஓங்கி ஒரு குத்து குத்தியிருப்பேன். உன்னல் சகிக்கமுடியவில்லையா? என்னை ஒரு பள்ளிப்பிள்ளைபோல் அடிக்கடி நடத்துகிறுய். அது சகிக்கமுடியு மா? அரண்மனையில் போய் சிலகாலம் வசித்திராதவர்கள் எல்லாம் மடையர்கள் என்று எண்ணிவிட்டாயோ? அரண்மனையைக் காக் கும் சில அற்பர்களைத்தவிர உலகத்திலிருப்போர்கள் முழுமூடர் களா? அவனவனுக்குக் கொடுத்த அறிவு அவனவனுக்கிருக்கும்.

விதரணி:—இதையெல்லாம் என்னிடம் பேசாதீர். உமது பெண்ணின் நன்மையைப்பற்றிக் கொஞ்சம்யோசியும். எதற்காக வீண்வாதம் பேசுகிறீர்?

வத்ஸர்:—இப்பொழுதுதானே அவள் மீது அக்கரை கொண் டதற்காக என்னைக் கடிந்தாய். உன்னிடம் அவளை ஒப்புக்கும்படி சொன்னயே.

விதரணி:—நீர் நடுவில் வந்துகலப்பதில்லை என்று வாக்குக் கொடுத்தால் அவளை நான் சீர்திருத்த ஒப்புக்கொள்ளுகிறேன்.

வத்ஸர்:—சரி அப்படியே செய். ஸ்திரீகளைச் சரியான வழிக் குக்கொண்டுவர ஸ்திரீகளே தக்கவர்கள் என்று நான் எத்தனை தடவையோ சொல்லியிருக்கிறேன்.

விதரணி உடனே அவ்விடம்விட்டுப் புறப்பட்டு சோபை காவலிலிருந்த அறைக்குப்போய் அவளை விடுதலைசெய்தாள்.

7. சம்புடம்.

1. அத்தியாயம்.

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டு முயர்வு.

தாமோதரனுடைய தணிமணிகள் மறுநாட்காலை ஆளவந்தாரால் அவனிடமனுப்பப்பட்டன. அவற்றுடன் அடியில் வருமாறு வரையப்பட்டிருந்த ஒரு கடிதமும் இருந்தது.

தாமோதரா,

என்னுடைய மாமனால் இந்தக் கடிதம் உனக்கு எழுதியனுப்பும்படி கட்டளையிடப்பட்டேன். வேண்டிய ருசுக்களை எல்லாம் அறிந்து தீர்க்காலோசனை செய்தபிறகு அவர் இந்த சிகைக்ஷை உனக்கு விடுத்தார். ஆதலால் எக்காரணங்கொண்டும் அவருடைய உத்திரவை மாற்றமாட்டார். நீ சோபையைக் காதலிப்பதை விட்டுவிட்ட தாய் எழுதியிருந்ததை நோக்க அவர் மிக்க ஆச்சரியப்படுகிறார். பிறப்பினும் செல்வத்திலும் மற்றெவ்விதத்திலும் உன்னைவிடப் பன்மடங்கு மேலான அப்பெண்ணை நீயடையலாம் என்று கருதியது சாத்தியமாகுமோ? இந்தவேசத்தை விட்டு உடனே அகலும்படியாக என் மாமன் உனக்கு உத்திரவளிக்கிறார். இனிமேலாவது உன் நடக்கையைச் சீர்ப்படுத்துவாயென்று நான் வேண்டுகிறேன். கடவுள் உன்னை நல்லவனுக்கவேண்டுமென்பது என் கோரிச்சை.

இப்படிக்கு:

பிலவங்கன்.

இக்கடிதத்தைப்படித்ததும் தாமோதரனுக்கு மனம் பலவிதமாய்ப் போராடியது. துக்கம் ஒருபுறமும் கோபம் ஒருபுறமும் அவனை ஆட்கொண்டன. பைத்தியம் பிடித்தவன்போலானான். அவன் இதயம் வெடித்து விடும்போலடித்துக்கொண்டது. கடைசியில் கண்களினின்றும் நீர் தாரை தாரையாகப் பெருகிற்று.

அழுவதை நோக்க அவனுக்கு வெட்கமாயிற்று. இடத்தை விட்டு எழுந்து "சரி, ஆளவந்தார் உத்திரவுப்படியே இந்த தேசத்தை விட்டுச்செல்வேன். ஆனால் எங்குபோகிறது. விதி எங்கு கொண்டு விடுகிறதோ அங்கு போவோம். என்னைப்பற்றி கவலைப்படுபவர் இவ்வுலகத்தில் யாருமே இராததால் நானும் எதற்காகக் கவலைப்படவேண்டும். மற்றவர்களுக்கில்லாதது எனக்கென்ன? இந்த உலகமெல்லாம் என்னை லக்ஷியம் செய்யாதபோதிலும் ஒருவர் என் துயரத்திற்கு மனமிரங்கினால் அதுவே அனைத்திலும் மேலானது. எனது சோபை எனக்கு என்ன நேர்ந்தென்பதைப்பற்றிக் கவலை கொள்ளாதிராள். இப்படிப்பட்ட ஓரீரு சினேகிதியை நான் இட்டுக்கொண்டு போகலாமா? போயின் நாம் எங்கே இருப்பது? எப்படி வகிப்பது? என்னைப்போலவே அவளுக்கு ஆசை யிருந்தபோதிலும் அவளை நான் எப்படித் தனித்துப் பார்க்கமுடியும்? அவள் தந்தை கோபமடைந்து அவளைத் துன்புறுத்துவாரே, எதற்காக நான் அவளைப்பார்க்கவேண்டும்? இந்தவுணர்வதியை 'உன் நாசத்தை நீயே தருவித்துக்கொள்'

என்று சொல்லும் பொருட்டாகவா காண்பேன். என்னுடைய இச்சையைப் பூர்த்திசெய்யும் பொருட்டு அவளை இவ்வளவு ஆபத்திற்கு உட்படுத்துவதா? இந்த எண்ணத்திற்காக ஒரு திருடனைப் போல் இந்த தேசத்தில் மறைந்து வாழ்வதா? மாட்டேன், மாட்டேன். இந்த எண்ணத்தையே வெறுக்கிறேன். போய்வருகிறேன் சோபை, போய்வருகிறேன் சரஸி, போய்வருகிறேன் அந்தரங்கப்பிரியை என்று சொல்கையிலேயே மேற்சொல்ல முடியாமல் கண்களினின்றும் நீர் பெருகிவழிந்தது.

தேசத்தை விட்டு வேறு தேசம்போவது என்று உறுதி செய்துகொண்டும் எங்கு போவதென்று யோசிக்கலானான். இவ்வளவு பெரிய உலகில் போவதற்கு வேண்டிய இடமிருந்தும் யாரைப்போய் உதவி கேட்பதென்று அவனுக்குத் தெரியவில்லை. தனக்குத்தெரிந்தவர்கள் எல்லாம் ஆளவந்தாருடைய சினேகிதர்கள். நல்ல பெயரும் புகழும் படைத்திருந்த ஆளவந்தாரே தன்னைக் துறத்திவிட்டதால் மற்றவர்கள் ஒருவரும் தனக்கு உபகாரம் செய்யமாட்டார்கள் என்று எண்ணிவிட்டான்.

இன்னபடி ஜீவனம் செய்வது; இன்னதொழில் புரிவது என்பது அவனுக்கு ஒன்றும் ஏற்படவில்லை. ஒவ்வொரு தொழிலும் ஆரம்பிப்பதற்குப் பணம் வேண்டியிருப்பது மல்லாமல் ஒன்றுவது உடனே லாபம் கிடைக்க கூடியதாயில்லை. கடைசியில் அனுதைகட்கு ஜீவனம் கொடுக்கும் சமுத்திரம் போவதென்று நிச்சயித்தான். அதாவது கப்பலில் வேலை செய்வதாக எண்ணினான். உடனே அவன் துறைமுகப் பட்டணமாகிய பரஸ்தலம்நோக்கிப் புறப்பட்டான்.

அவன் அங்கு போகுமுன் நாம் வத்ஸர் வீடுபோய் அங்கு சோபைக்கு என்ன நேர்ந்தது என்று பார்ப்போம்.

2. அத்தியாயம்.

நயனில னென்ப சொல்லும் பயனில
பாரித் துரைக்கு முரை.

தாமோதரன் புறப்பட்டுப்போன காலையில் சோபை அறைக்குள் விதாரணிசென்று விவாகத்தைப்பற்றி ஒரு நீண்ட உபன்னியாசம் பின்வருமாறு செய்தாள். கல்யாணமென்பது புலவர்களால் வர்ணிக்கப்படும் காதலால் உண்டாகும் ஓர் இனிய சுகமென்றுவது, சாஸ்திரங்களால் கூறப்படும் சடங்கென்றுவது நப்பி விடத்கூடாது. ஆனால் அது புத்திசாலி ஸ்திரீகள் தங்கள் செல்வத்தைப் பெருக்கி அதற்கு உயர்ந்த வட்டி வரும்படியான உபாயத்தைச்செய்து கொள்ளும் ஓர் உடம்படிக்கை என்றுள்.

சோபை:—அத்தை, தங்களுடைய புத்தியும் அனுபவமும் சாதாரணமானதன்று, இந்த விவாகத்தைப்பற்றி நான் கொஞ்ச மேனும் யோசனை செய்யவேயில்லை. ஆகையால் உன்னோடு என்னால் வாதிக்க முடியுமா?

விதரணி:—வாதிக்கவாவது குழந்தாய்! நான் அதை எதிர்ப் பார்க்கவில்லை. உன் வயதுப் பெண்களோடு நான் வாதிக்கிறதாலுல் என் அனுபவத்திற்கு என்ன கௌரவம்? நான் உனக்குப் புத்தி புகட்டும்படி வந்திருக்கிறேனுக்கும். முன்காலத்து சாஸ்திர நிபுணர்களான பராசரர், யாக்ஞவல்கியர் முதலியோர் தங்கள் சிஷ்யர்களுடன் வாதிக்கிறதேயில்லை. நான் உன் அபிப்பிராயத்தைக் கேட்க வரவில்லை. என் அபிப்பிராயத்தை உன்னிடம் சொல்ல வந்திருக்கிறேன்.

சோபை:—அத்தை, உன்னோடு தர்க்கிப்பதாக நான் எண்ணவேயில்லை. விவாக விஷயத்தைப்பற்றி நானிது வரையில் நினைத்ததுமில்லை, இனி நினைக்கப்போகிறதுமில்லை.

விதரணி:—அப்படியா சோபை, இந்த ஜாலம் யாரிடம் செய்கிறாய். பெரிய மூடத்தனம். நீ கலியாணத்தை எண்ணவில்லை யென்று என்னிடமா சொல்கிறாய்? நீ இச்சிக்கும் புருஷன் இன்னன் என்று எனக்குத் தெரிந்திருக்கும் பொழுது என் கண்ணில் மண் தூவப்பார்க்கிறாயே. கிடக்கிறது, இதுவரையில் நீ விவாகத்தைப்பற்றி யோசிக்காதிருந்தாலும் இப்பொழுதாவது ஒரு முடிவுக்கு வரவேண்டும். என் தமயன் உன்னைப் பிலவங்களுக்கு சீக்கிரத்தில் விவாகம் செய்யவேணு மென்கிறார். உன் சம்மதத்தைப் பெற்று வருவதாக நான் ஒப்புக்கொண்டு வந்துவிட்டேன். என் வாக்கைத் தட்டாமல் நிறைவேற்றவேண்டும்.

சோபை:—இந்த ஒரு விஷயத்தில் மாத்திரம் உனக்கும் என் தகப்பனாருக்கும் நான் கீழ்படியமாட்டேன். இந்த வரனை வேண்டாமென்று நிராகரிப்பதற்கு அதிக யோசனை வேண்டிய தில்லை.

விதரணி:—என் பொறுமை வரம்பு கடக்கும்படி செய்கிறாய். இச்சிறுவனை மணக்க உனக்கென்ன ஆக்ஷேபனை.

சோபை:—என்னுடைய அபிப்பிராயத்தில் யாரும் மறுக்க முடியாத ஒரு ஆக்ஷேபனை இருக்கிறது. அதாவது நான் அவனைப் பகைக்கிறேன்.

விதரணி.—உனக்கு இன்னும் சரியான பதங்களை உபயோகிக்கத் தெரியவில்லையே. நீ அகராதியைப் படித்துக்கொள்ள வேண்டும். அவன் உனக்கு ஒரு தீங்கும் செய்யாதிருக்க நீ அவனை எப்படிப் பகைக்கக்கூடும். ஆதலால் "அவனை நான் வெறுக்கி

றேன்" என்பதற்கு பதிலாக "பகைக்கிறேன்" என்று சொல்கிறாய். விரும்பாமலிருப்பது கலியாணத்திற்குத் தடையன்று. எத்தனையோ தம்பதிகள் முதலில் ஒருவரை யொருவர் விரும்பாதிருந்தது எனக்குத்தெரியும். இந்த விஷயங்கள் உன்னைவிட எனக்கு அதிகமாகத் தெரியுமென்று நம்பு.

சோபை:—அப்படியானால் நான் விரும்பாத மனிதனை மணக்கமாட்டேன். அத்தை, என் தகப்பனாருக்கு இஷ்டமிராதவனை மணப்பதில்லை என்று நான் வாக்குக்கொடுத்தால் அப்படியே அவரும் நான் விரும்பாதவனை மணக்கும்படி பலவந்தம் செய்யாதிருக்கவேண்டும்.

விதரணி:—விருப்பமா? நீ சொல்வதையெல்லாம் கேட்க எனக்கு மிக்க ஆச்சரியமாக இருக்கிறது. உன் வயதொத்த விவாகமாகாத சிறுமி இஷ்டத்தைப்பற்றிச் சொல்லவாவது? உன் இஷ்டம் எதுவாக விருந்தபோதிலும் என் தமையனார் நிச்சயம் செய்து விட்டார். நீ இஷ்டத்தைப்பற்றிப் பேசுவதால் முகூர்த்தத்தைத் தாமதப்படுத்தும்படி செய்கிறேன், இஷ்டமா! இஷ்டம்.

சோபை:—பிரகாசம் பொருந்திய கண்களில் நீர்தளும்ப தன் அத்தையின் கால்களில் விழுந்து தன்மேல் அனுதாபம் காட்டும்படிக்கும் தனக்கிஷ்டமில்லாத விடத்தில் கொடுத்து தன்னைத் தீராத்துயரத்திற்கு உட்படுத்தாதிருக்கும்படிக்கும் மன்றாடிக் கேட்டுக்கொண்டாள்.

கோர்ட்டு வாரண்டைக் கையில் வைத்திருக்கும் ஒரு அமீன் கடன்காரனைப் பிடித்துக் கொண்டதும் அவன் கண்ணீர்விட்டு அழுவதையும், அவன் பிரியமுள்ள மனைவியின் துயரத்தையும் மதலைச்சொல் மாறாத சிறுகுழந்தையின் மாறாட்டத்தையும், பயந்து ஓடின பெண்குழந்தையின் நிலைமையையும் அவன் கண்டும் கொஞ்சமேனும் மனமிரக்கமும் தாக்ஷண்ணியமும் இல்லாமல், மனமூனைந்து கெஞ்சிக் கேட்பதற்கும், மனஞ் சோர்வடைந்த சோக காக்ஷிக்கும் இறங்காமல் எப்படிப் பற்றி இழுத்துப் போய் மறியலில் வைக்கிறானோ அப்படியே சோபையின் அத்தை சோபையினுடைய கண்ணீர்ப் பெருக்கை நோக்கினாளில்லை, மன்றாட்டத்தையுங் கேட்டாளில்லை, பிலவங்கனிடம் அவளை ஒப்பித்தே விடுவதென்று முடிவிட்டுக்கொண்டாள். அவள் சோபையைப் பார்த்து "தஷ்டமும் சுகமும்உன்னுடையதாதலால் நாங்கள் இதில் தலையிடவேண்டா மென்கிறாய்? குலத்தினுடைய மேன்மையை ஸ்தாபிக்கிறவழி இதுவாதலால் இதற்கு நாங்கள் கர்த்தாவும் நீ கருவியு மாகிறாய். சோழதேச ராஜகுமாரனுக்கும் சேரதேச ராஜகுமாரிக்கும் கலியாணம் நடக்கிறதென்று வைத்துக்கொள். இந்த விவாகம் இவர்கள் காதலை உத்தேசித்தா செய்

கிறார்கள்? இல்லை, ராச்சிய தந்திரங்களை எண்ணி நடத்துகிறார்கள். அம்மாதிரிதான் நம்போன்ற பெரிய குடும்பங்களின்சம்பந்தமும். ஆளவந்தார் குடும்பத்தோடு நம் குடும்பம் சம்பந்தம் செய்யவேண்டிய அவசியம். உன்சொந்த சுகத்தை நாடுவதினும் நமது குடும்பத்தின் கௌரவத்தை நீடிக்கச்செய்வது முக்கியமானது. ராஜகுமாரிகளே குடும்ப கௌரவத்திற்காகத் தம்மனம் செல்லாவிடத்திலும் மணம்புரிந்து கொள்வதால் இந்த விவாகத்தால் அவர்களிலும் உனக்கு என்ன இழிவு உண்டாய் விடும்.

சோபை:—அத்தை, நமது குடும்பத்தின் கௌரவத்தைக் குறைக்கும்படியாக நான் ஒன்றும் செய்யமாட்டேன். ஆனால் எது நேரிட்டாலும் சரி எவ்வளவு பலவந்தித்தபோதிலும் நான் பிலவங்களைப் பகைக்கிறபடியால் அவனைப் புருஷனாக அடையவே மாட்டேன்.

இச் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டே வத்ஸர் கொஞ்ச தூரத்தில் நின்றிருந்தார். சோபையின் பிடிவாதத்தைக் கேட்டதும் அவருக்குப் பெருங்கோப மூண்டாகி அறைக்குள் புகுந்து தனது வாய்ச்சொல் விளங்காவாறு பெருஞ்சத்தமிட்டார். அவருடைய சகோதரிக்குச் சோபையின்மேல் அதிககோப மூண்டாகியிருந்தும் அப்போது வத்ஸர் உள்ளே வந்ததால் கோபத்தை எல்லாம் அவர்மேல் திருப்பினாள். "அண்ணை, என்னிடம் காரியத்தையெல்லாம் ஒப்பித்தபிறகு நீர் இப்படி நடுவில்வந்து கலப்பது மிக்க ஆச்சரியமாயிருக்கிறது. நமது வமிசத்தின்மேலிருக்கும் மதிப்பினால் உமது பெண்ணின் தூர்க்குணங்களை நீக்குவதாக ஒப்புக்கொண்டேன். நீர்தான் அவள் தூர்க்குணத்திற்குக் காரணம். சோபை இளமையாக இருந்தபோது பல சற்புத்திகளை நான் அவளுக்குப் புகட்டி இருக்கேன். அவள் உம்மிடம் வந்தபிறகு அவற்றையெல்லாம் களைந்து தூர்க்குணத்தை நிறப்பிவைத்திருக்கிறீர்" என்றாள்.

வத்ஸர்:—(கண்கள் நிப்பொறி பறக்க முகம் சிவந்து) "நீ சொல்வது பேயின் பொறுமையையும் பறக்கடிக்கச் செய்யுமே. என்பெண்ணுக்குக்கீழ்ப்படியாமையை நான்கற்பித்தேனா? இதோ தான் அவள் நிற்கிறாளே. உண்மையைப் பேசு பெண்ணே. எப்பொழுதாவது நான் சொல்வதைக்கேளாதே என்று உன்னிடம் நான் சொன்னதுண்டா? நீ எனக்குக்கீழ்ப்படிந்திருக்கும் பொருட்டாக உன்மனம்போன படியெல்லாம் செய்து நீ திருப்தியடையும்படி நான் செய்யவில்லையா? அவள் சிறு குழந்தையாக விருந்தபோழ்துளனக்குளவ்வளவோ கீழ்ப்படிந்திதானிருந்தாள். நீ அவளை வளர்க்க ஆரம்பித்து அரண்மனை வழக்கங்களையெல்லாம் கற்பித்த பிறகுதான் இப்படியாகிவிட்டாள். நீ சற்றுமுன் அவள் ராஜ

குமாரிபோல் நடக்க வேணுமென்று சொல்ல நான் கேட்கவில்லையா? இப்படியெல்லாம் கற்பிக்கப்பட்டபிறகு அவள் எப்படி ஒருவருக்குக் கீழ்ப்படிவாள்.

விதரணி:—நீர் சொல்வதைக் கேட்க மிக்க வெறுப்பாயிருக்கிறது. கீழ்ப்படியாமையை நான் கற்றுக் கொடுத்திருக்கிறேனென்று நானுந்தான் உமது பெண்ணைக் கேட்கிறேனே. ஏசோபை! உலகத்தில் ஜனங்கள் நடந்துகொள்ளவேண்டிய விதத்தைப்பற்றி உனக்கு நான் புத்தி புகட்டவில்லையா? பெற்றோரின் உத்தரவைத் தலைமேற்கொண்டு அதற்கிணங்கி நடப்பதே மக்களின் கடமையென்று நான் எவ்வளவு கஷ்டப்பட்டு உபதேசித்திருக்கிறேன். இதில் பராசரஸ்மிருதியிலிருந்து மேற்கோள் எடுத்துக்காட்டவில்லையா? உன்னை நான் வளர்ப்பதற்குமுன் தந்தைக்கும் மகளுக்கு முள்ள சம்பந்தம் இன்னதென்றே உனக்குத் தெரியாமலிருக்கவில்லையா?"

வத்ஸர்:—நீ சொல்வது சுத்தப்பொய். இந்தப் பெண்ணுக்கு வயது பதினொன்றரையும் அவளுக்கும் அவள் தந்தைக்கும் இன்ன உறவு என்று தெரியாமலிருப்பாளா?

விதரணி:—அந்த அறியாமையை என்னவென்று சொல்லுகிறது. நீர் நாக்கில் நரம்பில்லாது பேசுவதற்குப் பிரம்பெடுத்து வீசுவதே சரி.

வத்ஸர்:—உன்னால் கூடுமானால் அப்படியே செய். உன்னுடைய மருமகளும் உனக்கு ஒத்தாசை செய்யத்தயாராக இருப்பாள்.

விதரணி:—அண்ணா, உம்முடைய உதாசினத்தை இனி நான் பொறுக்கமாட்டேன். உம்மைநான் வெறுக்கிறேன். இப்பொழுதே உமது வீட்டைவிட்டு நான் போகப்போகிறேன், என்வண்டி தயாராகட்டும்.

வத்ஸர்:—சனி விட்டாற்போலாயிற்று. நானும் உன் உதாசினத்தைப் பொறுத்துக்கொண்டிருப்பதில்லை. நீ அடிக்கடி என்னை வெறுக்கிறதாகச் சொல்வதனால்தான் என் மகள் என்னை மதிப்பதில்லை.

விதரணி:—நல்லது, நல்லது, உன்னைப்போன்ற நாட்டுப்புறத்தானுக்கு மதிப்பென்ன வேண்டியிருக்கிறது.

வத்ஸர்:—என்னை ஏளனம் பண்ணுகிறாயா? நான் எப்பேர்ப்பட்ட குலத்தில் உதித்தவன் தெரியாதா?

விதரணி:—உம்மைப்போன்ற புத்திசாலி இருப்பதினால்தான் நமது ராஜ்யம் கூனிக்குறுகி வருகிறது.

வத்ஸர்:—ராஜ்யத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்துவிட்டாயா? பெண்பிள்ளைகளிந்த விஷயத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்தால் எனக்கு வெறுப்புண்டாகிறது.

இதைக்கேட்ட விதரணிக்கு பிரமாத கோபமுண்டாகி வாயில் வந்தபடியெல்லாம் வத்ஸரைத் திட்டிவிட்டு அவ்விடத்தை விட்டு வெளிப்பட்டு ஓடினாள். வத்ஸராவது சோபையாவது அவளைத் தடுத்துப் பிடிக்க பிரயத்தினப்படவில்லை. சோபையின் துக்க மும் வத்ஸரின் கோபமும் அவர்களை நகரவிடாது செய்துவிட்டது. அந்த சமயத்தில் வேறு அனுபவம் தெரிந்த ஸ்திரீயாக இருந்தால் வத்ஸருடைய செய்கையை மெச்சி அவரைச் சினேகம் செய்து கொண்டு தன் காரியத்தைச் சாதித்துக்கொண்டிருப்பாள். ஆனால் சோபையோ கபடமென்பதே தெரியாத சாது.

3. அத்தியாயம்.

கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

தன் சகோதரி வெளிச்சென்றதும் வத்ஸர் புருஷர்களுடைய பரிதாப நிலையைப்பற்றிப் புலம்பலானர். "புருஷர்கள் எப்படிப் பட்டவராயினு மொரு கேடுகெட்ட ஸ்திரீக்குள் அகப்பட்டு விழி துக்கொண்டு இருக்கவேண்டியதாயிருக்கிறது. உன் தாயார் கையில் நான் அகப்பட்டுக் கஷ்டப்பட்டது எனக்குப்போதாதா?" அவ ளிடமிருந்து மெதுவாகத் தப்பித்துக்கொண்டால் இதோ இன் னொருத்திவந்து என்னைப் பிராண சங்கடம் செய்கிறாளே. இப் படியேன் ஸ்திரீகளிடம் அகப்பட்டு நான் திண்டாடவேண்டும்?" என்றார்.

சோபை தன் தாயாரைத் தனது பதினோராம் வயதிலேயே இழந்து விட்டாள். அவள் தாயை மிக்க ஆர்வத்துடன் காதலித்து வந்தவள். அவளைப்பற்றித் தன் தகப்பனார் ஏதாவது தூஷணையா கப் பேசினால் அவளுக்குப் பரிந்தேவருவாள். இது தவிர தன் தகப்பனிடம் வேறு சண்டை போடுவதே வழக்கமில்லை. இப் பொழுது பிலவங்கன் விஷயம் வந்த பிறகுதான் வீட்டில் சச்சரவு உண்டாகியது. கல்யாணமானது முதல் வத்ஸர் தனது மனைவியை தன்வீட்டு வெள்ளாட்டியாகவே எண்ணிவந்தார். அந்த மாதும் கொஞ்சமேனும் வெறுப்பின்றி வீட்டுவேலையைஒப்புக்கொண்டே செய்துவந்தாள். ஆதலால் அவளை அவர் வாரத்திற்கு ஒரு தட வைக்குமேல் திட்டுவதே இல்லை. தொட்டு அடித்த தோஷத்திற் கும் போகவில்லை. இவரிடம் அந்த அம்மாள் மனஸ்தாபப்படவும் காரணமில்லை. ஏனெனில் காலை வேளையெல்லாம் இவர் நிலங்களைப்

போய்ப் பார்ப்பதிலும் வேட்டையாடுவதிலும் கழிப்பார். மாலை வேளையில் சினேகிதர்களைக் கூப்பிட்டுக்கொண்டு வம்புப் பேச்சுப் பேசுவார். சாப்பாட்டு வேளை தவிர மற்றெப்பொழுதும் அவளை அவர் காண்பதேயில்லை. வீட்டு வேலைக்காரர்களெல்லாம் அன்றன்றையவேலை முடித்துப் படுக்கப்போன பின்பு ஐந்து நிமிஷத்திற்கு அப்புறமிவள் படுக்கைக்குப்போவாள். வத்ஸர் பகலில் எல்லாம் ஆடி ஓடிக் காரியம் பார்த்தும், களியாட்டயர்ந்தும், அஸ்தமனமாகிய கொஞ்ச நேரத்திற்குள் நல்ல நித்திரை போய் விடுவார். அதிகாலையிலெழுந்து வேட்டைக்குப் புறப்பட்டு விடுவார். ஆதலால் அவர் தன் மனைவியைச் சாப்பாட்டுவேளை தவிர மற்றெப் பொழுதும் பார்ப்பதில்லை. அவளும் தன் காலத்தைத் தன்னிஷ்டப்படியே கழித்து வந்தாள். அவளுக்கு இஷ்டமில்லாதிருந்தும் அவளுடையதந்தைசெல்வத்தைஉத்தேசித்து வத்ஸருக்கு மணம் புரிவித்தார். அதனால் அவள் முகம் எப்போதும் வாட்டமடைந்தேயிருக்கும். சமயம் வந்தால் சில வேளைகளில் தன் புருஷன் மதுபானம் செய்வதற்காக அவனை மெதுவாகக் கடிந்து பேசுவாள். அவர் சிலவேளைகளில் மிக்க குதூகலத்துடன் அவளுடன் குலாவவந்தாலும் அவள் சுணங்கிய முகத்துடனேயே இருப்பாள். ஒருதடவை தன்னை இரண்டு மாதகாலம் அவர்தீபரம் இட்டுப் போகும்படி கேட்டுக்கொண்டாள். அதற்கு அவர் கொஞ்சமேனும் சம்மதிக்கவில்லை. அவர்தியில் புருஷர்கள் எல்லாம் தங்கள் ஸ்திரீகளை வேறு ஒருவன் அனுபவிக்க விட்டுவிட்டுப் பார்த்துக்கொண்டிருப்பார்கள் என்று கேள்விப்பட்டதால் தன் மனையின் வேண்டுகோளுக்காக அவள்மேல் வத்ஸர் கோபமடைந்தார்.

இதனலும் மற்றும் பல காரணங்களாலும் அவர் தன் மனைவியை வெறுத்தேவந்தார். அவள் சாகிறவரையில் தன் வெறுப்பை விடுக்காதிருந்ததுபோலவே அவளிறந்த பிறகும் அவ்வெறுப்பை மறக்கவில்லை. தனக்கு ஏதேனும் சங்கடம் நேர்ந்தால் உடனே அவர் "என் மனைவி இப்போது உயிரோடிருந்தால் இதைக்கண்டு களிப்பாள்" என்பார்.

இந்த வசைகளைச் சோபைக்கு எதிரிலேயே சொல்வார். ஏனெனில் தான் சோபையை மிகவும் காதலித்து வந்தபோதிலும் சோபை தன்னைவிட தன் தாயாரிடத்தில் அதிக ஆசை வைத்திருக்கிறாள் என்று அவர் பொறுமைப்பட்டார். இப்படித் தன் மனைவியைச் சோபைக்கு முன் வைவது அவர் பொறுமையை அதிகரிக்கச்செய்தது. சமயங்களால் சோபையும் தன் தாயை வெறுத்துப்படி தூண்டுவார். ஆனல் அதற்கு அவள் கொஞ்சமேனும் இணங்கினவளல்ல.

4. அத்தியாயம்.

நகையு முவகையும் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற.

மேலே வத்ஸருக்கும் அவர் சகோதரிக்கும் நடந்த சம்பாஷணையில் சோபை ஒரு வார்த்தையும் பேசவில்லை. கேட்டகேள்விகளுக்குப் பெருமூச்செறிந்தாளேயன்றிப் பதில் ஒன்றும் சொன்னாளில்லை. ஆதலால் வத்ஸர் அவளைப் பார்த்து "நீ எப்படி உன் தாயோடு சேர்ந்து எனக்கு விரோதமாகப்பேசி வந்தாயோ அப்படியே இப்பொழுதும் என் எதிரிகளின் பக்கம் சேர்ந்து என்னை வஞ்சத்திற்கு மாறாக நடக்கத் தயாராக விருக்கிறாய்" என்றார். சோபை இதற்கும் மௌனமாக விருந்தாள்.

வத்ஸர்:—நீ என்ன ஊமையா? எதற்கும்பேராதிருக்கிறாயே? உன் தாயார் எனக்குக் கெட்டவளாக இல்லையா? அதற்குப்பதில் சொல். உன் தந்தையை நீ வெறுத்து அவனுடன் பேசுவதும் சரியல்ல வென்று நினைக்கிறாய்போலும்.

சோபை:—அப்பா, நான் மௌனமாக இருந்ததற்கு இப்படி விபரீதமாகப்பொருள் கொள்ளுகிறீர்கள். தங்களிடம் நான் மரியாதை இல்லா திருப்பதைவிட சாவது மேலென்றெண்ணக் கூடியவள். நான் பேசினால் தங்களுக்குக் கோபத்தை உண்டாக்கும் அல்லது என்னை எவ்வளவோ சீராட்டிப் பாராட்டி வளர்த்த அன்புள்ள தாய்க்கு நான் கிருதக்ஞை யற்றவளாகவேண்டும். அப்படி இருக்க எப்படிப் பேசத்துணிவேன்.

வத்ஸர்:—உன்னுடைய அத்தையையும் எனக்கு உத்தம சகோதரி என்று சொல்வாயோ? அவளாயினும் கெட்டவள் என்று ஒப்புக்கொள்ள மாட்டாயா? அதைச் சொல்லும்படிக்கு உன்னைப் பலவந்தம் செய்யலாம் என்று எண்ணுகிறேன்.

சோபை:—அப்பா, என் அத்தை எனக்கு எவ்வளவோ நன்மை செய்திருக்கிறாள். என் தாயாரிறந்தபின் அவள்தான் என்தாயாரைப்போல் ஆதரித்தாள்.

வத்ஸர்:—எனக்கும் மனைவி யிறந்தபிறகு அந்த மனைவியைப் போல் தான் அவளும் குணம் படைத்திருக்கிறாள். ஆகையால் அவள் பக்கம் தான் பரிந்து பேசுவாயோ? அவளைப்போல் உலகத்தில் குரோதமுடைய சகோதரி இல்லை யென்று ஒப்புக்கொள்ள மாட்டாயோ?

சோபை:—நான் ஒப்புக்கொண்டால் பெரும் பொய் சொல்லியவளாவேன். தாங்களும் என் அத்தையும் பலவிஷயங்களில் ஒரே மனதுடையவர்களா யிருப்பதில்லை யென்று எனக்குத் தெரியும்.

ஆனல் தங்களிடத்தில் அவள் மிகுந்த பக்ஷம் பாராட்டியதை ஆயிரந்தடவை பார்த்திருக்கிறேன். அவளைப்போல் சகோதரவாஞ்சை யுடையவர்கள் வெகுபேரில்லை.

வத்ஸர்:—நீ சொல்வதற் கெல்லாம் அருத்தம் என்னவென்றால் நான் சொல்வதெல்லாம் தவறு என்கிறாய். ஆமாம் ஸ்திரீகள் தான் எப்பொழுதும் சரியாகப் பேசுபவர்கள். புருஷர்கள் தப்பு வழியிலேயே செல்பவர்கள் தான்.

சோபை:—அப்பா, என்னை மன்னிக்கவேண்டும். நான் அப்படிக்கு சொல்லவே இல்லை.

வத்ஸர்:—நீ என்ன சொல்லவில்லை? கொஞ்சமேனும் மரியாதையின்றி அவள் செய்கை சரியென்று சொன்னயல்லவா? அதனால் நான் சொல்லியது தவறு என்று ஏற்படவில்லையா? அவள் மந்திரியிடம் சென்று நான் ராச்சிய விரோதமான கலகத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறேன் என்று சொல்லி என்னஸ்திபையெல்லாம் பிடுங்கி அரசாக்ஷியில் சேர்ப்பித்து விடுவாள்.

சோபை:—தங்களுக்காவது தங்களுடைய ஆஸ்திக்காவது என் அத்தை ஒரு தீங்கு மிழைக்கமாட்டாள். நேற்று அவள் இறந்திருந்தால் அவளுடைய செல்வத்தை எல்லாம் தங்களுக்கே அளித்திருப்பாள்.

இந்தக் கடைசி வார்த்தையைக் கேட்டதும் வத்ஸர் குணம் மாறி விட்டது. இதுவரையில் சோபை பேசின வார்த்தைகளெல்லாம் பிரயோஜன மற்றிருந்தன. இந்தக் கடைசிவாக்கியம் சொன்னதும் அவர் திடுக்கிட்டுப் பிரமித்து மூகம் வெளுத்துப்போனர். கொஞ்சநேரம் மௌனமாயிருந்து விட்டு அடியில் வருமாறு தட்டித் தயங்கிப்பேசினர். "நேற்று, அவள் திரவியத்தை யெல்லாம் நேற்றுக்கொடுத்திருப்பாளா? கொடுத்திருப்பாளா? வருஷத்தில் இவ்வளவு நாளிருக்க நேற்று என்று எதற்காகச்சொன்னாய்? நாளைக்கு அவள் இறப்பின் நம் குடும்பத்தை விட்டு வேறு யாருக்காவது செல்வத்தை யெல்லாம் கொடுத்து விடுவாள்போலிருக்கிறது.

சோபை:—அத்தைக்குக் கோபமதிகமாகிவிட்டால் அவள் இன்னதுதான் செய்வாள் என்று யாரும் சொல்ல முடியாது.

வத்ஸர்—சொல்ல முடியாதா? அவளுக்கு இவ்வளவு வைராக்கியம் உண்டானதற்குக் காரணம் யார்? கோபத்தை முதலில் உண்டாக்கியது யார்? நான் அறைக்குள் நுழையும்போது நீயுமவளும் கோபத்துடன் வாதித்துக்கொண்டிருக்கவில்லையா? அன்றியும் எங்களுடைய சச்சரவு எல்லாம் உன்னால் ஏற்பட்டதல்லவா? இத்தனை வருஷங்களாயும் நான் என் சகோதரியுடன் சண்டைபோட்டதில்லை. உன் பொருட்டு சண்டைபோட நேரிட்டது. இப்பொழுது

அவள் செல்வத்தை வேறு ஒருவருக்குக் கொடுப்பதற்கு நான்தான் காரணமென்று என்மேல் பழிபோடுகிறாய். இது உனக்கு இயல்பு தானே. என்னுடைய பக்ஷத்திற்கு என்னென்ன விதமாய்ப் பிரதி செய்கிறாய்? யோசித்துப்பார்.

சோபை:—உங்கள் மனஸ்தாபத்திற்கு நான் காரணமாயிருந்தால் தாங்கள் என் அத்தையிடம் சென்று அவளுக்கு சமாதானம் சொல்லி இவ்வளவு கோபத்துடன் வீட்டைவிட்டுப் போகாதிருக்கும்படியாக வேண்டிக்கொள்ளுங்கள். அத்தையோ மிக்க நல்ல குணமுடையவள். மரியாதையாகப் பேசினால் திருப்தியடைந்து விடுவாள். ஆகையால் சீக்கிரம் போங்கள்.

வத்ஸர்:—உன் குற்றத்திற்காக நான்போய் அவளை மன்னிக்கும்படி கெஞ்சவேண்டுமா?

சோபை திரும்பவும் கெஞ்சி அவரைத் தன் அத்தையை நாடிப்போகும்படி செய்தாள். அவரும் வெகு வேகமாய்ப் போய் வண்டி புறப்படுமுன் தன் சகோதரியைத்திருப்பி அழைத்து வரும்படி புறப்பட்டார்.

சோபை தன் அறைக்குள் சென்று அங்கு பலவித எண்ணங்களை என்னி வருந்தினாள். தாமோதரனிடமிருந்து கிடைத்த கடிதத்தைத் திரும்பத்திரும்ப எடுத்துப் படித்தாள். அவள் தாவணியை எடுத்து அடிக்கடி கண்ணைத்துடைத்துக் கொண்டாள். கடிதம், தாவணி அவள் தேகம், எல்லாம் கண்ணீரால் நனைந்தன. இந்த சமயத்தில் ஆண்டாள் தோன்றித் துயரப்படும் எஜமானிக்குக் கூடிய மட்டும் சமாதானம் சொன்னாள். அனேகமனவன புருடர்களின் பெயரைச் சொல்லி அவர்களின் சாமர்த்தியத்தையும் அழகையும் வர்ணித்து அவர்களில் யாரையாவது ஒருவரை மணிக்கும்படி வருத்தினாள். ஆனால் சோபை இவைகளைக் கேட்டு சிற்ற முண்டாகி அவளைக்கடிந்து தன் முன் நிற்க வேண்டாமென்று துரத்தி விட்டாள்.

5. அத்தியாயம்.

எண்ணுக வெண்ணிச் செயல் வேண்டுந் தம்மோடு
கொள்ளாத கொள்ளா தலகு.

தன்சகோதரி வண்டியிலேறும் சமயத்தில் அவளைப் போய்ப் பிடித்துக் கெஞ்சியும் பலவந்தப்படுத்தியும் குதிரைகளை அவிழ்த்து விடுத்தும் நின்றுபோம்படி வத்ஸர் தூண்டினார். இதில் அவருக்கு அதிக சிரமம் தோன்றவில்லை. அவர் சகோதரி அவரது சாமர்த்தியத்திற்கும் அனுபவத்திற்கும் இகழ்ந்து கூறியபோதிலும் அவரிடத்தில் மிக்க பிரியம் வைத்திருந்தாள். இந்த சமாதான

த்தை ஆரம்பித்தது சோபை, இப்பொழுது இருவர் கோபத்திற் கும் இலக்காளுள். அவளுடைய நடத்தையைப்பற்றிக் கடிந்து தங் கள் இஷ்டத்திற்கு அவளை எப்படி உட்படுத்துவதென்று ஆலோ சிக்கலானுர்கள். உடனே ஆளவந்தாரிடம் சென்று அவருடன் கலந்து யோசித்துக் கல்யாணத்தைச் சீக்கிரத்தில் பலவந்தமாய் முடித்தால்தான் சோபை வழிக்கு வருவாளென்று அவள் அத் தை சொன்னுள். அதற்கு வத்ஸரும் சம்மதித்தார். அச்சமயத் தில் சோபையைக் கண்டு போகும்படி பிலவங்கன் அங்கு வந் தான். அவன் வந்ததைக் கேட்டதும் தன் சகோதரியின் யோச னைப்படி வத்ஸர் சோபையைத் தனியே அழைத்துக்கொண்டு போய் பிலவங்களை மிக்க மரியாதையாக நடத்தவேண்டுமென் றும், இல்லாவிட்டால் தக்கதண்டனை கிடைக்குமென்றும் சொன் னர்.

வத்ஸருடைய பிடிவாதத்திற்கு சோபை எதிர்சொல்லமுடிய வில்லை. பிலவங்களைப்பார்ப்பதாக ஒப்புக்கொண்டாள். தான் அரு மையாக நேசித்துவந்த தந்தையின் கட்டளையை எப்படிப் பிடி வாதமாய் மறுப்பது? தன் தந்தை மீதிருந்த அன்பினல் ஒத் துக்கொண்டாளே யன்றிப் பயத்தினல் ஒத்துக்கொள்ளவில்லை.

தந்தையின் இஷ்டத்திற்கு இணங்கிப் பிலவங்களைத் தன் அறைக்குள் அழைத்துக்கொண்டாள். ஆனல் அங்கு நடந்த சம் பாஷணை கொஞ்சமேனும் ரசமில்லாததால் வாசகர்களுக்குப் பிரி யப்படாது. அதனல் அதை விவரிப்பதில் பயனில்லை.

பிலவங்களல்லாது வேறு எவனேனும் சோபையிடம் வந்து சாமர்த்தியமாகப் பேசியிருந்தால் அவளது அந்தரங்கங்களெல் லாம் அவளால் தெரிந்திருக்கலாம். ஆனல் பிலவங்கன்மேல் அவ ளுக்குக் கொஞ்சமேனும் நல்லபிப்பிராயமில்லாததால் அவள் உள் ளபிப்பிராயத்தைப்பற்றி ஒருவார்த்தையேனும் பேசவில்லை. ஆயி னும் அவளை வேண்டிய மரியாதையோடு ஏற்றுஉபசரித்து அனு ப்பிவிட்டாள்.

பிலவங்கன் வெளியில் வந்ததும் சோபையின் நடத்தையைப் பற்றிதான் திருப்தியடைந்ததாக வத்ஸரிடம் சொன்னபோதிலும் வத்ஸரும் அவர்சகோதரியும் உள்ளே நடந்ததையெல்லாம் உற் றுக்கேட்டுக்கொண்டிருந்தபடியால் கொஞ்சமேனும் திருப்தியடை யவில்லை.

வத்ஸர்:—(பிலவங்களைநோக்கி) குழந்தாய், அவளைவிடாதே. எதற்காக லக்ஷ்யப்படுகிறுய்? அவளிடம் தைரியமாகவே பேசு. ஆளவந்தாரும் நானும் இன்று பகல் பேசி நாளை கலியாணத்தை முடித்துவிடுகிறும்.

பிலவங்கன்:—(மிகுந்த சந்தோஷமடைந்து) "ஐயா! இந்த உலகத்தில் எனக்கு முக்கிய ஆவல், இவ்வளவுகுணமும், அழகும் வாய்ந்தசோபையை மணக்கவேணு மென்பதே. இரண்டாவது உமது குடும்பத்துடன் சம்பந்தம் செய்துகொள்ளவேண்டு மென்பது. இவ்விருவிருப்பங்களும் நிறைவேறினால் நான் எவ்வளவு சந்தோஷமுடையவனாக விருக்கவேண்டும்? இதுவரையில் நான் மூகூர்த்தத்தை துரிதப்படுத்தவேணுமென்று தங்களிடம் சொல்லாதது தங்களுடைய மகளுக்குக் கோப முண்டாகுமோ என்கிற பயமும் அவளுடைய இஷ்டமில்லாமல் அவசரப்பட்டு விவாகத்தை நிறைவேற்றிவிடக் கூடாதென்கிற எண்ணமுந்தான். ஆனால் தங்களுக்கு இந்த அனுசரணைக ளெல்லாம் பார்க்கவேண்டா மென்று தோன்றினால்——

வத்ஸர்:—அனுசரணையாவது? அதெல்லாம் சுத்த கர்நாடக மன்னே. நான்தான் சொல்லுகிறேனே. நாளைக்கு அவளைக் கலியாணம் செய்துகொடுத்து விடுகிறேன். என் வயது வந்தால் உனக்கு உலக அனுபவம் முற்றும் தெரியும். பெண்பிள்ளைகள் முதலில் அப்படித்தான் கலியாணத்திற்குசம்மதிக்கமாட்டார்கள். அதுதான் அவர்களுடைய வழக்கம். இவளுடையதாய் சம்மதித்த பிறகு நான் அவளைக் கலியாணம் செய்துகொள்வதாயிருந்தால் இன்னும் பிரமசாரியாகத்தா னிருக்கவேண்டும். ஆகையால் நாளைகாலையிலேயே அவளை உன் மனைவியாக்கி விடுகிறேன்.

பிலவங்கனுக்கு உண்மையில் சோபையிடம் அதிருப்திதான். வத்ஸரிடத்தில் அவள் தன்னைத் திருப்திகரமாக வேற்றுக்கொண்டதாய்ச் சொன்னபோதிலும் அவள் தன்னிடம் பகையும் உதாசினமும் கொண்டிருப்பது அவனுக்குத்தெரியாமல் போகவில்லை. அதனால் அவளை வெறுக்காது போகவில்லை. இருந்தும் அவளை விட்டு அகலாது மனக்கவேண்டிய பிரயத்தனங்களைச் செய்வது வேறு காரணங்கொண்டு. இக்காரணத்தினாலேயே அன்று சாயங்காலம் ஆளவந்தாரிடம் போய்ப்பேசி மறுநாட்காலையில் விவாகத்தை முடித்துவிடும்படியாக வத்ஸரிடம் சொன்னான். மேலுக்காகிலும் சோபைக்கு இஷ்டமில்லாததை அவசரப்படுத்திச் செய்ய வேண்டாமென்று சொன்னதேயன்றி வேறல்ல.

பிலவங்கன் தாமோதரனைப்போல விட புருஷனல்லாதபோனாலும், எல்லாப் பிராணிகளுக்கு முரிய சிற்றின்பப்பிரியம் இவனுக்கும் இராதிருக்கவில்லை. ஆனால் மற்றோர்களுடைய நகர்ச்சிக்கும் இவனுடைய விருப்பத்திற்கும் வித்தியாச மிருந்தது. ஒரு பெருந்தீனிக்காரன் அறுசுவை உண்டியையருந்த எப்படிப் பரபரப்பானே, அப்படியே சோபையை அடையக்கருதிப் பிலவங்கன் ஆத்திரப்பட்டான். சோபைபடும் துயரத்தால் அவளது உருவம்

பொலிவு அடைந்திருப்பதாக அவனுக்குத் தோன்றிற்று. அவளுடைய கண்ணீர் கன்னத்தைப் பிரகாசப்படுத்தின. பெரு மூச்சுவிடும் போது அவளது மார்பு குலுங்கியது. துயருறும்போது பிரதிபிம்பிக்கும் வனப்பு மற்ற எச்சமயத்திலும் காணமுடியாது. ஆதலால் முன்தடவை பார்த்ததிலும் இந்த சமயம் சோபை பன் மடங்கு ரூபவதியாயிருப்பதாகப் பிலவங்கனுக்குத் தோன்றிற்று. அவளுடைய வெறுப்பும் உதாசினமும் இவனுடைய இச்சையைத் தணிக்கவில்லை. அவளிஷ்டத்திற்கு மாறுக அவளை அடைவதாயினும் அழகிற் சிறந்தவளை அனுபவிப்பதே பெரிய வெற்றி என்று நினைத்துவிட்டான். இன்னும் சிலதுன்மார்க்க எண்ணங்களையுங்கொண்டு அவளைத் தன் மனைவியாக்கக் கருதினன். தன்னை இதுவரையில் சோபை பகைத்து வந்ததற்குப் பழிவாங்கவும், தனது விரோதியான தாமோதர னெண்ணத்தைக் கைகூடாது செய்யவுமே பிலவங்கன் சோபையையடைய நிச்சயித்ததற்கு ஏற்பட்ட வேறு காரணங்களாம். இவை யெல்லாவற்றினும் சோபை தன்னை மணந்து கொண்டால் தங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு வத்சருடைய ஏராளமான செல்வமனைத்தும் சேருமென்கிற எண்ணமும் அவனை யாட்கொண்டது.

இக்காரணங்களால் வத்சரிடம் சோபையைத் தான் காதலிப்பதாகவும், சோபை தன்னைக் காதலிப்பதாக ஆளவந்தாரிடமும் சொல்லி ஏமாற்றிவந்தான். இதில் இவனுக்குத் தார்க்கீகருடைய ஒத்தாசையும் கிடைத்தது. அவர் கல்யாணத்தை மாத்திரம் சாஸ்திரீகமாக முடித்துவிட்டால் அக் கலியாணத்தை ஒப்பச்செய்வது எப்படி யிருந்தபோதிலும் குற்றமில்லை என்பார். இக்சமயத்தில் தான் பிலவங்கன் தார்க்கீகருடைய புத்திமதியை அனுசரித்தான். இதசசமயங்களில் கந்தர் சொல்லியபடி நாம் செய்யும் விஷயங்கள் ஒவ்வொன்றும் நியாயமாக இருந்துவிட்டால் முடிவு எப்படியாக விருந்தபோதிலும் குற்றமில்லை என்பான். இதனால் அவன் சமயத்துக்கேற்றபடி மாறுபாடான கொள்கைகளை அனுசரிப்பதற்கு வேண்டியமட்டும் உபதேசம் தார்க்கீகரிடமும் கந்தரிடமும் பெற்றிருந்தான்.

கலியாண விஷயத்தில் தன்மகளினுடைய அபிப்பிராயத்தைக் கேட்கவேண்டியதில்லை யென்று எண்ணியிருக்கும் வத்சரைப் பிலவங்கன் அதிகமாக மோசம் செய்யவேண்டியதில்லை. ஆனால் ஆளவந்தார் மாறுகருத்துடையவ ராதலால் அவரை மோசம் செய்யவேண்டியது அவசியமாயிற்று. இதில் வத்சர் பிலவங்கனுக்கு வேண்டியமட்டும் உதவிசெய்தார். அவர் ஆளவந்தாரிடம் போய்ச் சோபை பிலவங்கனைக் காதலிக்கிறாள் என்றும், தாமோதரன்மேல் இஷ்டப்பட்டிருப்பதாய்ச் சொல்லும் வார்

த்தையெல்லாம் சுத்தப்பொய் என்றும் சொன்னார். இவற்றை யெல்லாம் பிலவங்கனும் இருபொருள் படும்படி சாமர்த்தியமாக ஆளவந்தாரிடம் ஒப்புக்கொண்டதால் அவனது மனச்சாக்ஷிக்கும் விரோத மில்லாததாயிற்று, ஆளவந்தாரிடமும் பொய் சொல்லாதுபோலாயிற்று. ஆளவந்தர் பிலவங்கனை நோக்கிச் சோபைக்கு இஷ்டமில்லாத விஷயத்தில அவளைப் பலவந்தம் செய்து கல்யாணம் செய்யத் தாம் ஒப்புக்கொள்ளப் போகிறதில்லை யென்று சொல்ல, பிலவங்கன் "சிறுபெண்களுடைய உண்மை அபிப்பிராயத்தை யறிவது மிக்க கடினம், அவள் என்னிடம் நடந்துகொண்டமட்டும் மிக்க திருப்திகரமாகவே யிருந்தது, அவள் என்னை மிகவும் விரும்புவதாக அவள் தந்தை சொல்கிறார், அதினுடைய உண்மை எனக்குத் தெரியாது, தாமோதரன் தங்களிடம் கிருதக்ஞையற்றவனு யிருந்தபோதிலும் அவனை நான் அயோக்கியனென்று அழைக்கமாட்டேன். இருந்தும் அவன் தற்பெருமையினாலேயோ வேறு எந்தக் கெட்டெண்ணத்தினாலேயோ சோபை அவனையே காதலிப்பதாக வீணுக்காயினும் பெருமை பேசிக்கொண்டிருப்பான். உண்மையில் சோபை அவனைக் காதலித்திருந்தால் அவளது பெருஞ்செல்வத்தையும் துறந்து அவளையும்விட்டு ஓடிப்போயிருப்பானா? என்னை அவள் உண்மையில் காதலிக்கிறாள் என்று அறியாமல் நான் அவளை மணஞ்செய்ய ஒப்புக்கொள்ளவே மாட்டேன்" என்றான்.

ஆளவந்தார் வத்ஸரும் பிலவங்கனும் சொன்னதைக் கேட்டு மிகவும் திருப்தியடைந்தார். அடுத்து இரண்டு நாள் யோசனை செய்து எல்லோரும் ஒரு முடிவுக்கு வந்தார்கள். வைதிக கிரியைகள் முடிவதற்குமுன் நியாய துரந்தரர்களைக்கொண்டு ஸ்த்ரீதனம் முதலிய விஷயங்களைப் பத்திரங்களில் எழுதவேண்டியிருந்தது. வத்ஸர் ஆளவந்தாருக்கு எதுசொன்னபோதிலும் ஒப்புக்கொண்டு விவாகத்தை உடனே முடித்துவிட வேணுமென்பதில் மிக்க துரிதப் படுத்திவந்தார்.

ஆளவந்தாரும் தன் மருமகனுடையவும் வத்ஸருடையவும் வேண்டுகோளுக் கிணங்கி மற்றவர்கள் சந்தோஷப்படும்படி கலியாணத்தை அதி சீக்கிரத்தில் முடித்திருப்பார். ஆனால் சோபையோ அதற்கிடங் கொடுக்கவில்லை, அவள் முயற்சியால் அது தடைபட்டுவிட்டது. அதனால் ஆதாயம் மிகுதியு மடையலாமென்றிருந்த புரோஹிதர்கள், வைதிகர்கள், நியாயதுரந்தரர்கள் முதலியவர்கள் ஏமாந்தார்கள்.

6. அத்தியாயம்.

• அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

ஆண்டாள் சுயகாரிய துரந்தரியா யிருந்தபோதிலும் சோபை யிடம் கொஞ்சம் பற்றுள்ளவள். உண்மையில் சோபையை அறிந் தவர்கள் அவளே விசுவாசியாதிருப்பது அரிது. ஆண்டாள் சோ பையைப் பற்றிய சமாசார மறிந்தவுடன் அவளிடம் அதைத் தெரிவிக்க ஓடினாள். எவ்வளவு திடீர் என்று சோபையின் அறைக் குள் புகுந்தாளோ அவ்வளவு பரபரப்புடன் சம்பாஷணையை ஆரம்பித்தாள்.

ஆண்டாள்:—அம்மா சோபை, தாங்கள் என்ன நினைக்கிறீர் கள்? எனக்குமிக்க பயம் உண்டாகிவிட்டது. தங்களுக்குக் கோபம் வந்தாலும் தங்களிடம் சங்கதியைச் சொல்லவேண்டியது என் கடமையென்று ஓடிவந்தேன். வேலைக்காரிகளுக்கு எது கோப மூண்டாக்கும் எது கோபமூண்டாக்காது என்று தெரிய மாட் டாது. எஜமானிகளுக்குக் கோபம்வந்த காலத்தில் நாங்கள் வசை மொழி கேட்கவேண்டியதுதான். இப்பொழுது என் வார்த்தை யால் உங்களுக்குக் கோபம் வருமென்பது சகஜமே.

சோபை:—ஆண்டாள் இந்த முன்னுரையை விட்டு சங்கதி யைச்சொல்லு. எந்த சங்கதியும் எனக்கு இப்பொழுது அதிக துயரமுண்டாக்காது.

ஆண்டாள்:—சபலரிடம் தங்கள் தகப்பனார் நிச்சயதார்த் தத்தை இன்று பகலில் நடத்திவிட வேண்டுமென்றும் நாளை காலை யில் விவாகத்தை முடித்துவிட வேணுமென்றும் சொல்லக் கேட் டுக்கொண்டிருந்தேன்.

சோபை:—(மூகம் வெளுத்து) நாளைக்காலையிலா?

ஆண்டாள்:—ஆம் அம்மா, என் எஜமானர் அப்படித்தான் சொன்னார் என்று நிச்சயமாய்ச்சொல்வேன்.

சோபை:—ஆண்டாள், நீ சொன்னது இதுவரையிலில்லாத படி என் துயரத்தையும் ஆச்சரியத்தையும் அதிகப்படுத்திவிட் டது. இந்த நிலைமையில் நான் என்னசெய்யக்கூடும்?

ஆண்டாள்:—தங்களுக்கு நான் புத்திசொல்லத்தக்கவளா?

சோபை:—என் அருமை ஆண்டாள்! நான் என்ன செய்யட் டும், உனக்குத் தெரிந்தமட்டில் யோசனை சொல்லத்தான்வேண் டும். உனக்கு இப்படி நேரிட்டால் நீ யென்ன செய்வாய்.

ஆண்டாள்:—நாமிருவரும் நமது நிலைமையை மாற்றிக்கொ ள்வது நலம். அதினால் என்னைப்போல் தாங்கள் வேலைக்காரியாக வேண்டுமென்று சொல்லவில்லை. நான் தங்கள் நிலைமையிலிருந்

தால் பிலவங்கரை ஒரு அழகுள்ள சுந்தர புருஷரென்று என்னு வேன்.

சோபை:—அந்தக் கொடூரத்தை என்னிடம் சொல்லாதே.

ஆண்டாள்:—கொடூரமா அம்மா! ஒரே விஷயம் ஒருவர் மனதுக்கு உகந்ததாயும், மற்றொருவருக்கு வெறுப்பாயுந்தானிருக்கும். அப்படியேதான் பெண்களுக்கும்.

சோபை:—அருவெறுக்கத்தக்க அந்த வீணரைக் கலியாணம் பண்ணிக்கொள்வதிலும் என் மார்பில் கத்தியால் குத்திக்கொண்டிறப்பது நலம்.

ஆண்டாள்:— தாங்கள் சொல்வதைக் கேட்க எனக்குப் பயமாயிருக்கிறது. இப்படிப்பட்ட கொடுமையான எண்ணம் தங்கள் மனத்தில் உதிக்கவேண்டாம். இதைக்கேட்ட எனக்கேகூடம்பெல்லாம் நடுங்குகிறதே. தற்கொலை புரிந்து கொண்டால் உயிர் அவ்விடத்தைவிட்டு அகலாதென்பார்கள். தற்கொலை புரிந்துகொள்வதிலும் பிறரைக் கொல்வது குறைந்த குற்ற முடையதென்று பலபேர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

சோபை:—ஆண்டாள், நான் ஒரு தீர்மானம் செய்திருக்கிறேன். இன்று இரவு என் தந்தை வீட்டைவிட்டு அகல நிச்சயித்திருக்கிறேன். நீ அனேகதடவை சொல்லியிருக்கிற பிரகாரம் என்னிடம் உனக்கு உண்மையான விசுவாசமிருந்தால் நீ என்னுடன் வரவேண்டும்.

ஆண்டாள்:—எப்பாடுபட்டாவது அதைச்செய்யத் தயாராகவிருக்கிறேன். ஆனால் தாங்கள் ஒரு காரியம் செய்யுமுன் அதைத் தீரயோசித்துப் பார்க்கவேண்டும். ஆத்திரப்படக்கூடாது. தாங்களிதை விட்டு எங்கு போகிறதாய் யோசனை.

சோபை:— நான் முன் என் அத்தை வீட்டிலிருந்தபொழுது அவந்திபுரியிலிருந்து விலாஸவதி என்று ஒரு சினேகிதி அத்தை வீட்டிற்கு வருவதுண்டு. அவள் எனக்கும் தூரத்துப்பந்து. வெகுகாள் என் அத்தை வீட்டிலிருந்தாள். அக்காலத்தில் என்மேல் மிக்க பக்ஷமாயிருந்து வந்தாள். அவள் போகும்போது என்னையும் அவளுடன் அவந்திபுரிக் கனுப்பும்படியாக என் அத்தையை வெகுதூரம் கேட்டுக்கொண்டாள். அவள் மிக்க கீர்த்திபெற்ற ஸ்திரீயாகையால் அவளை அவந்திபுரியில் சுலபத்தில் கண்டுபிடித்துவிடலாம். அவள் என்னை மிக்க பரிவுடன் ஏற்பாள் என்பதில் சந்தேகமில்லை.

ஆண்டாள்:—தாங்கள் அவ்வளவு உறுதியாக நம்பிவிடக்கூடாது. நான் ஒரு பெரிய மனுஷியோடு வசித்துக்கொண்டிருக்

கையில் ல அவள் கண்டவர்களை யெல்லாம் தன் வீட்டுக்குக் கூப்பிடு வாள். அவள் ஆனால் அவர்கள் தன் வீட்டிற்கு வருவதாகத் தெரிந்ததும் வள் வெளியேபோய்விடுவாள். இப்பொழுது நீங்கள் சொன்ன லும் நீங்களை மிக்க ஆதரவுடன் வரவேற்பவளா யிருந்தபோதி தாங்கள் தகப்பனூர் வீட்டிலிருந்து ஓடிவிட்டதாய்த் தெரிந் ததும்——

சோபை:— நீ சொல்வது தப்பு ஆண்டாள். பிதுர்வாக்கிய பரிபாலனம் எல்லோரும் செய்யவேண்டுமென்பது அவள் கொள் கையல்ல. அவள் என்னை அவந்திபுரம் வரும்படியாக நிர்ப்பந்தித்த போது நான் என் தந்தையின் சம்மதமின்றி வரேனென்று சொல்ல .அவள் சிரித்து என்னைப் பரிகாசம் பண்ணி நான் ஒரு பட்டிக்காட்டு மூடப்பெண் என்று சொன்னாள். ஆதலால் அவ ளிடம் போனால் என்னை வரவேற்பது மன்றி என் தந்தையின் கோபத்தினின்றும் காப்பாற்றுவாள். என் தந்தையும் தன் அதி காரத்திற்குள் நான் அகப்படாதது கண்டு புத்திதெளிவார்.

ஆண்டாள்:— ஆம், எப்படித் தப்பித்து போவது? ஓடிப் போவதற்குக் குதிரையாவது வண்டியாவது எங்கிருந்து கிடைக் கும்? தங்களுக்கும் எஜமானருக்கும் இருக்கும்மனஸ்தாபம் வேலை க்காரர்களுக்கெல்லாம் தெரியுமாகையால் ஒருவராவது தங்களுக்கு வண்டி குதிரை எஜமான் உத்திரவின்றிக் கொடுக்கமாட்டார்கள்.

சோபை:—கதவு திறந்திருக்கும்போது அதின் வழியாக ஓடந்து தப்பித்துப்போக உத்தேசித்திருக்கின்றேன். என் கால் கள் பலமாயிருக்கின்றன. மனத்திற்கிஷ்டமாதவனோடு மாலை வேளைகளில் உலாவி வருகையிலேயே இந்தக் கால்கள் என்னை வெகுதூரம் இட்டுப்போயிருக்கின்றன. இப்பொழுது நான்வெறுக் கிறவனை விட்டுப்போக அக்கால்கள் எனக்கு உதவிசெய்யக் கேட்க வேண்டுமா?

ஆண்டாள்:—தாங்கள் அறிந்து பேசுகிறீர்களா? இரவில் தனியாக இந்த தேசத்தில் நடந்து செல்ல எண்ணலாமா?

சோபை:—தனியாக எங்கே போகிறேன். நீதான் என்னு டன் வருகிறதாய் வாக்குக்கொடுத்தாயே.

ஆண்டாள்:—தாங்கள் எங்குபோனாலும் நான் கூடவர சித் தமாயிருக்கிறேன். ஆனால் என் தலை என்ன பிரயோசனஞ்செய் யும்! கொள்ளைக்காரராவது தண்மார்க்கர்களாவது தங்களை வழி பறித்தால் நான் எப்படித் தங்களைக் காப்பாற்றுவேன்? அப்பொ ழுது தங்களைப்போலவே நானும் திகிலடைந்துவிடுவேன். அவர் கள் நிச்சயமாய் நம்மைக் கற்பழித்து விடுவார்கள். அன்றியும்

குளிர் எவ்வளவு நடுக்கமாயிருக்கிறது? இந்தக்குளிரில் நாம் விறைத்துப் போய்விடுவோமே.

சோபை:—இடைவிடாது வேகமாய் நடந்தால் குளிர்க் காப்உபத்திரவம் செய்யாது. துன்மார்க்கரிடமிருந்து நீ என்னைக் காப்பாற்ற முடியாமற்போனால் நான் உன்னைக் காப்பாற்றுகிறேன், எதற்கும் வீட்டிலிருந்து ஒரு கைத்துப்பாக்கி (பிஸ்டல்) எடுத்து வருகிறேன்.

ஆண்டாள்:—தாங்கள் சொல்வதைக்கேட்க எனக்கு மேலும் பயமுண்டாகிறது. தாங்கள் யாரையாவது சுட்டுவிட்டால் என் செய்வது?

சோபை:—(புன்னகைகொண்டு) என் அப்படிப் பயப்படுகிறாய்? உன்கற்பை அழிக்க வருகிறவனை நீ சுடமாட்டாயா?

ஆண்டாள்:—ஒவ்வொருவரும் கற்பைக் காப்பாற்ற வேண்டியது அவசியந்தான். அதிலும் வேலைக்காரிகளாகிய நாங்கள் அதிகமாகக் காப்பாற்றவேண்டும். கற்புடனிருந்தால்தான் எங்களுக்கு ஜீவனம் கிடைக்கும். ஆனால் துப்பாக்கி எடுத்துச் சுடுவதென்றால் எனக்கு தேகம் நடுங்குகிறது. அதினால் எவ்வளவோ அபாயங்கள் நடக்கின்றன.

சோபை:—நீ ஒன்றுக்கும் பயப்பட வேண்டியதில்லை. அடுத்தவூர் சென்றதும் குதிரை மேலேறிப் போவதாக உத்தேசித்திருக்கிறேன். நானிந்த விடத்தை விட்டுச் செல்வதாகத் தீர்மானித்துவிட்டேன். நீ என்னுடன்கூட வருவாயாகில் என்னால்கூடிய அளவு வெகுமதி செய்வேன்.

இந்தக் கடைசி வாக்கியத்தைக்கேட்டதும் ஆண்டாளுடைய ஆசேஷபனைகள் எல்லாம் பறந்துபோயின. எப்படிப் பிரயாணத்தை ஆயத்தம் செய்யலாம் என்று இருவரும் யோசிக்கலானார்கள். இதிலொரு பெரிய கஷ்டம் தோன்றிற்று. அதாவது அவர்களுடைய ஆணிமணிகளை எப்படி எடுத்துப்போவதென்று தடுமாட்டமுண்டாயது. சோபைக்குத்தான் காதலனைப் பின்தொடர்ந்து பிடிக்கவேண்டுமென்று ஆர்ஜிதமுண்டாகியிருந்தபடியால் எல்லாக் கஷ்டங்களும் அவ்வெண்ணத்திற்கு முன்னிற்காதுபோயின. அதனால் தன்னுணிமணிகளை வீட்டில் போட்டுவிட்டுப் போவதென்று தீர்மானித்தாள். ஆனால் ஆண்டாளுக்குக் காதலனை அடையுங் காரணமில்லாததினாலும் வழியில் உண்டாகும் ஆபத்துக்களை யெண்ணிப் பயம் உண்டானபடியாலும் தனிமணிகளை வத்ஸர் வீட்டிலேயே விட்டுவிட்டுப்போக மனமில்லை. அவள் உயர்ந்த புடவைகளை வாங்கி வைத்திருந்தபடியாலும், சிலவஸ்திரங்கள் தனது

ஆப்த நண்பரால் கொடுக்கப்பெற்ற படியாலும், சில உடைகள் அவளுக்கு மிக்கப் பொருத்தமாயிருந்தபடியாலும், சில துணிகள் சமீபத்தில் வாங்கியிருந்ததடியாலும், சில பழையகாலத்தனவாய்த் தன்னிடமிருந்தபடியாலும், இன்னும் பல காரணங்கொண்டு ஒன்றையாவது விட்டுவரமாட்டேனென்றாள். அன்றியும் தான் விட்டுப் போன பிறகு வத்லர் கோபத்தினால் தன் துணிகளை நெருப்பில் இட்டுப் பொசுக்கிவிடுவார் என்றும் பயந்தாள்.

இவ்வளவு சொல்லியும் சோபை போவதே உறுதி என்ற தால் வேறு ஒரு நல்ல யோசனை ஆண்டாள் சொன்னாள். அதா வது அன்று சாயங்காலமே அவ்வீட்டினின்றும் தான் வேலையை விட்டு விடுவதாகச் சொன்னாள். சோபையுதற்கு ஒத்துக்கொண்டு "எப்படி முடிப்பாய்" என்று கேட்டாள். ஆண்டாள் எப்படியா யினும் அதை நான் செய்து விடுவேன், என்னைப்போன்ற வேலைக் காரிகளுக்கு இந்த சாமர்த்திய மிராதா? எஜமானர்கள் எங்களுக் குச் சம்பளம் பாக்கி இருந்தது நாங்கள் வேலையை விட்டு நீங்கு கிறோம் என்று சொன்னாலும், நாங்கள் அவர்களுக்குக்கோபமூண் டாக்கினாலும் பொறுத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் உங்கள் தகப்பனரிடமிருந்து எனக்குச் சம்பள பாக்கி வரவேண்டியதில்லை. ஆதலால் இன்று பகலிலே வேலையை விட்டுவிடலாம்.

ஆண்டாளின் தூண்டுதலினாலே சோபை தன் வஸ்திரங்க ளில் சிலவற்றையும் சேர்த்துக்கட்டிக் கொள்ளும்படிக்கும் மற்ற வைகளை யெல்லாம் அங்கு போட்டு விட்டுப் போகும்படிக்கும் ஏற்பாடு செய்தாள்.

7. அத்தியாயம்.

மக்களே போல்வர் கயவ ரவரன்ன
வொப்பா ரியாங்கண்ட தில்.

ஆண்டாள் சோபையை விட்டுப் பிரிந்துவந்ததும் சோபை யின் ரகசியங்களை யெல்லாம் வத்லரிடம் சொல்லி அவளைக் காட் டிக் கொடுத்துவிட்டால் தனக்கு மிக்க செல்வ மகப்படு மென்று ஒரு கடவை எண்ணினாள். இந்த எண்ணத்திற்குப்பல காரணங்க ளிருந்தன. வத்லரிடம் இந்த ரகசியத்தைச் சொன்னால் தனக்கு நல்ல வெகுமதி கிடைக்குமென்கிற பேராசை, இரண்டாவது இந்தப் பிரயாணத்தில் நேரிடும் அபாயங்கள், மூன்றாவது தலையிட் டுக்கொண்ட காரியம் வெற்றிபெறு தென்கிற சமுசயம். இரவு குளிர், கள்வர், துன்மார்க்கர் இவர்களால் நேரிடும் விபத்து. இவற் றை யெல்லாம் யோசித்து உடனே வத்லரிடம் போய்த் தெரி வித்து விடுகிறதென்று நீர்மானத்திற்கு வந்தாள். ஆனால் சோபை யின் இஷ்டப்படி செய்தால் அதினால் ஏதாவது லாபமுண்டாகுமா என்றும் யோசித்துப் பார்த்தாள். அளகாபுரியிலும் சிறப்பாயிரு

க்குமென்று கேள்விப்பட்ட அவந்தீகரத்தைப் போய்ப்பார்க்க வேண்டுமென்கிற ஓர் அவா, இரண்டாவது எஜமானரை விட சோபை தயாள குணமுடையவளாதலால் அவளுக்கு உதவி செய்தால் தனக்குமிகுந்த லாபம் கிடைக்கும் என்கிற ஓரெண்ணம், இரண்டாகூபாயின் தாரதம்மியத்தையும் ஒத்துப் பார்க்கையில் ஒன்றுக்கொன்று தாழ்வற்றதாயிருந்தது. ஆனால் சோபையின் பேலிருந்த விசுவாசமிடையில் புகுந்து சோபைக்கே அனுகூலம் செய்யத் துண்டிற்று. திரும்பவும் சோபையிடமிருந்து வெகுமதி பெறுவது வெகு நாளாகுமென்றும் வத்ஸருடைய பரிசு உடனே கிடைத்து விடுமென்றும், நாளைக்கு வரும் பல்லாக்கையினும் அன்றைக்கு வரும் களாக்காயே சிறந்தது யென்றும் எண்ணலாயினள். சோபைக்குத் தனது தாயாருடைய செல்வமனைத்தும் தன் தந்தை யிறந்த பிறகு கிடைப்பதாயிருந்தாலும் அவளுடைய மாமன் கொடுத்திருந்த மூவாயிரம்பவுன் அவளுக்கு வயது வந்த பிறகு கையில் கிடைக்குமாதலாலும், அவ்வளவு காலம் காத்திருப்பதற்குள் இடையில் சோபைக்கு மனம் மாறி தனக்கு வெகுமதி அளிக்காமலு மிருக்கலாம் என்றும் சந்தேகப்பட்டாள். நல்லவேளையாக சோபையின் அதிருஷ்டம் ஆண்டாளைச் சோபைக்கே அனுகூலம் செய்யும் படியாகப் பின்வருங் காரணத்தால் துண்டிற்று.

விதரணியின் வேலைக்காரி ஆண்டாளைவிட பலவிதத்திலு மேம்பட்டவளென்று கர்வித்திருந்தாள். அவள்குடிப்பிறப்பு ஆண்டாள் குடிப்பிறப்பிலுஞ் சிறந்தது. அவளுடைய தாயைப் பெற்ற பாட்டி ஓர் பிரபுவினுடைய நெருங்கியபந்து. இரண்டாவது அவளுடைய சம்பளம் ஆண்டாள் சம்பளத்திலு மதிகமானது. மூன்றாவது அவள் அவந்தீகரம் சென்றிருந்ததால் ஆண்டாளைவிட லோகவியவகாரங்கள் அதிகமாகத் தெரிந்தவள். ஆதலால் ஆண்டாளோடு பேசும் போது பெருமிதத்தோடே பேசுவாள். மேலும் அவள் ஆண்டாள் தனக்கு மிக்க மரியாதை செய்ய வேண்டுமென்று வற்புறுத்துவாள். ஆண்டாள் இதைப் பொறுக்காமல் அவளுக்கு மரியாதையே செய்யமாட்டாள். ஆதலால் விதரணியின் வேலைக்காரி ஆண்டாளுடன் சேர்ந்திருக்க இஷ்டப்படவிலலை. தன் எசமானி வீட்டில ஊழியர்களுக்கெல்லாம் தானே தலைமை வகித்து அவர்களை அதிகாரம் செய்துவந்தபடியால் அவள் இல்லாத போது தானும் அவளோடே போகப் பயணப்பட்டிருந்தாள். ஆனால் விதரணி வத்ஸரிடம் முதலிற் கோபங் கொண்டு வீட்டுக்குப்போக வண்டியேறியும் போகாதிருக்கக் கண்டதும் அவள் எண்ணம் நிறைவேறு தொழிந்தது.

இந்த நிலைமையில் ஆண்டாள் யோசனை பலவாறிருக்க அவள் தங்கியிருக்கும் வீடுதிக்கு விதரணியின் தாதியும் வந்து

சேர்ந்தான். இவளை ஆண்டாள் கண்டதும் அடியில் வருமாறு சொன்னாள்.

ஆண்டாள்:— வா அம்மா, என் எஜமானனுக்கும் உன் எசமானிக்கும் நடந்த சண்டையில் நீ எங்கோ விட்டுப்போயி விடுவாய் என்று எண்ணினேனும். அப்படிக்கின்றி இன்னும் கொஞ்சகாள் இருக்கவேண்டி வந்ததே சந்தோஷம் எங்களுக்கெல்லாம்.

வி-தாதி:— நாங்கள், எங்களுக்கு என்று சொல்கிறயே அதற்கு என்ன அருத்தம். இவ்வீட்டில் இருக்கும் ஒரு வேலைக்காரராவது எனக்கு சமானமல்ல. எனக்குச் சமானமானவர்கள் அவர்களிலும் எவ்வளவோ மேலானவர்கள். உன்னைப்பற்றிச் சொல்லுகிறேன் என்று கோபித்துக்கொள்ளாதே ஆண்டாள். நீ நாகரீகம் தெரிக்த சிறுபெண் தான். ஆனல் உனக்கு உலக அனுபவமுமிருந்துவிட்டால் உன்னைடுகூட அவந்திபுர சிங்காரவனத்தில் உலவிவர நான் வெட்கப்படமாட்டேன்.

ஆண்டாள்:— அப்படியா சங்கதி, திரும்பவும் உன் கர்வத்தைக் காண்பிக்கிறயா? நான் அதைப்பொறுக்கமாட்டேன். என்னைடுகூட உலாவ உனக்கு வெட்கமாகவா இருக்கும்? நான் எந்த விதத்தில் தாழ்ந்தி?

வி-தாதி:— நான் உன்னிடம் மரியாதையாகப் பேசினதற்கு நீ இம்மாதரி சொல்லுகிறபடியால் நீ எனக்கு சமானமானவளல்ல தான். குக்கிராமத்தில் யாருடனும் கலக்கவேண்டியிருக்கிறது. பட்டணத்திலிருக்கையில் பெரிய மனுஷிகளிடம் சகவாசம் செய்கிறேன். ஆண்டாள் உனக்கும் எனக்கும் தாரதம்மியமில்லையா? நீயே சொல்லு.

ஆண்டாள்:— ஆம், ஆம், "நமது வயதிலும் நமது ரூபத்திலும் வித்தியாசமிருக்கிறது தான்" என்று சொல்லிக்கொண்டே விதாரணியின் தாதியை அலக்ஷியமாகப் பார்த்துக்கொண்டு தலையை நிமிர்ந்த வண்ணமாய் அவளை யிடித்துக்கொண்டே மிக்க கர்வத்துடன் நடந்து சென்றாள்.

வி-தாதி:— (அருயைபொங்கி ஆண்டாளை நோக்கி) ஏ அற்பமே, நீ எனக்கு சமானமானவளாயிருந்தால் உன்னை நான் கோபித்துக்கொள்ளலாம். உன்னைப்போன்ற அகங்காரியைத் தூஷித்துப் பேசுவது எனது கௌரவத்துக்கு ஹானி. உன்னடத்தை உன் இழிபிறப்பையும் கல்வியறிவின்மையையும் நன்றாகத்தெரிவிக்கிறது. ஒரு நாட்டுப்புறத்துப் பெண்ணுக்குத் தாழ்ந்த எவளாயிருக்க நீயே தகுந்தவள்.

ஆண்டாள்:—ஆ, என் எஜமானியை எதற்காகத் திட்டுகிறாய். உன் எஜமானியைவிட அவள் வயதில் எவ்வளவோ சிறியவள், அழகில் எவ்வளவோ பெரியவள், எவ்விதத்திலும் எவ்வளவோ மேலானவள்.

இந்த சமயத்தில் விதரணி அங்குவந்தாள். தாதி கண்ணீர் பெருக்கிக்கொண்டிருப்பதைக் கண்டாள். காரணமென்னவென்று கேட்க, தாதி அந்த அற்பம் என்னை மிக்க அவமரியாதையாகப் பேசிற்று, அவள் என்னை எவ்வளவு திட்டினாலும் பொறுத்துக் கொண்டிருப்பேன். ஆனால் தங்களைக் குரூபி என்றும், சிழட்டுனை என்றும் அவதூறுகப்பேசினாள். தங்களை அவள் குரூபி என்று சொல்ல என்னால் கேட்கப்பொறுக்கவில்லை என்றாள்.

விதரணி:—அவளுடைய அடக்கமின்மையை எதற்காகத் திரும்பவும் திரும்பவும் சொல்லுகிறாய் என்றுக் கேட்டுவிட்டு (ஆண்டாளை நோக்கி) என் பெயரை எதற்காக மரியாதையிராது எடுத்துப்பேசுகிறாய்? என்றாள்.

ஆண்டாள்:— மரியாதையில்லாமலா? அம்மா, உங்கள் பெயரை நான் சொல்லவேயில்லை. என் எஜமானியைப்போல் இன்னொருவர் அழகாயில்லையென்றேன். அது நான் சொல்லாமலே தங்களுக்குத்தெரியும்?

விதரணி:— மூடதேவி, எதற்காக என் பெயரை உங்கள் சண்டையிலிழுக்கிறீர்கள். இதே நிமிஷத்தில் என் தமயன் உன்னை வேலையிலிருந்து நீக்காவிட்டால் நான் திரும்பவும் அவன் வீட்டில் சாப்பிடுகிறதில்லை. நான் உடனே அவனைக் கொண்டு உன்னை வேலையிலிருந்தும் நீக்குகிறேன் பார்.

ஆண்டாள்:—நீக்கிவிடவாபோகிறீர்? இவ்வளவு தானேசெய்துவிடமுடியும். எனக்கு உலகத்தில் வேறு இடம் கிடையாதா? நல்ல வேலைக்காரிகளாயிருந்தால் எவ்வளவோ இடம் கிடைக்கும். உங்களை அழகில்லை என்று சொல்லும் வேலைக்காரர்களையெல்லாம் துறத்திவிடுவதாயிருந்தால் உங்களுக்கு எங்கிருந்து வேலைக்காரர் அகப்படப்போகிறார்கள். சிக்கிரத்திலேயே வேலைக்காரர் அகப்படாது திண்டாடப்போகிறீர்கள்.

இதைக்கேட்டவிதரணிவாயில் வந்தபடிஉளறிக்கொட்டினாள். அவள் சொன்னது ஒருவருக்கும் புரியவில்லை ஆகையால் நாமும் விவரிக்கவேண்டியதில்லை. அவள் மகா ரௌத்திராகாரத்துடன் தனது தமயனை நோக்கி ஓடினாள். எஜமானி சென்றதும்இருதாதிகளுக்கும் திரும்பவும் சண்டை மூண்டது. அதுவாய்ச்சண்டையாகி நிற்கவில்லை. இச்சண்டையில் இழி பிறப்புக்காரிக்கே வெற்

றிகிடைத்தது. ஆனல்அந்தஜெயம் கொஞ்சம் ரக்தம் சிந்தாமலும் மயிர் பிடிக்கப்படாமலும்,புடவை கிழிபடாமலும் கிடைக்கவில்லை.

8. அத்தியாயம்.

வெள்ளத்தனைய விடும்பை யறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும்.

தர்க்க சாஸ்திரிகள் தங்கள் விஷயத்தைத் தர்க்கித்து ஜயிப் பார்கள். ராஜதந்திரிகள் சூழ்ச்சியால் நிறைவேற்றுவார்கள். தன் துணிகளெல்லா மெடுத்துக் கொண்டுபோகும்படி வந்த ஆண்டாள் மேல் தரித்திருந்த புடவையையும் தான் இழந்துவிட்டுப் போக வேண்டியதாயிற்று. வத்ஸர் தன் சகோதரியை ஆண்டாள் அவ மானப் படுத்தியதாய்க் கேள்விப் பட்டதும் அவளைச் சிறைச் சாலைக்கு அனுப்பி விடுவதாய் இருபது தடவை கூவி சத்தமிட் டார்.

விதரணி சுபாவத்தில் நல்ல மனதுடையவள். குற்றத்தை சாதாரணமாக மன்னித்து விடுவாள். ஒருவண்டிக் காரன் இவள் ஏறிச் சென்ற வண்டியை ஒரு பள்ளத்தில் அஜாக்கிரதையாகக் கொண்டு சாய்க்க அவனை மன்னித்து விட்டவள. ஒரு வழிப்பறிக் காரன் அவளது பணத்தை யெல்லாம் கொள்ளை யடித்துவிட்டு 'உன்னைப்போல் அழகாயிருப்பவளுக்கு ஆபரணம் எதற்காகவேண் டு'மென்று சொல்லி அவளுடைய நகைகளையும் பிடுங்கிக் கொள்ள அவன்மீது வழக்குத்தொடுக்காது சும்மாயிருந்துவிட்டாள்.ஆனல் இப்போது ஆண்டாள் செய்த குற்றத்திற்கு அவளை மன்னிக் கவே பேகிறதில்லை என்றாள். ஆண்டாள காலில்விழுந்து கெஞ்சிக் கேட்டுக்கொண்டும் சோபை வெகுதூரம் பரிந்துபேசியும் பயன் படாது போயிற்று. வத்ஸரிடம்போய் ஆண்டாளுக்குத் தகுந்த சிக்ஷை விதிக்கவேண்டு மென்று முறையிட்டாள்.

நல்ல வேளையாக வத்ஸருடைய குமாஸ்தாவுக்கு நியாயவிஷ யம் நன்றாய்தெரிந்திருந்தது.ஆதலால் அவன் வத்ஸரிடம் சென்று மெதுவாக ஆண்டாளைச் சிறைச் சாலைக்கு அனுப்ப அவருக்கு அதிகாரமில்லையென்றும், ஊரின் அமைதியைக் கலைக்காதவரையில் மரியாதை தெரியாதிருப்பதற்காக ஒருவரைச் சிறைப்படுத்து வது அடாதென்றும் சொன்னன்.

குற்றம் அதிக னமல்லாததாலும் அதிலும் ஜனங்களு க்கு ஒரு தன்பமும் நேரிடாததினலும் வத்ஸர் தமது குமாஸ் தாவின் புத்திமதியை யேற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. ஆத லால் அவர் தன் சகோதரியைப் பார்த்து ஊர்ச்சமாதானத்துக்கு

ஒரு தீங்கும் நேரிடாத படியால் இந்தக் குற்றத்தைக் திருட்டு, சண்டை, காயம், பொருள்நஷ்டம் மண்டைஉடைபடல், போகக் கூடாத விடத்தில் மீறிப்போதல் போன்ற குற்றங்களைப் போற் பாவித்து சிக்ஷைவிதிக்க முடியாது என்றார். விதரணி "உன்னிடம் எனக்கு சட்டம் நன்றாய்த்தெரியும். எஜமானர்களுக்குக் கோப மூட்டியதற்காக எத்தனையோ வேலைக்காரர் தண்டிக்கப்பட்டிருப் பது எனக்குத் தெரியும். அவந்திபுரியில் வல்லபசர்மா ஒரு எஜமா னனுவது எஜமானியாவது தன் வேலைக்காரனைச் சிக்ஷிக்கவேண்டு மென்று வழக்குக் கொண்டு வந்தால் உடனே சிக்ஷித்துவிடுவார்" என்ன, வத்ஸர் "அவந்திபுரியில் சட்டம் அப்படித்தான், இங்கெல் லாம்வேறுமாதிரி" என்றார். இம்மாதிரியில் நியாயவிஷயத்தைப்பற் றி உடன்பிறந்தார் இருவருக்கும் மெதுவேரம் வாக்குவாதம் நடந் தது. கடைசியில் குமாரிதாவைப்போய் யார்சொல்வது சரியென் று கேட்டார்கள். அவன் வத்ஸர் பக்கம் தீர்ப்புச் சொன்னான். விதரணி வேறு ஒன்றும்சொல்ல முடியாது ஆண்டாளை வேலையை விட்டு நீக்குவதோடு திருப்தியடையவேண்டியதாயிற்று. சோபையு மிதற்குச் சந்தோஷமாக ஒப்புக் கொண்டாள்.

ஒவ்வொரு விஷயத்திலும் நடப்பதுபோல இரண்டு மூன்று தடைகள் தோன்றிக் கடைசியில் சோபையின் காரியம் அனுகூல மாக முடிய வேண்டியிருந்தது. ஆண்டாளும் தான் ஒப்புக்கொ ண்டகாரியத்தைக் கடைசிவரையில் சரியாகச் செய்து முடித்தாற் சிறைச்சாலை போவதில்லை யென்று கேள்விப் பட்டதும் பழையகர் வம் திரும்பிவந்தது. அவள் மகா அலக்ஷியத்துடன்தன்வேலையை விட்டு வெளியே வந்தாள். அப்பொழுதே தணிமணிகளைக் கட் டிக் கொண்டுபோய் விடும்படி வத்ஸர் ஆக்ஞாபித்தார். ஏனெ னில் அந்த மரியாதை தெரியாத துன்மார்க்கி யிருக்கும் வீட்டில் விதரணி தூங்குவதில்லை என்று சபதம் செய்திருந்தாள். ஆண் டாள் மூட்டைகளை யெல்லாம் பரபரப்புடன் கட்டி யெடுத்துக் கொண்டு பொழுது போகுமுன் தனக்குச் சேரவேண்டிய சம்ப ளத்தையும் பெற்றுக்கொண்டு வீட்டில் எல்லோரும் சந்தோஷப் படும்படி வெளியேறி விட்டாள். அனைவரிலும் சோபைக்குத் தான் இதில் மிக்க சந்தோஷம். ஆண்டாள் போவதற்குமுன் சோபை அவளைக்கூப்பிட்டு இரவில் சரியாகப் பன்னிரண்டு மணி க்கு வீட்டுக்கு அருகாமையில் ஓரிடத்தில் தன்னை வந்து சந்திக் கும் படியாக உத்திர விட்டாள்.

சோபை புறப்பட்டுப்போவதற்குமுன் தன் அத்தையையும் தந்தையையும் காணவேண்டி கோரிட்டது. விதரணி இதுவரையில் பேசாத விதமாய் மிக்க அதிகாரத்தோடு சோபையிடம் பேசி னள். அவளுடைய தந்தையும் மிக்க கோபத்துடன் அவளைப் பய

மூறுத்தி அதட்டிப்பேசினர். அதற்குச் சோபை "அப்பா, தாங்கள் எனக்குப் பிடிவாதமாய் இடுங்கட்டளையை நான் மறுக்கமாட்டேன். மறுக்கவும் கூடாது" என்றாள். இதைக்கேட்டவுடல்லருக்கு மிக்க சந்தோஷமுண்டாகி விட்டது. சோபைக்கு வேண்டிய தெல்லாம் வாங்கித்தருவதாய் வாக்களித்தார். தான் உயிர் எல்லாம் அவளிடமிருப்பதாயும், அவளுடைய சம்மதம் தன்னைச்சந்தோஷ சாகரத்தில் கொண்டு விட்டதாகவும் சொல்லிக் கொஞ்ச நேரத்திற்கு முன் தீப்பொறி பறந்தகண்களில் ஆநந்த பாஷ்பம் பொழிய அவளை மிக்க பக்ஷத்தோடு தழுவி மூத்தமிட்டார். அவளுக்குவேண்டிய சாமான்களை வாங்கிக்கொள்ளும்படி நாறுபவன் கோட்டுகள் கொடுத்தார். விதரணியுடைய சம்மதத்திற்கும் வல்லருடைய கோபத்திற்கும் பயமூறுத்துதலுக்கும் இணங்காத சோபை இப்பொழுது தன் தந்தை தன்னை மிக்க பக்ஷத்தோடு பாராட்டுவதை நோக்கி மனமுருகினாள். தன் தந்தையை இது வரையில் அந்தரங்கத்துடன் விசுவாசித்து வந்ததால் அவருக்குச் சந்தோஷ முண்டாக்க ஏதேனும் வழியிருந்தால் அதைத்தேடி முடித்துத் தானும்சந்தோஷப்படுவாள். தான் பிலவங்களை மணந்தால் அதினால் தன் தந்தைக்கு உண்டாகும் பேரானந்தத்தை நினைக்க இவளுடைய மனத்தீர்மானம் தடுமாற்றமடைந்தது. அன்றியும் பிதுர்வாக்கிய பரிபாலனம் சாஸ்திரங்களால் வற்புறுத்தப்பட்டிருக்கிறபடியால் அந்தப்படி தானும் செய்யவேண்டாமா என்று ஐயப்பட்டாள்? தன் சுய நன்மையைக்கோராது தான் மிகுந்த கஷ்டம் அனுபவிப்பினும் தந்தை மனதுப்படி நடப்பதே மேலானதென்று நிச்சயம் செய்துகொண்டாள்.

தனது மனோநிடத்திற்காகத் தன்னை மெச்சி தான் செய்த தீர்மானத்திற்காகத் திருப்தியானாள். அச்சமயத்தில் மாரன் அவளுடைய தீர்மானங்களையெல்லாம் கலைத்துவிட்டான். தாமோதரனுடைய எண்ணம் திரும்பவும் மனத்தினுதித்து முன் கொண்டிருந்த தீர்மானத்தைப் பறக்கடித்து விட்டது.

9. அத்தியாயம்.

அவாவில்லார்க் கில்லாகுந் துன்ப மஃதுண்டேற்
றவாஅது மேன்மேல் வரும்.

தாமோதரன் பரஸ்தலம் போகும் பாதையில் அவனை விட்டு வந்தோம். அவனுக்கு வழி காட்டுவதாகச் சொல்லி அவனையிட்டுப்போனவனுக்கே வழிதெரியாது. ஆதலால் வழிதப்பி முன்னும் பின்னுமாகச் சென்று வழிகேட்கவும் வெட்கி சூரியன் அஸ்தமித்து இருள் படரும்வரையில் அலைந்துகொண்டிருந்தான்.

தாமோதரன் வழிதப்பிப் போனதாயறிந்து கூடவந்தவனுக்குத் தன் பயத்தைத் தெரிவித்தான். ஆனல் அவன் சரியானவழியிலே யே செல்வதாகவும் தனக்கு பரஸ்தலத்துக்கு வழிதெரியாவிட் டால் அதினும் அதிசயம் வேறு ஒன்று மிராது என்றும் ஒரே மூர்க்கமாய்ச்சொன்னன். இதுவரையில் பரஸ்தலம் போயிராத அவனுக்கு வழி யெப்படித் தெரியுமென்று நமக்கே ஆச்சரியமா கத்தானிருக்கிறது.

தாமோதரனுக்குஇன்னும் சமூசயமாயிருந்ததால் வழியிலிரு ந்த ஒரு கிராமத்திற்குப்போய் அங்கிருந்த ஒருவனைப்பார்த்து "இதுதானு பரஸ்தலத்துக்குவழி?" என்று விசாரித்தான். அவன் நீங்கள் எங்கிருந்து வரிங்கோ என்றான். தாமோதரன் (கொஞ்சம் அவசரமாய்) அதெல்லாம் உமக்கென்ன? இது பரஸ்தலத்துக்குப் போகும் வழிதானு என்று தெரியச்சொல் என, அள் (கலேசொரி ந்தகொண்டு) பரஸ்தலத்துக்கு வழியா? என்னங்கோ சாமி இந்த வழியாப்போனு இன்னிராத்திரி பரஸ்தலம் போய்ச்சேரமாட்டீங் கோ என, தாமோதரன்: ஆனல்நண்பா! எது சரியானவழி கொஞ்சம் காட்டு என்றான். ஆள்-நீங்க எங்கியோ வழிதப்பி வந்தாட்டீங்கோ. இது கற்பகபுரிபோகும் வழியாச்சே என்ன, தாமோதரன் பரஸ்த லத்துக்கு வழி எது சொல்லேன் என்று மீண்டும் கேட்டான். ஆள் இப்போ நீங்க பரஸ்தலத்திலிருந்துதானே போரீங்கோ - தாமோ தரன் - அப்படியானல் நாங்கள் திரும்பவும் அங்குப் போகவே ண்டும் சொல்லேன் வழி. ஆள்-நீங்க வந்தவழியே திரும்பிப்போக னும்-தாமோதரன்-அதோ அந்த மலே உச்சிசென்ற பிறகு எந்த வழி செல்லவேண்டும். ஆள் - நேராகப்போகவேனும். தாமோ தரன்-வலதுபக்கம் ஒன்று இடதுபக்கமொன்று இரண்டு பாதை இருப்பதாய் எனக்கு ஞாபகமிருக்கிறதே. ஆள்-வலதுபக்க பாதை வழியாக நேரே போகவேனும். ஆனு நீங்கப்போகும்போது மூத லில் வலதுபக்கம் திரும்பவேனும், பிறகு இடதுபக்கமும், அதன் பிறகு வலதுபக்கமும் திரும்பினால் மிராசு வீட்டண்டை கொண்டுபோகும். அங்கிருந்து நேரா போய் அப்பாலே இடது பக்கம் திரும்பவேனும் என்றான். இந்த சமயம் மற்றொருவன் வந்து "நீங்கள் எங்குபோகிறீர்கள்" என்று கேட்க, தாமோதரன் பரஸ்தலம்போகவேண்டுமென்றான். அவனும் தலையைச்சொரிந்து கொண்டே தன் கையிலிருந்த தடியை ஊன்றிக்கொண்டு 'நீங்கள் வலதுபக்க பாதையாக ஒன்று ஒன்றரை மைல் நேரே சென்று பிறகு இடது பக்கம் திரும்பினால் சிவாபரணம் விட்டண்டை சேர்வீர்கள்' என்றான். தாமோதரன் சிவாபரணத்தின் விடு எங்கே இருக்கிறது? ஆள்-இது என்ன புதுமை, சிவாபரணத்தின் விடு உனக்குத் தெரியாதா? நீ எங்கிருந்து வருகிறாய்? என்றான்.

இவ்விருவரிடமிருந்தும் சங்கதி தெரிந்து கொள்ள முடிய வில்லையே யென்று தாமோதரன் யோசித்துக்கொண்டிருக்கையில் அங்கு சாதாரண உடையுடுத்தி அமரிக்கையுள்ள கபாலி என் பவன் வந்து தாமோதரனைநோக்கி 'நண்பரே நீர் வழிதப்பி வந்து விட்டதாய்த் தெரிகிறது. நான் சொல்வதைக்கேளும். இன்று ராத் திரி உம்மால் வழி கண்டுபிடிக்க முடியாது. இப்பொழுது இருட் டாகிவிட்டது. பாதையே தெரியாது. இதற்கும் பரஸ்தலத்துக் கும் நடுவில் பல மோசங்களும் கொள்ளைகளும் நடந்திருக்கின்றன. அருகாமையில் ஒரு சத்திரமிருக்கிறது. அங்குபோனால் உங்களுக் கும் ஆகாரம் கிடைக்கும். குதிரைக்கும் கொள்ளும் புல்லும் கொ ள்ளும் கிடைக்கும்' என்றான். தாமோதரன் கொஞ்சம் யோசி த்துப் பிறகு காலைவரையில் அந்த சத்திரத்தில் போய் தங்கியிரு ப்பதென்று தீர்மானித்தான். அவனுடைய நண்பனும் அவனை அவ்விடமிட்டுப் போனான்.

சத்திரக்காரன் மிக்க மரியாதையுள்ளவன். அவன் தாமோ தரனைப்பார்த்து "தங்களுக்கு வேண்டியபடி உபசரணை செய்ய முடியாமலிருக்கிறதே யென்று வருத்தப்படுகிறேன். என் மனைவி எல்லாவற்றையும் பூட்டி சாவியையும் எடுத்துக்கொண்டு வெளியே போயிருக்கிறாள்" என்றான். உண்மையில் அவளுடைய பெண் ஒன்று அப்பொழுதுதான் கலியாணமாகிப் புருஷன் வீடு அன்று காலையில் சென்றாள். அப்பெண்ணும் அவள் தாயாரும். வீட்டி லுள்ள பண்டம், கைவசமிருந்த ரொக்கத்தை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அச்சத்திரகாரனுக்குப் பல குழந்தைகளிருந் தும் தாய்க்கு இப்பெண்ணின்மேல் வாஞ்சை யதிகமாகையால் அவளைச் சந்தோஷிப்பிக்கும் பொருட்டு மற்றைக்குழந்தைகளைத் திண்டாடவிட்டுப் போய்விட்டாள்.

தாமோதரன் தனியே உட்கார்ந்து சிரிக்கவிருப்பிய போதி லும் கபாலி இவனுடைய முகத்திலும் நடக்கையிலும் விசனம் தோன்றுவதை நோக்கி அவனுடன் பேசிக்கொண்டிருந்தால் கொஞ்சம் கவலை நீங்கியிருப்பானென்று கருதித் தானும் அவனுட னிருப்பதாய்ச் சொன்னான். கொஞ்சநேரம் இருவரும் சும்மா யிருந்தபிறகு

கபாலி:—நண்பரே! உமக்கு ஏதோ கஷ்டம் சம்பவித்திருப் பதாய்த் தோன்றுகிறது. மனத்தைத் திடப்படுத்திக்கொள்ளும். ஒருவேளை உமது ஆப்த நண்பரொருவரையிழந்து விட்டீர் போலும். அப்படியானால் நாமெல்லாம் சாகவேண்டியதுதானே. நீர் துயரப்படுவதால் உமது சினேகிதருக்குக் கொஞ்சமேனும் அனுகூல மிராதென்று தெரிந்திருக்கும்போது எதற்காக மன முழலவேண்டும்? நாமெல்லாம் கஷ்டப்படவே பிறந்திருக்கிறோம்

உம்மைப்போல எனக்குப் பல விசனமுண்டு, அவ்விசனம் உம் மூடையதைவிட ஜாஸ்தியாகவே யிருக்கலாங். எனக்கு வருஷத் திற்கு, 1500 பவுன் கிடைக்கும்படியான ஆஸ்தியிருக்கிறது. அது எனக்கு எதேஷ்டமானது. நான் மனச்சாக்ஷிக்கு விரோதமாய் ஒரு குற்றமும் செய்ததில்லை. எனதுதேகமோ நோயற்று மிக்க பல முடையதாயிருக்கிறது. ஒருவனுக்காவது நான் கடன்கொடுக்கவேண்டியதில்லை. ஒருவருக்கும் தீங்கும் செய்ததில்லை. இருந்தும் என்னைப்போல் துர்ப்பாக்கிய மூடையவனுய் நீர் இருக்க மாட்டீர் என்று நன்முய்ச் சொல்லுவேன்..

தாமோதரன்:—உம்முடைய கஷ்டம் எப்படிப்பட்டதாயிருந்தபோதிலும் அதைப்பற்றிக் கேட்க எனக்கு வருத்தமாயிருக்கிறது.

கபாலி:—நண்பரே என்னியசனத்திற் கெல்லாம் என் ஒரே பெண்தான் காரணம். அவளைவிட வேறு இந்த உலகத்தில் எனக்கு சந்தோஷம் கிடையாது. அப்படிப்பட்டவள் இந்தவாரம் என்னைவிட்டு ஓடிப்போய் எனக்கிஷ்டமிராதவனைக் கலியாணம் செய்துகொண்டு விட்டாள். நான் அவளுக்குத் தகுந்த புருஷனுக நூற்குணமும் அந்தஸ்து முள்ள ஒருவனைப் பார்த்துத் திட்டம் செய்து வைத்திருந்தேன். அவளோ ஒரு பைசாகூட இல்லாதவனோடு ஓடிப்போய் விட்டாள். அவள் இறந்துபோயிருந்தால் எனக்கு அவ்வவவு துயரமிராது.

தாமோதரன்:—நீர் சொல்வது அதிசயமாயிற்று.

கபாலி:—அவள் பிச்சைக்காரியாகத் திண்டாடுவதை விடச் சாவது மேலல்லவா? இப்பொழுது எவனுடன் போயிருக்கிறுளோ அவனிடம் நான்சொன்னபடி ஒருபைசாவாவது கிடையாது. நான் எப்படி அவளுக்கு உதவிசெய்வேன். அவள் காதலித்துக் கலியாணம் செய்துகொண்டாளாகையால் காதல் சோறுபோடுமா பார்ப்போம். காதலைக்கொண்டுபோய் கடையில் விற்று அதற்குப் பைசாவும் ரூபாயும் மாற்றிக்கொண்டு வருகிறுளா பார்ப்போம்.

தாமோதரன்:—உம்முடைய விட்டு சமாசாரம் உமக்கு நன்முகத்தெரியும்.

கபாலி:—வெகுளாளாக என்னை யேமாற்ற வேணுமென்று செய்த சூழ்ச்சியாக்குமிது. அவர்கள் குழந்தைப் பருவமுதல் ஒருவரை யொருவர் அறிவார்கள். காதல் தவறென்றும் அதுகெடுதியை விளைக்கு மென்றும் ஆயிரந்தடவை படித்துப் படித்து அவளுக்குச் சொல்லியிருக்கிறேன். அந்தக் கபடி நான் சொல்வதை யெல்லாம் கருத்தாய்க் கேட்பதுபோல் பாசாங்குசெய்து உடலில்

சுகத்தையெல்லாம் வெறுப்பதாகச் சொல்லிவிட்டு அறைச்சன னலே உடைத்துக்கொண்டு ஓடிப்போய்விட்டாள். ஏனெனில், அவள்மேல் சந்தேகமுண்டாகி மறுநாட்காலையில் என் இஷ்டப் படி அவளே மணம் செய்விப்பதென்று தீர்மானித்து ஒரு அறை யில்போட்டுப் பூட்டிவைத்திருந்தேன். பத்திரப்படுத்திய கொஞ்ச நேரத்திற்குள் அவள் தப்பியோடி தானிஷ்டப்பட்டவனுடன் சேர்ந்து அன்றிரவே சம்பந்தஞ் செய்துகொண்டாள். அந்த மூகூர்த்த மவர்களுக்கு வினுசகாலந்தான். ஏனெனில் அவர்களுக்கு நான் ஒரு பைசாவாவது கொடுக்கப்போகிறதில்லை. அவர்கள் பட்டினி கிடந்தாவது சாகவேண்டும், பிச்சையெடுத்தாவது துண்ண வேண்டும், திருடியாவது ஜீவிக்கவேண்டும்.

தாமோதரன்:—(இடத்தைவிட்டு எழுந்து) நீர் என்னை மன் னிக்கவேண்டும். என்னைத் தனியே விட்டுவிட்டுப்போம்.

காபாலி:—எதற்காக வருத்தப்படுகிறீர்? உம்மையன்றி எத் தனையோ பெயர்கள் உலகத்தில் துயரப்படுகிறார்கள். இது உமக் குத் தெரியாதா?

தாமோதரன்:—ஆமாம், உலகத்தில் எத்தனையோ பைத்தியக் காரர்கள், மடையர்கள், அயோக்கியர்கள் இருக்கிறார்கள். நான் உமக்குப் புத்தி சொல்லுகிறேன் கேளும். நீர் வீடு போனதும் உமது பெண்ணையும் மருமகனையும் கூப்பிட்டு வீட்டிலேயே வைத் துக்கொள்ளும். நீர் மிகுந்த வாஞ்சை வைத்திருப்பதாகச் சொல் லும் உமது பெண்ணுக்கு நீர் வருத்தமுண்டாக்குகிறீரே யல்லது வேறில்லை.

கபாலி:—(உரத்தகுரலுடன்) அவளையும் அவள் புருஷனை யும் வீட்டுக்கு வரவழைத்துக் கொள்ளுகிறதா? அதைவிட உயிர்ப பகைவரை வரவழைத்துக்கொள்வேனை.

தாமோதரன்:—சரி, வீட்டுக்கு அல்லது உமது இஷ்டமான விடத்திற்குபோம். உம்முடன் ஒரு நிமிஷமும் நான் உட்கார்ந்திரு க்கமாட்டேன்.

கபாலி:—இஷ்டமில்லா விடத்தில் நான் நிற்கமாட்டேன். அழையாவிட்டிற்கு தழையாதே" என்று சாஸ்திரம் சொல்லி இருக்கிறது.

இவ்விதம் சொல்லிப் புதியவன் சத்திரக்காரனுக்குப் பணம் கொடுக்கும் பொருட்டுப் பையிலிருந்து பணத்தை யெடுத்தான். ஆனல் தாமோதரன் அவனைப் பிடித்து அறைக்கு வெளியில் தள்ளிவிட்டான்.

கபாலியின் சம்பாஷணை தாமோதரனுக்கு மிக்க மனமறுக் கத்தை உண்டாக்கியதால் அவன் பேசிக்கொண் டிருந்தபோதெல்

லாம் ஒன்றுந் தோன்றுமல் விழித்துக்கொண்டிருந்தான். இதை யெல்லாம் கவனித்த தாமோதரன் சித்தப்பிரமை கொண்டவனென் றும் நம்பிவிட்டான். ஆகையால் தாமோதரன் பிடித்துத்தன்னைத் தள்ளியதற்குக் கோபியாது அவனுடைய நிலைமைக்கு மனமிரங் கிச் சத்திரக்காரனிடமும் தாமோதரன் ஏதாவது தவறுசெய்யின் அதைக் கவனியாது மரியாதையோடு உபசரணை செய்து சாக் கிரதையாகப் பார்த்துக்கொள்ளும்படி சொல்லிப்போனான். சத் திரக்காரன் அவனுக்கு "மரியாதையொன்றுங் செய்யமாட்டேன். அவன் சரிகை பீதாம்பர வுடைதரித்தானும் அவன் பெரிய மனுஷனல்லவென்று தோன்றுகிறது. 30 - மைலுக்கப்பாலுள்ள ஒரு பெரிய ஐவேஜிக்காரர் வீட்டில் வளர்க்கப்பட்ட ஒரு கழி சாடைபோலிருக்கிறான் இவன். இவனை யிப்போது ஏதோ குற் றத்திற்காக வீட்டைவிட்டுவெளிப்படுத்தி யிருக்கிறார்கள். நானும் அவனை இங்கு வைத்துக்கொள்ளப் போகிறதில்லை. மோனவரு ஷம் வெள்ளி உத்தரணியொன்று என் வீட்டிலிருந்து திருட்டுப் போய்விட்டது என்றான். இதைக் கேட்டு கபாலி "நாட்டுப்புறத் தில் வளர்ந்த கழிசாடைப்பிள்ளை என்று சொல்லுகிறாய்? வேறு எவனுக்குப் பதிலாகவோ இவனைத் தவறிச் சொல்லுகிறாய்போ லும்" எனசத்திரக்காரன் "இல்லவேயில்லை இவனுக்கு வழிகாட்டி வந்தவன் எல்லாவற்றையு மென்னிடம் சொன்னான்" என்றான்.

தாமோதரனுடைய இழிபிறப்பையும் வறுமையையுங் கேள் விப்பட்டதும் கபாலிக்கு அவன்மேலிருந்த பரிதாபமெல்லாம் பற ந்துவிட்டது. இப்பொழுதுதான் தாமோதரன் தன்னைப்பிடித்துத் தள்ளியதற்குக் கோபமுண்டாயிற்று. தாமோதரனை வாயில் வந்த படி தூற்றிக்கொண்டே கபாலி விடுசென்றான்.

சத்திரக்காரனுக்கும் தாமோதரனிடத்தில் மிக்க அருவெறு ப்பு உண்டாகிவிட்டது. தாமோதரன் படுக்கவேண்டுமென்றதும் சத்திரத்தில் படுக்கக்கூடாது என்று சத்திரக்காரன் சொல்லிவிட் டான். அவன் சமயம்பார்த்து வீட்டிலிருப்பதையடித்துக்கொண் டுபோக வந்திருக்கிறானென்றும் சத்திரகாரன் எண்ணிவிட்டான். அவன் மனைவியும் பெண்ணும் இருந்ததையெல்லாம் முன்பாக வேசருட்டிக்கொண்டு போய்விட்டவிஷயம் அவன் ஞாபகத்துக்கு அப்பொழுதும் வரவில்லை. உத்தரணி இழந்ததுமுதல் அவனுக்கு யாரிடமும் சந்தேகம் அதிகமாயிற்று.

படுக்கைக்கு இடம்கிடைக்காது என்று தெரிந்ததும் தாமோ தரன் அங்குகிடந்த ஒரு நாற்காலியிலேயே சாய்ந்துகொண்டு தூங்க வாரம்பித்தான். உயர்ந்த படுக்கையில் படுத்தும் தூக்கம் வராதவனுக்கு இன்று நாற்காலியில் உட்கார்ந்ததும் நல்ல தூக்கம் வந்துவிட்டது. சத்திரக்காரனுக்குமாத்திரம் தூக்கம் பிடிக்கவில்லை.

சாமான்கள் எங்கே களவுபோய் விடப்போகிறதோவென்று தாமோதரன் தூங்குமிடம் வந்து அடிக்கடி பார்த்துப்போனான்.

10. அத்தியாயம்.

வேள்ளத்தனைய மலர்நீட்ட மாந்தர்தம
மேள்ளத்தனைய துயர்வு.

சத்திரக்காரன் ஒரு நாழ்காலியில் உட்கார்ந்து இரவு முழுதும் காவல் காக்கிறதென்று தீர்மானித்திருந்தான். வழிகாட்டியும் மற்றொருவனும் இவனுடன் கூடவேயிருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு தாமோதரன் மேல் சந்தேகம் கிடையாது. அவர்கள் மதுவை அளவுக்கு மிஞ்சியருந்திவிட்டு வெகுநேரம் கூச்சல்போட்டுக்கொண்டிருந்து பிறகு தூங்கி விட்டார்கள். சத்திரக்காரனோ மனக்கவலை கண்மூடா திருக்கச்செய்தது. தாமோதரனிருந்த அறையைத் தானிருந்த இடத்திலிருந்தே உற்றுப் பார்த்தியிருந்தான். அப்பொழுது விரைவில் மடால் மடால் என்று கதவைத்தட்டிய சப்தம் அவன்காதில் விழுந்தது. கதவைத்திறந்ததும் சிவப்பு உடையணிந்து அனேக சிப்பாய்கள் கோட்டை பிடிப்பவரைப்போல் அவனைத் தள்ளிக்கொண்டு சமையலறைப் பக்கம் ஓடினார்கள். ஓடி உட்புகுந்து "சாராயத்தைக் கொண்டுவா" வென்று யாவரும் படபடத்துக்கேட்க அவன் ஓடோடி சாராயத்தை அறையிலிருந்தெடுத்துக் கொண்டுவந்து பரிமாறிக்கொண்டிருந்தான். அந்த சமயத்தில் தாமோதரன் தூக்கத்திலிருந்தெழுந்து சத்திரத்தில் சிப்பாய்கள் வந்திரங்கியிருக்கக்கண்டான். அவர்கள் தாகம் தணித்துக்கொண்ட பிறகு கிரயம் கொடுக்க வேண்டியதில் சம்வாதஞ் செய்தார்கள். சிலர் வாங்கிக் குடித்ததும் பாத்திரத்தைக் கீழேவைத்துத் தூங்கப்போய்விட்டார்கள். பாக்கியிருந்த ஒவ்வொருவரும் ஏககாலத்தில் பேச ஆரம்பித்தார்கள். மற்றவர்கள் கொடுக்காது போனதற்கு நான் ஏதற்குப்பகுந்து கொடுக்கவேண்டுமென்று ஒவ்வொருவனும் சண்டைபிட்டான். ஆதையால் மதுக்கிரயம் கொடுக்காதவன் பாகத்தையெல்லாம் சத்திரக்காரனே போட்டுக்கொள்ள வேண்டிவரும்போலிருந்தது.

இவ்வாதம் நிகழ்ந்த நேரமுழுதும் தாமோதரன் அச்சிப்பாய்க் கூட்டத்தின் அவில்தார் ஒருவனிடம் பேசிக்கொண்டிருந்தான். அந்த அவில்தார் இந்த சச்சரவில் கலந்தேதியில்லை. அவன் வெகு நாளாகக் காசுகொடாமலே குடித்துக்கொண்டிருந்தவன். சிப்பாய்களுக்குள் சண்டை மும்முரமாகி விட்டபடியால் தாமோதரன் முன்வந்து அவர்களெல்லாம் கொடுக்கவேண்டிய பாக்கித் தொகையைத்தான் கொடுப்பதாய்ச்சொல்லி சண்டையை நிறுத்தினான். இந்தவார்த்தையைக் கேட்டதும் எல்லோரும் அவனுக்கு

வந்தனமளித்து அவனைப் பெருமை படுத்தினர்கள். பிரபு என்றும், கௌரவபுருஷரென்றும், பெரியமனிதர் என்றும், அவனை சிப்பாய்கள். கொண்டாடினர்கள். சத்திரக்காரனும் முன்வைத்திருந்த கெட்ட எண்ணத்தை நீக்கி நல்லபிப்பிராயங்கொண்டான். வழிகாட்டி சொன்னதெல்லாம் பொய்யென்று இப்பொழுது நினைத்தான்.

சில கலகக்காரர்களை அடக்கும் பொருட்டு அந்த சிப்பாய்க் கூட்டம் செல்வதாகவும், அக்கூட்டத்துக்கு காம்பிரநாதர் தலைமை வகிக்கப்போகிறதாகவும் அவில்தார் சொன்னான். தாமோதரனுக்கு சுபாவத்திலேயே மனோதைரியமும் திடகாத்திரமு முண்டானதை யால் இவர்களோடு சேர்ந்து சண்டைசெய்தால் தனக்குக் கீர்த்தி வருமென்று எண்ணினான். ஆதலால் தானும் அவர்களோடு சேர்ந்து யுத்தத்துக்கு வருவதாகச்சொன்னதும் அவில்தார் மிக்க சந்தோஷத்துடனேற்று அவனபிப்பிராயத்தைச் சிப்பாய்க்கூட்டத்திற்குத் தெரிவிக்க அவர்களெல்லோரும் சரசமகாராஜாவும் நீயும் சுகமாகவாழ்க என்று அவனைவாழ்த்தினர்கள். நாங்கள் உயிருள்ள வரையில் உன்னை ஆபத்திலிருந்து காக்கிறோம் என்றும் உறுதி செய்தார்கள்.

பிராயாணத்திற்குப் புறப்படுகையில் தாமோதரனுடைய மூட்டையையுமெடுத்து வண்டியிற் போட்டார்கள். அப்பொழுது வழி காட்டி தாமோதரனிடம் வந்து "ஐயா ராத்திரியெல்லாங் குதிரைகளைக் காக்கவைத்தீர்கள். வழியைவிட்டு வெகுதூரம் இழுத்துக் கொண்டு வந்துவிட்டீர்கள். இது தங்களுக்கு ஞாபக மிருக்கவேண்டும் என்றான். இவன் சொன்னதைத் தாமோதரன் சிப்பாய்களிடம் சொல்ல அவர்களெல்லோரும் அவ்வழிகாட்டியை உபத்திரவிக்க ஆரம்பித்தார்கள். அவனைக் கையையும் காலையுங்கட்டி உருட்டிவிடுவோமென்றார் சிலர். அவில்தார் தன் கைப்பிரம்பை வீசி "நீமாத்திரம் எனக்குக் கீழ்வேலையிலிருந்தால் உன்னைத்தகுந்தபடி சிக்ஷிப்பேன்" என்றான்.

தாமோதரன் அவனுக்கு ஒன்றுங் கொடாமல் சிப்பாய்களோடு புறப்பட்டுப்போய் விட்டான். எளியவழிகாட்டி அவனை வாயில் வந்தபடி திட்டிக்கொண்டே சென்றான். சத்திரக்காரனும் அவனுடன் சேர்ந்து "நல்ல பெரியமனிதனை என் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்தாயே? சிப்பாய் ஆகப்போகிறவன் எப்படிப்பட்டவனுக விருக்கவேண்டும். மின்னுவதெல்லாம் பொன்னுகுமா? நல்லவேளையாக வீட்டை விட்டு ஒழிந்ததற்கு சந்தோஷப்படுகிறேன்" என்றான்.

அன்று முழுவதும் தாமோதரனும் அவில்தாரும் சேர்ந்து நடந்தார்கள். அவில்தார் மிக்க கபடன். அவனிது வரையில் ஒரு

யுத்த களமாவது பார்த்ததில்லை. இருந்தும் தாமோதரனிடம் தான் அடைந்த ஜயங்களையும் போர்க்களத்தில் தன்னுடைய வீரத்தையும் பற்றிப்புகழ்ந்து கூறிக்கொண்டே சென்றான். உண்மையில் அவனுடைய உத்தியோக வயர்வெல்லாம் பட்டாளத்திற்கு ஆள் சேர்ப்பதினாலேற்பட்டது. இப்பாய்களெல்லாம் வேடிக்கையாகப்பேசிக்கொண்டே வழிநடந்து சாயந்திரம் ஒரு சத்திரம் வந்து சேர்ந்தார்கள். அங்கே அவில்தார் சுபேதாரிடம் சேனையில் சேர்க்கத்தான் இரண்டுபேர்களைக் கூட்டி வந்திருப்பதாய்ச்சொன்னான். அவ்விருவர்களையும் சுபேதார் வரவழைத்துப்பார்த்து அவர்களில் தாமோதரன் நல்லுடையுடுத்திப் பெரியமனுஷன் வீட்டுப் பிள்ளை போலிருப்பதைப்பார்த்து ஆச்சரியப்பட்டு "ஐயா நீர் எனக்குக் கீழ்ப்பட்டிருக்கும் சைனியத்தில் ஓர் போர்வீரனாகச் சேர இஷ்டப்பட்டிருப்பதாக அவில்தார் சொல்லுகிறார். அப்படியானால் உம்மைப்போன்ற பெரிய மனிதன் எனதுபடைக்குள் வந்து ஆயுத பாணியாக விருக்க நான் மகிழ்ச்சியடைவேன்" என்றான். தாமோதரன் "நான் ஓர் போர்வீரனாக வருவதாகச் சொல்லவில்லை. இந்தக் கலகக்காரரை யடக்குவதில் எனக்கும் விருப்பமுண்டாகி அதற்காக உமது சேனையுடன் வந்து சண்டைபோடுவதாக உத்தேசம். சண்டைக்குப் பிறகு என்னிஷ்டப்படி நான் போய்விடுவேன்" என்றான். சுபேதார் அவன் மனோதிடத்துக்காகமெச்சிக் கைலாகு கொடுத்து அவனைத் தன்னுடன்கூட உட்கார்த்து உண்ணும்படியாகச் செய்தார்.

11. அத்தியாயம்.

நயன் சார னன்மையினீக்கும் பயன்சாராப்
பண்பில்சொற் பல்லா ரகத்து.

மேற்படி படையை நடத்திய சுபேதாருக்கு வயது சுமார் அறுபது இருக்கும். அவன் இளமையிலேயே படையில் சேர்ந்து தானேஸ்வர யுத்தத்தில் முன்னணிப்படையி லிருந்தவன். இந்த யுத்தத்தில் இரண்டு முன்காயப்பட்டு சாமார்த்தியமாகச் சண்டை செய்ததால்அப்போருக்குப் பிறகு சுபேதராக்கப்பட்டான். அதே வேலையில் சென்ற நாற்பது வருஷகாலமாக இருந்து வந்தான். இதற்குள் எத்தனையோ பேர்கள் இவனுக்குக் கீழிருந்து மேலே கொண்டு வரப்பட்டார்கள். இவன் படையிற்புகுந்தபோது குழந்தைகளா யிருந்தவர்களுடைய புத்திரர்க ளெல்லாம் இவனிருந்த படைக்குத் தலைவராக்கப்பட்டார்கள்.

இந்தத் தாழ்வுக்குக் காரணம் இவனது சினேகிதர்களில் ஒருவராவது பெரிய வேலையில் இராமலிருந்ததன்று. அவனுடைய அணியின் தலைவன் இவனுக்கு விரோதமா யிருந்தான். இது சுபேதாருக்கும் அவனுக்கு முண்டான மனஸ்தாபத்தினாலன்று,

இவன் வேலையில் குற்றம் கண்டுபிடிக்கப் பட்டது மன்று. ஆனல் இவன் மனைவியின் முட்டாள்தனம். அவளோ மிகுந்த ரூபவதி. புருஷனிடம் மிக்க பக்ஷம் வைத்திருந்தவள். அப்படி யிருந்தும் அவள் புருஷன் வேலை உயரும் பொருட்டு அணித்தலைவன் அவளிடம் கேட்டுக் கொண்ட சில தயவுகளுக்கு இணங்காது இருந்து விட்டாள். சுபேதாருக்கு அணித்தலைவன் தன்னைப் பகைக்கிறனென்பது தெரியாமலே யிருந்தது. தான் ஒரு குற்றமும் செய்யவில்லை யாதலால் தன்மேல் அவனுக்கு மனஸ்தாப முண்டாகக் காரண மில்லையென்று எண்ணினன். அவனுடைய மனைவியும் புருஷன் மனம் நோகுமேயென்று அணித்தலைவன் நடத்தையைப் புருஷனுக்குத் தெரியாதிருந்தாள்.

இந்தத் தவர்ப்பாக்கிய சுபேதார் தன் தொழிலில் நிறமுடைய வனேயன்றி இன்னும் பலநற்குணங்களும் பொருந்தியவன். அவன் ஆசாரசீலன், யோக்கியன், தயாளு. தனது சிப்பாய்களினால் மாத்திரமேயன்றி முழு அணியினலும் விரும்பப்பட்டவன். அவனுடன்கூடவிருந்த ராணுவ உத்தியோகஸ்தர்களில் தெலுங்கனொருவனிருந்தான். அவன் சொந்த தேசத்தைவிட்டு வெகுகாலாகிவிட்டபடியால் அவன் சுயபாஷையை மறந்துவிட்டான். ஆனல் சம்ருஷ்டிரதேசம்வந்து கொஞ்சநாள்தான் ஆனபடியால் இந்த தேச பாஷையையும் சரியாகக்கற்றுக்கொள்ளவில்லை. இவனன்றி அங்கு பாலிய சிப்பாய் இருவர் இருந்தார்கள். ஒருவன் ஒரு நியாயவாதியால் வளர்க்கப்பட்டவன். மற்றவன் ஒரு பிரபுவினுடைய சுயபாகியின் புத்திரன்.

சாப்பாடு முடிந்ததும் அங்கிருந்தோர் பேசத்துவக்கியதில் தாமோதரன் பிரயாணத்தில் படைவீரருக்குண்டாகிய குதூகலங்களை விஸ்தரித்துச்சொல்லி கடைசியில் அவர்கள் எவ்வளவுகூச்சல் போட்டபோதிலும் யுத்தம் நேரிடின் பாண்டவ கௌரவர்களைப் போல போர்செய்வார்கள் என்பதில் தடையில்லை என்றன்.

ஒருவாலிபப் போர்வீரன்—பாண்டவ கௌரவர்களா? அவர்கள் யார்? நமது இந்து தேசத்துத் துருப்புகளை யெல்லாம் நான் நன்றயறிவேன். இந்தமாதிரிப்பேர் கேள்விப்பட்டதில்லையே.

சுபேதார்:—எதற்காக உன் முட்டாள் தனத்தைக் காட்டுகிறாய்?

நாதமுனி:—(என்னும் மற்றொருசிப்பாய்) நீர்வால்மீகிஎழுதிய கந்த புராணத்தைப் படிக்காதிருந்தபோதிலும் பாண்டவகௌரவாதிகளைப்பற்றிக் கேள்விப் பட்டதில்லையா? கௌரவர்களின் யுத்தநடையை வாத்துக்களின் சத்தத்திற்கு உபமானமாசசொல்லி பாண்டவர்களின் மௌனத்தைப் புகழ்ந்திருக்க வில்லையா வால்மீகி. அவர் சொன்னதில் எவ்வளவோ உண்மை யிருக்கிறது.

தெலுங்கன்:—ஓப்புடுதா நல்லா ஞாபகவச்சிந்தி. மேலு கச்சையா பாடசாலே படத்தா. பாண்டவ கௌருவ ஆடவாடிக்கி சண்டை போட்டாங்கோ எல்லா நான்படிச்சேஞ்.

நாதமுனி:—ஆம்ம் எனக்கு இருப்பதாக ஞாபகம் வருது. நமது அணியில் சோனிருக்கிறானே சோமன், எப்பொழுதும் அங்கிப்பையில் ஒருவியச மெழுத்துக்கொண்டுபோறான். அதைக் கண்டால் கிழித்துப்பேடலாம் போல்தோணுது. இன்னொண்ணு ராமன் கதையாம். கௌடும் சேத்து என் முதுகு தோலே வாங்கிச்சு.

சுபேதார்:—ஆனல்லீ பள்ளிக்கூடம் படித்திருக்கிறயா?

நாதமுனி:—அந்த அனியாயம் ஏன் கேக்கிறீர். என்னை யங்கு அனுப்பிய தகப்பன் நாசமாப் போகானு? அவன் என்னை ஒரு பூசாலியாக்கவேணுமென்று எண்ணினன். அதுக்கு நான் மயிரவனு? நமது அணியில்சிம்மன் இருக்கிறானே அவன் என்னோடு படித்தவன். என்னைடேகெட்டிக்காரன். அவனுக்கு யெழுதவாசிக்கத்தெரியாது.

சுபேதார்:—நீ உன் சினேகன் குணத்தைப்பற்றி நன்றாக மெச்சுகிறாய். நான் உனக்கு புத்தி சொல்கிறேன் கேள். சாஸ்திரங்களை கிந்திக்காதே. நாம் இப்பொழுது சாஸ்திரத்துக்கு ஹானிவராதிருக்கும் பொருட்டுத்தானை சண்டைபோடப்போகிறோம்.

தாமோதரன்:—சாஸ்திரத்தை நிலைநிறுத்துவதுதான் ஒரு பெரிய தர்மகைங்கரியம். மதத்திற்காக யுத்தம் செய்யும் சிப்பாய்களை அனைவரிலும் மேலானவர்கள். நமது அரசனையும் தேசத்தையும் நான் அபிமானித்த போதிலும் நமது மதத்தைப் பரிபாலிக்கும்பொருட்டே இந்தச் சேனையில் நான் சேர்ந்தேன்.

நாதமுனி:—(தாமோதரனை நோக்கி) ஐயா! நீர் நமது அணியில் வந்து சேர்ந்ததற்காக சந்தோஷப்படுகிறேன். நமது குரு ஒரு சமயம் அதிகமாகக் குடித்துவிட்டு உபதேசம் செய்யமுடியாமற்போனலும் அவர் வேலையைத் தடங்கலின்றி தாங்கள் செய்துவிடுவீர் என்று நம்புகிறேன். நீர் சர்வகலாசாலையில் படித்திருக்கிறீரென்று நினைக்கிறேன். அப்படியானல் எந்தப் பாடசாலையில் படித்தீர்?

தாமோதரன்:— கலாசாலையில் படிப்பதற்குப்பதிலாக ஒரு சிறு பள்ளிக்கூடத்திலும் நான் படிக்காததால் உம்மிலும் நான் கெட்டிக்காரனாகிவிட்டேன்.

நாதமுனி:—உமது கல்வித்திறமையை நோக்கினல். நீர் கலாசாலையில் கற்றிருப்பீர் என்று தோன்றுகிறது.

தாமோதரன்:—கலாசாலை போயும் எப்படி ஒருவன் மூடனாக இருக்கக்கூடுமோ அப்படியே கலாசாலை போகாமலும் இன்னொருவன் சமர்த்தனாயிருக்கலாம்.

சுபேதார்:—சபாஷ் துரையே, நன்றாசான்னாய். நாதமுனி! அவரிடம் வாக்குக் கொடுக்காதே. உன்னைபோல் எத்தனையோ பேர்களுக்கு அவர் சுடி கொடுப்பார்.

நாதமுனிக்கு தாமோதரன் சொன்னபதிலைக்கேட்க வெறுப்புங்கோபமு முண்டாயிற்று. ஆனாலும் அவனை அடிக்கவாவது திட்டவாவது தகுந்த காரணம் ஏற்படவில்லை. அதனால் மற்றொரு சமயத்தை எதிர்பார்த்து மௌனமாயிருந்தான்.

பின்பு சம்பாஷணையில் ஒவ்வொருவரும் தனது ஆப்த இஷ்டர்களைப்பற்றிப்பேசி வருகையில் தாமோதரன் சோபையின் பெயரைச்சொன்னான்.

சுபேதார்:—"இந்த சோபை யார்"

தாமோதரன்:—வத்ஸருடைய மகள்.

நாதமுனி:—பேதபுரியில் வத்ஸர் மகள் ஒருத்தி சோபை என்பவள் எனக்குத்தெரியும். அவள் மரிலிருக்கிற வாலிபர்கள் ஒவ்வொருவரையும் தவறாது அறிவாள். உன்னுடைய சோபை ஒருவேளை நான் சொன்னவளாயிருக்கலாம்.

தாமோதரன்:—நான் சொன்னவள் மிக்க அந்தஸ்துள்ள பெரிய குலப்பெண், உமக்குத் தெரிந்தவளல்ல.

நாதமுனி:—"ஆமாம், அவள் தான் என்றுசொல்லி அவள் உருவத்தை உள்ளபடி வர்ணிக்க ஆரம்பித்தான் (இவன் சோபையை அவளது அத்தையோடிருக்கையில் பார்த்திருக்கிறான்.)

தாமோதரன்:—நாதமுனி சொன்ன வாக்கியத்தின் பொருளை அறியாதபடியால் அவனுக்கு அவ்வளவு கோபமுண்டாகவில்லை.

நாதமுனி சோபையை வேறு யாரோ வென்றெண்ணிக்கொண்டான் என்று நினைத்து அவனை நோக்கி "உமது கேலிக்கு வேறு விஷயத்தை யெடுத்துப்பேசும். இந்த உத்தம ஸ்திரீயின் குணங்களைப்பற்றிப் பரிகசிக்கக்கூடாது. நான் பொறுக்கமாட்டேன்" என்று தாமோதரன் சொன்னான்.

நாதமுனி:—"பரிகாசமா" நான் இதுவரையில் இவ்வளவு சத்தியமாகப் பேசியதில்லை. நமது அணியில் சோமனிருக்கிறானே அவன் அவளையும் அவள் அத்தையையும் பேதபுரியில் வைத்துக் கொண்டிருந்தான்.

தாமோதரன்:—அப்படியானால் நான் சத்தியமாய்ச் சொல்கிறேன்கேள். உன்னைப்போன்ற மரியாதையற்ற அயோக்கியன் உலகத்திலேயே கிடையாது.

இதைக்கேட்டவுடன் நாதமுனி அவனை வாயில்வந்தபடி திட்டி அங்கிருந்த கண்ணாடிப்புட்டி ஒன்றை யெடுத்து அவன் தலையை நோக்கி யெறிந்தான். அது தாமோதரன் வலது பொறியிற்பட்டு அவனைக் கீழேவிழுத்தியது. அவன் பேச்சு மூச்சின்றிக் கீழே விழுந்து இரத்தம் பெருகிக்கொண்டிருப்பதைக்கண்ட நாதமுனி அவ்விடத்தைவிட்டு ஓடிப்போகப் பார்த்தான். ஆனால் சுபேதார் கதவை மூடிக்கொண்டு அவனை வெளியே செல்லவிடாது தடுத்தார். நாதமுனி தன்னை விட்டுவிடும்படியாகக் கெஞ்சிக் கூத்தடினான். தான் தாமோதரனோடு பேசியதெல்லாம் வேடிக்கைப் பேச்சேயென்றும் சோபையைப்பற்றி ஓர் இழுக்கான வார்த்தையாவது தான் கேள்விப்பட்டதில்லை என்றுஞ் சொல்லி, தானங்கிருந்தால் நீங்கு நேரிடுமாதலால் உடனே ஓடிப்போகவேண்டுமென்று மன்றாடினான். சுபேதார் "கேள்விப்பட்டதில்லையா? அப்படியானால் நீ இப்படிப்பட்ட பரிகாசம் செய்ததற்காகவும் புட்டியையெடுத்து விசிறியதற்காகவும் தூக்கிடப்படவேண்டும். நீ இப்பொழுது என்னுடைய கைதி. இங்கு காவலாளிகள் வந்து உன்னைப் பத்திரப்படுத்திக் கொண்டுபோகிறவரையில் நீ இவ்விடத்தைவிட்டு அசையக்கூடாது" என்றார்.

நாதமுனியைச் சுபேதார் குற்றமுங்கையுமாய்ப் பிடித்து விட்டபடியால் அவனுக்கு வேறு வழியொன்றுந் தோன்றாது வந்ததை யனுபவித்துத்தான் தீரவேண்டுமென்று சும்மாவிருந்தான். சுபேதார் ஆனானப்பி ஒரு வைத்தியனையும் சில போலீசுக்காரரையும் அழைத்துவரும்படி செய்தார். இதற்குள் அக்கம்பக்கத்தினர் கூடிவிட்டார்கள். அவர்களில் ஆறுபெயரைக்கூப்பிட்டு நாதமுனியைக் கட்டிப்போகும்படி சுபேதார் உத்தரவிட்டார். நாதமுனிக்குத் தானிருந்தவிடம் விட்டுப் போகப் பிரியந்தான். ஆனால் அவர்கள் கூட்டிப்போகு மிடத்திற்கும் போகக் கொஞ்சமேனும் இஷ்டமில்லை. ஆசையின் மாறுபாடுதான் என்னே! கௌரவம் வேண்டித் தாமோதரனை நாதமுனி சண்டையில் விழுத்தினான். இப்பொழுதோ அந்த கௌரவத்தையைக் காதால் கேளாமல் உலகத்தில் எந்த மூலையிலாவது போய் ஒளிந்திருந்தால் போதுமென்று விரும்புகிறான்.

சுபேதார் பேச்சு மூச்சின்றியிருந்த தாமோதரனைக் கவனியாது நாதமுனியைப் பிடித்துக்கொண்டு போவதில் கருத்தாகவிருந்ததற்கு வாசகர்கள் ஆச்சரியப்படுவார்கள். மனுஷர்களுடைய சுபாவத்தைப் போகப்போக அவர்களே அறிவார்கள். ஆகையால்

நாமிங்கு ஒன்றும் சொல்லவேண்டுவதில்லை. வந்த சனங்கள் நாத முனியை அதிகமாகக் கவனியாது இரத்தம் வழியத் தரையில் வீழ்ந்து கிடக்கும் தாமோதரனைக்கண்டு அவனுக்கு வேண்டிய சிகிச்சை செய்ய ஆரம்பித்தார்கள். அவனை ஒரு நாற்காலியில் உட்கார வைத்ததும் கொஞ்சம் உயிர் இருப்பதாக அவர்களுக்குத் தெரிந்தது. இதைக்கண்டவுடன் தக்க வைத்தியர் அச்சமயமில் லாதபடியால் ஒவ்வொருவரும் ஒவ்வோர் வைத்தியம் சொல்ல வாரம்பித்தார்கள். அனைவருஞ் சேர்ந்து ரத்தத்தைக் நிந்தச் செய் வதே சரியான வைத்திய மென்றார்கள். ஆனால் பாவம் அந்த வைத்தியம் செய்பவன் ஒருவனுமில்லை. பிறகு எல்லோரும் அம்பட்டனைக் கூப்பிடு என்றனும் கூப்பிடுவாரைக் காணோம். இந்த சமயத்தில் உதவி செய்தவள் வீட்டுக்காரி. அவள் தன் மயிரை அறுத்துக் காயத்தில் அடைத்தாள். அவனுடைய கன்ன த்தில் உஷ்ணம் உண்டாகத் தேய்த்தாள். ஒரு புட்டி சாராயம் தருவித்து அடியோடு குடிக்கக் கொடுத்தாள். வைத்தியன் வந்து காயத்தைப பார்த்துத் தலையை யசைத்து இவர்கள் செய்த சிகி ச்சை தப்பென்று குற்றஞ் சொல்லிவிட்டு தாமோதரனைப் படுக் கையில் கிடத்தித் தூங்கச்செய்தான்.

12. அத்தியாயம்

கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉ மையந்தரும்.

காயம் பட்டவனைப் படுக்கையில் கிடத்தினார்கள். கூட்டங் கொஞ்சம் கலைந்ததும் வீட்டுக்காரி சுபேதாரைப் பார்த்து "ஐயா இச்சிறுவன் தங்களிடம் நடக்கவேண்டிய முறைப்படி நடக்க வில்லை போல் தோன்றுகிறது. இவனைக் கொன்றிருந்தால் நல்ல சிக்ஷையாக விருந்திருக்கும். அற்பமானவர்களைப் பெரியவர்கள் கோஷ்டியில் சேர்த்துக்கொள்ளலாமா? அவர்களுக்குக் கொஞ்சமே னும் மரியாதை தெரிகிறதில்லை. இவன் ஒரு உத்தியோகஸ்தனை ன்றெண்ணியிருந்தேன். அவர்தார் இவன் ஒரு புதியவன் என்று சொன்னபிறகுதான் விஷயம் தெரியவந்தது.

சுபேதார்:—வீட்டுக்கார அம்மா! நீங்கள் எல்லாவற்றையும் தவறுக அறிந்திருக்கிறீர்கள். இச்சிறுவன் மிக்க நன்னடக்கையுள் ளவன். இவனைக் கொடுமையாக நடத்திய நாதமுனியைவிட எவ் வளவோ மேலானவன். இச்சிறுவன் இறந்தால் அவனை அடித்த வனுக்கு மிக்க தண்பமுண்டாகுமென்று எண்ணிக்கொள்ளுங்கள். நாமுதனியைப்போன்ற துஷ்டனிருப்பது நமது சைனியத்திற்கே அவமானமாயிருக்கிறது. அவனை ஒழித்துவிட்டால்எல்லோருக்கும் சந்தோஷமாகவிருக்கும். அவன் செய்த குற்றத்திற் குத் தண்டிக்கப் படாது போகமாட்டான்.

வீட்டுக்காரி:—ஆம் ஐயா, அதுதான் சரி. இப்படியார் நியாயத்தை யெடுத்துப்பேசுவார். நியாயப்படி அவனுக்கு சிக்ஷை விதிப்பீர்கள் என்று நம்புகிறேன். பணக்காரனையினும் ஏழையாயினும் எல்லோருக்கும் நியாயம் ஒன்றுதானே. பெரிய மனிதர்களாயிருந்தால் எளியவர்களை அடித்துக்கொன்றுவிடலாமா.

சுபேதார்:—"உங்களுக்கு இப்புதியவனுடைய விருத்தாந்தமே தெரியாது. இப்படையின் உத்தியோகஸ்தரை விட அவன் மிக்க பெரியமனிதன்.

வீட்டுக்காரி:—ஓ ஓ அப்படியா! எனது முதல் புருஷர் மிக்க அறிவுள்ளவராக இருந்திருக்கவேண்டும். அவர் புறத்தைக்கொண்டு அகத்தை அறிந்துவிட முடியாது என்று சொல்வதுண்டு. அது உண்மைதான். இப்புதியவரை மேலெல்லாம் ரத்தம் பெருகும்வரையில் நான் பார்த்ததில்லை. யாருக்குத்தான் தெரியும். இவர் காதலில் எக்கமடைந்திருக்கும் ஒரு பெரியமனிதன் வீட்டுப்பிள்ளையாக விருக்கலாம். ஐயோபாவம்! இவர் செத்துப்போனால் இவர் பெற்றோர்களுக்கு எவ்வளவு வருத்தமாயிராது? இவரை அடித்தானே .அவனுக்குப்பேய்தான் பிடித்திருக்கவேண்டும். உங்களுடைய சைனியத்தில் அனைருப்பது நீங்கள் சொல்லியபடி அவமானந்தான். எனக்குத்தெரிந்தவரையில் சைனியங்களில் இப்படிப்பட்ட துன்மார்க்கன் கிடையாது. எல்லாரும் பெரியமனிதர்கள். அவர்கள் யாருடைய ரத்தமாவது சிந்தப்பார்ப்பார்களா? என் முதல் புருஷன் சொல்லியபடி அமைதியான காலங்களில் ரத்தம் சிந்தக்கூடாது. யுத்தகாலங்களில் ரத்தம் ஓடத்தான் செய்யவேண்டும். அதற்கு அவர்களை நோவதில் பயன் என்ன? நமது வீரோதிகளை எவ்வளவுக்கெவ்வளவு கொல்லுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு நமக்கு நல்லது. ஒருவன் பாக்கியின்றி எல்லா வீரோதிகளையும் கொன்று விடவேண்டும்.

சுபேதார்:—(புன்சிரிப்புக்கொண்டு) உங்களுடைய எண்ணம் எல்லாரும் சாகவேண்டு மென்பது. அது மிக்ககொடூரமானது.

வீட்டுக்காரி:—இல்லவேயில்லை. எனக்குக்கொடூர எண்ணமே இடையாது. நமது சத்துருக்களுக்குத் தீமை எண்ணினால் அதனால் என்ன கெடுதி? நமது சத்துருக்களெல்லாம் இறந்துபோய்விட்டால் சண்டை நின்றுபோய்விடும். சண்டை நின்றால் நாம் கொடுக்கிறவரி குறைந்துபோகும். இப்பொழுது கொடுக்கிற வரியை நினைத்தால் பயமாயிருக்கிறது. இவ்வளவு பணம் கொடுத்து ராஜாங்கத்திற்கு உதவிசெய்தும் நம்மிடம் ராஜாங்கத்திற்கு நன்றியில்லை. இதுதான் உலக வழக்கம் போலும்.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் வைத்தியர் அந்த அறைக்குள் நுழைந்தார். சுபேதார் அவரைப்பார்த்து "இப்பொழுது

வியாதியஸ்தர் எப்படி இருக்கிறார்" என்றார். வைத்தியர் "என்னை யழையாவிட்டால் எந்த ஸ்திதியிலிருப்பாரோ அதைவிட இப் பொழுது நன்றாகத்தானிருக்கிறார். ஆனால் என்னை மூன்றுமே கூப்பிட்டிருந்தால் எந்த ஸ்திதியிலிருப்பாரோ அதைவிட அதிக கரியமாகவே இருக்கிறார்"

சுபேதார்:—மண்டை யுடையவில்லையே.

வைத்தியன்:—மண்டை உடைந்ததினாலேயே பெரிய ஆபத்து என்று எண்ணிவிடக்கூடாது. சிறிய காயமும் மண்டை உடைப்பைவிட சில சமயங்களில் ஆபத்தைக்கொண்டுவந்துவிடும். அறியாத ஜனங்கள் மண்டை உடையாவிட்டால் பயமில்லை என்று எண்ணிவிடுகிறார்கள். எனக்கோ மண்டை எவ்வளவு உடைந்தாலும் குற்றமில்லை. சில சிதறல்கள் மாத்திரம் காணக்கூடாது.

சுபேதார்:—அவ்விதமான அடையாளம் இவருக்கு ஒன்றுமில்லையென்றறிகிறேன்.

வைத்தியன்:—அடையாளம் எப்பொழுதும் சரியாகத்தோன்றுகிறதில்லை. காலையில் பயத்தை யுண்டுபண்ணும்படியான அடையாளங்கள் பகலில் சந்தோஷத்தை யுண்டுபண்ணக் கூடிய வாய் மாறுகின்றன. திரும்பவும் அவையே இரவில் விசனக்குறிகளாகத்தோன்றும். ஒரு சமயம் நான் காலெலும்பு சிதறிய ஒருவனுக்கு வைத்தியம் செய்யவேண்டி வந்தது. அவனுக்கு மேற்சருமத்திலும் புண்ணுயிருந்தது. அதனால் உதிரவெள்ளம் பெருகிற்று. உட்சருமமும் பிளவுபட்டதால் காயத்தவாரத்தின் வழியாக எலும்பு நன்றாகத்தெரிந்தது. நாடிபருத்து வேகமாயடித்தபடியால் சுரக்குறியும் தோன்றிற்று. ஆதலால் அப்பாகம் இருந்தும் இல்லாமை போலாகுமென்று எண்ணிப்பயந்தேன். அதைத்தடுப்பதற்காக இடதுகை ரக்தருழாயைத் தொளைத்து இருபது அவுன்ஸ் ரக்தத்தைச் செல்லவிட்டேன். அந்த ரக்தம் ஈரல் வியாதியிலிருப்பதுபோல் பசையைப்போன்றுவது கட்டி கட்டியாவது இருக்குமென்று நம்பியிருந்தேன். ஆனால் அது சுகம் குறைவின்றியிருப்போருடைய குருதியைப்போல் சிவந்தும் திரவமாகவுமிருந்தது. பிறகு அந்த விடத்தில் ஒத்தடம் கொடுத்தேன். மூன்று நான்கு தடவை கட்டுக்கட்டியபின் காயத்தினின்றும் தீழ்நீளம்பியது. ஆனால் நான் சொல்வது தங்களுக்குத் தெரியவில்லையோ?

சுபேதார்:—ஒரு வார்த்தையாவது தெரிந்துகொள்ளக்கூடவில்லை.

வைத்தியன்:—அப்படியானால் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். கேளுங்கள். ஆறுவாரத்திற்குள் அந்த வியாதியஸ்தன் எழுந்து நடக்கும்படியாகச் செய்துவிட்டேன்.

சுபேதார்:—இச்சிறுவருடைய காயம் அவருக்கு மரணமுண்டாக்கக்கூடிய அளவு ஆபத்துக்காயமா என்பதை மாத்திரம் எனக்குச் சொல்லும்.

வைத்தியன்:—மூதல்கட்டுகட்டுவதற் குள்ளாகவேஒருகாயம் மரணத்திற்கு இடமாகும் அல்லவென்று சொல்வது அறியாமையே. நாம் எல்லோரும் சாகவேண்டியவர்கள் தான். பெரிய வைத்தியர்களுக்குந் தெரியாத சில குறிகள் சில நிச்சைகளினால் உண்டாகிவிடுகின்றன.

சுபேதார்:— அவர் ஆபத்திலிருக்கிறாரென்று எண்ணுகிறீரா?

வைத்தியர்—ஆபத்திலா? தேகசௌக்கியத்தில் சுறைவின்றி இருப்பவனுக்கும் ஆபத்தில்லை யென்று சொல்லமுடியுமா? அப்படியிருக்க இப்பேர்ப்பட்ட காயமடைந்தவனுக்கு ஆபத்தில்லை யென்றெப்படிச் சொல்வது? நான் சொல்வதென்னவென்றால்: நீங்கள் என்னை இந்த சமயத்தில் வரவழைத்தது மிகவும் நல்லது, கொஞ்ச மூன்னாலேயே கூப்பிட்டிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும். நாளைக்காலமே அவரை நான் பார்க்கிறேன். அதுவரையில் அவரை நித்திராபங்கப்படுத்தாமல் சுகமாகப் படுத்த படுக்கையிலேயே யிருக்கட்டும். தாரகத்தை நிறையக்கொடுங்கள்.

வீட்டுக்காரி:—வைத்தியரே ரவாக்கஞ்சி கொஞ்சம் கொடுக்கக்கூடாதா?

வைத்தியர்:—ரவைக்கஞ்சியா? கொடுங்கள் வேண்டுமானால், ஜாஸ்தியாகக் கொடுக்கவேண்டாம்.

வீட்டுக்காரி:—கொஞ்சம் ரசம் சாதம் போட்டாக்கால்.

வைத்தியர்:—ஆம் உடம்புக்கு நல்லது.

வீட்டுக்காரி:—அத்துடன் கொஞ்சம் தயிர்விட்டுப் போடலாமே.

வைத்தியர்:—காயத்திற்குத் தயிர் நல்லது தான். அது சிக்கிரம் புண்ணையாற்றும்.

நல்லவேளையாய் அவ்வீட்டுக்காரி வேறு ஆகாரங்களைக்கொடுக்கலாமாவென்று கேட்காமலிருந்தாள். அவ்வீட்டில் பணம்பறிக்கும் பொருட்டு எதுகேட்டிருந்தபோதிலும் அதை வியாதியஸ்தனுக்களிக்கும்படி வைத்தியர் அனுமதி கொடுத்திருப்பார்.

வைத்தியர் திரும்பிப்போனதும் வீட்டுக்காரி அவனுடைய பிரதாபத்தைச் சுபேதாரிடம் விவரிக்கலாயினள். சுபேதாருக்கு மாத்திரம் அவனைக்கண்டதுமுதல் அவன் அவ்வளவு சாமர்த்தியவா

னல்லனென்று அபிப்பிராயப்பட்டார். வைத்தியர் சொன்னதைக் கொண்டு தாமோதரன் மிக்க ஆபத்திலிருக்கிறனென்று தெரிந்த தும் நாதமுனியைக் கடுங்காவலில் வைக்கும்படியாக உத்திரவு கொடுத்தார். மறுநாட்காலை அவனை ஒரு நியாயாதிபதியிடம் கூட்டிப்போய்த் தருந்த சிட்சைசெய்து வைப்பதாய்த் தீர்மானித்தார். சாயந்திரமானதும் தாமோதரனுக்கு உபத்திரவம் ஒன்று மிரா விட்டால் தான் அவனை வந்து பார்த்துப்போவதாய்ச் சமாசாரம் சொல்லியனுப்பினர். தாமோதரன் மிக்க வந்தனத்துடன் சுபேதார் அனுப்பிய சமாசாரத்தை யேற்றுக்கொண்டான். அப்படியே சுபேதார் தாமோதரன் அறைக்குள் போனதும் தான் எதிர்பார்த்ததைவிட அதிக! சொஸ்தமடைந் திருப்பதைக்கண்டார். வைத்தியன் கண்டிப்பாக உத்திரவு செய்யாதிருந்தால் தான் மூன்றுலேயே எழுந்து நடந்திருக்கக்கூடும் என்று தாமோதரன் சொன்னன். எபபொழுதும்போல் தான் சௌக்கியமாயிருப்பதாயும் அடிபட்டவிடத்தில் கொஞ்சம் எரிச்சல் தவிர வேறு ஒருவித உபத்திரவமுமதனக்கில்லை யென்றும் தாமோதரன் சொன்னன்.

சுபேதார்:—நீர் எண்ணுகிற பிரகாரமே உண்மையில் உமக்கு சௌக்கியமாயிருந்தால் எனக்கு மிக்க சந்தோஷந்தான். உமக்கு கோரிட்ட தீங்குக்கு நீரே பிரதிசெய்து விடக்கூடும். ஆனல் நீர் நினைக்கிற பிரகாரம் உமக்கு முழுதும் இன்னும் சொஸ்தமாகவில்லை. இந்த சமயத்தில் நீர் அவனோடு எதிர்த்தால் உமக்கு அபாயமுண்டாகும்.

தாமோதரன்:—இருந்தபோதிலும் என்னல் கூடியதைப்பார்க்கிறேன். என்னிடம் வாள் ஒன்று மில்லாமையால் தங்களுடையதை எனக்குக்கொடுக்கவேண்டும்.

சுபேதார்:—(அவனை முத்தமிட்டு) என்னுடைய வாளை எப்பொழுது வேண்டுமானலும் எடுத்துக்கொள்ளலாம். நீர் நல்லதையாசலி. உம்முடைய குணத்தை நான் மெச்சுகிறேன். ஆனல் வேண்டியபலம் இப்பொழுது உமக்கில்லை. நீர்பட்ட அடியாலும் பெருகியரத்தத்தாலும் மிகவும் பலவீனப்பட்டிருக்கிறீர். இப்பொழுது படுத்துக்கொண்டிருக்கிறபடியால் வேண்டியபலமிருப்பதாய் உமக்குத்தோன்றிய போதிலும் சண்டையில் பலவீனம் புலப்படும். இன்று ராத்திரி நீர் அவனுடன் சண்டைபோட நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். இன்னும் கொஞ்சநாள்கழித்து சண்டைபோடலாம். அவன் உமக்கு வழிசொன்னலாயிற்று. இல்லையானில்அவனை வேலையிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

தாமோதரன்:—இன்று ராத்திரியே இந்தக்காரியத்தை முடித்துவிடுவது உத்தமம். இது முடியாவிட்டால் எனக்கு ஜாதிதுரோகம் கொளளாது.

சுபேதார்:—அதைப்பற்றி ஒன்றும் யோசிக்காதேயும். கொஞ்சநாளில் என்ன கெட்டுப்போகிறது? இன்றுபோடும் சண்டையை இன்னும் ஒருவாரம் பொறுத்து நடத்துமே.

தாமோதரன்:—எனக்கு வர வர உடம்பு சுகத்தாழ்வு அதிகமாகி நான் செத்துப்போய்விட்டால் என்னசெய்கிறது.

சுபேதார்:—அப்படியும் உன் கண்ணியத்திற்குக் குறைச்சல் ஒன்றும் வராது. நானே உன் குணத்தை அவனவருக்கும் வெளிப்படுத்தி உடம்பு சொஸ்தமான பிறகு அவனுடன் சண்டைசெய்ய விருந்தாயென்று தெரிவிக்கிறேன்.

தாமோதரன்:— இருந்தும் இத்தத் தாமதத்தை யோசித்தால் எனக்கு வருத்தமாகவேயிருக்கிறது. தாங்கள் படைவீரராதலால் தங்களுக்கு அதிகம் சொல்ல யோசிக்கிறேன். நான் பாலியத்தில் பல துஷ்டத்தனம் செய்திருந்தபோதிலும் நன்றாக யோசிக்கும்போது அந்தரங்க பூர்வமாய் நான் தெய்வபக்தியுடையவனென்றே சொல்லவேண்டும்.

சுபேதார்:—நானு மப்படித்தான். நீர் சாப்பிடும்போது மத விஷயத்தைப்பற்றிப் பேசினீர். அப்பொழுது நான் மிக்க சந்தோஷமடைந்தேன்.

தாமோதரன்:—உண்மையில் ஆரியனுயிருப்பவன் ஒருவனிடம் விரோதம் வைத்து மனத்திலேயே புழுங்கிக்கொண்டிருப்பது முழுதும் தவறு. அதிலும் நான் வியாதியாக விருக்கும்பொழுது இதை எப்படிப்பொறுப்பேன். பகைமையை விலக்கவேண்டுமென்று சாஸ்திரங்களில் கூறியிருந்தும் நான் எப்படி வைரங் கொள்ளுவேன்.

சுபேதார்:—சாஸ்திரஞ் சொல்வது எனக்குந் தெரியும். ஆனால் கண்ணிய புருஷன் அதன்படி நடக்கமுடியாது. சைனியத்திலிருப்பதாயிருந்தால் நீர் கண்ணிய புருஷரா யிருக்கவேண்டும். நமது குருவை ஒருதடவை இந்த விஷயத்தைப்பற்றி நான் கேட்டேன். அதில் பல சங்கடங்களிருப்பதாக அவரும் ஒப்புக்கொண்டார். படைவீரர்கள் மாத்திரம் பகைமையும் வைரமும் மனத்தில்கொள்ளலாம் என்று அவர் சொன்னார். வேறு ஏதாவது சொல்லுவாரா? யார்தான் கண்ணியத்தை விட்டுவிட்டு இருக்கலாம்? நாம் கூடியமட்டும் வேதவாக்கியப்படி நடக்கவேண்டியதுதான். ஆனால் கண்ணியத்தையும் விட்டுவிடக் கூடாது. பிறர் நம்மை அவமானப்படுத்தினால் அதைப் பொறுத்துக் கொள்ளவுங்கூடாது. ஆசாரியர் எவ்வளவு சொன்னபோதிலும் புஸ்தகங்களில் எவ்வளவு எழுதியிருந்தபோதிலும் என்கண்ணியத்தை மாத்திரம் நான்விட்டுக் கொடுக்க மாட்டேன். என்னுடைய மதத்தின்மேல் எனக்குப்பற்று அதிகம்

தான். அதைவிட எனது கண்ணியத்தின்மேல் பற்று அதிகம். சாஸ்திரத்திலே ஒருவேளை தவறி எழுதியிருக்கவேண்டும், அல்லது அதை மொழிபெயர்க்கும் போதாவது வேறு விதமாகச் செய்திருக்கவேண்டும். அல்லது அதை அறிந்துகொள்வதிலாவது தவறியிருக்க வேண்டும். எங்கேயோ பிசகு நேர்ந்து பகைமையும் வைரமும் வைக்காதே என்று எழுதிவிட்டார்கள். எது எப்படியிருந்த போதிலும் மனுஷன் அவமானப் படுத்தப்பட்டால் கண்ணியத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டாமா? ஆகையால் இன்று ராத்திரி மாத்திரம் கொஞ்சம் பொறுத்துக்கொண்டிரும். சிக்கிரம் உம்மிஷ்டப்படி நாதமுனியுடன் மல்லுக்கு நிற்கலாம் என்றுசொல்லி தாமோதரனிடம் கைகுலுக்கி அவ்வறையை விட்டுச்சென்றார்.

சுபேதார் சொன்னதெல்லாம் தாமோதரனுக்குக் கொஞ்ச மேனும் திருப்தியுண்டாக்கவில்லை. ஆகையால் தாமோதரன் தனக்குள்ளேயே வேறு தீர்மானஞ் செய்துகொண்டான்.

13. அத்தியாயம்.

கலங்காது கண்ட வினைக்கட் டெளங்காது
தக்கங் கடிந்து செயல்.

தாமோதரன் அன்று வயிறு நிறையச் சாப்பிட்டான். தனக்குத்தேக அசௌகரியமாவது மனத் தடுமாற்றமாவது கொஞ்ச மேனு மில்லாதிருக்கக்கண்டு தன் விரோதியை நோக்கிப் புறப்பட்டான். தனக்கு அந்த சைனியத்தில் முதல் சினேகிதனுகிய அலில் தாசைக் கண்டுகொள்ள வேண்டுமென்று அவனுக்குச் சொல்லியனுப்பினான். அப்போது அவன் குடித்து வெறித்துக் குறட்டை விட்டுத்தூங்கிக்கொண்டிருந்ததால் அவனை எழுப்புவது அசாத்தியமாயிற்று. தாமோதரன் அவனைப் பார்க்கத்தான் வேண்டுமென்று பிடிவாதஞ் செய்ததால் கஷ்டப்படுத்தி அவனையெழுப்பினார்கள். அவன்எழுந்து தாமோதரன் தன் எண்ணத்தை அவனிடஞ்சொல்லாமல் தான் புதிதாய்ப் படையில் புகுந்ததால் சிப்பாய்க்குரிய ஆயுதமாகியவாளின்றியிருக்க வெட்கமாயிருக்கிறதென்றும் நல்ல பட்டாக்கத்தி யொன்று கொடுத்தால் அதற்கு வேண்டிய விலை கொடுப்பதாகவும் சொன்னான்.

அலில்தாருக்கு நடந்த விஷயம் தெரியுமாதலாலும் தாமோதரன் அபாய நிலையிலிருப்பதாக வெளியே பேசிக் கொண்டிருந்ததைக் கேள்விப்பட்டதாலும் அப்படிப்பட்ட மனிதன் அந்த நிலைமையில் கத்தி கேட்பதை யோசிக்க அவன் குடித்து புதிதி மயங்கினவனுயிருக்க வேண்டுமென்று எண்ணினான். மிக்க தந்திரசாலியாகையால் இந்த வெறியனிடமிருந்து மிக்கலாபம் சம்பா

திக்கலாம் என்று எண்ணினான். அதனால் தாமோதரனைப் பார்த்து "நீர் கேட்கிறபடி நான் தருகிறேன். என்னிடம் மிக்க உயர்தரக் கத்தியொன்றிருக்கிறது. அது கூர்மை மிகுதியுமுள்ளது. அதை விட மேலானது கிடைக்கவே கிடைக்காது. அதை இப்பொழுதே உம்மிடம் கொண்டுவந்து காட்டுகிறேன். அதை நீரே பிடித்து வீசிப்பாரும். அப்பொழுது அது எவ்வளவு கூர்த்தியானதென்று தெற்படும்" என்று சொல்லி அந்தக் கத்தியை யெடுத்துக்கொண்டு வந்து தாமோதரனிடம் கொடுக்க அவன் பிடித்துப்பார்த்து இது வே போதுமென்று சொல்லி அதன் விலை என்னவென்று கேட் டான்.

அவில்தார் அப்பொழுது தன் கத்தியினுடைய பிரதாபத் தைப்பற்றிப் புகழவாரம்பித்தான். அக்கத்தியானது தெலுங்கர்க ளோடு நடந்தயுத்தத்தில் ஒரு பிரபல யுத்த வீரனை வீழ்த்தியதென்றும், தான் அதனை உடையவனிடமிருந்து பறித்ததாயும், முதலில் அதற்குப் பிடி பொன்னினால் செய்யப்பட்டிருந்ததாகவும், பிறகு அப்பிடியை மாத்திரம் தான் உயர்ந்த விலைக்கு விற்றதாயும் மற்றுஞ் சொன்னான். தாமோதரன் அவனைத் தடுத்து விலையை உடனே சொல்லும்படி கேட்டான். தாமோதரனை மூழுப் பித்த னென்று அவில்தார் எண்ணிச் சொற்பவிலை கேட்கக்கூடாதென்று 315-ரூபாய்க்குக் குறைந்தால் தன்னுடைய சொந்த சகோதரனுக் காயினும் அக் கத்தியைக் கொடுப்பதில்லை என்றான். தாமோ தரன் திடுக்கிட்டு "முன்னூற்றுப் பதினைந்து ரூபாயா? நீ என்னைப் பைத்தியக்காரன் என்றாவது, என் ஆயுளில் பட்டயத்தைப் பார்க் காதவனென்றாவது நம்பிவிட்டாய்போலும்! உண்மையாகத்தான் பேசினீரோ? இவ்வித அக்கிரமமாக விலை சொல்வீரென்று நான் நினைக்கவே யில்லை. இந்தாரும், பட்டயத்தை யெடுத்துக்கொள்ளு கிறேன். பொழுது விடிந்ததும் அதை உமது எஜமானருக்குக் காட்டி இதற்கு நீர் என்ன விலை கேட்டீர் என்பதையும அவரிடம் சொல்லுகிறேன்" என்றான்.

அவில்தார் மிக்க தந்திரசாலியென்று முன்னமேயே சொல்லி யிருக்கிறோமே. இப்பொழுது தாமோதரன் வெறியனில்லை, அவ னை ஏமாற்ற முடியாதென்று தெரிந்து அவனைப்போல் தானும் திடுக்கிட்டவனைப்போல் பாசாங்கு செய்து "என் ஐயா, உம்மை அதிக விலை கேட்டேனு என்ன? எனக்கிருக்கிறது ஒரேகத்தி. அதையுமக்குக் கொடுத்துவிட்டால் நான் பட்டயமில்லாமற் போக வேண்டும். அதில்லாது வெளியிற்சென்றால் என் எஜமானர் கோபி ப்பார். இதையெல்லாம் யோஜித்துப்பார்த்தால் நான் கேட்ட பதி னைந்து ரூபாய் அதிகமாகிவிட்டதா' என்றான். தாமோதரன் "பதி னைந்து ரூபாயா? இப்பொழுதுதானே முன்னூற்றுப்பதினைந்து

கேட்டீர்" என்றான். அவில்தார் "எப்படி! நீர் சரியாய்க் கேட்டிருக்கமாட்டீர். அல்லது நானுவது தவறுகச் சொல்லியிருக்க வேண்டும். நான் பாகித்தூக்கத்தில் இருக்கிறேனன்றே! முன்னூற்றுப்பதினேந்தா? அதிலுல் தான் உமக்குக் கோபம் வந்தது. உண்மையில் அதற்கு வீலை பதினேந்து ரூபாய்தான். நான் சொன்னதை யோசித்துப்பார்த்தால் அதன் கிரயம் அதிகமல்ல, இதேமாதிரி கத்தியைக் குறைந்த வீலைக்கும் வெளியில் வாங்கலாம். ஆனல்" என்று மேலே சொல்வதற்குள் தாமோதரன் அவனைத் தடுத்து "உம்மோடி நான் அதிகமாகப் பேசமுடியாது. நீர் கேட்ட வீலையைவிட ஒரு ரூபாய் அதிகமாகவே கொடுக்கிறேன்" என்று சொல்லி அவனிடம் 16-ரூபாயைக் கொடுத்துத் திருப்பிப்போய் படுத்துத் தூங்கும்படியாக அனுப்பிவிட்டான். அவில்தார் தான் செய்தவியாபாரத்தில் மிக்க சந்தோஷமடைந்து தனது மோசம் வெளிப்படாது போனதற்கு மகிழ்ச்சியடைந்தான்.

அவில்தார் போனதும் தாமோதரன் எழுந்து ரக்தத்தில் நனைந்திருந்த அங்கியை தேகமுழுது மறையப் போர்த்துப் புதிதாக வாங்கிய கத்தியையும் கையில் எந்தி வெளியில்வரச் சித்தமானன். அச்சமயம் தான் செய்யப்போகும் காரியம் மனத்திற்பட்டு சற்று நேரத்திற்குள் தான் ஒரு உயிரை வாங்கவாவது அல்லது தன் உயிரை யிழக்கவாவது போவதை நினைத்தான். தனக்குள்ளேயே அடியில் வருமாறு ஆலோசிக்கலாயினன். "ஆம் ஆம், எதற்காக நம்முயிரை இழக்கத் துணிந்தோம்? கண்ணியத்தைக் காப்பாற்றும் பொருட்டன்றே? கண்ணியத்திற்கு ஹானியுண்டாக்க எண்ணியவன் யார்? ஒரு காரணமு மில்லாதிருக்கையில் அந்த அயோக்கியன் என்னைக காயப்படுத்தி அவமானமுஞ் செய்தான். ஆனல் பழி வாங்கும்படி சாஸ்த்ரம் சொல்லவில்லையோ? ஆமாம், சாஸ்த்ரம் சொல்லியபோதிலும் உலகத்தார் வழக்கம் வேறு. நான் உலக வழகுப்படி நடக்கிறதா வேதவழக்குப்படி நடக்கிறதா? என்னை யொருவன் பயங்காளியென்றும் அயோக்கியனென்றுங் கூறுகையில் வேதவாக்கியத்திற்குப் பயந்து சும்மாயிருப்பதா? யோசிப்பதில் என்ன பிரயோஜனம், நிச்சயம் செய்துவிட்டேன். அவனுடன் சண்டைசெய்வதுதான் சரி" என்று துணிந்தான்.

கடிகாரத்தில் மணி 12-அடித்தது, நடு நிசிவேளை, எல்லோரும் படுக்கையிற் கிடந்து குறட்டை விட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனல நாதமுனியைக் காத்துக்கொண்டிருந்த காவலாள் மாத்திரம் கண்கொட்டாது விழித்துக்கொண்டிருந்தான். தாமோதரன் மெதுவாய்த் தன்னறைக்கதவைத் திறந்துகொண்டு தன் வீரோதியைக் காவல்வைத்திருந்தவிடம் நோக்கிப்போனன். தாமோதரன் உருவம் அந்த சமயத்தில் மிக்க பயங்கரமாயிருந்தது. அவன்

அங்கி முழுவதும் ரத்தக்கறை படிந்திருந்தது. அந்த ரத்தம் அவனுடைய தேகத்திலிருந்து வடிந்ததினாலும் வைத்தியன் இருபது அவுன்ஸ் ரத்தம் அவன் உடம்பிலிருந்து கீழே பெருக்கிவிட்டதினாலும் உண்டானது. அதோடு தாமோதரன் மூர்ச்சை வெறுத்து மிருந்தது. அவன் தலையின் காயத்தைக் கட்டியிருந்த கட்டு ஒரு தலைப்பாகைபோலிருந்தது. அவன் வலதுகையில் வாளும் இடதுகையில் மெழுகுவர்த்தி விளக்கும் வைத்திருந்தான். இப்படி நடு ராத்திரியில் வெளிப்பட்டது பூதம் வெளிவந்ததுபோலிருந்தது. காவற்காரன் இவனைப் பார்த்து மயிர்க்கூச்செறிந்தான். அதனால் அவன் தலைப்பாகை கீழே விழுந்துவிட்டது. அவனுடைய முழங்தாள்கள் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டன. காக்கைவலி கண்டன் உடலைப்போல் அவன் உடல் பதறியது. துப்பாக்கியைச் சுட்டுவிட்டு அவன் மரம்போல் பூமியில் சாய்ந்தான். நல்ல வேளையாகத் துப்பாக்கிக்குண்டு தாமோதரன்மேல் பாயவில்லை. அவன் விழுந்ததைக் கண்ட தாமோதரன் அவனது பிதியை யதிர்த்து புன்சிரிப்புக்கொண்டு தனக்கு நேரிருந்த அபாயத்தைக் கொஞ்சமேனும் யோசிக்காமல் அக்காவலாளியைத் தாண்டி நாதமுனியிருபபதாய்க் கேள்விப்பட்ட அறைக்குள்போனான். அந்த அறையில் ஒருமேஜைமேல் ஓர் நீர்க்கலம் வைத்திருப்பதையும் சாராயம் கொஞ்சம் கீழே சிந்தியிருப்பதையும் பார்த்துக் கொஞ்சநேரத்திற்கு முன் அங்கு மனிதர் இருந்திருக்கவேணுமென்று அறிந்து கொண்டான். ஆனால் தாமோதரன் வந்த சமயத்தில் அந்த அறை காலியாகவே யிருந்தது. ஒருவேளை அந்த அறைக்குள் வேறு அறை இருக்கிறதோவென்று சுற்றிச் சுற்றிப் பார்த்தான். தான் வந்த கதவு தவிர வேறுகதவு இருப்பதாக அவனுக்குத் தென்படவில்லை. பிறகு நாதமுனியைப் பலகடவையும் பெயர் சொல்லிக் கூப்பிட்டான். பதிலொன்றுங்கிடைக்கவில்லை. இதையெல்லாமுணர்ந்த காவற்காரன், காயம்பட்டு இறந்துபோன தாமோதரனுடைய பிரேத ரூபத்தான் தன்னைக் கொலை செய்தவனைத் தேடிவந்திருக்க வேண்டுமென்று நிச்சயித்துப் பீதியால் படாத பாடெல்லாம் பட்டான். அந்த சமயம் வேடதாரிகள் அவனை வந்து பார்த்தால் அவனிடமிருந்து ஜனங்களைச் சந்தோஷிப்பிக்கும்படியான செயல்கள் பல கற்றுக்கொள்ளலாம்.

பகலி பறந்து விட்டதென்றும் அதனைக் கண்டுபிடிப்பது அசாத்தியமென்றும் தாமோதரன் தெரிந்து கொண்டான். துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டதால் அனைவரும் விழித்துக்கொண்டிருப்பார்களென்றுணர்ந்து இனி தாமதித்தால் தனக்குச் சங்கடமுண்டாகுமென்று விளக்கை யணைத்துவிட்டு மெதுவாய்த் தன் அறைக்குட்சென்று படுக்கையிற் படுத்தான். சில நிமிஷத்திற்குள் காவற்காரனிருந்த விடத்தில் சனங்களெல்லாம் வந்துகூடி. ஒவ்வொருவரும் சங்கதி விசாரிக்க ஆரம்பித்தார்கள்.

காவற்காரன் மாத்திரம் மூதலில் கூறிய நிலையிலேயே அங்கு படுத்துக்கிடந்தான். பலபேர் அவனைத் தூக்கினார்கள், அவன் இறந்துவிட்டான் என்று சிலர் எண்ணினார்கள். உண்மையில் அப்படியில்லை. அவன் தன்னைத் தூக்கியவர்களோடு சண்டை போட்டதுமன்றிப் பெருங்கூச்சலிட்டுக் கத்தினான். தன்மனத்தில் பிரேதரூபமே குடியிருந்ததால் தான் கண்டவர்களும் தன்னைத் தூக்கியவர்களும் பேய்க்கணங்களே என்று நம்பிவிட்டான். அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயன்றோ?

கடைசியில் அனேகர் அவனைப் பிடித்து நிற்கவைத்தார்கள். வினக்குக்கொண்டு வந்தவுடனே தனது சினேகிதர் இரண்டு மூன்றுபேரை அவன் பார்த்துவிட்டு கொஞ்சம் தன்னினைவுக்கு வந்தான். அவர்கள் சங்கதியென்னவென்று கேட்டதும் "நான் இறந்துபோனவன்தான். அவ்வளவுதான். நான் பிழைக்கமாட்டேன். நான் அவனைப்பார்த்து விட்டேன்" என்றான். "ஒரு பிப்பாய் நீ யாரைப்பார்த்துவிட்டாயப்பா?" என, காவற்காரன் "நேற்றுக் கொல்லப்பட்டானே அந்தச் சிறுவனைப்பார்த்தேன். அவன் உடலெல்லாம் ரத்தம் சொரிய வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் நெருப்புக்கக்க என்னைத்தாண்டி நாதமுனியிருந்த அறைக்குப்போய் அவனைக் குடலைப் பிடித்துத் தூக்கிக்கொண்டு பறக்தோடி விட்டான்" என்றான். இந்த விஷயத்தை ஆச்சரியத்துடன் எல்லோரும் கேட்டார்கள். பெண்பிள்ளைகளெல்லாம் இதை உண்மையென்றே நம்பித் தாங்கள் கொலை செய்யாதிருக்கும்படி கடவுளைப்பிரார்த்தித்தார்கள். சில புருஷருமிதை நம்பிவிட்டார்கள். மற்ற புருஷர்கள் இதைக்கேட்டு நகைத்து அவனைப்பரிகசித்தார்கள். அங்கிருந்த அவில்தார் ஒருவன் காவற்காரனைப்பார்த்து "சிறுவா, நீ தூங்கிப் போய் இத்தனாதி ஸ்வப்பனங்கண்டதற்காக உனக்குத் தக்கவழி செய்கிறேன்" என்றான். காவற்காரன் "தாங்கள் என்னை வேண்டுமானால் சிக்ஷித்துக்கொள்ளுங்கள். நான் இப்பொழுது விழித்துக் கொண்டிருப்பதுபோல் முன்னேயும் நன்றாக விழித்துகொண்டிருந்தேன். இறந்தவன் இரண்டு பந்தங்களைப்போன்ற கண்களோடும் நடந்து வந்ததை நான் பிரத்தியக்ஷமாகப்பார்த்தேன். நான் சொல்வது பொய்யாகவிருந்தால் நாதமுனியைத் தூக்கிக்கொண்டு போனதுபோல் என்னையும் அந்தப் பசாசு தூக்கிக்கொண்டு போகட்டும்" என்றான்.

இந்த சமயத்தில் சேனைக்குத் தலைவனும் விட்டுக்கு எஜமானியும் வந்து சேர்ந்தார்கள். சேனைக்கு ஒரு ஆபத்தும் நேரிட்டிராதென்று படைத்தலைவனுக்குத் தெரிந்திருந்தபோதிலும் துப்பாக்கி வெடிச்சத்தங்கேட்டதால் உடனே போய்ப்பார்க்க வேண்டியது தன் கடமையென்று புறப்பட்டுவந்தான். வீட்டுச்

காரியோ சைனியம் புறப்பட்டு வேறிடம் போகிறப்போலிருக்கிறது, நமது சாமான்கள் அவர்களோடு போய்விடப்போகிறதென்று பயந்து ஓடிவந்தாள்.

படைத்தலைவனைக் கண்டதும் அவனிடம் தாமோதரன் ரக்தத்துடனும் தெருப்புடனும் வந்த சங்கதியை முன்னுக்கு அதிகமாகவே விஸ்தரித்துச் சொன்னான். அதைப் புதிதாக வந்தவர்களில் ஒருவராவது நம்பவில்லை. வீட்டுக்காரிக்கோ பேய் பசாசுகளில் நம்பிக்கையிருந்தும் வேறு காரணங்கொண்டு அவள் காவற்காரன் வார்த்தையில் நம்பிக்கை கொள்ளவில்லை.

நாதமுனி பிரேத ரூபத்தால் தூக்கிப்போகப்பட்டானோ அல்லவோ எதுவாயினும் அவன் காவலிலிராதது உண்மை. இதைக் கண்ட சுபேதார் அவில்தாரைப்போலவே எண்ணி காவற்காரனைக் கைதியாக்கிவைக்கும்படி கட்டளை இட்டார்.

14 - அத்தியாயம்.

அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.

தூங்கிப்போனான் என்கிற சந்தேகமேயன்றி நாதமுனி தப்பிப்போனதற்கு ஒருசமயம் காவலாளி உளவாகவிருக்கலாம் என்றும் அவன்மேல் சுபேதாருக்குச் சந்தேகமுண்டாயிற்று. பேய் விஷயத்தைப்பற்றி கொஞ்சமேனும் நம்பிக்கையில்லாததால் நாதமுனியிடமிருந்து லஞ்சம்பெற்று அவனைத்தப்பவிட்டு இந்தக்கதையைக் கற்பனை செய்துவிட்டான் என்று சுபேதாரும் எண்ணிவிட்டார். இதுவரையில் இக்காவலாளி எச்சண்டையிலும் மிக்க தைரியமாக நின்று முன்காயப்பட்டு திட புருஷன் என்று பெயர்பெற்றவனுதலால் அவன் பயப்படுவது நம்பக்கூடியதாயில்லை. ஆதலால் காவற்காரன் செய்ததெல்லாம் கற்பனையேயன்றி உண்மையல்லவென்றுயிற்று.

நாதமுனி தான் செய்தகாரியத்தால் தனக்குக்கிடைத்த கீர்த்தியைக்கண்டு திருப்தியடைந்தான். தன் புகழுக்காக மற்றவர்கள் பொறுமை கொள்வார்களென்று நம்பி அவ்விடத்தை விட்டு எப்படி ஓடிப்போவதென்று யோசித்தான். இவன் குணத்தில் கோணலாகவிருந்தாலும் உருவத்தில் நேரானவன். மிக்கவலிமையும் தேகக்கட்டுமுள்ளவன். இவன்முகம் அகன்றும் சிவந்து மிருந்தாலும் பற்கள் ஒழுங்காக அமைந்திருந்ததாலும் இவனை யுத்தவீரன் என்றே பெண்கள் சொல்வார்கள். நமது வீட்டுக்காரி அழகுள்ள புருஷர்கள்மேல் ஆசையுள்ளவளாகையால் நாதமுனியின் சங்கட நிலைமைக்காக அவன்மேலிரக்கப் பட்டாள். தாமோதரன் அபாய

நிலைமையிலிருப்பதாய் வைத்தியனிடமிருந்து அறிந்துகொண்டதால் அவனிருந்தவிட்டால் நாதமுனியை இலேசில் விடார்கள் என்று நம்பி நாதமுனியைப்போய்ப் பார்த்துவர உத்திரவுபெற்றுக்கொண்டாள். பின்பு அவனிடஞ்சென்று தாமோதரனுடைய அபாயநிலைமை அவனுக்குத் தெரிவித்து இஷ்டமிருந்தால் தப்பித்து விட்டலாமென்று ஜாடையாகச் சொன்னாள். நாதமுனியிதை மிக்க ஆவலுடன் கேட்டுத் தப்பவழி சொல்லிக்கொடுக்கும்படி கெஞ்சினான். அவள் மேற்கூரையில் புகைபோகும் வழியாக மேலே சென்றால் சமையலறை போய்ச் சேரலாமென்றும், தப்பிப் போவதற்குள் ஒருவரும் வந்து கண்டு பிடிக்காமல் தான் பார்த்துக்கொள்ளுவதாயும் சொன்னாள்.

நமது வாசகர்கள் இந்த ஸ்திரீயின் தன்மார்க்கத்தைப் பற்றியாவது முடத்தனத்தைப் பற்றியாவது சந்தேகிக்க வேண்டாம். நாதமுனியிடத்தில் அந்த சமயம் 54 பவுன் இருந்தது. இது அந்த அவனியின் போர்வீரருக்குக் கொடுக்கவேண்டிய சம்பளம். இதை வீட்டுக்காரியிடங் கொடுத்து விட்டு நாதமுனி தப்பியோடி விட்டான். இவ்வளவு காருண்ணியமுள்ள அந்த வீட்டுக்காரி அந்தக் காவலனைக் கைதியாக்கியபோது அவனுக்காக ஏன் பரிந்து தடுத்திருக்கக் கூடாதென்று கேட்கலாம். அவள் தன்னிடமிருந்த தயவையெல்லாம் நாதமுனியிடம் செலவழித்திருந்தாலுமிருக்கலாம். அல்லது அவனுடைய முகம் நாதமுனியின் முகத்தைப்போலிருந்தும் அவளை வசப்படுத்தாதிருக்கலாம் எது எப்படியிருந்தபோதிலும் அவள் கண்களையும் கைகளையும் உயரத் தூக்கிக்கொண்டு ஒரு கொலையாளியைத் தப்பவிட்ட இவளைச் சும்மா விடப்படாதென்று சுபேதாரிடம் போராடியது நிஜம்.

திரும்பவும் ஒவ்வொருவரும் படுக்கப்போன போதிலும் வீட்டுக்காரிமரத்திரம் தனது சுறுசுறுப்புள்ள தன்மையினாலோ அல்லது சொத்து களவாடிவிடப்படும் என்கிற பயத்தினாலோ தூக்கம் பிடியாமல் ராணுவ உத்தியோகஸ்தர்களைக் கூடவுட்கார வைத்துக்கொண்டு பேச ஆரம்பித்தாள்.

அப்பொழுதெல்லாம் தாமோதரன் விழித்துக்கொண்டே நடந்த கலவரங்களைக் கேட்டுக்கொண்டிருந்தான். என்னசங்கதி நடந்ததென்று அறிய ஆவலுள்ளவனுய் வேலைக்காரர்களை இருபது தடவை சத்தமிட்டு எழுப்பினான். வீட்டு எஜமானி உத்தியோகஸ்தருடன் குதூகலமாய்ச் சம்பாஷித்துக் கொண்டிருந்தபடியால் அவனுக்கு ஒன்றுமே காதில் படவில்லை. வேலைக்காரர்கள் தாமோதரன் குரலைக் கேட்டதும் திகில் பிடித்து இருந்த இருந்த விடத்திலேயே வேர்பாய்ந்து விட்டார்கள்.

நல்லவேளையாய்த் தாமோதரன் போட்ட கூச்சல் பேச்சுக் கொஞ்சம் அடங்கிய சமயத்தில் வீட்டுக்காரியின் காதில் விழுந்தது. அவள் வேலைக்காரரைப்பார்த்து "அதோ ஒருவர் கூப்பிடுகிறாரே, காது கேட்கலியிலையா? ஏன்போய்க் கேட்கலில்லை"? என்றாள். "அறையில் இருந்து கூப்பிடுகிறவர்களுக்கு உத்தரவு சொல்வது என்னுடைய வேலையல்ல. அது சின்னியினுடைய வேலை" என்றான்! சின்னி "ராத்திரியில் புருஷரிடஞ்சென்று காரியஞ் செய்வது என்னுடைய வேலையல்ல. முன்னால் அந்தக் காரியம் செய்திருந்த போதிலும் நான் இனி செய்யப்போகிறதில்லை" என்றாள். கூப்பிடுகுரல் அதிகபலமாய்க் கேட்டுக் கொண்டிருக்க வீட்டுக்காரிக்குக் கோபமுண்டாகி வேலையாள் உடனேபோய்க் கேட்டு வாவிட்டால் அவனை அப்பொழுதே வேலையினின்றும் நீக்கிவிடுவதாகப் பயமுறுத்தினாள். வேலைக்காரன் "நீ எதுவேண்டுமானாலும் செய்துகொள். நான் பயப்படவில்லை, மற்றொருத்தி வேலையை நானேன் செய்வேன்" என்றான். சின்னியிடம் நல்ல வார்த்தை சொல்லி அவளையாவது போகச்சொல்லிப் பார்த்தும் பயன்படவில்லை. இருவரும் தன்தன் வேலையல்லவென்று மறுத்து விட்டார்கள்.

இதைப் பார்த்த சுபேதார் விழுந்து விழுந்து சிரித்து இந்தச் சண்டையைத் தான்விலக்கி வைப்பதாகச் சொல்லி வேலைக்காரரைப் பார்த்து அவர்கள் பிடிவாதத்திற்காக அவர்களைப் புகழ்ந்து 'இருவரும் சேர்ந்தாப்போல் போய்க் கேட்டுவாருங்கள்' என்றார். அதற்கு ஒத்துக்கொண்டு இருவரும் மிக்க இஷ்டத்துடனும் இணக்கத்துடனும் சென்றார்கள். கொஞ்சநேரத்தில் திரும்பி வந்து தாமோதரன் செத்துப்போயிருப்பதற்குப் பதிலாகவியாதியொன்றுமேயிராமல் மிக்க வேடிக்கையாகப் பேசினான் என்றும் அவன் சுபேதாரைப் பார்க்க வேண்டிக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டதாகவும் சொன்னார்கள்.

சுபேதார் தாமோதரனிடம்சென்று அவன் பக்கத்தில் படுக்கையில் உட்கார்ந்து கீழ்நடந்த விஷயங்களை யெல்லாஞ் சொல்லிக் காவற்காரனைத் தக்கபடி சிக்ஷிக்க விருப்பதாகவுஞ் சொன்னார். இதைக்கேட்டதாமோதரன் "உண்மையைச்சுபேதாரிடம்சொல்லி, நாதமுனி தப்பிப் போனதற்குக் காவற்காரன் காரணமேயல்ல, அவன் உங்களை ஏமாற்றப்பார்க்கவுமில்லை, பொய் சொல்லவுமில்லை, அவன்மேல் குற்றமேயில்லை, அவனைத் தண்டிக்கப்படாது" என்று கெஞ்சினான். சுபேதார் கொஞ்சநேரம் தயங்கியிருந்து பிறகு "நீர் சொல்வதை யெல்லாம் ஒப்புக்கொள்ளுகிறேன். இருந்தும் அவ்வளவு பயங்காளியாக இருப்பவனைச் சிக்ஷிக்கவேண்டுமென்றே தோன்றுகிறது. ஆனால் அப்படிப்பட்ட உருவத்தைக் கண்

டால் யாருக்குத்தான் மனங்கலங்காது? அவளை சண்டையில் பிக்க சாமர்த்தியன். எல்லாவற்றையும் யோசித்து நான் அவளை விடுதலை செய்தவிடுகிறேன் பயப்படாதேயும். அதோ பாரும், முரசு முழங்குகிறது. சைனியம் புறப்பட்டு வேறிடம் போகப் போகிறது. என்னருமைச் சிறுவரே! ஒரு முத்தங்கொடும், நீர் ஆத்திரப்படாமல் பொறுமையுடனிருந்தால் உமக்குத் தீங்கு செய்தவனுக்குப் பிரதி செய்யலாம் என்று நம்பும்" என்று சொல்லி விட்டுச் சுபேதார் புறப்பட்டுப் போய்விட்டார். தாமோதரனும் கொஞ்சம் தூங்கலாம் என்று கண் மூடினான்.

---

8 - சம்புடம்.

1. அத்தியாயம்.

பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து

தாமோதரன் கண்மூடியும் தூக்கம் வரவில்லை. பொழுது விடியும் வரையில் சோபையைப்பற்றியே எண்ணிக் கொண்டிருந்து விட்டுக் காலையில் எழுந்து கொஞ்சம் காப்பி கொண்டு வரும்படியாக உத்தரவிட்டான். வீட்டுக்காரியும் அவனை வந்து பார்ப்பதாகச் சொல்லியிருந்தாள். இதுதான் முதல் தடவை தாமோதரனை அவள் சுவனித்தது. இவன் பெரிய மனிதன் வீட்டுப்பிள்ளை என்று சுபேதார் சொல்லியிருந்தபடியால் அவனுக்கு வேண்டிய மரியாதை செய்து அவனைத் திருப்தி செய்வதா யெண்ணியிருந்தாள். பெரிய மனிதர்களாயிருந்தால் அவர்களுடைய பணத்திற்காக இவள் செய்யாத காரியமுஞ் செய்வாள்.

சந்திரக்காரி காப்பியைக் கொண்டுவந்து தாமோதரன் முன் வைத்து சூடாற்றிக்கொண்டே பின்வருமாறு பேசலானாள்: "ஐயா, உம்மைப்போன்ற அழகான பெரிய மனிதர் வீட்டுப்பிள்ளை சிப்பாய்களுடன் கூடப்போய் எதற்காக கௌரவத்தைக் குறைத்துக்கொள்ளவேண்டும். சிபபாய்கள் தாங்கள் கௌரவ புருஷர்கள் என்று நினைக்கிறார்கள். ஆனால் என் முதற்புருஷன் சொல்லியபடி. இவர்கள பணமெல்லாம் நம்முடையதுதானே. அவர்கள் சம்பளத்துக்காக நாமெல்லாம் வரி கொடுப்பதுமல்லாமல் அவர்களுக்குச் சாப்பாடும் போடுகிறதென்றால் நமக்குக் கட்டுமோ? நேற்று ராத்திரி உத்தியோகஸ்தர் தவிர இருபதுபேர் சிப்பாய்கள் இங்கு வந்திருந்தார்கள். உத்தியோகஸ்தர்களை விட சிப்பாய்களுக்கு உணவளிப்பது சுலபம். உத்தியோகஸ்தர்களுக்கு எவ்வளவு நன்முகப் பாகம் செய்துபோட்டாலும் ருசிப்பதில்லை.

ஆதலால் அவர்கள் நன்றாயில்லை, ருசியாயில்லை என்று தூற்று கிறார்கள். அவர்கள் கொடுக்கிற பணமோ ஒன்றுமில்லை. ஒரு மிராசுதாரன் குடும்பம் நமது சத்திரத்தில் வந்திறங்கினால் ஒரு இரவுக்கு 30, 40-ரூபாய் வாங்கிவிடுவேன். நேற்று வந்தவன் ஒவ் வொருவனும் ஒரு ஜமீன்தாரைப் போலத்தான் அதிகாரம் செய் தான். ஆனால் கொடுத்ததோ ஆளுக்கு அரை முக்கால் ரூபாய்க்கு மேல் கிடையாது. இச் சிப்பாய்களெல்லாம் நாக்கில் நரம்பின்றி வாயில் வந்தபடி பேசுகிறார்கள். இப்படிப்பட்ட துஷ்டர்கள் எப் படி விருத்தியடைவார்கள்? அதிலொருவன் உம்மை மூர்ட்டுத் தனமாய் அடித்தும்விட்டான். பார்த்தீர்களா, மற்றவர்களெல்லாம் அவனைப் பத்திரப்படுத்துவார்களென்று நினைத்தேன். இனம் இனத்தோடுதானே சேரும்? நீர் இறந்து போகாது பிழைத்த தைப்பற்றி நான் மிக்க சந்தோஷபடுகிறேன். அப்படி நீர் இறந்து போயிருந்தபோதிலும் அவர்கள் அந்தக் கொலையாளியை சும்மா தான் விட்டிருப்பார்கள். கொலையாளியைத் தப்ப விடுவதைவிட வேறு என்ன பயம் அதிகமிருக்கிறது. அக்காரியத்தை நான் செய்யவேமாட்டேன். நீர் இப்பொழுது உயிர் தப்பிவிட்டபோதி லும் அவனை சிக்ஷிக்க நியாயங்கிடையாதா? வக்கீல் ஒருவரை கிய மித்து அவரால் நியாயஸ்தலத்தில் வாதாடி அவனை இத்தேசத்தி லிருந்தும் ஓட்டிவிடலாம். இப்பொழுதுதான் என்ன? அவன் ஓடிப்போய்விட்டான் என்று நினைக்கிறீர்போலும். இல்லவே இல்லை. இன்று ஓடிவிடுவான், நாளை அவர்களோடு சேர்ந்துவிடு வான். இனிமேலாவது புத்திவந்து உமது சினேகிதர்களுடன் போய்ச்சேரும். நீர் ஓடிவந்து விட்டதற்காக அவர்கள் மிக்க வரு த்தப்படுவார்கள். அதிலும் உமக்கு நேர்ந்த ஆபத்தைக்கேட்டால் அவர்கள் எப்படி மனந் துடிக்கமாட்டார்கள்? ஆமாம், உமது சங் கதியெல்லா மெனக்குத்தெரியும். வேறு ஒருவரும் உமக்காக வரு த்தப்படாவிட்டாலும் ஒரு பெண்ணாவது உமக்காக வருத்தப்படு வாள். உம்மைப்போன்ற அழகிய புருஷனைக் காதலிக்க ஸ்திரீகள் இருக்கமாட்டார்களா? காணுகிறதால் இப்படிப்பட்ட ஸ்திரீயை விட்டு சிப்பாய்களுடன் ஓடுவேனே? எதற்காக வெட்கப்படுகிறீர்? எனக்கு ஒன்றுமே தெரியாதென் றெண்ணிவிட்டீரோ? சோபை யை எனக்குத் தெரியாதா?" என்றாள். தாமோதரன் திடுக்கிட்டு "எப்படி! என் சோபை உனக்குத் தெரியுமா?" என்று வினவி னான்.

வீட்டுக்காரி:—ஆம், ஆகேஷனை யென்ன? அவள்தான் இந்த வீட்டில் எத்தனையோ தடவை படுத்திருக்கிறாளே.

தாமோதரன்:—அவளுடைய அத்தையுடன்தானே.

வீட்டுக்காரி:—அதுதான் சரி. அந்தக்கிழவியை எனக்கு நன்முகத்தெரியுமே. சோபையும் உண்மையில் மிக்க இனிமைவாய்ந்த சிறியபெண்.

தாமோதரன்:—இனிமை வாய்ந்த பெண்ணு? என்னுடைய சோபை உனக்குத் தெரிந்திருக்குமென்று நான் ஸ்வப்பனத்திலும் எண்ணவில்லை.

வீட்டுக்காரி:—அவளைப்பற்றி எனக்குத் தெரிந்ததில் பாதி கூட உனக்குத்தெரியாது. அவள் தூங்கும்போது பக்கத்தில் உட்கார்ந்திருக்க நீ என்னதான் கொடுக்கமாட்டாய்? அவளது கழுத்தின் அழகே அழகு, நீ படுத்துக்கொண்டிருந்த இதே மெத்தை மேல்தான் அவள் படுத்திருந்தாள்.

தாமோதரன்:—இங்கேயா? என் சோபை எப்பொழுதாவது இங்கே படுத்திருந்தாளா?

வீட்டுக்காரி:—ஆம் ஆம், இதே படுக்கையில் தான் உன்னைப் போலவே அவளும் உன் பக்கத்திலிருக்கவேணுமென்று எண்ணியிருப்பாள். உன் பெயரை என்னிடம் பலதரஞ்சொல்லியிருக்கிறாள்.

தாமோதரன்:—என்ன? என்பெயரை எப்பொழுதாவது உன்னிடம் சொன்னதுண்டா? நீ சொல்வதை நான் நம்பவேமாட்டேன்.

வீட்டுக்காரி:—அவள் தாமோதரன் என்று உண்மையில் சொல்லக்கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அந்தப்பெயரை மிக்க மரியாதையுடனும் அடக்கத்துடனும் பகர்ந்தாள். இருந்தும் நான் அவளுடைய உட்கருத்தை அறிந்து கொள்ளாது போகவில்லை.

தாமோதரன்:—அவள் என்னை நினைக்கும்படியான பாக்கியம் நான் பெற்றவனல்ல. மென்மை, பக்ஷம், நன்மை இவற்றின் உருவாக்கும் அவள். அவளுக்கு ஒரு நிமிஷமேனும் துயரமுண்டாகும்படியாக நானென் அயோக்கியன் பிறந்தேன். எனக்குயார் இந்த சாபமிட்டது? சோபைக்குக் கொஞ்சமேனும் நன்மை செய்வதில் எனக்கு எத்தத் துன்பம் நேரிட்டபோதிலும் அதை அனுபவிக்க நான் தயாராக விருக்கிறேனே. அவள் சந்தோஷமாக விருக்கிறாளென்று கேட்க நான் சித்திரவதையும் பொருட்படுத்தேனே.

வீட்டுக்காரி:—நீர் அவளை இடைவிடாது நேசிக்கிறீர் என்று அவளிடம் நான் சொல்லியிருக்கிறேன்.

தாமோதரன்:—என்னைப்பற்றி உனக்கு எப்படித்தெரியும்? நீ என்னை எங்கே பார்த்திருக்கிறாய்? நானிதற்குமுன் இங்கே வந்ததுமில்லை, உன்னைப் பார்த்ததாய் எனக்கு ஞாபகமுமில்லை.

வீட்டுக்காரி:—ஆனால் என்னை உனக்குத் தெரியாது. நீ சிறு குழந்தையாக விருக்கும்போது பிரபு வீட்டில் நான் உன்னை எடுத்து மடியில் வைத்துச் சீராட்டியிருக்கிறேன்.

தாமோதரன்:—என்ன, உனக்கு ஆளவந்தாரைத் தெரியுமா?

வீட்டுக்காரி:—ஆமாம், இந்த நாட்டில் அவரைத்தெரியாதவர் யார்?

தாமோதரன்:—"அவருடைய கீர்த்தி வெகுதூரம் பரவியிருக்கவேண்டும். அவருடைய ஈகையும் காருண்ணியமும் கடவுளுக்குத்தான்தெரியும். மனிதர்க்கு அதைப்பற்றி என்னதெரியும்? அதிலும் என்னைப்போல் கிருதஜ்ஞை யற்றவனுக்கு அவரது தயாள குணத்தின் பெருமையை அறியக்கூடுமா? அவரால் மேலான ஸ்திதிக்கு நான் கொண்டு வரப்பட்டேன். அனுதைப்பிள்ளையாகிய என்னை யெடுத்துத் தன்பிள்ளையைப்போலவே வளர்த்தது உனக்குத் தெரியுமே. அவருக்குக் கோப முண்டாக்கியது என்மேல் பெருங்குற்றமன்றோ? அவரிட்ட சிக்ஷை எனக்கு வேண்டியதுதான். என்னை வீட்டைவிட்டு அவர் துறத்தியது நியாயமே. அவர் மேல் குறை சொல்வதற்கு ஒன்றுமில்லை. இத்தப்பணத்தை வைத்துக்கொண்டு படையில் சேராமல் வேறு நான் என்ன செய்யக்கூடும்" என்று சொல்லி அவளுக்கு முன் ஒரு பையை யெடுத்துக் குலுக்கினான். அதில் கொஞ்சம் சில்லரையேதா னிருக்குமென்று வீட்டுக்காரி கண்டுகொண்டாள்.

இந்த சங்கதிகளையெல்லாம் கேட்ட வீட்டுக்காரிக்கு மனம் மாறிவிட்டது. அவள் கடிந்த முகத்துடன் "அவரவர்களுக்கு எது நன்மையென்று அவர்களே அறியவேண்டும். யாரோ கூப்பிடுகிறாப்போலிருக்கிறது இதோவந்துவிட்டேன், வந்துவிட்டேன், வீட்டில் எல்லோருக்கும் காது செவிடுபோலிருக்கிறது, நான் கீழே போகவேண்டும், உனக்கு இன்னும் ஏதேனும வேண்டுமானால் வேலைக்காரி கொண்டுவந்துபோடுவாள், இதோ வந்துவிட்டேன்" என்று சொல்லிக்கொண்டே உத்திரவுகூடப் பெற்றுக்கொள்ளாது அறையைவிட்டு வெளிப்போனாள். கீழோர் லாபமின்றி மரியாதை செய்யமாட்டார்களன்றோ?

2. அத்தியாயம்.

நோய் நாடி நோய்முதனாடி யதுதணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்.

நம்கதையை மேலே சொல்வதற்கு முன்னுல் அந்த வீட்டுக் காரிக்கு தாமோதரனைப்பற்றிய விஷயம் எப்படித் தெரிந்ததென்று சொல்லி விடுவோம். நாதமுனிக்கும் தாமோதரனுக்கும்நேரிட்ட சண்டையின் காரணம் சோபையின்பெயர் என்று சுபேதார் சொல்லியிருந்தார். சத்திரக்காரியும் தன் வீட்டுக்கு வந்தவர்களுடைய பெயர் குலம் கோத்திரம் ஆஸ்தி பாஸ்தி முதலியவற்றை விசாரியாது விடுவதில்லை. தாமோதரன் வாயிலிருந்தே அவனது பூர்வோத்திரத்தை எப்படித் தெரிந்துக்கொண்டாள் என்பதை நாமிங்கு கூறவேண்டியதில்லை. வீட்டுக்காரி விட்டுச் சென்றதும் "நமதுபிரிய சோபை படுத்திருந்த படுக்கையிலேயே நாமிப்போது உட்கார்ந்திருக்கிறோம்" என்று தாமோதரன் சிந்திக்கலானுன். அனேக சிருங்காரவெண்ணங்கள் அவன் மனத்தில் தோன்றின. அந்த சமயத்தில் அவனுக்குக் கட்டுக்கட்ட வைத்தியரும் வந்திருந்தார். அவர் அவனுடைய கையைப் பிடித்துப்பார்த்து நாடிகலெல்லாம் திருப்பதை அறிந்து அவன் மிகுந்த அபாயத்திலிருப்பதாகவும் சீக்கிரத்தில் சுரம்வந்து விடுமென்றுஞ் சொல்லித்திரும்பவும் அவன்தேகத்திலிருந்து ரத்தம் வெளிப்படுத்துவதாய்ச் சொன்னுன். தாமோதரன் இனி என்தேக ரத்தத்தில் கொஞ்சம்கூட ரத்தம் சேதமாக்கமாட்டேன்" என்று சொல்லித் தடுத்துவிட்டான். தன் தலைக்கு மாத்திரம் கட்டுக்கட்டிவிட்டால் இரண்டொருநாளைக்குள் தன் உடம்பு தேறிவிடக் கூடுமென்றுஞ்சொன்னுன். வைத்தியன் "இன்னும் இரண்டொரு மாதத்தில் நீர் தேறினுற்போதாதா? இவ்வளவு சீக்கிரத்தில் சொஸ்தமாகி விடக்கூடுமா? நான் இங்கு உம்மால் கற்பிக்கப்பட வரவில்லை. உமக்குக் கட்டுக்கட்டுவதற்கு முன்னுல் ரத்தம் சிந்தவேண்டிய தவசியம், அதற்குச் சம்மதியும்" என்றுன். தாமோதரன் பிடிவாதமாய்த்தடுத்தான். வைத்தியன் கடைசியில் "எனது புத்திமதியைக் கேட்காததால்உமதிஷ்டப்படியே கட்டுக்கட்டி விட்டுப்போகிறேன், அதனல் நீங்கு விளைக்தால் அதற்கு நான் உத்திரவாதியல்ல" என, தாமோதரன் "உமது இஷ்டத்திற்கு விரோதமாகவே நான் கட்டுக்கட்டிக்கொண்டேனென்று சொல்லிவிடுகிறேன், இப்போது நான் சொன்ன காரியத்தைச் செய்யும்" என்றுன். வைத்தியன் உடனே சமயலறைசென்று வீட்டுக்காரியிடம் வியாதியஸ்தன் முரட்டுத்தனம் செய்கிறுன் என்றும், ரத்தம்சிந்த சம்மதிக்கமாட்டேனென்கிறுன் என்றுஞ்சொன்னுன். வீட்டுக்காரி "அவனுடையவியாதி தீனி சுரம்போலிருக்கிறது, இன்று காலையிலெழுந்ததும் பெரிய இட்டலி நாலுசாப்பிட்டான்" என, வைத்தியர் "ஆம் அப்படித்தானிருக்கும், சுரத்தில் அனேகம்பேர் சாப்பிட நான் கண்டிருக்கிறேன், அதற்குகாரணம்வேறு, இவனுக்கு ரத்தம் சிந்தாவிட்டால் பெரிய ஆபத்து உண்டாகி இறந்துவிடுவான்" என்றுன். வீட்டுக்காரி "ஒவ்வொருவரும் எப்பொழு

தாவது சாகத்தான்வேண்டும். அதெல்லாம் எனக்கென்ன, நீர் அவனிடம் ரத்தம் சிந்துபோது நான் அவனைப் பிடித்துக் கொள்ளமாட்டேன். (காதோடு ஒரு ரகசியம்) நீர் அவனுக்கு வைத்தியம் செய்துகொண்டிருந்தால் பணம் கொடுப்பது யார்? என்றுள். வைத்தியன் "யாரா, நானிப்போது வைத்தியம் செய்துகொண்டிருப்பவர் ஒரு பெரிய மனிதரல்லவா" என, வீட்டுக்காரி "நானும் உம்மைப்போலத்தான் நினைத்துக்கொண்டிருந்தேன். என் மூதற் புருஷன் சொல்லியதுபோல் வெளிதோற்றம் எப்பொழுதும் உண்மையாகாது. அவனொரு ஊர் சுற்றுங்காலாடி. நானிந்த விஷயத்தைப்பற்றி உம்மிடஞ் சொன்னே னென்பதை மறந்துவிடும். தொழிலாளிகள் ஒருவருக்கொருவர் உண்மையுரைத்துக் கொள்ளவேண்டுமன்றோ?" என்றுள். வைத்தியன் மிக்க சீற்றத்துடன் "இப்படிப்பட்டவன் என் வித்தையை எனக்கு கற்றுக்கொடுக்க நான் சும்மாவிருந்தேனே, பணங்கொடாதவனுல் என் தொழில் எனனப்படவிடுவேனு? நல்ல சமயத்தில் நீ உண்மையை எனக்குத் தெரிவித்தாய், இப்பொழுது அவனிடமிருந்து ரத்தம் வெளிப்படுத்துகிறேனே இல்லையோ பார்ப்போம்" என்று சொல்லிக் கொண்டுமேலே ஓடி தாமோதரன் அறைக்கதவை தடால் என்று திறந்தான். அச்சமயம் தாமோதரன் நல்லநித்துக்கத்தில் சோபையைப்பற்றி இனிமையாகக் கனவு கண்டுகொண்டிருந்தான். அவனைப்போய் இவ்வைத்தியன் எழுப்பிவிட்டான். தாமோதரன் கன் திறந்து பார்த்ததும் வைத்தியன் மிக்க கோபத்துடன் "இப்பொழுது உன்னிடமிருந்து ரத்தம் சிந்தவேண்டும் என்ன சொல்கிறுய்" என்றுன். தாமோதரன் "என் நிர்மானத்தை உம்மிடம்மூதலிலேயே சொல்லிவிட்டேன், அதையேற்றுக்கொண்டு நீர் போகக் கூடாதா? எதற்காக நான் நல்ல தூக்கத்திலிருக்கையில் என்னைவந்து எழுப்பினீர்?" என்று கேட்டான். வைத்தியன் "இந்தமாதிரி எத்தனையோ மனுஷன் தூங்கிச் செத்துப்போயிருக்கிறுன், தூக்கமும் ஆகாரமும் எப்பொழுதும் நன்மையன்று. கடைசித் தடவையாகக் கேட்கிறேன், இப்பொழுதாவது ரத்தம் சிந்தவிடுவீரா" என்ன, தாமோதரன் "கடைசிதடவையாக நான் சொல்கிறேன் கேளும். நான் உம்மை ரத்தஞ் சிந்தவிடமாட்டேன்" என்றுன். வைத்தியன் "நீ எக்கேடு கெட்டாலும் கெட்டுப்போ, உன் ஜோலிக்கு நான் வருகிறதேயில்லை, நான் இதுவரையில் உமக்குச்செய்த சிகிச்சைக்காக எனக்குச் சேரவேண்டிய கூலியைக் கொடுத்துவிடும். உம்மைப் பார்க்கவந்த இரண்டுதடவைக்கும் இரண்டு பவுன், இரண்டு கட்டுகட்டியதற்கு இரண்டு பவுன், பத்தியம் சொன்னதற்கு ஒரு பவுன்" என்றுன். தாமோதரன் "என்னை இந்த நிலைமையிலாவிட்டுவிட்டுப்போவீர்" என, வைத்தியன் "ஆம் அப்படித்தான்" என்ன, தாமோதரன் "அப்படியானுல் என்னை மரியாதையில்லாமல்

அயோக்கியத்தனமாக நடத்தியதால் உமக்கு ஒரு பைசாவேனும் கொடுக்கப்போகிறதில்லை என்றான். வைத்தியர் "நிரம்ப நல்லது, முதல் நஷ்டம் மிக்க மேலானது, இந்த வீட்டுக்காரி இப்படிப்பட்ட டபோக்கிரிகளுக்கு வைத்தியம் செய்யும்படியாக என்னை அழைத்ததின் கருத்து தானென்ன" வென்று சொல்லிக்கொண்டே வைத்தியன் ஒரே தாண்டலாகத்தாண்டி ஓடிப்போனான். தாமோதரன் தூங்கலாம் என்று படுக்கையில் படுத்தான் ஆனால் பழைய கனவு வரவில்லை.

3. அத்தியாயம்.

விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

கடிகாரத்தில் மணி 5-அடித்தது. தாமோதரன் சரியாக 7-மணி நேரம் தூங்கியெழுந்தான். தூக்கத்திற்குப்பிறகு அவனுக்கு தேகம் கலகலப்பாகவும் சுகமாகவுமிருந்தது. வெளிப்புறப்பட்டு உலாவி வரலாமென்று தனது மூட்டையிலிருந்து வேறே உடை யென்றெடுத்துவைத்தான். ஆனால் வயிறு பசித்ததால் அதைத் தணித்து விட்டுவருவோமென்று சமையலறைசென்றான். அங்கே விட்டுக்காரியை முதலில் கண்டுமரியாதையுடன் சாப்பிட என்ன இருக்கிறது என்று வினவினான். வீட்டுக்காரி சாப்பாடா? இந்தவேளையில் என்ன சாப்பாடகப்படும், அடுப்பு நெருப்பு அணைந்துவிட்டது, ஒன்றும்போடவில்லை என்றாள். தாமோதரன் எது இருந்தாலும் எனக்குக் கிடைத்தால்போதும், இதைப்போல் பசி எனக்கு எப்போது மிருந்ததில்லை என்றான். வீட்டுக்காரி "கொஞ்சம் பழையசோறும் கறியும்வேண்டுமானால் இருக்கிறது" என்றாள். தாமோதரன் "அதைவிட என்ன? அதைப்போட்டால் போதும்" என்ன, வீட்டுக்காரிக்கு தாமோதரன் அழகைப் பார்த்து அவனிடம் கடுமைகாட்ட முடியவில்லை. அவள் இயல்பிலேயே கெட்ட குணமுடையவளல்ல. பணத்தாசை பணமில்லாதவர்களை யெல்லாம் வெறுக்கச் செய்யுமன்றோ? அத்தன்மையில் சேர்ந்தவள் நமது சத்திரக்காரியும். தாமோதரன் தன் அறைக்குவந்து கூடவரஞ்செய்துகொள்ளலாமென்றெண்ணி ஒரு அம்பட்டனுக்கு ஆள் அனுப்பினான்.

அப்பொழுது வந்த அம்பட்டனுக்கு சின்னபிஞ்சான் என்று பெயர். அவனுடைய குணமும் நடத்தையும் வேடிக்கையாகவிருக்கும். அடிக்கடி ஊராரிடத்தில் முகத்திலரை, இடுப்பிலரை, முதுகில் குத்து, தேகத்தில் கிள்ளு, தலையிற் குட்டு இவைகள் பெறுவதுண்டு. இவனுடைய விகடத்தைக்கேட்டு எல்லோருமே சந்தோஷிப்பதில்லை. அதிலும் ஒருவனுடைய குணத்தைப்பற்றி அவ

னிடத்திலேயே பரிகாசஞ் செய்தால் அவன் சும்மாயிருப்பானு? இயற்கைக் குணத்தைமாற்ற முடியுமா? தன் புத்தியில்லாத்தனத்திற்குத் தானே பலதடவை வருத்தப்படுவான் ஒருவனிடம் மனத்திற்குத்தோற்றினால் அதை சமயோசிதமாய் உபயோகிக்காமல் உடனே செய்துவிடுவான். மேலே போகப் போக அவனுடைய குணங்கள் வாசகர்களுக்குத் தெரியுமாகையால் நாம் அவற்றை இங்கே விவரிக்கவேண்டியதில்லை.

அம்பட்டன் வந்ததும் தன் முகத்தை சுரோரம் செய்யும்படி தாமோதரன் சொன்னன். அவன் செய்துகொண்டே :

நாவிதன்:—ஸ்வாமி, தாங்கள் இப்பொழுது என்னைத் தங்களுக்கு சுரோரஞ் செய்யச் சொல்லுகிறீர்களே அப்படி சுரோரம் செய்துகொள்வதற்கு என்னகாரண மிருக்க வேண்டுமென்று யோசித்துப் பார்த்தேன். இரண்டு காரணங்களுக்கு மேல் எனக்கு ஏற்படவில்லை. முதலாவது தங்களுடைய தாடியை வளரவிடுவதற்கும் இரண்டாவது இருக்கும் தாடியைத் தொடைப்பதற்குமாம். நீர் முதல் காரணத்தைக் கொண்டு சுரோரம் செய்துகொள்ளப் போவதாகத் தெரிகிறது. உமது இஷ்டப் பிரகாரமே சீக்கிரத்தில் உமக்கு நல்ல தாடி வளர்த்துவிடும்.

தாமோதரன்:—என்னடா, விதூஷகனாயிருக்கிறாயே.

நாவிதன்:—நீர் என்னைச் சரியாக அறிந்து கொள்ளவில்லை. நான் தத்துவசாத்திரத்தை அதிகமாகப் படித்திருக்கிறேன். அதிக கல்வியினாலேயே எனக்கனர்த்தம் விளைந்தது.

தாமோதரன்:—ஆமாம், உன்னுடைய சாதிக்காரரைவிட நீ அதிகந்தான் படித்திருக்கிறாய் என்று நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் கல்வி எப்படி அனர்த்தம் விளைக்குமென்று எனக்குத் தெரியவில்லை.

நாவிதன்:—ஐயோ, என் அதைக்கேட்கிறீர். நான படித்திருந்ததால் தான் என் தகப்பனார் எனக்கு ஒருபைசாவாவது கொடுக்காது போய்விட்டார். அவர் நட்டுவர். நான் நாட்டிய சாத்திரத்தை பயிலுவதற்கு முன் கல்வி கற்றுக்கொண்டு விட்டேனாகையால் அவர் என்னை வெறுத்து ஆஸ்தியையெல்லாம் மற்ற பிள்ளைகளுக்குப் பங்கிட்டு விட்டுப்போய்விட்டார். உம்முடைய பொறிகளைக் கொஞ்சம் காட்டுகிறீர்களா? இதில் என்ன இவ்வளவு பெரிய காயம். நீர் சண்டைக்குப்போவதாகக் கேள்விப்பட்டேன். அது தப்பென்று இப்பொழுதுதான் தெரிந்தது.

தாமோதரன்:—உனக் கெப்படித் தெரிந்தது.

நாவிதன்:—கொல்லன் உலையண்டை ஊசிவிற்பார்களா? போர்க்களத்தில் காயம் இடைக்காதென்று இங்கிருந்து காயம் எடுத்துக் கொண்டுபோகிறீர்.

தாமோதரன்:—நீ மிக்க சமத்காரமாகப் பேசுகிறவன். உனது வேடிக்கைப் பேச்சைக் கேட்டு நான் வியப்படைகிறேன். சாப்பிட்டபிறகு நீ இங்கு வந்தால் கொஞ்சநேரம் வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருக்கலாம்.

பிஞ்சான்:—இதைவிட இருபதுபங்கு சந்தோஷம் உமக்கிஷ்டமிருந்தால் நான் உண்டுபண்ணுவேனே.

தாமோதரன்:—அது எப்படியப்பா?

நாவிதன்:—சாப்பிட இங்கேயே யுட்காந்து விடுகிறேன். நீர் என்னை விதூஷகன் என்று சொன்னது போலவே தாங்கள் மிக்க நல்லதன்மையுடையவர் என்று நானும் உண்மையில் சொல்லுவேன்.

தாமோதரன் கூஷவரம் முடிந்து உடுத்திக்கொண்டு மிக்காம் பிரமாய்க் கீழே நடந்து சென்றான். இவனுக்கு வீட்டுக்காரியை மயக்கவேண்டுமென்கிற எண்ணமே கிடையாது. அவளுக்கும் இவனிடத்தில் அவ்வளவு ஆசையும்விழவில்லை. ஆனால் அந்த வீட்டில் வேலைசெய்துவந்த நாணி என்பவள் தாமோதரன் அழகைக்கண்டு மயங்கிவிட்டாள். அவனைக் கண்ட ஐந்து நிமிஷத்திற் கெல்லாம் அவனுக்காகப பெரு மூச்சுவிட்டு உருகினாள். இந்த நாணி மிக்க அழகுடையவள். ஆனால் அவ்வளவுக் கவ்வளவு கூச்சமு முடையவள். அக்கம்பக்கத்து இரண்டு மூன்று வாலிபர்கள் இவளைத் தேடிவந்தும் இவள் இடங்கொடுக்கவில்லை.

தாமோதரன் சமையலறை வந்ததும் இவனுக்கு இலை ஒன்றும் போடாதிருந்ததைக் கண்டான். அவன் கோபபடையாமல் இப்பொழுதாவது தனக்கு வட்டிக்கும்படியாகக் கேட்டுக்கொண்டான். உடனே நாணி அவனுக்கு இலைபோட்டு அன்னமளித்தாள். சாப்பிட்டெழுந்ததும் அங்கு நாவிதன்வந்து தோன்றினான். வீட்டுக்காரி அனேகபேர்களைக் கூட்டிவைத்துக்கொண்டு தாமோதரனுடைய பூர்வீகத்தை அவன் வாயிலிருந்து கேட்டதோடு தன் கைச்சரக்கையுஞ் சேர்த்துப் புராணஞ் சொல்லிக்கொண்டிருந்தாள். இதைப் பிஞ்சான் உற்றுக்கேட்டுக்கொண்டிருந்தான். "இப்படிப்பட்டவன்தானு பெரிய மனுஷன்" என்று முடிக்கையில் அம்பட்டன் உட்பிரவேசித்து "ஆளவந்தாரின் வேலையாளா? அவன் பெயர் என்ன" என்றான். வீட்டுக்காரி "தாமோதரன்

என்று சொன்னாள். ஒருவேளை அது மாறுபெயராக இருக்கலாம். தன்னைக்கோபித்து வெளிப்படுத்தி விட்டபோதிலும் ஆளவந்தார் தன்னைச்சொந்தப்பிள்ளைபோல் வளர்த்து வந்தார் என்றும் அவன் சொன்னான்" என்றாள். அம்பட்டன் "அவன்பெயர் தாமோதரனு யிருந்தால் அவன் உண்மையைத்தான் சொல்லியிருக்கிறான். அவனுடைய ஊரில் என் உறவினர்கள் இருக்கிறார்கள். இவன் ஆளவந்தாரின் பிள்ளையென்றே ஜனங்களெல்லாம் சொல்லிக்கொள்ளுகிறார்கள்" என, வீட்டுக்காரி "அப்படியானால் இவன் ஏன் தான் இன்னொன் மகன் என்று சொல்லிக் கொள்ளுகிறதில்லை" என்று கேட்க, அம்பட்டன் "அதுவெல்லாம்எனக்குத்தெரியாது. அனேகம் பிள்ளைகள் தகப்பனர் பெயரைச் சொல்வதில்லை. அது எனக்குத் தெரியும்" என்றதின் பேரில், வீட்டுக்காரி "பெரியமனிதன் பிள்ளையென்று எனக்குத் தெரிந்தால் வேறுவிதமாக நடத்து கொண்டிருப்பேனே. என் மூதற் புருஷன் சொல்லுகிறபடி பெரிய மனிதனிருப்பவன் எப்படியிருப்பினும் அவனுக்குக் கோபம் வரும்படி செய்யக்கூடாது" என்பார் என்று சொல்லிப் போயினள்.

4. அத்தியாயம்.

எண்பதத்தா லெய்த லெளிதென்ப யார்மாட்டும்
பண் புடைமை யென்னும் வழக்கு.

பிஞ்சான் அம்பட்டனுக்கும் வீட்டுக்காரிக்கும் நடந்த சம்பாஷணை தாமோதரன் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்பொழுதாம். சாப்பாடானதும் தாமோதரன் பிஞ்சானைக் கூப்பிட்டுப் பக்கத்தில் உட்காரச்சொன்னான். நாவிதன் தாமோதரனைமிக்க ஆச்சரியத்துடன் உற்றுநோக்கி "உமதுபெயர் தாமோதரனல்லவா" வென்றுகேட்டான்.

தாமோதரன்:—ஆம்.

பிஞ்சான்:—விஷயங்கள் எவ்வளவு நேர்த்தியாக நடக்கின்றன. தாமோதரரே! இனி நான் உம்முடைய தாசன். நீர் குழந்தையாயிருக்குப்போது ஒரேவொரு தடவைதான் நீர் என்னைப்பார்த்திருப்பீராதலால் என்னை நீர் ஞாபகம் வைத்துக்கொள்ளக்காரணமில்லை. அதிருக்கட்டும். ஆளவர்தார் பிரபு இப்பொழுதெப்படியிருக்கிறார் சொல்லும்.

தாமோதரன்:—என்னையுமக்குத் தெரியும்போலிருக்கிறது. ஆனால் உம்மை நான்பார்த்த ஞாபகமேயில்லை.

பிஞ்சான்:—அது ஒன்று மாச்சரியமில்லை. உங்களை நான் முன்னாலேயே அறிந்துக்கொள்ள கூடவில்லையே அதுதான் ஆச்

சரியம். உமதுமுகம் கொஞ்சங்கூட மாறவேயில்லை. முன் பார்த்ததுபோலவேயிருக்கிறது. இந்தவழியாக எங்கு பிரயாணம்போகிறீர் என்று நானும்மைக்கேட்கலாமா?

தாமோதரன்:—அதைப்பற்றி யென்னைக்கேட்கவேண்டாம்.

பிஞ்சான்:—அயலார் சங்கதி ஆயிரமிருக்கும். அதையெல்லாம் நாம் அறிந்துகொள்வது சரியாகுமா? என்னிடம் அந்தத் தூர்ப்புத்திகிடையாது. ஆனபோதிலும் தங்களைப்போன்ற பெரியமனிதர் வீட்டுப்பிள்ளைகள் வேலைக்காரரின்றித் தனியேபோவது அரிது. ஆதலால் தாங்கள் ஏதாவது காரியமாக மாறுவேஷம் பூண்டு போகிறீர்களோவென்று யோசிக்க வேண்டியதாயிருக்கிறது. அப்படியானால் நீர் உமது உண்மைப்பெயரை வெளிப்படுத்தாமல் இருக்கவேண்டுமன்றே?

தாமோதரன்:—இந்த தேசங்களில் என்பெயர் இவ்வளவு நன்றாய்த் தெரிந்திருக்குமென்று நான் கொஞ்சமேனும் எண்ணவில்லை. ஞானிவ்வியூம் விட்டுப்போகும் வரையில் யாரிடமும் என் பெயரை நீர் சொல்லாதிருந்தால் உமக்குப் புண்ணியமுண்டாகும்.

பிஞ்சான்:—நல்லவேளையாக வேறு ஒருவருக்கும் உங்கள் பெயர் தெரியாமலிருக்கிறதே. நான் ரகசியத்தை ஒருவரிடமும் வெளிப்படுத்தமாட்டேன். மற்றவர்களுக்குத் தெரிந்தால் அவர்கள் வாய் சும்மாயிராது. என் விரோதிகள்கூட நான் ரகசியத்தை வெளிப்படுத்துபவனல்ல வென்றே சொல்வார்கள்.

தாமோதரன்:—வம்புப் பேச்சி உங்கள் ஜாதிக்குரியதாயிற்றே.

பிஞ்சான்:—நான் அம்பட்டனாகப் பிறக்கவுமில்லை, அப்படி வளரவுமில்லை. இது சத்தியம், நான் என் வாழ்நாளையெல்லாம் பெரிமனிதர்களோடேயே கழித்திருக்கிறேன். ஆதலால் அவர்கள் குணங்களெல்லாம் எனக்கும் படிந்திருக்கிறது. வேறொருவரை நம்பி உமது ரகசியங்களையெல்லாம் சொல்லியதற்குப் பதிலாக என்னிடம் அவற்றைச் சொல்லியிருந்தால் அந்த ரகசியங்களை நான் எவ்வளவோ பத்திரமாகப் பாதுகாத்திருப்பேன். சமையலறையில் பலபேருக்கு முன்பாக உமது பெயரை அகௌரவமாகவும் நான் பேசக்கேட்டிருக்கமாட்டேன். உமக்கும் ஆளவந்தாருக்கும் நடந்த சண்டையைத் தனது சொந்தப் பொய்யுடன் கலந்து எல்லாருக்கு முன்னிலையில் பிரமாதமாகக் கட்டிவிட்டானே.

தாமோதரன்:—நீர் சொல்வது மிக்க வியப்பாயிருக்கிறதே.

பிஞ்சான்:—நான் உண்மையைத்தான் பேசுகிறேன். இப்படி உங்களை இகழ்ந்துபேசியவள் வீட்டுக்காரியே யென்று நான் உங்களிடம் சொல்லவேண்டியதில்லை. அவள் சொன்ன கதையைக்கேட்டு எனக்கு மிக்க வருத்த முண்டாகிவிட்டது. அவள் சொன்னதெல்லாம் பொய்யென்றே எண்ணுகிறேன். நீங்கள் சொக்கனுக்குச்செய்த உபகாரத்தைப்பற்றி தேசமெல்லாம் பேசிக்கொள்ளுகிறார்கள். எனக்கும் அதைப்பற்றி கடிதம் வந்திருக்கிறது, ஆதலால் எனக்கு உங்களிடம் மிக்க மதிப்புண்டு. அக்காரியத்திலுல் யாருக்குமே உங்களிடம் பிரீதி உண்டாயிருக்கிறது. இக்காரணத்தினுல்தான் உம்மை நான் கேள்விகள் கேட்டது.

கபடமே இன்னதென் றறியாத தாமோதரன் பிஞ்சான்சொன்னது உண்மையென்று நம்பி அவனைத் தனது ஆப்த நண்பனுக்கிக்கொண்டான். பிஞ்சானின் கல்வியறிவையும் நடத்தையையுங் கண்டு ஏனைய நாவிதரினும் இவன் மேம்பட்டவனென்று கருதினுன். ஆதலால் தாமோதரன் அவனை நோக்கி "நண்பரே! நீர் எற்கெனவே என் சமாசாரங்களைக் கேள்விப்பட்டிருக்கிறதினுலும் என் விருத்தாந்தத்தின் உண்மையையறிய ஆவல் கொண்டிருப்பதனுலும் பொறுமையாகக்கேட்டால் எல்லாவற்றையும் உம்மிடம் சொல்லிவிடுகிறேன்" என்ன, பிஞ்சான் "எவ்வளவு நேரமானுலும் என்ன நீளமானுலும் உமது கதையை நான் பொறுமையுடன் கேட்கத் தயாராகவிருக்கிறேன். என்னைப் பொருட்படுத்திச் சொல்ல ஒப்புக்கொண்டதற்கு நான் உமக்கு மிக்க வந்தனமுள்ளவனுயிருக்கிறேன்" எஸ்ருன்.

தாமோதரன் தன் கதையை ஆரம்பித்து ஒன்றிரண்டு சந்தர்ப்பந்தவிர மற்ற விருத்தாந்தம் முழுவதையும் சொன்னுன். தார்க்கிகரோடு சண்டைபோட்டதும் கப்பல் வேலைக்குப் போவதாய் உத்தேசித்துராணுவத்தோடு கலந்ததும் ஆகிய இவ்விரண்டு விஷயத்தைமாத்திரம் சொல்லவில்லை. பிஞ்சான் கதையை மிக்கஆவலத்தோடு கேட்டுவந்தான். ஒருதடவையாவது இடையில் தாமோதரனைத்தடுத்து சந்தேக நிவர்த்தி செய்துகொள்ளவில்லை. விருத்தாந்த முழுவதும் முடிந்ததும் அவன் "சத்புருஷராகிய ஆளவந்தாரின் மனதைக்கலைப்பதற்குத் தாமோதரனது விரோதிகள் எவ்வளவோ சூழ்ச்சி செய்திருக்கவேண்டும்" என்ருன். தாமோதரன் "அதில் கொஞ்சமேனும் சந்தேகமில்லை. என்னைத் துன்பத்திற்குள்ளாக்கும் பொருட்டு இல்லாததையும் பொல்லாததையும் போய் அவரிடம் யாரோ சொல்லியிருக்கவேண்டும்" என்ருன்.

இக்கதையை அம்பட்டன் கேட்டும் திருப்திபடவில்லை. இன்னும் ஏதோ ரகசியமிருக்கிறது, அதையும் அறிந்து கொள்ளவேண்டுமென்று ஆவலடைந்தான். தாமோதரன் தனது காதலியும்

பிலவங்கனுக்கும் தனக்குமுண்டான விரோதத்தையும் சொன்னபோதினும் காதல் கொண்டிருந்த பெண்ணின் பெயரை மாத்திரம் சொல்லவில்லை. அம்பட்டன் திரும்பவும் அப்பெண்ணின் பெயரைச் சொல்லவேண்டுமென்று கெஞ்சினான். தாமோதரன் கொஞ்சம் யோசித்து விட்டு "ஏற்கெனவே பல ரகசியங்களை உன்னிடம் சொல்லியிருக்கிறேனானபடியாலும் அப்பெண்ணின் பெயரையும் அனேகவிடத்தில் நான் முன்னமேயே சொல்லியிருக்கிறேனானபடியாலும் அதை உன்னிடம் ஒளிப்பதில் என்னபயன்? அவள்பெயர் சோபை. வத்ஸரின் குமாரி" என்றான். பிஞ்சான் "வத்ஸருக்கு அவ்வளவு பெரிய பெண்ணொன்று இருக்கிறாளா"? என்று கேட்க, தாமோதரன் "ஆமாம், அந்தப்பெண்ணுக்குச் சமானம் உலகத்திலே கிடையாது. அவளைப்போன்ற அழகுள்ளவளை யாரும் பார்த்திருக்கமாட்டார்கள். அதுமாத்திரமா? அவளுடைய குணம் பொறுமை இவைகளைப்பற்றி எவ்வளவு சொன்னபோதிலும் பூர்த்தியாக வர்ணிக்கமுடியாது" என்றான். நாவிதன் "ஓகோ வத்ஸருடைய பெண் அவ்வளவு வளர்ந்து விட்டாளா? வத்ஸரை எனக்குச் சிறுபிள்ளையாக விருக்கும்போதே தெரியும் என்று சொல்லிக்கொண்டான்.

பின்னும் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்து நாவிதன் வீடுபோகவேண்டுமென்று புறப்பட்டான். திரும்பவும் தாமோதரன் தான் சொன்னவைகளை மிக்க ரகசியமாக வைத்துக்கொண்டிருக்கும்படி மன்றாடினான். அவனும் அப்படியே செய்கிறேன் என்று சத்தியம் செய்துவிட்டு வீடுபோனான்.

5. அத்தியாயம்.

உற்றநோய் நீக்கி யுறுஅமைமுற் காக்கும்
பெற்றி யார்ப்பேணிக் கொளல்.

காயத்திற்குக் கட்டுக்கட்டாமல் வைத்தியர் விட்டுப்போனதும் தாமோதரனுக்குக் கொஞ்சம் கவலை யுண்டாகிவிட்டது. ஆதலால் அவன் வீட்டுவேலைக்காரனைக்கூப்பிட்டு வேறு வைத்தியன் பக்கத்திலிருக்கிறானா என்று விசாரித்தான். வேலைக்காரன் சமீபத்தில் ஒரு வைத்தியன் இருப்பதாகவும் ஆனால் ஒருவன் பார்த்து விட்டுப்போன பிறகு திரும்ப மற்றொரு வைத்தியன் வரமாட்டானென்றுஞ் சொன்னான். திரும்பவும் அவன் "நான் சொல்வதைக் கேளும், நேற்றிராத்திரி உம்முடன்கூட வந்திருந்த நாவிதனை விட வேறு ஒரு வைத்தியனும் இந்தப்பக்கங்களில் இல்லை. அவன் இந்த ஊர் வந்து மூன்றுமாதத்தானாகிறது. ஆனபோதிலும் அனேக வியாதிகளை அவன் குணம் செய்திருக்கிறான்" என்றான். உடனே பிஞ்சானை அழைத்துவரும்படி தாமோதரன் ஆள் அனுப்

பிஞன். வைத்தியத்திற்காகக் கூப்பிடப்பட்டதும் பிஞ்சான் அடப்பம் எடுக்கும்போது தரிக்கும் உடையை வீசி யெறிந்து விட்டு உயர்ந்த உடை தரித்துக்கொண்டு காம்பீரமாக நடந்து வந்தான். அவனை அப்பொழுது பார்த்தவர்கள் அம்பட்டன் என்று சொல்லவே மாட்டார்கள்.

தாமோதரன்:—"என்ன நாவிதரே! உமக்குப் பலதொழில் தெரியும்போலிருக்கிறது. இதைப்பற்றி நேற்று ராத்திரி என்னிடம் நீர் ஒன்றும் சொல்லவில்லை.

பிஞ்சான்:—நீங்கள் வேறு ஒரு வைத்தியரிடம் மருந்துபோட்டுக்கொண்டால் அவருக்கு எதிராக உமக்கு வைத்தியம் செய்ய எனக்கிஷ்டமில்லை. உமக்கிஷ்டமிருந்தால் உமது காயத்தைப் பரிசோதனை செய்து என் அபிப்பிராயத்தையுஞ் சொல்லுகிறேன்.

தாமோதரனுக்கு இந்தப் புதுவைத்தியனிடம் நம்பிக்கையில்லை. ஆனபோதிலும் அவன் கட்டை அவிழ்த்துப் பார்க்கும் படியாக இடங்கொடுத்தான். பிஞ்சான் காயத்தைப்பார்த்ததும் தலையை யசக்கி உருமினன். இதைப்பார்த்து தாமோதரனுக்குக் கோபமுண்டாகி உமது விகடத்தை என்னிடம் காட்டாதேயும். சங்கதி யெப்படி யிருக்கிறது சொல்லும்" என்றான்.

பிஞ்சான்:—நான் உங்களுக்கு ஒரு சினேகிதனைப்போல் பதிலுரைக்கவா, வைத்தியனைப்போல் பதிலுரைக்கவா?

தாமோதரன்:—சினேகிதனைப்போல் உண்மையாகச் சொல்லும்.

பிஞ்சான்:—கட்டுக்கட்டிக் கொண்டிருந்தால் இந்தக்காயம் உடனே சொஸ்தமாகாது. என்னிடம் ஓர்வித எண்ணெய் இருக்கிறது. அதைத் தடவி வந்தால் வெகு சீக்கிரத்தில் சொஸ்தமாகிவிடும் அதைத் தடவட்டுமா?

தாமோதரன்:—இதற்கு சம்மதித்தான். நாவிதனும் எண்ணெயைத் தடவினான்.

பிஞ்சான் "மூன்போலவே எனது தோற்றத்தை மாற்றிக் கொள்ளவேண்டும். எனெனில் வைத்தியஞ் செய்யும்போது முகத்தைக் கடுமையாக வைத்துக்கொண்டால் உலகத்தில் என்னை மதிக்கிறார்கள். அம்பட்டனாயிருக்கும்போது சிரித்துப் பரிகசித்துக் கொள்ளலாம். ஆனால் வைத்தியனாயிருக்கும்போது மியாதியஸ்தரை அழும்படியாகச் செய்யவேண்டும்" என்றான்.

தாமோதரன்:—நாவிதரே, வைத்தியரே, உம்மைப்போல் வேடிக்கையான மனுஷரை நான் பார்த்ததேயில்லை. உம்முடைய

விருத்தாந்தம் விதைமா யிருக்கவேண்டும். அதைக்கேட்க ஆவ லுள்ளவனாயிருக்கிறேன்.

பிஞ்சான்:—ஆமாம், அதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். உமக்குச் சாவகாசமிருக்கும்போது என் கதையைச் சொல்லுகி றேன்.

தாமோதரன்:—இந்த சமயமே. சொல்லும். எனக்குப்போ திய சாவகாசந்தான்.

பிஞ்சான் "அப்படியானால் உமது இஷ்டப்படியே சொல்லு கிறேன். ஆனால் நம்மை ஒருவரும் வந்து இடையில் தடுக்காதபடி கதவைத் தாள்போட்டு விடுகிறேன்" என்று கதவைத் தாளிட்டு தாமோதரனிடம் வந்து "நீர் தான் எனக்குப் பெரிய சத்துரு வாய் வந்து தோன்றினீர்" என்றான். இதைக்கேட்ட தாமோதரன் திடுக்கிட்டான். "நான் உமது சத்துருவா" என்று மிக்க வியப்புட னும் அழுத்தத்துடனும் கேட்டான்.

பிஞ்சான்:—கோபித்துக் கொள்ளாதேயும். நான் உமக்கு சத் துருவே யல்ல. நீர் எனக்குத் தீங்கிழைக்கவேண்டுமென்ற எண் ணத்துடன் செய்ததல்ல. அந்த சமயத்தில் நீர் ஒரு சிசு என்பய ரைச்சொன்னால் உமக்கு எல்லாந்தெரிந்துவிடும். பார்த்தன் என்ற பெயரை நீர் கேட்டதுண்டா? அவன் தான் உம்முடைய தந்தை யென்று சிலர் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அல்லவா? அந்த வம் பினால் அப்பார்த்தனுக்குப் பிழைப்பில்லாமற் போகவில்லையா?

தாமோதரன்:—ஆமாம் அவரைப்பற்றி கேள்விப்பட்டிருக் கிறேன். நான் அவருடைய பிள்ளையே யென்று இன்னமும் நம்பி இருக்கிறேன்.

பிஞ்சான்:—நான்தான் அந்தப் பார்த்தன். நீர் எனக்குப் புத் திரனுடைய கடமை யொன்றுஞ் செய்யவேண்டியதில்லை. ஏனெ னில் நீர் என் புத்திரனல்லவென்று உறுதியாகச் சொல்லுகிறேன்.

தாமோதரன்:—எப்படி! ஒரு பொய்ச் சந்தேகத்தினாலா உங் களுக்கு இவ்வளவு அனர்த்தமும் நேரிட்டது.

பிஞ்சான்:—ஆம் ஆம். அப்படித் தான். சனங்கள் தங்கள் கஷ்டத்திற்குக் காரணமான வஸ்து குற்றமில்லாதிருப்பினும் அதை வெறுப்பது ஸகஜம். ஆனால் நான் அப்படியல்ல. நீர் சொக் கனிடம் நடந்துகொண்ட விதத்தைக் கேட்டதுமுதல் உம்மிடம் அதிக விசுவாசம் வைத்திருக்கிறேன். என்னைக் கஷ்டத்தினின்றும் கரையேற்றவே நீர் பிறந்திருக்கிறீர் என்று இந்த சந்திப்பினால் நம்புகிறேன். உம்மைக் காண்பதற்கு முதல்நாள் காயப்படாமல் ஒரு முக்காலிமேல் இடறிவிழுந்து எழுந்ததாகக் கனவுகண்டேன்.

அதனால் எனக்கு எதுவோ நன்மை யுண்டாகப்போகிறதென்று தெரிந்துகொண்டேன். நேற்று ராத்திரி வெண்மையான குதிரையின்மேலேறி உமக்குப்பின்னல் சவாரிசெய்து போவதாகக்கனவு கண்டேன். அது மிக்க சிரேஷ்டமான ஸ்வப்பனம், நல்லகாலத்தைக் காட்டுகிறது. அப்படியாயின் இந்த சமயத்தில்தான் நான் என் கஷ்டங்களை நிவர்த்திசெய்து கொள்ளவேண்டும்.

தாமோதரன்:—எனக்காக நீர்பட்ட கஷ்டத்தை நிவர்த்தி செய்வதற்கு என்னால் கூடுமானது எதுவாயினும் செய்யத் தயாராக விருக்கிறேன். ஆனால் இந்தசமயத்தில் என்னால் கூடுமானது ஒன்றுமில்லை.

பிஞ்சான்:—உம்மால் கூடியது இருக்கிறது. நீர் போகிறவிடத்திற்கு நானும் கூடவருகிறேன். அதற்கு இடங்கொடுக்கவேண்டும். நீர் சம்மதியாவிட்டால் நான் இறப்பது நிச்சயம். என்னைக் கொன்றபாவம் உம்மைச்சேரும்.

தன்னைத் தொடராதிருக்கும்படியாகப் பிஞ்சானுக்குப் பல விதமாகத் தாமோதரன் தடுத்துப் புத்திசொல்லியும் பயன்படவில்லை. இனிப்பிஞ்சானை அவனுடைய சொந்தப் பெயராகிய பார்த்தன் என்றே நாம் கூப்பிடுவோம். பார்த்தன் தான் கண்ட வெள்ளைக்குதிரைக் கனவின்மேல் மிக்க நம்பிக்கை வைத்திருந்ததால் தன்னைத் தாமோதரன் விட்டுப்போனாலும் சரி இட்டுப்போனாலும் சரி அவனைப் பின்தொடர்வதென்று நிச்சயித்தான்.

தாமோதரனுக்குப் பார்த்தன்மேல் மிக்க பிரீதியுண்டாகிவிட்டது. அவனிவ்வளவு பிடிவாதமாகத் தன்னைப் பின்தொடர்வதாய்ச்சொன்னதும் அதற்குச் சம்மதித்து விட்டான். ஆனால் திரும்பவும் எதையோ நினைத்துக்கொண்டு "பார்த்தரே, நான் உம்மைக்காப்பாற்ற சக்தியுடையவன்என்றெண்ணுகிறீர்போலும். உண்மையில் எனக்கு அந்த சக்தி கிடையாது" என்று சொல்லிக் கொண்டே தனது பையினின்றும் ஒன்பது சவரனை எடுத்து எண்ணிக்காட்டி "இதுதான் என்னுடைய மூழு ஆஸ்தியும்" என்றான். அதற்குப்பார்த்தன் "நான் உம்முடைய தயவுவேண்டுகிறேனே யன்றி உமது பணம் இப்பொழுது தேவையில்லை. சீக்கிரத்தில் உமக்கு யதேஷ்டமாகப் பணம் கையில் வந்துசேரும். ஆனால்நந்த சமயத்தில் உம்மைவிட நான் பணக்காரன். என்னுடைய பணமெல்லாம் உம்முடையதே. அதை நீர் இஷ்டப்படி செலவு செய்யலாம். தவறுமல் என்னுடைய பணத்தையெல்லாம் நீர் எடுத்துக்கொண்டு உமது வேலையாள்போல் என்னை நடத்திவரவேண்டுகிறேன்" என்றான். ஆயினும் தாமோதரனுக்குப் பார்த்தனுடைய பணத்தை யெடுத்துக்கொள்ள சம்மதமில்லை.

மறுநாள் காலை பிரயாணஞ்செய்ய நிச்சயம் செய்திருந்தார்கள். ஆனால் அவர்களுடைய மூட்டையைப்பற்றி ஒரு அசக்தர்ப்பமுண்டாயிற்று. தாமோதரனுடைய மூட்டை மிக்க பெரிதாயிருந்ததால் ஒருகுதிரையின்மிக்கொண்டு போகமுடியவில்லை. பார்த்தன் ஒரு புத்திசொன்னான். உடுக்கவேண்டிய சில துணிகளைத் தவிர பாக்கி மூட்டையைத் தன்வீட்டில் வைத்துப்போனால் திரும்பி வரும்வரையில் பத்திரமாயிருக்குமென்றான். இதற்கு தாமோதரனும் சம்மதித்தான். உடனே நாவிதன் பிரயாணத்திற்கு வேண்டிய துணிமணிகளை ஆயத்தப்படுத்த வீடுசென்றான்.

6. அத்தியாயம்.

நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டுபவர்.

பார்த்தன் மிக்க மூடபக்தியுடையவனாயிருந்தபோதிலும் வெள்ளைக்குதிரைக்கனவை நம்பி தாமோதரனுடன் கூடச்செல்லும்படியான அவ்வளவு மூடனல்ல. இதனால் வேறெண்ணம் கொண்டுவந்தவன் என்றேற்படுகிறது. பார்த்தன் தாமோதரனை ஆளவந்தாருக்குப் பிறந்த கள்ளப்பிள்ளையென்று உறுதியாக நம்பியிருந்தான். தாமோதரன் சொன்னதையெல்லாம் கேட்டதும் இந்த அற்பகாரணத்திற்கு ஆளவந்தார் தன் சொந்தப்பிள்ளையைத் துறத்தியிருப்பாரா என்று சந்தேகித்தான். தாமோதரனுடைய துற்செய்கைகளையெல்லாம் நன்றாகக் கேள்விப்பட்டிருந்தவனைகலால் தாமோதரன் சொன்னதெல்லாம் பொய்யென்றும் உண்மையில் தாமோதரன் ஆளவந்தாரிடம் சொல்லிக்கொள்ளாமல் ஓடிவந்து விட்டவன் என்றும் நம்பினான். ஆதலால் தாமோதரனோடு நல்ல வார்த்தையாகப்பேசி அவனைத்திரும்பவும் தந்தை வீடுபோகச்செய்தால் ஆளவந்தார் தான் செய்த உபகாரத்திற்காகத் தன்மேலிருந்த கோபத்தை மறந்துவிடுவார் என்றெண்ணினான். தன்மானத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காக ஆளவந்தார் அவர்குற்றத்தைத் தன்மேல் சுமத்திக் கோபம் வந்தவர்போல கடிந்தார் என்பது அவனுடைய நம்பிக்கை. இப்படி நம்பியதற்கு அவனுக்குக் காரணங்களுண்டு. முதலாவது தாமோதரன்மேல் ஆளவந்தார் மிகுந்த பக்ஷமாயிருந்தது. இரண்டாவதுதான் நிரபராதியாகவிருந்தும் தனக்கு மிக்க கொடுமையாக ஆளவந்தார் சிக்ஷைவிதித்தது. மூன்றாவது பரிசுத்தமாகத் தனது வருஷாந்திர சம்மானத்தைப் பிடுங்கியபிறகும் ரகஸியமாகத் தனக்குச் சாப்பாட்டிற்கு அனுப்பிவித்தது. இது தன்னை அனியாயமாகத் தண்டனைக் குட்படுத்தியதற்கு மனங்கசிந்து செய்த உபகாரமென்றும் நம்பினான்.

இத்தியாதி காரணங்களால் வ்வாலிபனை யெப்படியாவது வீடு சேர்த்தால் ஆளவந்தார் தனை பேற்றுக்கொண்டு மிகுந்த சம்மானம் செய்வாரென்று நிச்சித்தான். அன்றியும் தனது சொந்த ஊர்போய்ச் சுகமாயிருவாமென்றும் கருதினன். தாமோதரனே இக்கச் சூது ஒன்னும் அறியாமல் தன்மீதிருக்கும் பிரீதியாற்றான் பார்த்தன் தனைப் பின் தொடருகிறான் என்று நம்பிவிட்டான்.

தாமோதரன் அன்று மூழுமையும் ஒரு புது நண்பரோடு பேசிக்கழித்தான். அவன் வீட்டுக்காரனுடைய புருஷன், வெகு நாளாக வியாதியினால் படுக்கையிலேயேகிடந்தவன். வருஷத்தில் ஆறுமாதம் இம்மாதிரியிருப்பான். டக்கி ஆறுமாதத்தையும் அவன் வீட்டைச் சுற்றியுலாவியும் அவீட்டுக்கு வருபவர்களுடன் பேசியும் கழிப்பான். நெற்றி நீர் லத்தில் வழியும்படியாக வேலை செய்து சொற்பமாகச் சம்பாதித்து வைத்திருந்த தனது சிற்றப்பனுடைய ஆஸ்தியெல்லாம் இவ வேட்டையாடுவதிலும் குதிரைப் பந்தயத்திலும் சேவற்சண்டையிலும் செலவழித்துவிட்டவன். இவன் மனைவியும் இவனும் ஒருவரையொருவர் பகைத்தே வந்தார்கள். இவனை அவமானப்படுத்தவேவிட்டுக்காரி தன் முதற் புருஷனுடைய பெருமையை யெடுத்தேதுவாள். இவள் வீட்டதிகாரமெல்லாம் தானே செய்து அதின் ஊதியத்தைத் தானே அனுபவிப்பாள். இவள் புருஷனுக்கு இவ் மேல் கொஞ்சமேனும் யஜமானத்துவம் கிடையாது. இந்த புருஷனுடன் தான் தாமோதரன் அன்று பேசி நாழிக்கழித்தான். அந்தி வேளையில் தாமோதரன் தன் அறைக்குள் சென்றதும் மது அன்னியோன்னிய தம்பதிகளுக்கு அவனைப்பற்றிக் கொஞ்சம் தர்க்கம் உண்டாயது.

மனைவி:—ஓகோ அவருடன் இன்னேரம் வம்பளத்து இருந்தாப்போலிருக்கிறது.

புருஷன்:—ஆம் அப்படித்தான். அவ்வாலிபன் ஒரு பெரிய மனிதனைக் காணப்படுகிறான். ஆனால் பாலியம். பல நடவடிக்கைகளைப்பற்றி யொன்றுமே தெரியாது போலிருக்கிறது. அதிகமாக அவன் குதிரைப் பந்தயத்திற்குப் போனதில்லை

மனைவி:—அப்படியா? உன்னைப்போல் தானே அவனும். குதிரைப் பந்தயம் போகிறவன். பெரிய மனுஷனா? அப்படிப்பட்ட பெரிய மனிதர்கள் நசமாகப்போகட்டும். என்முதல் புருஷன்சொன்னபடி—

புருஷன்:—உன் முதல் புருஷனுக்கு இழவுவர—

மனைவி:—உன்னை விடத்தமமானவனுக்கு எதற்காக இழவு வரவேண்டும்? அவர் உயிராடிருந்தால் நீ இந்தமாதிரி சொல் வாயா?

புருஷன்:—என்ன, இவ்வளவு தைரியமெனக்கில்லையா? நீ என் காதுகேட்க உன் முன் புருஷனை எத்தனையோ தடவை திட் டியிருக்கிறாயே.

மனைவி:—திட்டியிருந்தால் அதற்காக எவ்வளவோ வருத்தப் பட்டிருப்பேன். யோசனையின்றி ஏதாவது ஒருவார்த்தை சொல்லி விட்டாலும் அவர் என்னை மன்னித்துவிடுவார். உன்னைப்போல் திரும்பத்திரும்ப சொல்லிக்காட்டமாட்டார். அவர் எனக்கு உண் மையில் நல்ல கணவராயிருந்தார். கோபத்திலேதாவது அவரைப் பற்றி நான் தூற்றியிருந்போதிலும் அவரை நான் அயோக்கியர் என்று சொன்னதேயில்லை. அப்படிச் சொல்லியிருந்தபோதிலும் சொன்னது பொய்யேயல்லது மெய்யல்ல.

இப்படி இன்னும் என்னென்னவோ சொல்லிக்கொண்டிருந் தாள். அவள் புருஷன் அவைகளைக் காதில் ஏற்கவில்லை.

மறுநாட்காலையில் பார்த்தன் பிரயாணத்திற்கு வேண்டிய சாமான்களைச் சேகரித்துக்கொண்டு தாமோதரன் படுக்கையண் டை வந்து நின்றான். தனக்காக நாலு அங்கியும் தாமோதரனுக் காக ஏழு அங்கியும்எடுத்து ஒரு மூட்டையாகக் கட்டிக்கொண்டு தன் வீடுநோக்கிப் புறப்படுகையில் வீட்டுக்காரி அவனைத் தடுத்து, தனக்குச் சேரவேண்டிய பணமெல்லாம் கொடுத்தாலொழிய யாதொன்றையுமெடுத்துப்போகப் படாதென்று வழிமறித்தாள். வீட்டுக்காரி பணவிஷயத்தில் மகா நிஷ்கண்டிகை. ஆதலால் அவ ளிஷ்டப்படி நடக்கவேண்டி வந்தது. வரவரும் அவள் பேராசை யால் அளவுக்குமிஞ்சி அதிகமாகப் பணம் கேட்டாள். இவ்வள வையும் கொடுத்துத் தீர்த்துவிட்டு தாமோதரனும் பார்த்தனும் மூட்டையைத் தூக்கிக்கொண்டு பிரயாணப்பட்டார்கள். வீட்டுக் காரி "போய்வாருகள்" என்று கூட விடையளிக்கவில்லை.

7. அத்தியாயம்.

அறன்கூறு னல்லசெயினு மொருவன்
புறன்கூறு னென்ற லினிது.

தாமோதரனும் பார்த்தனும் வழி நடந்து இடையில் ஒரு விபத்துமில்லாமல் கலசஸ்தானம் போய் அந்த ஊரில் ஒரு சத் திரத்தில் தங்கினார்கள். அந்த சத்திரக்காரன் மிக்க யோக்கியன், நல்ல மனிதன், சச்சரவு செய்யமாட்டான். அவனுடைய மனைவி

அழகாயிருந்தவன். அப்பொழுதும் ரூபவதியென்றே சொல்லப் பட்டான். அவளுடைய உருவமும் நடத்தையும் உயர்குல ஸ்திரீக ளோடு வசிக்கக்கூடியவளாகக் காணப்பட்ட போதிலும் தனது புத்திசாலித்தனத்தினால் அந்த சந்தர்ப்பத்தைவிட்டு அவள் வெளி யேறுவதில்லை. அவள் மிகவும் நன்னடக்கையுள்ள ஸ்திரீ. அய லார்க்கு உதவிபுரிவதில் மிக்க கருத்துள்ளவள்.

தாமோரனும் பார்த்தனும் சந்திரம் வந்தபோது சந்திரக் காரியாகிய வேத்திரவதி தோட்டத்திலிருந்தாள். அவன் அவனைப் பார்த்ததும் ஒரு பெரிய மனிதனென்றறிந்து அவனை ஒரு தனி அறையில் இட்டுக்கொண்டுபோய்விடும்படி வேலைக்காரருக்கு உத் தரவு செய்தாள். ராத்திரி போஜனத்திற்கு தானே சேர வந்து தாமோதரனை யழைத்து வந்தாள். சாப்பிட உட்காரும்போது சந்திரக்காரியும் பின்னும் சிலரும் அங்கே வந்திருந்தார்கள். அவர்களில் ஒருவன் தேவலிங்கப் என்னும் நியாயவாதி. (இவன் தான் பிருந்தா இறந்த சமாச்சாரத்தை ஸுவந்தாரிடம் தெரி விக்க வந்தவன். அந்த சமயம் இவன் பெயரைச் சொல்ல மறந்து போனேம்) அங்கு நியாயவாதி யென்று சொல்லிக்கொண்ட வீணன் என்கிற மற்றொருவனும் வந்திருந்தான். இவனுக்குப் புத்தி என்பதாவது கல்வி என்பதாவது மருந்துக்கும் கிடையாது. இவன் நியாயவாதிகளுடைய சபர்புஜ அறிவையும் தூக்கிப்போ டுபவன். அரைரூபாய்க்காக ஐந்தமைவானாலும் தூங்குவான். இவன் ஸுவந்தார் வீட்டுக்கு அடிக்கடி போய் அங்கிருக்கும் வேலைக் காரர்களுடன் கூடிக்குலாவி வருவன். சாப்பிட உட்கார்ந்ததும் தாமோதரனை யிதற்குமுன் பார்த்திராத ஸுபகமவனுக்கு வந் தது. அவன் ஸுவந்தார் வீட்டில் அவருடைய வேலைக்காரருக்கு மேற்பட்ட குடும்பத்தாரோடு பேசத்தெரியாதவனு யிருந்தானும் ஸுவந்தாரிடம் நெடுநாள் சேர்ந்த பழமைபோல் குசலப் பிரச்னம் செய்ய ஆரம்பித்தான். தாமோதரன் இவனை முன்னு லெப்பொழுதும் பார்த்ததேயில்லை. இவன் ஒரு அற்பன், பெரிய மனிதனைப்போல் நடிக்கிறானென்று அவனுக்கு நன்றாகத் தெரிந் தது. இருந்தும் அவன் கேட்ட கேள்விகளுக்கு மிக்க மரியாதை யோடு பதில் சொன்னான். ஆயினும் அவனுடைய முகதாவிலிரு க்கக் கொஞ்சமேனு மிஷ்டப்படாமல் சிக்கிரமே பந்தியிலிருந்து எழுந்து போய்விட்டாள். அவன் எழுந்து போனதும்

வீணன்:—(வேத்திரவதியைப் பார்த்து ரகசியமாக) இப் பொழுது எழுந்துபோனானே அவன் பெயர் தெரியுமா?

வேத்திரவதி:—அந்தப் பெரிய மனிதனை இதற்கு முன்னால் நான் பார்த்ததேயில்லை.

வீணன்:—பெரியமனிதனு ? நல்ல பெரிய மனிதன் ! இன்று குதிரை திருடியதாகக் தூக்கிடப்பட்டவனுடைய கள்ளப்பிள்ளை யாக்குமிவன். இவனைப்படியோ இவன் சிசுவாக இருந்தபோது ஆளவந்தார்வீட்டில் கொண்டுவந்து தழைத்துவிட்டார்கள். மழை தண்ணீர் நிறைந்திருந்த ஒரு தொட்டிக்குள் வேலைக்காரர்கள் இவனைக் கண்டெடுத்தார்கள். அப்பொழுதே அவன் மூச்சுத் திணறிச் சாகவேண்டியவன். வேறு விதமாக அனுபவமடையும்படிக்கு அப்போதிவன் காப்பாற்றப்பட்டான்.

தேவலிங்கம்:—நீர் அதைச் சொல்லவேண்டியதில்லை. அந்த அனுபவம் என்னவென்று நன்றாக எங்களுக்குத்தெரியும்.

வீணன்:—ஆளவந்தார் குழந்தையை எடுத்து வ[illegible]கும்படி உத்திரவு கொடுத்தார். அவர் மிக்க பயந்தவர். அன்மேல் பழிவிழு மோவென்று பயந்து அப்படிச்செய்தார். பெரியமனிதன் வீட்டுப் பிள்ளைபோலவே ஊண் உடைகள் உதவினர். அங்கே இவன் ஒரு வேலைக்காரப் பெண்ணுக்குக் கர்ப்பம் கொடுத்துவிட்டு அப்படிச் செய்தது ஆளவந்தாரே என்று சத்தியம் செய்யும்படியாக அவரையும் தூண்டிவிட்டான். தடுவாணிகளைத் தொடர்ந்து செல்லாதே என்று புத்திமதி சொன்னதற்காக தார்க்கோர் என்னும் ஆசாரியருடைய கையை முறித்துவிட்டான். பிலவங்கன் பராக்குப் பார்த்துக்கொண்டிருக்கும்போது அவனைத் துப்பாக்கியால் சுட்டான். ஒரு தடவை ஆளவந்தார் வியாதியாக இருந்தபோது அவரைத் தூங்கவிடாது ஒரு [illegible]ம்பட்டமெடுத்து வீடு முழுவதும் அடித்து ஓசை செய்தான். இதைப்போல் இன்னுமனேக துஷ்டத்தனம் செய்ததால் ஆளவந்தார் அவனுக்கு ஒரு பைசாவும் கொடாது நாலு ஐந்து நாளைக்குமுன் தன் வீட்டைவிட்டு அடித்துத் துரத்திவிட்டார்.

தேவலிங்கம்:—அவர் செய்தது மிக்க சரியானதுதான். என் சொந்தப் பிள்ளையானாலும் மீதில் பாதிக்குற்றம் செய்திருந்தால் அவனை வீட்டைவிட்டுத் துறத்தியேயிருப்பேன். இப்படிப்பட்ட பையனது பெயர் என்ன அப்பா ?

வீணன்:—பெயரா ? அவன் பெயர் தாமோதரன்.

தேவலிங்கம்:—தாமோதரனு ! ஆளவந்தாரோடு வசித்து வந்தானே அவனு ? இப்போது நம்முடன் சாப்பிட்டானே அவன் தாமோதரனு ?

வீணன்:—ஆமாம். அவனே தான்.

தேவலிங்கம்:—நான் அவனைப்பற்றி அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறேன். அவனைப்பற்றி நான் இதுவரையில் கொஞ்சமேனும் தாஷ்ணையாகக் கேள்விப்பட்டதே இல்லையே.

வேத்திரவதி:—தாமோதரனுடைய முகத்தைப் பார்த்தால் கொஞ்சமேனும் உண்மையில் திஷ்ட நடத்தையுள்ளவனாகக் காணப்படவில்லையே.

வீணன்:—சொல்வது உண்மையாகில் அவன் பெரிய பாசாங்குக்காரனாக விருக்கவேண்டும்.

வேத்திரவதி:—எனக்குத் தெரிந்தவரையில் அவர் மிக்க மரியாதையும் யோக்கியதையுமுள்ள புருஷராகவே தோற்றுகிறார்.

வீணனுக்கு இப்பொழுதுதான் தான் சொல்லியதற்குப் பிரமாணஞ் செய்யவில்லையென்று ஞாபகம் வந்தது. ஆதலால் தான் சொன்னதெல்லாம் உண்மையே யென்று அடுத்தடுத்து ஆணையிட ஆரம்பித்தான். இதைக் கேட்ட வேத்திரவதி காதில் நாராசம் விழுந்ததுபோலிருந்ததால் தான் அவன சொல்வதை நம்புவதாயும் ஆணையை நிறுத்தும்படியாகவும் கேட்டுக்கொண்டாள்.

வீணன் "ஒருவன்மேல் வீண்பழி போடமாட்டேன். அவன் என்ன எனக்குச் சத்துருவா? அவனிடமற்றி இழித்துக் கூறுவதால் எனக்கு என்ன லாபம் கிடைக்கும்? எனக்கு உண்மை தெரிந்தாலொழிய வீண்வார்த்தை பேசவேமாட்டேன். அவனை எனக்கு இதுவரையில் ஒரு தீங்கு மிழைத்தவனல்ல, அப்படியிருக்க அவன்மீது அபாண்டமாக நான் பொய் சொல்வேனா? அவன் மேல் நான் கூறியதெல்லாம் உண்மையேயென்று எங்கு வேண்டுமானாலுஞ் சத்தியஞ் செய்வேன். இந்த விஷயம் நாட்டில் எல்லோருக்கும் தெரியுமே" என்றான்.

வேத்திரவதிக்கு வீணன் சொன்னது பொய்யென்று நினைக்கக் காரணமில்லை. அவன் ஆணையிட்டுச் சொன்னதால் அவன் சொன்னதெல்லாம் மெய்யென்றே நம்பிவிட்டாள். முகத்தினால் அகத்தினழகை அறிவது சுத்தத்தவறு என்று எண்ணினாள். அவளுக்குத் தாமோதரனிடமிருந்த நல்லபிப்பிராயமெல்லாம் இருந்த விடந்தெரியாது ஓடிவிட்டது, அவன் விட்டைவிட்டுப் போகானென்றெதிர் பார்த்திருந்தாள். இந்த வெறுப்புக்கு மற்றொரு காரணமும் உண்டு. தாமோதரனுடைய வேலைக்காரன் என்று அவள் எண்ணியிருந்த பார்த்தன் தான் வழியனல்லவென்றும் தாமோதரனுடைய நண்பன் என்றும் சொல்லிவிட்டான். இதனால் தாமோதரன் பெரிய மனிதன் அல்லவென்று அனைவரும் எண்ணிவிட்டார்கள். இவைகளையெல்லாம் மௌனமாகக் கவனித்துக் கொண்டிருந்த தேவலிங்கம் நகங்களைப் பல்லால் கடித்துக்கொண்டும், முகத்தைச் சுறுக்கிக்கொண்டும், பல்லை யிளித்துக்கொண்டும் உட்கார்ந்திருந்தான். கடைசியில் வாயைத் திறந்து "தாமோதரன் பெரிய மனிதன் வீட்டுப்பிள்ளையாகவே தோன்றுகிறான்" என்று

சொன்னான். உடனே தனக்குப் பலஜோலியிருப்பதாகவும் தாம திக்கிருக்க அவகாச மில்லையென்றும் சொல்லிச் சத்திரக்காரனி டம் பணத்தையும் கொடுத்துவிட்டுப் புறப்பட்டான். வீணனும் அன்றே புறப்பட்டுப் போய்விட்டான். தாமோதரன் விருத்தாந் தத்தைக் கேட்ட சத்திரக்காரியின் நடத்தை வரவர மிக்க கடுமை யாக இருந்தது. தாமோதரனிடம் மரியாதை யில்லாதிருந்தது மன்றி அவனை அவமானப்படுத்தவும் ஆரம்பித்தாள். ஆதலால் தாமோதரன் அவ்விடத்தைவிட்டு அன்றே வேறிடம் போவ தென்று தீர்மானித்துவிட்டான். உடனே சாப்பாட்டுப் பணத்தை அவளிடம் கொடுத்துவிட்டுப் பார்த்தனுக்கு அவ்விடத்தை விட் டுப்போக மனதில்லாதிருந்தும் அவனையும் கூட்டிக்கொண்டு வேறி டம் போனான்.

8. அத்தியாயம்.

வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை யயர்கம் விருந்து.

கொஞ்சங் கொஞ்சமாக இருள் பரவியது, பக்ஷிகளெல்லாம் கூட்டில்போய் அடைந்துவிட்டன, செல்வ வந்தர்கள் தமது அறு சுவை யுண்டியை யுண்ணுங்காலமாயிற்று. காலையில் கூழ் குடித் துப் போய் நெற்றித் தண்ணீர் நிலத்தில் விழ வேலைசெய்து விடு திரும்பிய வறியோர்கள் உலைவைக்கும் நேரம். அதோ பார்! மேக த்தினின்றும் சந்திரன் வெளிக்கிளம்புகிறான். கார் காலமானதால் அவனுடைய தேஜஸை மேகங்கள் பங்கப்படுத்துகின்றன; பக லெல்லாம் கதிர்ப்பாறிபவனுதலால் மேகங்களினுடைய தடையைக் கொஞ்சமேனும் சட்டைபண்ணுது "இராமுழுதும் என்னதி காரத்தைத்தான் செலுத்துவேன்" என்று தன் பதினாறு கலைக ளோடும் சந்திரன் உலாவிவருகிறான். தாமோதரன் கொஞ்சதூரம் செல்வதற்குள்ளேயே சந்திரனுடைய அழகைக் கண்டு வியந்து பார்த்தனை நோக்கி "இவ்வளவு மனோகரமான அந்திவேளையை நீ எப்பொழுதாயினும் கண்டதுண்டா" என்று வினவினான். பார்த் தன் மௌனமா யிருந்ததால் தாமோதரன் சந்திரனைப்பற்றிக் கவிகள் வர்ணித்திருப்பதையெல்லாம் எடுத்துரைக்க ஆரம்பித் தான். தூரதேசத்தில் பிரிந்திருக்கும் இரு காதலர்களி லொருவர் சந்திரோதயத்தில் மதியைப் பார்த்து மற்றவரும் அச்சமயத்தில் சந்திரனை நோக்கி நம்மைச் சிந்தித்திருக்கலாம் என்று எண்ணி மகிழ்வார்களாம்; இதனால் காதலர்களுக்குத் தூண்டுவனும் இன்ப முண்டுபண்ணுபவனும் சந்திரனுவான். அவனை நோக்கும்போதே காதலரின் ஞாபகம் தானுகவே உதித்துவிடுகிறது. ஆதலால் தூர தேசங்களில் பிரிந்திருந்தபோதிலும் பகலெல்லாம் மனவேக்கம்

பிடித்திருக்குங் காதலர் சந்திரனைக் கண்டதும் தமது ஆசைக்குரியோர் அருகிலிருப்பதுபோல் மகிழ்ச்சியடைகிறார். இக்காதலரின் ஆர்வமே ஆர்வம்! மானுட வின்பங்களில் இதைவிட மேலான வின்பம் வேறுண்டோ?

பார்த்தன்:—நீர் சொல்வது உண்மையாக விருந்தாலு மிருக்கலாம். அக்காதலர்களுடைய சரீரம் குளிருக்குச் சகிக்காததாக அமைக்கப்பட்டிருக்கவேண்டும். எனக்குக் கைகால்கள் வெடிவெடுத்து தேகரத்தம் உறைந்து போகும்போலிருக்கிறது. வேறு திங்கு மிடம்போய்ச் சேருவதற்குள் குளிரினால் விரைத்துப் போய்விடுவேன். இந்த தேசத்திற்கெல்லாம் மிக்க மேலான சத்திரமென்று பேர்போன சத்திரத்தைவிட்டு நாம் ஓடிவந்ததற்கு இது தக்க சிக்ஷைதான். அந்த சத்திரத்தின்மீது இதுவரையில் யாரும் குறை சொன்னதில்லையே. அதைவிட்டு ஓடிவந்ததால் நம்மை சித்தப்பிரமை பிடித்தோரென்றே எல்லாரும் சொல்வார்கள்.

தாமோதரன்:—நீர் என்ன பைத்தியக்காரரு மிருக்கிறீர், பார்த்தரே. சத்துருக்களோடு சண்டை செய்யப்போகும் நாம் குளிருக்காகப் பயப்படலாமா? ஆனாலிவ்விடத்தில் பர்ணசாலை பலவாகப்பிரிவதால் நமக்குச் சரியான வழிகாட்ட ஓர்வழிகாட்டி யகப்பட்டால் நன்றாயிருக்கும்.

பார்த்தன்:—நான் தங்களுக்குப் புத்தி சொல்லட்டுமா?

தாமோதரன்:-ஆகா, எந்தவழியாகப் போகலாம் சொல்லும்.

பார்த்தன்:—இந்தரஸ்தாக்களில் ஒன்றிலும் போகக்கூடாது. நாம் இப்போது வந்தவழிதான் நமக்கு நன்றாகத் தெரியும். வேகமாய் வந்த வழியே திரும்பி நடந்துபோனால் இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் கலசஸ்தானம் போய்ச்சேரலாம். நான் சொல்வதைக் கேளாமல் வேராக நடந்து போவீரானால் எங்கு போய்ச் சேருவோமென்பது தெய்வத்துக்குத்தான் தெரியும். குறைந்தது ஐந்துமைல் தூரமாவது நடக்கவேண்டும். இடையில் ஒரு வீடுகூட கிடையாது.

தாமோதரன்:—நீர் சொல்வது நல்லதாயிற்று. இந்த நிர்மலமான சந்திரிகையில் நடந்துபோவது எவ்வளவு ஆநந்தமாக இருக்கும்! நான் இடது கைமார்க்கமாகச் சென்று பார்க்கிறேன். இது அதோ தெரிகிற மலையினிடம் கொண்டுபோய்விடும். அதினருகிற்றான் வீரஸ்தானம் இருக்கிறதென்று கேள்வி. என்னுடன்கூட வர உமக்கிஷ்டமிராவிட்டால் நீர் திரும்பி உமது ஊர்ப்போய்ச் சேரலாம். நான் வேராகப்போக நிச்சயம் செய்துவிட்டேன்.

பார்த்தன்:—நான் அப்படி எண்ணியதாக நீர் என்மேல் சந்தேகப்படுவது நியாயமல்ல. நான் உங்களுக்கு யோசனை சொன்

னது எனக்காகவல்ல. உமது நன்மைக்குத்தான். நீர் நேராகப் போவதாக நிச்சயம் செய்துவிட்டதால் நானும் உம்மைப் பின் தொடருவதாக நிச்சயம் செய்துவிட்டேன்.

இருவரும் ஒருவருக்கொருவர் பேசாது சில மைல் தூரம் சென்றார்கள். தாமோதரன் அடிக்கடி பெருமூச்செறிந்தான், பார்த்தனும் வேறு காரணத்தால் மிக்க விசனத்தோடு உறுமினான்.

தாமோதரன் திடீரென்று நின்று பின்னால் திரும்பிப் பார்த்தனை நோக்கி "இம்மண்ணுலகுக் கெல்லாம் லாவண்ணியத்தில் சிறந்த ஒருயுவதி இதே சமயத்தில் நான் பார்த்துக்கொண்டிருக்கும் சந்திரனைக் கவனித்துக்கொண்டிருந்தாலு மிருப்பாள்" என்றான்.

பார்த்தன்:— அப்படியேயிருக்கலாம், இந்தசமயத்தில் என்னை ஒரு நல்ல போஜனத்தைப் பார்த்துக்கொண்டிருக்க மாத்திரம் செய்தால் சந்திரனும் அதின் கலைகளும் எப்படிப்போனாலும் எனக்கு அக்கரையில்லை.

தாமோதரன்:—ஐயா பார்த்தரே, நீர் உமது வாழ்நாளில் காதல் என்பதையே அறியீர்போலும்? அல்லது வயதாகிவிட்டதால் அதைப்பற்றி ஞாபகமிராது போயிற்றோ?

பார்த்தன்:— காதலென்பதே எனக்குத் தெரியாதிருந்தால் நான் எவ்வளவோ சுகமாயிருந்திருப்பேன். நான் காதலின் இன்பங்களையும் துன்பங்களையும் வேண்டியவரையில் அனுபவித்தாகிவிட்டது.

தாமோதரன்:—ஆனால் உமது காதலி நும்மீது பிரியமில்லாதிருந்தாள் போலும்?

பார்த்தன்:—கொஞ்சமேனும் பிரியமில்லாது இருந்தாளையா. என்னைக் கலியாணம் செய்துகொண்டது முதல் அவள் ஒரு பெரியராக்ஷஸியாக மாறிவிட்டாள். நல்ல வேளையாக அவள் தேகவியோகமாகிவிட்டதற்கு சுவாமியை நான் எவ்வளவோ வாழ்த்திக் கொண்டிருக்கிறேன். இறந்துபோனவர்களுயிர் சந்திரமண்டலம் போய்க்கலக்கும் என்று ஒருபுஸ்தகத்தில் படித்திருக்கிறேன். அது உண்மையாயிருந்தால் சந்திரனைப் பார்க்கவும் எனக்கு பயமாயிருக்கிறது. ஆனால் நீர் இப்பொழுது சோபையினுடைய பிரதிபிம்பத்தைப் பார்க்க சந்திரன் ஒரு கண்ணாடியாக இருக்க வேணுமென்பது என் விருப்பம்.

தாமோதரன்:—எனது அருமைப்பார்த்தரே, உமது எண்ணந்தான் எப்பேர்ப்பட்டது. இப்படிப்பட்ட எண்ணம் காதலர் மனத்தில் தோன்றுமேயன்றி உம்மைப்போன்றவர் மனத்தில் எப்படியுண்டாயிற்று? அந்த முகத்தை இனி எப்பொழுதாவது பார்க்க

முடியுமா? நான் கொண்டிருந்த எண்ணமெல்லாம் ஆகாசக்கோட்டையாக முடிந்ததே. நான் எவளை எண்ணி ஆசித்த மடைக்கிருந்தேனோ அவளை இனி என் மனத்தினின்றும் அகற்றிவிட்டால் நான் துயரினின்றும் விடுபடுவது அரிது.

பார்த்தன்:—உண்மையில் சோபையை நீர் எப்பொழுதும் காணமுடியாதென்று கைவிட்டுவிட்டீரா? எனது யோசனையை மாத்திரம் கேட்டால் நீர் அவளைப் பார்ப்பது மல்லாமல் தழுவியணையும்படியாகவும் செய்வேன்.

தாமோதரன்:—அப்படிப்பட்ட எண்ணங்களைத் திரும்பவும் என் மனத்தில் கிளப்பாதே. அவ்வபிஷ்டங்களை விட்டுவிட எவ்வளவோ பிரயாசைப்பட்டிருக்கிறேன்.

பார்த்தன்:—உமது காதலியைக் கைப்பிடிக்க இஷ்டப்படாத நீர் நூதனக்காதல் கொண்டிருக்கவேண்டும்.

தாமோதரன்:—இந்த விஷயத்தைப்பற்றி இனிப்பேசவேண்டாம். ஆனால் நீர் சொல்வதாய்ச் சொன்ன யோசனை யென்ன?

பார்த்தன்:—பின்னல் திரும்பி வந்த வழியே போக வேண்டும். நேரமாகிவிட்டபோதிலும் இன்று இரவே கலசஸ்தானம் போய்ச் சேரலாம். இப்பொழுது போகும்வழியே போனால் நாம் அலைந்துகொண்டே யிருக்கவேண்டியதுதான். ஓர் ஊரையாவது வீட்டையாவது கண்டுபிடிக்க முடியாது.

தாமோதரன்:—எனது உறுதி இன்னதென்று உமக்கு முன்னாலேயே சொல்லிவிட்டேன். நீர் உமது ஊருக்குப் போகலாம், என்னோடு கூட இவ்வளவு தூரம் சேர்ந்து வந்ததற்காக உமக்கு வந்தனமளிப்பவனாயிருக்கிறேன். என் நன்றியறிதலுக்கு அறிகுறியாக இதோ இந்த ஒரு பவுனை எடுத்துச் செல்லும். இனிமேல் உம்மை அழைத்துச்செல்வது மிக்கதொடுமையாகும். எனது எண்ணமென்னவென்றால் நமது தேசத்திற்கும் ராஜனுக்கும் உழைத்துக் கீர்த்தியுடன் சாகவேண்டுமென்பதே.

பார்த்தன்:—உமது பணத்தைப் பையிலே போட்டுக்கொள்ளும். இந்த சமயம் உம்மிடமிருந்து நான் ஒன்றுமே பெற்றுக் கொள்ளமாட்டேன். இப்பொழுது நான் உம்மிலும் பணக்காரன். மேற்செல்லுவதே உமது உறுதியாதலால் உம்மைப் பின்தொடருவதே என் உறுதி. நீர் கொஞ்சமேனும் யோசனையில்லாமல் சண்டைக்குப் போய் மடிவேனென்று பிடிவாதமாய்ச் சொல்லுகிறபடியால் எனதுயோசனை உமது சாமர்த்தியத்தை விடமேலானது.

ஆதலால் உம்மை ஆபத்தினின்றும் காப்பாற்ற நான் உம்முடன் கூடியிருக்க வேண்டியதவசியம். யுத்தத்திற்குப் போகுமிடத்தில் சமாதானம் நடந்துவிடுமென்று இப்பொழுதுதான் கேள்விப்பட்ட படியால் உமக்கு ஆபத்தே நேரிடாது.

தாமோதரன்:—உமக்கு இச்சங்கதி சொன்னவர் யார்? அவர் சொன்னதை நீர் எப்படி நம்பக்கூடும்?

பார்த்தன்:—அவன் யாராயிருந்தாலென்ன? அவன் பொய் சொல்லாதவன்.

தாமோதரன்:—அதென்னவோ, சண்டை நடந்துதான் இத் தக்கலகம் அடங்குமென்று எனக்குத் தோன்றுகிறது. ஆதலால் உமக்குச்சொன்னவர் பேச்சை மூழுதும் நம்பிவிடாதேயும்.

பார்த்தன் பதில் சொல்லவில்லை. தாமோதரன் சொன்னதைக் கேட்டதும், அவனுக்குப் பயமுண்டாகிவிட்டது. உண்மையில் பார்த்தன் கலகக்காரர் கூட்டியில் சேர்ந்தவன். தாமோதரன் கலகக்காரரோடு சேரப்போகிறானென்று இதுவரையில் பார்த்தன் எண்ணியிருந்தான். இங்கம்பிக்கையடைவதற்குக் கொஞ்சம் காரணமிருந்தது. மூதலிறங்கிய சத்திரத்தில் நாதமுனியால் தாமோதரன் காயப்பட்டபோது சத்திரக்காரி ஒரு கதை கட்டிவிட்டாள். அதாவது "கலகக்காரரை அடக்குவதற்காகச் செல்லும் சைனியத்தில் ஒரு சிப்பாய் தாமோதரன் கலகக்கூட்டியைச் சேர்ந்தவன் என்றறிந்து அவனை அடித்துக் காயப்படுத்திவிட்டான்" என்றாள். இதைப் பார்த்தன் கேட்டு சத்திரக்காரி சொன்னதை முழுதும் நம்பிவிட்டான். ஆதலால் தாமோதரன் தன் அபிப்பிராயங்கொண்டவனே யென்று பார்த்தன் நம்பி அவனைப் பின்தொடர்ந்தான். இப்பொழுது உண்மை தெரிந்துங்கூட தன் சுதந்திரக்காரர்களுக்கு என்ன நேரிட்டாலும் நேரிடட்டும் தான் சுகமாயிருந்தால் போதும் என்றெண்ணித் தாமோதரனை விடாது பார்த்தன் பின் தொடர்ந்தான். ஆளவந்தார் தாமோதரனிட மிருந்த பகைத்தைப் பற்றி யாவரெல்லாம் சொல்லிக்கொண்டதினாலும், தாமோதரன் ஆளவந்தாருடைய பின்னையே என்று தான் உறுதியாக நம்பியபடியாலும், அவருக்குப்பின் தாமோதரன் தான் அவர் ஆஸ்திக்கெல்லாம் பாத்தியஸ்தன் என்று நினைத்து அவனைப்பின் தொடர்ந்தால் அவன் தன் உரிமையையடைந்ததும் தனக்கு நல்ல சுகமுண்டாகுமென்று நம்பினான். அன்றி எப்படியாவது தாமோதரனைத் தன் தந்தையிடம் போய்ச்சேரும்படியாகத் தூண்டினால் இதனால் ஆளவந்தார் தனக்குச் செய்த நன்மையை என்றுமே மதக்கமாட்டார் என்றும் கருதினான்.

9 - அத்தியாயம்.

பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை யின்மை பழி.

தாமோதரனும் அவன் நண்பனும் மேலதிகாரத்திற் கண்ட சம்பாஷணையை முடித்ததும் செங்குத்தான ஒரு மலையின் அடிவாரத்தில் வந்து சேர்ந்தார்கள். தாமோதரன் மேலேக்கிப்பார்த்துக்கொண்டு கொஞ்சநேரஞ் சும்மாவிருந்தான். பிறகு பார்த்தசாரதி விளித்து "நண்பரே! இம்மலையின் உச்சியிலிருக்க ஆசைப்படுகிறேன். இந்த வெளிய நிலவில் உயரப்போய்ப்பார்த்தால் சுற்றுப்பக்கங்களெல்லாம் எவ்வளவு ரமணீயமாயிருக்கும். சுற்றிலுமுள்ள பயிர்களிலும், மரங்களிலும், கட்டடங்களிலும், ஜீவஜந்துக்கள் மேலும் சந்திரன் தவழ்ந்து விளையாடுவது எனது வியாகுலத்தை விருத்திசெய்யும். அதுவே எனக்கு ஒருவகை இன்பமாயிருக்கும்.

பார்த்தன்:—இருக்கலாம், இம்மலையின் உச்சி உமக்கு வியாகுலத்தை விளைவிப்பதாயிருந்தால் மலையடிவாரம் சந்தோஷத்தைக் கண்டுபண்ணவேண்டும். இந்த இரண்டிலெது நல்லதென்று உமக்கே தெரியவேண்டாமா? மலையின் உச்சியில் ஏறுவதாய்ச் சொல்லும்பொழுதே என் உடம்பு சில்லிட்டு விட்டது. உலகத்திலுள்ள மலைகளிலெல்லாம் இம்மலை உயரமானது. கூடவே கூடாது, இதிலேறவேகூடாது. இக்கக்குளிரின் உபத்திரவத்திலிருந்து தப்புவதற்குப் பூமியில் சுரங்கமிருந்தால் அதிலிறங்கிப்போகலாமேயன்றி உயரவேறிப் போகவேகூடாது.

தாமோதரன்:—நீர் அப்படியே செய்யும். ஆனால் கூப்பிடு தூரத்திற்குள்ளாக உட்கார்ந்திரும். நான் மலையிலிருந்து இழிந்தகும் உம்மைக் கூப்பிடுகிறேன்.

பார்த்தன்:—உமக்கென்ன பைத்தியம் பிடித்திருக்கிறதா?

தாமோதரன்:—இம்மலைமே லேறுவது பைத்தியக்காரத்தனமானால் நான் பித்தன்தான். ஏற்கெனவே நீர் குளிரினால் அவஸ்தைப் படுவதால் நீர் இங்கேயே இரும். நான் இன்னும் ஒரு மணிக்குள் கட்டாயம் திரும்பிவந்து விடுகிறேன்.

பார்த்தன்:—தாங்கள் என்னை மன்னிக்கவேண்டும். நீர் எங்கு போனாலும் உம்மைப் பின் தொடர்வதாகத் தீர்மானித்துவிட்டேன்.

உண்மையில் எவ்விஷயத்திலும் பார்த்தன் பெரிய பயங்காளி. அதிலும் அந்த இரவில் மனுஷ சஞ்சாரமில்லாத பயங்கரமான அவ்விடத்தில் தனித்திருப்பதென்றால் எங்கேயோ பிசாசு வந்து தன்னை அடித்துப் புசித்து விடுமோவென்று நடுங்கினான். இந்த சமயத்தில் சில மரங்களுக்கிடையில் விளக்கு வெளிச்சம் பார்த்தனுக்குத் தென்பட்டது. இதைக்கண்டு ஆநந்த பரவசனாகி "நண்பரே, எனது வேண்டுகோளுக் திறங்கி கடவுள் நம்மை ஒரு விட்டுக்கருகில் கொண்டுவந்து சேர்த்து விட்டிருக்கிறார். ஒரு வேளை அது சத்திரமாயிருந்தாலும் இருக்கலாம். என்பேரிலாவது தங்கள் பேரிலாவது தங்களுக்குக் கொஞ்சமேனும் இரக்க மிருக்குமானால் கடவுள் அனுப்பிய உதவியை நிராகரியாதேயும். அதோ வெளிச்சம்தெரிகிற இடத்திற்கு நேரே நாம் போவோம். அது சத்திரமானாலும் இல்லாவிட்டாலும் அங்கிருக்கும் ஜனங்கள் நமது பரிதாப நிலைமையைக்கண்டு கமக்குத் தக்கபடி கொடுப்பார்கள்" என்றான். இவ்வளவு தூரம் நடந்து வந்து கேட்கும் பார்த்தனுடைய வேண்டுகோளுக்கிரங்கி தாமோதரன் பார்த்தனையும் அழைத்துக்கொண்டு வெளிச்சம் தோன்றிய திக்கை நோக்கிப்போனான்.

அந்தக்குடிசையின் கதவண்டை இருவரும் வந்து சேர்ந்தார்கள். தாமோதரன் பலதடவை கதவைத்தட்டியும் பதிலொன்றும் கிடைக்கவில்லை. பார்த்தனுடைய எண்ணங்களெல்லாம் பேய்களிலும் பூதங்களிலும் பிசாசங்களிலுமிருந்ததால் அவனுக்குத் தேக மெல்லாம் உதறலெடுத்து "தெய்வந்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும். உள்ளிருக்கிற சனங்கள் எல்லாம் பிணமாகக்கிடக் கிறப்போலிருக்கிறது. ஒரு நிமிஷத்திற்கு முன் எரிந்துகொண்டிருந்த விளக்கின் வெளிச்சத்தை இப்பொழுது காணோம். இந்த மாதிரி விஷயங்களைப்பற்றி நான் நிரம்பக் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்று பினாற்றினான். தாமோதரன் "நீர் என்ன கேள்விப் பட்டிருக்கிறீர். உள்ளிருக்கும் சனங்கள் நன்றாகத் தூங்கிக்கொண்டிருக்கவேண்டும், அல்லது இந்தத்தனிமையான விடத்தில் அர்த்தராத்திரியில் நாம் வந்து இடிப்பதைக் கேட்டுத் திறக்காமலிருக்கவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே உரத்தகுரலுடன் கதவைத்திறக்கும்படி உள்ளிருப்பவர்களைக் கேட்டான். ஒரு கிழவி மாடி ஜன்னலைத் திறந்து "நீங்கள் யார்? உங்களுக்கு என்னவேண்டும்?" என்று கேட்டாள். தாமோதரன் "நாங்கள் பிரயாணிகள், வழிதவறி வந்துவிட்டோம், இந்த வீட்டின் சன்னல் வழியாக வெளிச்சம் தெரிந்ததால் குளிருக்கு அடக்கமாக இடங்கிடைக்குமென்று இங்கு நம்பிவந்தோம்" என்ன, கிழவி "நீங்கள்யாராயிருந்தாலும் உங்களுக்கு இங்கு இடமில்லை. இந்த நிசிவேளையில் நான் கதவைத் திறக்கமாட்டேன்" என்றாள்.

மனுஷக்குரலைக் கேட்டதும் பார்த்தனுக்குக் கொஞ்சம்பயம் நீங்கிற்று. அவன் அக்கிழவியைப்பணிந்து தான் குளிரினால்விரைத்துப்போய் விட்டதாகவும், நெருப்பண்டை கொஞ்சநேரம் உட்கார்ந்திருக்க விடங்கொடுக்க வேணுமென்றும் பல்லைக்காட்டிக் கெஞ்சினான். அன்றியும் கூடவந்தவர் அங்காட்டிற்கெல்லாம் பிரபலமான ஒரு பிரபு என்றும் இன்னும் பலவிதங்களாய்ச் சொல்லி உள்ளே விடும்படியாக நயுந்து கேட்டான். எதற்கும் கிழவி மசியவில்லை. ஆனால் தாமோதரனுடைய ஒரு வார்த்தை காரியசித்தி செய்துவிட்டது. அதாவது பையிலிருந்து இரண்டுரூபாயையெடுத்து "இந்தா இதை வைத்துக்கொள்" என்று கொடுத்தான். பணத்தைக் கண்டதும் கிழவியின் ஆசேசுபாசமெல்லாம் பறந்துவிட்டது. நிலாவெளிச்சத்தால் தாமோதரன் உருவத்தையும் பார்த்து அவனுடைய நடவடிக்கையையுமறிந்து வந்தவர்கள் திருடர்களல்லவென்று கதவைத்திறந்து உள்ளேவிட்டாள். அங்கு மூடப்பட்டிருந்த நெருப்பினிடம் பார்த்தன் மிக்க ஆருத்தத்தோடுபோய் உட்கார்ந்தான்.

கொஞ்சம் குளிர்நீங்கி தேகத்தில் உஷ்ணம் உண்டாகியதும் பழய எண்ணங்கள் அவன்மனத்தில் தோன்றி மனதைக் கலங்கச் செய்தன. அவனுக்கு சூனியத்தில் மிக்க நம்பிக்கை. வயிறுவற்றி, எலும்பு வெளிப்பட்டு, கண்குழிந்து, பல் முன்னீண்டு, கன்னமோ ஒட்டி, நெற்றிமேடிட்டு இருந்த அக்கிழவியைக் கண்டதும் அவள் ஒரு சூனியக்காரி என்றே மதித்துவிட்டான். அவன் நம்பிக்கையை ஸ்திரப்படுத்தப் பின்னும் சில உபகரணங்களும் சேர்ந்தன. அந்தத் தனிமையானவிடத்தில் ஒருத்தியே வசித்துக்கொண்டிருந்ததும் அவ்விட்டின் வெளிப்புறம் மிக்க பயங்கரமாயிருந்ததுமன்றி உட்புறம் சுத்தமாயும் அலங்காரமாயு மிருந்ததும் சந்தேகத்தை மிகுதியு மதிகமாக்கிவிட்டது. தாமோதரனுக்கும் இது ஆச்சரியத்தை யுண்டாக்கிவிட்டது. எனெனில் அவ்வறையில் அனேக விலைஉத சாமான்கள் வைக்கப்பட்டிருந்தன. இவற்றைக் கண்டு எந்த கலாநிபுணனும் அதிசயாதிரான்.

தாமோதரன் அந்த வஸ்துக்களை வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டிருக்கும்போது பார்த்தன் தான் ஒரு சூனியக்காரி வீட்டில் வந்து அகப்பட்டிருப்பதாய் மூழுதும் நம்பி நடு நடுங்கினான். அப்பொழுது அக்கிழவி அவர்களைப்பார்த்து "ஐயா, நீங்கள் சீக்கிரத்தில் இவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டுப் போகவேணும். இப்பொழுதே என் எஜமானர் வந்துவிடுவார். நீங்கள் கொடுத்த

பணத்தைக் காட்டிலும் இருமடங்கு அதிகமாகக் கொடுத்தபோதிலும் அவருக்கு எதிரில் வைத்திருக்கமாட்டேன்" என்றான்.

தாமோதரன்:—ஆனால் உனக்கொரு எஜமானரிருக்கிறாரா? இத்த உயர்ந்த வஸ்துக்களையெல்லாம் பார்க்க எனக்கு மிக்க வியப்புண்டாகிறது.

கிழவி:—இந்த வஸ்துக்களில் ஒரு பாகமாவது என்னுடையதாக விருந்தால் நான் மிகுந்த பணக்காரியாகி விடுவேனே. இடக்கு, நீங்கள் இங்கே தாமதிக்கக்கூடாது, ஒவ்வொரு நிமிஷமும் என் எஜமானவர் வந்து விடுவாரென்று எதிர்பார்க்கிறேன்.

தாமோதரன்:-நீ எங்களுக்கு இந்த சமயம் உபகாரம் செய்ததற்காக உன்னைக் கோபிப்பாரா அவர்.

கிழவி:—அதைச் சொல்லாதே ஐயா. அவர் மற்றவர்களைப் போலல்ல, அலாதியான குணமுடையவர். அவர் ஒருவருடனும் சேருகிறதில்லை, தன்னை ஒருவரும்காணக்கூடாது என்று அப்படிச் செய்கிறார். இந்த தேசத்து ஜனங்களெல்லாம் அவரைச் சந்திக்கப் பயப்படுகிறார்கள். அவர் தரிக்கும் உடையே யாவரையும் பயப்படச் செய்யும். அவரை எல்லோரும் "பர்வத புருஷன்" என்று அழைக்கிறார்கள். பூதத்தைக் காட்டிலும் இவரிடம் ஜாக்கிரதை களுக்குப்பயம் அதிகம். அவர் உங்களை இங்கே பார்த்தால் அதிகமாகக் கோபித்துக்கொள்வார்.

பார்த்தன்:—நண்பரே! நாம் அவருடைய கோபத்திற்கு இடந்தரவேண்டாம். என்னால் இப்பொழுது எவ்வளவு தூரமானாலும் நடக்கமுடியும். எனக்கு குளிர் என்பது இப்பொழுது கிடையவே கிடையாது. ஆதலால் உடனே புறப்பட்டுப்போய்விடுவோம் வாருங்கள். அதோ இரண்டு பிஸ்தோல் வைக்கப்பட்டிருக்கின்றனவே அவைகள் மருந்து கெட்டிக்கப்பட்டிருந்தால் மிருக்கும். பர்வத புருஷன் வந்தால் எடுத்து நம்மைச் சுட்டுவிட்டாலும்விடுவார்.

தாமோதரன்:—நீர் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம் பார்த்தரே. உமக்கு ஆபத்துவராமல் நான் காக்கிறேன்.

கிழவி:—அவர் ஒரு நிமிஷமும் செய்கிறதில்லை. ஆனால் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள ஏதேனும் ஒரு ஆயுதம் வைத்திருக்கவேண்டுமன்றோ? இந்த வீட்டில் அடிக்கடி திருடர் புகுந்திருக்கிறார்கள். கொஞ்ச நாளைக்கு முன்தான் இங்கே திருடர்கள் வந்த சப்தம் கேட்டோம். இந்த நிசி வேளையில் எவனாவது ஒரு துன்மார்க்கன் அவரைக்கொன்று போட்டுப் போய்விடப்போகிறானே என்று

எனக்கு பயந்தான். ஆனால் ஜனங்களுக்கெல்லாம் அவரிடத்தில் பய மூண்டு. அன்றியும் எடுத்துக்கொண்டு போகக்கூடிய வஸ்து அவரிடம் ஒன்றுமே இல்லை என்று நினைக்கிறார்கள் போலும்.

தாமோதரன்:—இந்த அபூர்வமான வஸ்துக்களையெல்லாம் சேகரித்து வைத்திருப்பதால் உனது எஜமானர் தேசாந்தரப் பிரயாணம் செய்திருப்பவர் என்று தோன்றுகிறது.

கிழவி:—ஆமையா, அவர் பிரயாணம் செய்யாத இடங்கிடையாது. அவரைப்போல் லோகவிஷயம் தெரிந்தவர் வேறு ஒருவருமில்லை. அவர் ஒருவேளை காதலில் ஏமாந்திருக்கவேண்டும், அல்லது வேறு எவ்வித வியாகூலமோ அவரை ஆட்டிவருகிறது. அவரோடு நான் சென்ற மூப்பது வருஷகாலமாக இருந்து வருகிறேன். ஆறு மனிதர்களோடு அவர் சம்பாஷித்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நீங்கள் உடனே புறப்பட்டுப் போய்விடுங்கள். நீங்கள் இங்கிருந்தால் எனக்கும் உங்களுக்கும் ஆபத்து உண்டாகும்.

அவளுடன் பார்த்தனும் சேர்ந்துகொண்டு பிரயாணஞ்செய்யத் தூண்டப்படுத்தினன். ஆனால் தாமோதரனுக்கு அந்த வேடிக்கைச் சாமான்கள் மேலேயே கண்ணாயிருந்ததால் அவற்றைப்பார்த்துக்கொண்டே காலதாமதம் செய்தான். அன்றியும் அந்த அசாதாரணமான மனுஷனைப் பார்க்கவேண்டுமென்கிற பெரும் அவாவினுக்கு உண்டாயிற்று. அக்கிழவி இவன் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லிமுடித்ததும் உடனே அவ்விடத்தை விட்டு அகலும்படி வற்புறுத்தினள். பார்த்தனும் தாமோதரன் கையையும் துணியையும் பிடித்துப்பிடித்து இழுத்துப்பார்த்தான். தாமோதரன் பர்வதபுருஷன் வீட்டுக்குத் திரும்பிவரும்வரையில் தாமதித்திருப்பதற்காகப் புதுப்புது கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருந்தான். கடைசியில் கிழவி தன் எஜமானுடைய வருகைக்கு அடையாளம் காதில் படுவதாகச் சொன்னாள். அதேசமயத்தில் இரண்டு சூரல்கள் வாயிற் கதவுக்கு வெளியே "இதே நிமிஷத்தில் உனது பணமிருக்கிற விடத்தைக் காட்டுகிறாயா உன்னைக் கொன்று விடட்டுமா? பணத்தைக் கொடுக்காவிட்டால் உன்னைச் சுட்டுவிடுகிறோம் பார்" என்று சப்தம் கேட்டது. கிழவி "ஏ, ஈஸ்வரா, நான் என்ன செய்வேன், யாரோ திருடர்கள் என் எஜமானரைப்பிடித்து வதைக்கிறார்களே, நான் என்னசெய்யட்டும்" என்று கதறினள். தாமோதரன் "என்ன! என்ன! இந்த பிஸ்தல்கள் கெட்டிக்கப்பட்டிருக்கின்றனவா"? என்று கிழவியைக்கேட்டான். உள்விருப்பவர்கள் வெளித்திருடர்களின் கூட்டத்தைச்சேர்ந்தவர்கள் என்று கிழவி நம்பிவிட்டாள். ஆகலால் அவள தாமோதரனைப்பார்த்து "ஐயா அந்த பிஸ்தல்களில் ஒன்றுமில்லை. விளை எங்களைக்

கொல்லாதீர்கள்" என்று கெஞ்சினாள். தாமோதரன் பதில் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அந்த அறையில் தொங்கவிட்டிருந்த ஒரு பழைய பெரும்வாளை யெடுத்துக்கொண்டு கதவைத்திறந்து வெளியே ஓடிவந்தான். அங்கு இரண்டு கிராதகர்கள் ஒரு கிழவனைப்பிடித்து இம்சிப்பதையும், அக்கிழவன் தன்னை உயிருடன் விடும்படிக்குக்கெஞ்சிக் கொண்டிருப்பதையும் பார்த்தான். தாமோதரன் ஒரு கேள்வியும் கேட்காமல் வாளைச்சுழற்றி திருடர்கள் மேல் வீசினான். திருடர்கள் பிடியை விட்டு விட்டு ஓட்டம்பிடித்துத் தப்பித்துக்கொண்டார்கள். தாமோதரன் அவர்களைப் பின் தொடரப்பிரயத்தனப்படவில்லை. ஆனால் அக்கிழவனைக்காப்பாற்றியதோடு திருப்திபடைந்தான். கீழே விழுந்திருந்த கிழவனிடம் ஓடி அவனைத்தூக்கி அக்கிராதகர்களால் ஏதேனும் தீங்கு நேர்ந்ததோ வென்று வினவினான். கிழவன் சில நிமிஷம் தாமோதரனை உற்றுப்பார்த்துவிட்டு "இல்லை ஐயா, எனக்குத் தீங்கு ஒன்றும் நேரவில்லை, தெய்வம் தான் என்னைக்காப்பாற்றவேண்டும்" என்றார். தாமோதரன் "நான் உம்மை உமது சத்துருக்களினின்றும் விடுவித்தும் என்மேல் நீர் சமுசயப்படுவதாய்த் தெரிகிறது. அதற்காக உம்மை நோவதில் பயனில்லை. இப்போது இங்கிருப்பவர்கள் உமது மித்திரர்களே யென்றறியும். இந்தக்குளிர்ந்த இரவில் வழி தப்பிப்போனபடியால் நாங்கள் உங்கள் வீடுவந்து கொஞ்சநேரம் குளிர்காய்நேர்ந்தது. நாங்கள் திரும்பிப்போகும் சமயத்தில் நீர் ஒத்தாசைக்காகக் கூவிய சப்தம் காதில் பட்டது. கடவுள் தான் எங்களை உமக்கு ஒத்தாசைசெய்ய அனுப்பியிருக்கவேண்டும்" என்ன கிழவர் "நீர் உண்மையில் எனக்கு ஒத்தாசை செய்யவந்திருந்தால் கடவுள் தான் உம்மை அனுப்பி இருக்கவேண்டு மென்பதில் சந்தேகமில்லை. என்ன தாமோதரன், "அப்படித்தான், அதுதான் உண்மை, இத்தாரும் உம்முடைய வாள், உம்மைக்காப்பாற்றும் பொருட்டு அதையெடுத்து உபயோகித்தேன், இப்பொழுது அதை உம்முடைய கையிலேயே திருப்பிக்கொடுக்கிறேன்" என்றான். பகைவருடைய ரத்தத்தோய்ந்திருந்த அந்தவாளைக் கிழவன் வாங்கிக்கொண்டு கண் கொட்டாமல் தாமோதரனைக் கொஞ்சநேரம் பார்த்துவிட்டு பிறகு பெருமூச்செறிந்து "வாலிபரே நீர் என்னை மன்னிக்கவேண்டும். நான் எப்பொழுதும் சந்தேகிக்கும் இயல்புடைய வனல்ல. நன்றியை மறப்பவனுமல்ல" என்றார். தாமோதரன் "அப்படியானால் உம்மை ஆபத்திலிருந்து காப்பாற்றிய கடவுளுக்கு வந்தனமுள்ளவராகவிரும். நான் மனிதன் செய்யவேண்டிய கடமையைத்தான் செய்தேன், வேறு எந்த மனுஷன் உம்முடைய நிலைமையிலிருந்திருந்த போதிலும் அவனுக்கும் இதே மாதிரி உபகாரம் செய்திருப்பேன்" என்றான் கிழவர். "ஆனால் உம்மை இன்னும் கொஞ்சநேரம் உற்றுப்பார்க்கிறேன். நீர் மனுஷர்தானா? ஆம்

அப்படித்தானிருக்கவேண்டும். தயவு செய்து எனது குடிசைக் குள் வாரும். நீர் தான் என்னைக் காப்பாற்றியவர்" என்றார்.

கிழவிக்குத் தன் எஜமானர் வந்தால் தன்னை என்ன செய்வா ரோ என்றிருந்த பயமும், அவருக்கு என்ன ஆபத்து நேரிட்டதோ என்றுண்டாய பயமும் மனத்தைக் கலங்கச் செய்தன. பார்த்த னுக்குப் பெருங்கிலி பிடித்து விட்டது. கிழவர் தாமோதரனிடம் அன்புடன் பேசுவதைப்பார்த்தும், நடந்த விஷயத்தைத் தெரிந்து கொண்டும் கிழவி சமாதான மடைந்தாள். பார்த்தலை அக்கிழ வரைப்பற்றி கிழவி வர்ணித்திருந்ததை யெண்ணித் திகிலடைந் திருந்தான். அதிலும் கதவண்டைக் கூக்குரலிட்டதைக் கேட்டுத் தேகமெல்லாம் ஒடுங்கிப்போயிருந்தான். அதோடு கிழவரையும் அவரது உடையையும் கண்டதும் அவனுக்குப் பெருங் கிலி பிடித்து விட்டது. உண்மையில் அந்த உருவத்தைப்பார்ப்பவர்கள் பார்த்தனைவிடத் தைரியசாலிகளா யிருந்தாலும் பயப்படாதிரார். இக்கிழவர் ஆறடி அடிக்கு மேற்பட்ட உயரமுடையவர். பனிக் கட்டியைப்போல் வெளுத்திருந்த அவரது தாடி இடுப்பு வரை யில் தொங்கிற்று. அவரது தேகம் அங்கிபோல் தைக்கப்பட்டி ருந்த ஒரு மிருகத்தோலினால் போர்க்கப்பட்டிருந்து. முழங்கால் வரையில் மூடிய பாதரக்ஷை போட்டிருந்தார். தலையிலும் ஒரு விதக் குல்லாய் அணிந்திருந்தார். இவ்விரண்டும் ஒரு பிராணியின் தோலினாலேயே செய்யப்பட்டிருந்தன. இப்படி அலங்கரிக்கப்பட் டிருந்த கிழவர் வீட்டிற்குள் நுழைந்ததும் திருடர்களிடமிருந்து தப்பித்து வந்ததற்குக் கிழவி உபசரணை செய்தாள். அதற்குக் கிழவர் "இந்த ரக்ஷசர் சமயத்தில் வந்ததினாற்றான் நான் தப்பித் துக்கொண்டேன்" என்றார். கிழவி "கடவுள அவருக்குக் கிருபை செய்யட்டும். அவர் ஒரு நல்ல பிள்ளை யென்று நிச்சயமாய்ச்சொல் லுவேன். நான் அவரை வீட்டிற்குள் விட்டதற்குத் தாங்கள் என் னைக் கோபித்துக்கொள்வீர்கள என்றெண்ணினேன். நிலாவெளிச் சத்தில் அவரைக்கண்டதும் அவர் மிக்க சன்மார்க்கர்போற் றோன் றியபடியாலும் குளிரினால் விரைத்துப்போயி ருந்ததாலும் அவரை யுள்ளே யழைத்துக் கொண்டேன். அவரை யிங்கே யனு ப்பி என்னை யுள்ளே அழைத்துக் கொள்ளும்படி தூண்டியது உமது குலதேவதையாகத்தானிருக்கவேண்டும்" என்றாள். கிழவர் "(தாமோதரனைப்பார்த்து) சிறுவரே! உமக்கு இந்த சமயத்தில் புசிக்கவாவது குடிக்கவாவது கொடுக்க ஒன்றுமில்லை. சென்ற மூப்பதுவருஷகாலமாகச் சேர்த்து வைத்திருக்கும் மதுவிருக்கி றது. அதில் கொஞ்சம் சாப்பிடுகிறீர்களா" என்று கேட்டார்.

தாமோதரன்—மிக்க மரியாதையோடு வேண்டாம் என்று சொல்லிவிட்டான்.

கிழவர்—நீர் எங்கு போவதாகப் புறப்பட்டீர்? உம்மைப் போல் சிறுவர் இந்த இரவில் கால்நடையாக வழிப்பயணம் போவது ஆச்சரியமாக இருக்கிறது. நீர் அருகாமையிலிருக்கும் ஓர் பெரிய மனிதர் பிள்ளையாகத்தோன்றுகிறீர். குதிரையில்லாமல் அதிக தூரம் வழிநடை செய்பவராகத் தோன்றவில்லை.

தாமோதரன் : — வெளித்தோற்றம் பெரும்பாலும் ஏமாற்றிவிடும். ஜனங்கள் தென்படுவதுபோலவே உண்மையிலிருப்பதில்லை. நான் இந்த தேசத்தைச் சேர்ந்தவனல்லவென்று உறுதியாகச் சொல்லுவேன். நான் இப்போது எங்கே போய்க்கொண்டிருக்கிறேன் என்பது எனக்கே தெரியாது.

கிழவர்—நீர் யாராக விருந்தாலும் எங்கு போகிறவராயிருப்பினும் என்னால் ஈடுசெய்யக்கூடாதபடி எனக்கு உபகாரம் செய்துவிட்டீர்.

தாமோதரன் — நான் ஒன்றும் அதிகமாகச் செய்துவிடவில்லை யென்று திரும்பவும் சொல்கிறேன். நான் என் உயிரை வெறுத்து அற்பமாக யெண்ணியிருக்கிறேன். அப்படிப்பட்ட உயிரை உமக்கு உபகாரம் செய்து இழக்கத்துணிந்ததில் ஒரு கீர்த்தியுமில்லை.

கிழவர்—உமது இளம்பிராயத்தில் உமது உயிரை வெறுக்கும்படி அவ்வளவு அதிருப்தியடைந்திருப்பதைக் கேட்க எனக்கு மிக்க வருத்தமாயிருக்கிறது.

தாமோதரன்—என்னைப்போல் தூர்ப்பாக்கிய முள்ள மனிதன் உலகத்தில் கிடையாது.

கிழவர் — உமக்கு ஒரு ஆப்தனேனாவது அருங்காதலியாவது இருந்திருக்கவேணுமென்று எண்ணுகிறேன்.

தாமோதரன்—அவ்விரண்டு பேர்களும் எனக்கு இவ்வளவு தூர்ப்பாக்கியத்தை விளைவிக்கும்படியானவர்களா யிருப்பார்களா?

கிழவர்—இவற்றில் ஒருவரே வேண்டிய வியாகூலத்தை யுண்டுபண்ணி விடுவார். ஆனால் உம்முடைய ரகசிய சங்கதிகளை நான் விசாரிப்பது தவறு தான். நான் கேட்கக்கூடாத கேள்விகளைக் கேட்டு விட்டேன், மன்னிக்கவேண்டும்.

தாமோதரன்:—"என் மனத்தில் இந்த சமயத்தில் உண்டாயிருக்கும் ஒருஆவலை என்னால் மறைக்கக்கூடவில்லை. இந்தவிட்டுக்கு

வந்ததுமுதல் இங்கே பார்த்த வஸ்துக்களும் கேட்ட விஷங்களும் எனது ஆவலை மிக்க அதிகப்படுத்தி விட்டன. தாங்கள் இவ்விதமாக வாழ்நாளைக் கழித்து வருவதற்கு ஏதோ அசாதாரணமான காரணமிருக்கவேண்டும். தங்களுடைய காலத்தில் தாங்களும் ஏதோ தூர்ப்பாக்கியம் அடைந்திருப்பதாகத் தோற்றுகிறது.

கிழவர்—கொஞ்சநேரம் மௌனமாயிருந்தார். பிறகு பெருமூச்சுவிட்டார். தாமோதரனை ஆவலுடன் உற்றுநோக்கி "சுந்தரவதனம் யோக்கியனுக்கு அழிருமி" என்று படித்திருக்கிறேன். அது உண்மையானால் உம்மைவிட யோக்கியன் ஒருவனும் எனக்கு அகப்படமாட்டான். நீர் எனக்குச் செய்த உபகாரத்திற்காக உம்மேல் எனக்குப் பற்றில்லாவிட்டால் என்னைப்போல் இருதக்ஞையற்றவன் வேறு இரான். ஆதலால் வார்த்தையினாலாவது எனது நன்றியறிதலைக் காட்டுகிறேன்.

தாமோதரன்:—(கொஞ்சநேரம் சும்மாயிருந்துவிட்டு) நான் அது தான் வேண்டுகிறேன். நான் முதலிலேயே என் மனத்தில் ஒரு ஆவல் ஜனித்திருப்பதாகச் சொன்னேனல்லவோ? அதைப் பூர்த்திசெய்து வைத்தால் நானும் உமக்கு மிக்க வந்தனமுள்ளவனாயிருப்பேன். தங்களுக்கு ஏதாவது ஆகேஷபனை இருந்தாலன்றி தாங்கள மனுஷ சமூகத்திலிருந்தும் எனிப்படி விலகித் தனிவாசம் பண்ணிவருகிறீர்? பிராயமிலேயே இவ்விதவாழ்க்கையில் அமர்ந்திருப்பீர்கள் என்று நம்புவதற்கில்லை.

கிழவர்:—நீர் எனக்கு உயிர்தந்ததற்குப் பிறகு உம்மிடம் ஒன்றும் ஒளிக்க எனக்கு இஷ்டமில்லை. ஆதலால் ஓர் நிர்ப்பாக்கியனுடைய கதையைக் கேட்க உமக்கு இஷ்டமானால் நான் சொல்லுகிறேன். மனுஷ்ய சமூகத்தினின்றும் விலகிவந்தவர்களிடம் ஏதோ விசேஷமிருக்குமென்று நீர் எண்ணியது நிஜந்தான். ஜனோபகாரத்தின் பொருட்டே மனுஷ சங்கத்தினின்றும் விலகி மனுஷரைப் பகைப்பதுமுண்டு. பொறுமை, வன்மை, துரோகம், கொடுமை, இன்னுமுள்ள துர்க்குணங்கள் மனுஷனிடம் இருப்பதைக் கண்டு அவனுடன் சகவாசம் செய்ய மனங்கொள்ளாது ஏகாந்தத்தை விரும்புபவருமுண்டு. ஆனால் உம்மிடம் எனக்கு வெறுப்பாவது பகையாவது இல்லாததினாலும் நீர் எனக்கு அனுகூலராக இருந்ததினாலும் என் கதையைச் சொல்லுகிறேன்.

10. அத்தியாயம்.

உறவது சேர்தற்கு கட்பும் பெறவது
கொள்வாருங் கள்வரு மேர்.

நான் சம்ராஷ்டர் தேசத்தில் மார்க்கம் என்னும் ஊரில் பிறந்தேன். எனது தகப்பனார் ஓர் யோக்கியமான குடித்தனக்காரர். அவருக்கு வருஷத்தில் 450-பவுன் கிடைக்கும்படியான ஆஸ்தி சொந்தமாக விருந்தது. அதேவருமானம் கிடைக்கும் படியான வேறு ஐவேஜியையும் குத்தகை யெடுத்திருந்தார். அவர் மிக்க உழைப்பாளி. சாமார்த்திய முடையவர், அவருக்கு சுகமாக ஜீவனம் செய்தவரை வழியிருந்தது. ஆனால் அவருக்குக் கிடைத்த பெண்சாதியோ ஒருபெரிய ராக்ஷஸி. சம்சாரத்தில் அவருக்கு சுகமென்பதே யில்லாமல் செய்துவிட்டாள். இதனால் அவர்மிக்கவியாகுல மடைந்தபோதிலும் வறுமை யடையவில்லை. அவள் சொல்லும் அவதூறுகளைக் கேட்டுக்கொண்டாவது அவளை வீட்டுக்குள் வேயேஅடைத்து வைப்பாரேயன்றி இஷ்டப்படிவெளியேபோய் வீண்செலவுசெய்ய விடங்கொடுக்க மாட்டார். இந்தத்தாடகையிடம் அவருக்கு இரண்டு பிள்ளைகள் உண்டானார்கள். அதில் நான் இளையவன். என்தகப்பனார் எங்களிருவருக்கும் நன்றாக வித்தையைக் கற்பிக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்தார். என் தாய்க்கு என் தமயனிடம் அதிகப்பிரியம். அவன் அவள் பேச்சைக் கேட்டுக்கொண்டு படிப்பை கவனியாதிருந்தான். ஐந்தாறு வருஷம் கலா சாலையிலிருந்தும் அவன் கொஞ்சமேனும் தேர்ச்சியடையாமலிருந்ததால் உபாத்தியாயர் அவனை இனிப் பாடசாலைக்கு அனுப்புவதில் பிரயோசன மில்லையென்று என் தகப்பனாரிடம் சொன்னார். அவனது மௌடீகத்திற்கும் சோம்பேறித் தனத்திற்கும் தகுந்தபடி உபாத்தியார் சிக்ஷிக்காதிருந்தாலும் அவன் தாயிடம் போய் அநியாயமாக உபாத்தியார் தன்னை அடித்துக் கொல்வதாக முறையிடுவான். இப்பொழுது உபாத்தியாயர் அவனைப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்புவதில் பயனில்லை என்று சொன்னதும் தாய்மகிழ்ந்து பையனை அழைத்துத் தன்னிடம்வைத்துக்கொண்டாள். இதைக் கேட்ட பார்த்தன் "ஹும் ஹும், நான் அப்படிப்பட்ட தாய்மாரைப் பார்த்திருக்கிறேன். என்னையும் என் தாயார் அநியாயமாக அப்படித்தான் கெடுத்துவிட்டாள். கெட்ட பிள்ளைகளுக்கு சிக்ஷை விதிப்பதற்குப் பதிலாக அவர்கள் பெற்றோருக்கு சிக்ஷைவிதிக்கவேண்டும்" என்றான். இவன் இப்படித் தடைசெய்ததற்காக தாமோதரன் அவனைக் கடிந்தான். கிழவர் திரும்பவும் தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தார். "என் தமயன் பதினைந்து வயதில் படிப்பையெல்லாம் விட்டுவிட்டுத் துப்பாக்கியும் நாயுமாய் வேட்டையிலேயே கவனமாயிருந்தான். எவ்விடத்திலிருக்கும் குருவியையும் தவறுமல் சுட்டுவிடும்படியான சாமர்த்தியம் அவனுக்குண்டாகிவிட்டது. ஒரு காக்கையைப் பறந்துகொண்டிருக்கும்போதே அவன் சுட்டுவிடுவான். வேட்டையாடுவதில் மகா கெட்டிக்காரன் என்று பெயர் பெற்றான். இந்த கீர்த்திக்காக அவனும் என் தாயாரும் மிக்க மகிழ்ச்சியடைந்தனர்.

நான் கல்வியிலிகக ஊக்கமும் விருப்பமு மூள்ளவன். மே லும் மேலும் படிக்வே எனக்கு வித்தை சுலபமாகவும் ஆநந்த மாகவு மிருந்தது. வீழுறைநாள்கள் வந்தால்தான் எனக்கு மகிழ் ச்சியிராது. என்தாயர் என்னைக் கொஞ்சமேனும்விரும்புவதில்லை. என் தந்தைக்கு என்மீது அதிகப் பிரியமிருப்பதை யறிந்ததினை லும் ஊரிலுள்ள கல்மான்களெல்லாம் என் தமயனைவிட எனை அதிகமாக மெச்சி வருவதைக் கண்டும் என்தாய் என்னை வெறு த்துப் பகைக்கலானாள். ஆகையினல் நானடைந்த துக்கத்திற்குக் கணக்கில்லை. பாடசாலைப் பிள்ளைகள் சனி ஞாயிறுகளில் விட்டில் சுகமாகக் காலங்கழித்துவிட்டு திங்கள்கிழமை காலாலே போவ தென்றால் மிக்க வருத்தப் படுவார்கள். எனக்கோ திங்கள் கிழமை யைப்போன்ற மிக்க சந்தோஷகரமான நாள் கிடையாது. பிரை மெரி பரீக்ஷையான துமேற்படிப்புக்காக யாகபுரத்திற்கு நான் அனுப்பப்பட்டேன். அங்கே நாலுவருஷம் இருந்தேன். அப் பொழுது நேர்ந்த ஒரு சம்பவத்தால் நான் மேலே படிக்க முடியா மல் கலாசாலையை விட்டுவந்துவிடியாயிற்று.

•

என்னுடன்கூட அந்த கலாசாலையில் கிரீசன் என்கிற ஒரு பையன் படித்து வந்தான் அவன் ஏராளமான ஆஸ்திக்கு உரி யவன். அவன் தகப்பனர் எழுதிவைத்த உயிலில் அவனுக்கு 26-வயது ஆனபிறகு தான்அவன் அச்செல்வத்தை யடையக்கட வனென்றிருந்தது. ஆனல் அவனுடைய காரியன்கள் அவன் செலவுக்குக் கேட்டதையெலாம் கொடுத்துவந்ததால் அவன்பண த்திற்கு முட்டுப்படவில்லை. அவன் கலாசாலையில் படித்துவரும் போது அவனுக்கு வருஷம் 500 பவுன் காரியன்கள் கொடுத்து வந்தார்கள். இத்துடன் அவர் கடன் வாங்கியாவது கூட 10000 பவுன் செலவழிப்பான். அவன் அனேக குதிரைகள் வைத்திருந் தான். கூத்திக்கும் குறைவில்லை. நீக்கமுடியாத தன்மார்க்கத்தி லிறங்கியிருந்தான். இவனுடைய தூர்குணங்களில் அதிகிரா தகமானது ஒன்றிருந்தது. இவனிடச் செல்வம் குறைவுள்ள சிறு வர்களைத் தன்மார்க்கங்களுக்கு இழுத்துக்கொண்டு அவர்களையும் அளவுக்கு மிஞ்சி செலவழிக்கச்செய்வான். அதிலும் வசதியில் எவன் புத்திசாலியாகவும் யோக்கியனகவும் இருக்கிறானோ அவ னைக் கெட்டவழியில் இழுத்து அவன் அழிவுக்குக்காரணமாயிருப் பதில் இவனுக்கு மெத்த ஆநந்தம். பாவமே உருவெடுத்து வந்த இவன் யாரைக்கெடுக்கலாம என்று ஆள்பார்த்துத் திரிந்து வரு வான்.

எனது துரதிஷ்டத்தினல் இவனது வலையில் நானும் சிக்கிக் கொண்டேன். நான் படிப்பில் கெட்டிக்காரனென்று பெயர்பெற்ற தினல் என்னையும் தனது மோசத்திற் குள்ளாக்கி விடவேண்டு

மென்று நெடுகாளாக இலன் கருதிபிருந்தார். நான் படிப்பில் அதிக கவனமாயிருந்தபோதிலும் வேறு விதத்திலும் சுகம் தேடினேன். பேராசை பிடித்திருந்ததன்றிச் சிறின்ப விஷயங்களிலும் நான் அதிக சபலசித்த முடையவனாயிருந்தேன். கிரீசனுடன் சினேகமாகி வெகு நாளாவதற்குள் அவனுடைய சேஷ்டைகளெல்லாம் நானும் கற்றுக்கொண்டேன். துஷ்டனத்தில் இரங்கியதும் அதிலும் நானே சமர்த்தனாயிருக்கவேணுமென்று எண்ணினேன். அப்படியே துன்மார்க்கத்திலெல்லா எனது செய்கையே மிக்க சாமர்த்தியமுள்ளதாயிருக்கும். சண்டைகளிலும் சச்சரவுகளிலும் என் பெயரே முதலில் சொல்லப்படும். கிரீசனால் நான் கெடுக்கப்பட்டதுபோக நானே அபிவிருத்திக்கு வரக்கூடிய அச்சிறுவனைக் கெடுத்து துன்மார்க்கத்தில் ஆழ்ததுச் சென்றதாகக் குற்றம் கூறப்பட்டேன். சர்வகலாசாலையின் தலைவர் இது தெரிந்து என்னை நன்றாகக் கண்டித்தார். நல்லவேளையாக கலாசாலையினின்றும் அப்பொழுது நீக்கப்படாமல் தப்பினேன்.

இவ்வித நடத்தையில் கல்வியில் நான் எப்படித் தேர்ச்சியடையக்கூடும்? மாயவின்பங்கள் முதிராமுதிர படிப்பில் கவனமேயில்லாது போயிற்று. இதுதான் தர்சகவாசத்தின் உண்மைப் பலன். இது மாத்திரமோ? என் தந்தை இதுவரையில் அனுப்பி வந்த பணம் என் ஷியர்த்தச் செலவுகளுக்குப போதாது போனதால், பி. ஏ. பரீக்ஷைக்குக் கட்டணம் கட்டவும் இதர செலவுக்கும் அதிக பணம் வேண்டுமென்று பொய்சொல்லி அதிகமாகப் பணம் தருவித்துக்கொண்டேன். இப்படி அடிக்கடி பணம் கேட்டதினாலும் கடவைக்குக் கடவை அதிகப் பணத்திற்கு எழுதிய தாலும் என் தந்தைக்கு சந்தேகம் உற்று அவ்வூரில் தனக்குத் தெரிந்த சினேகிதர்களிடம் என்னுடைத்தையைப்பற்றி விசாரிக்கலானார். அவர்கள் எல்லோரும் எனக்குப் பிரதிகூலமாகவே பதில் எழுதினர்கள். இத்துடன் என் தாயும் எனக்கு விரோதமாகப் புகார்செய்யலானாள். "இவன் நமது குடும்பத்தை கௌரவிக்கப் பிறந்த விதமவான். இவனால் நமது குடும்பத்தை அபிவிருத்தி செய்யும் பெரிய மனிதன். அவன் படிப்பெல்லாம் என்னமாய் முடியுமென்று எனக்கு அப்பொழுது தெரியும். இவன்தான் நமது குடும்பத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பு. சர்வகலாசாலையில் இவன் கல்வியைப் பூர்த்திசெய்யும்பொருட்டு இவன் தகப்பனுக்கு வேண்டிய செலவுகளுக்குக கூடக் கொடுக்காமல் பணம அனுப்பி வந்ததற்கு இது தான கைம்மாறு. இந்தப் பிரதியைத்தான் அவன் செய்வான் என்று வெகு நாளைக்கு முன்னாலேயே தெரியும்" என்று இவ்விதமாக அவள் வெகுதூரம் ஓர் உபன்னியாசம் என் தந்தைக்குச் செய்தாள். என் தகப்பனார் அன்று முதல் நான் பணத்திற் கெழுதினால் என்னைத்தூற்றிப் பதில் எழுது

வார். கிரீசனுடு சேர்ந்த நான் என் தகப்பனருடைய ஆஸ்தி யெல்லாம் கிடைக்திருந்தபோதிலும் கொஞ்ச நாளைக்குள் அதை இருந்த இடம் தெரியாது போக்கடித்திருக்கமாட்டேனு ? இந்த சமயத்தில் நான் பணத்திற்காக அவஸ்தைப்பட்டதால் அப்பொ ழுதாவது புத்தி வந்து என் படிப்பில் கவனத்தைச் செலுத்தி யிருக் கவேண்டும். ஆனால் கிரீசனுடன் சேர்ந்த பிறகு அவன் என்னை நல்ல வழியில் திரும்ப விடுவானு ? ஒருவன் அடியோடு நாசமான பிறகு தன்னோடு கூட போட்டிபோட்டுக்கொண்டு இன்பம் துகரக் கருதிய மடயன், டம்பாசாரி யென்று அவனைக் கேலி பண்ணு வான். ஆனால் நாசமாகும் வரையில் ஒருவனுக்குக் கொஞ்சங் கொஞ்சமாகக் கடன் கொடுத்துக்கொண்டு வந்து அவன் நல்வழி யில் திரும்பாதபடி செய்வான். இவ்விதமாக எனக்குக் கடனும் ஏறிட்டது. எந்த அதிருத்தியஞ் செய்தாவது இந்தக் கடன் அவ ஸ்தையினின்றும் நீங்கினால் போதுமென்று யோசித்தேன். சற் கொலைசெய்துகொள்ளலாம் என்று கருதினேன். அப்படியே செய்துவிடுவதென்று நிர்மானித்தும் விட்டேன். அந்த சமயத்தில் அதைவிட வெட்கக்கேடானதும் அவ்வளவு பாபகரமில்லா ததுமான ஒரு எண்ணம் தோன்றி தற்கொலை செய்துகொள் வதை நிறுத்திவிட்டது. இவ்வளவு வருஷங்களாகியும் நான் அன்று செய்த செய்கையின் வெட்கம் இன்னும் என்னைவிட்ட கலவில்லை. நான் அதைச்சொல்லும்போது என் எண் சாண் உடம் பும் ஒரு சாணாகி விடுகிறது. "அந்த வரலாறு தங்களுக்குத் துய ரத்தைக் கொடுப்பதாயிருந்தால் அதைத் தவிர்த்து மேலே சொல் லும்படி வேண்டுகிறேன்" என்று தாமோதரன் கேட்டுக்கொண் டான். அதற்குள் பார்த்தன் பிக்க ஆவலுடன் "ஐயா, எங்களுக்கு அதைச் சொல்லவேண்டும். மற்றதையெல்லாம் சொல்லாவிட்டா லும் போகிறது. இதை மாத்திரம் சொல்லுங்கள், நானிதை வேறு ஒருவரிடமும் சொல்லுகிறதில்லை யென்று சத்தியம் செய்கி றேன்" என்றான். பார்த்தனுடைய ஆத்திரத்திற்காக தாமோத ரன் அவனைக்கண்டிக்கப்போனான். ஆனால் கிழவர் தன் வரலாற்றை மேலே சொல்லித்தடுத்து விட்டார். "எனக்கு ஒரு நினைவுதானிரு ந்தான். அவன் பிக்கபுத்திசாலி. இக்கனமாகவே செலவுசெய்து வந்தான். அவனுக்கு மாதமாதம் அதிகப்பணம் ஊரிலிருந்து வரா மற்போனாலும் தனது இக்கன சிவனத்தால் 40 பவுன்வரையில் சேர்த்துவைத்திருந்தான். அவனுடைய பெட்டியில் அதைவைத் திருந்த விடம் எனக்கு நன்றாகத்தெரியும். அவன் தூங்கும்போது அவனுடைய சாவியை எடுத்துப் பெட்டியைத்திறந்து பணதை யெல்லாம் அபகரித்துவிட்டேன். பிறகு சாவியை இருந்தவிடத் தில் வைத்துவிட்டு என்படுக்கையில் வந்து படுத்துத்தூங்குகிற வனைப்போல் பாவனைசெய்து கொண்டிருந்தேன். பொழுது விடி ந்து என் நண்பன் எழுந்து ஸ்னான ஜபங்கள செய்வதையும் நான்

படுக்கையிலிருந்தபடியே பார்த்துக்கொண்டிருந்தேன். கிரீசனுடன் சேர்ந்தது முதல் ஜெபம் செய்வதையே நான் விட்டுவிட்டேன்.

•

பயங்காளித்திருடர்கள் மிகவும் ஜாக்கிரதையாயிருக்க முயல்வதாலே தங்கள் குற்றத்தைத் தெரிவித்து விடுவார்கள். நான் தைரியமாகப்பெட்டியை யுடைத்துப் பணத்தை யெடுத்துக்கொண்டிருந்தால் என் நண்பன் என்மேல் சூதேகித்திருக்கமாட்டான். பெட்டியில் சாவிபோட்டு அப்பணம் அடகுரிக்கப் பட்டிருக்கிறதென்று தெரிந்ததும் என்னைத்தான் திருடனென்று அவன் நம்பினான். அவன் அச்சமூள்ள பையனைபடியினாலும் தைரியத்தினாலும் பலத்தினாலும் என்னைவிடக்குறைந்தவனை படியாலும் என்னைப்பார்த்து திருடனென்று கூறவஞ்சி சர்வசலாசலத்தலைவரிடம் சென்று பணம் களவுபோனதை சவிஸ்தாரமாகச் சொன்னான். அயோக்கியர்களில் நான் முதல்வன் என்று பேர்பெற்றிருந்தபடியால் என் நண்பன் சொன்னதையெல்லாம் முற்றும் நம்பி எனக்கு வாரண்டு அனுப்புவித்தார்கள். நல்லவேளையாக அன்று சாயந்திரம் நான் கலாசாலையில் இல்லை. எனெனில் ஒரு சிறுக்கியைவண்டியில் வைத்துக்கொண்டு அயலூர்போய் அன்றிராத்திரி அங்கேயே தங்கியிருந்தேன். மறுநாள் திரும்பிவரும்போது வழியில் ஒரு நண்பன் என்னைப்பற்றி நடந்திருக்கும் விஷயங்களையெல்லாமெண்ணிடஞ்சொல்ல நான் குதிரையைத் திருப்பிக்கொண்டு வேறுமார்க்கஞ் சென்றேன். பார்த்தன் "உமது சினேகன் வாரண்டைப் பற்றியுமக்குச் சொன்னனு" என்றான். இக்க அதிகப் பிரசங்கமான கேள்விகளுக் கெலாம் பதில் சொல்லாமல் மேலே சொல்லுங்கள் என்று தாமோதரன் கிழவரைக் கேட்டுக்கொண்டான். கிழவர் யாகபுரிக்குச் செல்லும் எண்ணத்தையெல்லாம் விட்டுவிட்டு அவந்தீநகரம் செல்லலாம் என்று என்னுடைய சினேகிதியிடம் சொன்னேன். அவள் முதலில் சம்மதிக்காமல் தடை சொன்னாள். ஆனால் என் பணத்தைக் காட்டியதும் அவள் சம்மதித்து விட்டாள். இருவருமாக அவந்தீநகரம் வந்து சேர்ந்தோம். எவ்விடத்தில் வந்திருந்தேனென்றும், யாருடன் சேர்ந்திருந்தேன் என்றும் கொஞ்சம் யோசித்துப் பார்த்தீரானால் நான் களவாடிய பணமெல்லாம் வெகு சீக்கிரத்திலேயே செலவாகியிருக்குமென்று நன்றாக அறிந்துகொள்வீர். எனக்கு இப்பொழுது முன்னிலும் கஷ்டம் அதிகமாகிவிட்டது. ஜீவனத்திற்கு அவசியமான வஸ்துக்கள் கூட அகப்படுவது கஷ்டமாயிருந்தது. அதிலும் மேலான அவஸ்தை யென்னவென்றால் எனது கூத்திமேல் எனக்கு ஆசை பெருகி இருந்தது. அவளும் என்னோடு கூட கஷ்டத்தை அனுபவித்தாள். காதலிக்கும் ஒருத்தி கஷ்டதிசையிலிருக்கும்போது அவளைக்காப்பாற்ற சத்தியில்லா

திருப்பதும் அக்கஷ்டத்திற்குத் தானே காரணமானவனென்று நிந்திப்பதும் எவ்வளவு வருத்தத்தைக் கொடுக்கக்கூடியதென்று அனுபவித்தவனுக்குதானேதெரியும்என, தாமோதரன் "நீர் சொல்வதில் கொஞ்சமேனும் பிசகில்லை, உமது வார்த்தையை முழுதும் நம்புகிறேன். மனப்பூர்வமாய் உமது தயாத்திற்காக நான் அனுதாபப்படுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே இரண்டு மூன்று தட்வை அவ்வறையில் நடமாடித் திரும்பவும் நாற்காலியில் உட்கார்ந்து "சுவாமி, என்னை அந்த ஸ்திதியிலிருந்தும் காப்பாற்றியதற்காக அவரை வந்திக்கிறேன்" என்றான். கிழவர் "நான் பட்ட அவஸ்தைக்குக் கங்குகரையில்லை. எப்படியையும் எந்த தாகத்தையும் பொறுத்துக் கொண்டாவது நான் காதலித்தவளைத் திருப்திசெய்தால் அதனால் சந்தோஷமுண்டாகுமென நினைத்தேன். என் சினேகிதர்களில் பாதிபேர் அவளை அனுபவித்திருந்தபோதிலும் நான் அவளைக் கலியாணம் செய்துகொள்வதாக நிச்சயித்திருந்தேன் அதனால் எனக்குவரும் ஹானியை உத்தேசித்து அவள் சம்மதிக்காமலே யிருந்தாள். அவளுக்காக நான் தினம்படுங் கஷ்டத்தைத் தெரிந்துகொண்டு, அதை ஒருவாறு தணிக்கமுயன்றாள். அவளை எத்தவிதம் சந்தோஷபிக்கலாமென்று நான் பலவித சூழ்ச்சிசெய்து கொண்டிருக்கும்போது அவள் மிகுந்த கருணையுடன் என்னைத் தனது யாகபுரி ஆசைநாயகர்களில் ஒருவனிடத்தில் காட்டிக்கொடுத்து விட்டாள். அவனுடைய தயவினாலும் முயற்சியினாலும் நான் திருடனென்று கண்டு பிடிக்கபபட்டு ஜெயிலுக்கு அனுப்பப்பட்டேன்."

"இங்குவந்ததும் நான் செய்த தன்மார்க்கங்களையும் அதிருஷ்டியங்களையு மெண்ணி இவற்றால் எனக்கு நேர்ந்த விபத்தையும் என்னிடத்தில் மிக்க பிரியமுடைய என் தகப்பனுருக்குண்டாகிய அவமானத்தையும் விசனத்தையும் குறித்து மனம் புழுங்கினேன். இத்துடன்கூட நான் இச்சித்திருந்தவள் எனக்குச்செய்த பிரதியையும் யோசித்தபொழுது என் உயிரை வெறுத்து தற்கொலை செய்துகொள்வதே சரியென்று எண்ணினேன். விசாரணைக்காக நான் யாகபுரிக்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டேன். அங்கே என்னை நன்றாக சிநேகித்து விடுவார்களென்று எனக்குத்தெரியும். ஆனால் விசாரணை நடக்கும்போது என்மேல் குற்றமாட்டவாவது வரவில்லை. ஆதலால் என்னை விடுதலை செய்துவிட்டார்கள். உண்மை யென்னவென்றால் எனது நண்பன் யாகபுரத்தைவிட்டு வேற்றூர் போய்விட்டான். ஆதலால் என்மேல் குற்றங்கூற அங்கிருந்து தன்னால் வரமுடியாது என்று தெரிவித்துவிட்டான்" என, பார்த்தன் "ஒருவனை உமைமத் தண்டிக்கும்படியை அவன் ஏற்றுக்கொள்ள அவனுக்குச் சம்மதமில்லாமலிருந்தும். அப்படியானால் அவன் செய்தது சரிதான். நான் சாக்ஷி சொல்ல

தால் யாருக்கேனும் மரணதண்டனை கிடைப்பதாயிருந்தால் அன்று முதல் நான் தனியாய்ப்படுத்துறங்க அஞ்சுவேன். மனைவில் இறந்தவன் பிரேதம் என் கண்ணுக்கு முன் அடிக்கடி தோன்றும்" என்று குறுக்கே புகுந்து குழறினன்.

தாமோதரன் "பார்த்தீரே! உமக்கு தைரியம் அதிகமா அறிவு அதிகமா என்று எனக்கு சந்தேகம் மூண்டாகிவிட்டது" என, பார்த்தன் "நீர் என்னைப்பார்த்து நகையும்.. ஆனால் எனக்குத் தெரிந்த ஒரு சிறுகதையை நீர் கேட்டால் உமது அபிப்பிராயத்தை மாற்றிவிடுவீர். அக்கதை வால்தவமாக நடந்ததாம். நான் பிறந்த ஊரிலே விட்டலன் என்று ஒரு குடியானவன் இருந்தான். அவனுக்கு பிரசன்னன் என்றொரு மகனுண்டு. அவன் கெட்டிக்காரனுகவும் நல்ல புத்திக்கு வரக்கூடியவனுகவும் இருந்தான். நானுமவனும் தெருப்பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தோம். அவன் மூன்றுவரிக்கு அசராதிபாராமல் பொருள் சொல்வான். வெள்ளிக்கிழமை தவறாது கோவிலுக்குப்போய் வருவான். மிக்க இனிமையாகத் தேவாரம் திருவாசகங்களைப் பாடுவான். விட்டலர் வீட்டில் ஒருபெண் குதிரைகாணுது போயிற்று. எனக்குத் தெரிந்தவரையில் அது வெண்சிகப்பு நிறமுடையது. பிரசன்னன் இந்துபுரியில் ஒருசந்தை கூடியபோது அங்குபோயிருந்தான். அது என்னகிழமையென்று எனக்கு இப்போழுது ஞாபகமில்லை. அங்குபோயிருந்தபோது தனது தந்தையின் வெள்ளைக் குதிரைமீது ஒருமனிதன் ஏறியிருப்பதைக்கண்டான். பிரசன்னன் உடனே "திருடா நில்" என்று கூவினன். அத்திருடன் சந்தைக்கு நடுவில் அகப்பட்டுக்கொண்டதால் தப்பிப்போக முடியுமோ? அவனைப்பிடித்து எல்லோரும் நியாயாதிபதியிடம் கொண்டுபோனர்கள். நோய்யலூர் வில்வனாதர் தான் நியாயாதிபதி. அவர் மிக்க யோக்கியரென்று எல்லோருக்குந்தெரியுமே. அவர் அத்திருடனைக் காவலில் வைத்துவிட்டுப் பிரசன்னனையும் குறித்தநாளில் வரும்படி சொல்லியனுப்பினர். விசாரணையின்போது வில்வநாதருக்கு மாற்றலாகி பிரகர் என்பவர் நியாயாதியாகவந்தார். அவர் திருடனைக் குற்றவாளியாகவும் பிரசன்னனைச் சாக்ஷியாகவும் நியமித்தார். கைதினுயப்பற்றி உனக்கு என்ன தெரியுமென்று அவர் ரௌத்திராகாரத்துடன் பிரசன்னனைப் பார்த்துக் கேட்டதை நான் என்றும் மறக்கமாட்டேன். பிரசன்னனுக்கு உடம்பெல்லாம் நடுக்கமெடுத்தது. நியாயாதிபதி "அடே ஆளே! நீ என்ன சொல்லப்போகிறுய். விழித்துக்கொண்டும் மென்று விழுங்கிக்கொண்டும் முணுமுணுத்துக்கொண்டும் நிற்காதே. உடனே உரக்கப்பேசு, நீ சொல்லவேண்டுவது ஏதேனுமிருக்கிறதா" என்று கேட்டார். பிரசன்னன் "என்குதிரை அகப்பட்டது" என்றன். நியாயாதிபதி "ஓ ஓ, நீ அதிர்ஷ்டசாலிதான், இந்த நாற்பது வருஷமாய்

நான் எவ்வளவோ சர்க்கூட்டுக்குப்போய் இருக்கிறேன். குதிரையைக் கண்டதில்லை. அதிலும் வேடிக்கை யென்னவென்றால் நீ கினைப்பதைவிட நீ மிகுந்த அதிர்ஷ்டசாலி, எனெனில் நீ ஒரு குதிரையைக் கண்டதுமல்லாமல் அதைக் கட்டவொருகயிறும் கண்டெடுத்து மிருப்பாய்'' என்றார். அவர் சொன்னவார்த்தைகளை நான் மறக்கவேமாட்டேன். அவர் சொல்லிமுடித்ததும் அங்கிருந்த எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். அவர்கள் இதைக் கேட்ட பிறகு சிரிக்காமல் எப்படியிருக்கக்கூடும். இதுமாத்திரமல்ல. அந்த நியாயாதிபதி பின்னும் இருபதுதடவை பரிகாசம் பண்ணினார். அதெல்லாம் இப்பொழுது எனக்கு ஞாபகமில்லை. குதிரை ஷாம்சத்தைப்பற்றி ஏதோ சொன்னார். அதைக்கேட்டு எல்லோரும் நகைத்தார்கள். உண்மையில் அந்தநியாயாதிபதி மெத்த தைரியசாலியாகவும் படித்தவராகவும் இருக்கவேண்டும். அதிலும் அவர் கொலைக்கேசு விசாரணை செய்யும்போது மிக்க வேடிக்கையாகவேயிருக்கும். இந்த வழக்கில் ஒருவிசேஷமென்னவென்றால் நியாயாதிபதி கைதியினுடைய வக்கீலைப் பேசவே விடவில்லை. ஒரே ஒருவார்த்தை மாத்திரஞ் சொல்ல உத்திரவு கொடுக்கும்படி அந்த வக்கீல் கேட்டுக்கொண்டும் நியாதிபதி சம்மதிக்கவில்லை. ஆனால் வாதியின் வக்கீல அரைமணி நேரம் பேசவிட்டுக் கேட்டுக்கொண்டிருந்தார். அது கடமை தான் என்று நான் ஒப்புக் கொள்ளுகிறேன். பாவம் அந்தப் பிரதிவாதிக்கு விலங்கு போட்டிருந்தார்கள். அக்கைதிக்கு விரோதமாக நியாயாதிபதி ஜூரர், வக்கீல்கள், சாக்ஷிகள் எல்லோரும் கடந்து வந்தார்கள். இவ்வளவு பேருக்கிடையில் அவன் ஒருவன் எம்பாத்திரம்? அவனுக்கு மரணதண்டனை விதித்து விட்டார்கள். இவ்வித கேசெல்லாம் வேறு எவ்விதமாக முடியும்? சரி, அவனைத் தூக்கிலிட்டுவிட்டார்கள். அன்று முதல் பிரசன்னனுக்கு மனச்சமாதானமே கிடையாது. இருட்டில் போகவேமாட்டான். அந்தத் திருடனுடைய பிரேத ரூபத்தைக் காண்பதாகவே எப்போதும் நினைத்துக்கொண்டிருந்தான்'' என்று சொல்லி முடித்தான். இதைக்கேட்டதும் தாமோதரன் ''சரி இதுதானே உமதுகதை'' என்று அலக்ஷியமாய்ச் சொன்னபோது, பார்த்தன் ''இல்லை, இல்லை இனிமேல்தான் சங்கதியைச் சொல்லப் போகிறேன், பிரசன்னன் ஒரு குறுங்காட்டை இருட்டுச் சந்து வழியாக நடந்து வரும்போது பிரேதரூபம் இவனுக்கு மூன் எதிர்ப்பட்டது. அது, ஒரே வெண்மையான உடையுடுத்தியிருந்தது. அது பிரசன்னனைத் தாக்கிற்று. பிரசன்னன் மிக்க பலமுடையவன். அவனும் அந்த ரூபத்தின்மேல் விழுந்து சண்டைபோட்டான். பாவம் பிரசன்னனுக்கு அடி பலமாய் விழுந்துவிட்டது. அவன் நசுங்கி கொண்டு மெதுவாகவீடுபோய்ச்சேர்ந்தான். பட்ட அடியாலும் அடைந்த திகிலினாலும் பதினைந்துநாள் படுக்கையை விட்டு அவன் எழுந்திருக்கவில்லை. நான் சொல்வதெல்லாம் வாஸ்

தவமே. என் ஊரில் எல்லோருக்கும் இந்த விஷயம் தெரியும்" என்றான்.

இதைக்கேட்ட கிழவருக்குச் சிரிப்புண்டாகிவிட்டது. தாமோதரனும் விழுந்து விழுந்து சிரித்தான். பார்த்தன் "நீங்கள் சிரிக்கலாம், இப்படித்தான் அப்பொழுது மற்றவர்களும் சிரித்தார்கள். அங்கிருந்த காஸ்திகளுள் ஒரு பிரபுவும் அப்படித்தான் சிரித்தான். மறுநாட் காலையில் ஒரு வெள்ளைக் கன்றுக்குட்டி அந்த சத்தில் இறந்தே பிறப்பதைக் கண்டு சண்டை பிரசன்னனுக்கும் அந்தக் கன்றுக்குட்டிக்குமாக இருந்திருக்க வேண்டுமென்று அப்பிரபு சொன்னார். ஆனால் பிரசன்னன் அது பிரேதரூபமென்று வேண்டிய மட்டும் சத்தியம் பண்ணினான். தான் அந்தரூபத்தைக்கண்ட போது அதிகமாகக் குடித்திருக்கவில்லை யென்றும் சொன்னான். ஆதலால் நாம் அவர் ரத்தத்தைச் சிந்தக் காரணமாயிருக்கக் கூடாது" என்று பார்த்தன் கதை சொல்லி முடித்ததும், தாமோதரன் கிழவரைப் பார்த்து "தாதா, பார்த்தர் தனது கதையை முடித்துவிட்டார், நீர் உம்முடைய கதையைச் சொன்னால் இனிமேலாவது நடுவில் தடைசொல்ல மாட்டார் என்று நம்புகிறேன்" என்றான். கிழவரும் கதைசொல்ல ஆரம்பித்தார்.

11. அத்தியாயம்.

போருள் கொடுத்துப் பொய்மேற் கோளீஇ மருள்கொடுத்
தல்ல லுழப்பிக்குஞ் சூது.

இப்பொழுது நான் சுயாதீனம் பெற்றேன். ஆனால் எனக்கு நல்ல பெயரென்பதே இடையாது. நியாபஸ்தலத்தில் தகுந்த ருசு ஏற்படாததால் விடுதலை பெற்றவனுக்கும், தன் மனச் சாக்ஷிக்கும் லோகவார்த்தைக்கும் நல்லவனு யிருப்பவனுக்கும் வித்தியாசம் அதிகமாயுண்டு. என்குற்றம் என் மனச்சாக்ஷிக்கே அவமானமாயிருந்தது. ஆதலால் யாரையும் முகமெடுத்துப் பார்க்க எனக்கு வெட்க முண்டாயிற்று. பொழுது விடிவதற்குமுன் யாகபுரத்தை விட்டு வெளியேறினேன். என் தந்தையிடம்சென்று அவரது மன்னிப்பைக் கேட்கலாம் என்று முதலில் யோசித்தேன். ஆனால் என்னைப் பற்றிய விஷயமெல்லாம் அவர் நன்றாய் அறிந்திருப்பார் என்று எண்ணிய படியாலும் அயோக்கியதையை அவர் எப்பொழுதும் வெறுக்கிறவர் என்று தெரிந்திருந்தபடியாலும் அதிலும் என்தாய் தன்னுடைய சாமர்த்தியத்தை யெல்லாம் எனக்கு விரோதமாக உபயோகித்திருப்பாள் என்று நான் நம்பியபடியாலும் என் தகப்பனார் என்னை ஏற்கமாட்டார் என்று அறிந்து கொண்டேன். அப்படியவர் என்னை யேற்றுக்கொண்ட போதிலும் நான் செய்த காரியத்தாலே நன்றாக அறிந்தவர்கள் முகத்தில்

ழிப்பது எனக்குக் கொஞ்சமேனும் இஷ்டமில்லாதபடியால் அவ
ந்தீபுரம்போய்ச் சேர்ந்தேன். அந்தப் பெரிய நகரம் நமக்கெப்படி
இஷ்டமோ அப்படிக்கெல்லா மிடங்கொடுக்குமன்றோ? ஆனால் ந
போவதென்றால் கையில் பண மில்லாது எப்படி போகமுடியும்?
அவந்தீநகரம் ஒரு பெரிய பட்டணமா யிருந்தபோதிலும் ஒரு
வன் கையில் பணமில்லாவிட்டால் அரேபியா தேசத்துப் பாலைவன
த்து நடுவில் ஒரு பிரயாணி எப்படிப் பட்டினி கிடந்து சாகவே
ணுமோ அப்படியேதான் நானும் அவந்தீநகரத்தில் சாகவேண்டி
வந்தது. பணத்தை ஆனேக வித்துவான்கள் ஆட்கொல்லி
யென்றும் தீங்குற்ற அறிகுறி என்றும் சொல்லுவார்கள். எனக்கு
அந்த ஆட்கொல்லி இல்லாததினால் கொல்லப்பட்டவன்போ லிருந்
தேன். நான் பணமு மில்லாமல் உதவிசெய்ய நண்பருமில்லாமல்
மிக்கபசியோடு அவஸ்தைப்பட்டு அவந்தீபுரத்தில் ஒருநாள் சாயங்
காலம் நடந்துபோய்க் கொண்டிருக்கையில் மிக்கபழைய குரலுடன்
ஒருவன் என்பெயரைச் சொல்லிக் கூப்பிட்ட சப்தம் காதில்விழுந்
தது. நான் திரும்பிப் பார்த்தபோது அவன் என்னோடு படித்த
வாதசேனன் என்னும் பையனு யிருந்தான். அவன் ஒருவருஷத்
திற்கு முன்னாலேயே வாசிப்பை நிறுத்திக் தன் ஊர்போய்ச் சேர்
ந்திருந்தான். ஆகலால் எனது துன்மார்க்கமும் விபரீதச் செயல்
களும் அவனுக்குத் தெரிந்திராது என நினைத்தேன். அவன்
என்னை மிக்க பிரியத்தோடு கைப்பற்றிக் கொண்டு என்னைப் பார்
த்ததும் அவனுக்கு மிக்க ஆனந்த முண்டானதாகச் சொல்லி அடு
த்த காப்பி ஓட்டலில் போய் கொஞ்சம் சிற்றுண்டி அருந்தலாம்
வா என்று கூப்பிட்டான். ஆனால் நான் அவசர வேலை யிருப்பதா
கச்சொல்லி அவனுடைய வேண்டுகோளுக்கு இணங்காதிருந்தேன்.
ஆனால் அவன் நிர்ப்பந்தத்தினாலும் எனக்கு மதிக பசியாக இருந்த
தாலும் அவனுடன்கூடப் போவதாகக் கடைசியில் ஒப்புக்கொண்
டேன். அன்றுகாலை அங்கியைமாற்றி வேறென்று தரித்துக்கொண்
டதால் பழைய அங்கிப் பையிலிருந்த பணத்தை யெடுத்துக்
கொள்ள மறந்தேன் என்று பொய்சொல்லி என்னால் சிற்றுண்டிக்
குப் பணம் கொடுக்க முடியாதென்றேன். அதற்கு வாதசேனன்
"என்ன ஜகந்நாதா, நீயும் நானுமிருந்த நினைவுத்திற்கு இப்படித்
தான் பேசுவாயோ" என்று சொல்லி என் கையைப் பிடித்து கர
கரவென்று இழுத்துக்கொண்டு போனான். நான் கொஞ்ச நாழி
கைக்குமுன்தான் சாப்பிட்டிருப்பேனென் றெண்ணி காப்பிமாத்
திரம் கொண்டுவரும்படி ஓட்டல் காரனிடஞ் சொன்னான். ஆனால்
நான் மிக்க பசியாக இருந்ததால் வேறு ஒரு பொய் சொல்லி சிற்
றுண்டியும் கொண்டுவரும்படி வேண்டினேன். அதாவது வெகு
நாழிகைக்கு முன்னாலேயே காரியமாக வீட்டைவிட்டுப்புறப்பட்ட
படியால் சரியாக ஒன்றும் சாப்பிட முடியாமற் போய்விட்டது,
இப்பொழுது பசியெடுக்கிறது என்று சொன்னேன்.

சிற்றுண்டியும் காப்பியும் அருந்தியதும் எனக்குச் சந்தோஷ மூண்டாயிற்று. என் நடத்தை வாதசேனனுக்கு ஒன்றுமே தெரியாது என்று எண்ணி வெகு சந்தோஷமாகப் பேசி சம்பாஷணை செய்துகொண்டிருந்தேன். ஆனால் உண்மையில் விஷயம் எல்லாம் அவனுக்குத் தெரியுமென்று காட்டிவிட்டான். "உன்மேல் நடந்த கேஸில் உன்னை மிக்க கௌரவமாக விடுதலை செய்ததற்காக நான் மிக்க சந்தோஷப்படுகிறேன்" என்றான். இதைக்கேட்டதும் நான் பிரமித்துப்போனேன். வாதசேனன் இதைக் கண்டு "எதற்காக வெட்கப்படுகிறாய்? நீ குருஷன்தானே, உன்னைத்தான் குற்றவாளியல்லவென்று விடுதலை செய்துவிட்டார்களே. யாராயினும் உன்னைக் குற்றவாளி என்பார்களா? நான் உன்னுடைய சினேகிதனன்றோ? உண்மையில் நீ திருடினாயா இல்லையா என்னிடம் சொல்லு. அந்தக் கிருபண சிரோமணியிடம் நீ, 200 பவுன் திருடியதற்குப் பதிலாக 2000 பவுன் கொள்ளையடித்திருக்கவேண்டும். நான் என்ன உன்னைக் காட்டிக்கொடுத்து விடுவேனே? நீ செய்த புருஷத்தனமான காரியத்திற்காக உன்னை மெச்சுகிறேன். நானும் அதேகாரியம்செய்யக்கொஞ்சமேனும்சங்கோஜப்படமாட்டேன்" என்றான்.

இதைக் கேட்டதும் எனக்கு அவன்மேல் கொஞ்ச நஞ்ச மிருந்த அவநம்பிக்கையும் ஒழிந்துவிட்டது. நான் செய்த களவை ஒப்புக்கொண்டேன். ஆனால் 200 பவுன் திருடவில்லை, 40 பவுன் தான் திருடினேன் என்று உண்மையைச்சொன்னேன்.

வாதசேனன், "சீச்சீ, இவ்வளவுதானா, எனக்கு மிக்க வருத்தமாயிருக்கிறது. இன்னொருதடவை இதைவிட உனக்கு நல்ல லாபம் கிடைக்குமென்று நம்புகிறேன். என் சொற்படி நடந்தால் உனக்கு ஆபத்து ஒன்றுமில்லாமல் நல்லலாபமும் கிடைக்கும், (பைபிளிருந்து பாச்சிகைகளை எடுத்துக் காட்டி) இதோ பார் இதுதான்வழி, வறுமையை யெல்லாம் நீக்கும் வைத்தியமிது. என் புத்தியைமாத்திரம் கேட்டால் உனக்கும் துன்பம் நேராமல் ஏமாந்தவனைக் கொள்ளையடித்துவிடலாம்" என்றான். வாதசேனன் திரும்பவும் தனக்காக ஜனங்கள் காத்திருப்பார்கள் என்றும், தான் சூதாட்டத்திற்கு உடனே போகவேணுமென்றுஞ் சொல்லி என்னையும் அவனுடன் கூடவந்து ஆட்டம் கற்றுக்கொள்ளும்படியாகக் கூப்பிட்டான். என்கையில் பணமில்லையென்று சொல்லினேன். அதற்கு அவன் "அதைப்பற்றி யோசிக்காதே. தைரியமாக மாத்திரம் ஆடு, ஆனால் எதிராளியின் சாமர்த்தியத்தை சூக்ஷ்மமாக முன்னுடியே அறிந்துகொள்ளவேண்டும். இப்பட்டினத்திற்கு நீ புதிதாகையால் எவன் ஏமாந்தன் மோசக்காரனென்று உனக்குத் தெரியாது. நான் சமயம் வந்தபோதெல்லாம் உனக்குக் காட்டிக்கொடுக்கிறேன்" என்றான்.

ஓட்டல்காரனுக்குப் பணம் கொடுக்கும் சமயத்தில் வாதசே னன் தன் பாகத்தை மாத்திரம் கொடுத்துவிட்டுப் புறப்பட் டான். நான் "என்னிடத்தில் பணமில்லை, என்னுடைய பாகத்தை யும் சேர்த்துக்கொடுத்துவிடு" என்று சொன்னேன். அதற்கவன் அதினால் குற்றமில்லை. தைரியமாகப் பேசாமல் எழுந்துபோய் விடு. இல்லாவிட்டால் நான் கீழேபோயிருக்கிறேன். நான் வைத் திருக்கிற பணத்தையும் உடனே எடுத்துக்கொண்டு பேசாமல் தெரு மூலைக்குப்போ. நான் உன்னோடு சேருகிறேன்" என் றான். இவன் சொன்னது எனக்குப்பிடிக்கவில்லை. இருவர் சாப் பிட்டதற்கும் அவனே பணம் கொடுப்பான் என்று எண்ணி னேன். ஆனால் அவன் தன்னிடத்தில் இரண்டணாகூட இல்லை யென்று சொல்லிவிட்டுக் கீழேபுறப்பட்டுப் போனான். நான் அவன் வைத்துப்போன பணத்தையும் தூக்கிக்கொண்டு அவனைப் பின் தொடர்ந்தேன். போகும் சமயத்தில் ஓட்டல் காரனிடம் தன் பணத்தை மேஜைமேலே வைத்திருப்பதாக வாதசேனன் சொல் லக் கேட்டேன். ஓட்டல் காரனும் அதை யெடுத்துக்கொள்ள மேலே யேறிச் சென்றான். நான் வேகமாய் இறங்கிக் கீழேவந்து விட்டேன். வாதசேனனும் நானும் சூதாடு மிடம்போய்ச் சேர்ந் தோம். அங்கே மற்றவர்களைப்போல் அவனும் ஒரு பைசாவைப் பணத்தை யெடுத்து எதிரில் வைத்துக் கொண்டான். இதுமற்ற வர் பணத்தை அபகரிக்கும் பொருட்டுக் காட்டிய பணமேயாம். இங்கே சூதினுடைய சாமார்த்தியத்தைப் பார்க்க மிகவேர்த்தியாக இருந்தது. மலைபோன்ற பொன்னெல்லாம் ஒருபக்கத்திலிருந்து கரைந்து கண்மூடிக் கண்திறப்பதற்குள் பற்றிரூபக்கம் உயரும். பணக்காரராக இருந்தவர் ஒரேநிமிஷத்தில் ஏழையவராவார். அதே நிமிஷத்தில் ஏழைகள் செல்வவந்தராவார்கள். ஒரு ஞானி செல் வத்தின் நிலையில்லாமையைத் தன் சிஷ்யருக்கு ரூபிக்க வேறு மார்க்கம் இதைவிடத் தகுதியானவிடம் கிடைக்காது. நான் மூத லில் கொஞ்ச லாபம் பெற்றுப் பிறகு எல்லாவற்றையும் அடி யோடு இழந்துவிட்டேன். வாதசேனனும் கொஞ்சகாலம் சூதாடி விட்டுத் தான் நாறு ரூபாய் தோற்றுவிட்டதாகவும் இனிமேல் விளையாடப்போகிறதில்லை என்றுசொல்லி எழுந்து விட்டான். பிறகு என்னிடம் வந்து "திரும்பவும் காப்பி ஓட்டலுக்குப் போக லாம்" என்று கூப்பிட்டான். ஆனால் நான் கொஞ்சமேனும் சம் மதிக்கவில்லை. என் கைப் பணத்தையுமிழந்து அவனிடமும் பண மில்லாதபடியால் சாப்பிடுவதற்கு எப்படிப் பணம் கொடுப்பதென் றெனக்கு ஆச்சரிய முண்டாயிற்று. ஆனால் அவன் "இப்பொ ழுது தான் ஒரு சினேகிதனிடமிருந்து இரண்டு ரூபாய் கடன் வாங்கினேன். அதில் ஒன்று உன்னுடையது" என்று சொல்லி என்னகையில் ஒன்றைக் கொடுத்தான். ஆதலால் அவனுடன் கூட நானும் ஓட்டலுக்குப் போனேன். போகும் போதே பணம்

சொல்லிக்காமல் ஓடி வந்துவிட்டுத் திரும்பவும் அந்த ஓட்டல்காரனை எப்படி ஏமாற்றுவதென்று வெட்கினேன். ஆனால் அந்த ஓட்டல் காரன் மிக்க மரியாதையுடன் என்னைப் பார்த்து "தாங்கள் மூதலில் பணங்கொடுக்க மறந்து போய் விட்டீர்கள்" என்றான். இதைக் கேட்டதும் எனக்கிருந்த வெட்கம் நீங்கி அவனிடத்தில் அந்த ஒரு பவுனைக் கொடுத்து பாக்கி கொண்டுவரும்படியாகச் சொன்னேன். நாங்கள் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கும் பொழுதே சூதாடினவர்களில் அனேகர் அங்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் அங்கே வந்தது தாங்கள் சாப்பிடுவதற்கல்ல, ஏமாறுகாரியமாக. இரண்டு ஏமாந்தபையன்கள் அவர்களிடமகப்பட்டார்கள். அவர்களுக்கு சிற்றுண்டிகளை வாங்கிக் கொடுத்து அவர்கள் பணத்தையெல்லாம் அபகரித்துப் பங்கிட்டுக்கொண்டார்கள். எனது பங்கில் கொஞ்சம் பாகம் கிடைத்தது. இத்தச் சூதாட்டத்தில் இன்னொரு சேடிக்கை. ஆரம்பத்தில் மேஜை நிறைய பணம் குவித்திருந்தபோதிலும் வரவர ஒன்றுமிராமல் போய்விட்டது. இரவு முழுமையும் அவனவரும் சூதாடிக் கொண்டிருந்தார்கள். ஆனால் ஓட்டல் கடைசியில் ஒவ்வொருவனும் தான் நஷ்டமடைந்து விட்டதாய்ச் சொன்னான். அவ்வளவு பணத்தையும் யாதம் கொண்டுபோயிற்றோ என்னவோ தெரியவில்லை" என, பார்த்தன் "ஆமாம், அதிலொன்றுஞ் சந்தேகமில்லை. எவ்வளவு பேர்கள் ஒரு அறையிலிருந்தாலும் அவர்களுக்குத் தெரியாமல் பூதம் தூக்கிக்கொண்டு போய்விடும். தெய்வத்திற்குப் பூசை செய்ய வேண்டிய சமயத்தில் இவர்கள் சூதாட்டம் ஆடிக் கொண்டிருந்ததால் இவர்களையும் பூதம் தூக்கிக்கொண்டு போயிருக்க வேண்டும். எனக்குக் கொஞ்சம் காது கொடுத்தால் ஒருமனிதன் இன்னொருவனுடைய மனைவியோடு படுத்துக் கொண்டிருக்கும் போது அவனைக் கதவின் சாவித் துவாரத்தின் வழியாக பூதம் தூக்கிக் கொண்டு போனகதையைச் சொல்லுவேன். இத்தனிஷயம் நடந்த வீட்டை நான் நேராகக் கண்ணால் பார்த்திருக்கிறேன். சென்ற முப்பது வருஷங்களாக அதில் ஒருவராவது குடியிருக்கவில்லை" என்றான்.

பார்த்தனுடைய அதிகப் பிரசங்கத்தைக் கேட்டு தாமோதரன் கோபங்கொண்டபோதிலும் அவனுடைய மடமைத் தனத்தைக் கண்டு புன்னகை கொண்டான். அக்கிழவரும் அப்படியே செய்துவிட்டுத் தன் கதையை மேலே சொல்லலானார்.

12. அத்தியாயம்.

சிறுமை பலசெய்து சீழ்க்குழு குன்ன
வறுமை தருவ தொன்றில்.

எனது சிநேகிதன் என்னைப் புதிய வழியில் செலுத்தினான். சூதாடுபவர்களின் கூட்டத்தில் சேர்ந்து அவர்களின் தந்திரங்களை

யும் ரகஸியங்களையும் நன்றாக நான் அறிந்துகொண்டேன். ஆனால் அவ்வழியின் சூக்ஷுமதந்திரங்கள் சில தலைவர்களுக்கு மாத்திரந்தான் தெரியும். அதை யெல்லோருக்கும் கற்பிக்கமாட்டார்கள். அதற்கு மிக்க சாமர்த்தியமும் பொறுமையும் வேண்டும். எனக்குக் குடியும் வியபிசாரமும் அதிகமாகி விட்டபடியால் அந்தப் பதவிக்கு அருகனாகவில்லை. புதிதாக ஏமாந்திருப்பவர்களை அடித்துப்பிடித்து இரண்டுகாசு பறித்துக்கொள்வதில் மாத்திரம் சாமர்த்திய முடையவனாயிருந்தேன். எனக்கு மிக நண்பனாயிருந்த வாதசேனனும் ஒரு பெருங்குடிகாரனாகிவிட்டான். மற்றவர்களைப்போல அவன் பெரிய தனவந்தனாயிராமல் ஒரு சமயத்தில் பணக்காரனாகவும் இன்னொரு சமயத்தில் வறியவனாகவுமிருந்தான். ஏமாந்தவர்களிடமிருந்து பிடுங்கியபணத்தைக் குடித்து வெறித்திருக்கும் சமயத்தில் தன்னிலும் சாமர்த்திய முள்ள தனது சிநேகனிடம் தோற்றுவிடுவான். கஷ்டமோ சுகமோ அனுபவித்துக்கொண்டு இந்த விதமாக இரண்டு வருஷம் காலங்கழித்தேன். ஒருநாள் ராத்திரி சூதாடிவிட்டுத் திரும்பிவரும் போது தெருவில் அனேக ஜனங்கள்கூடிக் கலகம்செய்து கொண்டிருப்பதைக்கண்டேன். அன்று ஒரு பைசாகூட கையில் இல்லாமல் எல்லாவற்றையும் சூதில் இழந்துவிட்டு வந்தபடியால் திருடர்கள் என்கையிலிருந்து பணத்தை அபகரித்துக்கொண்டுவிடுவார்கள் என்கிறபயமில்லாமல் கூட்டத்திற்குள் நுழைந்து சம்பாஷித்ததில் சில துன்மார்க்கரால் ஒரு மனிதன் கொள்ளையடிக்கப்பட்டதன்றி இம்சிக்கவும் பட்டானென்று கேள்விப்பட்டேன். அங்ஙக் காயம்பட்ட மனிதன் தேகமெல்லாம் ரத்தம் ஓடிற்று. எழுந்து நடக்கச் சக்தியற்றிருந்தான். எனக்கு அப்பொழுது கொஞ்சமாவது யோக்கியதையாவது மானமாவது இல்லாதிருந்தாலும் கஷ்டப்படுபவரிடத்தில் பரிதாபகுண மாத்திரமிருந்தது. நான் அவனிடம்சென்று என்னால் கூடிய ஒத்தாசையை அவனுக்குச் செய்வதாகச் சொன்னேன். அவன் எனக்குவந்தன மளித்துவிட்டு என்னைப் பிடித்துக்கொண்டு மெதுவாகத் தன்னை சத்திரத்தில் கொண்டுபோய் விடும்படி சொன்னான். ரத்தம் அதிகமாகச் சிந்திவிட்டபடியால் ஒரு வைத்தியனை வரவழைக்கும்படியாகவும் வேண்டினான். அவனைச் சுற்றியிருந்தவர்கள் எல்லாம் ஏனத் தொழிற்காரர்போல் தோன்றியபடியாலும் நான் பெரிய மனிதனைப்போல் நல்லுடையுடுத்தியிருந்தபடியாலும் என்னைக் கண்டு சந்தோஷித்தான். நான் அவன் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு அருகாமையிலிருந்த ஓட்டலில் சேர்த்தேன். அங்கு ஒருவைத்தியர் நல்லவேளையாக வந்திருந்தபடியால் அவர் இவனுக்குத் தகுந்த சிகிச்சை செய்வதாக ஒப்புக்கொண்டார். காயங்களைப் பரிசோதித்துப்பார்த்து நல்லவேளையாகக் கடுங்காயம் படவில்லை என்றார். வைத்தியர் வேலையை வெகு சீக்கிரமாக

மூடித்துவிட்டுக் காயப்பட்ட மனிதன் வசிக்குமிடத்தை வினவினர். அதற்கவன் அன்று காலையில்தான் அவர்தீநகரம் வந்ததாகவும், தன் குதிரையை வேறூர் சத்திரத்தில் கட்டியிருப்பதாகவும், தனக்கு அவ்விடத்தில் சினேகிதராவது, வீடாவது கிடையாது என்றுஞ் சொன்னான். இந்த வைத்தியர் மிக்க மேலான குணமுடையவர். அவர்தீநகரத்து அரசனுக்கே வைத்தியம் செய்தவர். அவரிடம் அலேக ரல்ல குணங்களிருந்தன. மிக்க தயாளமும் பெருந்தன்மையு முடையவர், பெரிய உபகாரி, ஆதலால் காயம்பட்டவரைத் தன் வண்டியிலேற்றி அவர் இறங்கியிருந்த சத்திரத்திற்குக் கூட்டிப்போவதாய்ச் சொல்லி அவருடைய காதில் பணம் வேண்டுமானால் தான் தருவதாகவும் கூறினர். பயம் அவர் இந்த உபகாரத்திற்காக அவருக்கு வந்தனம் சொல்லக்கூடவில்லை. அவர் என்னைக் கொஞ்சநேரம் கண்கொட்டாமல் உற்றுப்பார்த்துவிட்டுப் பின்னால் நாற்காலியில் சாய்ந்து "என் புத்திரன்" "என் புத்திரன்" என்று சொல்லி மூர்ச்சையாகிவிட்டார். அங்கிருந்த ஜனங்களெல்லாம் அவருக்கு அதிகமாக ரத்தம் சிந்திவிட்டபடியால் இந்தமாதிரி பிரஜ்ஞையற்றார் என்று எண்ணினார்கள். நான் இப்பொழுதுதான் என் தந்தையின் உருவத்தை உற்றுப்பார்த்துவிட்டு அவரே என்று நிச்சயம் செய்துகொண்டேன். உடனே நான் அவரிருந்த இடம் ஓடி அவரை என் கைகளால் தூக்கி மிக்க ஆர்வத்துடன் அவர் உதடுகளில் முத்தமிட்டேன். என் தகப்பனுரைப்போல் நான் மூர்ச்சையடையாவிட்டாலும் என்னசெய்தேன் என்றுகூட எனக்குத்தெரியாமலிருந்தது, ஸ்தம்பித்துவிட்டேன். இதற்கிடையில் என் தந்தையின் மூர்ச்சைதெளிந்துஎன்னை மிக்க அன்புடன் தழுவிக்கொண்டு அவர் கண்களிலிருந்து நீர்வழிய எல்லோரு முத்தமிட்டுக்கொண்டிருந்தார். அங்கிருந்தவர்கள் எல்லாம் இந்த நடத்தையைக்கண்டு மிக்க அனுதாபப்பட்டார்கள். கூடிய சீக்கிரத்தில் அவர்களிடமிருந்து மறைந்து போகவேண்டுமென்று ஏற்பாடுகள செய்தோம். வைத்தியர் சொன்னபடி அவர் வண்டியிலேயே என் தந்தையை யேற்றிக் கொண்டார். நானும் அவருடன் கூடவேறி அவர் இறங்கியிருந்த சத்திரத்திற்குப் போனேன்.

நாங்கள் தனியாக இருந்தபோது நானுமவ்வளவுநாளாகக்கடிதம் எழுதாதிருந்ததற்காக மெதுவாக என்னையவர் கொந்தார். ஆனால் நான் திருடிய சங்கதி ஒன்றைப்பற்றியாவது அவர் சொல்லவேயில்லை. எனதாயார் இறந்துபோய் விட்டதாகவும் உடனே நான் அவருடன் ஊருக்கு வரவேணுமென்றுஞ் சொன்னர். திரும்பவும் அவர் "உனக்காக நான் எவ்வளவோ கவலைப்பட்டேன். நீ இறந்துபோய் விட்டாயோ என்ற ஒருபயம் இருந்துகொண்டிருந்தது. உன்னைப்பற்றி சில பயங்கரமான வசனங்கள

உண்டாகியிருந்தால் நீ இறந்துபோனலும் நல்லது என்றும் கோரினேன். இவ்விரண்டும் என் மனத்தை ஊசலாட்டின. நமது அயல் வீட்டுக்காரன் தனது ஓடிப்போன மகளை இவ்விடத்திலிருந்து கண்டுபிடித்து அழைத்து வந்தான். நீ இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறாய் என்று அவன் என்னிடம் சொன்னான். உன்னைத் தன்மாக்கத்திலிருந்தும் அகற்றி இட்டுப்போகத்தான் நான் அவ்விடம் வந்தது" என்று சொல்லி என்னைத் தற் செயலாகக் கண்டுபிடித்ததற்காக மிக்க சந்தோஷமடைந்தார். அவரை நான் தப்பினர் என்று தெரிந்து கொள்வதற்குமுன் யாரோ அவஸ்தையில் இருப்பவர் என்று நம்பி உபகாரம் செய்ததற்காக சந்தோஷப்பட்டு என் உபகாரசிந்தையை மெச்சினர். அவருடைய அன்புக்கெல்லாம் நான் கொஞ்சமேனும் அருகனாகில் லாதிருந்தும் அவர் என்மேல் அவ்வளவு பக்ஷமாயிருப்பதைக் கண்டு என்மனம் உருகிற்று. அவர் எழுத்து நடக்கச் சக்தியுள்ளானவுடன் நான் அவருடன்கூட ஊருக்குத் திரும்பிவருவதாக ஒப்புக்கொண்டேன். கொஞ்சநாள்களுக்குள் அந்த இணையற்ற வைத்தியருடைய சாமர்த்தியத்தால் என் தன்னைக்கு நடக்கச் சக்தியுண்டாயிற்று. அதுவரையில் நான் அவரைவிட்டு அப்புறம் அகலவில்லை.

எங்கள் பிரயாணத்திற்கு முதனாள் நான் எனது முக்கிய சினேகிதர்களிடம் உத்திரவு பெற்றுக்கொள்ளப்போனேன். ஒரு கிழவனுடைய மூட்டாள் தனமான வார்த்தையைக் கேட்டுக்கொண்டு நாட்டுப்புறம்போய் அழுந்திக்கிடக்க வேண்டாமென்று என் நண்பன் வாதசேனன் எனக்கு வெகுதூரம் புத்திசொன்னான். இப்பொழுது அவன் பேச்செல்லாம் எனனிடம் ஏறவில்லை. நான் திரும்பவும் என் தகம்பனரைப் பின் தொடர்ந்து ஊர்சென்றேன். என் தந்தை இப்பொழுது என்னைக் கலியாணம்செய்து கொள்ளும் படியாக மிகவும் வேண்டினர். ஆனால் நான் காதலின் சிறப்பையும் இழிவையும் வேண்டியமட்டும் அனுபவித்திருந்தபடியால் அவர் வார்த்தைக்குக் கொஞ்சமேனும் இணங்கவில்லை.

ஜகந்நாதர் கொஞ்சநேரம் இங்கே தயங்கி தாமோதரனைக் கொஞ்சநேரம் உற்று நோக்கினர். அவனுடைய முகம் ஒரே திடீரென்று வெளுத்தும் சிவந்தும் மாறிக் காணப்பட்டது. இதைப் பார்த்துவிட்டுக்கிழவர் அதைபபற்றி ஒன்றும் சொல்லாமல் மேலே தன் கதையைச் சொல்லிகொண்டு போனர்.

இப்பொழுது எனக்கு ஒரு குறையுமில்லாதகால் திரும்பவும் புஸ்தகங்களை எடுத்து ஆராய்ச்சிசெய்ய ஆரம்பித்தேன். இதற்கு முன் எப்பொழுது மிருந்த அக்கரையைவிட இப்பொழுது அதிக

அக்கரையுடனும் கவலையுடனும் படித்தேன். நான் இப்பொழுது படித்த புஸ்தகங்கள் எல்லாம் தர்க்கமும் வேதாந்தங்களு மடங்கி யன. இப்புஸ்தகங்கள் செல்வமும் அதிகாரமுபடையும் வழியைக் கற்பிக்காது போனலும் அவற்றையுடையவர்கள் ஸகூயம் பண் ணுமலிருக்கக் கற்றுக்கொடுத்தன. இவற்றுடன்கூட இத்தத்துவங் களெல்லாம் சதிரவன் முன் விளக்கேயாகும் பகவத்கீதையையும் ஆராய்ந்தேன். இப்புத்தகத்திற்குச் சமமானது வேறு எதேனு மிருக்கிறதோ? இவ்வுலகில் மற்றைய புஸ்தகங்களெல்லாம் அளிக் கும் அறிவைவிட இதில் போதிக்கப்பட்டிருக்கும் அறிவு மேலா னது. கடவுளே வந்து திருவாய் மலர்ந்ததாலல் இதின்மகிமை யைச்சொல்லவும் வேண்டுமோ? இதைக் கையில் எடுத்துப்படித்த தும் இதற்கு முன் வேதாக்கத்திலும் தத்துவத்திலும் செலவிட்ட காலம் எல்லாம் வியர்த்தகாலமென்று எண்ணினேன். அவற்றில் எழுதியிருப்பவையெல்லாம் தப்பு என்று நான் சொல்லவில்லை. வெகு கிரமப்பட்டு அவ்வளவு நூல்களிலிருந்தும் கற்றதற்குமே லாக இவ்வொரு கிரந்தத்திலிருந்தும் கற்றுக்கொள்ளலாம். தத்து வம் நமது புத்தியை அதிகரிக்கலாம். ஆனல் கீதை நம்மைச் சத் புருஷர்களாக்குகிறது. தத்துவம் படித்தவரை மனிதர்கள் மதிக்கி றார்கள். கீதா அர்த்தம் தெரிந்தவரைக் கடவுளே விரும்புகிறார். இவ்விதமாக நான் நாலுவருஷம் மகா ஆநந்தமாய்க் காலம்கழித் தேன். அந்த நாலுவருஷமும் இகலோக வியசனம் ஒன்றுமே நான் அறியாதிருந்தேன். இதற்கிடையில் என்னை அதிகமாக நேசி த்துவந்த என் தந்தை இறந்துவிட்டார். அதினல் எனக்குண்டா கிய துயரத்தைச் சொல்லமுடியாது. நாளாகவாகக் கொஞ்சம் கொஞ்சமாக எனக்குத் துக்கம் தணிந்தது. திரும்பவும் நான் என் புஸ்தகங்களை யெடுத்துக்கொண்டேன். அதில் மூழ்ந கவனத்தைச் செலுத்திவந்தபடியால் என் தந்தை இறந்த விசனம் மாறிவிட் டது. என் தந்தை இறந்ததால் குடும்பத்தில் எனக்கு முன்னிருந்த சௌகரியங்கள் ஏற்படவில்லை. இப்பொழுது என் தமயன் என் தந்தையின் ஆஸ்திக்கெல்லாம் பாத்தியஸ்தனனன். அவனுடைய அபிப்பிராயமும் என்னுடைய அபிப்பிராயமும் ஒரே வழியான தன்று. என்னுடைய மார்க்கத்திற்கும் அவனுடைய மார்க்கத்திற் கும் கொஞ்சமேனும் சம்மந்தமில்லாதிருந்தது. நாங்களிருவரும் சேர்ந்திருந்தால் ஒருவிதத்திலாவது ஒத்துப்போவதில்லை. என்னைத் தேடிவந்த சில சினேகிதர்களுக்கும் என் தமயன் நண்பரான வேட் டைக்காருக்கும் சதா சண்டையும் சசரவுமாயிருக்கும். அவர்கள் வீட்டில் வந்து பெரிய கூச்சல்போட்டுத் தகாதவார்த்தைகளைப் பேசிக்கொண்டிப்பது மல்லாமல் என் நண்பர்களை உதாசினமாய்ப் பேசி அவமானப்படுத்துவார்கள். ஆதலால் நானும் என் நண்பர் களும் அவர்களுக்கு முன்னிற்பதேயில்லை. கொஞ்சநாளில் நானும் என் தமயனும் பிரிந்துபோனேம். வைத்தியர்களுடைய புத்தி

மதிப்படி தேக சௌக்கியத்திற்காக வேதபுரிபோய்ச்சேர்ந்தேன். நான் அங்குபோன இரண்டாம் நாள் ஆற்றோரமாய் உலாவிவரும் போது சூரியன் கடுமையாகக் காய்ந்ததால் நிழலுக்காக அங்கிருந்த மரங்களின் கீழ்ப்போய்த்தங்கினேன். அங்குபோய் உட்கார்ந்த கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ஒருவன் பெருமூச்சுவிட்டு விக்கி விக்கி அழுதுகொண்டிருந்த சப்தம் காதில்பட்டது. அவன் மனந் தளரமல் ஏதேதா திட்டிவிட்டு இனி இதைப்பொறுக்கவே முடியாது என்று சொல்லித் தண்ணீரில் குதித்தான். நானிருந்தவிடத்திலிருந்து திடுக்கிட்டு எழுந்து ஒத்தாசைக்காக இரைந்து கூவிக்கொண்டு அவன் விழுந்த இடம் ஓடினேன். நான் உட்கார்ந்த இடத்திற்குக்கொஞ்சம் கீழே ஒருவன் மீன் பிடித்துக்கொண்டிருந்தான். என் தொனியைக்கேட்டு அவனும் ஓடிவர நாங்களிருவரும் நீரில்விழுந்து குதித்து அவனைப் பிரயாசைப்பட்டு வெளியில் இழுத்தோம். கரையில் கொண்டுவந்ததும் அவனுக்கு உயிர்போய்விட்டதென்று எண்ணினேனும். இந்த சமயம் இதர ஜனங்களும் வந்து கூடியதால் அவன் காலைத்தூக்கி உதரினேனும். வாயிலிருந்து நீரைக் கக்கினான், அப்பொழுது மூச்சும்வந்தது. கொஞ்சநேரத்தில் கைகளையும் கால்களையும் அசைத்தான். அங்குவந்து கூடியவர்களில் ஒரு வைத்தியனுமிருந்தான். அவன் அந்த தேகத்தை எடுத்து ஒரு உஷ்ணமான இடத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கும்படி சொல்ல அப்படியே செய்தோம். அம்மனிதனுடைய வீடு எங்களுக்குத் தெரியாததால் ஒருசத்திரத்தில் கிடத்துவதற்காக எடுத்துப் போகையில் ஒரு ஸ்திரீ எதிரில் தென்பட்டாள். அவளிவனைப் பார்த்ததும் கூக்குரலிட்டு அழுது அவன் தன் வீட்டில் குடியிருந்ததாகச் சொன்னாள். நாங்கள் அந்தஸ்திரீயின் பின்னேடு அவள் வீட்டிற்கு அவனைத் தூக்கிப்போய்ப் படுக்கையில் போட்டோம். வைத்தியர் அவனுக்கு வேண்டிய சிகிச்சை செய்ததால் அவன் சீக்கிரத்தில் சொஸ்தப்பட்டான். மறுநாட்காலை அவன் வீட்டிற்குப் போனேன். போகையில் தற்கொலை செய்துகொள்ளும்படியாக அவ்வளவு விபத்து அவனுக்கு என்ன நேரிட்டது என்றும் இவ்வித காரியம் செய்வது பாவம், இனி அப்படி செய்யக் கூடாதென்றும் புத்தி சொல்லலாமென்று மெண்ணினேன். அவனுடைய அறைக்குள் நான் போனதும் நான் நாங்கள் ஒருவரையொருவர் நன்றாக அறிந்துகொண்டுவிட்டோம். அவன் தான் என் முக்கிய கினேகன் வாதசேனன். அவனுக்கும் எனக்கும் நடந்த சம்பாஷணையைப் பற்றி உங்களிடம் சொல்லி உங்களைத் தொந்தரை செய்ய எனக் கிஷ்டமில்லை. கதையை வீணாக வளர்த்துவானேன். எது முக்கியமோ அதைவிடாமல் சொல்கிறேன் என்று மேலே சொல்லத் தொடங்கினார்கள்.

Digitized by Tamil Digital Library

13. அத்தியாயம்.

உறிப்பனூ முண்பதாவுங் காணிற் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ்.

வாதசேனன் துன்மார்க்கத்தில் வர வர விருத்தியாகி கையில் ஒருகாசு மில்லாமல் மிகவும் அவஸ்தைப்பட்டதால் தற்கொலை புரிந்து கொள்ளத் தீர்மானித்து விட்டதாக என்னிடம் சொன்னான். தற்கொலை செல்வதின் பாவத்தைப் பற்றியும் அதினால் மறுமையில் அனுபவிக்க வேண்டிய துன்பங்களைப் பற்றியும் என்னால் கூடியமட்டுமெடுத்து அவனிடம் சொல்லிப்பார்த்தேன். ஆனால் அவன் ஒன்றையும் கவனிக்கவேயில்லை. அவன் செய்த காரியத்திற்குக் கொஞ்சமேனும் வருத்தப் பட்டவனைத் தோன்றவில்லை. அவன் திரும்பவும் அப்படியே செய்யப் போவதாகவும் சொன்னான். நான் என் சம்பாஷணையை முடித்ததும் அவன் என் கேள்விகளுக்குப்பதில் சொல்வதற்குப் பதிலாக கண் கொட்டாமல் கொஞ்சநேரம் என்னைப்பார்த்து விட்டு "நண்பா, முன் எனக்கு உன்னைத் தெரிந்திருந்ததிலும் தற்காலம் மிக்க மறுபாடைடைந்திருக்கிறாய். நமது நாட்டிலிருக்கும் எந்த வித்துவானுலும் உன்னைபபோல் நியாயத்தை யெடுத்துப் பேசுவான் என்று நான் நினைக்கவில்லை. இந்த சமயத்தில் எனக்கு யாராயினும் 100 பவுன் கடன் கொடுக்கா விட்டால் நான் தற்கொலை புரிந்து கொள்ளவாவது வேண்டும் பட்டினிகிடந்து சாகவாவது வேண்டும். பின்னால் சொன்ன சாவுகோரமான சித்திரவதை யாதலால் தற்கொலை செய்து கொள்வதே மேல்" என்றான். நான் அவனுக்கு மிக்க நிதானமாகப் பதில் சொன்னேன். என்னை அவன் முன் பார்த்ததற்குப் பிறகு முழுவதும் மாறிவிட்டதையும் நான் செய்த குற்றங்களை யெல்லாமறிந்து அவற்றிற்காக மிக்க வருத்தப் படுவதையும் எடுத்துச் சொன்னேன். கடைசியில் அவன் உண்மையில் கஷ்டப்படுவதை யறிந்து திரும்பவும் சூதாட்டத்திற்குப் போகாதிருந்தால் நானே அந்த நாறு பவுன் கடன் கொடுப்பதாக வாக்களித்தேன். இதைக் கேட்ட வாதசேனனுக்கு மிக்க ஆனந்தமுண்டாகி விட்டது. என் கையை மிக்க ஆவலுடன் பிடித்து ஆயிர வந்தனங்கள் எனக்குச் சொல்லி நான்தான் உண்மைச் சிநேகன் என்றுனியந்து குதூகலித்தான். அன்றியும் தனக்கு அப் பொழுது உபகாரம் செய்தால் தான் இனி துன்மார்க்கத்திற்குப் போவதே யில்லை யென்றும் ஏதாவது ஒரு தொழிலை லமருவதாயும் வாக்களித்தான். இதைக் கேட்ட நான் யோக்கிய ஜீவனம் செய்வதற்கு ஏதாவது ஒரு தொழிலை யனுசரித்தால் அதற்கு வேண்டிய முதலை நானே அவனுக்குக் கொடுத்து உதவுவதாகவும் பின்னால் அவனுக்கு லாபம் கிடைத்தால் அதைத் திருப்பிக

கொடுத்து விடலாம் என்றும் சொன்னேன். சூதாடுவதற்கு அவன் கொஞ்சமேனும் தகுதியானவனல்ல. அதில் அவனுக்கு நஷ்டம் வருமேயன்றி லாபம் கிடைக்காது. ஆதலால் எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரமாக சூதை விட்டு ஒழிக்கிறானோ அவ்வளவுக் கவ்வளவு அவனுக்கு நன்மையுண்டாகுமென்று நான் வெகு தூரம் புத்தி சொன்னேன். இதை யெல்லாம் கவனமாய்க் கேட்டு வந்த வாதசேனன், "நீ சொல்வதென்ன ஆச்சரியமாகவிருக்கிறதே. எனக்குச் சூதாடத்திலாதென்ன நினைக்கிறாய்? உங்கள் எல்லாரையும்விட நான் நன்றாக ஆடுவேன். நீ எவ்வளவு வேண்டுமானாலும் பந்தயம் வைத்து ஆடிப்பார். இப்பொழுது நீ சொன்ன 100-பவுனும் கையிலிருக்கிறதா? இருந்தால் என்னிடம் கொடு" என்றான். அதற்கு நான் "என்னிடம் 50 பவுன் நோட்டு தானிருக்கிறது. பாக்கியை நாளைகாலமே கொண்டுவந்து கொடுக்கிறேன்" என்று சொல்லி அவனிடம் அந்த நோட்டைக் கொடுத்துத் தருத்த புத்தி மதிகளையும் சொல்லி விடு சென்றேன்.

அன்று சாயங்காலமே எனக்குப்பணம் கிடைத்து விட்டபடியால் பாக்கி 50 பவுனையும் எடுத்துக்கொண்டு வாதசேனன் வீட்டுக்குப் போனேன். அங்கு அவன் பெருத்த சூதாடி ஒருவனுடன் சூதாடிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். இதைக் கண்ட எனக்கு என்னமாயிராது. நான் வந்தபோதுதான் நான் கொடுத்திருந்த 50 பவுன் நோட்டை வாதசேனன் சூதாடியிடம் இழந்தான். அந்தச் சூதாடி அந்த நோட்டைப் பெற்றுக்கொண்டு 30-பவுன் வாதசேனன் கையில் கொடுத்தான். என்னைக் கண்டதும் சூதாடி எழுந்து போய்விட்டான். வாதசேனன் என்னைப் பார்த்து "நண்பா, உன்னைப்பார்க்க எனக்கு வெட்கமாயிருக்கிறது. நான் தூர்ப்பாக்கியன் என்று இப்பொழுது தான் அறிந்து கொண்டேன். இனிப் பாச்சியைக் கையால் தொடுகிறதில்லை. நான் தொழிலை மருவதற்கு நீ வாக்களித்ததைக் கொடு, அதையே கைப்பற்றுவதென்று தீர்மானித்து விட்டேன்" என்றான். இவன் சொன்னதில் எனக்குக்கொஞ்சமேனும் நம்பிக்கையில்லாதபோனாலும் நான் கொண்டு வந்திருந்த 50-பவுனையும் அவனிடம் கொடுத்துவிட்டு மொத்த பணத்திற்கு ஒரு புரோ நோட்டு வாங்கிக்கொண்டு வந்து விட்டேன். அந்த பணத்தைத் திருப்பிப் பெறுவேன் என்கிற எண்ணம் எனக்குக் கொஞ்சங்கூடக் கிடையாது. இந்த சமயத்தில் வாதசேனனுக்கு சிகிச்சை செய்த வைத்தியன் மிக்க சந்தோஷத்துடன் ஓடி வந்து மன்னர்பிரபு ஒருபெரிய சேனையைக்கூட்டிக்கொண்டு ராச்சியத்தின்மேல் படை எடுத்து வந்திருப்பதாகவும் அவருடைய சைனியத்தின் ஒருபாகம் உத்திரபுரத்தை முற்றுகையிட்டிருப்பதாகவும் சொன்னான். இந்த வைத்தியன் ராசகிய விஷயத்தில் மிக்கசிரத்தையுடையவன். யார் எதைச்சொன்னாலும்

நம்பிவிடுவான். இவன் ஒன்றைப் பத்தாகப்பெருக்கியுங்கூறுவான், ஆதலால் இவன் சொல்வதை அதிகமாய் நம்பக்கூடாது. இருக்கும் ஒரு சிறு சைனியம் நமது தேசத்தின்மேல் படையெடுத்து வந்திருப்பதாக ஜனங்களெல்லாஞ் சொல்லக்கேட்டு உண்மையறிந்தோம். ஆதலால் இந்தக் கலகக்காரரோடு போர்புரிவதாக நிச்சயித்து நானும் வாதசேனனும் சென்று சண்டையிட்டு காயமடைந்து பிடிபட்டுவிட்டோம். பின்பு மெள்ள விரோதிகளிடமிருந்து தப்பி வெகுதூரம் ஓடிவந்ததும் அங்கு ஒரு குடிசையைக் கண்டோம். அதில் ஒரு கிழவி குடியிருந்தாள். நாங்கள் குடிசைக்குள் நுழைந்ததும் அக்கிழவி எங்களை அன்புடன் அழைத்து உபசரித்தாள். என் காயத்திற்கும் மருந்துபோட்டுச் சிக்கிரம் ஆற்றிவிட்டாள். மறுநாட்காலை வாதசேனன் ஏதோ சாமான் வாங்கி வர வேண்டுமென்று என்னிடம் சொல்லிவிட்டு வெளியேறினான். எதற்குப்போனான் என்று நான் எப்படி சொல்வது? கீர்தீன் நம் புவீரா? இந்தப் பாதகனை வாதசேனன் எதிரிகளுடைய குதிரைப்பட்டாளம் ஒன்று வருவதைக் கண்டு அவர்களிடம் என்னைக் காண்பித்து நான் இருக்குமிடத்தையும் தெரிவித்துவிட்டான். அதனால் என்னை ஆறு சிப்பாய்கள் தேடிவந்து பிடித்துச் சிறைச்சாலைக்குக் கூட்டிப்போனார்கள். நான் இவர்கள் கையில் அகப்பட்டது அவ்வளவு துயரமாகவில்லை. கொஞ்சங்கூட கிருதக்ஞையில்லாத நண்பனுடன் கூடப்போனதே அதிக துயரத்தை விளைத்தது. அவனையும் எதிர்க்கக்ஷியில் போர் புரிந்தவன் என்று கைதியாக்கினார்கள். ஆனால் அவனை என்னைவிட சௌகரியமாகவே நடத்திவந்தார்கள். அவன் என்னைக் கண்டதும் தான் காட்டிக் கொடுக்கவில்லை என்று பொய் பேசினான். ஆனால் நான் அவனை மிகவும் வெறுத்து வைது பேசியதால் என்மேல் அவனுக்குக் கோபம் மூண்டு தான் செய்த குற்றங்களை யெல்லாம் என்மேல் சுமத்தி அவனையும் நான்தான் தூண்டி எதிரிகள் பக்கமிருந்து போர் புரியும்படிச் செய்ததாகச் சொன்னான். இந்த அபாண்டத்தைக் கேட்ட எனக்கு உண்டான கோபத்திற்கும் வெறுப்புக்கும் அளவு சங்கையில்லை. அதிருஷ்டவசத்தால் நான் எதிரிகள் கையிலிருந்து தப்பினேன். ஒரு குறுகிய சந்தின் வழியாய் என்னைப் போர்வீரர்கள் கூட்டிவரும்போது என் பக்கத்தார் ஐம்பதுபேர் வருவதைக் கண்டு பிழைத்தால் போதுமென்று ஓடிவிட்டார்கள். எங்களிருவரையும் பின்னால் விட்டுப் போனார்கள். என்னோடிருந்த பாதகன் உடனே ஓட்டம் பிடித்தான். இல்லாவிடில் அப்பொழுதே பழி தீர்த்திருப்பேன். இப்பொழுது நான் சுவாதீன மடைந்ததும் நான் குறுக்குப்பாதையிலும் வயலிலும் விழுந்து மனிதர் கண்ணுக்குத் தென்படாது வழிநடந்து கொண்டே வந்தேன். எனெனில் எவனைப் பார்த்தாலும் என்னை எதிரிகளிடம் காண்பித்து விடுபவன்போல் தோன்றினான். வெகுநாள் இவ்விதமாக நடந்து

கடைசியில் இந்தக் குடிசை வந்து சேர்ந்தேன். நான் முதலில் இங்கு வந்தபொழுது இந்தக் கிழவியின் தாயாரோடு வசித்தேன். ராஜ்ஜியத்தில் கலகமெல்லாம் அடங்கிச் சமாதானம் ஏற்பட்ட பிறகுதான் நான் என் வீட்டிற்குப் போய் தமயனைப் பார்த்தேன். பிதிரார்ஜ்ஜிதத்தில் என் பாகத்தை யெல்லாம் அவனிடமே கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக நான் உள்ளவரையில் எனக்கு வருஷத்திற்கு 1000 பவுன் ஜீவனார்த்தத்திற்குக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்துகொண்டேன். நான் அவனுடனிருக்க அவனுக்கு இஷ்டமில்லாததினாலும் எனக்கு அவனோடு சேர்ந்திருக்க விருப்பமில்லாததினாலும் நான் உடனே புறப்பட்டு இங்கு வந்து சேர்ந்தேன். அன்றுமுதல் இன்றுவரையில் என் சரித்திரத்தில் ஒன்றும் விசேஷமில்லை என்று முடித்தார்.

தாமோதரன் அன்றுமுதல் இன்றுவரையில் இங்கேதானே வசித்துக்கொண்டிருக்கிறீர் என்று கேட்க, கிழவர் "இல்லையப்பா! நான் தேசயாத்திரை செய்துகொண்டிருந்தேன். ஐரோப்பா கண்டத்தில் நான் பார்க்காத தேசம் கிடையாது" என்ன, தாமோதரன் "அதைப்பற்றித் தங்களைத் தொந்திரவுபடுத்த எனக்கிஷ்டமில்லை. இவ்வளவு நேரம் தாங்கள் சிரமப்பட்ட பிறகு திரும்பவும் தங்களைப் பேசச்செய்வது தகுதியல்ல. தாங்கள் அனுபவமும் அறிவு முள்ளவர்களாதலால், தங்களுடைய யாத்திரையிற் கண்ட அதிசயங்களையெல்லாம் பின்னொருதரம் விரிவாகத் தெரிவிக்கவேண்டும்" என்று வேண்டிக்கொள்ள, கிழவர் "அப்படியே அப்பா, என்னால் கூடியமட்டும் சொல்லி உனக்குத் திருப்தி செய்விக்கிறேன்" என்றார்.

14. அத்தியாயம்.

நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள தனைர்வார்ப் பெறின்.

பின்பு கிழவர் சிரமபரிகாரஞ் செய்துகொண்டு தாமோதரன் வேண்டுகோளை யனுசரித்து அடியிற் கண்டவாறு தமது தேசயாத்திரை யனுபவத்தைச் சொல்லலானார்.

இட்டாலி தேசத்தில் சத்திரக்காரர்களெல்லாம் மௌனமாயிருப்பார்கள். பிரான்ஸ் தேசத்தில் அவர்கள் வாய்ச்சாலகராயும் மரியாதைக்காரராயு மிருப்பார்கள். ஜர்மனியிலும் உலாந்திலும் அதிகப்பிரசங்கிகளாக விருப்பார்கள். அவர்கள் யோக்கியதை ஒரே தன்மையானது. தான் மோசம்செய்ய எங்கு சமயம் வாய்க்குமென்று காத்துக்கொண்டிருப்பார்கள். குதிரை வண்டிக்காரர் உலகமுழுவதும் ஒரே குணமுடையவர்கள் தான். என் யாத்திரையில்

மனுஷர்களைப்பற்றி இவ்வளவு தான் சுவனித்தேன். நான் தேச யாத்திரைசெய்தது இந்தப்பூமியின் பல பாகங்களையும் கடவுள் எப்படிச் சிருஷ்டிக்கச் செய்திருக்கிறார் என்பதைப் பார்ப்பதற்காக வே. இந்தப் பலவித தோற்றங்கள் நமக்குச் சந்தோஷத்தை விளைவிப்பது மல்லாமல் அவைது அபார சக்தியையும் விளக்குகின்றன. ஜனங்களுடைய பலவித ஒழுக்கங்களையும் நடவடிக்கைகளையும் அறியவேண்டுமானால் ஒருவன் வெளியில் நடக்கும் பண்டிகைகளைப் போய்ப்பார்த்தால் போதுமானது. வேறிடம் போகவேண்டியதில்லை. ஐரோப்பாவில் பல ராஜதானிகளிலும் நடக்கும் மாயமாலங்களும் மோசங்களும் பாவச்செயல்களும் வேறுவிதமாக அயல்நாட்டுப் பண்டிகைகளில் நடந்துவிடும். ஸ்பெயின் தேசத்தில் எந்த பண்டிகையும் மிக்க பயபக்தியோடு நடந்தேறுகிறது, இட்டாலியிலிதை மிக்க விபரிசையோடு நடத்துகிறார்கள். பிரான்ஸ் தேசத்தில் ஒரு குத்திரன் ஒரு பிலுக்கனைப்போல வேஷம் போட்டுக்கொள்வான், வடதேசங்களில் அவலக்ஷணமானவன்போல் உடைதரிப்பான். எங்குபார்த்தாலும் மானுஷீகம் ஒன்றுதான். எங்கும் அது சருவசாதாரணமாக்கவும் தூஷிக்கவும் தக்கதே. இப்படித்தான் என் வாழ்நாளைக்கழித்தேன். இங்குவந்து தங்கியிருந்த நாள்முதல் ஒரு விசேஷமும் நடக்காதபடியால் உனக்கு ருசிக்கத் தக்கதாகச் சொல்லக்கூடியது ஒன்றுமில்லை" என்றார். தாமோதரன் கிழவருக்கு வந்தனம் செய்துவிட்டு "தாங்கள் வாழ்நாளை ஒரே விதமாக இவ்விதம் கழிக்கத் தங்களுக்கு வெறுப்பாயிருக்கவில்லையா? ஒரு பிரயோஜனமுள்ள காரியத்தையும் செய்யாமல் இவ்வளவு வருஷங்களை வியர்த்தமாய்க்கழித்தது எனக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணுகிறது" என்றான். கிழவர் "எனக்கு இதில் ஒன்றும் அதிசயமில்லை. இதத்தையே நாடி இருப்பவர்கள் வேலை ஒன்றுமில்லாது வீணை காலம் கழிப்பதென்றால் நம்பத்தக்கதாயிராது. தெய்வசிருஷ்டியையும் அதின் மகிமைகளையும் அறிந்து இம்மலைகளும், ஆறுகளும், சூரியனும், நக்ஷத்திரங்களும், வானமும், காற்றும், கனலும், தெய்வ வல்லமையின் ஒரு அணு அளவே என்று தெரிந்து அந்த சுயம்புவை மனனம் பண்ணிக்கொண்டிருப்பவனுக்கு வேறுவேலை என்னவேண்டும்? தெய்வத்தையே மனத்தில் வைத்து சம்பாஷணை, சம்வர்க்கம் எல்லாம் அவருடனேயே செய்துகொண்டிருப்பவனுக்கு வருஷங்களும் யுகங்களும் நீண்டகாலம் என்று தோன்றுமா? உலகங்களில் அனுபவிக்கும் அற்பவேடிக்கைகளும் பொய்யின்பங்களும் மதிகெட்ட காரியங்களும் நமது காலத்தைக் கவரமுடியுமா? எப்படி எவ்வளவு காலமிருந்தாலும் தெய்வ சங்கல்பத்தை ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வரப்போதாதோ அப்படியே எந்த இடமானாலும் கடவுளின் மகிமையையறிய சாதகங்கள் போதுமானவை கிடைத்துள்ளனவென்று திருத்தியடையலாகாது. அவருடைய சக்தியையும் அறிவையும் இருபாகுணத்தை

யும் தெரிவிக்காத பொருளும் உலகில் இருக்கிறதோ? உதய மாகும் ஆதித்தன் கிழக்கே தனது பெருமையை யெல்லாங் காட்டிப் பிரகாசித்துத் தெய்வவல்லமையை விளக்கவேண்டியதில்லை. பெறங்காற்று ஆகாய மளாவியிருக்கும் மரங்களே மேலுடன் விழ்த்திக் கடவுளுடைய மகிமையைத் தெரிவிக்கவேண்டியதில்லை. கார்மேகங்கள் மழையைச் சண்டப் பிரசண்டமாய்ப் பெய்யச் செய்து சிருஷ்டி கர்த்தாவின் தன்மையை வெளிப்படுத்த வேண்டியதில்லை. சிருஷ்டியில் மிகா அற்பமான ஒரு பூச்சியாகட்டும், பூண்டாகட்டும், தெய்வத்தினுடைய அபூரபுத்தியை நன்கு தெரிவிக்கும். இந்தப் படைப்பில் அவருக்கு அவமானத்தை யுண்டு பண்ணும் ஒருவித ஜீவன் மாத்திரமிருக்கிறது. அத்துடன் வெகு நாளாய்ச் சம்பாஷிப்பதேயில்லை என்று விரதம் வைத்துக்கொண்டிருக்கிறேன். இவ்வுலகத்தில் உயர்ந்தோனை மனிதன் தெய்வ சிருஷ்டிகளெல்லாம் மேலானவன். இம்மனிதன் மாத்திரம் அயோக்கியதையினாலும், கொடுமையினாலும், கிருதக்ஞதின்மையினாலும் பாதகத்தொழிலினாலும், கடவுளுடைய பேரறிவைச் சந்தேகிக்கும் படியாகச் செய்துவிடுகிறான். பரம்தயாளரான, கடவுள் இவ்வளவு துஷ்டத்தனமும் துர்ப்புத்தியுமுடைய மனிதனை என் படைத்தார் என்று கேட்க இடங்கொடுக்கிறது. இப்படிப்பட்ட மனுஷனுடைய சம்வர்க்கத்தில் இராத்திரியில் என் வாழ்நாளை விணாகக் கழித்துவிட்டதாக நீர் நினைக்கிறீர்" என, தாமோதரன் "தாங்கள் முதலில் சொன்னதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அதில் ஒரு ஆக்ஷேபனையும் சொல்லமாட்டேன். ஆனால் தாங்கள் பொதுவாக எல்லா மனிதர்களையும்பற்றி இப்படிப்பட்ட கெட்ட அபிப்பிராயங்கொண்டிருப்பது நான ஒப்புக்கொள்ளக் கூடியதாகயில்லை. மனுஷர்களில் மிகத் தாழ்ந்தும் கெட்டுப்போயுமுள்ள சிலகாரக் கொண்டு மனிதவர்க்கமே துன்மார்க்கமுடையது என்று தாங்கள் கொண்டது சரியான அபிப்பிராயமன்று. ஆனால் ஒரு கூட்டத்தில் எது சிரேஷ்டமானதோ அதைக் கண்டுதான் அக்கூட்டத்தைப் பற்றி ஒரு அபிப்பிராயஞ் சொல்லவேண்டும் என்று ஒரு வித்துவான் சொல்லியிருக்கிறார். ஒரு கூட்டத்தில் இரண்டு மூன்று அயோக்கியர்களிருந்து அவர்களால் ஒருவருக்கு இம்சை நேரிட்டால் அக்கூட்டத்தையே நிந்திப்பது சரியாகுமா?" என, இதவர் "நான் வேண்டியமட்டும் அனுபவம் பெற்றிருக்கிறேன். எனது முதற்கதலியும் முதல் நண்பனும் எனக்கு மகா ஈனமாய்க் கட்டிக் கொடுத்தது மல்லாமல் என் உயிருக்கு வழிதேடவும் ஆரம்பித்தார்கள்" என்று சொல்ல, தாமோதரன் "ஆனால் தாங்கள் இதைப் பற்றி நன்றாயோசித்தவேண்டும். வேசிவீட்டில் கிடைத்த காதலியும் சூதாட்டத்தில் கிடைத்த நண்பனும் வேறெவ்விதத்தான் கடைத்துகொள்வார்கள்? இவ்விதமனிதர்களைக்கண்டு மனுஷ ஜாதியைப் பொல்லாதது என்று சொல்வது சாக்கடைக் குழியினிடம் போய்

நின்றுகொண்டு காற்றெல்லாம் நாற்றமுடைத்து என்று சொல்வது போலாகுமன்றோ? எனக்கு உலகத்தில் அனுபவம் கொஞ்சமாயிருந்தபோதிலும் மிக்க ஆபத்த நட்பையுடைய மனிதர்களையும் மேலான காதலையுடைய ஸ்திரீகளையும் நான் கண்டிருக்கிறேன்" என, கிழவர் "இருக்கலாம், நீர் சொல்லுகிற பிரகாரம் அனுபவம் உமக்குக் குறைவுதான். உம்மைவிட எனக்கு வயது அதிகமாகியிருந்தசமயத்திலும் நான் உமது அபிப்பிராயமே கொண்டிருந்தேன்" என்றார். தாமோதரன் "நீங்கள் துஷ்டர்களை நம்பியிராதிருந்தால் இன்னமும் அதே அபிப்பிராயத்தான் கொண்டிருப்பீர்கள். இவர்களைவிடக் கொடிய துஷ்டர்கள் உலகத்தில் இருந்தபோதிலும் அதிஞல் மனுஷஜாதியே கெட்டதென்று முடித்துவிடக்கூடாது. மனிதர்கள் சுபாவத்திலேயே நல்லவர்கள்தான்; கெட்ட நடத்தையிடையில் ஏற்பட்டதே; அதைத் திருத்துவது கடினமல்ல" என்று தடுத்துச் சொல்ல, கிழவர் தாமோதரனுடைய வார்த்தையைக் கொஞ்சமேனும் ஒப்பவில்லை. ஆதலால் தாமோதரன் அவருக்குக் கோபம் உண்டாக்கக்கூடாதென்று மௌனமாயிருந்துவிட்டான்.

விடியற்காலமாயிற்று, கிழவரை அன்னேரம் காக்கவைத்ததற்காக தாமோதரன் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வெளியே போக உத்திரவு கேட்டான். கிழவர் தான் இரவில் தூங்குவதில்லையென்றும், பகலில்தான் தூங்குவதென்றுஞ் சொல்லி அப்பொழுது தன்னுடே வந்தால் சுற்று வட்டங்களில் மிக்க வேடிக்கையான காக்ஷிகளைக் காண்பிப்பதாகச் சொன்னார். தாமோதரன் மிக்கஆவலுடன் அதற்குச் சம்மதித்தான். இருவரும் குடிசையைவிட்டு வெளிப்புறப் பட்டார்கள். பார்த்தனுக்குக் கதை முடிவில் தூக்கம் வந்து அயர்ந்து தூங்கி விட்டான்.

9. சம்புடம்.

1. அத்தியாயம்.

பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்.

அருணோதயமாயிற்று. பொழுது விடியுஞ் சமயமாயிருந்தது. தாமோதரனும் கிழவரும் அப்பொழுது குன்றின்மேல் ஏறிச் சென்றுகொண்டிருந்தார்கள். குன்றின் சிகரமடைந்ததும் தாமோதரன் ஓரிடத்தில் நின்று தெற்குப் பக்கத்தை நோக்கிக்கொண்டிருந்தான். கிழவர் அவனைநோக்கி "அவ்வளவு கருத்தாய் எதைப் பார்த்

துக்கொண்டிருக்கிறீர்" என்று கேட்டார். தாமோதரன் (பெருமூச் சுவிட்டு) "நான் இவ்விடம் வந்தவழி யெதுவென்று பார்க்கிறேன். கலசஸ்தானத்திற்கு மிதற்கும் இடையில்இருக்கும்தூரமெவ்வளவு? எனக்கும் என் சொந்த வீட்டிற்கும் இடையில் எவ்வளவு நிலம், மரங்கள் இருந்திருக்கவேண்டும்" என்று கேட்க, கிழவர் "வாலி பரே! உமது பெருமூச்சினால் வீட்டைவிட அதிகமாக வேறொரு வரைக் காதலிக்கிறீர் என்று எனக்கு நன்றாகத் தெரிகிறது. நீர் எண்ணும் பொருள் இப்பொழுது உமது கண்ணுக்கு எட்ட வில்லை. ஆனால் அதுஇருக்கும் பக்கத்தை நோக்க உமக்கு இன்பம் தருகிறது போலும்" என, தாமோதரன் (புன்சிரிப்புடன்) "ஐயா, தங்களுடைய பாலியம் தங்களுக்கு இன்னும் மறக்கவில்லையென்று அறிகிறேன். தாங்கள் அனுமானித்தபடியே என் எண்ணம் வேறு ஒரு பொருளின் மேல்தான் சென்றிருந்தது" என்றான். இவ்விதம் பேசிக்கொண்டே இருவரும் சிகரத்தின் மேலே நடந்து ஒரு பெரிய காட்டை அளாவியிருக்கும் அதன் வடமேற்கு மூலை சென்றார்கள். அங்கு வந்ததும் கீழே காட்டிலிருந்து ஒரு பெண் ணின் வீறிட்ட அழுகைச் சத்தம் காதில்படக் கேட்டார்கள். தாமோதரன் அதை ஒரு நிமிஷம் உற்றுக்கேட்டுவிட்டு தன் நண் பரிடம் ஒரு வார்த்தையும் சொல்லாது, தன் உயிருக்குங் கொஞ்ச மேனும் பயப்படாது சிகரத்தினின்றும் பாய்ந்து அழுகைச் சத் தம் வந்த இடத்திற்கு ஓடினான். அவன் காட்டிற்குள் ஓடினதும் அங்கு ஒரு ஸ்திரீயை பாதி நிர்வாணமாக நிறுத்தி அவள் கழுத் தில் ஒருவன் ஒரு கயிற்றைக் கட்டி மரக்கிளையில் மாட்டி அவளைத் தூக்கிட முயன்று கொண்டிருப்பதைக் கண்டான். தாமோதரன் ஒருகேள்வியும் கேட்காமல் தன் கையிலிருந்த மரத்தடியினால் அக்காதகன் ஒரு மனிதன் வந்திருக்கிறான் என்பதை அறிவ தற்கு முன்னால் அவனை ஓங்கி யடித்துத் தரையில் வீழ்த்தி மேன் மேலும் கைகொண்ட வரையில் சாற்றிக்கொண்டே இருந்தான். அந்த ஸ்திரீ தாமோதரனை நமஸ்கரித்து "இந்த சமயத்தில் உதவி செய்ததற்காக ஆயிர வந்தனமளிக்கிறேன். அந்தப் பாவிக்குத் தருந்த சிக்ஷை கிடைத்ததுபோதும்" என்று தாமோதரனை நிறுத் தினாள். அகாலத்தில் அந்த பயங்கரமான இடத்தில் தனக்குத் துணை வந்து தருண உதவி செய்தது தெய்வ சங்கல்பமேயன்றும், உண்மையில் அவன் தேவனைப்போலவே தோன்றுகிறான் என் றும் அந்த ஸ்திரீ சொன்னாள். இப்படிச்சொன்னவள் நடுவயதினை யுடையவள், அவள் முகம் அவளை அதிக அழகுடையவள் என்று தெரிவிக்கவில்லை. அவளுடைய மேலுடை யெல்லாம் நன்றாகக் கிழிபட்டிருந்தபடியால் செவ்வனே அமைந்திருந்த ஸ்தனங்கள் அவனைக் காப்பாற்றியவன் கண்களைக் கிறக்கி விட்டன. சில நிமிஷம் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டே மௌனமாய் நின் றார்கள். கீழ்விழ்த்துப்பட்ட காதகன் கையையும் காலையும் ஆட்டி

எழுந்திருக்கப்பார்த்தான். அவன் அந்த ஸ்திரீயைத் தூக்கி விடுவதற்காகக் கொண்டுவந்திருந்த கயிற்றால் தாமோதரன் அவன் கையைப் பின்னுக இழுத்துக்கட்டி விட்டான் இப்பொழுது அவன் முகச்சாயலைப்பார்த்ததும் அவன் நாதமுனியாக இருக்கக் கண்டு தாமோதரனுக்குண்டான சந்தோஷத்திற்கு அளவில்லை. நாதமுனியும் தனது பழைய சத்துருவை மறக்கவில்லை. ஆனால் அவனுக்குத் தாமோதரனைப்போன்ற சந்தோஷம் மாத்திரமில்லை.

தாமோதரன் அவனைத்தூக்கி நிற்கவைத்து "நீ என்னை இனி எப்பொழுதும் இவ்வுலகில் காணப்போகிறதில்லை யென்று எண்ணியிருந்தாய். இவ்விடத்தில் உன்னை நான் காண்பேன் என்று எனக்குக் கொஞ்சங்கூட எண்ணமில்லை. அதிர்ஷ்டவசமாய் நாமிருவரும் இங்கே சந்தித்தோம். நிரபராதியாயிருந்த எனக்கு நீ தீங்கு செய்ததற்குப் பிரதிசெய்யத் தகுந்த சமயம் இப்பொழுது வாய்த்தது" என, நாதமுனி "பின்னல் வந்து அடித்துத் தள்ளுவதுதான் யோக்கியதையோ? என்னிடம் இந்த சமயம் வாளில்லாததால் உன்னுடன் யுத்தம் செய்வதற்கில்லை. நீ யோக்கியனானால் நாமிருவரும் அடித்த ஊர்போய் யுத்தம் புரிவோம் வா" என்றழைக்க, தாமோதரன் "உன்னைப் போன்ற துன்மார்க்கனுக்கு யோக்கியதை வேறிருக்கிறதா? உன்னுடன் வீண்வாதமிட எனக்கு நேரமில்லை. உன்னை நியாயஸ்தலத்திற்கு இழுத்துவிட்டால் தகுந்த தண்டனை தானேகிடைத்து விடுகிறது. அப்படித்தான் செய்யப் போகிறேன்" என்று சொல்லிவிட்டு அந்த ஸ்திரீயைப்பார்த்து நீ இப்பொழுது உன் வீட்டிற்கு அருகிலிருக்கிறாயா அல்லது இந்தப் புறங்களில் உனக்குத் தெரிந்தவர் யாராவது இருக்கிறார்களா? நியாயாதிபதியிடம் போய் முறையிட சான உடைதரித்துப் போகவேண்டும்" என்றான். அந்த ஸ்திரீ அந்தப் பக்கங்களில் யாரையும் தனக்குத் தெரியாது என்று சொல்லிவிட்டாள். தாமோதரனுக்கு அப்பொழுதுதான் கிழவர் யுக்தி சொல்வார் என்ற ஞாபகம் வந்தது. அவர் என் தன்னைப் பின்தொடர்ந்து வரவில்லை யென்று ஆச்சரியப்பட்டான். ஆனால் கிழவரோ அச்சுவரத்து ஓரத்தில் வந்து உட்கார்ந்துகொண்டிருந்தார். கையில் துப்பாக்கி வைத்திருந்தும் தாமோதரன் எப்படி காரியத்தை ஜயித்து வருகிறான் பார்ப்போம் என்று எண்ணி சும்மாயிருந்தார்.

தாமோதரன் காட்டைவிட்டு வெளிவந்ததும் கிழவனார் உயர உட்கார்ந்திருப்பதைக் கண்டான். உடனே மலைமேல் மிக்க வேகமாயேறி அவரிடம் நிகழ்ந்த விஷயங்களை யெல்லாம் சொன்னான். கிழவர் அருகாமையில் உபாதானபுரம் எனுங்கிராமப்பட்டணம் இருப்பதாயும் அங்கு அந்த ஸ்திரீயை இட்டுப்போனால் வேண்டிய சௌகரியம் கிடைக்கும் என்றுஞ் சொன்னார். தாமோதரன் அவ்வூருக்கு வழியைக்கேட்டு அறிந்துகொண்டு பார்த்தன் தன்னை

அவ்வூரில் வந்து சந்திக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டுத் திரும்பவும் காடுநோக்கிச் சென்றான்.

நமது கதாநாயகன் சந்ததி விசாரிப்பதற்காகக் கிழவரிடம் சென்றபோது நாதமுனியுடைய கைகள் பின்னல் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தன. அதனால் அந்த ஸ்திரீக்கு அவன் ஒரு தீங்கும் செய்யமுடியாதென்றும் அப்படிச்செய்ய நெருங்கிய போதிலும் ஸ்திரீ குரல் கொடுத்தால் தான் உடனே திரும்பி வந்து விடலாம் என்றும் தாமோதரன் எண்ணினான். அன்றியும் அந்த ஸ்திரீயினிடம் ஏதாவது தோஷமாகச் செய்தால் உடனே தான் திரும்பி வந்து அவனுக்குத் தகுந்த சிட்சை விதித்து விடுவதாயும் பயமுறுத்திச் சென்றான். ஆனால் நாதமுனியுடைய கைகள் கட்டப்பட்டிருந்தபோதிலும் கால்கள் இரண்டும் தடையொன்றுமில்லாமலிருந்தனவென்பதைத் தாமோதரன் மறந்துவிட்டான். அன்றியும் அக்காலை உபயோகிக்கக் கூடாதென்று தாமோதரன் நாதமுனியினிடம் சொல்லவுமில்லை. ஆதலால் நாதமுனிக்கு அவ்விடத்தைவிட்டு ஏகுவதற்கு ஆக்ஷேபனை ஒன்றும் தோன்றவில்லை. உடனே காலை அகற்றி வைத்துத் தான் குறித்தவிடத்துக்கு நேராக நடந்தான். அந்த ஸ்திரீயும் தன்னைக் காப்பாற்றியவன் மேலேயே கண்ணைத் திருந்தபடியால் இவன் தப்பி ஓடியதைக் கவனிக்கவேயில்லை. தாமோதரன் திரும்பி வந்தபோது அந்த ஸ்திரீ தனியாக இருப்பதைப்பார்த்து நாதமுனியைத் தேட ஆரம்பித்தான். அந்த ஸ்திரீயோ தன்னை உடனே அடித்த ஊருக் கழைத்துப் போகும்படி கெஞ்சினாள். இதைக்கேட்ட தாமோதரன் "அவன் தப்பிப்போனதால் எனக்குலன்றும் நயமில்லை. 'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல - தன்னை மறப்பது நன்று' என்று செந்நாப்புலவர் உரைத்திருக்கிறார். ஆதலால் போனவன் பிழைத்துப்போகட்டும்" என்றான். என்றதும் அம்மாது எனக்காகத் தாங்களிவ்வளவுதூரம் மெனக்கெட்டது எனக்கு வருத்தமாயிருக்கிறது. மேலாடையில்லாது உங்களைப் பார்க்க எனக்கு வெட்கமாயிருக்கிறது. என்னைக் காப்பாற்றி அழைத்துப்போக ஆளிராதபோனால் நானே வழி நடந்து செல்வேன்" என்று கூற, உடனே தாமோதரன் தனது அங்கியை எடுத்து அவளிடம் கொடுத்து அதை அணிந்து கொள்ளச்சொன்னான். அவன் எவ்வளவு தூரம் சொல்லியும் அவள் கொஞ்சமும் அதற்குச் சம்மதிக்கவில்லை. அதற்குக் காரணம் என்னவோ நமக்குத்தெரியாது. அதனால் தாமோதரன் அவளை நோக்கி "நான் என் கடமையைச் செய்யவேண்டி. உன்னைக் காப்பாற்றினேன். ஆதலால் நீ என்னை அதிகமாகப் பெருமைபடுத்தவேண்டாம். உன்னை இட்டுப்போகும்போது உனக்கு முன்னாலேயேபோகிறேன். அதனால் உன் தேகத்தை நான் காண இடமிராது" என்றான். இவ்விதமாக அவ்விருவரும் அவ்விடத்தை

விட்டு உபாதானபுரம் நோக்கிப்போனார்கள். தாமோதரன் அவளைத் திரும்பிப்பார்க்காது போனலும் அவள் மேடுகளின்மேல் ஏறும் போது ஒத்தாசை கேட்டதாலும், அடிக்கடி தடுக்கி விழுந்ததினலும் இன்னுமிதுபோன்ற சில்லரை ஆபத்து அவளுக்கு நேரிட்டுக் கொண்டே யிருந்ததாலும் தாமோதரன் அவளை அடிக்கடி திரும்பிப் பார்க்கவேண்டியதாயிற்று.

2. அத்தியாயம்.

ஒத்ததறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாரு ளைக்கப் படும்.

தாமோதரனும் அவனுடைய சினேகிதியும் உபாதானபுரம் போனதும் அங்கே கண்ணுக்கு அழகாகத்தோன்றிய ஒரு சத்திரத்தில் தங்கினர்கள். அங்கு தங்களுக்கு ஒரு விடுதிபெற்று தாமோதரன் அதில் பிரவேசித்தான். அந்த ஸ்திரீயும் அவனைப் பின்தொடர்ந்தாள். அதற்குள் சத்திரக்காரன் "ஏ பிச்சைக்கார மூண்டை, எங்கே போகிறாய்? இங்கேயே நில்லு!" என்று அந்த ஸ்திரீயைப் பார்த்துச் சொல்ல, தாமோதரன் "அவளை உடனே விட்டுவிடு" என்று கர்ச்சித்தான். உடனே சத்திரக்காரன் அவளை விட்டுவிட்டான். அவளும் வேகமாக அறைக்குள் சென்றாள். தாமோதரன் வெளியே போய் அவளுக்குச் சில துணிகள் வாங்கி வருவதாகச் சொல்லிப்புறப்பட்டான். அவனுடைய உபகாரத்திற்காக அந்த ஸ்திரி அனேக வந்தனமளித்து சீக்கிரம் துணியுடன் வந்து சேரும்படி யனுப்பினாள்.

இவர்கள் தங்கின சத்திரம் மிக்க கௌரவமுள்ள தென்று பெர்பெற்றிருந்தது. கற்பை வெகுஜாக்கிரதையாகப் பாதுகாக்கும் அனேக ஸ்திரீகள் தங்கள் தேகசௌக்கியத்திற்காக வேதபுரிக்குப் போகும் வழியில் இங்கு வந்து தங்கிப் போவதுண்டு. ஆதலால் அந்த சத்திரக்காரி துன்மார்க்கமான நடத்தைக்காகிலும் பேச்சுக்காகிலும் இடம் கொடுப்பதில்லை. ஒரு கெட்ட செய்கை நிகழுமாயின் உடனே ஊர்முழுதும் பரவி அந்த சத்திரத்திற்கு இருந்த நற்பெயரை அழித்துவிடும் என்று அவளுக்குத் தெரியும் ஆதலால் மேற்சொன்ன இருவரும் சத்திரத்திற்கு வந்திருப்பதாக அவள் அறிந்ததும் அவர்களை உடனே அதினின்று வெளிப்படுத்த வழிதேடினாள். இதைச்செய்யும் பொருட்டு சாதாரண காலத்தில் சிலந்திப் பூச்சுக்களின் அருமையான கட்டடங்களை அழிப்பதற்காக உபயோகப்படுத்தப்படும் கோரமான நீண்ட ஆயுதத்தைக் கையில் தூக்கிகொண்டாள். இவ்வாயுதம் கூர்மையாக வாவது கெட்டியாகவாவது இராது. அதின் பிரயோகம் ஒரு வனுக்குக் காயத்தையாவது மரணத்தையாவது உண்டுபண்ணுது. அப்படி இருந்தும் அதன்காட்சி அனேக புத்திமான்களைப் பயப்

படச் செய்யக்கூடியது குண்டு திரைத்திருந்த பீரங்கிவாய்க்குப் பயப்படாதவீரரும் இவ்வாயுதத்தின் வாய்க்கு நடுங்குவார்கள். இந்த ஆயுதம் தங்கள் மேல் பிரயோகிக்கப்படுவதைத் தவிர்க்க மிக்க பரிதாபமான விதமாய்ப் பல்லைக்காட்டிக் கெஞ்சிக் கூத்தாடுவார்கள். இந்த ஆயுதந்தான் துடைப்பக்கட்டை. இதை ஆடுப் பங்கரையினின்றும் கையில் தூக்கி சத்திரக்காரி வெளிவந்தாள். அப்பொழுது தாமோதரன் இவளிடம் வந்து மேலிருந்த ஸ்திரீக்கு உடுக்கத் துணிவேண்டுமென்று கேட்டான். இவனிப்படிக் கேட்டதுபற்றி யெரியும் நெருப்பில் நெய்யை யூற்றி அவிக்க முயன்றதுபோலாயிற்று. தன் விளக்குமாற்றைத் தாமோதரன் மேல் கைகொண்டமட்டும் சத்திரக்காரி பிரயோகித்தாள். தாமோதரன் அவளை யெதிர்த்து யுத்தம் புரியாமல் அவளுக்குத் தண்டனிட்டு வணங்கித் தன்னை அவமானப்படுத்தாம லிருக்கும்படிக் கெஞ்சித் தான் சொல்வதைக் காதுகொடுத்துக் கேட்கும்படியாக வேண்டினான். இந்தசமயத்தில் சத்திரக்காரன் தோன்றித் தன் பெண்சாதிபக்கம் சேர்ந்துக்கொண்டான்.

எதிராளிகளின் குணத்தையறிந்து அவர்களுக்குத் தக்கபடி நடந்துக்கொள்ளும் வீரர் அனேகரிருக்கிறார்கள். தாமோதரன் தன்னை எதிர்த்த ஸ்திரீயின் தன்மையையறிந்து அவளுக்குக் கீழ்ப்படிந்தான். ஆனால் அவள் புருஷன்வந்து தன்னை எதிர்த்ததும் அவன் சும்மா யிராவிட்டால் தக்கசிக்ஷை விதிப்பதாகத் தாமோதரன் சொல்லிப் பயமுறுத்தி தன் கோபத்தை யெல்லாம் அவன்மேல் காட்டினான். சத்திரக்காரன் மிக்க உதாசினத்துடன் "உன்னால் என்ன ஆகும்? உன்னைப்போல் எத்தனையோ பெயர் இந்தச் சத்திரத்துக்கு வந்துபோ யிருக்கிறார்கள். உன்னைவிட நான் எவ்விதத்திலும் மேலானவன்" என்றுசொல்லி மேலிருந்த ஸ்திரீயை விபசாரி என்று ஆறு ஏழு தடவை அழைத்தான். இப்படிச் சொன்னதும் தாமோதரன் தன் கையிலிருந்த தடியைத் தூக்கி சத்திரக்காரன் தோளில் ஓங்கி யடித்தான். சத்திரக்காரன் கையில் ஒரு ஆயுதமும் பிராததால் முஷ்டியினால் தாமோதரனைக் குத்தினான். அவன் பத்தினியோ தனது விளக்குமாறு கொண்டு அவனைச் சாடுவதற்கு அதை உயரத்தூக்கினாள். அந்த சமயத்தில் அங்கே பார்த்தன் ஓடிவந்து நிகழும் சங்கதியைத் தெரிந்து சத்திரக்காரியின் கையைப் பிடித்துக்கொண்டு தாமோதரன்மேல் அடிவிழா திருக்கும்படி தடுத்துவிட்டான். சத்திரக்காரி தனக்கு நேர்ந்த தடையையறிந்து தன் கைகளைப் பார்த்தனிடமிருந்து திமிரிக்கொள்ள முடியாமல் தடப்பத்தைக் கீழே போட்டுவிட்டாள். பிறகு தாமோதரனுக்குத் தன் புருஷனை வழி சொல்லும்படியாக விட்டுவிட்டு அவள் புதிதாக வந்தவனை மிக்க சீற்றத்துடன் பாய்ந்து எதிர்த்தாள். பார்த்தன் சண்டை

யில் அவ்வளவு சமர்த்தனல்லாது போனலும் தன் நண்பன் தாக்கப்பட்டபோது வீணாப்பார்த்திருக்க இஷ்டங்கொள்ளவில்லை. ஆதலால் சத்திரக்காரி கொடுத்த அடிகளையெல்லாம் அவனுக்குத் திருப்பிக் கொடுத்தான். இப்பொழுது சண்டை இரண்டு ஜதை யாருக்கும் பிரபலமாக நடந்தது. யாருக்குத்தான் ஜெயம் கிடைக்கு மென்றுசொல்ல இடமிராதிருந்தது. அந்த சமயத்தில் அறைத் துணியோடு மேலிருந்த ஸ்திரீ ஓடிவந்து பார்த்தனுடன் மல்லிட்டுக் கொண்டிருந்து ஸ்திரீயைவந்து யெதிர்த்தாள். தனக்கு ஒத்தாசை வீந்ததை யறிந்ததும் பார்த்தன் மூன்னிலும் இருமடங்கு தைரியத்தோடு அந்தச் சத்திரக்காரியைத் தாக்கினன். இப்பொழுது ஜயம் நமது பிரயாணிகளுக்கே கிடைத்திருக்கவேண்டும். ஆனல் அவ்வீட்டு வேலைக்காரியாகிய சூசனை என்பவள்வந்து தனது எஜமானி பக்கம் சேர்ந்தாள். இந்தச் சூசனை எப்படிப் பட்டவர்களையும் வெல்லத் தக்கவள். அவளுடைய கைகள் எதிரிகளை அடிப்பதற்கு எப்படி அமைக்கப்பட்டிருந்தனவோ அப்படியே முகமும் தனக்குக் காயம் ஒன்றும்படாதிருக்கும்படியாக அமைக்கப்பட்டிருந்தது. அவளுடைய மூக்கு முகத்தோடொட்டி சப்பையாக இருந்ததால் அவள் மூக்கை யுடைத்து யாவராலும் காயப்படுத்த முடியாது. அவளது உதட்டிகள் நீண்டகன்று பருத்திருந்ததால் யாரும் அவள் உதட்டிலடித்து அதிகமும்விங்கச்செய்ய முடியாது. கன்னத்தெலும்புகள் முன்னுக்குவந்து கண்களை நன்றாக மறைத்துக்கொண்டிருந்த படியால் யாரும் அவள் கண்ணுக்குச் சேஷ்டைசெய்ய முடியாது. இந்த ரூபவதி போர்க்களத்தில் புகுந்து பார்த்தனைப் பிடித்திழுத்து அவனுடன் தொந்தயுத்தம் செய்தாள். யுத்தம் வெகு மும்முரமாக நடந்துவந்தது. இருபக்கத்தாருக்கும் நல்ல அடிவிழுந்தது. போர் செய்தவர்களில் பாதிபேருக்கு ரக்தக்காயமும் பட்டது. அந்த சமயத்தில் வாசலில் நான்கு குதிரைகட்டிய வண்டி ஒன்றுவந்து நின்றதால் இவர்கள் சண்டையின் ஜெயாபஜெயம் தெரிவதற்கில்லாது போயிற்று. வண்டியைக் கண்டதும் சத்திரக்காரனும் அவன் மனைவியும் எதிரிகளுக்கு நல்லவார்த்தை சொல்லி சண்டையினின்றும் விலகி வண்டியில் வந்தோரை எதிரேற்கச் சென்றார்கள். ஆனல் சூசனைமாத்திரம் பார்த்தனை அவ்வளவு லேசில்விட்டு விடவில்லை. அவனைக் கீழேதள்ளி அவன் கைகளைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு தன்னை விட்டுவிடும்படி எவ்வளவு கெஞ்சியும் கேளாமல் அவன் கன்னத்தில் ஓங்கியறைத்துகொண்டிருந்தாள். அவனும் ஐயோ என்னைக் கொலைசெய்கிறாளே என்று அலறிக்கொண்டிருந்தான். சண்டையை நிறுத்தியதும் தாமோதரன் ஓடிவந்து சூசனையைப் பிடித்து அப்புறம் தூக்கிப்போட்டு பார்த்தனை விடுவித்தான். பார்த்தன் முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு வீரிட்டுக்கொண்டே கிடந்தான். தாமோ

தரன்வந்து அவன்கையைத் தூக்கிப்பிடித்து சூசீனா அருகிலில்லை என்றுசொன்ன பிறகுதான் அவன் கையைத்திறந்து சண்டை முடிந்தது என்று தெரிந்துகொண்டான். சத்திரக் காரனுக்குக் காயம் ஒன்றும் படவில்லை. அவன் சூசீனாவுக்கு முகத்தில் கொஞ்சம் கீரல் காயமாத்திர மிருந்தது. அதைத் துணியால் மறைத்துக்கொண்டே இருவரும் வண்டியிடம் ஓடினார்கள். வண்டியினின்றும் ஒரு பெரியமனிதர் விட்டுப் பெண்ணும் அவள் வேலைக்காரியு மிறங்கினார்கள். தாமோதரன் மூதலில் இறங்கியிருந்த அறைக்குள் இவர்களை கொண்டுபோய் விட்டார்கள். பார்த்தனும் தன் மூக்கிலிருந்து ஏராளமாய் வடிந்தரக்கத்தைக் கழுவுவதற்காக அவ்வீட்டின் கிணற்றண்டை சென்றான்.

3. அத்தியாயம்.

மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லார் கீழல்ல வர்.

ஒரு அவில்தாரும் சிலதுப்பாக்கி வீரரும் ராணுவத்தை விட்டு ஓடியொளித்த ஒருவனைக் கைதியாக்கிக்கொண்டு அங்கு வந்து சேர்ந்தார்கள். அவில்தார் அத்தவூர் நியாதிபதி யார் என்று சத்திரத்தில் வந்துகேட்டான். சத்திரக்காரன் எனக்குத்தான் அந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்கள் என்றான். பிறகு வந்தவர்கள் சிற்றுண்டியருந்த உட்கார்ந்தார்கள்.

இவ்வளவு துன்பத்திற்கும் காரணமாய்க் கொலை செய்யப்படுந்தருவாயிலிருந்த ஸ்திரீ அடுப்பங் கரைபோய் உட்கார்ந்து கொண்டு தனது கஷ்ட காலத்தை நினைத்து வருந்திக்கொண்டிருந்தாள். சண்டை நடந்த சமயத்தில் இவள் மேல்மாடியிலிருந்து கீழே வந்தபோது ஒருதலையணை உரையை எடுத்து மேலே போர்த்துக்கொண்டிருந்ததால் இவளுடைய தேகம் மறைக்கப்பட்டேயிருந்தது. அவ்வீரர்களில் ஒருவன் இவளைப்பார்த்து விட்டு அவில்தாரிடம் ஏதோ காதோடு சொன்னான். அவனித்த ஸ்திரீயிடம் வந்து "அம்மா, காங்கள் சுபேதார் வேதிகருடைய மனிஷியன்றோ? தங்களை எனக்கு நன்றாக அடையாளம் தெரிகிறது" என்றான். அந்த ஸ்திரீ ஒருவருடைய முகத்தையாவது முதலில் பார்க்கவில்லை. இப்பொழுது அவில்தாரைப்பார்த்து நன்றாக அறிந்துகொண்டு அவனுடைய பெயரைச்சொல்லிக் கூப்பிட்டு "நான்தான் அந்த தெளர்ப்பாக்கியவதி. இந்த நிலைமையில் நீ எப்படி என்னை அறிந்துகொண்டாய்" என்றாள். அவில்தார் "இப்படிப்பட்ட தங்கள் உடையை நோக்க எனக்கு மிக்க ஆச்சரியமாக இருக்கிறது. தங்களுக்கு ஏதாவது விபத்து நேரிட்டிருக்கவேண்டும்" என, ஸ்திரீ "உண்மையில் எனக்கு ஆபத்துதான

கேரிட்டது. இவர் வந்து சமயத்தில் உதவிசெய்யாதிருந்தால் நான் உயிர் பிழைத்திருக்கமாட்டேன்" என்றாள். இதைக்கேட்ட அவில்தார் "இவர் தங்களுக்கு என்ன உபகாரம் செய்தார்? என்னால் தங்களுக்கு எதுவேணுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறேன். யார் தங்களுக்கு ஒத்தாசை செய்தபோதிலும் அவர்களுக்குப் பிரதி உபகாரம் சுபேதார்செய்வார் என்று எனக்குத்தெரியும்" என்றான். இதையெல்லாம் மாடிப்படியிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த சத்திரக்காரி அங்கிருந்து வேதிகன் மனைவியிடம் ஓடிவந்து "நான் முன்னால் அவமரியாதையாகப் பேசிய தெல்லாம் என்குற்றமே. என்னைத் தாங்கள் மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். தாங்கள் அந்தக் கன்னத்தையைக் கட்டிக்கொண்டிருந்தபோது தங்களுடைய மேன்மை எனக்கு எப்படித்தெரியும்? தங்களுடைய உண்மை நிலைமை கொஞ்சமேனும் எனக்குத் தெரிந்திருந்தால் தங்களிடம் அந்த வார்த்தையை உபயோகித்திருக்கமாட்டேன். அப்படிச் செய்வதிலும் என் நாக்கைப்பிடுங்கி எறிந்திருப்பேன். தாங்கள் தங்கள் வஸ்திரத்தைப் பெறுகிறவரையில் தான் புடவையைக் கட்டிக்கொள்ளுங்கள்" என்றாள். வேதிகன் மனைவி "உன்னுடைய அதிகப் பிரசங்கத்தை நிறுத்து. உன்னைப் போன்ற அற்பமானவளின் வார்த்தையை நான் கேட்பேனா? சற்றுமுன்னால் நடந்த விஷயத்தின் பிறகு உன்னுடைய நாற்றப்புடவையை நான் தரித்துக் கொள்வேன் என்று எண்ணுகிறாயா? எனக்கு அவ்வளவு ரோஷமில்லையா? அத்துடன் நிறுத்து உன்பேச்சை" என்றாள். இந்த சமயத்தில் தாமோதரன் பிரவேசித்து சத்திரக்காரிக்காகப் பரிந்து வந்து அவளை மன்னித்து விடும்படியாகவும் அவள் கொடுப்பதாய் சொன்ன புடவையை வாங்கித் தரித்துக் கொள்ளும்படியாகவும் வேண்டினான். பின்பு வேதிகன் மனைவியைநோக்கி நாமிங்கு வந்த பொழுது நம்முடைய உடையும் தன்மையும் சந்தேகத்திற்கு இடமானதாகத்தானிருந்தன. இந்த சத்திரத்தினுடைய பெயர் கெட்டுப்போகாமல் இருப்பதற்காக நல்லெண்ணத்தோடுதான் அந்த ஸ்திரீ அவ்வளவு ஜாக்கிரதையாக நடந்தாள் என்றான். சத்திரக்காரி "அவர் சொல்வது அவ்வளவும் உண்மையே, அவர் மிக்க பெரிய மனிதத்தனமாகப் பேசுகிறார். இது இந்த ஊரில் நல்ல பெயர் எடுத்த சத்திரம். மிக்க கனதனவான்கள் எல்லாம் இங்கு தான்வந்து இறங்கிவிட்டுப் போவார்கள். இப்படிப் பெரியமனிதர்கள் வருகிற இடத்தில் அற்பமான விபசாரிகளும் வந்து அடக்கம் ஒடுக்கமின்றி கலந்துகொண்டிருந்தால் திரும்பவும் என் சத்திரத்திற்குப் பெரிய மனிதர்கள் வருவார்களா? அப்படிப்பட்டவர்களுக்கு நான் கொஞ்சங்கூட இரக்கம் காட்டுகிறதில்லை. தங்களுடையைக்கண்டு நான் ஏமாந்து போய்விட்டேன். தாங்கள் பெரிய மனுஷியென்று தெரிந்தால் அப்பொழுது ஓங்கிய என்

கையை வெட்டிப் போட்டிரேனு? தங்களுக்கு நேரிட்ட தெளர்ப் பாக்கியத்திற்காக நான் மிக்க வருத்தப்படுகிறேன். தங்களுக்கு உடை வருகிறவரையில் என்னுடைய உயர்ந்த புடவையைக் கட்டிக்கொண்டு என்னை மன்னிக்க கோருகிறேன்'' என்றாள். வேதிகன் மனைவி குளிரினாலும் வெட்கத்தினாலும் தாமோதரனுடைய வேண்டுகோளினாலும் தான்கொண்டிருந்த பிடிவாதத்தை பாற்றி வேறுடை தரித்துக்கொள்ளச் சத்திரக்காரியுடன் உள்ளே சென்றாள்.

சத்திரக்காரனும் தாமோதரனைக் மிக்க வணக்கமாய்ப் பேசினான். ஆனால் தாமோதரன் அவனைத் தடுத்து தான் முன்னமேயே அவனை மன்னித்து விட்டதாகவும் அவன்மேல் தனக்குக் கோபமே இல்லையென்றும் சொன்னான். நடந்த சண்டையில் சத்திரக் காரனுக்குத்தான் வயிறு நிறையப் பிரசாதம் கிடைத்தது. தாமோதரனும் அவனோடு கைகுலுக்கிக் கொண்டிருக்கும் சமயத்தில் கிணற்றங்கரைக்கு மூக்குரத்தத்தைக் கழுவப்போன பார்த்தன்வந்து சேர்ந்தான். சுசீலையின் முஷ்டியும் நகங்களும் பார்த்தன் முகத்தில் நன்றாய்ப் பதிந்திருந்த போதிலும் அவன் சமாதானப் பிரியனதலால் சண்டை ஓய்ந்து இருகக்ஷிக்காரரும் நண்பர்களானதைக் கண்டு சந்தோஷித்தான்.

4. அத்தியாயம்.

சங்கலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோன்.

தாமோதரன் இந்தவயதில் அழகில் மிகச் சிறந்து விளங்கினான். அவனுடைய முகம் அவனது தேகசௌக்கியத்தைத் தெரிவித்தது மல்லாமல் ரம்மியமான குணத்தையும் இனிய தன்மையையும் வெளித்தோன்றச் செய்தது. இவனைப்பார்த்தவர்களெல்லாம் இவன் முகலாவண்ணியத்தைப் பற்றிப்புகழ்ந்து பேசாதிருந்ததில்லை. இவன் சுறு சுறுப்பாகவும் சந்தோஷமாகவும் விநயமாகவும் இருந்தது மன்றி மிக்க சாதுர்யமாகவும் விளையாட்டாகவும் பேசுவான். இதனால் இவன் சம்பாஷணையைக் கேட்க எல்லோரும் பிரியப்படுவார்கள். இப்படிப்பட்ட தாமோதரன்மேல் வேதிகன் மனைவி மிக்க நல்ல பிப்பிராயங்கொண்டது அதிசயமன்று. நமது வாசகர்கள் அவளை எவ்வளவு தூற்றியபோதிலும் உண்மையைச் சொல்லவேண்டியது நமது கடமையாதலால நமது கதாநாயகன்மேல் அவள் நல்லபிப்பிராயம் கொண்டதுமன்றி மிக்க பிரியமும் கொண்டிருந்தாள். தைரியமாய் உள்ளதைச் சொல்லிவிடுகிறேனே. தாமோதரன்மேல் வேதிகன் மனைவி மிக்க மோகமடைந்துவிட்டாள். ஒருவருக்குக் காதலுண்டானதும் காதலிக்கும்

பொருளின் இஷ்டத்தைக் கவரவேண்டிய வழிகளைத்தேடுவது சகஜம். வேறு எதற்காக பாலியத்தில் யாவர்க்கும் மனது உவக்கும்படியாக நடந்துக்கொள்ளக் கற்பிக்கிறார்கள்? இது காதலிக்கிற வரை ஸ்ரீனுவசிபப் படுத்துவதற் கில்லாவிட்டால் வேறு ஜீவனோபாயத்திற்கா? வாலிபர்களும் சிறுமிகளும் மற்றவர்களிடமிருந்து கற்கும் சாமர்த்தியமும், ரம்மியமும், மனதை உற்சாகப்படுத்தும் படியான சிறு சேஷ்டைகளும், ஜாடைகளும், மினுக்குப் பிலுக்குகளும், நீலக்கண்ணாடி மூன்சீர் திருத்திக்கொள்வதும், மாரன் கணைகளைத் தீக்ஷண்ணியமாய் ஏவுகற்கவோ?

தாமோதரனும் வேதிகன் மனைவியும் தங்கள் விடுதிக்குச் சென்றதம் பின் சொன்னவள் தனது சாமர்த்தியத்தை யெல்லாம் தாமோதரனிடம் காட்டலானாள். முதலில் தனது கடைக்கண்களால் தாமோதரனை மிக்க இனிமையோடும் நோக்கினாள். ஆனால் அவன் தன்னைக் கவனிக்காததைக்கண்டு மிக்க மென்மையையும், அன்பும், இளக்கமும், பொருந்திய ஒரு பெருமூச்சுவிட்டாள். இதுவும் அவன்காதில் படவில்லை. இன்னும் பலவிதத் தந்திரம் எல்லாம் செய்து பார்த்தும் அவன் அவற்றில் ஒன்றையும் அறியாதிருந்தான். இப்பொழுது ஏதோ வேறு யோசனையிலிருக்கிறான் என்று அறிந்து கொஞ்சநேரம் சும்மாயிருந்தாள். தாமோதரன் மனம் தெளிந்திருப்பதைக்கண்டு திரும்பவும் தனது கடைக்கண்ணால் அவனை உற்று நோக்கினாள். இத்தத்தடவை அவளுக்கு ஜெயலக்ஷ்மி அவனுக்கிரகம் செய்தாள். எனெனில் இவளுடைய கடைக்கண் பார்வையைத் தாமோதரன் நன்றாய்க் கவனித்துவிட்டான். தாமோதரனுடைய புத்தி பாதிமயங்கிற்று. இதையறிந்த வேதிகன் மனைவி மிகுந்த கூச்சமடைந்தவள்போல் தலையைக் கீழே தொங்கப்போட்டுக்கொண்டாள். திரும்பவும் ஒரு நிமிஷத்தில் தலையை மெதுவாகத் தூக்கித் தனது முகவிலாசத்தைக்காட்டி சிறு நகைபுரிந்தாள். இது சந்தோஷத்தினாலாவது உல்லாசத்தினாலாவது உண்டான நகையன்று. ஆசையைக்காட்டிய நகையாம். அதனால் அவளுடைய ரூபினமும், சிங்காரமான கன்னக்குழிகளும், வெள்ளியபற்களும், வெளித்தோன்றின. இந்த நகையின் தீக்ஷண்ணியத்தை நமது கதாநாயகன் முழுதும் அனுபவித்தான். அதினால் அவன் பிரமித்துப்போய்விட்டான். தனக்கெதிரிலிருந்த ஸ்திரீயின் சூழ்ச்சியையெல்லாம் இப்பொழுதுதான் அறிந்தான். தாமோதரன் வலைக்குள் விழுந்தான். சோபையைப்பற்றிய எண்ணங்கள் எல்லாம் இந்தசமயம் எங்கேயோ பறந்துபோயிற்று.

5. அத்தியாயம்.

நயனிலனென்பது சொல்லும் பயனில
பாரித்துரைக்கு முறை.

நமது காதலர்கள் மேற்சொன்ன பிரகாரம் சந்தோஷமாயிருக்கையில் சமயலறையில் என்ன நடந்ததென்று கொஞ்சம் பார்ப்போம். அங்கே பார்த்தனும் அவில்தாரும் பெரியமனிதன் வீட்டுப்பெண்ணை எற்றிக்கொண்டு வந்த வண்டிக்காரனும் சத்திரக்காரனும் அவன் மனைவியும் கூடி இருந்தார்கள். பார்த்தன் வேதிகன் மனைவியைப்பற்றித் தான் பர்வத புருஷனிடமிருந்து அறிந்த சங்கதியை அனைவரிடமும் சொன்னான். அவில்தார் தனக்குத் தெரிந்திருந்த அவளுடைய பூர்வகதையைப்பற்றிப் பின்வருமாறு சொன்னான். "எங்களுடைய அணியில் வேதிகன் என்று ஒருவன் இருக்கிறான். அவன்தான் அந்த அணிக்கு சுபேதார். இவள் அவருடைய மனைவி. இவர்கள் இருவருக்கும் சாஸ்திரப்படி கல்யாணம் நடக்கவில்லை என்று சிலர் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அந்தப் பேச்சைப் பற்றி நமக்கென்ன? அந்த ஸ்திரீ மிக்க நல்லவள். நல்ல சேலையில் பிரியமுள்ளவள். அதற்காக அநேகம் சிப்பாய்களிடமிருந்து பணம் வாங்கிக்கொள்ளுவாள். ஆனால் அவர்களுக்கு சிலகூச ஒன்றும் கிடைக்காதபடி அவர்களுக்காகத் தன் புருஷனிடம் பரிந்து பேசுவாள். இவளுக்கும் நாதமுனிக்கும் அதிக சிநேகமிருந்தது. அது உண்மை என்று எல்லோருக்கும் தெரிந்த விஷயம் சுபேதாருக்கு மாத்திரம் அது ஒன்றும் தெரியாது. ஆதலால் அவர் தன்மனைவியை அதிகமாக நேசித்து வருகிறார். அவளைப்பற்றி யாராவது இழிவாகப் பேசினால் அவரோடு சுபேதார் சண்டைக்குப் போய்விடுவார். நான் அவளை இழித்துப் பேசவில்லை. ஜனங்கள் சொல்லிக் கொள்வதைத்தான் நானும் சொல்லுகிறேன். அவ்வளவு பேர் பேசுவதில் உண்மையிருக்கத் தான் வேண்டும்" என்றான்.

பார்த்தன்:—ஆமாம், அதுதான் சரி. ஏதாவது உண்மை இருக்கத்தான் வேண்டும். அள்ளாமல் குறையாது சொல்லாமல் பிறவாது அல்லவா?

சத்திரக்காரி:——இதுவெல்லாம் வீண் அபவாதம். இப்பொழுது அவள் சேலை உடுத்திபிருப்பது அவளைப்பெரியமனுஷியெனறு காண்பிக்கிறது. என்புடவையை உடுத்திக்கொண்டபோது அவள் எனக்கு ஒருபவுன் கொடுத்தாள்.

சத்திரக்காரன்:—ஆமாம், அவள் நல்ல பெரிய மனுஷிதான். அவசரப்படாமல் மாத்திரமிருந்தால் நீ அவளோடு சண்டை போட்டிருக்க வேண்டியதில்லை.

சத்திரக்காரன்:—நீ அதைப்பற்றி எனக்குச் சொல்லவேண்டியதில்லை. உன்னுடைய புத்தியில்லாத்தனத்தால் தானிவ்வளவும் வந்தது. உனக்குச் சம்பந்தமிராதவிஷயத்தில் நீ என் தலையிட்டுக் கொள்ளுகிறாய்?

சத்திரக்காரன்:—விடுக்கு, நடந்ததை நம்மால் தடுக்கமுடியுமா? இத்தடன் பேச்சை நிறுத்திவிடுவோம்.

சத்திரக்காரி:—நிரம்பயோக்கியன் தான். இனிமேலேனும் உனக்குப் புத்திவரப்போகிறதா? உனது அசட்டுத்தனத்தால் நான் கஷ்ட மனுபவித்தது இது முதல்தரமன்று. வீட்டுக்குள் இருக்கும்போது நீ வாயை மூடிக்கொண்டிருப்பதற்கென்ன. வெளியில் உன் காரியத்தைப் பார்த்துக்கொண்டு சும்மாயிரேன். ஏழுவருஷத்திற்கு முன் நடந்தது உனக்குத்தெரியாதா.

சத்திரக்காரன்:—பழங்கதையை எதற்காக எடுத்துக் கிளருகிறாய்? எல்லாந்தான் இப்பொழுது சரியாகிவிட்டதே.

அதற்குள் அவில்தார் பேச்சைமாற்றி இவர்களுடைய தர்க்கத்தை நிறுத்திவிட்டான். அவன் பார்த்தனைநோக்கி நீயும் உனது எஜமானனும் எங்கே பிரயாணம் செய்யப்போகிறீர்கள் என்றான்.

பார்த்தன்.—உமது அதிகாரத்தை யெல்லாம் என்னிடம் காட்டாதேயும். நான் யாருடைய வேலைக்காரனுமல்ல. எனக்கு அனேக கஷ்டகாலங்கள் நேரிட்டிருப்பினும் நான் ஒரு பெரிய மனிதன்தான். நான் ஏழையாகத் தோன்றினும் நான் பள்ளிக்கூட உபாத்தியாயராக இருந்திருக்கிறேன்.

அவில்தார்:— கோபித்துக் காள்ளாதேயும் ஐயா, தாங்களும் தங்கள் நண்பரும் எங்கே பிரயாணம் செய்கிறீர்கள்.

பார்த்தன்:—நீரிப்போது சொன்னது சரிதான். எனது நேசர் இந்த தேசத்தில் ஓர் பேர் பெற்ற பிரபுவாக்கும். அவர் ஆளவந்தாருடைய ஆஸ்திக்கு வாரிசு.

சத்திரக்காரி:—என்ன! தேசமெங்கும் எவ்வளவோ நன்மை செய்திருக்கிறாரே அந்த ஆளவந்தாரா?

பார்த்தன்:—ஆம், அவரேதான்.

சத்திரக்காரி:—ஆனால் இவர் மிக்க ஏராளமான ஆஸ்தியை அடையப்போகிறார்.

பார்த்தன்:—அதில் சந்தேகமென்ன.

சத்திரக்காரி:—நான் அவரை முதலில் பார்த்தபோது அவர் நல்ல பெரியமனிதர் என்று தான் எண்ணினேன். ஆனால் என் புருஷனிருக்கிறானே அவன் எல்லோரையும்விட புத்திமான்.

சத்திரக்காரன்:—நான்தான் செய்தது தப்பு என்று ஒப்புக் கொள்ளுகிறேனே.

சத்திரக்காரி:-தப்பா! நானிப்படி தப்புசெய்தது பார்த்திருக் கிறயா?

சத்திரக்காரன் :—என் பார்த்தரே, இந்தப்பெரியமனிதர் என் கால் ஈடையாய் தேசசஞ்சாரம் செய்துவருகிறார்.

பார்த்தன்:—அது என்னவோ அவரவர்களிஷ்டம். கலசஸ் தானத்தில் அவருக்குப் பன்னிரண்டு குதிரைகளும் ஊழியர்களும் இருக்கிறார்கள். அவற்றில் ஒன்றுவது அவர் வேண்டாமென்று சொல்லிவந்துவிட்டார். நேற்று ராத்திரி மிகவும் இருக்கமாக இருந்ததால் காற்று வாங்குவதற்காக அந்தமலைக்கு நடந்துபோனார். நானும் அவருடன் துணையாகப்போனேன். அங்கு ஒரு மிக்க ஆச்சரியமான புருஷனைக்கண்டோம்.

சத்திரக்காரன் :—அவன் பார்வதபுருஷனைத்தானிருக்க வேண்டும். அனேகர் அங்கேபோய்ப்பார்த்து அப்புருஷன் அங்கு உலாவி வருவதுண்டு என்று சொல்லுகிறார்கள்.

பார்த்தன்:—அப்படித்தானிருக்கவேண்டும். அவன் பேயே என்று உறுதியாய்ச்சொல்வேன். பேய்கள் எந்த ரூபமும் எடுத்துக்கொள்ளுமாதலால் இப்பொழுது மனுஷரூபம் எடுத்து வந்திருக்கிறது.

அவில்தார்:—ஐயோ கோபித்துக்கொள்ளக்கூடாது. பேய் என்பது யாரை என்று எனக்குச் சொல்லவேண்டும். சிலர் அப்படிப்பட்ட ஆன்மாவே இடையாது என்று சொல்லுகிறார்கள். அது சாஸ்திரிகள் எல்லாம் கற்பனைசெய்து நம்மை ஏமாற்றிய பொருள்போல் தோன்றுகிறது. ஏனெனில் பேயில்லை யென்று எல்லோருக்கும் தெரிந்துவிட்டால் மாந்தரீகர்களை ஒருவரும் லக்ஷியம் செய்யார்களன்றோ?

பார்த்தன்:—உம்மிடம் பேயில்லை என்று சொன்னபேர்கள் படித்த வித்துவான்களோ.

அவில்தார்:—அவ்வளவு படித்தவர்கள் அல்ல. உம்மூடைய படிப்பில் பாதிகூட அவர்களிடமிராது. துஷ்டர்களைப் பேய்தான் சிக்ஷிக்குமென்று நான் ஒரு புஸ்தகத்தில் படித்திருக்கிறேன். பேய் இராது போனால் அது எப்படி சிக்ஷிக்கும்.

சத்திரக்காரன்:—சில ராணுவ உத்தியோகஸ்தர்களுக்குப் பேய்தான் நல்ல சிக்ஷை விதிக்கவேண்டும். இந்த சத்திரத்தில் ஒரு ராணுவ உத்தியோகஸ்தன் ஆறுமாதம் தங்கியிருந்தான். அவனுக்கு வேண்டிய உபசாரம் நான் செய்தும் சரியாகப் பணம்கொடாமல் ஓடிவிட்டான். இவனைப்போன்ற அயோக்கியரை யெல்லாம் பிடித்து ஆட்டப் பேய்வேண்டாமா?

அவில்தார்:—பட்டாளத்தை தூஷிக்காதேயும். நான் பொறுக்கமாட்டேன்.

சத்திரக்காரன்:—உமது பட்டாளம் பாழாகப்போகட்டும். அவர்களால் நான் பட்ட கஷ்டத்திற்கு அளவில்லை.

அவில்தார்:—நீங்கள் எல்லாம் சாக்ஷி ஐயா. இவர் நமது அரசனைத் தூஷிக்கிறார். இது இது ராஜத்ரோஹமாகும்.

சத்திரக்காரன்:—நான் ராஜத்ரோஹம் செய்திருக்கிறேனா? துன்மார்க்கா! எதற்காகப் பொய் சொல்கிறாய்?

அவில்தார்:—நீ உண்மையில் ராஜத்ரோஹம் செய்தாய். நீ இப்பொழுது பட்டாளத்தைத் தூற்றவில்லையா? பட்டாளத்தைத் தூற்றுவது ராஜத்ரோஹம்தான். ஏனெனில் பட்டாளம் ராஜனுடைய மாற்று உருவுதான். பட்டாளம் உமக்கு அவ்வளவு எளிதாகி விட்டதா? இங்கிருப்பவரில் யாராயினும் ஒருவன் என்னுடன் சண்டைக்கு வரட்டுமே. அப்பொழுது பட்டாளத்தின்பெருமை தெரியும். நீங்கள் எல்லாம் ஒன்றுக்கு முதவாத பயங்காளிகள்.

இதைக்கேட்ட பார்த்தன் மூலையில் ஓடி ஒளித்தான். ஆனால் யுவதியையும் அவள் வேலைக்காரியையும் விட்டு வந்த வண்டிக்காரன் இவ்வார்த்தைகளைப் பொறுமல் தான் அந்தப் போர் வீரனோடு யுத்தம் செய்வதாக ஒப்புக்கொண்டான். இருவரும் செய்த யுத்தத்தில் வண்டிக்காரனுக்கு நல்ல அடிவிழுந்து தோல்வியடைந்தான். யுவதி இந்தச் சமயத்தில் வெளியேபோகவேண்டுமென்று வண்டிக்காரனைக் கூப்பிட அவன் எழுந்திருக்க முடியாமல் கிடந்தான்.

தாமோதரனுக்கும் வேதிகன் மனைவிக்கும் சிற்றுண்டி கொண்டு கொடுக்கப்போனபோது வீட்டுக்காரி முதலே நடந்த விஷயங்களையெல்லாஞ் சொல்லிவிட்டு "பாவம், அந்த யுவதி பிரயாணம் செய்வதற்கில்லாமல் அந்த வண்டிக்காரனிப்படிக்கிடக்கிறானே. அவள் மிக்க சுந்தரவதி. அவள் முகத்தை இதற்கு முன்னால் நான் பார்த்திருக்கிறேன். அவள் காமவேதனையில் இருக்கிறாப்போல் தோன்றுகிறது. உறவினர்களிடமிருந்து ஓடிவந்து விட்டாள் போலும். அவளைப்போலவே காதலினால் வருந்தும் ஒருவாலிபன் அவனை எதிர் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும்" என்றாள்.

இதைக்கேட்ட தாமோதரன் பெருமூச்செறிந்தான். இதை வேதிகன் மனைவிபார்த்தான். ஆனால் சத்திரக்காரி அவள் அறையைவிட்டு வெளிப்போகும் வரையில் ஒன்றும்பேசவில்லை. அவள் போனதும் தாமோதரனுடைய மனம் முன்னிலேயே வேறு ஒருத்தியால் அபகரிக்கப்பட்டிருக்கவேணு மென்று வேதிகன் மனைவி ஜாடையாகச்சொன்னாள். இது காதில் விழுந்ததும் தாமோதரனுக்குண்டான தடுமாட்டத்தை நேரக்கி அவள் உண்மையையும் அறிந்து கொண்டாள். ஆனாலும் தாமோதரனுடைய அழகில் வசீகரிக்கப்பட்டு தற்சமயம் தன் விரகத்தைத் தணித்துக்கொண்டால் போதுமென்று அவள் சும்மா இருந்தாள்.

6. அத்தியாயம்.

முகத்தி னினிய நகாஅ வகத்தினு
வஞ்சரை யஞ்சப் படும்.

நமது வாசகர்கள் இந்தவேதிகன் மனைவியார் என்றும் அவள் எப்படி அந்தக்காட்டுக்கு வந்தாளென்றும் அறிய ஆவல் கொள்வார்கள் என்று எண்ணுகிறோம். தாமோதரன் பெரிய மனிதனுகையால் தான் வலியச்சென்று அவள் சவிஸ்தாரங்களை அறிய இஷடப்படவில்லை. அன்றியும் அவள் வேண்டுமென்றே தன் வரலாற்றை ஒளித்து வைத்துக்கொண்டிருந்தாள். ஆனால் அந்தவரலாற்றின் பெரும்பாகம் நமக்குத்தெரியு மாகையால் அந்த வரலாற்றை நமது வாசகர்களுக்குத் தெரிவிப்போம்.

நாதமுனி படைவீரனுயிருந்த அணியில் வேதிகன் என்பவன் சுபேதாராக இருந்தான். இந்த வேதிகனுடன்கூட இந்தஸ்திரீ சில வருஷங்களாக வஸித்துவந்தாள். இவள் வேதிகனுடைய மனைவியென்றே எல்லோரும் நம்பும்படியாக நடந்துவந்தாள். அவில்தார் சொன்னபடி இவள் விவாகவிஷயத்தில் கொஞ்சம் சந்தேகமிருந்தது. இந்தவேதிகன் மனைவி கொஞ்சநாளாக நாதமுனியிடம் அதிக நட்புப்பாராட்டி வந்தாள். ஆகையால் பலர் பலவிதமாகச் சொல்லிக்கொண்டார்கள். நாதமுனியைத் தாமோதரனுடு கண்ட சமயத்தில் சுபேதார் வேதிகன் சில படைவீரரோடு வீரஸ்தானம் போயிருந்தான். அப்பொழுது அவனுடன் அவனது மனைவியும் சென்றிருந்தாள். ஆனால் வீரஸ்தானம் வரையிற்ருன் அவனைப் பின்தொடர்வதென்றும் அங்கு வந்ததும் அவள் வேதபுரிக்குத் தேக சௌக்கியத்திற்காகத் திரும்பிவிடுகிறதென்றும் ஏற்பாடு செய்துகொண்டாள். இந்த விஷயத்தை நாதமுனியிடம் முதலிலேயே சொல்லி வைத்திருந்தாள். நாதமுனி காவலிலிருந்து தப்பியோடி நேரே வீரஸ்தானம் வந்தான். அவன் வந்தபோது வேதிகன் வெளியில் போயிருந்தான். ஆதலால் அவன் மனைவி

யிடம் நேரேசென்று தன்னுடைய அபாய நிலைமையைத் தெரி
வித்தான். அவள் கொஞ்சநேரம் யோசித்துக் கடைசியில் கப்ப
லேறி வெளித்தேசம் போய் விடுவதே மேலானதென்று புத்தி
சொன்னாள். தன்னிட மிருந்த தொண்ணூறு பவுனையும் விலை உய
ர்ந்த ஒரு வைரமோதிரத்தையும் அவனுக்குக்காட்டித் தானும்
அவனுடன் கூடவந்து உதவி செய்வதாகச் சொன்னாள். வண்டியி
லேறிப்போனால் போனவழியைக்கேட்டு சுபேதார் அறிந்துவிடு
வானைகையால் முதலில் கொஞ்சதூரம் நடந்துசென்று பின் வண்டி
யில் செல்லலாம் என்று தீர்மானித்தார்கள். அவள் ஏற்கெனவே
சாமான்களையெல்லாம் குறித்தவிடத்துக்கு அனுப்புவித்து விட்ட
படியால் அவளிடம் மிகுந்திருந்த சாமான் மிக்க சொற்பமே.
இவைகளை நாதமுனி தான் தூக்கிக்கொள்வதாக ஒப்புக்கொண்
டான். விடிய இரண்டுமணிக்கு முன் எழுந்து இருவரும் பயணப்
பட்டார்கள். சந்திரன் நன்றாகப் பிரகாசித்துக்கொண்டிருந்த
தால் இவர்களுக்குப்போகும் வழி நன்றாகத்தெரிந்தது. கொஞ்ச
தூரம் சாலையிலேயே நடந்துபோன பிறகு பொழுது விடியும் சம
யத்தில் ஒருகாட்டின் ஓரத்தில் வந்ததும் இவ்வளவு வெளிப்படை
யாகப் போவதற்குப் பயந்தவன்போல் நடித்து ஒரு நிமிஷம்
யோசிப்பவன்போல் காண்பித்தான். பின்பு வழியேபோனால் ஒரு
வர்கண்ணிலும் படாது போகலாம் என்றுசொல்லி அவளை யுடன்
படச்செய்தான். முன் சொன்னபடி மலையின் அடிவாரத்தில் வந்த
தும் வாசகர்களுக்கு ஏற்கெனவே தெரிந்த பிரகாரம் அவளைக்
கொலை செய்ய எத்தனித்தான். வேதிகன் மனைவியும் சாதாரண
மானவளல்ல. அவள் மிக்கபலமும் தைரியமும் நிறைந்தவள். ஆத
லால் நாதமுனியுடன் வெகுநேரம் போராடி இடையில் ஒத்தா
சைக்காகவும் வாய்விட்டுக்கூவினாள். இவள் கூக்குரலைக்கேட்டுதான்
தாமோதரன் ஓடிவந்தான். இவன் வருவதற்குள் நாதமுனி அந்த
ஸ்திரீயின்மேற் புடவையையும் மோதிரத்தையும் பிடுங்கிக்கொண்
டதே யன்றி வேறு ஒன்றும் செய்யக்கூடவில்லை.

முதல் புத்தகம் முற்றிற்று.